Q6:3
M89
115310

254
693

✠

சர்வேசுவராய நம:

ஆத்தும நிருணயம்.

இது

ஆத்துமபோதக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

சென்னை அதிமேற்றிராணியாராகிய மகா கனம்பொருந்திய

ஜோசை கால்கன் ஆண்டவரின்

அங்கீகாரம்பெற்று

சேசுசபைக் குருசுவாமியார்களால்

பார்வையிடப்பட்டு

ம: ச. இயாகப்பிள்ளையவர்களால்

சென்னை

அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1889.

Registered Copy-Right.

அறிவிப்பு:—

ஆத்தும நிர்ணயம் என்னும் இப்புத்தகமானது 163 ம்-வருஷத்தில் Rev. Father Robert De Nobili என்னும் தத்துவபோதக சுவாமிகளால் இயற்றப்பட்டது. இவர் 1577-ஆம் செப்டம்பர்-மீ, மாண்டிபல்சியானோ நகரிற் பிறந்து 17-ம் பிராயத்தில் உரோமாபுரிக்கு வந்து 1597-வருஷத்தில் சேசுசபையிற் பிரவேசித்துக் குருப்பட்டம் பெற்று 1606ம்-ஆம் மதுரை நாட்டுக் கெழுந்தருளி வந்திருந்தவர்.

நெடுநாள் வரையில் கையெழுத்துப் பிரதியாயிருந்த இதனை யச்சிட வேணுமென்று நாம் கொண்டிருந்த ஆவலினாலும், சேசுசபைக் குருசுவாமிமார்களின் உதவியாலும், பரிசோதனையினாலும், இப்புத்தகத்தோடு அச்சிட்டிருக்கிற கையொப்பக்காரர்களுடைய உதவியினாலும் இந்நூல் அச்சிட்டு முடிவு பெற்றது.

ஆனால் இந்நூலை வாசிப்பவர்களுக்கு முதன்முறையிலே அர்த்தம் விளங்காவிடினும் இரண்டாமுறை மூன்றாமுறை வாசிக்கையில் வெகு தெளிவாய் விளங்கும். பின்னும் இந்நூலும் சத்திய வேதானுசாரப் பத்திரிகைவழியாய் இப்போது நம்மால் அச்சிட்டு வருகிற ஞானோபதேசகாண்டமும் ஒன்றுக்கொன்று உதாரணங் காட்டுவதில் சம்பந்தப்பட்டிருப்பதால் இவ்விரு புத்தகங்களை உடைத்தாயிருக்கும் கிறீஸ்துவர்கள் அஞ்ஞானிகளோடு செய்யும் வேதசாஸ்திர தர்க்கங்களுக்கு மெத்தவும் உதவியாயிருப்பதைப்பற்றி இந்த ஆத்தும நிர்ணயம் என்னும் பிரபந்தத்துக்கு உதவிபுரிந்த மஹாஜனங்கள் ஞானோபதேசகாண்டத்திற்கும் உதவிபுரிந்து அதும் சீக்கிரத்தில் முடிவுபெறச் செய்வார்களென்று நம்புகிறோம்.

இங்ஙனம்,

ம. சா. இயாகப் பிள்ளை.

LIST OF SUBSCRIBERS.

	The Name of Subscribers.			Copies.
Revd.	Father Rott	S. J.	Palamcotta.	8
„	C. Lairianather	„	„	6
„	L. Verdier	„	„	5
„	F. Nicholas	„	„	1
„	V. Delpeche	„	„	2
„	E. Peyret	„	„	1
„	F. Buisson	„	„	1
„	P. Bouisset	„	„	1
„	T. Mengelle	„	„	1
„	J. B. Trinca	„	Puduputty.	3
„	A. Laventure	„	Tuticorin.	2
„	P. J. Cartier	„	Silukuvarpatti.	4
„	F. Rapatel	S. J. R. C. Cathedral	Trichy.	20
„	Procurator		Trichinopoly.	5
„	Mariasusai Nather		Palghaut.	3
„	M. Aloysius		„	3
„	Ignatius		„	2
„	F. X. Kroot		Bellary.	1
„	F. A. Doraiswami Nather		Bellary.	1
„	F. Villien M. A.		Coimbatore.	12
„	P. Vauz		Tennoor.	1
„	Aroolnather		Jayaveram.	1
„	Father Ignatius		Sattur.	1
„	Aloysius Nather		Peroomanyoor.	1
„	R. Doray		Kakkoody.	1
„	A. Soosay Nather		Pondicherry.	1
Mr.	T. V. Arogyasawmi Pillai M. A.		Trichinopoly	1
„	A. Chinnasawmi Mudelliar M. A.		Madras	1
„	L. D. Sawmikannu Pillai M. A.		„	1
„	M. B. Susai Pillai M. A.		Cuddalore	1
„	Jeevarethna Mudaliar		Royapooram.	1
„	S. Mickel		Bangalore.	1
„	D. B. Joakin Pillai		Jaffna.	1
„	F. Anthonisawmi Naicker		Sexton Rangoon.	1
„	C. Anthony Naicker		„	1
„	Marian Overseer		Mercara.	1
„	Marianayagam Pillay		Trichinopoly.	1
„	Appavoo Mudaliar		„	1
„	Iyacannoo Pillai		„	1
„	Arokiam Pillai		„	4
„	Amirdam Pillai		„	1
„	Rajendram		Madras Club.	1
„	M. Lazarus		Nellikottai.	1
„	Thomas Pillai		Panjambatti,	1
„	Mariasusai Pillai		Dindigal.	1
„	C. M. Cruz		Bellary.	1
„	A. Perianayagam Catechist		„	1
„	A. Raphael Butler		„	1
„	Chinnappen Merchant		Bellary	

The Name of Subscribers.			Copies
Mr.	Aroolsawminatha Pillai	Trichinopoly	1
"	Santha Pillai Overseer	"	1
"	Amirtham Sanniyasyar	Tanjore	1
"	Ponnoosawmi Pillai	Palamcottah	1
"	S. Jacob	Chudderghat.	1
"	Brother Gnanapragasam	Pondicherry.	1
"	Santiago Pillai Clerk	Rangoon	1
"	L. Arokiaswami Pillai	Rangoon.	1
"	Joseph Lazarus	Bangalore.	1
"	A. Ponnoosawmi Pillai	Coimbatore.	1
"	Aroolandam Pillai	Tanjore.	1
"	Royalu Naidoo Garu	Tranquebar.	1
"	Iyacannoo David Overseer	Munzerabad.	1
"	L. Ponnooswami Mudaliar	"	1
"	Francis Dubash	Madras.	1
"	Appavoo Pillay Head Constable	Dindigal.	1
"	A. A. Ponnoosawmi Pillai	Erode.	1
"	Thomas Pillai Dresser	Elichappoor.	1
"	A. Periyasawmi Oodayar	Perumanyoor.	1
"	J. F. Altharay Sattar Adapanar	Columboo	1
"	Chinnasawmi Pillai	Point Calimere.	1
"	L. Francis Teacher	Bellary.	1
"	A. Santiago Writer	Bellary.	1
"	S. Thomas	Bellary.	1
"	John L. Fernando	Ceylon.	2
"	Anthony Savarimutha Pillai	Tuticorin.	1
"	J. M. B. Roche Victoria	Tuticorin.	1
"	C. Appasawmi Pillai	Bellary.	1
"	T. Peter	Bellary.	1
"	M. Anthony	Bellary.	1
"	Aroolandoo Catechist	Vizianagaram.	1
"	George Burkey	Ceylon.	2
"	Susainada Pillai	Berhampore.	1
"	Thiruchelva Chettiar	Cuddalore	1
"	Reading Room	Tuticorin.	1
"	T. P. Lazarus Pillay	Ceylon	1
"	J. John Pillay	Rangoon	1
"	P. Lazur writer	Bellary	1
"	A. Anthony	"	1
"	A. Abraham	Columbo	1
"	Chinnathamby Loris	"	1
"	B. Bakiam Pillai	Ceylon	1
"	Mathuranayagum Civil Pillai	Bellary	1
"	Rayappan Lusker	"	1
"	S. Lazar Butler	"	1
"	C. Aroomasermony Pillai		1
"	S. V. Absolam Pillai	Ooty	1
"	S. Visuvasam Evangelist	Madras.	1
"	A. Prabalanatha Pillai F. A.	Tanjore	1
"	Puttadhar Savarimuthu Pillai	Trichinopoly	1
"	Palakadai Ignasimuthu Pillai	"	1
"	Thomas Pillai Merchant	"	1

ஆத்தும நிருணயம்.

விவேகம்.

सत्ताहीनस्य मर्त्यस्य निखिल जगतीलाभेनापि किं प्रयोजनं?

சத்தாஹீனஸ்யா மர்த்தியஸ்யா நிகிலஜகதீ லாபேநாபீ கிம்ப்ரயோஜனம்?

மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன்னாத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? மாற்கு VIII. 36.

திவ்ய குருவானவர் திருவுளம் பற்றின இந்த வாக்கியங்களுக்குரிய அர்த்தத்தைக் கைப்பிடித்தோமானால் ஆத்தும நிருணய மென்னும் நாமத்தைக்கொண்டிருக்கிற இந்தப்பிரபந்தத்தைப் பண்ணத்தக்கதாக நமக்குண்டாயிருக்கிற கருத்து விளங்கு மென்கிறதுந் தவிர ஒவ்வொருவன் தனது ஆத்துமத்தைக் கரையேற்றுகிற வர்த்தமானம் மிகவுங் கனமானதென்றும் அதினுடைய விருத்தத்தைநிறைவேற்றத் தக்கதாகப் பிரயாச மென்னப்பட்ட யாவுக்கும் பின் வாங்காமல் உலகத்திலே காணப்பட்ட லௌகீக சுகசெல்வ பாக்கியங்களை யெல்லாம் நிரவிசாரித்துவிட்டுச் சுத்தானிடேறும்படி கர்த்தருடைய சுபாவசொருபத்தையறியவும் அவர்கற்பித்த சகலநிர்மல புண்ணிய நெறியிலே நடக்கவுந் துணிவா னென்கிறதற்குத் தப்பாது. இது நிமித்தமாகத் திவ்விய சற்குருவானவர் திருவுளம்பற்றின இந்த வாக்கியங்களுக்குரிய அர்த்தத்தை யெல்லாரு மறிந்து [illegible] சொல்லப்பட்ட பிரயோசனத்தை யடைகிறதற்கு அந்தந்தக் கிரந்த வார்த்தைகளுக்குத் தமிழ்ப்பாஷையிலே பிரயோகிக்கத் தக்க பிரதிபதங்களைச் சொல்லி யெல்லாவற்றி[illegible] வெளிப்படுத்தக் கடவோம்.

1-வது. திவ்விய குருவானவர் அருளிச்செய்த[illegible] யறியும்படிக்குத் தமிழ்ப் பாஷையிலே பிரயோகிக்கத் தக்க பிரதி பதங்களாவன[illegible].

2-வது. ஒருவன் தனது ஆத்துமத்தினுடைய சேதத்தை யடைந்தால் அவன் உலகத்திலுள்ள மற்றச் சகல[illegible]ங்களை யடைந்தவனாயினும் அவைகளால் யாதொரு பிரயோசனத்தையும் அடையமாட்டான். இ[illegible]மேதெனில், யாதொருவன் உலகத்திலே யனுபவிக்கப் படலான சுகபோக பாக்கிய மென்னப்பட்ட யாவையு மனுபவித்தாலும், சகல சம்பத்துகளாகிற தனதானிய முதலான [illegible]திய ஐஸ்வரியங்களை யுடைத்தானவனாயிருந்தாலும், லௌகீக மேன்மையாகிற இராசாங்க முதலான சோபனங்களினாலே விளங்கப்பட்டவனாயிருந்தாலும் நீர்க்குமிழிக்குச் சரியாயிருக்கிற விப்படிப்பட்ட அநித்திய பாக்கியங்களை நாலுநாளைக் கனுபவித்தபின் தான் பண்ணின பாவநிமித்தமாக மரணத்துக்குப்பின் தனதாத்துமம் நரகத்திலே விழுந்து அவியாத அக்கினிக்குள்ளே வேகாத கட்டையாய்க் கிடந்து வேகும்படி தனது ஆத்துமத்தினுடைய என்றென்றைக்கும் நீங்கத்தக்க சேதத்தை யடைவானாகில் இலௌகீக வெகுவான தனபோக பாக்கியங்களை யடைந்திருந்த அப்படிப்பட்ட மனுஷனுக்கு வரத்தக்க பிரயோசனமென்ன? இது இன்னமும் விளக்கத்தக்கதாக அறியவேண்டியது. இப்பூலோகத்திலே யனுபவிக்கப் படலான போகபாக்கிய மென்னப்பட்ட யாவையும் நாலுநாள் மாத்திரம் அனுபவித்துக் கொண்டுவந்த மனுஷனானவன் நரகத்திலே விழுந்தென்றென்றைக்கும் நீங்கத்தக்க கனமான சேதமாகிறமனோவாக்குக் கெட்டாதா யிருக்கிற வுபாதை நோவுகளை யனுபவிக்கும்போது ஒருகணத்தி லெரிந்தவிந்துபோகும் பா[illegible]த்துக்குச் சமானமா யிருக்கிற லௌகீக போகபாக்கியங்களை இரண்டொருநாளனுபவித்த மனுஷனுக்கு அவைகளால் யாதொரு பிரயோசனமு மில்லாம லிருக்குமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

3-வது. ஆகையால் சரீரத்தை விட்டுப் பிரிந்துபோன ஆத்துமமானது நரகத்தினுடைய சேதத்தை யடைகிறதற்குப் பூலோகத்திலே சரீரத்தோடே அது திரிந்து கொண்டிருந்தபோ தடைந்திருக்கிற வேறேயொரு சேதமானது காரணமா யிருக்கிறபடியால் அப்படிப்பட்ட சேதமானது இன்னதென்று வெளிப்படுத்திஅதை நிவாரணம் பண்ணவேணு மென்கிற கருத்தானது ஆத்தும நிருணயமென்று சொல்லப்படும். ஆகையா லிப்படிப்பட்ட நாமத்தைக்கொண்டிருக்கிற இந்தப்பிரபந்தத்தை நாமுண்டாக்கத் தக்கதாகப் பிரயாசப்படுகிறதற்குக் காரணமாயிருந்ததொழிய மற்றப்படியல்ல,

அதெப்படியென்றால் மனுஷனானவன் கரையேறுகிற தற்கு தனதாத்தும விஷயத்திலே அறியவேண்டிய சில முக்கியமான விசேஷங்களை யனேக ரறியாமலிருக்கிறதுமல்லாமல் ரத் தங்களாத்தும விஷயத்திலே மகா மகாப்பட்ட தப்பறைவிசேஷங்களை யங்கீகரித்துக் கொண்டும் வருகிறார்கள். அப்படிப்பட்ட அஞ்ஞானமானது லோகத்திலே பிழைத்துத் திரிகிற மனுஷனுக்கு ஆத்தும விஷயத்திலே யுண்டாகக் கூடிய மூர்க்கின சேதமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட சேதம் நரகத்திலே விழுந்த ஆத்துமமானது அடையப்போகிற வொழியாத சேதத்துக்குக் காரணமா யிருக்கிறதினால் நரகத்தினுடைய சேதத்தை நரசீவனானதடையாதபடிக்குப் பூலோகத்திலே சரீரத்தோடே கூட அதுதிரியுங் காலத்திலேதானே முன்சொல்லப்பட்ட அஞ்ஞானமாகிற சேதத்தை யடையாம லிருக்கவேண்டி யிருக்கிறது. ஆதலால் அப்படிப்பட்ட விஷயத்திலே யறியவேண்டின சத்தியங்களுடைய ஞானமாகிற பிரகாசத்தினாலே முன்சொல்லப்பட்ட அஞ்ஞான அந்தகாரமானது நீங்கவேணு மென்கிறதற்காகக் கரையேறுகிறதற் கறியவேண்டின அப்படிப்பட்ட சத்தியங்களைக் கொஞ்சத்துக்குள்ளே யெவ்வளவாகிலும் வெளிப்படுத்த வருந்தக் கடவோம்.

4-வது. அதிலே நம்மா லனுசரிக்கப் படத்தக்க கிரமமுள்ள மேரையாவது நரசீவனானது உற்பவிக்கிறமேரையும் நரசீவனுக் குண்டான சுபாவமும் கடைசியாய் நரசீவனானது அடையப்போகிற கதியையும் அறியப் பண்ணுவோம். அவ்வண்ணமே அவையெல்லா மறிவிக்கும்போது ஆத்துமத்தினுடைய தோற்றமும் ஒடுக்கமும் இன்னதென்று நம்மாலறிவிக்கப் பட்டாப் போலாகும். ஆனால் இவ்விரண்டு விசேஷங்களை யறியத்தக்கதாக மகா மகாப்பட்டபேர்கள் மிகவும் பிரயாசைப்பட்டும் கண்டுபிடிக்க மாட்டாம லிருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் அப்பிரயோசனமான வருத்தத்தை விட்டிக் விஷயத்திலே சபலமாய்ப் பிரயாசப்படுகிறதற்கேற்ற யோக்கியமான வழியானது நம்மால் திறக்கப்பட்டாப் போலேயாகும்.

[illegible]வேக்கமறறிரத்தி.

பொருளட்டவணை.

பாடம்.	விஷயம்.	பக்கம்.
1	இதிலே சேட்டைக்குக் காரணமானது சீவனுடைய இலக்ஷணமாயிருக்கச் செய்தே யெந்தச் சேட்டையினாலே சீவனுண்டென்றும், அதினுடைய இருதயான தெப்படிப்பட்ட தென்றும் கண்டு பிடிக்கலா மென்கிற விசேஷமும்; சீவனானது சரீரத்திற்கு மாத்திரையா யிருக்குமேரையும் இந்த முதற்பாடத்திலொப்பிப்போ மென்கிறதினாலே சீவனுடைய சாதாரண நிருபணமின்னதென்று அதிலே சொல்லப்படு மென்கிறதற்குச் சந்தேகமில்லை. அறிக்கை யென்கிற ஞானமான விருத்தியானது இன்னதென்றும், அது சரீரத்திலே ஆதேயமாயிராமல் ஆத்துமமானது மாத்திரமத்தற் காதாரமாயிருக்கிறதினாலே ஞானவிருத்தியைப் பண்ணிக்கொண்டுவருகிற நரசீவனானது அழிவில்லாம லென்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளா யிருக்கிறதென்றும், ஞானவிருத்தியானது உற்பவிக்கிற பொருளிலே மாத்திரம் ஆதேயமா யிருக்கலா மொழிய வேறே பொருளோடே சேர்ந்திருக்கக் கூடாதென்றும், இரண்டாம்பாடத்திலே சொல்லிக்காட்டக் கடவோம்.	1
2		9
3	சிறுபிள்ளைகளுக்கும் பயித்தியக்காரனுக்கும் உண்டாயிருக்கிற அறிக்கையின்மேரையிலே கேட்கப்படத் தக்க சந்தேகத்தை நிவாரணம் பண்ணி அதற்கடுத்த சொற்பனத்தினுடைய சொரூபத்தையும் மூன்றும் பாடத்தில் வெளிப்படுத்துவோம்.	15
4	நரசீவனானது ஞான விருத்தியைப் பண்ணிக் கொண்டு வருகிறதுந் தவிர வேண்டும் வேண்டா மென்கிற சுவாதந்திரியமுள்ள விருத்திக்குங் காரணமா யிருக்கிறதே அந்த சுவாதந்திரிய மின்னதென்றும் அதினுடைய பலபல வகைகளும் நாலாம்பாடத்தில் நம்மால் வெளியாக்கப் படும்.	20

பாடம்.	விஷயம்.	பக்கம்.
5	ஆதலாற்சர்வேஸ்வரனுடைய சுவாதந்திரிய மெப்படிப்பட்டதென்றும், மோக்ஷ நரக மடைந்தவர்களுடைய சுவாதந்திரிய மின்னதென்றும், அவதியை யடையாத வழிப்போக்கனாகிற மனிதனுடைய சுவாதந்திரியத்தின் சுபாவ சொரூபத்தையும் வெளிப்படுத்துவோம். அதினால் மனிதனும் மிருகாதிகளுந் தனது கிரிகைகளைப் பண்ணுகிறதிலே யுள்ள வித்தியாச மின்னதென்று கண்டு பிடிக்கலாயிருக்குமென்கிற தற்குத் தப்பாது, மனுஷனுக்குண்டான சுவாதந்திரியத்தின் அருமையைத் தெளிவற்ற பாவிக ளறியாததினாலே லலாடலிபியைக் கற்பித்திருக்கிறார்களே அப்படிப்பட்ட லலாடலிபி முழுத்தப்பறையா யிருக்கிறதென்று பலபல நியாயங்களினாலே ஐந்தாம் ஆரும்பாடங்க ளிரண்டிலும் பிரத்தியட்சமா யொப்பிவிப்போம்.	28 35
87	அவ்வண்ணமே லலாடலிபி யுண்டானாற் பாவ புண்ணியமும் மோக்ஷ நரகமுமில்லாம லிருக்கவேணுமென்றும், தருமபுத்திசொல்லுகிற குருக்கள் முதலான மகாத்துமாக்கள் உலகத்திலே வியர்த்தமா யிருக்கிறார்களென்றும, இவைமுதலான வேறே சில நியாயங்களினாலே விதியானது அங்கீகரிக்க வொண்ணாத தப்பறை விசேஷமா யிருக்கிறதென்றும் ஒப்புவிக்கப்படும். இன்னு மிதற்கடுத்த வேறே சில சந்தேக நிவாரணமும், சுவாதந்திரியமானது எதிலே செல்லுஞ் செல்லாதென்றும் இது முதலான வேறே வெல்லடினை, சில விரகசியங்களையும் ஏழாம்பாடத்தில் வெளிப்படுத்தக் கடவோம். அதிலே கர்த்தரானவர் பாவம் வராதபடிக்கு அவசியமான வுபாயங்களால் ஏன விலக்கவில்லை யென்பது முதலான வேறே சில விசேஷங்களையும் இந்தப் பாடத்திலேயும் எட்டாம் பாடத்திலேயுஞ் சொல்லி, வரத்தக்க பாவபுண்ணியத்தைக் கர்த்தரானவர் அறிந்தியாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறதினால் அவனவன் பாவபுண்ணியத்தைப் பண்ணுகிறதிலே கட்டாயம் வரவறியாதென்றும், வரத்தக்க பாவபுண்ணியத்தைக் கர்த்தரானவர் பார்த்துக்கொண்டிருக்கையிலே ஆன வித்தியாச மின்னதென்றும் வெளிப்படுத்துவோம்.	41 47
9	இது தவிர பாவம் வராதபடிக்குக் கர்த்தரானவர் தப்பில்லாத வுபாயமுள்ள கிரமத்தைப் பண்ணினாரென்றும் பாவிகளுக்குக் கர்த்தரானவ ருதவிசெய்ய வில்லையென்றும் ஒப்புவிப்போம், இதுகாரணமாக வுண்டாக்கப்பட்ட பொருளின் சுவாபத்துக்கு வரவான சுவாபக்குறையும் ஆசாரக்குறையு மின்னதென்று காட்டி அப்படிக்கொத்த குறைவுகள் பொருளுக்கு வருகிற தென்கிறது பொருளின்சுபாவத்தின் அற்பலத்தையறிவிக்குமென்கிறதற்குத்தப்பாது. இதன்றியே அப்படிபட்டகுறைகள் பொருளுக்கு வராதவண்ணங் கர்த்தரானவர்சகல வுபாயங்களையும் செய்யாதிருப்பது அக்கிரமமாயிராமல் ஞாயமாயிருக்கிறதென்றும் ஒன்பதாம்பாடத்தி லொப்புவிப்போம். இத்தடைவாகப பாவமற்ற தன்மையானது படைப்புண்ட பொருளின் சுவாபத்துக்கு மேலான நன்மையாயிருக்கக் கொள்ள பொருளின் சுவாபத்துக்குச் சரியான நன்மைகளைக் கர்த்தரானவர் சகல காரியங்களுக்குஞ் செய்தித்ததுபோலப் பாவமற்ற தன்மையும் எங்குமிருக்கத்தக்கதாகச் சகல வுபாயங்களினாலே கர்த்தரானவர் பண்ணுகிறதிருக்குங் கிரமமுள்ள நியாயத்தை ஒன்பதாம்பாடத்தி லொப்பிவிப்போம். இதன்றியே பூலோகத்திலே திரிகிற வழிப்போக்கரான மனுஷருக்கு ஒருபாவமாகிலும் வாராதிருக்கின்ற அனேக நன்மைகள் பூலோகத்திலே யில்லாதென்கிற மேரையைக்காட்டக் கர்த்தரானவர் அனேகம் பாவங்களை விலக்காமற்போனாரென்கிற வாக்கியமானது அங்கங்கே சொல்லப்படுகிறதே, அதற்குவிபரீதஅர்த்தத்தை யறியாதமனுஷ ரங்கீகரியாதபடிக்கு அந்த வாக்கியத்தில் அங்கிகரிக்கத்தக்க அர்த்தத்தை யொன்பதாம் பாடத்தின கடைசியிலே வெளிப்படுத்துவோம்.	54

பாடம். | விஷயம். | பக்கம்.

நரசீவனுடைய [உற்பத்]தியையுஞ்சுவாபத்தையும்நிரூபிக்கிறதற்குமுன்னே
அதினுடையஞானதிவி[ஷயங்]களுக்குச்சொல்லப்பட்டதற்குரிய ஞாயங்களைப் பத்
தாம்பாடத்திலே சொ[ல்லு]வோம், நரசீவனானது பூமியிலேயிருக்கிறவஸ்துகளுக்
குள்ளே யுத்தம பொருளாயிருக்கத் தெளிவற்ற பாவிகள் நிரூபிக்கிறதிலே கற்பி
த்துக்கொண்டுவருகிற தப்பறைவிச்சஷங்களுக்குள்ளேசிலதுகளையவ்விடத்திலே
10 யாக்ஷேபம்பண்ணுவோம், அவ்வண்ணமே சில மதிகெட்ட பாவிகள் நரசீவனு [illegible]
னது சர்வேஸ்வரனென்றும், வேறேசில மிலேச்சர் நரசீவனானது சர்வேஸ்வர
னுடைய அம்சமென்றும், வேறே சில அறிவின் குறைச்சலுள்ளவர்கள் நரசீவ
னானது சர்வேஸ்வரனுடைய பிரதிபிம்பமென்றும் தாறுமாறாய்க் குளறிச் சொல்
லிக்கொண்டு வருகிறார்களேயிவர்களுடையவிபக்ஷங்களங்கீகரிக்கவொண்ணாத் தப்
பறைகளா யிருக்கிறவைகளென்று அந்தப் பத்தாம் பாடத்திலேதானே யொப்
புவிக்கக்கடவோம்.
இந்தடைவாக முதிர்ந்த பயித்தியங்கொண்ட பேர்களுக்குள்ளே சிலர்
நரசீவனானது தானாயிருக்கிற பொருளென்றும், வேறே சிலர் நரசீவனானது அநா
தியாயுண்டாக்கப்பட்ட பொருளென்றும், வேறே சிலர் கர்த்தரானவர் நரசீவன்
களை யுலோகவாரம்பத்திலே சிருஷ்டித்தருளினாரென்றும், வேறே சிலர் நரசீ
11 வனைத் தாய்தகப்பன் பிறப்பிக்கிறார்களென்றும், வேறு சிலர் நரசீவனானது பூதி 68
யங்களுடைய கூட்டுறவென்றும், பித்தங்கொண்டவர்களைப் போறபிதற்றிவரு
கிறார்களே இவையெல்லாம் அங்கீகரிக்கவொண்ணாத தப்பறை விசேஷங்களெ
ன்று பதினோராம்பாடத்திலேயொப்புவிப்போம்.
நரசீவனானது அழியாதவஸ்துவாயிருக்கிறதென்று குறைவற்ற விதமாக
வொப்புவிக்க வேணுமென்றதற்குச் சில நூதன வித்தியாபாரகருக்குக்குள்
தர்க்கிக்கப்படுகிற விசேஷத்திலே வகையறுக்கவருந்துவோம். அந்த விசேஷமா
வது. நரசீவனானது தான் நிற்கிறதற்குச் சுவாபமாய்ச் சரீரத்தை யபேக்ஷியாத
பொருளாயிருக்கையிலே ஜெந்துக்களுடைய சீவன்களைப்போல சரீரத்திலே
யாதேயமாயிருந்து அது தானிருக்கிறதற்குச் சரீரத்தை யபேக்ஷிக்கத்தக்கதாகச்
சர்வேஸ்வரனாலே பண்ணப்பட்டதுமா யில்லையோவென்கிற வியவகாரத்திலே
நடந்துவருகிற பக்ஷமிரண்டையுங்காட்டி அதிலே யொப்புக்கொள்ளத்தக்க சித்
தாந்த மின்னதென்று பனிரெண்டாம்பாடத்திலே நம்மால் காட்டப்பட்ட பிற
12 பாடு நரசீவனானது அநாதியாயிருக்கவில்லை யென்றுஞ் சர்வேஸ்வரனாலே யுண் 86
13 டாக்கப்பட்டதென்றும் ஒப்புவிக்கத்தக்கதாகப் போனபாடத்திலே சொல்லப் 93
பட்ட ஞாயங்கள் தவிர வேறே சில ஞாய விசேஷங்களினாலும் இதிலொப்புவி
ப்போம். கடைசியாய் ஞானமில்லாத ஜெந்துக்களுடையசீவன்கள் சரீரங்களோ
டேகூட அழிந்துபோகிறதென்றும், நரசீவனிடத்திலே மேலாங்கிஷமும் கீழாங்
கிஷமு முண்டாயிருக்கிறதென்றும் அந்தப்பாடத்திலேதானே யொப்பச்சொல்
லுவோம். இதன்றியே நரசீவனானது அழியாதபொருளாயிருக்கிறதென்றுவேறே
ஞாயங்களினாலே பதின்மூன்றும்பாடத்தில் ஒப்புவித்த பிற்பாடு நரசீவனுடைய
சுபாவசொரூபத்தை யறியாத மிலேச்சராலே கேட்கப்படுகிற சில சந்தேகங்களு
க்கு அந்தப்பாடத்திலேதானே அனபிராத்தியுத்தாரத்தைச் சொல்லுவோம்.
போனபாடங்களி லொப்புவிக்கப்பட்ட சத்தியங்களை வேறேயுக்திதப்பிர
சங்கத்தினாலேயு மூவகைமகளினாலேயும் இந்தப்பதினாலாம்பாடத்திலொப்புவிப்
போம், இதன்றியே சரீரத்தைவிட்டுப் பிரிந்தநரசீவனானது பண்ணுகிற சேட்டை
14 யேதென்று வெளிப்படுத்தி நரசீவனுக்கு மேலாங்கிஷமுங் கீழாங்கிஷமு முண் 99
டாயிருக்கிறதென்று திரும்பவும் ஒப்பச்சொல்லி யழிந்தும் அழியாதபொருளினு
டைய விலக்ஷணங்களை யறிவிப்போம்.

பாடம். | விஷயம். | பக்கம்.

நரசீவனுடைய சுபாவசொரூபத்தையறியாத மிலேச்சர் விசேஷமான
அந்தந்த நரசீவனானது தன்தன் நரசரீரத்திற்கு மாத்திரையாயிருந்து அந்தசரீரத்
தோடே அந்தந்த மனுஷனுண்டாகிறதற்கு மாத்திரஞ் சுபாவமாக வல்லதாயிருக்
கிறதென்று முன் சொல்லப்பட்ட பரமரகசியங்களைக் கண்டு பிடியாததினாலே வந்த
ந்த விசேஷ நரசீவனானது தனது பவுதிக்க சரீரத்தை விட்டுப் பிரிந்து பர
லோக சம்பந்தமாயிருக்கிற நல்வினை தீவினை யுடைத்தான ஸ்தலங்களிலே பண்
15 ணின பாவபுண்ணிய நிமித்தமாக ஆக்கினை சம்பாவனை யனுபவித்தபிற்பாடு திரு
16 ம்பவும் பூமியிலேவந்து கோடாகோடி சரீரங்களிற் பிரவேசித்துக்கொண்டு வருகி 104
17 றதினாலே [எண்]ணப்படாத பொருட்களாய்ப் பிறக்கிறதென்று சொல்லுகிறார்களே 112
18 இப்படிப்பட்ட முழு அஞ்ஞானத்தில் நின்று பிறந்த விபக்ஷமானது அனேக 126
19 துர்மதங்களிலே விதிக்கப்பட்டு அங்கங்கேபரம்பியிருக்கிறதினால் அப்படிப்பட்ட 133
20 விபட்சமானது நியாயத்திற் கொவ்வாத தப்பறையா யிருக்கிறதென்று பதினை 141
21 ந்தாம்பாடந்துவக்கி யிருபத்திரண்டாம் பாடமட்டும் விஸ்தாரமாக வொப்புவிக்கக் 146
22 கடவோம். அவ்வண்ணமே பூலோகத்திலே பற்பல அந்தஸ்திலுள்ள மனுஷரா 153
லேயனுபவிக்கப்படுகிற பாக்கிய நிற்பாக்கியமுஞ் சுகதுக்கமும் வியாதி யாரோக்கி 160
யமும் பூர்வசென்மத்திலே பண்ணப்பட்ட கர்மத்தினிமித்தமாக வரவில்லையெ
ன்று அவைகளுக்கான ஞாயங்களுங் காரணங்களும் அந்த யெட்டுப்பாடங்களி
லும் வெளிப்படுத்துவதினால் மறுஜனனமானது தெளிவற்ற பாவிகளாலே வெறு
மனே கற்பிக்கப்பட்ட தப்பறைக்கதையா யிருக்கிறதென்று பிரத்தியட்சமாயொ
ப்புவிக்கப்படுமென்கிறதற்குத் தப்பாது.
நரசீவனுடைய யுற்பத்தியையுஞ் சுபாவசொரூபத்தையுங் கண்டுபிடித்தபி
ற்பாடு நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியை வெளிப்படுத்துகிறதென்கிறது
கிரமமாகும். ஆதலாலே பூலோகத்திலேயனுபவிக்கப்படுகிற பாக்கியநிற்பாக்கியத
23 திலே நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியானது அடங்குமென்று நாஸ்திகர் 167
அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்களே-அப்படிப்பட்டவர்களுடைய விபட்சமா
னது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று இருபத்திமூன்றும்பாடத்திலே துலக்க
மாக வொப்புவிக்கக்கடவோம்.
சுவர்க்கமானது சகல ஞாயங்களுக்குங் கொவ்வாததாயிருப்பதால் நரசீவன்
24 அவதியொடுங்குகிறதில்லையென்று இருபத்திநாலாம்பாடத்திலொப்புவிப்போம். 174
இதுதவிர வைகுண்டங் கைலாயமுதலிய ஸ்தலங்கள் தேவோக்கித்த
வேதத்திற்குப் புறத்திப்பட்ட பேர்களாலே வெறுமனே கற்பிக்கப் பட்டவைக
ளாயிருக்கிறதினால் அவைகளிலேயும் நரசீவனொடுக்கமில்லையென்றும் சுவர்க்
25 கம் வைகுண்டங் கைலாயமென்கிற இவைமுதலான நாமங்களை மோட்ச மின்
னதென்று சொல்லுகிறதிலே பிரயோகிக்கவொண்ணாதென்றும் இருபத்தைந்தா 187
ம்பாடத்திலே ஒப்பச்சொல்லுவோம்.
இதன்றியே வேறே சிலபேர்கள் நரசீவனுடைய ஒடுக்கமாகிற அவதியா
னது மோட்சமென்று நிருபணம்பண்ணுகிறதிலே அவர்களாற் கற்பிக்கப்படுகிற
மோட்ச வகைகள் முழுத் தப்பறைகளா யிருக்கிறதென் றொப்புவிக்கும்போது
26 சாநித்தியம் சாமீப்பியம் சாயுச்சியம் என்கிற பேரைக ளின்னதென்று வெளிப்ப 193
டுத்தி அப்படிப்பட்ட பேரைகளிலே மோட்சங் கிடையாதென்று இருபத்தா
றும் பாடத்திலே பிரத்தியட்சமா யொப்புவிக்கக்கடவோம்.
பின்னும் யாதாமொரு வஸ்துவானது மற்றொருவஸ்துவினுடைய லய
த்தைக் கொண்டிருந்தால் அந்த லயத்தைக்கொண்டிருக்கிற வஸ்துவானது அபி
விர்த்தி முதலான விகாரங்களை யடையவேணு மென்கிறதினால் சர்வேஸ்வரனிட
த்திலே சீவனானது லயித்துப்போகமாட்டாதென்றும் அந்தந்தப்பூதியங்களிடத் 198
27 திலே லயத்தின் பேரையானது இன்னதென்றும், மோட்சமானது சீவனுடைய
லயத்திலே யடங்கினால் மோட்சத்தை யடைகிறதற்கு வருந்துகிற சன்னியாசி
முதலானபேர்கள் மதிகெட்ட பேர்களாயிருக்கிறார்களென்றும் மனுஷனுடைய

பாடம். விஷயம். பக்கம்.

லயமானது சர்வேஸ்வரனிடத்தி லிருந்தா லதினாலொன்றும் வரமாட்டாதென்
கிறபோதே சகல லயங்களைப்பார்க்கிலும் அது நிசிதமான லயமாயிருக்கவேணு
27 மென்றும் இவை முதலான ஞாயங்களினாலே சாரூப்பியமென்கிற மேரையிலே
மோட்ச முண்டாகமாட்டாதென்று இருபத்தேழாம் பாடத்திலொப்பிவிக்கக்கட 192
வோம்.
இதற்கப்பால் மோட்சத்தை நிரூபணம்பண்ணி அதின்னதென்று கண்டுபிடி
க்கிறதற் கறியவேண்டின விசேஷங்களுக்குள்ளே சில விசேஷங்களை யிருபத்தெ
ட்டாம் பாடத்திலே சொல்லுவோம். அதாவது அவதியான நன்மையினுடைய
விலட்சண மின்னதென்றும், சர்வேஸ்வரனைக் குறையற்ற விதமாய் [illegible] மே
ரையாக அடைகிற தேதென்றும், அந்தந்த விஷயத்தைக் கிரகிக்கிறதற்கு அத
ற்குரிய சத்தியுண்டா யிருக்கும்போது இந்த ஞாய முதலான வேறே ஞாயங்களி
னாலே சரீரத்தின் கண்ணாலே சகல நன்மைச் சொரூபியான சர்வேஸ்வரனைக்
28 காணக்கூடாதென் றொப்பிப்போம். இந்தவிடைவாகப் புத்தியினுடைய விஷய 206
த்தின் விஸ்தாரத்திற்குள்ளே ஆருத லென்னப்பட்ட யாவும் அடங்கி யிருக்கக்
கொள்ளப் புத்தியின் விஷயத்தின் விஸ்தாரத்திற்குள்ளே பராபர வஸ்துவான
தடங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறபோதே கனமான விசேஷம்
சத்தியவிஷயத்தின் விஸ்தாரத்திற்குளளேயடங்கியிருந்தாலும் அதினாலேவிஷய
மானது கிரகிக்கப்படாது இது இப்படியிருக்கையில் உண்டாக்கப்பட்ட புத்தியா
னது சகல நன்மைச் சொரூப[illegible] யிருக்கிற அனந்த சர்வேஸ்வரனைக் கிரகிக்கிற
தெப்படியென்று சொல்லி ய[illegible]டுத்த வேறே சில விசேஷங்களை யந்தப்பாடத்
திலே தானே விரித்துரைக்கக் [illegible]வோம்.
விசுவாச தெரிசனத்தினாலே பராபரவஸ்து காணப்படுகிறதிலே ஆன சந்தே
கமு மதினுடைய நிவாரணமு[illegible] பிரத்தியட்ச தெரிசனங் களுக்குள்ளே பூலோகத்
திலே திரிகிற மனுஷனுக்குண்டான பிரத்தியட்ச தெரிசனமானது அத்தியந்த
29 நீசமானதென்றும் அப்படிப்பட்ட தெரிசனத்தினாலே கிரகிக்கப்படாத விசேஷங் 215
களின்னதென்றும் பிரத்தியட்ச தெரிசனந்தவிர ஸ்மரண முதலான வேறே தெ
ரிசனங்களுடைய சுபாவ தெரிசனங்களுஞ் சுரூபங்களும் அவைகள் செய்யப்படு
மேரைகளின்னதென்றும் அந்தவிடைவாகச்சர்வேஸ்வரனை யிவ்வுலகத்திலேயறிய
ப்படுகிற வித மின்னதென்றும் இவைகளுக் கடுத்த வேறே சில விசேஷங்களு
மிருபத்தொன்பதாம் பாடத்திலே நம்மாற் சொல்லப்படும்.
முன்சொல்லப்பட்ட தெரிசனங்கள் தவிரச் சத்தஞான முண்டா யிருக்கிற
தென்றும் அதினுடைய வகைக ளிரண்டு மின்னதென்றுஞ் சொல்லி வஸ்துவின்
நிரூபணமானது விஞ்ஞூதம் அவிஞ்ஞூதமென விரண்டுவகை யுள்ளதென்றும் அ
வைகளை வெளிப்படுத்தின பிற்பாடு சர்வேஸ்வர விஷயக அவிஞ்ஞூத நிரூபணத்
தைக் குறைவில்லாமல் சரியாகப் பண்ணுகிறதற்குக் காணப்படும் பொருள்களெ
30 ன்னப்பட்ட யாவும் உதவிசெய்ய மாட்டாதென்றும் அப்படிப்பட்ட நிரூபணை 224
மெந்தப்பிரகாரம் பண்ணப்படு மென்றும் அனந்த மகிமைச்சொரூபமான பராபர
வஸ்துவுக்கும் உண்டாக்கப்பட்ட பத்திக்கும் முடிவில்லாத தூரமிருப்பதினாலே
சுபாவ பெலத்தைக்கொண்டு அது கிரகிக்கக்கூடா தென்கிறதினால் சர்வேஸ்வர
விஷயகப் பிரத்தியட்ச தெரிசனத்திற்குச் சர்வேஸ்வரன்தானேபிரதான காரண
மென்றும் இவை முதலான வேறே சில விசேஷங்களையு முப்பதாம் பாடத்திலே
வெளிப்படுத்துவோம்.
அதற்கப்பால் குறையற்ற பாக்கியமாகிற மோட்சமானது உண்டாக்கப் பட
வான பொருளின் சுபாவத்திற்கு மேலான நன்மையா யிருக்கிறபடியால் அதை
31 யடைகிறதற்குக் கர்த்தருடைய விசேஷ கிருபை வேண்டி யிருக்கிற தென்றும் 232
அப்படிப்பட்ட கிருபைகளெத்தனை வகையிலேயடங்கியிருக்கிறதென்றும் அதிற்
சிறப்பிரசாதமானது புண்ணியமல்ல வென்றும் கடைசியாய் மோட்ச சாதக சகி
த விருத்திகளானவைகள் பொருளின் சுபாவத்திற்கு மேலானவைகளா யிருக்

பாடம். விஷயம். பக்கம்.

கிறபடியால் அப்படிப்பட்ட விருத்திகளுக் குண்டாக்கப்பட்ட பொருளானது
31 எத்தன் மேரையாகக் காரணமா யிருக்கிறதென்றும், இதுகள் முதலான வேறே 232
சில விசேஷங்களை முப்பத்தோராம் பாடத்தி லறிவிக்கக்கடவோம்.
இதுதவிரச் சர்வேஸ்வரனைக் கண்டுபிடிக்கிற மேரை யின்னதென்றும் அதி
லேற்றக் குறைச்சலான ஞானமேரைக ளின்னதென்றுஞ் சொல்லி மோட்சமி
ன்னதென் [illegible]யும்படித் தேவோக்தித்த வேதத்தின் சிலவாக்கியங்களுக்குத் தாற்
பரிய[illegible]ன்னதென்றுங் குறையற்ற பாக்கியமாகிற மோட்சத்தைத் தயாபரரான
கர்த்தரானவர் அக்கிரமமாகக் கொடுக்கத்தக்க தில்லையென்றும், அது தேவவ[illegible]
32 [illegible]பிரத்தியட்ச தெரிசனத்திலே யடங்கி யிருக்கிறதென்றும் அதற்குண்டான
[illegible] மகிமைகளி ரண்டு மகிமைக ளின்னதென்றும் புத்திக்குள்ளே பதிந்திருக் 240
கிற கேவலம் தெய்வப்பிரதி பிம்பமானது வுண்டாக்கமாட்டா தென்றும் முப்பத்
திரண்டாம் பாடத்தி லொப்புவிக்கக் கடவோம்.
மோட்சத்தைப்பெற வருந்துகிற புண்ணியாத்துமாக்கள் யாருக்குச் சரியாயி
ருக்கிறார்களென்றும் அவர்கள் உலகத்திலே திரிகிற நாள்மட்டுந் தேவவிஷயக
ஞானத்தை யடைந்திருக்கிறார்களே யப்படிப்பட்ட ஞானங்கள் எத்தனை விதங்
களுக்குள்ளே யடங்கி யிருக்கிறதென்றும் அவைகளுக்குந் தேவவிஷயகப் பிரத்
தியட்ச தெரிசனத்திற்கு முண்டாயிருக்கிற வித்தியாச மின்னதென்றும் அப்படி
ப்பட்ட பிரத்தியட்ச தெரிசனத்தினாற் பிரவேசித்துக் கர்த்தனிடத்திலே புத்தி
33 யானது கண்டுவருகிற அனந்த மகிமைகளையும் வெளிப்படுத்தி அத்துவாயில் அ
னந்தமென்கிற சத்தத்திற்குக் கண்டுபிடிக்கத்தக்க அர்த்த மின்னதென்றும் சகல 250
பொருட்கள் சர்வேஸ்வரனிடத்திலே யுத்தமப் [illegible]காரமா யடங்கி யிருக்கிறதை
மோட்சவாசிக ளானவர்கள கண்டுபிடிக்கிற மேரை யின்னதென்றுந் திரித்துவ
ஏகத்துவமாகிற பரமரகசியமானது வெளியாகும்படிக்குத்தான[illegible]த்தின்
மேரை மரியாதைகளையும் மோட்சவாசிக ளடைந்திருக்கிற மகாமகாப்பட[illegible]
மைகளுக்குள்ளே சில விசேஷ நன்மைகளையும் முப்பத்துமூன்றாம் பாடத்திலே
சொல்லிக்காட்டுவோம்.
அதெல்லாந் தேவோக்தித்த வேதத்தின் பலபல வாக்கியங்களினா லொப்புச
சொல்லிச் சர்வேஸ்வரனுக் குண்டான சுபாவ மகிமைகள் மட்டாக மோட்சவாசி
களிட[illegible]திலே யிருக்கிறதென்று சொல்லும்போது தானுயிருக்கிறமகிமையும் அன
ந்த ஞானமும், திவ்விய பரம சத்தியமும், பரமானந்தமும், அனந்த பெலமும்,
பாவமில்லாத தனமும் நோவுதுக்க முதலான து[illegible]களுடைய இல்லாததனமும் மர
ணமில்லாத தனமும் விகாரத்தி னில்லாத தனமு மெப்போது மொருகண்ட சிரா
யிருக்கிற மேரையும் இது முதலான திவ்விய மகிமைக ளுண்டாக்கப்பட்ட பொ
ருளின் மட்டாக மோட்சவாசிக ளிடத்திலே யிருக்கிறதென்று முப்பத்துநாலாம்
பாடத்தி லொப்புச்சொன்ன பிற்பாடு அதெல்லா வற்றையுமான வுவமையினாலே
சொல்லிக் காட்டுவோம். இதன்றியே சிநேகாபேட்ச, பட்சம் இரண்டு மின்ன
34 தென்று வெளிப்படுத்தி மோட்சவாசிகள் சர்வேஸ்வரன்பேரிற் கொண்டிருக்கிற 253
பத்தி மேரையுஞ் சர்வேஸ்வரனுடைய ஸ்தோத்திரத்திற்கு மாத்திர மோட்சவா
சிக ளாசைப்படுகிறார்க ளென்றும் இதற்கான வுவமைகளுஞ் சர்வேஸ்வரனைப்
பிரத்தியட்சமாகக் காண்கிறதிலே மோட்சவாசிகளுக் குண்டான அதிக மட்டில்
லாத திருத்தியையும் ஆண்டவன் நிமித்தியமாகப் புண்ணியவழியிலே யனு
பவித்த கடின கஸ்திகளுக்கு மோட்சவிராச்சியத்திலே விசேஷ சந்தோஷத்தை
யனுபவிக்கிறாளென்று மந்தந்த மோட்சவாசிகளுடைய விசேஷசந்தோஷத்தை
ப் பார்த்தவனுக்கு அதிக பூரிப்புண்டா யிருக்கிறதென்றும் நரசீவாத்துமாக்கள்
சம்மனசுக்களுடைய வொன்பது விலாச சபைக்குள்ளே தப்பில்லாக் கிரமத்தோ
டிருக்குமேரையு மோட்சவாசிகள் இவைகளையெல்லாமறிகிறதினால் பூர்த்தியான
சுகத்தை யனுபவிக்கிறார்களென்று மிவைகள் முதலான பற்பல விசேஷங்களை
யிந்த முப்பத்திநாலாம் பாடத்தில்தானே வெளிப்படுத்தக் கடவோம்.

பாடம்.	விஷயம்.	பொருள்
	இதல்லாதே கர்த்தரானவர் பாவிகளையும் புண்ணியாத்துமாக்களையும் பூமியிலே நடத்துகிற வகையைப் பார்க்கும்போது அது [illegible] சமுத்திரமாயிருக்கிறதென்கிறதற்குத் தப்பாது. அதினுடைய [illegible] கிரமத்தையும் நரகத்திலுள்ள பாவிகள் மனோவாக்குக் கெட்டாதிருக்கிற கஸ்தி நோவுகளை யனுபவிக்கிறதிலே விளங்கிவருகிற அனந்தமான திவ்விய நீதியையும் மோட்சவாசிகளானவர்கள் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யனுபவிக்கிறார்களென்றும் முப்பத்தைந்தாம் பாடத்திலே சொல்லிக் குறையற்ற பாக்கியமென்கிற மோட்சத்தைக் குறித்து வர்ணிக்கப் படுகிற வகையிலே கண்டுபிடிக்கத்தக்க அர்த்த மின்னதென்றும் அந்தப் பாடத்திலேதானே வெளிப்படுத்தக் கடவோம்.	
35		26
	மோட்ச மின்னதென்று வெளிப்படுத்தின பிற்பாடு அதுபுண்ணியவழிக்கு அவசியமாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத் தக்க சத்திய விசேஷமாகுமென்கிறதற்குத் தப்பாது. ஆனபடியினாலே பாவவழிக் கதியாகிற நரகமுண்டாயிருக்கிறதென் றங்கீகரிக்கத் தக்கதாகும். அவ்வண்ணமே நரகத்தினுடைய சுபாவசொரூப மின்னதென்று நிச்சயிக்கத் தக்கதாக அறியவேண்டின விசேஷங்களுண்டு அதற்குள்ளே சிலதுகளை மாத்திரஞ் சுருக்கமாக வெளிப்படுத்தக் கடவோம். அதேதெனில் நரகத்திலே யிருக்கிறவர்களுடைய சுவாதந்திரிய மின்னதென்றும் அதற்கான நியாயங்களையும் முப்பத்தாறாம்பாடத்திலே சொல்லுவோம்.	
36	இதெல்லாம் விளங்கும் படிக்குச் சில விசேஷங்களை யறிவிக்க வேண்டியதாயிருக்கிறது. அவையாவன:—குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை யடையவேணுமென்கிற தற்காக ஞானமுடைத்தான பொருளைத் தயாபரனான கர்த்தரானவருண்டாக்கினாரே[illegible] நரகமென்கிற வொடுக்கத்தை யடையவேணுமென்று அதையுண்டாக்க வில்லையென் றொப்புவிப்போம். அவ்வண்ணமே அனந்த ஞான சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பொல்லாத்தைய மனுஷியாய் அறிந்தநுதியக் கற்பித்தவருமாயிருக்கச்செய்தே யவரிடத்திலே பூருவாபரமேதா யின்னதென்று அத்தநுவாயிலே வெளிப்படுத்துவோம். ஆதலாலே அனந்த நீதி கர்த்தரானவர் பாவத்தைக் கண்டபிற்பாடு நரகத்தைக் கற்பித்தருளினாரென்று ஒப்புவிக்கப்படுமென்கிறதற்குத் தப்பாது.	27
	இதெல்லாம் முப்பத்தாறும் பாடத்திலே யொப்பச்சொன்ன பிற்பாடு நரசீவனானது தனது பௌதீக சரீரத்தை விட்டுப் பிரிந்த பிற்பாடு யாதொரு சரீரங் கொண்டிருக்கத் தக்கதில்லையென்றுஞ் சரீரமில்லாத பிசாசுக்களும் தனது சரீரங்களை விட்டுப்பிரிந்த நரசீவன்களுஞ் சரீரமுள்ள அக்கினி நிமித்தமாக எண்ணப்படாத கஸ்தி நோவுகளை யனுபவிக்கும் வகையையு முப்பத்தேழாம் பாடத்திலே வெளிப்படுத்துவோம்.	
37		28
	இதன்றியே நரகத்திலே விழுந்தபேர்கள் என்றென்றைக்கு மெண்ணப்படாத கஸ்தியுபாதைகளை யொருக்காலுமிரா யனுபவிப்பாரென்று கடைசியான முப்பத்தெட்டாம் பாடத்திலே நாலு நியாயங்களைக்கொண்டு ஒப்புவிப்போம்.	
38	இந்தப்பிரகாரம் இதை நிறைவேற்றுகிறதென்கிறது மிகவும் அருமையாயிருக்கிறபடியால் அதை யெவ்வளவாகிலும் நிறைவேற்றுவேனென்று என்னுடைய தற்பெலத்தைநம்பாமல் அனந்தஞானகிருபைசொரூபியாயிருக்கிற கர்த்தருடைய கருணையை நம்பியிருக்கிறேன். ஆகையாலே அவரடியேனுக்குத் தயை பண்ணுகிறதற்குப் பரிசுத்த கன்னியாஸ்திரீயாகிற மாதாவானவள் அவரை வேண்டிக்கொள்ள வேணுமென்று தற்பெலனற்றிருக்கிற நான் மிகுந்த வினயத்தோடு அவளை வேண்டிக் கொள்ளுகிறேன்.	2[illegible]

R. P. ROBERTI NOBILI. ராபர்ட்டு டி நோபிலி.
மதுரை கத்தோலிக்கு மிஷனெரி.
* தத்துவ போதகர்.

பொருளட்டவணை முற்றிற்று.

13

✠

ஆத்தும நிருணயம்.

முதற்பாடம்.

I [illegible] அந்தகாரத்தினாலே தெளிவற்றமனிதர் பராபரவஸ்து இன்னதென்று சொல்லிவருகையில் அநேகதப்பறை விசேஷங்களை யுலகத்துக்குக்கேடாகக் கற்பித்தது போல் சீவனின்னதென்று நிருணயம் பண்ணுகிறதிலே சீவனுண்டு [illegible] நகைமோக்ஷமுகிறதற்கு விக்கினமாயிருக்கிற அநேக அபத்தவிசேஷங் [illegible] விக்க வருந்துகிறார்கள்.

II சத்தியத்துக்கு விருத்தமாயிருக்கிற இப்படிப்பட்ட விபக்ஷங்களானவைகள் அழுக்கப்பறைகளென்று தள்ளத்தக்கதாக விருக்கையிலே அதுகளுக்குச் சித்தாந்தமென்கிற நாமமானது செல்லுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். [illegible] லே கற்பிக்கப்பட்ட தப்பறைவிஷயங்களைப்பார்க்குமிடத்தில் அவைகளெண்ணப்படாதனவா யிருக்கக்கொள்ள அவைகளையெல்லாந் தனித்தனியே சொல்லிக்காட்டி இவ்விடத்திலே கண்டிக்கிறதென்கிறதரிது. ஆனபடியினாலே ஆத்துமவிஷயத்திலே தப்பறை விபக்ஷங்களைத் தன்னுகிறதற்கு அறியவேண்டின விசேஷங்களுக்குள்ளே [illegible] ந்நிதானத்திலிருக்கிற சிலதுவிசேஷங்களை இவ்விடத்திலே சொல்லிக்காட்டி வேதப்பிரமாணங்களாலேயொப்பச்சொல்லத்தக்க மற்றனேக சத்தியவிசேஷங்களை நம்முடையுண்டாக்கப்பட்ட ஞானோபதேச காண்டத்திலே விடங்களில் வெளிப்படுத்தியிருப்பதால் முடிவிலே சிலவற்றைமாத்திரங் காட்டக்கடவோம்.

III அவ்வண்ணமேயிக்கொகைப்பட்ட சத்தியங்களுக்குள்ளே ஆறுசத்தியங்களை யிந்தப்புத்தகத்திலே சங்க்ஷேபமாகச் சொல்லிக்காட்டுவோம். அவையாவன:- முதலாவது ஆத்துமமேதென்றும், 2-வது அதெத்தனை வகையிலே அடங்குமென்றும், 3-வது அதினுடையவிருத்திகள் எப்படிப் பட்டவைகளென்றும், 4-வது மனுஷசீவனுக்கு ஞானமுண்டாயிருக்கிறதுபோலே சுவாதந்திரியமுண்டோ வில்லையோவென்றும், 5-வது உண்டாக்கப்பட்ட சீவனானவைகள் [illegible] த்துக்கு மாத்திரைகளாயிருக்கையிலே இப்படிப்பட்ட சீவன்களுக்குள்ளே யென்றென்றைக்கும் நிற்கத்தக்க யாதொரு சீவனுண்டோ வில்லையோவென்றும், 6-வது கடைசியாய் மனுஷனுடைய மரணநிமித்தமாக மனுஷசீவனானது தனது சரீரத்தைவிட்டு வேறே சரீரத்தையடையலாமோ வில்லையோவென்றும் ஆம் இந்த ஆறுவிசேஷங்களிலே அங்கிகரிக்கத்தக்க சத்தியமின்னதென்று புத்தி சந்நிதானத்திலே யிருக்கிற நியாயங்களினாலே யிந்தப்புத்தகத்தி லொப்பச்சொல்லிக் கடைசியிலே ஆத்துமத்தினுடைய வொடுக்கமேதென்றும் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்துவோம். அதேதென்றால்-இந்தச் சத்தியவிசேஷங்களைத் [illegible] வேதப்பிரமாண வாக்கியங்களினாலே ஞானோபதேச காண்டத்தின் ஆனந்தலங்களி லொப்பச் சொல்லியிருக்கிறோம்.

IV சொல்லப்பட்ட ஆறுவிசேஷங்களுக்குள்ளே ஆத்துமமேதென்பது முதலாம் விசேஷமென்று சொல்லக்காட்டியிருக்கிறதால் [illegible]

களுண்டாகிற தற்கு இயத்தனமான அவையவங்களையுடைய சரீரத்துக் கிரையுமாய், அந்தந்தக்கிரியைகளுக்குப் பிரதானகாரணமுமாயிருக்கிறவனானது சீவனென்று சொல்லப்படும். அதுசீவனுடைய சாதாரண நிருபணமாயிருக்கிறதென்று சொல்லுகிறோம். அதேதென்றால் மனுஷசீவனுடைய நிருபணங்களுக்கடுத்த வேறேசிறிது சத்தியங்களைப் பதிமூன்றும்பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

V மாத்திரையாவதேதென்றால் பதார்த்தத்துக்கு நாமத்தைக்கொடுத்துப் பதார்த்தமின்னதென்று பிரதானமாகச் சங்கேதத்தைப் பண்ணுகிற யாதொன்றுண்டு அதுமாத்திரையானதென்று சொல்லப்படும். இதல்லாமிந்தவிடையிலே வெளியாக்கலாம்.

VI பலபல பாத்திரங்களைப் பார்க்கும்போது இதுகலசமென்றும் இதுசட்டியென்றும் பானையென்றும் மடக்கென்றுஞ் சொல்லப்படுகிறது. அவைகளெல்லாம் மண்ணாயிருக்கையிலே கலசத்தினுடைய ரூபத்தினாலே மண்ணுக்குக் கலசமென்கிற சங்கேதமுண்டாயிற்று. மண்ணுவான கலசமானது மண்ணினில்லாமலுண்டாக மாட்டாதிருந்தாலுங் கலசமென்கிற சங்கேதமானது ரூபத்தினாலே பிரதானமாய்வருகிறதொழிய மண்ணினாலே வரமாட்டாது. இத்தன்மையாகக் கல்லால் மரங்களாற் செம்பாற் பண்ணப்பட்ட விக்கிரகமுதலானவைகளிலேயும் யோசிக்கக்கடவோம். அதேதென்றாற் கல்லு, மரமுதலான திரவியங்கள் விக்கிரகத்தினுடைய நாமகரணத்தையுஞ் சங்கேதத்தையும் பண்ணாமல் ரூபமேபிரதானமாய் விக்கிரகத்தினுடைய சங்கேதத்தைப் பண்ணிக்கொண்டு வருமென்கிறதற்குத் தப்பாது.

VII ஆனபடியினாலே யித்தொடுக்கப்பட்ட பொருள்களிடத்திலே ரூபமானது மாத்திரையாயிருக்கிறதென்று சொல்லக்கடவது. இப்படியிருக்கையிலே பூமியிலே காணப்படுகிற சீவனுடைத்தான பதார்த்தமானது சரீரத்தினாலேயுஞ் சீவனாலேயுங் கூடின பொருளாயிருந்தாலும் பதார்த்தத்தினுடைய நாமகரணத்தையும் பதார்த்தமின்னதென்கிற சங்கேதத்தையுஞ் சீவனானது பிரதானமாய்ப் பண்ணிக்கொண்டு வருகிறதினாலே உயிருள்ள பொருட்களுக்கு உயிரேமாத்திரையா யிருக்கிறதென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல.

VIII அவ்வண்ணமே கிரகத்திலே வாசமாயிருக்கிறமனிதனைப் போலவும், பஞ்சரத்திலே யடைபட்டிருக்கிற பக்ஷியைப்போலவுஞ் சீவனானது அந்தந்தச் சரீரத்திலே யிருக்கிறதென்று அறியாதமனுஷர் சொல்லுகிறார்களே அவையெல்லாம் அபத்தத்தப்பறையென்று இந்தநிருணயத்தினாலே கண்டுபிடிக்கலாம். அதேதென்றாற் கிரகத்திலே மனுஷனிருக்கிறதினாற் கிரகம்வளருமோ வளராதே கிரகத்திலே யிருக்கிற மனுஷனானவன் கிரகத்தோடே கூடப்பலபலகிரிகைகளைப் பண்ணிக்கொண்டு வருவானோ அதில்லையே மனுஷன் கிரகத்திலேயிராததினாற் கிரகம் அழிந்துபோமோ அழியாதே கடைசியாய்க் கிரகத்திலே மனுஷனானவன் வாசமாயிருக்கிறதினாற் கிரகத்தினாலேயு மனுஷனாலேயு மொரு பொருளுண்டாகாமல் மனுஷன் மனுஷனென்றும் வீடு வீடென்றும் இரண்டுபொருளுமா யிரண்டு நாமகரணமுமா யிரண்டுசங்கேதமுமாயிருக்கு மொழியமற்றப்படியல்ல. சீவனேயென்றால் சரீரத்திலே யிருக்கிறபோது சரீரம்வளருகிறதென்று கண்ணாலேபார்த்துக் கொண்டு வருகிறோமே சரீரத்தோடேகூடச் சீவனானது பலபலகிரியைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறதிலே சந்தேகப்படுவாருண்டோ. சரீரத்தைச் சீவனானது விட்டுப்போனபோது அழிந்துபோகிறதென் றெல்லாரும்பார்

த்து வருகிறோமே? இதுதவிரச்சரீரமுஞ் சீவனுங்கூடி யிருக்கிறதினாலேயொரேபொருளொரேநாமகரண மொரேசங்கேத முண்டாகிறதொழிய மற்றப்படியல்ல.

IX இத்தன்மையாகச் சரீரத்தோடேகூட அந்தந்தச் சீவனிருக்கிறதினாலே மரமுமிருகமு மனுஷனுமென்கிற பொருளினுடைய சங்கேதமும் நாமகரணமுமுண்டாகிறதொழிய மற்றப்படியல்ல, ஆனபடியினாலே மனுஷன் கிரகத்திலிருக்கிற வகையையுஞ் சரீரத்தோடே சீவனிருக்கிறமுறைமையையும் பார்க்குமிடத்தில் அதற்கு மிதற்கும் வலுவேற்றுமை யுண்டென்று சொல்லக்கடவோம் அவ்வேற்றுமைகளேதென்றால்:-மனுஷனானவன் கிரகத்தில் வாசமாயிருக்கையிலே கிரகத்துக்கு மனுஷன் மாத்திரையா யிராததினால் மனுஷனாலேயுங் கிரகத்தினாலேயு மொருபொருளுண்டாகாமலும், ஒருசங்கேதமு மொருநாமகரணமுமாயிராமலும், மனுஷனுங் கிரகமு முழுப்பொருளிரண்டுக்கும் வேறேசங்கேதமும் பின்ன நாமகரணமு முண்டென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல.

X சரீரத்தோடே சீவனானிருக்கிற மேரையோவென்றாற் சரீரத்துக்குச் சீவனானது மெய்யான மாத்திரையா யிருக்கிறதினா லிரண்டுபாதி கூடினாலொரே முழுப்பொருளுண்டாகிறதுபோலே சரீரமுஞ் சீவனுங் கூடியிருக்கிறதினாலொரே முழுப்பொருளுண்டா யொரேசங்கேதம் ஒரேநாமகரண மென்று சொல்லப்படும். இதுநிமித்தியமாக அந்தந்தச் சரீரமானது மிகுந்த வேற்றுமையுள்ள ரூபங்களைக் கொண்டிருக்கிறதென்று சொல்லக்கடவதாகும். அதேதென்றால் அப்புப், பிரிதிவு, வாயு, தேயு முதலான பூதியங்கள் எந்தெந்தவகையுள்ள ரூபத்தைக் கொண்டிருக்கலாமென்கிறதினால் அந்தந்தச்சரீரத்துக் கந்தந்த ரூபமுண்டா யிருக்கிறதற்குப் பூதியங்களானவைகள் காரணமாயிருக்கின்றனவென்று சொல்லப்படாது, ஆனபடியினாலே அந்தந்தவேற்றுமையுள்ள மாத்திரையானது அந்தந்தச் சரீரத்துக்கு வேற்றுமை ரூபமுண்டா யிருக்கத்தக்கதாகக் காரணமா யிருக்கிற தென்கிறதற்குத் தப்பாது. அதேதென்றாற் பொருள்களிடத்திலே மாத்திரையானது பிரதானமென்று சொல்லவேணும். ஆதலாலே பிரதான அட்சுதமாகிற மாத்திரைக்குத் தக்கசரீர முண்டாயிருக்கவேணும். அப்படியே சீவனானது பொருளுக்கு மாத்திரையா யிருக்கக்கொள்ள அந்தந்தச் சீவனுக்குத் தக்க ரூபமுள்ள சரீரமுண்டாயிருக்க வேணும், அதெப்படியென்றால்:-எறும்பினுடைய சீவன் இன்னின்னவகையுள்ளதுமா யின்னின்னவகையுள்ள சேட்டைகளுக்குக்காரணமானதுமாயிருக்கவேணும். ஆகையால் எறும்பினுடைய சீவனுக்குப்பாத்திரமானதுமாய் அந்தச்சீவனுக்கான சேட்டைகளுண்டாகிறதற்குதவிசெய்கிறதுமான அவையவங்களுடைத்தான சரீரத்தோடே அப்படிப்பட்ட எறும்பினுடைய சீவன் கூடவேணு மொழிய யானைக்குண்டான சரீரத்தோடேஅது கூடி அந்தயானையைப் பிழைப்பிக்கவு மாட்டாது, அதனோடேகூடி அதனது சேட்டைகளைப் பண்ணவுமாட்டாது.

XI இத்தன்மையா யானையுடைய சீவனுக்கு எறும்புக்குண்டான சரீரம்பாத்திரமாயிராமல் அப்படிப்பட்ட சீவனுக்கான சேட்டைகளுண்டாகிறதற்குதவிசெய்கிற அவயவங்களுடைத்தான வேறுசரீரம் அவசியமாயிருக்கச்செய்தே யானையினுடைய சீவனானது எறும்பின் சரீரத்துக்கு மாத்திரையா யிருக்கமாட்டாமலெறும்பின் சரீரத்தோடே கூடி அதைப் பிழைப்பிக்கவுமாட்டாது, அப்படிப்பட்ட எறும்பின் சரீரத்தைப்பிழைப்பிக்கிறதற்கு வல்லதாகவு மிராது.

XII இம்மருவாதிபே மனுஷனுடைய அழியாதசிவனுக்கும் மிருகங்களினுடைய சரீரமானது பாத்திரமாயிராததினாலேயும் மனுஷனுடைய சிவனுக்கான சேட்டைகளுண்டாகிற தற்கு விருக்ஷங்களுக்கும் மிருகங்களுக்கும் உண்டான சரீரம் உதவமாட்டாதானதினாலேயும் மனுஷனுடைய சிவனானது விருக்ஷங்களுக்கும் மிருகங்களுக்கும் உண்டான தேகங்களுக்கு [illegible]த்திலாயாயிருக்கவும் அப்படிப் பட்ட சரீரங்களோடு [illegible]யோரேபொருளாயிருக்கவு மாட்டாது.

XIII இந்தச்சத்தியத்தை வேறொருவிதத்தினாலே வெளிதாய்க்கண்டுபிடிக்கலாம். அதேதென்றால் ஆனகிரிகைகளுக்கு அவசியமாய் வேண்டின அவையவங்களாகிற இருதயமும், தலையும் வெட்டப்பட்டால் அப்படிப்பட்ட சரீரத்திலே அவசியமாய்ச் சிவனிருக்கமாட்டாது. அதேதென்று விருதயமுந் தலையுமில்லாத சரீரஞ் சிவனுக்குண்டான சேட்டைக் குதவாதென்கிற தற்குச் சந்தேகமில்லை. இது இப்படியிருக்கையிலே மச்சத்தினுடைய சரீரமானது மனுஷனுக்குண்டான சேட்டையாகிற வார்த்தைசொல்லுகிறதுக்கும், ஆனதையுங் [illegible] கவைதயு மறிகிறதற்கும் மற்றுமுண்டான கிரியைகளுக்குஞ் சற்றேனும் உதவமாட்டாதபோதே அப்படிப்பட்ட மச்சத்தினுடைய சரீரத்தோடே மனுஷசிவனானது கூடியிருக்கிறதெப்படி! அவ்வண்ணமே சுபாவத்திலே வேற்றுமையாயிருக்கிற பலபல சிவன்களுக்கும் ஒரேவகையுள்ள ரூபமுடைத்தான சரீரம் பாத்திரமாகாததினாலேயும் அந்தந்தச்சாதியுள்ள சிவனுக்கான சேட்டைகளுண்டாகிறதற்கு ஒரேவகையுள்ள அவையவங்களையுடைத்தான சரீரமுதவவல்லதாயிராததினாலேயுஞ் சுபாவத்திலே வேற்றுமையாயிருக்கிற [illegible]ண்ணப்படாத சிவன்களுக்கும் வெவ்வேறே வகையுள்ள அவையவங்களையும் உருப்பங்களையு முடைத்தான சரீரங்க[illegible]யிருக்கிறதென்று சொல்லக்கடவோம்.

XIV இத்தருவாயிலே லோகங்களிலேகதத்திலே வருகிற சாதிபேதகத்தைச்சொல்லாமல் மனுஷனுக்கும், நாய்க்கும், யானைக்கும், எறும்புக்கும்; இதுமுதலான மற்றுமுள்ள மிருகங்களுக்கும் விருக்ஷங்களுக்குமுண்டான சாதிவேற்றுமையையும் பேதகத்தையுஞ் சொல்லுகிறோமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால்:- கடாவத்திலே பேதமுள்ள பல சிவன்களானவைகள் வெவ்வேறே ரூபமுள்ள சரீரங்களோடேயவசியமாய்க் கூடவேணுமொழிய இவ்விடத்திலே [illegible]கதத்தினாலேவருகிற சாதிபேதமுள்ளவர்களுக்கு வெவ்வேறேவகையுள்ள ரூபமுடைத்தானசரீரமுண்டாயிருக்கவேணுமென்று சொல்லப்படாது. அவ்வண்ணமே பொருளிடத்திலே மாத்திரையேதென்றுஞ் சிவனென்[illegible]பட்டவைகளெல்லாந்தந்தஞ் சரீரத்துக்கு மாத்திரையாயிருக்கிறதென்றுஞ் [illegible]ரஞ்சத்துக்குள்ளொப்பஞ்சேர்ந்திரப்பதேயாச்சது. சிவனானது தனது சரீரத்துக்கு மாத்திரையாயிருக்கிறதுந் தவிரத் தனக்கான சேட்டைகளுக்குப் பிரதானகாரணமுமாயிருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. சேட்டையானதுண்டில்லையென்கிறதினாலே சிவனுக்குஞ் சடத்துக்கும் பேதமுண்டென்று சொல்லக்கடவோம்.

XV ஆனபடியினாலே சிவனுக்கான சேட்டையில்லாத பொருளானது சடமாகும். சிவனுக்கானசேட்டையேதென்றால் மூன்றுவகைக்குள்ளேயடங்குமென்று சொல்லக்கடவோம். வளருகிறசேட்டையும், பஞ்சேந்திரியங்கள்முதலான இந்திரியங்களுடைய சேட்டையும், [illegible]கிறசேட்டையும் இந்த மூன்று கிரியைகள் மாத்திரஞ் சிவனுக்கானசேட்டைகளென்று சொல்லக்கூடுமொழியப் பாரத்தினாலே விழுகிறதென்கிறதும், இலகு குணத்தினாலேமேலேயேறுகிற தானலுஞ் சிவனுக்கான சேட்டையென்று சொல்லக்கூடாது. ஆதலாலே கீழேவிழுகிற

கல்லும் மேலேயேறுகிற அக்கினிச்சுவாலையும் உயிருடைத்தானதென்று சொல்லவு மெண்ணவுங்கூடாது. அதேதென்றால்பார இலகு குணங்களினாலே அப்படிப்பட்ட சேட்டைகள் வருகிறதொழிய மற்றப்படியல்ல இத்தன்மையாகத்தே அபிவிருத்தியுஞ் சிவனுக்கான அபிவிருத்தியென்று சொல்லப்படாது. அதேதென்றால்:- ஒருகல்லுமேல் மற்றொருகல்லையேற்றுகிறதினாலே மதில்வளரும் விறகுமேலே விறகடுக்கிறதினால் அக்கினி வர்த்திக்கும் இப்படிப்பட்ட அபிவிருத்தியானது சிவனுக்கான அபிவிருத்தியாயிருக்கிறதென்று சொல்லப்படாமற் பொருளானது வேறேபொருளினுடைய சாரமாகிற ஊணைத் தன்னுள்ளத்திலே வாங்கி அதைத் தன்னுடையதாகப்பண்ணி அதினாலே வளருகிற அபிவிருத்தியானது சிவனுக்கான அபிவிருத்தியென்று சொல்லக்கடவதொழிய மற்றப்படியல்ல. இந்தவகையாகப் பூமியிலேமுளைத்திருக்கிற புல்செடி, மாமுதலானவைகள் மண்தண்ணீர்துமுதலானவைகளுடைய சாரமாகிற ஊணையுந் [illegible]லத் தன்னுள்ளத்திலே வாங்கி அந்தச் சாரத்தைத்தனதாகப்பண்ணி அதினாலே வளருகிறதினாற் புல் மரம் இது முதலானவைகள் சிவனுடைத்தானதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் சிவனுக்கான சேட்டையெங்கே காணப்படுகிறதோ அவ்விடத்திலே சிவனுண்டென்று சொல்லவேணும். மனுஷரிடத்திலே காணப்படுகிற விருத்தியைப்போல மாமுதலான புல்லுகளிடத்திலேயும் சிவனுக்கான சேட்டையென்கிற அபிவிருத்தி காணப்படுகிறதே ஆதலால் மரங்கள் முதலான புற்களிடத்திலே சிவனுண்டென்று சொல்லக்கடவது. இ[illegible]னுக்குச் சொல்லப்பட்ட அபிவிருத்தியென்கிற சேட்டைகள் தவிர வேறேசேட்டைகளுண்டென்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே [illegible]யைப் பண்ணுகிற சிவனென்கிற பேரிப்படிப்பட்ட சிவனுக்குண்டாயிற்று. இதிப்படியிருக்கையிலே சரீரமில்லாமல் வளர்த்தியென்கிற சேட்டையுண்டாகமாட்டாதென்கிறதினாலே பூமியிலே முளைக்கிற மரங்கள் முதலானவைகளுக்குக்காணப்படுகிறசரீரம் அழிந்துபோனால் அதுகளுக்குண்டான சிவனும் அழிந்துபோமென்கிறதற்குச் சந்தேகமில்லை; அதேதென்றால் சேட்டையானது உண்டில்லையென்கிறதினாற் சடத்துக்குஞ் சிவனுக்கும் பேதமுண்டென்று கண்டுபிடிக்கிறோம். அவ்வண்ணமே சேட்டைக்குக் காரணமான சடமுண்டென்று சொல்லவுங்கூடாது, ஒருசேட்டைக்கானுங் காரணமாகத சிவனுண்டாயிருக்கிறதென்றுசொல்லவுந்தகாது. மரங்களிலேயுண்டானசிவனுக்குச் சரீரமில்லாமற் றனது சேட்டையாகிற அபிவிருத்தியுண்டாகமாட்டாதென்கிறதினால் மாத்திரமுடைய சரீரம் அழிந்துபோனால் அதற்குண்டான சிவனும் அழிந்துபோகவேணுமென்கிறதற்குத்தப்பாது.

XVI இந்தவகையுள்ளசிவன்தவிர வேறொருவகைச்சேட்டையினாலே வேறேயொருவகைச்சிவனுண்டென்றுநிச்சயம் பண்ணிக்கொண்டு வருகிறோம் அப்படிப்பட்டசிவனேதென்றாற் பஞ்சேந்திரியச் சிவன்கள் இவைகள் இந்திரியங்களுடைய சேட்டைக்குப்பிரதான காரணமாயிருக்கக் கொள்ள ஐயிந்திரியச் சிவனென்கிற பேரைத்தரித்துக்கொண்டிருக்குது. ஆனபடியினாலே மிருகங்களிடத்திலேபஞ்சேந்திரியமுதலானவிந்திரியங்களுடையசேட்டைகள்காணப்படுகிறதினால் மிருகங்களுக்கு ஐயிந்திரியச்சிவனுண்டென்று சொல்லக்கடவோம். இந்திரியங்களுடைய வகைகளைப்பத்தும் பத்தாய்விசாரிக்கிறபோது புறவிந்திரியமென்றும், உள்ளிந்திரியமென்றுஞ் சொல்லவேண்டியிருக்கும். கண், [illegible] முதலான பஞ்சேந்திரியங்களுக்குப் புறவிந்திரியமென்கிற பேர்செல்லும். [illegible]சேந்திரியங்களுடைய விஷயங்களையெல்லா மொன்றாய்க் கிரகிக்கிற சாதாரண விந்திரியமுஞ் சரீரத்துக் கானதின்னதென்றும் ஆகாதின்னதென்றும் மதிக்கிறவிந்திரியமும் உள்ளி

ந்திரியமென்று சொல்லக்கடவோம். இவ்விந்திரியங்களில்லாமல் மிருகமானவைகள்பிழைக்கமாட்டாததினால் சர்வசீவதயாபரராயிருக்கிற நாதன் ஆனகாலத்திலே மிருகங்கள் பூமியிலே பிழைத்திருக்கிறதற்கு இப்படிப்பட்ட வுள்ளிந்திரியங்களையும் புறவிந்திரியங்களையும் அவைகளுக்குக் கொடுத்தருளினர்.

XVII இந்திரியமென்னப்பட்ட யாவுக்குஞ்சரீரம் அவசியமான ஆதாரமாயிருக்கக்கொள்ள இந்திரிய மென்னப்பட்டதெல்லாஞ் சரீராதேயமென்றுசொல்லப்படும். இந்திரியமானது சரீராதேயமாயிருக்கிறபோதே தனக்கு அவசியமான ஆதாரமாகிற சரீரமில்லாமல் நிற்கமாட்டாதென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே யிப்படிப்பட்ட இந்திரியங்களுடைய சேட்டைகள் உண்டாகிறதற்கு அவசியம் சரீரம் வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் அதிகமாய் வெளியாகும்படிக்கு அறியவேண்டின விசேஷமாவது சரீரத்தினுடைய வர்ணம் ருசிமுதலானவைகளையுஞ் சரீரத்துக்கடுத்தசுகம் நோய் முதலானவைகளையுங் கிரகித்தபேக்ஷிக்கிறதற்கும் வெறுக்கிறதற்கும் ஆனசத்தியானது இந்திரியமாகும். இப்படிப்பட்ட சத்தியாகிற யிந்திரியங்களுக்குச் சரீரத்துக்கடுத்த பொருள்மாத்திரம் விஷயமாயிருக்கக்கொள்ள இந்திரியமானது சரீராதேயமா யிருக்கிறதற்குச் சந்தேகப்படக் கூடாது. இந்திரியமானது சரீராதேயமாயிருக்கிறபோதே இந்திரியமாகிற சத்தியானது சரீரத்திலே யில்லாவிட்டால் அதுகிரியைசெய்யவு நிற்கவுங்கூடாது. ஆதலாலே யிந்திரியச்சேட்டை யென்னப்பட்டயாவுஞ் சரீரத்தினுடைய அவையவங்களுடைய வுதவியில்லாமலுண்டாக மாட்டாது. ஆனபடியினாலே மிருகங்களுக்குண்டான ஐயிந்திரியச்சீவனுக்கு இந்திரியத்துக்கடுத்த சேட்டைதவிர வேறேசேட்டை யில்லாததினால் மிருகங்களினுடைய சரீரமுண்டாயிருக்கையிலே ஐந்திரியச்சீவனானது பிழைத்திருக்கு மொழியச் சரீரத்தினுடைய தாதுகுணபிரமாணமில்லாமல் சரீரமழிந்துபோனால் மிருகங்களுடைய சீவனைப்போல் அழிந்துபோமென்கிறதற்குத்தப்பாது.

XVIII இந்தச்சத்தியத்திலேசந்தேகம் வராதபடிக்குயிந்தவிடைவாக ஞாயத்தைச்சொல்லி நடத்திக்கொண்டுவரலாம்- சேட்டையுண்டாகிறதென்கிறதும் இல்லாதிருக்கிற தென்கிறதுஞ் சீவனுக்குஞ் சடத்துக்கும் பேதகாரணமாயிருக்கு மென்கிறதுக்குத்தப்பாது. ஆதலாலே சேட்டையில்லாத சடத்துக்குப் பேதமாயிருக்கிற சீவனென்னப்பட்டயாவுஞ் சேட்டையில்லாம லுண்டாகமாட்டாது. மிருகங்களுக்குண்டான ஐந்திரியச் சீவனுக்குஞ் சரீரமில்லாவிட்டால் ஒருசேட்டையானது மிராது. ஆதலாலே சரீரமில்லாவிட்டால் மிருகங்களுக்குண்டான ஐயிந்திரியச்சீவனானது பிழைக்கமாட்டாமல் அழிந்துபோமென்கிறதற்குச் சந்தேகப்படவேண்டாம். இப்படியே அபிவிருத்தியென்கிற சேட்டையும் இந்திரியத்துக் கடுத்தசேட்டையும் ஆகிய இவ்விரண்டுவகைச்சேட்டைகளுக்கு மாத்திர மிருகங்களுடையசீவன் காரணமாயிருக்கக் கொள்ளத் தனது சரீரம் அழிந்துபோனால் அதுவுமழிந்துபோ மென்கிறதுக்குத்தப்பாது. ஆகையால் அது அழிந்துபோகிறபோதே அப்பால் வேறேஸ்தலமடையத்தக்கதில்லை யென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

XIX இதுவுமன்றியே இந்திரியமாகிற சத்தியினாலே பாவபுண்ணியங்களையும், ஞாயத்துக்கொக்குமொக்காதென்கிறதையுஞ் சரீரமில்லாத சர்வேசுவரன்முதலான பொருள்களையுங் கிரகிக்கக்கூடாத்தினாலே யிந்திரியத்தை மாத்திரமுடைத்தான மிருகங்களுடைய சீவனானது இவ்வுலகத்திலே திரிகிறபோது பாவபுண்ணியமறியவும் பண்ணவுமாட்டாது. சரீரம்போனால் நரகமோக்ஷ முதலான வேறேயொரு

ஸ்தலத்தையடையவுமாட்டாது. இதுகாரணமாக மனுஷசீவனானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தால் அது நல்லஸ்தலத்தை யடையவேணு மென்கிறதினால் அதற்காகச் செப, தபம் தான முதலானவைகளை அவனவன் நடத்திக்கொண்டுவருகிறதுபோல மிருகமென்னப்பட்டயாவுஞ் செத்துப்போனால் அந்தமிருகத்தினுடைய சீவனானது நல்லஸ்தலத்தை யடையும்படிக்கு யெந்தமதிகெட்டவனானாலும் இப்படிப்பட்ட கருமங்களை நடத்தலாமென்று சொல்லுவானோ? இதற்கு ஞாயமேதென்றால்:-மனுஷசரீரமழிந்துபோனாலும் மனுஷனுடையசீவனழியாதென்று இனிமேலொப்பச் சொல்லுவோமே-அப்படிப்பட்ட சீவன் சரீரமில்லாதிருந்தாலும் அழியாதபொருளா யிருக்கக்கொள்ள சரீரத்தைவிட்டுப்போனபிற்பாடு யாதொருஸ்தலத்தை யடையவேணும் ஆதலாற் பொல்லாத, ஸ்தலத்தையடையாமல் நல்லஸ்தலத்தையடைகிறதற்கு மனுஷன் செத்துப்போனபிற்பாடு அவனுடைய சீவனுக்காகச் செபம், தான முதலானவைகளை யுலகத்திலே யிருக்கிறபேர்கள் நடத்துகிறது எல்லாருக்குஞ் சம்மதமாயிருக்கும். மிருகமோவென்றால் அது செத்துப்போன பிற்பாடு அதினுடைய சீவனழிந்துபோய் வேறியாதொருஸ்தலத்தையும் அடையமாட்டாததினால் அப்படிப்பட்ட சீவனுக்காகச் செப, தானங்களை நடத்துகிறது ஞாயத்துக்கும் புத்திக்கு மொவ்வாது. ஆகையால் யாதொருத்தன் செத்தமிருகங்களுக்காகச் செப, தானமுதலான தருமங்களைநடத்தினால் அவனைப்பயித்தியங்கொண்டவனென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல இதற்கோருச்சிதமான காரியஞ்சொல்லிக்காட்டலாம்.

XX அதேதென்றால்:- அளவில்லாத ஞானசுரூபமாயிருக்கிறகர்த்தானவர் அந்தந்தப்பொருட்களை யந்தந்தரூபங்களாயுண்டாக்கினதுக்கு ஞாயமுண்டென்று சொல்லவேணுமொழிய ஞாயமில்லாமல் வீணாய் ஒன்றையுண்டாக்கினாரென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. இப்படியிருக்கையிலே மனுஷரை நிமிர்ந்த ரூபமாயுண்டாக்கி மிருகமென்னப்பட்டயாவையுங் கவிழ்ந்த ரூபமாயுண்டாக்குவானேனென்கிறதற்கு ஞாயமாவது:-மிருகமானது பூமியிலேபிறந்து பூமியிலேசரீரத்தோடிருக்கிற நாள்மட்டுந்தனது பாக்கியத்தை யனுபவிக்கக்கூடுமேயொழியப் பூமியைவிட்டாலழிந்துபோகிற சீவனுக்கொன்றுங் கிடையாதென்கிறதினால் தனதுநன்மையிருக்கிறஸ்தலத்தை யெப்போதும் பார்த்துக்கொண்டு வரவேணுமென்று நீதிசொரூபமாயிருக்கிற நாதன் மிருகங்களைக்கவிழ்ந்த ரூபமாயுண்டாக்கினரென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே மிருகங்களுக்குண்டான கவிழ்ந்தரூபமானது மிருகங்களுடைய சீவனுக்கு இந்தப்பூமிதவிர அப்பால் உலகமில்லையென்று உச்சிதமாகக் காட்டிக்கொண்டுவருகிறதென்று சொல்லலாம். மனுஷனுக்கோவென்றால் குறையற்றபாக்கிய மென்கிற மோக்ஷமானது அவதியாயிருக்கக்கொள்ளத்தனது பாக்கியமிருக்கிற ஸ்தலமாகிற சோதிமண்டலத்தை மனுஷனானவன் அடிக்கடியண்ணாந்து பார்த்து அதிலுண்டான தனது குறைவற்ற பாக்கியத்தை யபேக்ஷிக்கவேணுமென்று நிமிர்ந்தரூபமாக மனுஷனை ஆண்டவருண்டாக்கினரென்று சொல்லக்கடவோம். அப்படியே மனுஷனுடைய ஆசையைப்பூரித்துத் திருப்திசெய்விக்கிற பாக்கியம் இந்தப்பூமியிலே யில்லையென்றும், மனுஷனுடைய ஆசைபூரிக்கிறசந்தோஷமும் மனுஷனுக்கவதியாகிற குறையற்றநன்மையுஞ் சோதிமண்டலத்திலுண்டாயிருக்கிறதென்று மனுஷனுக்குண்டான செவ்வையாகிற நிமிர்ந்த ரூபமானது காட்டிக்கொண்டுவருகிறதென்று உச்சிதமாய்ச்சொல்லலாம்.

XXI இதுவரைக்குஞ் சீவனானது சேட்டைக்குக் காரணமாயிருக்கிறதினுஞ் சீவனுக்குஞ் சடத்துக்கும்பேதமிருக்கிறதென்று சொன்ன துந்தவிர யிரண்டுவகைச் சேட்டையினாலே யிரண்டுவகைச் சீவனுண்டென்றெப்படிச் சொன்னாற்போலேயாச்சுது. அப்படியே அபிவிருத்தியென்கிறசேட்டை மாத்திர முடைத்தானமரத்தில் சீவனானது வளர்த்தியைப்பண்ணுகிற சீவனென்று சொன்னோம், [illegible]ண்டான ஐந்திரியசீவனேயென்றால் அபிவிருத்தியென்கிறசேட்டைக்கும் இந்திரியச் சம்மந்தமாயிருக்கிறசேட்டைக்கும் பிரதான காரணமா யிருக்கக்கொள்ள விருகங்களுக்குண்டான வளர்த்தியைப் பண்ணுகிறசிவனைப் பார்க்கிலும் உத்தமசீவனென்று சொல்லவேண்டியிருந்தாலும் இவ்விரண்டுவகைச் சீவன்களுஞ் சரீரமில்லாவிட்டா லொருசேட்டையாகிலும் பண்ணமாட்டாதென்கிறதினால் [illegible]லாமலதுநிற்கக்கூடாதென்றுஞ் சரீரம் அழிந்துபோனால் கூட அழிந்துபோமென்றும் ஒப்பச்சொன்னாற்போலாச்சுது. இனிவேறேயுத்தம சேட்டையினாலே வேறேயுத்தம சீவனாகிற மனுஷனுடைய ஆத்துமமானது இன்னதென்றுகண்டுபிடிக்கவேணும். அப்படிப்பட்ட சீவன் எந்தஞாயத்தினாலே அழியாத சீவனென்று சொல்லவேணுமென்றும், அதற்[illegible]புத்தியாகிறதேதென்றுஞ் சுவா[illegible] [illegible]ப்படிக்கொத்த சத்தியென்றும் அறியவேண்டினவற்றையெல்லாம். [illegible] பாடங்களிலே சொல்லுவோம்.

———(:*:)———

௨-ம் பாடம்.

I. சேட்டைக்குக் காரணமானது சீவனாகுமென்றும் அபிவிர்த்தி ஐயிந்திரியசேட்டையாகிற [illegible]வகைச் சேட்டையினாலே யிரண்டுவகைச் சீவனுண்டென்றும் போன பாடத்திலே யொப்புவித்தாற்போலாச்சுது. இந்தப்பாடத்திலே ஞானமாகிற வுத்தமசேட்டையினாலே வேறேவகையுள்ள சீவனுண்டென்று அறிவிக்கத் தக்கதாயிருக்கும். இப்படிப்பட்ட வுத்தமசீவனுடைய விஷயங்களிலே யறிவிக்கப்படலான விசேஷங்களை விசாரிக்கும் [illegible] அனேகவிஸ்தாரப் பிரசங்கங்களைப் பண்ணலாம். அதெல்லாங் கலை[illegible] கவியாக யறியவேண்டின விசேஷங்களாகாத படியினாலே யவையெல்லாம் விட்டு, அவனவன் கரையேறுகிறதுக்கு ஆத்துமவிஷயத்திலே தள்ளத்தக்க தப்பறை வார்த்தைகளையும் அங்கிகரிக்கத்தக்க சத்தியவிசேஷங்களையுஞ் சங்க்ஷேபமாக வெளிப்படுத்தக்கடவோம்.

II. அபிவிருத்தியும் இந்திரிய சேட்டையுந்தவிர அறிக்கையென்கிறசேட்டை யுண்[illegible] [illegible]தகயில்லாம லறிந்துகொண்டிருக்கிறோம். சுபாவமாய்ச்சீவனானது தனக்கா[illegible] [illegible]பேரி வாதை வைத்து அதைத் தேடுகிறதுஞ் சுபாவமான அருவருப்பினாலே தனக்காகாதது வாராதபடிக்குத் தானே அகலுகிறதென்கிறதும் இத்தறுவாயிலே சொல்லப்படுகிற அறிக்கையென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் இந்தச் சேட்டைகளிரண்டையும் ஞானமில்லாத ஐயிந்திரிய சீவனுடைத்தான மிருகங்களும் பண்ணிக்கொண்டேவரும். அவ்வன்னமே தனக்கான பக்ஷணங்களைப் பார்த்து அதைத்தின்னத்தக்கதாக நடந்துபோம் அதைக் காணாவிட்டா லங்கேயு மிங்கேயுந் தேடிக்கொண்டு திரியும். பொல்லாததாயிருக்கிற அடிமுதலான்வைகள் தனக்கு வாராதபடிக்குத் தப்பிக்கொண்டு திரியவுஞ்செய்யும் ஆகாததை யருவருத்துத் தேடாமலிருக்கவுஞ் செய்யும் இதெல்லாம் ஐயிந்திரிய சீவனுக்கான சேட்டையாயிருக்கக்கொள்ள அதுக்குஞானமும் வேண்டியிருக்குமென்றுசொல்லக்கடவதல்ல.

ஞானமான சேட்டை [illegible]தாவென்றால் இன்னின்னது ஞாயமென்றும் இன்னின்னது ஞாயத்துக் [illegible]தென்றும் புண்ணிய பாவ மின்னதென்றும் பாவ புண்ணியத்தினாலே ஆக்கினைசம்பாவனை வருமென்றும் அறிகிறதுதான் ஞானசேட்டையென்று சொல்லப்படும்.

இதுதவிர லோகத்தைப்பார்த்து அதுக் காதிகாரண முண்டாயிருக்கவேணுமென்றும் அப்படிப்பட்ட ஆதிகாரணமானவர் [illegible]ராயிருக்கவேணு மென்றும் அவருக்குண்டான மற்றலக்ஷணங்களையும் நிச்சயம்பண்ணுகிறதே ஞானமென்று சொல்லத்தகும்.

இதுவுமன்றி அந்தந்தச் சாதியுள்ள [illegible]துகளுக்குள்ளே அன்னியோன்னியமாகச் [illegible]னருபமுள்ள சுபாவமும் ஒருவகைச் [illegible]று மிருக்கக்கொள்ள அந்தந்த வஸ்துக்களுக்கு பின்ன பேதக சுபாவமிருந்தாலும் உண்டான சாமானியத்தினாலே அவையெல்லாமொன்றாய் விசாரித்து சாமானியமென்று சொல்கிற தென்கிறதுக்குச் சாமானியமானது காரணமாகும்.

சாமானியமாவ தேதென்றால் மனுஷரெல்லாருக்கும் மனுஷத்துவமும், எல்லாப் பசுக்களுக்கும் பசுத்துவமும் அந்தந்த மிருகங்களுக்கு அந்தந்த மிருகத்துவமும் இப்படிப்பட்ட சாமானியந்துக்குக்காரணமாகும். ஆகையாலே [illegible]கனிடத்திலேயுள்ள மனுஷத்துவத்துக்கொத்த ஞாயத்தை அங்கிகரிக்கிறதும் இத்தொகைப்பட்ட [illegible]முண்டான கிரிகைகளும் ஞானசேட்டை யென்றுசொல்லக் கூடுமொழிய [illegible] தேடித்திரிகிறதும் ஆகாததைத் தள்ளுகிறதுமாகிய இதுமுதலான மிருகங்களுக்குண்டான சேட்டைகள் ஞானமாயிருக்கிறதென்று சொல்லப்படாது.

இத்தொகைப்பட்ட ஞானசேட்டையைப் பண்ணுகிற பலத்துக்குச் சமுத்திரையானபேர் சொல்லவேணுமானால் புத்தியென்றும் அறிவென்றும் [illegible]மென்றும் அல்லதுசேதனம் என்றும் சொல்லவேண்டும். ஆனால் சிலவிடங்களிலே சிலர் வேறேபிரகாரமாய் விபரீதமான அர்த்தத்தைப் புத்திமுதலிய சொல்லப்பட்ட பதங்களுக்குச் சொல்லிக்கொண்டுவருகிறதினால் சமுத்திரையான பேரென்கிற மற்ற இரண்டு ப[illegible]க்காட்டினோம்.

III. இந்த ஞானசேட்டைக்குண்டான மேரையைப் பார்க்கும்போது சரீரத்துக்கடுத்த விஷயங்கள்மேல் இலவலேசமாகிலும் இந்திரியம்போலே விழுந்து சரீரத்துக்கடுத்தவைகளை மாத்திரம் விஷயீகரிக்கிற தென்றுசொல்லப்படாது. ஆனபடியினாலே இப்படிப்பட்ட ஞானசேட்டை யுண்டாகிறதுக்கு அவசியமாய்ச் சரீரம் வேண்டியிருக்கிறதென்று சொல்லத் தகாது. இப்படிப்பட்ட ஞானசேட்டை சரீரமில்லாவிட்டாலு முண்டாகலா மென்கிறதினால் அந்தஞான சேட்டைக்குக் காரணமான பலமாகிறபுத்தியானது சரீராதேயமாயிராதென்று அற்பசந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

சொல்லப்பட்ட இரண்டு வகையுள்ள சேட்டைகளைப்பார்க்கிலும், இத்தொகைப்பட்ட[illegible] சரீர சம்பந்தமாயிராத பொருட்களை நிச்சயிக்கிறதற்குப் பலமாகிறபுத்தி யுண்டாயிருக்குமாப்போலே அப்பேர்ப்பட்ட அசரீரியானபொருட்கள் வேண்டும் வேண்டாமென்கிறதுக்கு மனுஷனிடத்திலே பலமுண்டாயிருக்கிறதென்று அநுபவசித்தியினாலே யறிகிறோம். இப்படிப்பட்ட பலத்துக்குச்சமுத்திரையான பேர் சொல்லவேணுமானால் மனமென்றும் மானசமென்றும் சித்தமென்றுஞ் சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட பதங்களுக்கு வேறே சிலவிடங்களிலே வெவ்வேறு விபரீத அர்த்தஞ் சொல்லப்படுகிறதினால் இத்தருவாயிலே சமுத்திரையான பேரென்கிற இரண்டுபதங்களைக் காட்டினோம் இந்த மனசுக்குக்குறைவற்ற சுவாதந்திரிய முண்டென்று பலபல நியாயங்களினாலே அங்கீகரிக்கவேணும். இவைகளெல்லா மினிமேல் லொப்பச்சொல்லுவோம்.

சொல்லப்பட்ட இரண்டுவகையுள்ள சேட்டைகளை[illegible] உத்தம சிவனானது அழிந்துபோகிற சரீரத்துக்கு மாத்திரையா யிருக்கையிலே [illegible]டையைப் பண்ணிக்கொண்டு வருகிறமேரையைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்துகிறதுக்கு முன்னமே உண்டான சிலவிசேஷங்களை யிந்தவிடையிலே சொல்லிக்காட்டி [illegible]த்திக் கொள்ளலாம்.

இந்தவுத்தம சிவனானது அபிவிருத்தியென்கிற சேட்டைக்கும் இந்திரியசேட்டைக்கும் ஞான சேட்டைக்குங் காரணமா யிருக்கக்கொள்ள அச்சேட்டைகளுக்கான சத்திரூபமான குணங்களையுடைத்தானதாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே அபிவிருத்தியைப்பண்ணுகிறதுக்கு வேண்டின சத்திரூபமான குணமும் பலபல வகையுள்ள இந்திரிய சேட்டைகளாகிற காண்கிறதுக்குங் கேட்கிறதுக்கும் [illegible]க்கிராணத்துக்கும் ருசியைக்கிரகிக்கிறதுக்கும் தொடுகிறதுக்கும் வெவ்வேறு சத்தி ரூபமான குணங்களும் உத்தமசிவனுக்குண்டென்று சொல்லவேணும். இதுவும் தவிர புறம்பாயிருக்கிற மேலே சொன்ன பஞ்சேந்திரியங்களுடைய விஷயங்களையெல்லாங் கிரகிக்கிறதுக்குள்ளிந்திரியமாகிற சாதாரண இந்திரியமும் ரூபகரண சத்தியும் சரீரத்துக்கானதையும் ஆகாததையும் மதித்துக்கொண்டு ஆனதை [illegible]கரிக்கிறதுக்கும் ஆகாததை வெறுக்கிறதுக்கும் மதிக்கிற சத்திரூபமான [illegible]முண்டென்கிறதற்குச்சந்தேகமில்லை. இந்தச் சத்தி ரூபமான குணங்களெல்லாம் ஆனை [illegible]லான மற்ற மிருகங்களிடத்திலு முண்டென்று பார்த்துக் கொண்டு வருகிறோம்.

IV. ஆனபடியினாலே மிருகங்களிடத்திலே யிப்படிப்பட்ட சத்திரூபமான குணங்கள் சரீராதேயமாக யுண்டாயிருக்கிறதென்று சந்தேகமறச் சொல்லிக்கொண்டு வருகிறாப்போலே உத்தமசிவனுக்குண்டாயிருக்கிற இத்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களானவைகள் [illegible]ற்றில் நின்று ஜலம் பிறப்பிக்கிறதுபோல வுத்தம சிவனிடத்தில் நின்று அவைகள் தோன்றிப்பிறப்பிக்கிறதென்றுஞ் சொல்லவேண்டியிருந்தாலும் அத்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்கள் சரீராதேயமாயிருக்கிறதென்று சொல்லவேணுமே யொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் உத்தம சிவனுக்குண்டான கீழாங்கிஷமென்று சொல்லத்தகும் இந்தக்கீழாங்கிஷமானதுக்குச் சரீரமானது ஆதாரமாயிருக்கக்கொள்ள வுத்தமசிவனானது சரீரத்தோடேயிருக்கிற நாள் மட்டும் அப்படிப்பட்ட கீழாங்கிஷமானது உண்டாயிருக்கும். சரீரம்போனால் அம்மாத்திரமே இத்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களாகிற கீழாங்கிஷமானது சூனியமாய்ப்போமென்கிறதுக்குத்தப்பாது. ஆதாரமாகிற சரீர அவயவங்களி னுதவியில்லாமல் உண்டாகமாட்டாத இந்தச் சேட்டைகளை உத்தமசிவனானது சரீரத்தை விட்டுப் போனபிற்பாடு பண்ணமாட்டாதென்று சொல்லக்கடவோம். உத்தமசிவனானது சரீர அவயவங்களோடே கூடப்பண்ணிவருகிற யிந்த வகையுள்ள சேட்டைகள் தவிர ஞானமான சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதே. ஆதலால் இந்த ஞானசேட்டைகளுக்கான சத்திரூபமான குணத்தை உத்தமசிவன் கொண்டிருக்கிற தென்றுசொல்ல வேணும். அதற்கு சரீர அவயவமானது ஆதாரமாயிராததினால் ஆத்துமத்திலேதானே அப்படிப் பட்ட குணமாகிற புத்தியானது ஆதேயமாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல.

ஆதலாலே உத்தம சிவனானது சரீரத்தைவிட்டுப்போனபிற்பாடு ஞானசேட்டைகளுண்டாகிறதுக்கு வேண்டின சத்தியாகிற புத்தியைக்கொண்டிருக்கிறதினால் உத்தம சிவனானது சரீர மில்லாமலிருந்தாலும் ஞானசேட்டை யென்னப்பட்ட யாவையும் பண்ணிக் கொண்டுவருகிறதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

V. இதெல்லாம் இப்படியிருக்கையிலே உத்தமசிவனானது அழிந்துபோகிற சரீரத்தோடே கூடவிருந்து அதற்[illegible]ரையா யிருக்கையில் அதுஞான சேட்டைகளைப் பண்ணிக் கொண்டுவருகிற மேரை [illegible]ன்று இத்தருவாயிலே சொல்லத்தக்கதாகும்.

இதிலே[illegible]க்கிற கிரமமாவது புறம்பாயிருக்கிற பஞ்சேந்திரியங்களினாலே அந்தந்த விஷயத்தின் பிரதிபிம்பத்தை உத்தம சிவனானது கிரகிக்கும். அதற்குப் பிற்பாடு உள்ளிந்திரியமாகிற பொதுவிந்திரியமானது அந்தவிஷயத்தின் பிரதி பிம்பத்தைத் தன்னிடத்திலே யுண்டாக்கும் அதற்கப்பால் ரூபகரண சத்தியானது அந்தந்த விஷயங்களுடைய பிரதி பிம்பங்களைக் கிரமத்தோடே குறையில்லாமல் ரூபீகரித்துப் பார்த்துக் கொண்டிருக்கும், இதெல்லாம இந்நடைவா யுண்டாயிருக்கையில் சரீரத்துக் காதேயமான யித்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களுஞ் சரீரத்துக் காதேயமாயிராதபுத்தியும் ஒரேவுத்தம சிவனிடத்திலே யுற்பத்தியுடைத் தானவைகளாயிருக்கக் கொள்ள முன் சொல்லப்பட்ட சத்திரூபமான இந்திரியங்களுக்கும் ஞானசத்தியாகிற புத்திக்கும் மிகுந்த தொந்தமுண்டென்று சொல்லக்கடவது.

தொந்தமாவ தேதென்றால் புறவிந்திரியங்களும் உள்ளிந்திரியங்களுந் தனித் தனியே தனது விருத்திகளைக்கொண்டு விஷயத்தைக் கிரகிக்கிற போது புத்தியானது அந்தவஸ்துவை ஞானமேரையாகக் கிரகிக்கும்படிக்குத் தக்க பிரதிபிம்பத்தைத் தன்னிடத்திலேயுண்டாக்க வஸ்துவை யறிகிறதற்கு அந்தப்பிரதிபிம்பத்தினாலே குறைவற்ற சத்தியாகிற புத்தியைக்கொண்டு வுத்தமசிவனானது பொருளையறிகிற [illegible] விருத்தியைப் பண்ணும், இந்த விருத்தியானது அறிக்கையென்றும் ஞானமென்றுஞ் சொல்லப்படும். இப்படிப்பட்ட ஞானவிருத்தியானது ஆத்துமத்திலே யுற்பத்தி யுள்ளதா

யிருந்து ஆத்துமத்துக்குப் புறம்பாய்ப்போகாமல் ஆத்துமத்திலேதானே ஆதேயமாயிருக்கும். வெள்ளை, கறுப்பு முதலான குணங்கள் அந்தப் பொருளிடத்திலே ஆதேயமாயிருக்கக்கொள்ள அதினாலேமாத்திரம் பொருளானது வெள்ளையானதுமாய்க் கறுப்பானதுமா யிருக்கிறாப்போல அந்தப்பொருள்விஷயஞானவிருத்தியானதும் ஆத்துமத்திலே யுற்பவித்து அதை ஆத்துமமானது கொண்டிருக்கக் கொஞ்சக் குறையில்லாமல் அந்தப் பொருளையறிகிறதென்கிற நாமதேயமும் இவனுக்குண்டாம். இந்த ஞானவிருத்தியானது புத்தியினுடைய வார்த்தையென்றும் உள்வார்த்தையென்றுஞ் சொல்லக்கடவது.

VI. இந்தவிருத்தியானது மூன்று வகைக்குள்ளே யடங்கினதாயிருக்குமென்று அங்கீகரிக்கவேணும். அதேதென்றால் சிலமுறை புத்தியானது ஒன்றோடொன்று கூட்டாமற் பொருளையறியும். அதாவது விசேஷியத்தின்போதிலே விசேஷணத்தை யோசியாமல்பொருளுடைய சுபாவத்தைப் பார்க்கிறாப் போலேயிருக்கும். இந்தஞானவிருத்தியானது தேவலாவலோகனமென்றுங் கேவலகிரகணமென்றுஞ் சொல்லலாம். சிலமுறை புத்தியானது விசேஷியத்தோடேகூட விசேஷணத்தைக் கூட்டிப்பொருளையறியும். அதாவது மனுஷனானவன் புத்திமானாயிருக்கிறானென்று அறியும்போது மனுஷனென்கிற விசேஷியத்தோடே புத்திமானாகிற விசேஷணத்தைக் கூட்டினதுபோலாச்சுது. இந்தஞானவிருத்தியானது ப்ர[illegible]சேதமென்றுந் தீர்வையென்றுஞ் சொல்லலாம்.

இந்தயிரண்டு ஞானவிருத்திதவிர வேறேயொரு வகையுள்ள ஞானசேட்டையுண்டென்று சொல்லக்கடவோம். அதாவது ஒருபொருளையறிந்து அதினாலே வேறேயொன்றை யறிகிறாப்போலே அதுவுண்டாயிருக்கிறதென்று ஸ்தாபிக்கும். அதெப்படியென்றால் மெய்யான சர்வேசுரனை யறியாதவன் ஒருபோதுங் கரையேறமாட்டான். இவன் சர்வேசுரனை யறியாதவனாயிருக்கிறான், ஆனபடியினாலே இவன் கரையேறமாட்டான். இப்படிப்பட்ட ஞானவிருத்திக்குப் பராமிசமென்கிற பேர் சொல்லப்படும்.

VII. உத்தமசிவனானது ஞானசேட்டையென்னுகிற [illegible]யாயில் மிகவும் அற[illegible] வேண்டின ரகசியமுண்டு அதை வெளிப்படுத்த[illegible] வெளிப்படுத்தினால் மனுஷனிடத்திலே யுண்டாயிருக்கிற ஞானத்தைச் சொல்லும்போது அறியாதபேர்கள் சத்தியத்தைவிட்டுக்கற்பிக்கிற தப்பறைகள் வெளியாகும். அதேதென்றால் ஞானவிருத்தியானது லோகத்திலே காணப்படுகிற வுயிருள்ள பொருட்களினாலே பண்ணப்படுகிற சேட்டையாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலால் உயிரான சேட்டையினுடைய சுபாவமேதையும் விசாரிக்குமிடத்தில் ஞானவிருத்தியானது எந்தப்பொருளிடத்திலே உற்பத்தியுண்டாகுமோ அந்தப்பொருளைவிட்டுப் பிரியாமல் அதிலேஆதேயமாயிருந்து அந்தப் பொருளை ஞானமுடைத்தான தாகப்பண்ணிக்கொண்டு வருமொழிய ஒரு பொருளிடத்திலே பிறந்துவேறே பொருளிடத்திலே தாண்டி அதை ஞானமுடைத்தானதாகப் பண்ணலாமென்று மதிகெட்டவனுஞ் சொல்லமாட்டான்.

இதினாலே சடமும் உயிருள்ள பதார்த்தமும் குணத்தையும் உயிருள்ள சேட்டையையுங் கொண்டிருக்கிற வகையை விசாரிக்குமிடத்தில் அதற்கும் இதற்கும் உண்டான அத்தியந்த வேற்றுமையுமெல்லாம் வெளியாகும். அதேதென்றாற் சடமானது வெள்ளை கறுப்பு இதுமுதலான குணங்களுக்கு ஆதாரமாயிருந்து இதினாலே வெள்ளையானதும் கறுப்பானதும் என்கிற பேர் சடபதார்த்தத்துக்குச் சென்று வரும், ஆனால் சடத்துக் குண[illegible] சுபாவத்தை விசாரிக்கும்போது தனது வெள்ளை கறுப்பு இது முதலான குணங்களுக்காதாரமாகமாத்திர மிருக்குமொழியத்தன்னிலே யாதேயமாயிருக்கிற குணங்களுக்கு நிமித்த காரணமாயிராது. ஆனபடியினாலே வேறேயொரு நிமித்தகாரணத்தி

னாலே பண்ணப்பட்ட வெள்ளை கறுப்பு முதலான குணங்களுக்குச்சடமானது எப்போதும் அவைகளை விசாரிக்குமிடத்தில் உபதானகாரணமாக மாத்திரமிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. மீளவும் வெள்ளைகறுப்பு முதலான குணங்களுக்குண்டான சுபாவத்தைப் பார்க்கும்போது அவைகளுயிருள்ள சேட்டையாயிராததுபோலே யொருநிமித்த காரணமாகிற பொருளினாலே யுண்டாக்கப்பட்டு வேறேபொருளிடத்திலே யாதேயமாயிருக்கும். ஆனபடியினாலே யுயிருள்ள சேட்டையாயிராத வெள்ளை கறுப்பு முதலான குணங்களுக்கும் பின்னமாயிருக்கிற யிரண்டு பொருட்களானவை நிமித்த காரணமும் உபதானகாரணமுமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. கலச முதலானவைகளுடைய நிருமாணத்திலே குலாலன் முதலானபேர்கள் நிமித்த காரணமென்றும் மண் முதலான திரவியங்கள் உபதான காரணமென்றுஞ் சொல்லப்படும். இதெல்லாமிப்படியிருக்கையிலே ஞானவிருத்தியானது சந்தேகமற்ற உயிருள்ள பிரதான சேட்டையாயிருக்கக்கொள்ள ஒரு பொருளிடத்தி லுற்பத்தியுண்டாய் வேறொருபொருளிடத்திலே ஆதேயமாயிருந்து அதை ஞானமுடைத்தானதாகப் பண்ணலாமென்று சொல்லவும் எண்ணவுங்கூடாது, அதேதென்றாற் சடபதார்த்தமானது கறுப்பாயிருப்பதினாலே கறுப்பானதென்று சொல்லப்படுமாப்போலே சிவனானது ஞானவிருத்தியினாலே யறிகிற பொருளென்று அங்கீகரிக்கத்தக்க பக்ஷமாயிராது.

VIII. இதற்குச் சமுத்திரையான ஞாயமேதென்றால் பொருளானது வெள்ளையானதுமாய்க் கறுப்பானதுமாயிருக்கும்படிக்கு வெள்ளையென்கிற குணத்துக்கானாலுங் கறுப்பென்கிற குணத்துக்கென்கிலும், ஆதாரமாகமாத்திர மிருந்தாற்போதும். அதேதென்றால் வெள்ளையானது வெள்ளையென்று மாத்திரஞ் சொல்லப்படுமொழிய அப்பாற்சொல்ல விடமிராது. காண்கிறதும் அறிகிறதுமோவென்றாற்பார்வைக்கும் ஞானவிருத்திக்கும் ஆதாரமாயிருக்கிறதுந் தவிரச் சேர்க்கையைச் சொல்லுமென்கிறதுக்குச் சந்தேகப்படக் கூடுமோ? ஆனபடியினாலே என்கண்ணிலே யுற்பத்தியுண்டாயிருக்கிற பார்வையாகிற விருத்தியை என் கண்ணானது கொண்டிருக்கக்கொள்ள யென்கண்காணக் கூடுமென்று சொல்லக்கூடுமொழிய வேறேயொரு கண்ணிலே பிறந்த பார்வையை யென் கண் கொண்டிருக்கவும் அந்தப் பார்வையினாலே யென்கண்ணானது காணுமென்றும் மதிகெட்டவனாகிலுஞ் சொல்லுவானோ?

IX. அப்படிப்போலப் புத்தியானது பொருளை யறிகிறதுக்கு அதற்குத்தக்க ஞானவிருத்தியைத் தன்னிடத்திலே பிறப்பித்து அதைக்கொண்டிருக்கிறதினாற் புத்தியானது அறிகிறதென்கிறபேர் புத்திக்குச்செல்லுமொழிய வேறே யொரு திக்கிலே பிறந்த ஞானவிருத்தியைப்புத்தியானது கொண்டிருக்கலாமென்றும் அதினாலே விஷயத்தை யறியலாமென்றுஞ் சொல்லுகிறதைச் சலமில்லாமற் பார்த்தோமானால் ஞாயத்துக் கொத்துவராதென்று சொல்லக்கடவோம். அதேதென்றாற் பொருளானது கறுப்பு வெள்ளை யிதுமுதலான குணங்களைக் கொண்டிருக்கிறதினாலே மாத்திரம் அந்தக்குணங்களை உயிருள்ள சேட்டையென்று யாதாமொருத்தன் சொன்னால் அப்படிப்பட்டவன் பயித்தியக்காரனென்கிற பேர்பெற்றெல்லாருஞ் சிரிக்கிறதுக் கிடங்கொடுத்தாப்போலாகும். அப்படியே வேறொரு திக்கிலே பிறந்த ஞானத்தை நான்கொண்டிருந்து அதினாலே அறிந்தவனாயிருக்கிறேனென்கிற அர்த்தங்களை யாதாமொருவன் சொல்லிக்கொண்டுவந்தாற் பரிகாசத்துக் கிடங்கொடுத்தானென்கிறதுக்குத் தப்பாது - அத்தன்மைபோலே பரஸ்பரவிருத்தமான அர்த்தங்களாவது உயிருள்ள சேட்டையாயிராத குணத்தை உயிருள்ள சேட்டையாயிருக்கிறதென்கிறதுக்கு ஒரு ஞானவிருத்தியிலே ஆரோபித்தாப்போலே யாச்சுது. அதேதென்றால் உயிருள்ள பொருள் வெள்ளையைக் கொண்டிருக்கிறதென்கிறது உயிருள்ள சேட்டையென்று சொல்லப்படாதபோதே அதைக்கொண்டிருக்கிற தென்கிறதினாலே மாத்திரம் உயிருள்ள சேட்டையென்கிற பேர் செல்லுமென்றங்கீகரிக்கக்கூடாது. ஆதலாலே ஞானத்தைக்

கொண்டிருக்கிற தென்கிறதினாலே மாத்திர முயிருள்ள சேட்டையென்கிற பேரை விதிக்கிறது ஞாயமல்ல - இது இப்படியிருக்கையிலே அறிகிறதென்கிற சேட்டை உயிருள்ள சேட்டையென்று சொல்லவேணும். ஆனபடியினாலே வேறொரு திக்கிலே பிறந்த ஞான விருத்தியை என் புத்தி கொண்டிருக்கிறதினாலே என் புத்தியானது அறிக்கை யென்கிற சேட்டையைப் பண்ணுகிறதென்று சொல்லப்படுகிறதினால் இந்த விருத்தமான யர்த்தங்கள் சொல்லப்பட்டதென்னத்தகும்.

X. இது நிமித்தமாகச் சிலர் சொல்லுகிறப்போலே மண்ணுங்கட்டிபோலே யிருக்கிற மனம் புத்தி சித்தம் அகங்காரமென்கிற லிங்க சரீரமாகிற அந்தக்கரணத்திலே ஞானசொரூபி யாயிருக்கிற பரமாத்துமமானது பிரதிபலிக்கிறதினாலே அந்தக்கரணமானது ஞானமுடைத் தானதாயிருக்கிறதென்று சொல்லுகிறது யாவரும் எளிதாய்க் கண்டு பிடிக்கலான தப்பறை யாயிருக்கக்கொள்ளக் கரையேற வாசையுள்ளவன் அதை யங்கிகரிக்கக்கட்வானல்ல.

XI. கடைசியாய் மற்றவிருத்திகளாகிற துக்கசந்தோஷமுதலான உயிருள்ள சேட்டை களுடைய விஷயத்திலே யோசிக்கப்படுமாப்போலே ஞானவிருத்தியிலேயும் யோசித்துக் கொள்ளக்கடவோம். அதெப்படியென்றால் துக்கம் சோய் சந்தோஷம் இதுமுதலியவைகள் ஓரிடத்தி லுற்பவித்து வேறோரிடத்திலே ஆதேயமாயிராமல் உற்பவித்த பொருளிடத்திலே யாதேயமாயிருந்து அதைத் துக்கமுஞ் சந்தோஷமு முடைத்தானதாகப் பண்ணிக்கொண்டு வருகிறப்போலே ஞானவிருத்தியான தெந்தச்சீவனிடத்திலே யுற்பவிக்குமோ அந்த சீவனிட த்திலே யாதேயமாயிருந்து அந்தச்சீவனை ஞானமுடைத்தான தாகப் பண்ணிக்கொண்டு வரு மொழிய ஞானவிருத்தியான தொரு திக்கிலே பிறந்து வேறொரு பொருளிடத்திலே பாய்ந்து அதை யறிகிற பொருளாகப் பண்ணலாமென்கிறது முழு தப்பறையாயிருக்கிறதென்று விசா ரிக்கக்கடவோம்.

XII. ஞானவிருத்தியானது சீவனிடத்திலே யுண்டாகிற மேரையைக் கொஞ்சத்துக் குள்ளே சொல்லிக் காட்டினோமென்கிறதினாலே மகாரகசியமான வேறிரண்டு விசேஷங்க ளெப்படியென்று கண்டுபிடிக்கலாம் - அவ்விரண்டுவகை சத்திய விசேஷங்களுமேதென்று வருகிற பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

௩-ம் பாடம்.

I. போனபாடத்திலே ஞானவிருத்தியானது நரசீவனிடத்திலே யுண்டாகிற விதத் தைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தினோம்போலாச்சுது - அந்த விஷயத்தி லறியவே ண்டின இரண்டு சத்திய ரகசிய விசேஷங்களுண்டு, அவைகள் மனுஷனிடத்திலே யெப் போது முள்ளவைகளென்று எல்லோருங் கண்டுகொண்டு வருகையிலே அவைகளிலே பேர்வழி மிகவு மறைவாயிருக்கிறதினால் அவைகளிலே அங்கிகரிக்கத்தக்க சித்தாந்த மே தென்று சுருக்கமாய்ச்சொல்லிக்காட்டுவோம்.

II. மிகவும் அவசியமா யறியவேண்டின அவ்விரு சத்திய ரகசிய விசேஷங்களுமே தென்றால் ஞானவிருத்தியை பண்ணிக்கொண்டிருக்க வல்லதாயிருக்கிற உத்தம சீவனானது அந்த ஞானவிருத்தியை சிறுபிள்ளைகளிடத்திலே பண்ணுமலே னென்றறியவேண்டினது முதலாம் ரகசியமாகும் - பயித்தியக்காரரிடத்திலேயும் நித்திரை பண்ணுகிறவனிடத்திலேயும் சீவனானது விபரீத சம்பந்தப்பட்ட விஷயங்களை யறிந்துகொண்டு வருமென்கிறதை யறிய வேண்டினது இரண்டாம் ரகசியமாகும்.

III. இதிலே சந்தேகப்படத்தக்க இடமேதென்றால், பாலனுடைய சரீரத்தையும் பயித் தியக்காரனுடைய சரீரத்தையும் சீவனானது விட்டுபிரிந்தால் அறிக்கை யில்லாததுமாய்ப் பயித்தியமுள்ளதுமாயிராமல் குறையற்ற ஞானமுடைத்தானதாயிருக்கிறதென்கிறதுக்குச் சந் தேகமில்லை. இப்படிப்பட்ட சரீரங்களோடே கூட அறிக்கையில்லாததுமாய்ப் பயித்திய முள் ளதுமாயிருக்கிறதென்று கண்டு வருகிறோமென்கிறதுக்குத்தப்பாது ஆனால் ஞானவிருத்தி யானது சீவனிடத்திலே யுண்டாயிருக்கிற விதத்தை நன்றாய் விசாரித்து நிச்சயம் பண்ணி னோமானால் இப்படிப்பட்ட இரண்டு சந்தேகங்களுக்கான பிரத்தி யுத்தாரத்தை யெடுத்துக் காட்டலாம்.

அதெப்படியென்றால் புறவிந்திரியங்களாகிற பஞ்சேந்திரியங்கள் தனது விஷயங் களைப் பலநாளுங் கிரகிக்கக் கிரகிக்க வுள்ளிந்திரியங்களானவைகள் அந்தந்த விஷயத்தினு டைய பிரதி பிம்பங்களைத் தன்னிடத்திலே யுண்டாக்கி அந்தந்த விஷயங்களைக் கிரகித்துக் கொண்டுவருமென்று சொல்லப்பட்டாப்போலே யாச்சுது. புறவிந்திரியங்களும் உள்ளிந்திரி யங்களும் பழுதற அந்தந்த விஷயங்களைக் கிரகித்த பிற்பாடு புத்தியானது தனது ஞான விருத்தியைப் பண்ணிக்கொண்டு வருமேயொழிய மற்றப்படியல்ல. உத்தமசீவனானது அழிந்து போகிற சரீரத்துக்கு மாத்திரையாயிருக்கிற நாள் மட்டும் இவ்விதமாய் ஞானவிருத்தியைப் பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப் படியல்ல-உத்தமசீவனானது அழிந்துபோகிற சரீ ரத்துக்குமாத்திரையாயிருக்கிற நாள் மட்டும் ஞானவிருத்தியைப் பண்ணிக்கொண்டு வருகிற மேரையானது இப்படிப்பட்டதாயிருக்கையிலே சிறு பிள்ளைகளுடைய பஞ்சேந்திரியங்களா னவைகள் தனது விஷயங்களைப் பலநாளுங் கிரகித்துக்கொண்டு வராததினாலே உள்ளிந் திரியங்களானவைகள் அப்படிப்பட்ட விஷயங்களை பழுதறக்கிரகிக்கிறதேயில்லை. இப்படி பழுதற கிரகியாத நாள்மட்டும் பாலனுடைய சரீரத்தோடே கூடியிருக்கிற ஆத்தும மானது தனது ஞானவிருத்தியைப் பண்ணாது-ஆறேழு வருஷத்துக்குள்ளே யேறக்குறைய அந்தந்தச் சரீர *காலத்துக்கு அல்லது குணத்துக்குத்தக்கது பலநாளும் பஞ்சேந்திரியங்களி னாலே கிரகிக்கப்பட்ட விஷயங்களை கிரகிக்கிற வுள்ளிந்திரியங்களானவைகள் தனது விஷயங்களைப் பழுதறக்கிரகிக்கும். இந்திரியத்தினாலே பழுதறக் கிரகிக்கப்பட்ட யாதொரு பொருளுண்டே-அந்த வஸ்து விஷயமாக ஞானவிருத்தியைப் புத்தியானது பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப்படி யல்ல. இது அழிந்துபோகிற சரீரத்துக்கு அழியாத சீவனானது மாத்திரையாயிருக்கிற மேரைக்கு அனுக்கிரமமென்று சொல்லக்கடவது.

IV. இது தவிர சிறு பிள்ளைகள் சரீரத்தோடே கூடியிருக்கிற ஆத்துமமானது ஒரே ஆத்துமமொழிய மற்றப்படியல்ல - அந்த வொரே ஆத்துமமானது புறவிந்திரியங்களைக்கொண்டும் உள்ளிந்திரியங்களைக் கொண்டும் புத்தியைக்கொண்டும் ஆன சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வரவேணுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனபடியினாலே சிறுபிள்ளையினுடைய சரீரத்தை வளரப்பண்ணுகிறதுக்கும் உள்ளிந்திரியங்களுக்கு வேண்டின அவையவங்களைத் திடமாகயிருக்கப்பண்ணுகிறதுக்கும் ஆத்துமமானது தனது பலமெல்லாஞ் செலவழித்துக்கொண்டு வருகையிலே இப்படிப்பட்ட தனது கிரியாவிசேஷத்தைச் செவ்வே [illegible] டாக்கிறதிலே ஆத்துமமானது முழுதும் உபட்சிணமாயிருக்கக்கொள்ள மேலாகவிசேஷத்துக் கடுத்த ஞானவிருத்திகளைப்பண்ணுகிறதுக்கு அதுக்குப் பெலமிருசிப்போகாது. இந்த சத்தியத்தை யொருவமையினாலே வெளிப்படுத்தலாம்.

V. அக்கினியானது மேலே யேறுகிறதென்கிறது சுபாவமாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது-ஆனால் தனது அபிவிருத்திக்கு வேண்டின திரவியத்தைக் கூட்டுகிறவரைக்குமென்று கீழேயிறங்கும். இறங்கி கூட்டத்தக்க திரவியமெல்லாங் கூட்டின பிற்பாடு தனது சுபாவத்தின்படியே மேலேயேறும் - அத்தன்மைபோலே யே[illegible] சபலமாயிருக்கிற ஞானவிருத்தியைப் பண்ணுகிறதென்கிறது மனுஷனுடைய சீவனுக்குச் சுபாவமாயிருக்கையிலே தனது சரீரத்தை வளரப்பண்ணவும், இந்திரியங்களுக்கு வேண்டின அவையவங்களைத் திடமாகப் பண்ணவுந் தானாயாயிருந்தால் அச்சீவனானது இறங்கிறதுக்குச் சமானமாயிருக்கிற இப்படிப்பட்ட தனது கிரியாவிசேஷத்தைச் செவ்வையாகப் பண்ணிக்கொண்டு வரவேணுமென்கிறதுக்குத் தப்பாது. இத்தொகைப்பட்ட இறக்கமானது சீவனிடத்திலே முழுதும் முண்டாயிருந்தா லேற்றத்துக்குச் சரியாயிருக்கிற ஞானவிருத்தியானது சீவனிடத்திலே முழுதும் உற்பவிக்கமாட்டாது. தனக்கு வேண்டின திரவியத்தைக் கூட்டுகிறதுக்கு இறங்கிற அக்கினிபோலே சீவனானது தனது சரீரத்தையுஞ் சரீரத்துக்கடுத்த கிரியாவிசேஷத்துக்கு வேண்டின அவையவங்களையுஞ் சிறிது வருஷத்துக்குள்ளே திடமாகப்பண்ணின பிற்பாடு தனக்கு வேண்டின திரவியத்தைக்கூட்டி யேறுகிற அக்கினி போலே ஆத்துமமானது தனது சுபாவத்தின்படியே கிளம்பிப் பலபல ஞானவிருத்திகளை யெளிதாய்ப் பழுதறப்பண்ணிக்கொண்டு வரும். ஆனபடியினாலே பாலனுடைய சரீரத்தோடே ஆத்துமங் கூடியிருக்கையிலே ஞானவிருத்திகளைப் பண்ணாமல் ஏழெட்டு வயசுக்குப் பிற்பாடு தனது சுபாவத்தின் படியே கிளம்பித் தனது உத்தம சேட்டைகளாகிற ஞானவிருத்திகளைப் பண்ணிக்கொண்டுவரும்.

VI. இந்த சத்தியத்தை யின்னம் வேறொரு திருஷ்டாந்தத்தினாலே வெளிப்படுத்தலாம். மனுஷனானவன் மிகவு மொரு காரியத்தின் பேரிலே விசாரமாயிருந்தாற் கண்முன்னே வந்த விஷயத்தைக் காணுமளவும் சத்திக்கிற சத்தத்தைக்கேளாமலும் இருப்பான்-இதுக்குக்காரணமேதெனில் ஒரே சீவனானது மனுஷனிடத்திலே யுண்டான யயிருள்ள சேட்டைகளுக்குப் பிரதான காரணமாயிருக்கும் ஆனபடியினாலே சீவனானது ஒருபொருளை மிகவுஞ் சிந்தனைப்பண்ணுகிறதிலே முழுதும் உப[illegible]சிணமாயிருக்கிற சீவனானது கண்ணோடே கூடவும் காதோடேகூடவுங் காண்கிற சேட்டையுங் கேட்கிற சேட்டையும் பண்ணமாட்டாது.

அப்படியே பாலனுடைய சரீரத்திலே யுண்டாயிருக்கிற சீவனானது அந்தந்த இந்திரியங்களுக்கு வேண்டின அவையவங்களைத்திடமாகப்பண்ணிக்கொண்டுவருகிறதிலே தனது சத்தியி லனேகஞ் செலவழிக்கிறதினால் பஞ்சேந்திரியங்களுடைய சேட்டைகளை யொருபிரகாரமாய்ப் பண்ணுகிறதுக்குஞ் சிறிது காலம் போனபிற்பாடு உள்ளிந்திரியங்களுடைய சேட்டைகளைக் குறைவியாடே மெள்ள மெள்ள வொரு பிரகாரமாய்ப் பண்ணுகிறதுக்குஞ் சக்தியுள்ளதாயிருந்தாலும் ஞானவிருத்தியைப் பண்ணுகிறதுக்குச் சீவ

னுடைய சக்தியிலே கொஞ்சம்போராமல் அதிகமாக வேண்டியிருக்கக்கொள்ள அத்தொகைப்பட்ட அபிவிருத்தியென்கிற சேட்டையைப் பண்ணுகிறதிலே மிகவு முயற்சியோடேயிருக்கிற சீவனானது ஞானவிருத்தியைப்பண்ணமாட்டாது.

VII. சீவனானது ஞானவிருத்தியைப்பண்ணுகிற மேரை இப்படிப்பட்டதாயிருக்கையிலே உள்ளிந்திரியங்களுக்கு ஆதாரமாயிருக்கிற சரீரத்தின் அவையவங்களானவைகள் வாதபித்த சிலேட்டும முதலான விஷசலங்களினாலே யாதாகிலும் வேறே காரணங்களினாலென்கிறது இயாதொருவிதத்திலே கெடுதியுண்டாயிருந்தால் இந்திரிய பெலன்களானவைகள் தனது செய்கைகளைச் செவ்வையாய்ப்பண்ணமாட்டாது-அதேதென்றால் உள்ளிந்திரியங்களானவைகள் தன்னிடத்திலே யுண்டான விஷயங்களுடைய பிரதி பிம்பங்களைக்கொண்டு தனது விருத்தியைப்பண்ணிக்கொண்டு வருகையிலே சேதப்பட்ட அவையவங்களினாலேயும் வேறே காரணங்களினாலேயுங் கிரமமில்லாமல் விபரீதமாய்ப் பிரதி பிம்பங்கள் அங்கு மிங்கும் அசைபடுகிறதினால் உள்ளிந்திரியங்களானவை தன்தன் விருத்திகளைக் கிரமமில்லாமல் விபரீதமாய்ப் பண்ணிக்கொண்டுவரும்.

VIII. இத்தொகைப்பட்ட இந்திரியங்களும் புத்தியும் ஒரே ஆத்துமத்துக்கடுத்த பெலன்களாயிருக்கக்கொள்ளத் தங்களுக்குள்ளே மிகவுஞ் சேர்ந்த சம்பந்தமாயிருக்கிறது. இப்படியே அவைகளொன்றுக்கொன்று தொந்தசம்பந்தமாயிருக்கிறதினால் உள்ளிந்திரியங்களொழுங்கில்லாமல் தனது சேட்டைகளைத் தாறுமாறாகப்பண்ணிக்கொண்டு வரும்போது புத்தியானது தனது ஞானவிருத்திகளைக் கிரமத்தோடே பண்ணுகிறதுக்கு வல்லதாயிராதென்பதிற் சந்தேகப்படத்தேவையில்லை-இதுவே அழிந்துபோகிற சரீரத்துக் குத்தமசீவனானது பாத்திரமாயிருக்கிற ஸ்திதிக்கு வேண்டின கிரமமொழிய மற்றப்படியல்ல.

IX. நித்திரையவஸ்தையிலே நடக்கிற வர்த்தமானத்தை யறியும்படிக்கு இந்நடவிலே யோசிக்கக்கடவோம். மனுஷன் மிகுதியானப்பட்ட யாவுஞ் சாகரணத்தினாலே அடைகிறகளைப்பு முதலான வருத்தங்களைத் தீர்க்கிறதுக்கும் இப்படிப்பட்ட சுகமுதலான சரீரத்தின் வேறே நன்மைகளை யடைகிறதுக்கும் சகலத்துக்கு மாதிகாரணமாய்க்கிருபை சொரூபியான கர்த்தரானவர் கட்டளையிட்ட இந்திரியங்களுடைய பந்தனமானது நித்திரையென்று சொல்லப்படும்.

இந்த இந்திரியங்களுடைய பந்தனமானது தலையிலேயேறுகிற ஆவிமுதலானவைகளினாலே பண்ணப்படுகிற தென்கிறதுக்குத் தப்பாது. இன்னியாதமுதலான காரணங்களினாலே பண்ணப்படுகிற இந்திரியபந்தனமானது நித்திரையாயிராதென்று காட்டவேணுமென்கிறதினாலே யிளைப்பாறுதலாகிற சுகமுதலான நன்மைகளை மனுஷரும் மிருகங்களும் அடைகிறதென்கிற பதங்களைக் கூட்டினோம். கனமானநித்திரை யுண்டாயிருக்கையிலே புறவிந்திரியங்களும் உள்ளிந்திரியங்களுங் கட்டப்படுகிறதென்கிறதினால் அப்படிப்பட்ட கனமான நித்திரையுண்டாயிருக்கையிலே சீவனானது ஐயிந்திரியச்சேட்டைகளைப் பண்ணமாட்டாமையால் புத்தியைக்கொண்டு ஞானவிருத்திகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிராது. அதேதென்றால் அழிந்துபோகிற சரீரத்துக்கு ஆத்துமமானது பாத்திரமாயிருக்கிற காலமட்டும் ஞானவிருத்திகளைப் பண்ணுகிறதுக்கும் உள்ளிந்திரியங்களின்கிழுந் தனது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வரவேணும். இது ஆத்துமமானது அழிந்துபோகிற சரீரத்துக்கு பாத்திரமாயிருக்கிற மேரைக்குத்தக்க கிரமமாகும்.

நித்திரையானது கனமாயிராதிருந்தாற் புறவிந்திரியங்கள் மாத்திரங் கட்டப்பட்டு உள்ளிந்திரியங்களானவைகள் கட்டுப்படாமலிருக்கும். உள்ளிந்திரியங்கள் கட்டுப்படாதிருக்கிறபோதே அதுகளிலேயிருக்கிற பிரதி பிம்பங்களைக்கொண்டு சீவனானது அவைக

னுடைய சேட்டைகளைப் பண்ணிக்கொண்டேவரும். இப்படிப்பட்ட இந்திரியச்சேட்டைகளுண்டாயிருக்கிறதினாலே ஆத்துமமானது புத்தியைக்கொண்டு தனது ஞானவிருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்று அனுபவத்தினாலே யறிகிறோம். இது சொற்பனமென்றுங் கனவென்றுஞ் சொல்லப்படும். இதினாலிகத் தறியவேண்டியன தாவிசேஷமுண்டு அதாவது ஆத்துமமான தமிழ்த்துபோகிற சரீரத்துக்கு மாத்திரமாயிருக்கையிலே சாதாரணமாகிற ஐந்து இந்திரியங்கள் கட்டப்படாமலிருக்கிற சுவத்தையானதுண்டாயிருந்தால் தனது சுவாதந்திரிய மனதினாலே தெளிவான அந்த விசாரங்களைத் தள்ளுகிறதுக்கு முடன்படுகிறதுக்கும் வல்லதாயிருக்கும். சாதாரணமான ஐந்து இந்திரியங்கள் மாத்திரங் கட்டுப்பட்டால் உள்ளிந்திரியங்களிடத்தி லிருக்கிற பிரதிமைகளானவைகள் பிசாச சரீரதர்ம் முதலான காரணங்களினாலே தாறுமாறாயடைக்கப்பட்டு ஆத்துமமானது ஐமிந்திரியச் சேட்டைகளையும் ஞானவிருத்திகளையும் வேண்டும் வேண்டாமென்கிற அங்கீகாரத்தையுங் கட்டாயமாய்ப் பண்ணிக்கொண்டு வருகிறதிய தனதிச்சைப்படியே யிப்படிப்பட்ட விருத்திகளைப் பண்ணமாட்டாது. இதுக்காரணமாகச் சொற்பனத்தையிலேயும் பயித்தியமானத்தையிலேயும் மனுஷன் பண்ணிக்கொண்டு வருகிற அங்கீகார அனங்கீகாரத்தினாலே பாவபுண்ணியங் கட்டிக்கொள்ளுகிறதில்லையென்று சொல்லக்கடவோம்.

உத்தமனிவனுனது புத்தியைக்கொண்டு ஞானவிருத்திகளைப் பண்ணிக்கொண்டுவருகிறமையானது கொஞ்சத்துக்குள்ளே சொல்லப்பட்டாப்போலே யாச்சுது. சரீரசம்பந்தமாயிராதபொருட்களை யோசிக்கிறதுக்கும் பெலமாகிற புத்தியுண்டாயிருக்குமாப்போலே அத்தொகைப்பட்ட அசரீரியானபொருட்களை வேணும் வேண்டாமென்கிறதுக்கு மனுஷனிடத்திலே பெலமுண்டாயிருக்கிறதென்று அனுபவத்தினாலே யறிகிறோம். இப்படிப்பட்ட பெலத்துக்குச் சுமுத்திரையான பெயர் சொல்லவேணுமானால் மனதென்றும், மானசமென்றுஞ் சித்தமென்றுஞ் சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட பதங்களுக்குச் சிலவிடங்களிலே வேறே விபரீதமான அர்த்தஞ் சொல்லப்படுகிறதினால் இத்தறுவாயிலே சுமுத்திரையானதே தென்கிற இரண்டுபதங்களைக் கட்டிவிட்டோம். இந்த மனசானது சரீரசம்பந்தமாயிராதபொருட்களை வெறுக்கவும் அபேக்ஷிக்கவுஞ் செய்யுமென்கிறதினாலே புத்தியானதுபோலே ஆத்துமத்திலே ஆதேயமாயிருக்கிற தொழிய் சரீரமானது அப்படிப்பட்டமனசுக்கு ஆதாரமாயிருக்கிறதென்று சொல்லக் கூடாது. அதேதென்றால் சரீரத்துக் கானதையும் ஆகாததையுமறிந்து அபேக்ஷிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்குஞ் சத்திருபமான இந்திரியமென்னப்பட்டதெல்லாஞ் சரீரியானதைக் கடவாமலிருக்கக் கொள்ள சரீரத்திலே யாதேயமாயிருக்கும். ஆத்துமத்திலே ஆதேயமாயிருக்கிற மனதோவென்றால் சரீரமென்னப்பட்டதெல்லாங்கடந்து சரீரத்துக்குமேலே யிருக்கிற ஞானபொருட்களை விசுவிசிக்கிறதினாலே சரீரத்திலே யாதேயமா யிருக்கமாட்டாது.

இதற்குக்காரணமே தெளிற் சரீரத்திலே ஆதேயமானது சரீரத்தைக்கடந்து சரீரத்துக்கு மேலேயிருக்கிற பொருட்களை விசுவிசிக்க மாட்டாது. மனசானது சரீரமானதைக்கடந்து சரீரத்துக்குமேலான வஸ்துக்களை விசுவிசிக்கிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். ஆதலாலே மனசானது சரீரத்திலே ஆதேயமாயிராமல் ஆத்துமத்திலே தானே யாதேயமா யிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆத்துமத்திலே ஆதேயமாயிருக்கிற போதே ஆத்துமமானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும் புத்தியைக் கொண்டிருக்கிறாப்போலே யங்கிகார அனங்கிகாரத்துக்குச் சத்திருபமான மனதையுங்கொண்டிருக்கிறதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக் கடவோம்.

ஆனபடியினாலே ஆத்துமமானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தபிற்பாடு புத்தியைக்கொண்டு ஞானவிருத்திகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்குமாப்போலே அப்படிப்

பட்ட ஞானவிஷயங் களுக்குள்ளே ஆத்துமமானது தனக்கானதையும் ஆகாததையும் பார்த்து மனசைக்கொண்டு அதுகளைவேண்டும் வேண்டாமென்கிற விருத்திகளைப் பண்ணுகிறதுக்குச் சேதனமாய் வல்லதாயிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது இப்படிப்பட்ட மனசானது திருப்திகாரமாய்க் குணமாயுஞ் சுவாதந்திரியமுள்ளதென்று சொல்லவேணும்.

இதெல்லாம் வெளியாகும்படிக்குப் பாரதந்திரிய மேதென்றுஞ் சுவாதந்திரியமேதென்றும் சுவாதந்திரியமானது எத்தனை வகையுள்ளதாயிருக்கிறதென்றும் வெளிப்படுத்தவேணும். அதெப்படியென்றால் பொருளினிடத்திலே காணப்படுகிற சேட்டையானதுக்குப் பொருளினிடத்திலே பெலமுண்டாயிராமல் அந்தச்சேட்டைக்குக் காரணமானபலம் பிறத்தியிலே யிருக்கிறதென்கிறது பாரதந்திரியமென்றும், பாரதந்திரியத்தினாலே பொருளானது சேட்டை யுடைத்தானதா யிருக்கிறதென்றுஞ் சொல்லத்தகும். பொருளிடத்திலே காணப்படுகிற சேட்டைக்குப் பொருளிடத்திலே காரணமான பெலமுண்டாயிருக்கிற தென்கிறது சுவாதந்திரிய மென்றும், சுவாதந்திரியத்தினாலே பொருளானது சேட்டையுடைத்தானதா யிருக்கிற தென்றுஞ் சொல்லத்தகும். அவ்வண்ணமே ஒவ்வொருவனிடத்திலே யிருக்கிற சத்தியைக் கொண்டுதனது சேட்டையைப்பண்ணுகிற பொருளானது சுவாதந்திரிய முள்ளதாயிருக்கும் அப்படிப்பட்ட சுதந்தரத்தினுடைய சுபாவமானது சுவாதந்திரியமென்று சொல்லத்தகும்.

இந்தவடைவுள்ள யோகார்த்தமானது சுவாதந்திரியமென்கிற பதத்துக் குண்டாயிருக்கையிலே லோகசங்கேதத்தினாலே வருகிற ரூடியார்த்தத்தை விசாரிக்கு மிடத்தில் தனது சத்தியைக்கொண்டு சேட்டையைப் பண்ணுகிற பொருளென்னப்பட்ட யாவுஞ் சுதந்தரமென்றும் இதினுடைய பண்ணுகையானது சுவாதந்திரிய மென்றுஞ் சொல்லத்தகாது. அதெப்படியென்றால் சேற்றிலே யுற்பத்தியுள்ளது பங்கஜமென்று சொல்லப்படுகையிலே சேற்றிலே யுற்பவிக்கிற பொருளென்னப்பட்ட யாவுக்கும் பங்கஜமென்கிற பேர் சென்று வராமல் தாமரைப்பூ வென்கிற பொருள்மாத்திரம் பங்கஜமென்கிற நாமத்தைக் கொண்டிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. அத்தன்மைபோல பொருளினிடத்திலே யிருக்கிற சத்தியினாலே பிறக்கிற சேட்டையானது சுவாதந்திரியமென்று சொல்லப்பட்டிருக்கையில் பொருளினிடத்திலிருக்கிற சத்தியினாலே யுற்பத்தியுள்ள பண்ணுகை யென்னப்பட்ட யாவுக்குஞ் சுவாதந்திரிய மென்கிறபேர் கடவாமல் ஒருவகையுள்ள பண்ணுகைக்கு மாத்திரஞ் சுவாதந்திரிய மென்றபேர் செல்லுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே கல்லானது தனது கனத்தினாலே கீழேயிறங்கிப் போகிறதினாலே யுக்கனது சத்தியினாலே அக்கினியானது உஷ்ணிக்கிறதினாலேயும் சூரியனானது தன்னிடத்திலிருக்கிற பெலத்தினாலே தன்பிரகாசத்தை எங்கும் பரப்பப்பண்ணுகிறதினாலேயும் கல்லும் அக்கினியுஞ் சூரியனும் சுவாதந்திரியமுள்ள பொருட்களென்று சொல்லத்தகாது. இந்த உடலிலே விருக்ஷம், புல்லு, செடியென்னப்பட்டதெல்லாந்தனது சத்தியினாலே வளர்ந்து பூத்துக்காய்த்துப் பழுத்தாலும் விருக்ஷமுதலானது சுவாதந்திரியமுள்ள பொருளென்று சொல்லக்கடவதல்ல. இத்தடவாக மனுஷன்முதலான மிருகங்களையும் பக்ஷிகளையும் பார்க்குமிடத்தில் மனுஷன்முதலான மிருகத்திலே யிருக்கிற பலத்தினாலே பக்ஷிக்கப்பட்டதெல்லாம் ஜீரணமாய்ப் போகிறதும் அப்படிப்பட்ட ஜெரிக்கிற சேட்டையானது சுவாதந்திரியத்தினாலே வருகிற கிரியையென்று சொல்லத்தகாது.

அதேதென்றால் அறியப்பட்ட விஷயத்தை யுத்தேசித்துப் பொருளானது தனது சத்தியைக்கொண்டு பண்ணிக்கொண்டு வருகிற கிரியை ஒன்றுண்டே அதுவே சுவாதந்திரியமான பெலத்தினாலே வருகிறசேட்டையென்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல; இந்தவிதமாகச் சுவாதந்திரிய மென்கிற பதத்துக்கு அர்த்தத்தைச் சொன்னோமானால் பூமியிலேகாணப்பட்ட பொருள்களுக்குள்ளே மனுஷன்முதலான மிருகசாதிகளென்னப்பட்டதெல்லாஞ் சுவாதந்திரியமுள்ள பொருளென்று சொல்லவேண்டியிருக்கும்.

ஆனபடியினாலே யிதெல்லாம் வெளியாகும்படிக்குக் கேவல சுவாதந்திரியமானதேதென்றும் அது எத்தனை வகைக்குள்ளே யடங்கியிருக்கிற தென்றும் வெளிப்படுத்தக் கடவோம். இதெல்லாங் கிரமத்தோடே கொஞ்சத்துக்குள்ளே வருகிற பாடத்திலே சொல்லிக் காட்டுவோம்.

௩-ம் பாடம்.

புத்திபுடைத்தான ஜன்மமானது கனியேறுகிறதுக்குக் கர்த்தர் அதற்குக்கொடுத்த சுவாதந்திரியமான குணத்தை மதிகெட்டபாவிக ளறியாமல் அதை நிருபணம் பண்ணுகிற இலயிலாகத்தப்பறை விஷயங்களைக் கற்பித்து லோகத்துக்கு கேடாகத் திரிகிறவர்களை உண்டுபண்ணினார்கள். ஆகையினாலே மனுஷனானவன் கனியேறுகிறதுக்குக் கர்த்தன் கொடுத்த சுவாதந்திரியத்தைப் பல பலதப்பறை விஷயங்களினாலே கெடுத்து தாங்களுந் தங்களுடைய சிஷாக்களும் பாதாளத்தி லிறங்கிறதுக்கு வழியாகப் பண்ணிக் கொண்டுவந்தார்கள். இப்படிப்பட்ட கேடானது கனியேற ஆசையுள்ள பேர்களுக்கு வராதபடிக்கு மனுஷனுக்குண்டான சுவாதந்திரிய விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சில சத்திய விசேஷங்களைச் சங்க்ஷேபமாக வெளிப்படுத்துவோம்.

சுவாதந்திரிய குணமானது சுவைரம் = (Freedom) என்றுஞ் சுவேச்சையென்றும் வித்தியாபாரகர் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குணத்தைவிசாரிக்கு மிடத்தில் கிரியையான துண்டாகிறதுக்குக் கிரியையுடைத்தான பொருளினுள்ளத்திலே யிருக்கிற சத்தியானது மாத்திரஞ் சுவாதந்திரிய மென்றுஞ் சுவேச்சையென்றுஞ் சொல்லத்தகாது. அதேதென்றாற் கல் இறங்கிவிழுகிறதுக்கும் அக்கினி சுடுகிறதுக்குந் தண்ணீர் ஈரமாக்கப்பண்ணுகிறதுக்கும் விருக்ஷாதிகள் பழம்பழுக்கிற சேட்டைமுதலானதுகளுக்கும் வேறே அனேக இத்தொகைப்பட்ட பொருள்கள் தனது சேட்டைகளை யுண்டாக்கிறதுக்கும் அப்படிப்பட்ட பொருள்களுள்ளத்திலே ஆனபலனுண்டா யிருந்தாலும் அப்படிப்பட்ட பொருள்கள் தனதுகிரியைகளை சுவேச்சையினாலே பண்ணிக்கொண்டு வருகிறதென்று சொல்லக்கூடாது. பின்னையும் அறியப்பட்ட விஷயத்தை யுத்திக்கித்துப் பொருள்களானது தன்னுள்ளத்திலே யிருக்கிற பலத்தினாலே கிரியைகளைப் பண்ணினாலுஞ் சுவேச்சையினாலே தனது கிரிகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்று சொல்லக்கூடாததல்ல.

அதேதென்றால் மிருகமென்னப்பட்ட தெல்லாந் தனக்கு ஆகாததையும் ஆனதையும் வெறுத்தும் அபேக்ஷித்தும் கடனமுதலானசேஷ்டைகளைப் பண்ணிக்கொண்டுவந்தாலும் மிருகமானது ஒரு குறைவினாலே சுவேச்சையுள்ள பொருளென்று சொல்லப்படாது. அந்தக்குறையாவது மிருகமானது தனக்கு ஆகாததையுமானதையுந் தன்னிலுண்டான அறிகிற இந்திரியத்தினாலே கிரகிக்கும்போது மிருகத்தினாலே கிரகிக்கப்பட்ட விஷயமானது மிருகம் தனது கிரியைகளைப் பண்ணுகிறதுக்கு குறையற்ற கட்டாயம் பண்ணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே மிருகத்தாலே காணப்பட்ட புல்முதலான பக்ஷணமானது பசியுள்ள மிருகத்தைத் தன்னண்டைக்கிழுத்து மிருகமானது பசிதீர்க்கிறதுக்கு கட்டாயம் பண்ணுகிறதென்று சொல்லவேணும். அதினாலே மிருகமானது தனது பக்ஷணத்தைக்கண்டால் அதைப்பக்ஷிக்க கட்டாயமாய்ப் போகவேணுமொழிய பந்தனமுதலான விக்கினங்களில்லாவிட்டாற் போகாமலிருக்கக்கூடாது. இந்தவிதமே மிருகமானது தனக்காகாததா யிருக்கிற அடிமுதலானதுகளைப் யாதொரு யிந்திரியத்தினாலே கிரகித்தால் தனக்காகாததை வெறுத்து அதை யநுபவியாதபடிக்கு அவசியமாயோடிப் போகவேணுமொழிய அப்படிப்பட்ட ஆகாதவிஷயத்தை யநுபவிப்பேனென்று துணிந்து நிற்கமாட்டாது. ஆனபடியினாலே மிருகமானது தனக்காகாததையும் ஆனதையுங் கிரகித்துப் பலபலசேட்டைகளை அந்தரங்கமான பலத்தினாலே பண்ணிக்கொண்டுவந்தாலும் அப்படிப்பட்ட கட்டாயமாகிற குறைச்சலினாலே மிருகமானது சுவேச்சையுள்ள பொருளாயிருக்கிறதென்று சொல்லப்படாது.

அவ்வண்ணமே சுவாதந்திரியமான குணத்துக்கு முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷமுண்டாயிருக்கவேணுமொழிய அதிலொருகுறையுண்டானாற் குறையற்ற சுவாதந்திரியமென்றும் மெய்யானசுவேச்சையென்றுஞ் சொல்லவுங் கருதவுங்கூடாது. இது இப்படியிருக்கையிலே கர்த்தருடையவுள்ள சுவாதந்திரிய முண்டாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். எண்ணப்படாத நன்மைகளையறிந்து பிரேரகனில்லாதே அதுகளைப் பண்ணுகிறதுக் கொருவிடத்திலே விழமாட்டாத சத்தியானது உத்தமசுவாதந்திரியமென்று சொல்லப்படும். இப்படிக்கொத்த உத்தம சுவாதந்திரியமானது ஒன்றான சர்வேஸ்வரனுக்கே சுபாவமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே சகலநன்மை சொரூபமாயிருக்கிறகர்த்தனுக்குச் சுபாவமாயிருக்கிற உத்தமசுவாதந்திரியத்தினாலே கர்த்தரானவர் எண்ணப்படாத நன்மைகளையறிந்து கட்டாயம்பண்ணுகிற பிரேரகனில்லாதே யதுகளையெல்லாம் பண்ணலாமென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் கர்த்தரானவர் மட்டில்லாத சகலநன்மை சொரூபமாயிருக்கக் கொளத்தனது உத்தமசுவாதந்திரியத்தினாலே நன்மை செய்யவாமொழிய அஞ்ஞானம், பொய், முதலானகுறைகளாகிற பாவங்களிலே விழமாட்டாரென்றுஞ் சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட உத்தமசுவாதந்திரியமானது கர்த்தனுக்குமாத்திரம் சுபாவமாயிருக்கையிலே அப்படிப்பட்ட கர்த்தருடைய பிரத்தியக்ஷதெரிசனமானது குறையற்றபாக்கிய மென்கிற மோக்ஷத்தை யநுபவிக்கிறபேர்களுக் குண்டாயிருக்கிறதே அப்படிப்பட்ட பிரத்தியக்ஷதெரிசனத்தின் பிரசாதத்தினாலே (प्रचुरता = Abundance, Copiousness) மோக்ஷத்தை யநுபவிக்கிறபேர்கள் அஞ்ஞானதப்பறை இதுமுதலான பாவமாகிற குறைகளிலே விழமாட்டாதபேர்களாய் நன்மைவிஷயத்திலே சம்பந்திப்பார்களொழிய ஓரற்பப் பாவத்திலே யாதொன்றும்விழ உடன்படமாட்டார்கள். அதேதென்றாற் புண்ணியாத்துமாக்களா யிருக்கிறபேர்கள் தேவவிஷயபத்தி முதலான நல்ல குணங்களோடே மரணமுறையினாலே வழிப்போக்கனுக்கான சாயுமை அறுதியுமில்லாதபேர்களாய் அவ்விதமா யிருக்கிறதினால் வழிப்போக்கருக்கான சஞ்சலமாகிற நன்மைவிஷயத்திலே திரும்பவான குணத்தை விட்டும் அப்படிப்பட்ட பாக்கியவான்களுடைய மனசானது தேவவிஷயபக்தி முதலான சகல தர்மங்களிலே குறையில்லாமல் நிலைகொண்டதா யிருக்கத்தக்கதான அது நன்மையைவிட்டுக் குறைவாகிற பாவத்தை யாசைப்பட்டுப் பாவத்திலே திரும்பிவிழமாட்டாது. இதுவுங் கர்த்தனுடைய நீதி திருவுளத்துக் கேற்றிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் நல்ல கோதும்பை விளைந்தவன்பலனாகிற நல்ல கோதும்பையை யறுக்கவும் போசிக்கவுங் கர்த்தன் பண்ணுகிறதென்கிறதுங் கர்த்தனுடைய நியாயமுள்ள கிரமத்துக்கொத்திருக்கிறதென்றுஞ் சொல்லத் தகுமாப்போலே நல்லவிதையை விதைக்கிறவனுக்குச் சரியாகப் புண்ணியாத்து மாக்களா யிருக்கிறபேர்கள் தர்மம் விளைப்பார்கள். அதனோடு மரணத்தை யடைந்ததினாலே தர்மத்திலே நிலைகொண்ட மனசைப்பலனாக எப்போதும்அவர்களைக் கர்த்தரானவர் கொண்டிருக்கப்பண்ணுகிற தென்கிறது சகலத்தையுங் கிரமத்தோடே நடத்துகிற கர்த்தனுடைய நீதியுள்ள திருவுளத்துக் கொத்திருக்குமென்று சந்தேகமில்லாமலங்கீகரிக்கக் கடவோம்.

இந்த இரண்டுவகையுள்ள சுவாதந்திரியங்கள்தவிர அவதியாகிற நரகத்தையடைந்த பேர்களுக்குண்டாயிருக்கிற சுவாதந்திரியத்தைப் பார்க்குமிடத்தில் பாவவிஷயத்திலே அது நடக்குமொழிய அது நன்மைவிஷயத்திலே நடவாது. அதேதென்றாற் பாவிகளான பேர்கள் பாவத்தோடேகூட மரணத்திலே யவதியையடைந்ததினாற் பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ளபேர்களாயிருக்கிறார்களென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே அவதியாயிருக்கிற குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை யடைந்தபேர்கள் நன்மையிலே

நிலைகொண்டபேர்களா யிருக்கக்கொள்ள நன்மையைவிட்டுப் பாவமாகிற குறைக்குட்படமாட்டார்க ளென்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மைபோலே அவதியாகிற நரகத்தையடைந்த நிர்ப்பாக்கியரான பேர்கள் * தேவவிரோதகர்மம் முதலான பொல்லாப்பிலே நிலைகொண்ட மனதுள்ளவர்களா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட தேவவிரோதகர்மமுதலான பொல்லாப்பை விட்டு அப்படிப்பட்ட நிர்ப்பாக்கியருடைய மனதானது ஓரற்பசமயத்திலேயாகிலும் நாடவுஞ் சம்மதிக்கவுமாட்டாது. ஆனபடியினாலே பலபலபாவங்களிடத்திலே அவர்களுடைய சுவாதந்திரிய மனது சென்று வந்தாலும் நன்மையிலே செல்லமாட்டாது. குறைவற்ற நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் சகலத்தையும் கிரமத்தோடே நடத்துகிறதினாலே பாவிகளுக் கிப்படிப்பட்ட ஆக்கினை நியாயத்தின்படியே விதிக்கிறாரென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் முன்னாளிலேயிருந்த பழமையாகிற முன்வினை அனுபவிக்கிறதும் அதை யனுபவிக்கப் பண்ணுகிறதென்கிறதும் கர்த்தருடைய நீதிக்கு யேற்றிருக்கு மாப்போலே மனுஷனானவன் பூமியிலே திரிகிற நாளையிலே பற்பலபாவங்களை மரணபரியந்தம் பண்ணிக்கொண்டேவந்த தென்கிறது முன்னுக்கின வினைத்ததுக்குச் சமானமாயிருக்கிற தென்று சொல்லத்தகும். அப்படியே பாவமாகிற முன்னுக்கின வினைத்த பாவியானவன் முன்னாளிலேயிருந்ததை யநுபவித்தவன்போலே பாவத்திலே நிலைகொண்ட மனதுள்ளவனும் முன்னாகிய பாவத்திலே நிலைகொண்ட மனதை யெப்போதும் ஆக்கினையாகக் கொண்டிருக்கிற தென்கிறது கர்த்தருடைய நீதிக்கொத்திருக்குமென்று சொல்லக்கடவோம். அவதியை யடைந்தபேர்களுடைய கொல்லப்பட்ட சுவாதந்திரிய சொரூபத்தை விசாரிக்குமிடத்தில் அதுபண்ணப்பட்ட பாவபுண்ணியத்துக்கு நீதியுள்ள கர்த்தருடைய திருவுளப்படியே பலனுமிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட சுவாதந்திரியத்தினாலே சமானமான சந்தோஷத்தையுஞ் சம்பாவனையும் புதிதாயிருக்கிற துக்கத்தையும் ஆக்கினையையும் மோக்ஷத்திலே நரகத்திலே யிருக்கிறபேர்களடையத்தக்கதில்லையென்று நாஞ் சொல்லக்கடவோம்.

அதேதென்றால் வழிப்போக்கனுக்குச் சீலமாகிற பாவபுண்ணியத்திலே திருப்பமான சத்தியானது வழிப்போக்கனுக்கான குணமென்று சொல்லவேண்டியிருக்கக்கொள்ள வழிப்போக்கனானவன் சம்பாவனையிலே அபிவிருத்தியையாகிலும் அதிக ஆக்கினை யென்கிறதும் புண்ணிய பாவத்தினாலே தனக்கு வரப்பண்ணலாமென்று சொல்லத்தகுமாப்போலே அவதியை யடைந்தபேர்கள் நன்மை பொல்லாப்பு விஷயத்திலே யென்றென்றைக்குமொருகண்ட சீருள்ள அவஸ்தையைக் கொண்டிருக்கிறார்களென்று சொல்லக்கடவோம். இப்படியே சொல்லாவிட்டால் அவதியை யடைந்தபேர்கள் இன்னம் வழிப்போக்கராயிருக்கிறா ரென்கிற அபத்த விஷயத்தை யங்கீகரிக்கவேணும். அப்படிப்பட்ட அபத்த விஷயத்திலே யங்கீகாரமுண்டாகாதபடிக்கு மோக்ஷத்திலே யிருக்கிறபேர்கள் நன்மையிலே நிலைகொண்ட மனதைக்கொண்டு பண்ணுகிற புண்ணிய அங்கீகாரத்தினாலே தங்களுக்கு அதிகமோக்ஷம் வரப்பண்ணுகிறதில்லை யென்று சொல்லக்கடவோம்.

அத்தன்மைபோல அவதியாகிற நரகத்தையடைந்த பேர்கள் பாவத்திலே நிலைகொண்ட மனதினாலே பற்பலபாவங்களிலே சம்மதப்பட்டாலும் அப்படிப்பட்ட பாவ அங்கீகாரத்தினாலே யதிகமான ஆக்கினை தங்களுக்கு வரப்பண்ணுகிறதில்லை யென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் முன்சொன்னபடியே வழிப்போக்கருடைய ஸ்திதிக்கும் அவதியையடைந்த பேர்களுடைய அவஸ்தைக்கும் இதே பேதமுமையுள்ள மேலையும் இந்த ஞாயமுள்ள கிரமத்தோடே கூடியிருக்கிற பேதமுமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அவதியை யடைந்தபேர்களுடைய சுவாதந்திரியமானது யிந்தவாயிருக்கையிலே பூமியிலே திரிகிற வழிப்போக்கராகிற மனுஷருடைய சுவாதந்திரியமென்ன ஆராய்ந்து கொள்ளக்கடவோம்.

* தேவவிரோதகர்மம் == தெய்வத்தைப்பகைக்கிறகுணம்.

அதேதென்றால் மனுஷனானவன் இந்தப்பூமியிலே திரிகிற நாள்மட்டும் அவதியை யடையாதவனுமாய் வழிப்போக்கனுமா யிருக்கக்கொள்ள வழிப்போக்கனுக்கான சுவாதந்திரியத்தைக் கொண்டிருக்கிறானென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே வழிப்போக்கனுக்கான சுவேச்சையானது எந்தவகையிருக்கிறதென்றும் எந்தவிஷயத்திலே செல்லுஞ்செல்லாதென்றும் இந்தப்பாடத்திலே வெளிப்படுத்தி இப்படிப்பட்ட சுவாதந்திரியமானது பூமியிலே திரிகிறமனுஷருக்கு அவசியமாயிருக்கிறதென்று சிறிது நியாயங்களினாலே வருகிற பாடத்திலே யின்னமொருவிசை சொல்லுவோம்.

இதிலே யறியவேண்டின விசேஷமாவது மனுஷனானவன் பூமியிலே திரிகிற நாள்மட்டும் அவதியையடையாமல் வழிப்போக்கனுமிருக்கக்கொள்ள நன்மையிலேயாகிலும் பாவத்திலேயாகிலும் நிலைகொண்டமனதைக் கொண்டிராததினால் மனுஷனானவன் இந்தப்பூமியிலே யிருக்கிற நாள்மட்டும் பாவத்திலே நின்று தருமத்திலே தனது மனதைத் திருப்பவும் மீளவும் தருமத்தைவிட்டுப் பாவத்தில் விழலாமென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே பூமியிலே திரிகிற மனுஷருடைய மனதானது மோக்ஷத்திலேயும் நரகத்திலேயுமிருக்கிறவர்களுடைய மனதைப்போல் ஒன்றிலேமாத்திரம் நிலைகொண்டதாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது. இதெல்லாம் அதிகமாக இன்னம் வெளியாகும்படிக்கு இதிலே யுண்டான வர்த்தமானத்தைக் கிரமமாகச் சொல்லிக்காட்டக்கடவோம். உண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்டதாவது புத்தியுடைத்தானதா யிருந்து அவதியை யடையாமலிருந்தால் புத்தியினாலே விசாரிக்கப்பட்ட விஷயத்தைப் பார்க்கும்போது ஒன்றில் தனக்கான தென்றும் ஒன்றில் தனக்காகாதென்றும் கண்டுபிடிக்கவேணும். இப்படிப்பட்ட ஞானமானது விபரீதமாய்ப் போகாமற் சபலமாயிருக்கிறதுக் கானதையும் ஆகாததையும் வெறுக்கவும் அங்கீகரிக்கவுந் தள்ளவும் விசாரிக்கவும் (ए Root एयते == to adhere) சத்தியுள்ளதாயிருக்கவேணும். ஆனபடியினாலே புத்தியையுடைய புத்தியுடைத்தான பொருளென் புத்தியைக் கொண்டு அறிவறியப்பட்ட ஆனதையும் ஆகாததையும் வேண்டுமென்றாவது என்கிறதுக்கும் பெலமுடைத்தானவரு திருக்கவேணு மென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. இது இப்படியிருக்கையிலே பொருளானது எப்படிப்பட்ட காரியமாக ஞானமுடைத்தானதாயிருந்தாலும் அது உண்டாக்கப்பட்டதா யிருக்கக்கொள்ள பட்டில்லாத சகலநன்மைசொரூபமாயிருக்கிற கர்த்தனைப்போலே யிருக்குமென்று மகாபாவமில்லாமற் சொல்லவுங் கூடாது. உண்டாக்கப்பட்ட பொருளானது சகலநன்மைசொரூபமாயிராதபடியே அதினுடைய சுபாவத்தைப் பார்க்கும்போது இதுகுறையுள்ளதுமாய்க் குறைவிலே விழுவதான பொருளுமாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் நன்மையின் மெய்த்திகைமட்டோடேயிருக்கிற பொருளானது தனக்குண்டான நன்மையிலே யபிவிருத்தியையடையலாம். அப்படிப்பட்ட அபிவிருத்தியில்லாத போதொருவிதமாகக் குறையுள்ளதென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே உண்டாக்கப்பட்ட பொருளெல்லாங் குறையுடைத்தான சத்தியுள்ளதாயிருந்துகொள்ள சுபாவமாக நன்மையின் குறையாகிற பாவத்திலே விழலாமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யுண்டாக்கப்பட்ட மனுஷனானவன் அப்படிப்பட்ட ஞானமுள்ளவனா நன்மைகளை யடைந்தானவனாயிருந்தாலும் அவனுடைய குறையுள்ள சத்தியினுடைய சுபாவத்தை விசாரிக்குமிடத்தில் புத்தியுடைத்தான மற்ற வஸ்துக்களைப்போலே மனுஷனானவன் ஞானமுள்ளவனா நன்மையின் குறையிலே விழலாமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. கர்த்தரானவர் மாத்திரம் பட்டில்லாத சகலநன்மை சொரூபமாயிருக்கக்கொள்ள அவரொருவரேயதற்குறையிலேயாகிலும் விழமாட்டாரென்று சந்தேகப்படாமல் அங்கீகரிக்கத்தக்கதாகும்.

இது இப்படியிருக்கையிலே புத்தியுடைத்தான பொருளானது இரண்டுவகையென்று அவதைத்தேலே யிருக்கலாமென்று காண்கிறோம். அதேதென்றால் அதுக்குக் கற்பிக்கப்பட்ட அவதிக்குப் போகிறவழியிலே வழிப்போக்கன்போலே நடக்கிற பொருளாயிருக்கிறதென்று சொல்லவேணும், அல்லது வழியானதைக் கடந்து அவதியையடைந்ததென்று அங்கீகரிக்கவேண்டியிருக்கிறது. அவதியாவென்றால் வழியிலேமுடிவாயிருக்கிறதினாலே பாவபுண்ணியத்துக்குத்தக்க [illegible] நன்மையோடேயாகிலும் தின்மையோடேயாகிலும் அது என்றென்றைக்கும் நிற்குமென்று சொல்லுகிறதென்கிறது நியாயமுள்ளதாயிருக்கும்.

அவ்வண்ணமே பொல்லாப்பாகிற பாவமுள்ள நடக்கைக்கு ஆக்கினையாகிற பொல்லாப்போடே கூடியிருக்கிற அவதியுண்டென்று சொல்லுமாப்போலே நன்மையாகிற புண்ணியமுள்ள நடக்கைக்கு நன்மையாகிற சந்தோஷமுதலான பாக்கியத்தோடே கூடியிருக்கிற அவதிகிடைக்குமென்று சொல்லத்தகும். மீளவும் அவதியுடைய சுபாவத்தை விசாரிக்கும்போது அதுமுடிவாயிருக்கக்கொள்ள அதுக்கப்பால் வெவ்வேறே விரோதமாயிருக்கிற வகையில்லையென்று சொல்லவேணும். ஆனபடியினாலே நன்மை தின்மை விஷயத்திலே வெவ்வேறே விகாரமில்லாமல் நன்மையோடானாலும் பொல்லாப்போடேயானாலும் அவதியானதுண்டாயிருந்தால் நன்மையோடேயாகிலும் தின்மையோடேயாகிலும் அது என்றென்றைக்கும் நிற்குமொழிய மற்றப்படியல்ல. இதுநிமித்தம் [illegible] இருக்கிறபேர்களுடைய அவதியின் முடிவானது புண்ணியத்தோடிருந்ததினால் நன்மையோடேபோதுமிருக்கிற அவதியாகிற மோக்ஷத்தையடைந்து நன்மை விஷயத்திலே நிலைகொண்ட மனசுடைத்தான பேர்களாயிருக்கிறார்களென்று சொல்லக்கடவது. அதேதென்றால் அது முடிவாயிருக்கக்கொள்ள நன்மை தின்மை விகாரத்துக்கு இடமாயிராமல் நன்மையிலேமாத்திரம் அவர்களுடைய மனசானதோடி மொழியப் பொல்லாப்பிலே யாதொரு ஆசையுள்ளதாயிருக்கமாட்டாது. அவ்வண்ணமே மோக்ஷத்திலே யிருக்கிறபேர்கள் உண்டாக்கப்பட்ட பொருளாயிருந்து வழியிலே நடக்கும்போது குறையிலே விழலானபேர்களாயிருந்தார்களென்று சொல்லவேண்டியிருக்கையிலே நன்மையோடே முடிவாகிற மோக்ஷத்தையடைந்ததினால் குறையாகிற பாவத்திலே விழமாட்டார்களென்று சொல்லப்படும். அத்தன்மைபோல பாவிகளுடைய வழியின் முடிவானது பாவத்தோடே கூடியிருந்ததினால் பொல்லாப்போடேகூட என்றென்றைக்கும் நிற்கிற அவதியாயிருக்கிற நரகமானது அவர்களுக்குக் கிடைக்குமென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே பொல்லாப்போடே என்றென்றைக்கும் நிற்கத்தக்க அவதியையடைந்ததினால் பொல்லாப்பாகிற பாவத்திலே நிலைகொண்டதுமல்லாமல் புண்ணியத்திலே திரும்பமாட்டாததுமா யிருக்கிற மனசை என்றென்றைக்கும் ஆக்கினையாகக்கொண்டிருந்து முடிவில்லாத ஆக்கினைக்குப் பாத்திரவான்களாய் நரகத்தினுடைய ஒருக்காலுமொழியாத அக்கினிக்குள் ஒருநாளும் அவியாத கட்டைகளாயிருப்பார்கள். அவ்வண்ணமே நரக அவதியை யடைந்தபேர்களுடைய சுவாதந்திரியத்தை விசாரிக்கும்போது பற்பல பாவங்களுடைய விஷயங்களிலே யிந்தப்பாவத்தையும் அந்தப்பாவத்தையும் வேணும் வேண்டாமென்கிறதுக்கு முன்சொன்னதுபோலே வல்லவர்களாயிருக்கிறார்களொழிய பாவத்தை முழுதும்விட்டுப் பாவமாகாத புண்ணியக்கிரிகைகளைப் பண்ணவும் அவைவாக யிச்சிக்கவுமாட்டார்கள். ஆனபடியினாலே பாவிகளானபேர்கள் வழிப்போக்கர்போலே லோகத்திலே இருக்கிறபோது பாவம் வேண்டாமென்கிறதுக்கும் புண்ணியம் வேணுமென்கிறதுக்கும் வல்லவர்களாயிருந்தார்களென்று சொல்லவேண்டியிருக்கையிலே யென்றென்றைக்கும் பொல்லாப்போடே கூடியிருக்கிற அவதியாகிற நரகத்திலே விழுந்ததினால் முழுதும் பாவம் வேண்டாமென்றும் புண்ணியம் வேணுமென்றும் அவைவாக யிச்சிக்கமாட்டார்கள்.

இந்தப்பாடத்திலே யிதுவரைக்குஞ் சொல்லப்பட்டதை விசாரிக்கும்போது அவதியை யடைந்தபேர்களுக்குண்டான சுவாதந்திரியத்தினுடைய சுபாவ சொரூபத்தை வெளிப்படுத்தினதுபோலே யாச்சுது. அதெப்படியென்றால் அவதியையடைந்தபேர்களுக்குச் சுவாதந்திரிய முண்டாயிருக்கையிலே அவதியடையாமற் பூலோகத்திலே இருக்கிறபேர்களுக்கான சுவாதந்திரியமில்லையென்று சொல்லக்கடவதல்ல.

இப்படிப்பட்ட வழிப்போக்கருடைய [illegible] கொண்டிருக்கிற பேர்களுடைய சுவாதந்திரியமேதென்றால் அவர்கள் அவதியை யடையாதபேர்களாயிருக்கக்கொள்ள அவதிரூபமாயிருக்கிற சம்பாவனையாகிற மோக்ஷத்தையும் ஆக்கினையாகிற நரகத்தையும் அபேக்ஷிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்கும் ஆனசுவாதந்திரியமானது அவர்களுக்குண்டாயிருக்கவேணுமென்று சொல்லக்கடவோம்.

ஆதலாலே அவதியையடைந்த பேர்களைப்போலே பாவபுண்ணியத்திலே நிலைகொண்டபேர்களா யிராமற் பாவபுண்ணிய மிரண்டையும் பண்ணத்தக்க சக்தியுள்ளமனசுடைத்தான பேர்களா யிருக்கவேணும். இப்படிப்பட்ட சுவாதந்திரியத்தினுடைய சொரூபமானது இந்தவழியிலே சொல்லிக்காட்டலாம். முந்த முந்த மனுஷனானவன் பாவமின்னதென்றும் புண்ணிய மின்னதென்றும் அறியவேணும். அறியப்பட்ட பாவமான விஷயத்தை [illegible]யும் புண்ணியமான [illegible] யெனகிலும் வேணும் வேண்டாமென்கிற பலமுள்ள மனதினாலே வெறுக்கவும் சுவீகரிக்கவுங் கடவான். அல்லவென்று வெறுக்கிறதினாலே யாதொரு சுவீகாரம் பண்ணுகிறதினாலெனகிலும் நாய் நரி முதலான மிருகங்கள் இரக்கப்பட்ட விஷயங்களினாலே கட்டாயமா யிழுக்கப் படுகிறதுபோலே மனுஷனானவன் அறியப்பட்ட சுகமான விஷயத்தினாலே கட்டாயமா யிழுக்கப்படுகிறானென்று சொன்னோமானால் மனுஷனானவன் தனது கிரிகையைப் பண்ணுகிறதிலே நாய் நரி முதலான மிருகங்களுக்குச் சரியாயிருக்கிறானென்று சொல்லத்தப்பாதுபோலே யாச்சுது. இப்படிப்பட்ட சுபத்த விஷயத்தை அங்கீகரித்த படியிருக்கவும் மனுஷனும் இப்படிப்பட்ட தனது செய்கைகளைப் பண்ணிக்கொண்டு வருகையிலே புண்டாயிருக்கிற வேற்றுமையும் ஏற்றக் குற்றச்சலையும் வெளிப் படுத்தக்கடவோம்.

அதேதென்றால் மிருகமானது பிறவிதிப்படியே கண்ணைக்கொண்டு புல்லு முதலானதினுடைய பச்சைநிற முதலான குணத்தைக் காண்கிறதுபோலே மதிக்கிற சக்தியாகிற உள்ளிந்திரியத்தைக் கொண்டு ஆனதையும் ஆகாததையுந் தெரிக்குமொழிய விசேஷிய விசேஷணத்தைக் கூட்டுகிறமையாய்க்கூட்டி யிது நல்லதா யிருக்கிறதென்றும் இது தனக்குப் பொல்லாதா யிருக்கிறதென்றும் மதிக்கிறதுமில்லை யிதினாலே தனக்குப் பிழைப்புவருமென்றும் பசிபோமென்றுங் கெடுபக்குமென்றும் நினைக்கிறதுமில்லை. அதேதென்று [illegible] இத்தொகைப்பட்ட ஞானயுக்திகள் தேகத்தின் ஆச்சயமா யிராதபடியினாலே அவித்தைக்கட்டைகளா யிருக்கிறதொழிய ஆச்சரியத்துக் காரியமாயிருக்கிற உள்ளிந்திரிய பிரவிர்த்தியங்களுக்கான கிரிகைகளென்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே பிரவிர்த்தியான கண்ணானது வெள்ளை கறுப்பு இதுமுதலான விஷயத்தைக் காணுமொழிய விசேஷியத்தோடே விசேஷணத்தைக் கூட்டி இந்த வஸ்து கறுப்பு வெள்ளையா யிருக்கிறதென்று சொல்லமாட்டாது. அத்தன்மைபோல மிருகமானது தனதுள்ளிந்திரியமாகிற மதிக்கிற சக்தியினாலே ஆனதையும் ஆகாததையுந் தெரிக்குமொழிய விசேஷியத்தோடே விசேஷணத்தை கூட்டுகிறதில்லாததினாலே இந்த வஸ்து தனக்கு நல்லதா இருக்கிறதென்றும் தனக்குச் சாவுவருத்திவிக்குமென்றும் இத்தொகைப்பட்ட மற்றுமுண்டான கிரிகைகளையும் பண்ணமாட்டாது.

மனுஷனேனென்றால் பிறயிந்திரியத்தினாலேயும் உள்ளிந்திரியத்தினாலேயும் மிருகமானது வஸ்துவைக் கிரகிக்கிறஅளவாகத் தானும் விஷயத்தைக் கிரகிக்கிறதுக் கீவிரத் தெரிந்துக்கொள்ளமாயிராத தனது புத்தியைக்கொண்டு விசேஷியத்தோடே விசேஷிக்கைத் தைக்கூடிய இந்த வஸ்து வெனக்கு நல்லதென்றும் இதினாலே எனக்கு மரணம் வருமென்றும் யோசித்து ஒருவஸ்துவில் நின்று வேறொன்று பெரும்வரும் என்றும் நுகிக்கிறதென்றும் அநுபவித்திருக்கிறதினாலே கட்டாயத்திலே மின்கிற விஷயத்தைக் கிரகிக்கிறதிலேதானே மிருகத்துக்கும் மனுஷனுக்கும் வித்தியாசமுண்டாயிருக்கிறதென்றுச் சொல்லக் கடவோம்.

பின்னேயும் மிருகமானது உள்ளிந்திரியத்தினாலே தனக்கு ஆனதையும் ஆகாததையுங் கிரகித்த பிற்பாடு கிரகிக்கப்பட்ட விஷயத்தின் பிறதி பிம்பத்தினாலே கட்டாயமா யிழுக்கப்பட்டதினால் ஆனவிஷயத்தையும் ஆகாத விஷயத்தையுங் கட்டாயமா இச்சிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்கும் வல்லதாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

மனுஷனோவென்றால் ஆனவிஷயத்தையும் ஆகாதவிஷயத்தையும் முன்சொன்ன பிரகாரமாயறிந்து அப்படிப்பட்ட விஷயத்தினாலே யழைக்கப்படுகிறானென்று சொல்லுகிறதொழிய மிருகம்போலே கட்டாயமாய் இழுக்கப்படுகிறானென்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே மனுஷனானவன் பதார்த்தைப் பார்த்துப் பசியுண்டாயிருந்தாலும் தபசு பண்ணவேணுமென்கிற மனசு முதலான நிமித்தங்களினாலே அந்தப் பதார்த்தத்தைக் கொண்டு அந்தப் பசியைத் தீர்க்கத்தக்கதில்லையென்று சொல்லலாம். இதெல்லாங் கட்டாயம் பண்ணுகிற வேறேவிஷயமில்லாமல் மனுஷனானவன் பண்ணுவானேயொழிய மற்றப்படியல்ல. இதுதவிர உள்ளிந்திரியத்தைக் கொண்டு மனுஷனாலே வெறுக்கப்படுகிற நிந்து விஷயங்களை மனுஷன்தானே தனது மேலான சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு தனக்குவேணும் வேண்டாமென்று சொல்லுகிறபோது மிருகத்துக்கில்லாத அநேகர்க்கையுள்ள சுத்தியான மனுஷனானவன் தனக்குண்டாயிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்க் காட்டுகிறதுபோலே. யாதெனில் அதெப்படியென்றால் தனது புண்ணைக் கட்டவேணுமென்கிற நிறுவாயுண்டாயிருக்கையிலே மதிக்கிற சத்தியமாகிற இந்திரியத்தினாலே கிரகிக்கப்பட்ட நகனத்தை வெறுத்துப் பயப்படுகிறவன் வாங்குவான். மேலாயிருக்கிற சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு அந்த நனைத் தனக்கு வேணுமென்று அங்கிகரிப்பான். கைப்புள்ள ஔஷதத்தை யருவருத்தும் அதினால் ஆரோக்கியமுண்டாகுமென்று அம்மருந்தைக் குடிப்பான். விசேஷித்தப்பாக முதலான பாவசுகங்களைக் கிரகித்து அப்படிப்பட்ட விஷயங்களுக்கு அழைக்கப்பட்டாலும் மேலாயிருக்கிற புத்தியைக்கொண்டு அப்படிப்பட்ட கிரியையானது கர்த்தனுக்குத் துரோகமாயிருக்கிறதென்றும் நியாயத்துக்கொத்திராதென்றும் நிச்சயம் பண்ணித் தனது மேலான சுவேச்சையுள்ள மனதினாலே அதைவேண்டாமென்று சொல்லலாம். அல்லது கர்த்தனுக்குத் துரோகியாவேனென்று துணிந்து பாவமான விஷயத்துக்குச் சம்மதப்படவா மென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. வியாதிமுதலான உபாதைகளைச் சுபாவமாய் வேண்டாமென்று சொல்லி அப்படிப்பட்ட வாதைகளைத்தானனுபவிக்கிறதென்கிறது கர்த்தனுக்குப் பொருந்தியிருக்கிறதென்றும் நிச்சயித்து அதுகளை யனுபவிக்கிறதுக்குத் தனதுசுபாவ சுவாதந்திரியத்தினாலே சம்மதித்து அதுகள் நிமித்தமாகச் சந்தோஷப்படுவான். இத்தொகைப்பட்ட விருத்திகள் மிருகங்களிடத்திலே யுண்டென்று மிருகத்தைப் பார்க்கிலும் மதிகெட்ட மனுஷனானவன் சொல்லுவானேயொழிய புத்திமான் சொல்லமாட்டான்.

இதன்றியே மனுஷனானவன் அறியப்பட்ட விஷயத்தினாலே மிருகம்போலே இழுக்கப்படுகிறதில்லை யென்று சொல்லுமாப்போலே விதிமுதலான காரணங்களினாலே கட்டாயமாகப் பாவ புண்ணியத்திலே மனுஷனானவன் தள்ளப்படுகிறானென்று சொல்லக்

கூடாது. அப்படியே சொன்னோமானால் மனுஷனானவன் விஷயத்தை வேணும் வேண்டாமென்கிற விருத்திகளைப் பண்ணுகிறதிலே மிருகத்தைப்பார்க்கிலும் அதிகக்கேடாயிருக்கிறானென்று சொல்லவேண்டியிருக்கிறது. அதெதென்றால் கட்டாயமென்கிற குறையானது மிருகத்துக்கும் மனுஷனுக்குஞ் சரியாயுண்டாயிருக்கிறதென்று அநியாயமாய்ச் சொல்லிக்கொண்டு வருகையிலே மிருகமானது தன்னுடையறியப்பட்ட ஆன ஆகாதவிஷயத்திலே இழுக்கப்பட்டுக் கட்டாயத்தை யனுபவிக்கிறதென்கிறதுக்குச் சந்தேகம் இல்லாதது. மனுஷனோவென்றால் காருணியமில்லாத பிரகஸ், விதி, முதலான காரணங்களினாலே பொல்லாப்பிலே தள்ளப்பட்டுக் கட்டாயத்தை யனுபவிக்கிறானென்று அவர்களுடைய துர்மார்க்கத்திலே சொல்லவேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட அபத்தத்தைச் சொல்லாதபடிக்கு இவ்வுலகத்திலே இருக்கிற மனுஷனுக்குண்டான சுவாதந்திரியமான இருக்கும் வகையை யித்தடவாகச் சொல்லக்கடவோம். அதாவது மனுஷனானவன் ஆனதையும் ஆகாததையும் முன் சொல்லப்பட்ட விதமாக அறிந்து அப்படியறியப்பட்ட விஷயத்தினாலே இழுக்கப்படாதவனுமாய் விதி பிரகஸ் முதலான காரணங்களினாலே கட்டாயத்தைக் கொண்டிராதவனுமாய் வேணும் வேண்டாமென்கிற தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்குச் சுவாதந்திரிய பெலமுடைத்தானவனுமாயிருக்கிறானென்று சந்தேகமற அங்கிகரிக்கக்கடவோம். அவ்வண்ணமே மனுஷனுடைய சுவாதந்திரியமானது பாவபுண்ணிய முதலானதுகளை வேணும் வேண்டாமென்கிறதிலே செல்லுமென்று சொல்லவேணுமொழியக் கர்த்தருடைய கட்டளைப்படியே லௌக்காயிக ஐசுவரிய முதலான விஷயங்களை யடைகிறதிலேயும் மரணமுதலான ஆபத்துகளை யனுபவிக்கிறதிலேயும் மனுஷனுடைய சுவாதந்திரியமானது செல்லாதென்று சொல்லக்கடவோம்.

———*(*)*———

ரு-ம். பாடம்.

பூலோகத்திலே திரிகிற மனுஷருக்குச் சுயாதந்திரியமுண்டாயிருக்கிறதென்றும் அதினுடைய அடையாளம்போன பாடத்திலே சொன்னாற்போலாச்சுது. பாவகடைத்திலே அமிழ்ந்தியிருக்கவேணுமென்கிற ஆசையுள்ள பாவிகள் தாங்கள் பண்ணிக்கொண்டுவருகிற அருவருப்புள்ள பாவங்களினிமித்தியாகப் போக்குச் சொல்லத் தங்கள்பேரிலே குற்றமில்லையென்று காட்டும்படிக்கி நம்மாலே சொல்லப்பட்ட சுயாதந்திரியமான சத்தியானது மனுஷருக்கில்லையென்று சொல்லுகிறார்கள். இந்த விஷயத்திலே அவர்கள் கற்பித்ததப்பறை விசேஷங்கள் வெகுவாயிருக்கக்கொள்ள அவைகளையெல்லாம் விஸ்தார பிரசங்கமில்லாமல் வெளிப்படுத்தி வரக்கூடாது. ஆனபடியினாலே அப்படிப்பட்ட தப்பறை விசேஷங்களுக்குள்ளே சிலவற்றை மாத்திரம் வெளிப்படுத்தி அவைகள் ஞாயத்துக் கொத்திராத விசேஷங்களாயிருக்கிறதென்றெப்பச் சொல்லுகிற ஞாயங்களினாலே இந்த விஷயத்திலே கற்பிக்கப்பட்ட மற்றுமுள்ள விசேஷங்கள் முழுதப்பறைகளாயிருக்கிறதென்றெல்லாரும் கண்டுபிடிக்கிறதுக்கு வழிதிறந்தாப்போலேயாகும்.

இக்காலத்திலே சரீரத்தோடே கூடத் திரிகிற சீவனென்னப்பட்ட யாவும் பூர்வகாலத்திலே வெவ்வேறு சரீரத்தோடே திரிந்து பற்பல பாவபுண்ணியங்களைப்பண்ணினதினாற் சீவன்களினாலே பண்ணப்பட்ட கர்மத்துக்குத்தக்க பிரகாரமாக அந்தந்தச் சீவனுடைத்தான பொருட்களிடத்திலே தேவனானவன் சில யெழுத்துக்களைலலாடத்திலே யெழுதினானும் அவைகளை விதியென்றுந் தலைவிதியென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட யெழுத்தைத் தேவன் முதலாய்த் துடைக்கிறதுக்கு வல்லவராயிருக்கவில்லையென்றும் அங்கிகரிக்கிறார்கள். வேறே சிலபேர்களுடைய மதமானது இல்லையென்றத்து போடுகிறவன் எறியப்படுகிற கல்லைக் கட்டாயமாக அதுக்காகத்தக்கதாகத் தள்ளுகிற வொருகுணத்தைக் கல்லுக்குக் கொடுக்கிறாப்போலே இந்த ஜென்மத்திலே அதையுமிதையும் அவனவன் கட்டாயமாய்ப் பண்ணுகிறதுக்கு அவனவனிடத்திலே பிரேரகம்போலே யொருகுணமுண்டாகி அது பூர்வஜென்மத்திலே அவனவன் செய்த கர்மங்களினாலே அவனவனுக்கு வந்ததென்றுங் கற்பிக்கிறார்கள். அப்படிப்பட்ட குணத்துக்குப் பூர்வஜென்ம வசானையென்கிறபேரும், பூர்வஜென்ம சம்ஸ்காரமென்கிற நாமமும் பிராக்த்தனமென்றுஞ் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதெல்லாந் தலையெழுத்தானாலும் தலைவிதி பூர்வஜென்ம வாசினை சம்ஸ்கார பிராக்த்தனமென்கிலும் மனுஷனிடத்திலேயுண்டாய் மனுஷனானவன் அதையுமிதையும் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணிக்கொண்டு வருகிறதொழிய விதிமுதலானதுகளைத் தப்பி மனுஷனானவன் ஒருகாரியத்தை யாகிலுஞ் செய்யமாட்டானென்று சொல்லுகிறாகள். இதுதவிர மனுஷனானவன் பூர்வஜென்மத்திலே பண்ணின கர்மங்கள் நிமித்தமாக அதையுமிதையும் பண்ணுகிறதுக்கும் அடைகிறதுக்குங் கர்மத்தினாலே வருகிற தலையெழுத்து, பிராக்த்தனம் இது முதலானவைகள் போருமென்று சிலர் சொல்லுகிறார்கள். வேறே சிலர் கர்த்தரொருவனுண்டென்று அங்கீகரித்து அவனவன் பூர்வஜென்மத்திலே பண்ணின கர்மத்துக்குத் தக்கது அதையுமிதைய மிந்த ஜென்மத்திலே அப்படிப்பட்ட கர்த்தரானவர் அவனவனையடையப் பண்ணுகிறாரென்று சொல்லுகிறார்கள்.

வேறே சிலபேர்கள் லோகத்திலே கர்த்தனுண்டென்று சொல்லி அப்படிப்பட்ட கர்த்தன் தனது இச்சைப்படியே பொம்மையை ஆட்டிவைக்கிறாப்போலே மனுஷன் முதலான பொருட்களை ஆட்டிவைக்கக்கொள்ள எல்லாவற்றையும் பண்ணுகிறவனும் எல்லாவற்

றையு மனுபவிக்கிறவனும் கர்த்தன்தானே யென்று சொல்லுகிறார்கள். ஆனபடியினாலே புண்ணியத்தைப் பண்ணுகிறவரும் பாவத்திலே விழுகிறவரும் அவர்தானென்று முழுதுமதிகெட்டபேர்களாய்ச் சொல்லிக்கொண்டுவருகிறார்கள்.

சொல்லப்பட்ட இந்ததுர்மதங்களினாலே ஸ்தாபிக்கப்படுகிற தப்பறை விசேஷமாவது. மனுஷனானவன் தனது கிரிகையைப் பண்ணுகிறதுக்கு ஆன அந்தரங்க பலத்தைக் கொண்டிருந்தாலும் தனது கிரிகைகளைப் பண்ணிக்கொண்டுவருகையிலே அந்தக் கிரிகை வேணுமென்கிறதுக்கும் இந்தக்கிரிகை வேண்டாமென்கிறதுக்கும் வல்லவனாயிராமல் விதி முதலானதுகளினாலே தள்ளப்பட்டுவந்து அதையுமிதையும் பண்ணுகிறானேயொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே அப்படிப்பட்ட பாவிகள் தமது கிரிகைகளைப் பண்ணுகிறதிலேயும் நாய் முதலான ஜெந்துக்கள் தம் கிரிகைகளைப் பண்ணுகிறதிலேயும் அறிவுள்ள அறிவற்ற பொருளிரண்டிலே பேதமும் ஏற்றக்குறைச்சலுமில்லையென்றொப்புவிக்கவருந்துகிறதினால் மிருகங்களைப்பார்க்கிலுந் தாங்கள் மதிகெட்டபேர்களாயிருக்கிறார்களென்று காண்பிக்கிறார்களொழியத் தங்கள் தப்பறை மதத்தைத் தக்கஞாயங்களினாலே யொப்பச்சொல்லமாட்டார்கள். இதெல்லாங் கர்த்தனுடைய கிருபையினாலே யாவர்க்கும் வெளியாகும்படிக்கு ஒவ்வொன்றிலும் அவர்களாலே சொல்லப்படுகிற பிரத்தியக்ஷ தப்பறைகளைச் சொல்லிக்காட்டக்கடவோம். பூர்வஜென்மம் அவனவனுக்குண்டாயிருக்கிறதென்று அவர்கள் சொல்லுகிற விஷயமானது அவர்களாலே கற்பிக்கப்படுகிற மற்றெல்லாத் தப்பறை விஷயங்களையும் ஒப்புவிக்கிறதுக்கு அஸ்திவாரமாக ஸ்தாபிக்கிறார்கள். ஆனபடியினாலே பூருவஜென்மமில்லையென்று சந்தேகமறப் பிரத்தியக்ஷமாயொப்புவிக்கப்பட்டால் அஸ்திவாரமில்லாத கல்லாலைகையிடிந்து விழுகிறாப்போலே அவர்களாலே கற்பிக்கப்பட்ட தப்பறை விஷயங்களெல்லாம் கடவாமல் விழுந்துபோமென்கிறதுக்குத் தப்பாது. அப்படியே பூருவஜென்மமில்லையென்று இனிமேல் வருகிற பதினாறாம்பாடந் துவக்கி யிருபத்திரண்டாம் பாடம் பரியந்தம் ஒப்பிக்கிறபோது அவ்விடத்திற் சொல்லப்படுகிற ஞாயங்களினாலே யிவையெல்லாந் தப்பறையாயிருக்கிறதென்றும் இதுவும் ஒப்புவிக்கப்படுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனாற் பூர்வஜென்ம வர்த்தமானத்தைச் சொல்லத்தக்கவிடத்திலே சொல்லுவோமென்கிறதினாலே யிவ்விடத்திலே அதை நினையாமல் மனுஷனுடைய சுவாதந்திரிய விஷயத்திலே யிவர்கள் சத்தியத்தினுடைய மேரையைத் தப்பிக் கற்பித்த விசேஷங்கள் முழுதப்பறையாயிருக்கிறதென்று வேறே ஞாயங்களினாலே வெளிப்படுத்தக்கடவோம். அப்படியே அவனவன் பூர்வஜென்மத்திலே பண்ணின கர்மத்துக்குத்தக்கது அவனவன் தலையிலே தேவனானவனெழுத்தை, யெழுதினானென்கிற வர்த்தமானமானது மெய்யாயிருக்கிறதோ யில்லையோவென்று ஆராய்ந்து கொள்ளத்துவக்குவோம். இதெல்லா மெய்யென்று எந்த ஞாயத்தினாலே ஒப்பச்சொல்லலாமென்று முந்த முந்தக் கேட்கிறேன்.

அதேதென்றால் இது பிரத்தியக்ஷமாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது. இதென்றியே பறுவதத்திலே அக்கினியுண்டென்று புகையாகிற அநுமானமானது காட்டுகிறாப்போலே தேவனானவன் அவனவன் தலையிலே இப்படிக்கொத்த யெழுத்துக்களை யெழுதினானென்று கண்டுபிடிக்கிறதுக்கு அநுமானமானது மென்கிலுங் காணாது. ஆனபடியினாலே அந்தந்தப் புராணத்திலே சொல்லப்பட்டிருக்கிறதினாலே இந்த விசேஷமானது அங்கிகரிக்கத்தக்கதாகுமென்று சொல்லுகிறார்கள். இந்த ஞாயத்தை விசாரிக்கும்போது அது யாதொரு பெலமாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் இந்தச் சீர்மையிலே வழங்குகிற பதினெட்டுப் புராணங்களானவைகள் பரஸ்பர விருத்தத்தினாலேயுங் காணப்பட்ட

சத்தியத்துக்கு அநேகவிருத்த விசேஷங்கள் அவைகளிலே சொல்லப்படுகிறதினாலேயும் அப்படிப்பட்ட புராணங்கள் வழங்குகிற இராச்சியத்திலேயிருக்கிற வித்தியாபரீக்ஷகர் முதலாய் அப்புராணங்களிலே தங்களுடைய புத்திக்கு விருத்தியான விசேஷங்களைப் பிடித்ததினாற் சில புராணங்களை முழுதும் அங்கீகாரம்பண்ணவொண்ணாதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படியே ருத்திரனைக் கடவுளென்று சொல்லுகிற புராணங்கள் விஷ்ணு பராபரவஸ்துவாயிருக்கிறானென்று விதிக்கிற புராணங்களுக்கு விருத்தங்களாயிருக்கக் கொள்ள வைஷ்ணவமதத்தை அங்கீகரிக்கிற வித்துவாம்சரானபேர்கள் ருத்திரபுராணங்களை முழுதும் அங்கீகரிக்கவொண்ணாதென்று தள்ளித் தாக்கிக்கிறார்களே. இந்தப்படியாகச் சைவமதத்தை அங்கீகரிக்கிறபேர்கள் விஷ்ணுபக்ஷமான புராணங்களிலே விஷ்ணு கடவுளாயிருக்கிறானென்கிற விசேஷமுதலான அநேகம் பொய்களுண்டென்று சொல்லி அதுகளை முழுதும் விசுவாசமாகக் கொள்ளவுஞ் செய்யார்கள். இவ்விதமான வெவ்வேறே அநேகம் விசேஷங்கள் தப்பறையாயிருக்கிறதென்று அந்தந்தப் புராணத்திலே கண்டுபிடிக்கப்படுகிறதினாற் புராணத்திலே சொல்லப்படுகிற விசேஷம் வேறே நியாயங்களினாலே ஒப்புவிக்கப்படாதிருந்தாற் புராணங்களானவைகள் சொல்லுகிறதினாலே மாத்திரம் அதை மெய்யென்று அங்கீகரிக்கிறதென்கிறது நியாயமுள்ள புத்திக்கு ஏற்கவராதென்று சொல்லத்தகும். அதேதென்றாற் பற்பல தப்பறைகளைச் சொல்லுகிற சாஸ்திரியானவன் ஒரு விசேஷத்தைச் சொன்னால் அதை விசுவாசிக்கிறதுக்கு வேறே நியாயங்களிராமல் அவன் சொல்லுகிறதினாலே மாத்திரம் யாதொருத்தன் அப்படிப்பட்ட விசேஷத்தை அங்கீகரித்தால் அவன் அறிவின் குறைச்சலுள்ளவனென்று சொல்லப்படுகிறாப்போலே தேவனானவன் அவனவன் தலையிலே யெழுத்தை யெழுதுகிறானென்பதை மெய்யென்று அங்கீகரிக்கிறதுக்கு வேறே யொரு நியாயங் காணாமல் பற்பல தப்பறைகளைச் சொல்லுகிற புராணங்கள் இப்படிப்பட்ட தலையெழுத்தை விதிக்கிறதினாலே மாத்திரம், அதை விசுவாசிக்கிறதென்கிறது அறிவின் குறைச்சலென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

இந்த விஷயத்திலே புத்தியில்லாத சிலஜனங்கள் சொல்லுகிற விசேஷத்தையும் அவர்களுடைய அஞ்ஞானத்தையும் பார்த்துச் சிரிக்கிறதுக்கொழிய அவர்கள் பேரிலே இரக்கமாயிருக்கிறதுக்கு அவகாசங்காணுமென்று சொல்லலாம். அதேதென்றாற் சிற்பசாஸ்திரியானவன் இரண்டு பலகைகளைச் சேர்க்கவேணுமானாற் பலகையிரண்டுஞ் சேருகிற பாரிசங்களிலே அங்கேயுமிங்கேயும் அறுத்து ஒன்றோடொன்றைப் பொருத்துவான் அப்படிப்போல மனுஷன் தலையிலேயிருக்கிற எலும்புகள் இரண்டும் நெற்றியிலே சேரும்படிக்கு ஒன்றோடொன்று பொருந்தவேண்டி அவ்வெலும்புகளிரண்டிலும் சுபாவமான கீற்றுகள் காணப்படுகிறது. அப்படிப்பட்ட எலும்புகளிரண்டுஞ் சேருகிறதுக்குச் சுபாவமாயிருக்கிற அறுப்புகளுடைய ரேகைகளானவைகளைச் சிலமூடராயிருக்கிறபேர்கள் தேவனானவன் அவனவன் தலையிலெழுதின யெழுத்தென்று சொல்லுகிறார்கள். இந்தப்படி வெலும்புகளிரண்டுஞ் சேருகிறதுக்குச் சிற்பசாஸ்திரியானவன் அறுத்துப் பண்ணின ரேகைகளைப் பலகையெழுத்தென்று சொல்லலாமே. இதெல்லாஞ் சிரிக்கிறதுக்குக் காணப்பட்ட அபத்தங்களாயிருப்பதால் நியாயங்களினாலே அவைகளைக் கண்டிக்கவேண்டுமென்கிறதிலே காலக்ஷேபம் பண்ணத்தேவையில்லை. ஆனபடியினாலே தேவனானவன் தலையெழுத்தெழுதுகிறானென்று சொல்லுகிறது நியாயத்துக்கு மிகவும் விருத்தமாயிருக்கிறதென்று வேறேகெட்ட நியாயங்களினாலே காட்டக்கடவோம்.

முந்தநுவாயிலே சகலசத்தியத்துக்கும் அஸ்திவாரம்போலேயிருக்கிற வொரு முன்றுத சத்தியத்தைச் சந்தேகப்படாமல் அங்கீகரிப்போம். அதாவது இந்தலோகத்தை யுண்டாக்கி நடத்திவருகிற ஆதிகாரணமாயிருக்கிற கர்த்தரொருவருண்டாயிருக்கவே

னும். அவர் சகல நன்மைசொரூபமாயிருக்கிறாரென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லையென்று முந்தின பாடம் முதலானதுகளிலே யொப்புவித்தாற்போலே யாச்சுது. அப்படிக்கொத்த கர்த்தர் லோகத்தை நடத்திவருகிறதினாலே அவராலும் அவருடைய உத்தாரப்படியாலும் மனுஷன் தலையிலே இப்படிப்பட்ட யெழுத்தெழுதப்படுகிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படியிருக்கையிலே மனுஷன் தலையிலே யிப்படிக்கொத்த யெழுத்தெழுதப்படுகிறதென்று அங்கீகரித்தோமானாற் சகலநன்மைசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் முழுதும் பொல்லாதவராயிருக்கிறாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. அதேதென்றால் மனுஷனைப் பார்த்துக் களவு கொலைபாதகங்களைப் பண்ணென்று கற்பித்து அப்படிப்பட்ட பாவங்களை மனுஷனானவன் பண்ணக்கட்டாயம் பண்ணுகிறவன் முழுப்பொல்லாதவனாயிருக்கிறானென்று சந்தேகப்படாமலங்கீகரிக்கத்தக்கவதாகும். ஆனபடியினாலே சகலநன்மை சொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் இப்படியே பாவித்தை மனுஷன் கட்டாயமாய்ப் பண்ணத்தக்கதாகக் கற்பித்துக்கொண்டேனதால் அவர் முழுப்பொல்லாதவராயிருக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. இதுவன்றித் தாமருளிச்செய்த வேதத்திலே களவு கொலைபாதக முதலான பாவமென்னப்பட்டதையாவும் பண்ணவேண்டாமென்று மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் விலக்கி அவனவன் தலையிலெழுத்தெழுதி அவனவன் கொலைபாதகமுதலான பாவமென்னப்பட்டதெல்லாங் கட்டாயமாய்ப் பண்ணுகிறதுக்குக் கற்பிக்கிறபடியே இரண்டிடங்களிலே விருத்தமான விசேஷங்களைக் கற்பித்தாரென்று சொல்லவேண்டியிருக்கிறதினாற் சத்திய சொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் முழுத் தப்பறைக்காரனாயிருக்கிறாரென்று அங்கீகரித்தாற்போலாச்சுது.

இதன்றியே நீதிசொரூபமாயிருக்கிற சருவேசுரன் பாவத்தை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணியிருக்கிறாரென்று சொல்லிப் பாவம்பண்ணின மனுஷருக்காக்கினை விதிக்கிறாரென்று சம்மதித்திருந்தோமானால் அவரை முழுதும் அநியாயக்காரரென்று சொன்னாற்போலேயாச்சுது. அதேதென்றால் இராசாவானவன் தனது சேவகனைப்பார்த்து ஒருத்தனைக் கொல்லென்று கற்பித்ததும்போராமற் சேவகனுடைய கையைப்பிடித்துப் பிடித்தகையைக் கொண்டொருத்தனைக் குத்துவித்த பிற்பாடு சேவகனை யாக்கினையிட்டால் அது நிமித்தியமாக அப்படிப்பட்ட இராசாவானவன் மகா அநியாயம் பண்ணினானென்று சொல்லக்கடவதுமாயிருக்கிறாப்போல மகாராசாவான சர்வேசுரனானவர் மனுஷன் பாவத்தைப் பண்ணுகிறதுக்குத் தாமே கற்பித்த வலாட்டியினாலே கட்டாயம் பண்ணுவிக்கிறாரென்றும், தாங்கற்பித்தபடியே பாவம்பண்ணுகிற மனுஷனுக்குத் தாம்பண்ணுவித்த பாவங்கள் நிமித்தியமாக ஆக்கினையிடுகிறாரென்றும் அங்கீகரிக்கவேணும். ஆனபடியினாலே நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் முழு அநியாயக்காரனாயிருக்கிறாரென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இதைத் தவிர பாவத்தைப்பண்ணுகிறவனும் பண்ணுவிக்கிறவனுமாகிறயிரண்டு பேரும் பாவிகளுமாய் ஆக்கினைக்குப்பாத்திரவான்களுமாயிருக்கிறார்களென்று கர்த்தரானவர் தாமருளிச்செய்த வேதத்திலே சொல்லுகிறபோதே தம்மை மகாபாவியென்றும் ஆக்கினைக்குப்பாத்திரமாயிருக்கிறாரென்றுஞ் சொன்னாற்போலேயாச்சுது. கடைசியாயிப்படிப்பட்ட தலையெழுத்தை அங்கீகரித்தானால் முடிவில்லாத ஞானசொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் முழுதும் புத்தியில்லாதவராயிருக்கிறாரென்று சொன்னாற்போலேயாகும். அதேதென்றாற் கூடியான காரியத்தைப் புத்திமானாயிருக்கிறவன் கற்பிக்கவேணுமொழியக் கூடாதகாரியத்தைச் செய்யும்படிக் கற்பிக்கிறவனும் புத்திசொல்லுகிறவனும் முழுப்பயித்தியக்காரனென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படியிருக்கையிலே பாவம் பண்ணுகிறதுக்கு மனுஷன் தலையிலே யெழுத்துண்டாயிருக்கையிலே மனுஷனானவன் பாவம் பண்ணாமலிருக்கக்கூடா

தல்லோ. அப்படியே கர்த்தரானவர் பாவஞ்செய்ய வேண்டாமென்று வேதத்திலே கற்பித்தபோதே அவர் புத்தியில்லாதவராய்க் கூடாதகாரியத்தை மனுஷனுக்குக் கற்பித்தாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஏழையாயிருக்கிற வொரு மனுஷனுக்குக் கூடாத காரியங்களைக் கற்பிக்கிறதென்கிறது குரூர இராசாவினுடைய லக்ஷணமாயிருக்கிறதேயொழிய தயாபரரான பிதாவினுடைய லக்ஷணமாயிருக்கமாட்டாது. அவ்வண்ணமே கர்த்தர் மனுஷன் தலையிலே யெழுதுகிற லிபியினாலே அவர் மனுஷனுக்குத் தயாபரராகப்பண்ணியிராமல் நிஷ்டூரமுள்ள இராசாவாயிருக்கிறாரென்று சொல்லக்கடவோம்.

புண்ணியவிஷயத்திலோ தலையெழுத்துண்டாயிருக்கிறதினாலே மனுஷனானவன் கட்டாயமாய்ப் புண்ணியஞ் செய்வானேயொழிய மற்றப்படியல்ல. இதுவிப்படியிருக்கையிலே மனுஷனானவன் புண்ணியத்தைச் செய்கிறதுக்குக் கர்த்தன் கற்பித்த கற்பனையானது வியர்த்தமாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதெப்படியென்றால் கர்த்தரானவர் சூரியனை யுண்டாக்கி லோகத்திலே பிரகாசிக்கக் கற்பித்திருக்க அந்த கர்த்தரால் அடைந்திருக்கிற சுபாவத்தினாலே தனது பிரகாசத்தை யெங்கும் பரம்பப்பண்ணவேணுமொழிய சும்மாயிருக்கமாட்டாது.

அப்படியிருக்கக் கர்த்தரானவர் சூரியனைப்பார்த்து நீ உன்னுடைய பிரகாசத்தைப் பரம்பப்பண்ணினாலே புண்ணியம் பரம்பப்பண்ணாதே போனால் ஆக்கினை யுண்டென்று சொல்லலாயிருக்கிறதா? அப்படியே கர்த்தன் சொன்னாரென்று சொன்னோமானால் அப்படிப்பட்ட சொல் வியர்த்தமாயிருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அப்படியே கர்த்தரானவர் மனுஷன் தலையிலே யெழுதின லிபியினாலே யிவன் புண்ணியத்தைக் கட்டாயமாய்ச் செய்வானேயொழியப் புண்ணியஞ் செய்யாதிருக்க மாட்டானென்றிருக்கையிலே கர்த்தரானவர் மனுஷனைப்பார்த்து நீ புண்ணியம் பண்ணினாலே பண்ணினாய் இல்லாவிட்டால் நரகத்திலே யுன்னைத் தள்ளுவேனென்று திருவுளம் பற்றினாரென்கிறது வியர்த்தவார்த்தை யென்றும் கவுரவ தோஷத்தோடே கூடியிருக்கிற கற்பனை யென்றும் அங்கீகரிக்கத்தக்கதாகும். அதேதென்றால் லலாடலிபியினாலே மனுஷனானவன் புண்ணியத்தைக் கட்டாயமாய்ப் பண்ணுகிறானென்று சம்மதித்தோமானால் மனுஷனானவன் புண்ணியம் பண்ணுகிறதுக்கு லலாடலிபியொன்றே பரிபூரண காரணமாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம்.

லலாடலிபியானது புண்ணியமுண்டாகிறதுக்குப் போருமென்றிருக்கையிலே யிதைப்பற்றி யின்னமுந் தேவகற்பனை வேண்டியிருக்கிறதென்று சொன்னோமானாற் கவுரவ தோஷத்தை அங்கீகரிக்கிறோமென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றாற் காரியமுண்டாயிருக்கிறதுக்கு ஒருகாரணம் போருமென்றிருக்கையிலே அதினுடைய வுற்பத்திக்கு வேறேயொருகாரணம் வேண்டியிருக்கிறதென்று சொன்னாப்போலே யாச்சுது. இதுக்கெல்லாத்துக்கும் சிலர் சொல்லுகிற பிரதியுத்தரமாவது, கர்த்தரானவர் அவனவன் பூர்வசென்மத்திலே பண்ணின கர்மத்தைப் பார்த்து அவைகளுக்குத்தக்க லிபியை அவனவன் தலையிலே யெழுதுகிறாரொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே சொல்லப்பட்ட தூஷணங்களுக்கு அவகாசங்காணமாட்டாதென்று சொல்லுகிறார்கள். இந்த பிரதியுத்தரமும் ஒன்றுக்கு மாகாதென்றும் சொல்லப்பட்ட தூஷணங்களுடைய நிவாரணத்தை யிலவலேசமானாலும் பண்ணுகிறதுக்கு வல்லதாயிராதென்றும் அடைவாக வெளிப்படுத்தக்கடவோம்.

மனுஷனுடைய சென்ம பரம்பரையிலே யனவஸ்தைதோஷம் அங்கீகாரம்பண்ணாதபடிக்கு லோகமும் லோகத்திலுண்டான மனுஷசந்ததியும் துவக்கிற்றென்று சொல்லக்கடவது. ஆனபடியினாலே முந்தமுந்த சில மனுஷஜனங்களைக் கர்த்தருண்டாக்கினாரென்று சந்தேக

மறஅங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அப்படிப்பட்ட முந்தின மனுஷஜனங்களுக்கு அதுவே முந்தின ஜென்மமென்று சொல்லவேணுமொழிய வேறே யவர்களுக்குப் பூர்வஜென்ம முண்டாயிருந்த தென்று சொல்லவேணுமென்கிறது ஒன்றிலேதானே கேவல அர்த்தவிரோதமானது அங்கீகரிக்கப்பட்டதாகும். அதேதென்றால் முந்தமுந்த உண்டாக்கப்பட்ட மனுஷரென்று அங்கீகரிக்கிறபோது அவர்களுக்குமுன்னே வேறே மனுஷருண்டாயிருக்க வில்லையென்று சொன்னாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே முந்தமுந்த உண்டாக்கப்பட்ட மனுஷருக்குப் பூர்வஜென்ம முண்டென்று அங்கீகரிக்கப்பட்டால் அப்படிப்பட்டவர்கள் முந்தினபேர்களாகாதபடிக்கு முந்தினபேர்களுமாயிருந்தார்களென்று அங்கீகரிக்கிறதுக் கொக்கும். அவ்வண்ணமே முந்தமுந்த உண்டாக்கப்பட்ட மனுஷருக்குப் பூர்வஜென்ம முண்டாயிருந்த தென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. இதிப்படியிருக்கையிலே கர்த்தரானவர் வேறே ஜென்மத்திலிருந்து பிறப்பியாத மனுஷருக்கு அவர்களாலே முன்பண்ணப்பட்ட கர்மங்களில்லை. ஆனபடியினாலே கர்த்தரானவர் அவர்கள் தலையிலே யெழுத்தை யெழுதவில்லையென்று அங்கீகரிக்கக்கடவோம். அதேதென்றால் லலாடலிபியானது கர்மத்துக்குத் தக்கதா யெழுதப்படுகிறதென்று சொல்வதினாலே லலாடலிபி யெழுதுகிறதுக்கு அவனவன்பண்ணின கர்மமானது காரணமாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே முந்த முந்த உண்டாக்கப்பட்ட மனுஷஜனங்கள் பண்ணின வேறேகர்மங்கள் அவர்களிடத்திலே யில்லாததினால் அந்த லிபியைக் கர்த்தரானவர் அவர்களிடத்திலே யெழுதக்காரண மில்லாதிருக்கையிலே அவர்களிடத்திலே தலையெழுத்தை யெழுதவில்லை யென்று அங்கீகரிக்கக்கடவோம். அப்படிப்பட்ட மனுஷரென்னப்பட்டவர்கள் பூலோகத்திலே இருந்தநாள்மட்டும் தலையெழுத் தில்லாமல் தனது கிரிகைகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்களென்று ஒரு சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கவேணும்.

பின்னையும் அப்படிப்பட்ட மனுஷருக்குப் பிறந்த பிள்ளைகள் வேறே ஜென்மத்திலே பிறவாததினால் வேறே கர்மங்களைப் பண்ணாதபேர்களாயிருந்தார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே முன்பண்ணின கர்மங்களில்லாமல் லலாடலிபியை யெழுதாத கர்த்தரானவர் முந்தின மனுஷரிடத்திலே பிறந்த பிள்ளைகளுக்குத் தலையெழுத்தெழுதவில்லையென்றும் அவர்கள் பூலோகத்திலே இருக்கிறநாள்மட்டும் தலையெழுத்தில்லாமல் தனது சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்களென்றும் முன்சொல்லப்பட்ட நியாயங்களினாலே சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இதன்றியே முந்தமுந்த வுண்டாக்கப்பட்ட மனுஷஜனங்கள் தாங்கள் பெற்றபிள்ளைகளுக்குத் தாங்களே பிள்ளைகளாய்ப்பிறவாமல் தனது பேரமாரைக் கண்டார்களென்று சொன்னோமானால் அப்படிப்பட்ட பேரமாரும் பூலோகத்திலே இருக்கிறநாள்மட்டும் லலாடலிபியில்லாமல் மற்றவிருத்திகளைப்பண்ணிக்கொண்டு வந்தார்களென்று சம்மதிப்படத் தக்கசத்தியமாகும். அவ்வண்ணமே மூன்று தலைமுறையிலுள்ள மனுஷர்கள் லலாடலிபியில்லாமல் தங்கள் விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வந்தார்களென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்க வேண்டியிருக்கையிலே மற்றுமுள்ள மனுஷரென்னப்பட்ட யாவரும் தலையெழுத்தின்றி லிபியின்கட்டாயமில்லாமல் தங்கள் விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று அங்கீகரிக்கக்கடவோம். அப்படியே அங்கீகாரம் பண்ணாமலிருந்தால் முந்தின மூன்று தலைமுறையிலுமுள்ள மனுஷரானவர்கள் தங்கள் விருத்திகளைப் பண்ணிப் பூலோகத்திலே நடந்துவர இக்காலத்திலேயிருக்கிற மனுஷரனைவருந் தன்தன் கிரிகைகளை வேறேபிரகாரமாய்ப் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று அங்கீகரிக்கிறதினால் அப்படிப்பட்டபேர்கள் கர்மங்களுடைய விஷயங்களிலே வேறேவகையுள்ள மனுஷராயிருக்கிறார்களென்று சொல்லக்கடவோம்.

இப்படிப்பட்ட அபத்தத்தைச் சொல்லாதபடிக்கு முக்தின் முன்னாதிலே முறையிலுள்ளபேர்கள் லவாடவியும் லவாடவியினாலே வருகிறகட்டாயமு மில்லாமல் தனது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதிலே வேணும்வேண்டா மென்கிற சத்தியுள்ள மனுஷர்களாயிருந்தார்களென்று அங்கிகரிக்கிறப்படியிலே யிக்காலத்திலே பிறந்தமற்றுள்ள மனுஷரென்னப்பட்ட யாவருமலவாடவியும் லவாடவியினாலே வருகிறகட்டாயமுமில்லாமல் தனது விருத்திகளைப் பண்ணுகிறதிலே வேணும் வேண்டாமென்கிற சத்தியுள்ளபேர்களாய்ப் பூலோகத்திலே தலைமுறை தலைமுறையாக நடந்துவருகிறார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. கடைசியாய் முந்த முந்த உற்பவித்த மனுஷர்களைப் பட்டினியாயிராமல் அவர்களுடைய காலத்திலே விருக்ஷங்களென்கிறதும் பூமியிலே யிருந்ததென்கிறதுக்குத் தப்பாது. பின்னையுஞ் சமுத்திரமும் பூமியும் அக்காலத்தி லிருந்தாப்போலிக்காலத்திலு மிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகப் படக்கூடாதானதினால் இக்காலத்திலே சமுத்திரத்திலே மச்சங்களும் பூமியிலே மிருகங்களும் பிழைத்துத்திரிகிறாப் போலே அக்காலத்திலே மச்சங்களு மிருகங்களும் பிழைத்துத் திரிந்ததென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே முற்சென்மத்திலே கர்மங்களைப் பண்ணின மனுஷர்களைச் சொல்லாமல் மச்சங்களு மிருகங்களும் அக்காலத்திலே யிருந்தனவென்று சொல்லுமாப்போல இக்காலத்திலும் மச்சங்களு மிருகங்களு முற்சென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்களினாலே லவாடவியுமில்லாமற் பூமியிலே பிழைத்துத் திரிகிறதென்றுஞ் சொல்லக்கடவதாகும்.

தெளிவற்ற பாவிகளானபேர்களெனியாயமாய்க் கற்பித்த லவாடவியானது கர்த்தருடைய சத்தியம் நீதி முதலான மகிமைகளுக்கு விருத்தமா யிருக்கக்கொள்ள சகல நன்மை சுரூபியாயிருக்கிற கர்த்தரானவ ரிப்படிப்பட்ட லவாடவியை மனுஷரிடத்திலே யில்லாமற் பண்ணவேணுமென்று இந்தப்பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே சந்தேகமில்லாமற் கண்டுபிடிக்கலா மென்றிருப்பதுபோலே யிப்படிப்பட்ட லவாடவியானது மெத்த அபத்தப் பறையென்று வேறேயநேகம் ஞாயங்களினாலே சந்தேகமறக் கண்டுபிடிக்கலாம். அவைகளுக்குள்ளே சிலஞாயங்களைக் கொஞ்சத்துக் குள்ளே யெடுத்துக்காட்டி அப்படிப்பட்ட ஞாயங்களைக்கொண்டு மனுஷனுக்குக் கட்டாயம் பண்ணுகிற லவாடவியானதுண்டென்று சொல்லுகிறது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று வருகிறபாடத்திலே யின்னமும் விபரச்சொல்லிக் காட்டுவோம்.

௫ம். பாடம்.

நரகமோக்ஷத்தைப் பெறுவிக்கிறபாவபுண்ணியத்தின் சுபாவமொருபுத்தகைச்சயம் பண்ணின மகாத்துமாக்களா யிருக்கிறபேர்கள் பத்தியுள்ள கிரிகைகளினாலே பண்ணப்படுகிற விருத்திகளுடையமேன்மையைப் பார்க்கும்போது அவைகளுடைய உற்பத்தியுண்டாகிறதுக்குக் கட்டாயம்பண்ணுகிற தென்கிற பட்டதெல்லாம் கிரிகைகளிடத்திலே யில்லாதிருக்கிறதென்று காண்பித்துக்கொண்டுவருகிறார்கள்.

ஆனபடியினாலே மனுஷனானவன் தனது விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதிலே அவனிடத்திலே கட்டாயம் பண்ணுகிறபொருளில்லா மலிருக்கவேணும் அல்லது அப்படிப்பட்ட விருத்திகளுடைய உற்பத்தியாகிறதுக்கு முன்னே அவைகளுண்டாகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற யாதொன்று மனுஷனிடத்திலே உண்டானால் அப்படிப்பட்ட விருத்திகளுக்குக் காரணமென்று சொல்லப்பட்ட பாவபுண்ணியத்தின் நாமதேயமானது செல்லமாட்டாதென்று விகிரமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனபடியினாலே அந்தந்தவிருத்திகளை மனுஷனானவன் பண்ணுகிறதுக்கு முன்னே மனுஷனானவன் அந்தவிருத்தியைப் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற லவாடவியைக் கர்த்தரானவர் மனுஷனிடத்திலே வைத்திருக்கிறாரென்று சொன்னோமானால் மனுஷனாலே பண்ணப்படுகிற கிரிகை யென்னப்பட்டவைக்கும் நரகமோக்ஷத்தைப் பெறுவிக்கிறபாவபுண்ணியத்தின் நாமதேயமானது செல்லாதென்று சொல்லக்கடவோம். பாவபுண்ணியமானது வேலைசெய்கிறதேயில்லை யென்று அங்கிகரிக்கிறபேர்களு இவ்வுலகத்திலே களவு கொலை முதலான கிரிகைகளென்னப்பட்ட யாவையும் பண்ணின மனுஷனானவன் மரணத்துக்குப் பிறபாடு நரகமுதலான ஆக்கினையை யடையமாட்டானென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட மனுஷனுக்குக் கர்த்தரானவர் நரகமுதலான ஆக்கினையிட்டாரென்று சொன்னோமானால் நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பாவமானதும் பண்ணுகிறவர்களுமாய் நரகவேதனைக்குப் பாத்திரமாகாதவர்களுமாயிருக்கிற மனுஷனை நரகவேதனையை யநுபவிக்கக் கட்டளை யிட்டாரென்று அங்கிகரிக்கக்கடவோம்.

பின்னையுமிவ்வுலோகத்திலே பாவமில்லாதவனுமாய்க் கர்த்தனையுந் தேசித்துத் தபசுமுதலான தான செப அனுஷ்டானங்களைப் பண்ணினவனுமா யிருந்தாலும் அப்படிப்பட்டவன் மரணத்துக்குப்பிறபாடு மோக்ஷத்தைப் பெறமாட்டானென்று சொல்லக்கடவது. அவ்வண்ணமேபாவமில்லாதவனுமாய்க் கர்த்தனையுந்தேசித்துந் தபசுமுதலான சகலதருமங்களிலேயும் பிரயாசைப்பட்டவனுமாயிருக்கிறவனுக்குத் தயாபரரானகர்த்தரானவர் மோக்ஷமாகிற சம்பாவனையைக் கொடுக்கவில்லையென்றுஞ் சொல்லவேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட அபத்தங்களை மகாபாவத்தைக் கட்டிக்கொண்டு அங்கிகாரம்பண்ணாதபடிக்கு மனுஷனானவன் தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு முன்னே மனுஷனானவன் தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற லவாடவியை நீதிசொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் மனுஷனிடத்திலே யெழுதவில்லை யென்றொரு அற்பமாகிலுஞ் சந்தேகப்படாமல் அங்கிகரிக்கவேண்டியிருக்கிறது. இதன்றியே பாவிகளாயிருக்கிறபேர்கள் மரணபரியந்தந் தங்களிடத்திலே யெழுதப்பட்ட லவாடவியினாலே கட்டாயமாய்ப் பாவம்பண்ணுவார்களென்றிருக்கையிலே பாவிகளைப்பார்த்துப் பாவங்களைவிட்டு உங்களுக்கு மரணம் வருகிறதுக்கு முன்னே தருமத்தைப் பண்ணுங்களென்று சாஸ்திரமுதலான நல்ல புத்தகங்களில் எழுதப்பட்ட தர்மவாக்கியங்களானவைகள் வியர்த்தவாக்கியங்களென்றும் அநியாயக் கற்பனைகளென்றுஞ் சொல்லவேண்டி யிருக்குமொழிய மற்றப்படியல்ல. இந்தவிடையிலே லோகத்திலேவேண்டியிருக்கிற குருபட்டுருஷர்முதலான மகாத்துமாக்களாயிருக்கிறபேர்கள் வியர்த்தமா யிருக்கிறார்களென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் லோகத்திலேபாவ

மார்க்கத்திலே திரிகிற பாவிகளைப் பார்த்துப் பாவத்தினுடைய அதர்மமாயிருக்கிற வழியை விட்டு மேலான தருமத்தின் உத்தமவழியிலே நடவுங்களென்று புத்திசொல்லுகிற தென்கிறது இதொன்றே யவர்களுக்கான வியாபாரமாயிருக்கிற தொழில் மற்றப்படியல்ல. மரணபரியந்தம் பாவியானவன் கட்டாயமாய்ப் பாவத்தைப்பண்ணுவா னென்கிறதுக்கு லலாடலிபியானது பாவியிடத்திலே யுண்டென்று அங்கிகரிக்கிறபோது பெரியவர்களாலே சொல்லப்படுகிற தர்மபுத்தியென்னப்பட்ட யாவும் அப்பிரயோசனமாய்ப் புத்தியில்லாததுமாயிருக்கிறதென்று அங்கிகரிக்கக்கடவோம்.

ஆனபடியினாலே லலாடலிபியை அங்கிகரித்தால் தருமபுத்தியைச் சொல்லுகிறதற்கிருக்கிற பெரியவர்கள் லோகத்திலே அவசியமிருக்க வேண்டிய பேர்களாயிருக்கிறார்களென்றெல்லாருஞ் சம்மதித்திருக்கிறார்களே அப்படிப்பட்ட மகாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் லோகத்திலே சுத்தமாயிருக்கத் தேவையில்லையென்று சொல்லத்தகும்.

இவையெல்லா மொருவமையினாலே துலக்கமாக வெளிப்படுத்தலாம். அதேதென்றால் சரீரத்தின் கனத்தாலே மனுஷரென்னப்பட்ட யாவரும் பூமியிலே நடக்கிறதுக்கு வல்லவர்களாயிருக்கிறார்களொழிய ஆகாசமார்க்கத்திலே பறக்கிறதுக்கு வல்லவர்களாயிரார்களென்றிருக்கையிலே யாதாமொருத்தன் கனமான சரீரமுடைத்தான மனுஷனைப்பார்த்துப் பூமியிலே திரியாமல் ஆகாசமார்க்கத்திலே பறவுங்களென்று புத்திசொன்னாலும் அப்படிப்பட்ட புத்தி சொல்லுகிறவனைப் பயித்தியங்கொண்டவனென்று சொல்லுவார்கள். இந்தப் புத்தியைச்சொல்லுகிற நிமித்தமாக லோகத்திலே அவன் இருக்கிறானென்று சொன்னோமானால் அவன் லோகத்திலே சஞ்சரிக்கிற தென்கிறது விபரீதமாயிருக்கிற தென்று சொல்லப்படும். அப்படியே லலாடலிபியின் கட்டாயமாகிற கனத்தினாலே பாவியானவன் கீழாயிருந்து பாவமார்க்கத்திலே நடக்கிறதுக்கு வல்லவனாயிருக்கிறானொழிய மேலாயிருக்கிற தருமவழியிலே நடக்கிறதுக்கு வல்லவனல்லான். இது இப்படியிருக்கையிலே பாவியானவனைப்பார்த்துப் பாவவழியிலே திரியவேண்டாமென்றுந் தருமவழியிலே நடவென்றும் புத்தி சொல்லுகிறவன் கனமான சரீரமுடைத்தான மனுஷனைப்பார்த்துப் பூமியிலே திரியவேண்டாம் ஆகாயமார்க்கத்திலே பறந்துபோவென்று புத்தி சொல்லுகிறதுக்குச் சமானமாகுமென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே மனுஷனாகாயத்திலே பறக்கிறதுக்குப் புத்தியைச்சொல்லுகிற பயித்தியக்காரன் லோகத்திலே யிருந்தால் அவன் லோகத்திலே வியர்த்தமாயிருக்கிறானென்று சொல்லப்படுமாப்போலே பாவ வழியைவிட்டுத் தருமவழியிலே நடவுங்களென்று பாவிகளைப்பார்த்துப் புத்திசொல்லுகிற குருவானவன் பயித்தியங்கொண்டிருக்கிறானென்றும் இது நிமித்தமாக அவன் லோகத்திலே வியர்த்தமாயிருக்கிறானென்றுஞ் சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

இத்தனை அபத்தங்களுக்குச் சம்மதப்படாதபடிக்குப் பாவவழியிலே திரிகிற பாவியானவன் லலாடலிபியினாலே கட்டாயமாய்ப் பாவவழியிலே நடவாமல் வேணும் வேண்டாமென்கிற தனது சுதந்தரமுள்ள மனதினாலே பாவத்தை விடலாமென்றுந் தருமவழியிலே நடக்கலாமென்றும் அங்கீகரிக்கக்கடவோம். ஆனபடியினாலே பாவவழியை விடுகிறதுக்குந் தருமவழியிலே நடக்கிறதுக்கும் வல்லவனாயிருக்கிற பாவிக்குத் தருமபுத்தி சொல்லுகிற குருக்கள் முதலான மகாத்துமாக்களாயிருக்கிறவர்கள் லோகத்துக்கு வேண்டியிராத பேர்களாயிருக்கிறார்களென்றும் அவர்கள் லோகத்திலே சஞ்சரிக்கிறது வியர்த்தமாயிருக்கிறதென்றுஞ் சொல்லக்கூடுமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

இதுவுமன்றியே நல்வினை தீவினை வருமென்கிறதுக்குத் தலையெழுத்துமாத்திரங்காரணமாயிருந்தால் நன்மைவரவேணுமென்றுந் தின்மை நீங்கவேணுமென்றுஞ் செப பூசை முதலான தானதருமங்களைப் பண்ணுகிறதும் சருவேசுரனை வேண்டிக்கொள்ளுகிறதும் முழுதும் அறிவீனக்குறைச்சலென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதெப்படியென்றால் நாளைச் சூரியனாலே நமக்கவசியமாய் வரத்தக்கப்பிரகாசத்தைக் குறித்து அந்தப்பிரகாசம் நமக்கு வரவேணுமென்று செபம் பண்ணுவோமானால் பின்னையும் நமக்குக்காற்றானது கட்டாயமாய் உதிவிக்கிற குளிர்ச்சியென்னுமிந்தக் குளிரானது நமக்கு வாராதபடிக்குத் தர்மதான முதலானவைகளைப் பண்ணிக்கொண்டு வந்தோமானால் புத்திக்குறைச்சல் நமக்குண்டென்று அவசியமாய்ச் சொல்லுவார்களே. அத்தன்மைபோல நல்வினை தீவினையானது தலையெழுத்து நிமித்தமாக கட்டாயமாய் வரவேண்டியிருக்கையிலே தலையெழுத்தினாலே நமக்குக்கட்டாயமாய் வரத்தக்க நன்மையான தொன்றைப்பார்த்து அது நமக்கு வரவேணுமென்கிறதாகச் சருவேசுரனை நாம் வேண்டிக்கொள்ளக் கடவோமல்ல. அதேதென்றால் தலையெழுத்தைத் தடுக்கவல்லவனு மிராத கர்த்தரானவர் தலையெழுத்தினாலே வரத்தக்க நன்மைவராதபடிக்கு அவர் விலக்கமாட்டாரென்று அங்கீகரிக்கவேணும். அப்படியாகிய தலையெழுத்தினாலே வரத்தக்க பாவமுதலான துரிதங்கள் வராதபடிக்குக் கர்த்தரானவர் விலக்கமாட்டாரென்கிறபோது அப்படிப்பட்ட துரிதங்கள் வராதபடிக்குக் கர்த்தரானவரை வேண்டிக்கொள்ளுகிறதுக்குக் கணக்கேது. ஆதலாலே முடிவில்லாத கர்த்தருடைய அளவறுக்கப்படாத பலத்தை அறிந்தபேர்கள் அவருடைய பிரதாபகடாக்ஷத்தினாலே பாவவழியிலே நடவாதிருக்கிறதுக்கும் அவருக்கேற்றிருக்கிற தருமவழியிலே நடக்கிறதுக்குந் தம்பரியமுள்ளவர்களாயிருக்கிறதினாலே இத்தனை அபத்தங்களை அங்கீகரிக்கக் கடவார்களல்ல.

அவ்வண்ணமே அப்படிக்கொத்த புண்ணியவான்களாயிருக்கிறபேர்கள் கர்த்தருடைய லலாடலிபியை அவனவனிடத்திலேயெழுதுகிறாரென்றும் அல்லது வேறே யாதொருத்தன் அவருடையகட்டளைப்படியே யெழுதுகிறானென்றுஞ் சொல்லமாட்டார்கள். அதேதென்றால் பாவபுண்ணிய விஷயத்திலே கர்த்தரானவர் தமது பிரசைகளுக்கு லலாடலிபியினாலே தாமே கட்டாயம்பண்ணுகிறாரென்றும் அல்லது வேறொருவன் கட்டாயம் பண்ணுகிறதுக்குத்தாரங் கொடுக்கிறாரென்றுஞ் சொன்னோமானால் சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர்பேரிலே கிஞ்சித்து அநியாய முதலான துர்க்குணங்களை யாரோபித்தது போலாச்சுது. அல்லது தனதுத்தாரமில்லாமல் லலாடலிபி வேறேயொருத்தன் எழுதுகிறானென்றுவது இப்படிப்பட்ட அநியாயத்தைக்கர்த்தரானவர் உதாசீன புத்தியினாலே விலக்காமலிருக்கிறாரென்றுவது அங்கீகரித்தோமானால் அதினாலே கர்த்தரானவர் பெலமில்லாதவராயிருக்கிறாரென்று சொன்னதுபோலே யாச்சுது. ஏனென்றாலிவர்கள் சொல்லுகிறாப்போலே லலாடலிபியானது ஒருவராலும் விலக்கக்கூடாதென்கிறதினால் கர்த்தரானவர் முதலாயப்படிப்பட்ட லிபியைப் பிரமாவெழுதவேண்டாமென்று சொல்லமாட்டாரென்று அங்கீகரித்தோமானால் சகலநன்மை சொரூபமாயிருக்கிற சர்வேசுரனானவர் லலாடலிபியினுடைய அநியாயத்தை விலக்கிறதுக்கு மனசுண்டாயிருந்தாலும் விலக்கமாட்டாதிருக்கிறபோதே முடிவில்லாத பலசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் மிகவும் பலவீனராயிருக்கிறாரென்று சொன்னதுபோலே யாச்சுது.

அவ்வண்ணமே இந்த விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சத்தியமாவது மனுஷனானவன் கரையேறுகிறதுக்குச் சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் மனுஷனையுண்டாக்கின வேதியனுடைய கரையேற்றத்துக்கு வேண்டியிருக்கிற ஞானத்தை மனுஷனுக்குக்கொடுத்தாரென்று சொல்லக்கடவது. அப்படிப்பட்ட ஞானத்தினாலே பாவபுண்ணிய

மின்னதென்று மனுஷனானவன் நிச்சயம்பண்ண வல்லவனா யிருக்கிறானென்கிறதுக்குத் தப்பாது. இப்படிப்பட்ட ஞானமானது மனுஷனிடத்திலே யதார்த்தமாயிராமல் மனுஷன் கரையேறத்தக்கதாக அதுவும் பிரயோசனமாயிருக்கிறதுக்கு வேணும் வேண்டாமென்கிற சத்தியுள்ள மனசை மனுஷனுக்குத் தயாபரனான கர்த்தன் கொடுத்தாரென்று சொல்லக்கடவோம். அப்படிப்பட்ட சத்தியுள்ள மனசைக்கொண்டு மனுஷனானவன் கட்டாயம்பண்ணுகிற வலாட்டி முதலான பிரேரகணில்லாமல் பாவம் வேண்டாமென்கிறதுக்கும் அதைவாகப் புண்ணியம் வேணுமென்கிறதுக்கும் வல்லவனாயிருக்கிறானென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆனதால் புண்ணியம் பண்ணுகிறதுக்கு மனுஷனிடத்திலே யிருக்கிற பலமானது முடிவில்லாத பலமாயிராமல் மனுஷசுபாவத்துக்குத்தக்க குறையுள்ள பலமாயிருக்கக்கொள்ள மனுஷனானவன் அப்படிக்கொத்த குறையுள்ள பலமுடைத்தானவனாயிருக்கையிலே புண்ணியத்தினுடைய குறையாகிற பாவத்தை யடையலாமென்று சொல்லத்தகும். பின்னையும் மனுஷனானவனித்தப் பூமியிலே திரிகிற நாள்மட்டும் அவதியையடையாதவனா யிருக்கிறதினாலே நரகமோட்ச மென்கிற அவதியிரண்டு மடைந்தவர்களைப் போலே யாவ புண்ணியத்திலே நிலைகொண்ட மனசுள்ளவனா யிருக்கவில்லையென்று அங்கீகரிக்கவேணும். ஆனபடியினாலே மனுஷனானவனித்தப் பூமியிலே திரிகிற நாள்மட்டும் அவதியையடையாதவனுமா யவதிக்குப் போகிறவழியிலே நடக்கிறவனுமா யிருந்துகொண்டு பாவத்திலே நின்று புண்ணியத்திலே மனசுதிரும்புகிறதுக்கும் புண்ணியத்தைவிட்டுப் பாவத்திலே விழுகிறதுக்கும் வல்லவனாயிருக்கிறானென்று சொல்லவேணும். அவ்வண்ணமே பாவபுண்ணிய விஷயத்திலே கட்டாயம் பண்ணுகிற பிரேரகண் மனுஷனிடத்திலே யில்லாமல் மனுஷனானவன் புண்ணியம் பண்ணவேணுமானால் தனது குறையினாலே தனது சுவாதந்திரிய பலத்தைக்கொண்டு மெய்யான புண்ணியம் பண்ணலாமென்று அங்கீகரிக்கவேணும். அல்லது பாவம்பண்ணவேணுமானால் தனது குறையுள்ள பலத்தினாலே பாவத்திலே விழலாமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. ஆனபடியினாலே பாவபுண்ணிய விஷயத்திலே வேணும் வேண்டாமென்கிற குணமானது மனுஷனுக்குள்ள சுவாதந்திரிய மென்றங்கீகரிக்கிறதொழிய அவனவன் நிர்க்காயுசு ஆரோக்கியமுதலான போகசுகங்களை யநுபவிக்கிறதுக்கும் ராசாங்கமுதலான ஐசுவரியங்களை யநுபவிக்கிறதுக்கும் மனுஷனிடத்திலே சுவாதந்திரிய பலமானது செல்லாதென்று சொல்லிக்கொண்டு வருகிறதொழிய மற்றப்படியல்ல.

சுவாதந்திரிய விஷயத்திலே நம்மாலே சொல்லப்பட்டதுமா யெல்லாரும் அங்கீகரிக்கத்தக்கதுமா யிருக்கிற இந்த சத்தியத்தைத் தெளிவற்ற பாவிகளாயிருக்கிற சிலபேர்கள் கண்டிக்கவேணுமென்று சில அபத்தசந்தேகங்களைக் கேட்பார்கள் அதுக்கான பிரத்தியுத்தாரத்தை அறிகிறதென்கிறது கரையேறுகிறதுக்கு அவசியமாய் வேண்டியிராதிருந்தாலும் சர்வேஸ்வரனுடைய வேதத்திலே அங்கீகரிக்கப்படுகிற விசேஷமென்னப்பட்ட யாவுங்குன்றாத சத்தியமாயிருக்கிறதென்று ஒப்பிவிக்கிறதுக்கு நல்ல ஞாயங்கள் முதலான லக்ஷணங்களுண்டா யிருக்கிறபடியால் அப்படிப்பட்ட சத்தியமானது விபரீதவார்த்தைகளினாலே கண்டிக்கக்கூடுமொழிய நல்ல ஞாயங்களினாலே கண்டிக்க கூடாதென்கிறதுக்குத் தப்பாது. இது துலக்கமாய் வெளிப்படுகிறதுக்கு அவரவர்ந்த விஷயத்திலே அபத்தமாய்க் கேட்கிற சந்தேகங்களுக்கான பிரத்தியுத்தாரத்தைச் சொல்லுவோமொழிய அதை யெல்லாமறிகிறதென்கிறது கரையேறுகிறதுக் கவசியமா யறிய வேண்டி யிருக்கிறதென்று சொல்லக்கடவோமல்ல.

ஏதெனென்றால் அவனவன் அங்கீகரிக்கத்தக்க சத்தியங்களை விசுவசியாததுக்கும் விசுவாசிக்கிறதுக்கும் கிரிகை வார்த்தையினாலே பண்ணின பாவபுண்ணியத்தி னிமித்தமாக நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் அவனவனுக்கு நரகமோட்சத்தைக் கட்டளையிடுவாரொழிய இப்படிப்பட்ட விசேஷங்கள் மனுஷனானவ னறிந்ததுக்கும் அறியாததுக்குஞ் சம்பாவனையும் ஆக்கினையுங் கட்டளையிடத் தக்கதில்லையென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும்.

சிலபேர்களித்த விஷயத்திலே கேட்கிற சந்தேகமாவது பாவபுண்ணிய விஷயத்திலே தயாபரனான கர்த்தரானவர் மனுஷனுக்குச் சுவாதந்திரிய பலத்தைக் கொடுத்தருளினதுபோலே நிர்க்காயிசு இராசாங்கமுதலான பாக்கியங்களை யநுபவிக்கிறதுக் கப்படிப்பட்ட சுவாதந்திரியபலத்தை யநுக்கிரகம் பண்ணுமலேனென்று கேட்கிறார்கள்.

இதற்குப்பிரத்தி யுத்தாரமாவது பாவபுண்ணிய விஷயத்திலே நம்மாலேசொல்லப்பட்ட சுவாதந்திரிய பலமானது மனுஷன் மோக்ஷத்தை பெறுகிறதுக்கு வேண்டியிருக்கிறதினால் தயாபரனான கர்த்தரானவர் பாவபுண்ணிய விஷயத்திலே சுவாதந்திரிய பலத்தைக் கொடுத்தாரென்று சொல்லக்கடவோம். நிர்க்காயிசு இராசாங்க முதலான பாக்கியங்களை யநுபவிக்கிறதுக்குச் சுவாதந்திரிய பலமானது மனுஷன் கரையேறுகிறதுக்கும் லோகமானது கிரமமாய் நடக்கிறதுக்கும் விருத்தமா யிருக்கக்கொள்ள இப்படிப்பட்ட விஷயத்திலே மனுஷனுக்குக் கர்த்தரானவர் சுவாதந்திரிய பலத்தைக் கொடுக்கவில்லையென்று அங்கீகரிக்கக்கடவது. ஏதேதென்றால் இப்படிப்பட்ட அபத்தசந்தேகங்களைக் கேட்கிற பாவிகளானபேர்கள் பயமில்லாமல் நிரானபாவங்களைச் செய்கிறதுக்குத் நிர்க்காயிசு முதலான பாக்கியங்களை யபேட்சிக்கிறார்கள் இதிலே கர்த்தரானவர் சுவாதந்திரிய பலத்தைக் கொடுத்தாரானால் பயமில்லாமல் மனுஷனானவன் பாவஞ்செய்கிறதுக்குச் சகாயம் பண்ணினதுபோலேயாகும். இதுதவிர இப்படிப்பட்ட விஷயத்திலே கர்த்தரானவர் மனுஷனுக்குச் சுவாதந்திரியத்தைக் கொடுத்தால் மனுஷனானவன் கரையேறுகிறதுக்குக் கர்த்தரானவர் விக்கினம் பண்ணினாரென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

இதுதவிர இராசாங்கமுதலான ஐசுவரியங்களை மனுஷனென்னப்பட்ட யாவரும் அபேட்சிக்கிறபோது இந்தவிஷயத்திலே மனுஷனுக்குச் சுவாதந்திரிய பலமுண்டானால் உலகத்தினுடைய நடக்கையென்னப்பட்ட யாவும் விபரீதமாய் நடக்குமென்று கேட்கவேணுமோ. ஏதேதென்றால் எல்லாரும் இராசாக்களா யிருக்கிறதற்குச் சம்மதிப்பார்களொழிய சேவகருமாய்க் கீழ்ச்சாதியுமா யிருக்கிறதுக்குச் சம்மதியார்கள். ஆதலாலே காலில்லாமல் தலையுள்ள சரீரமானது நடவாததுபோலே கிரமமாகிற லோகமானது காலாகிற கீழ்ச்சாதியில்லாமற் பெரியவர்களாகிற தலைமாத்திர முள்ளதாயிருந்தால் அது செவ்வேநடவாதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை.

சிலர்வேறே சந்தேகத்தைக் கேட்கிறார்கள் அதாவது சர்வநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பாவபுண்ணிய விஷயத்திலே சுவாதந்திரியத்தைக் கொடாமற் புண்ணியத்திலே மாத்திரஞ் சுவாதந்திரிய பலத்தைக் கொடுத்தால் நல்லகிரமமாகும். ஏதேதென்றால் கர்த்தனுக்குமிகவும் அரோசகமாயிருக்கிற அருவருக்கத்தக்க பாவமானது லோகத்திலே பலிக்கிறதுக்குக் கர்த்தரானவர் விக்கினம் பண்ணினாரென்று சொல்லத்தகும். இதுவும் அபத்தசந்தேகமா யிருக்கிறதுக்குத் தப்பாது. ஏதேதென்றால் வேலைசெய்யவதற்குமுன்னே வேலைக்குக் கொடுக்கத்தக்க கூலியைக் கொடுக்கவேணுமென்று சொன்னோமானால் அது அக்கிரமமென்கிறதுக்குச் சந்தேகமில்லையே. அப்படியே நன்மையிலே மாத்திரஞ் சுவாதந்திரியமுள்ள மனசானது மனுஷனானவன் பண்ணத்தக்க புண்ணியமாகிற வேலைக்குக் கொடுக்கத்தக்க கூலியாயிருக்கச்செய்தே அப்படிப்பட்ட மனசு அவதியாகிறமோக்ஷத்தை யடைந்தபேர்கள் பூமியிலே பண்ணின புண்ணியங்களுக்காகத் தயாபரனான கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கத்தக்கபலனாகும். இப்படியிருக்கையிலே பூமியிலே திரிகிற மனுஷருக்கு நன்மையிலே மாத்திரஞ் சுவாதந்திரியமுள்ள மனசைக் கர்த்தரானவர் அநுக்கிரகம் பண்ணவேணுமென்று சொல்லுகிறதென்கிறது வேலைசெய்கிறதுக்கு முன்னே தெக்ஷிணையும் அவதியையடைந்தபேர்களுக்குக் கொடுக்கத்தக்க பலனையும் அவதிக்குப்போகிறவழியிலே நடக்கிறபேர்களுக்குக் கொடுக்கவேணுமென்று சொல்லுகிறதுக்கொக்கும்.

இதிலேயும் அப்பாற் சிலர் கேட்கத்தக்க சந்தேகமாவது சகலநன்மை சொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் சகலத்துக்கும் வல்லவராயிருக்கிறுரென்கிறதுக்குத் தப்பாது அப்படிப்பட்டவ சகல தர்மமுண்டாகிறதுக்குத் தலையெழுத் தெழுதாதிருந்தாலும், நன்மையிலே மாத்திரஞ் சுவாதந்திரியமுள்ள மனதை மனுஷனுக்குக் கொடாதிருந்தாலும் பாவம் லோகத்திலே வராததுக்கு வேறேயுபாயத்தைப் பண்ணித் தருமவழியிலே பிரயாசப்பட்டவர்களுக்கும் படாதவர்களுக்குங் கடைசியாய் மோக்ஷத்தைக் குடுக்கமாட்டாரே. அதேதென்றலிதுக்கான வுபாயத்தை யறியாதிருந்தால் ஞானத்திலே அவருக்குக் குறையுண்டென்று சொன்னாற்போலாச்சுது. அல்லது அதுக்கான உபாயத்தை யறிந்து அதைச்செய்யத்தக்கதாக மனசாயிருக்கவில்லையென்று சொன்னோமானால் அவருடைய தயைக்கு முடிவு கற்பித்தாப்போலேயாச்சுது. அதேதென்றால் லிப்போதிருக்கிற தயையினு மின்னமதிகமான தயை கர்த்தனிடத்திலே யிருக்கலாமென்று அங்கீகரிக்கக்கடவது. இதன்றியே யெல்லாருக்கு மோக்ஷத்தைக் கடைசியாகக் கொடுக்கிறதுக்கான வுபாயத்தையறிந்து அவர் அதைப்பண்ணுகிறதுக்கு மனசுள்ளவருமாயிருந்து அதை நிறைவேற்றுதவரானால் பலவீனராயிருக்கிறாரென்று சந்தேகப்படத்தகாதெனகிறார்கள். இந்தசந்தேகத்தைப்பார்க்கும்போது லவராட்லிபியையங்கீகரித்தாலு மங்கீகாரம் பண்ணுதிருந்தாலும் சர்வேசுரனுண்டென்று அங்கீகரிக்கிறபேர்களெல்லாரு மிப்படிப்பட்ட சந்தேகத்துக்கு மறுத்துத்தாரஞ்சொல்லக்கடவார்களொழிய லவராட்லிபியை அங்கீகாரம்பண்ணுதவர்கள் மாத்திரஞ் சொல்லுவார்களென்று சொல்லக்கடவதல்ல. அவ்வண்ணமே லோகத்திலே அதிகாரணமுமாய் லோகத்தை நடத்துகிறவருமாயிருக்கிற கர்த்தரானவருண்டென்று சம்மதித்து அவரிடத்திலே குறையில்லையென்றும் ஞாயமுள்ள கிரமத்தோடே அவர் லோகத்தை நடத்துகிறாரென்றும் அங்கீகரிக்கிறபேர்களெல்லாரு முன்சொல்லப்பட்ட சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தாரத்தைச் சொல்லவேண்டியிருக்கையிலே அந்தந்தத் தப்பறை மதங்களை யநுசரிக்கிறபேர்கள் இப்படிப்பட்ட சந்தேகநிவாரணம் பண்ணுகிறதுக்கு ஆனபிரத்தியுத்தாரத்தை யறியாதிருக்கிறதினுற் சர்வேசுரனுடைய வேதத்தை யநுசரிக்கிறபேர்களாயிருக்கிற நாமே கரையேறுகிறதுக் குரியவேண்டிய சத்தியங்களைக் கண்டுபிடிக்கிறபேர்களாயிருக்கக்கொள்ள இந்த விஷயத்திலே சந்தேகமென்னப்பட்ட யாவுக்கும் ஆன பிரத்தியுத்தாரங்களைச், சொல்லுகிறாப்போல இந்த சந்தேகத்திலேயும் போம்வழி யின்னதென்று வருகிற பாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

—*(*)*—

எ-ம். பாடம்.

லோகத்திலேயிருக்கிற பேர்களெல்லாருங் கடைசியாய்க் கரையேறுகிறதுக்குக் கர்த்தரானவர் லவாட்லிபி முதலான வுபாயங்களைக்கொண்டு மனுஷனுக்குக் கட்டாயம் பண்ணு அக்கினிமுதலான பூதியங்களையும் விருக்ஷமுதலான மிருகங்களையும் அதுகுறிக்குந் திரும்பவொட்டாமல் அப்படிப்பட்ட பொருட்கள் ஒன்றை மாத்திரம் பண்ணுகிறதுக்குக் கற்பித்தாப்போலே மனுஷன் தனது புண்ணியவிருத்திகளைப் பண்ணுகிறதுக்குக் கற்பிக்கவேணுமென்று சொன்னோமானால் இது ஞாயத்துக்குங் கிரமத்துக்கு மேற்றதாயிருக்கக்கொள்ள இப்படிப்பட்ட வுபாயத்தினுலே கர்த்தரானவர் மனுஷருடைய பிரயாசமில்லாமல் மனுஷரைக் கரையேற்றவேணுமென்று சொல்லத்தகாது. அதேதென்றால் மற்றப் பொருட்கள் தனது விருத்திகளைப் பண்ணுகிறதிலே அவைகளை நடத்துகிறாப்போலே மனுஷனை நடத்திறாற் பண்ணப்படுகிற கட்டாயத்தினுலே மனுஷனுடைய விருத்திகளுக்கு மெய்யான புண்ணியத்தின் நாமதேயமானது செல்லாதிருக்கக் கர்த்தர் பண்ணினதும் போராமல் இப்போது லோகத்தை நடத்துகிற ஞாயமுள்ள மேரையை விசாரிக்குமிடத்தில் ஞானமில்லாத பொருட்களுக்கும் ஞானமுள்ள மனுஷனுக்கு முண்டான சுபாவத்துக்குத் தக்கது இரண்டையும் நடத்துகிறதிலே வித்தியாசம் பண்ணுமல் கர்த்தரானவர் ஞாயமுள்ள [illegible] லோகத்தை நடத்துகிறுரென் றங்கீகரித்தாப்போலே யாகும். ஆனபடியினுலே கர்த்தரானவர் இந்த வுபாயத்தினுலே மனுஷரைக் கடைசியாய்க் கரையேற்றக் கடவாரல்லவென்று சொல்லக்கடவோம். இந்த வுபாயந்தவிர நன்மையிலே மாத்திரஞ் சுவாதந்திரியமுள்ள மனசைப் பூமியிலேயிருக்கிற மனுஷருக்கநுக்கிரகம் பண்ணினுல் இந்த வுபாயத்தினுலே பாவமென்னப்பட்ட யாவையும் கர்த்தரானவர் விலக்கி யெல்லாரும் பிரயாசைப்படாமலெல்லாரையுங் கரையேற்றலாமென்று சொன்னோமானுல் இந்த வுபாயமானது ஞாயத்துக்குங் கிரமத்துக்கு மேலவல்லவென்று போனபாடத்திலே பிரசிபித்தோம். அப்படிப்பட்ட ஞாயங்களினுலே அது ஆகாதவுபாயமென்று தள்ளப்பட்டாற்போலே யாச்சுது.

இவ்விரண்டுவகையுள்ள வுபாயங்கள்தவிர வேறேயொரு வுபாயத்தினுலே கர்த்தரானவர் எல்லாரும் பிரயாசைப்படாமல் பாவமென்னப்பட்ட யாவையும் விலக்கி மோக்ஷத்தை யடையப்பண்ணலாமென்று சொல்லிக்கொள்ளலாம். அதாவது கர்த்தரானவர் தாமேந்த கிருபையைப் பண்ணுகிறானுல் அவனவன் பாவத்திலே விழாதிருக்கப் பிரயாசையில்லாமல் தருமத்தைமாத்திரம் பண்ணுவானென்று குறைவில்லாத பரம ஞானத்தினுலே பார்த்துக் கொண்டிருக்கிறாரோ அந்தப் பரிபூரண கிருபையை அவனவனுக்குப் பண்ணினுல் இந்த வுபாயத்தினுலே பாவமென்னப்பட்ட யாவும் விலக்கப்பட்டு எல்லாரும் பிரயாசைப் படாமற் கரையேறுவார்களென்கிறதுக்குத் தப்பாது. இதுவும் அவருடைய முடிவில்லாத தயைக்கு யேற்றிருக்கிற தென்றங்கீகரிக்கத் தக்கதாகுமென்று காண்பிக்கிறது. ஆனால் கர்த்தரானவர் லோகத்தைநடத்திவருகிற ஞாயத்தையுங் கிரமத்தையு மறியாதபேர்களிதிலே யறியவேண்டின சத்தியத்தையறியாமல் தாங்களிட்டமுகிறதுக்கிட்டம் பண்ணிக்கொண்டு சிறிது அபத்தவிசேஷங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனபடியினுலே யிந்தசந்தேகத்திலே போம்வழி யின்னதென்று வெளிப்படுத்தக்கடவோம்.

கர்த்தரானவர் தயாபரத்தில் நிறைந்தவராயிருப்பதால் கரையேற்ற வேணுமென்றெல்லாரையு முண்டாக்கினுரென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. எல்லாரையுங் கர்த்தரானவர் கரையேற்றவேணுமென்று உண்டாக்கினபோதே தயாபரராயிருக்கக்கொள்ள அவனவன் கரையேறுகிறதுக்குப் போருமான கிருபையை அவனவனுக்குப் பண்ணவேணுமென்று திருவுளமானுர். அந்தத்திருவுளப்படியே லோகத்திலே திரிகரம

னுஷனென்னப்பட்ட யாவரும் பாவத்திலே விழாமல் தருமத்தைப் பண்ணிக் கரையேறத் தக்கதாக ஆனநல்ல விசாரங்கள் முதலான உதவிகளை யெல்லாருக்கும் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று இலவலேச சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

கர்த்தரானவர் தயாபரனாயிருக்கக் கொள்ள இந்தவுலகிலே யெல்லாருங் கரையேறுகிறதுக்கான கிருபையைப் பண்ணுகிறவர் அப்படிப்பட்ட கிருபையை யெல்லாருஞ் சட்டைபண்ணியவர் கற்பித்த நெறியைக்கடவாமல் தருமவழியிலே நடக்கவேணுமென்று முன் சொல்லப்பட்ட சுயாதந்திரியமான பலத்தையெல்லாருக்குங் கொடுத்தருளினார். அதேதென்றால் அப்படிப்பட்ட சுயாதந்திரியத்தைக் கொடாதிருந்தால் மோக்ஷத்தைத் தருமத்தினுடைய சாமர்த்தியமானது லோகத்திலே யுண்டாகமாட்டாது. இது இப்படியிருக்கையிலே மோக்ஷத்தைப் பெறுகிற தருமத்தை மனுஷரானவர்கள் பண்ணுகிறதுக்குக் கர்த்தர் கொடுத்த சுயாதந்திரியத்தினால் சிலபேர்கள் கர்த்தருடைய கிருபையைச் சட்டைபண்ணாமற் பாவத்திலே விழுகிறார்களென்று பார்த்துக்கொண்டிருக்கிறவர் முடிவில்லாத நீதிசொரூபமாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்டவர்களுக்காக்கினையிடத்திருவுளமானார். இந்தவிதமாகக் கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிறதிலே தமது திவ்விய கிருபையையும் நீதியையுங் காண்பித்தாரென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றாற் கரையேறுகிறதுக்கு அவனவனுக்குப் போருமென்னப்பட்ட உதவிகளைப் பண்ணுகிறதிலே தமது திவ்விய தயையைக் காட்டினவரப்படிப்பட்ட உதவிகளைத் தனது சுவாதந்திரிய பலத்தினாலே சட்டைபண்ணாத பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஆக்கினையிடுகிறதில் தமது அளவில்லாத நீதியைக் காட்டினாரென்கிறதுக்குத் தப்பாது. கர்த்தரானவர் நித்தநியாயமுள்ள மேரையாக லோகத்தை நடத்திக்கொண்டு வருகையிலே சகலநன்மை சொரூபமாயிருக்கிற ஆண்டவன்பேரிலே ஓரற்பகுறை யென்கிலும் ஆரோபிக்கிறதுக் கவகாசமுமில்லை. நியாயத்தையும் விசாரிக்குமிடத்திற் கர்த்தர்பேரிலே குறைப்பாடு சொல்லுகிறதுக்கு நரகத்திலே விழுந்து நரகவேதனையை யனுபவிக்கிற பாவிகள் முதலாயிடங்கொள்ள மாட்டார்கள். அதேதென்றாற் பாவிகளானபேர்கள் கர்த்தர்கையிலே வாங்கின உதவிகளைக்கொண்டு கரையேறுகிறதுக்கு வல்லவர்களாயிருந்து ஒருகட்டாயமும் பிரேரகமுமில்லாமல் தாங்களே வேணுமென்று பாவம் பண்ணி நரகத்திலே விழுந்தபடியாலே தங்களைத் தாங்கள்தானே வெறுக்கவும் நொந்திருக்கவுங் கணக்குண்டாயிருக்கிறதொழிய வேறொருத்தனை யவர்கள் வெறுக்கிறதுக்கும் நொந்திருக்கிறதுக்கும் அவகாசங்களை யாட்டாதென்று சொல்லக்கடவோம்.

இதுவிப்படியிருக்கையிலே நரகத்திலே விழுந்தபாவிகள் முதலாய்ப் பாவம்பண்ணாத படிக்குங் கரையேறுகிறதுக்கும் ஆனவுதவிகளைக் கர்த்தரானவர் தமது முடிவில்லாத ஞானத்தினாலே யறிந்திருக்கிறபோ அப்படிப்பட்ட வுதவிகளை யெல்லாருக்குங் கொடுத்தருளி யெல்லாரையுங் கரையேற்ற வொண்ணாதோவென்று சிலமூடரா யிருக்கிறபேர்கள் கேட்கிறார்கள். இதில் இடறுகிறதுக்கிடமாயிராமற் கர்த்தரானவர் நடத்துகிற தப்பில்லாத நியாயமுள்ள மேரையை யறியாதபேர்களிதிலே தத்தளியாதபடிக்கு இனிமேற்றி யுத்தாரத்தை வெளிப்படுத்தக் கடவோம்.

லோகத்தில் எல்லாத்துக்கும் நன்மையுண்டாக நடத்துகிற கர்த்தரானவர் மனுஷனுக்குதவி செய்கிறதிலே அத்தமூடரா யிருக்கிறபேர்கள் சொன்ன அடைவிலே காரியத்தை நடத்தினால் அனேக அனர்த்தங்கள் லோகத்திலே வருமென்கிறதுக்குத் தப்பாது. அதுக்கு முன்னே முதலாமனைத்தையுமவது மனுஷனுடைய சுபாவத்துக்குச் சரியாகவேற்றிருக்கிற நன்மையு மனுஷனுடைய சுபாவத்துக்கு மேலாயிருக்கிற பாக்கியமாகிற மோக்ஷத்தையும் விசாரிக்குமிடத்தி லப்படிப்பட்ட நன்மையிரண்டிக்கும் வகுலித்தியாச முண்டென்று சொல்லக்கடவோம்.

ஆனபடியினாலே அனேகரத்தைப் பார்க்குமிடத்தி லுண்டாக்கப்பட்டவானக பாவத்துக்குச் சரியாக ஏற்றிருக்கிற நன்மையானது யெல்லாருக்குஞ் சாதாரணமா யிருக்கவேணும். ஆனபடியினாலே கர்த்தரானவ ரெல்லாருக்கும் அதைக்கொடுக்கிறது கிரமமாகும் அவ்வண்ணமே தலைகாணுண்டா யிருக்கிறதும் வார்த்தை சொல்லுகிறதும் இத்தொகைப்பட்ட மனுஷசுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையானதை யவனவன் பிரயாசப்படாமல் அடைகிறது கிரமமாகும். இதெல்லாம் வெளியாகும்படிக்கு அடைவிலே நன்மையென்னப்பட்ட யாவையும் விவேசனம்பண்ணி வெளிப்படுத்தக் கடவோம்.

உண்டாக்கப்பட்ட பொருளினுடைய சுபாவசொரூபத்தை விசாரிக்குமிடத்திற் சில நன்மையானதுகள் பொருட்களுக்கு வேண்டியிருக்கும் அவ்வண்ணமே பொருளானதுக்கு அப்படிப்பட்ட நன்மையுண்டானாற் பொருளானதுக்குத் தனது சுபாவசொரூபத்தின் வகையிலே குறையில்லையென்று சொல்லப்படும். அல்லது அத்தொகைப்பட்ட நன்மை பொருளிடத்திலே யில்லாவிட்டா லனசுபாவ சொரூபத்தின் மேரையிலே பொருளுக்குக் குறையுண்டாகுமென்று சொல்லவேணும். இந்தநன்மையானது சுபாவமாகப் பொருளுக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லப்படும். அப்படியே தேகத்தின் அவயவங்களும் அதுகளுக்கான சேட்டைகளு மத்தந்தச் சேவனமது தனது சுபாவத்துக்குச் சரியான விருத்திகளைப் பண்ணுகிற தென்கிறதும் இத்தொகைப்பட்ட நன்மையின் அந்தத்திலே அடங்கியிருக்கிறதென்று சொல்லக்கடவோம்.

அவ்வண்ணமே கண் சிரசு முதலான அவயவங்களும் பஞ்சேந்திரிய சேட்டைகளும் நடக்கை வார்த்தைகளும் வளர்த்தி முதலான ஆரோக்கிய சுகங்களும் விசேஷிய விச்சனைத்தைக் காட்டுகிற நீதியாக ஆனதையும் ஆகாததையும் மதிக்கிற தென்கிறதும் ஒன்றைப் பார்த்து வேறொன்றை யூகிக்கிறதென்கிறதுஞ் சட்டாயமில்லாமல் லத்தத்தைத் வேணும் வேண்டாமென்கிற பலமானதும் பூலோகத்திலேதிரிகிற மனுஷனுக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லப்படும். ஆனபடியினாலே இத்தொகைப்பட்ட நன்மைகள் மனுஷனுக்குண்டானால் மனுஷனுடைய சுபாவசொரூபத்தின் மேரையிலே மனுஷனுக்குக் குறையில்லையென்றுஞ் சொல்லக்கடவோம். அல்லது இத்தொகைப்பட்ட நன்மைக்குள்ளே யாதொன்று மனுஷனுக்கு யில்லாவிட்டால், மனுஷனுக்குச் சுபாவமாகச் சரியான நன்மையிலே குறையுண்டென்று சொல்லவேண்டியிருக்கும்.

இத்தொகைப்பட்ட நன்மைகளுடைய அடைவையுங் கர்த்தர்லோகத்தை நடத்துகிற மேரையையும் பார்க்குமிடத்தில் வியாதி முதலான விக்கின மில்லாவிட்டால் தயாபரனான கர்த்தரானவர் மனுஷனென்னப்பட்ட யாவர்க்கும் இந்த நன்மைகளைக் கொடுத்திருக்கிறதினாலே யிந்த நன்மைகளை யவனவன் பிரயாசப்படாம லடைகிற கிரமமாகும். அப்படியே கண், சிரசு முதலான அவயவங்களைக் கொண்டிருந்து அதினுடைய சேட்டைகள் முதலான பஞ்சேந்திரியங்களுடைய கிரியைகளைப் பண்ணுகிறதும் வளர்ந்து பக்ஷணத்தினுடைய ஜீரணத்தினாலே சரீரத்தினுடைய சௌக்கியமான போஷணமும் விசேஷிய விச்சனைத்தைக் காட்டு ஆனதையும் ஆகாததையு மதிக்கிறதும் இத்தொகைப்பட்ட மற்றுமுள்ள நன்மைகளெல்லா மனுஷசுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையாயிருக்கக்கொள்ள அவைகள் மனுஷ சுபாவசொரூபத்துக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லப்படும்.

ஆனபடியினாலே அப்படிப்பட்ட நன்மைகளுக்குள்ளே யாதொன்று மனுஷனுக் கில்லாவிட்டால் தனது சுபாவசொரூபத்திலே யவனுக்குக் குறையுண்டான தென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட நன்மைகளெல்லா மனுஷனென்னப்பட்ட யாவர்க்குமுண்

டான சுபாவத்தைப் பார்த்துத் தயாபரனாயிருக்கிற கர்த்தரானவர் அவனவனுக்குக் கொடுத்தருளி வருகிறதினால் மனுஷனென்னப்பட்டயாவரும் பிரயாசப்படாமலே அவைகளையடைந்து கொண்டிருக்கிறார்களொழிய மற்றப்படியல்ல. ஆதலால் முன்சொன்னது போலே இத்தொகைப்பட்ட நன்மைகளைத் தயாபரனான கர்த்தரானவர் எல்லாருக்குங் கொடுத்தருளி வருகிறது ஞாயமுள்ள கிரமமாகும்.

இத்தொகைப்பட்ட நன்மைகள் தவிர வேறொரு வகையுள்ள நன்மையானது மனுஷனுக்குண்டென்று சொல்லவேணும். அது மனுஷசுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையாயிராமலும் அதில்லாவிட்டால் மனுஷனுக்குத் தனது சுபாவசொரூபத்திலே குறையுண்டென்று சொல்லக் கூடாமலுமிருக்கையிலே அத்தொகைப்பட்ட நன்மைகள் மனுஷனுக்குண்டாயிருந்தாலவைகளினாலே மனுஷனானவன் அலங்கரிக்கப்படுகிறானென்று சொல்லவேணும். ஆனபடியினாலே அது மனுஷனுடைய சுபாவசொரூபத்தினெல்லைக் கடவாமல் சுபாவத்தினெல்லைக்குள்ளே தானே மனுஷசுபாவத்துக்கு ஏற்றிருக்கிற சரியான நன்மையென்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே யக்ஷராப்பியாச முதலான பற்பல சாஸ்திரங்களுடைய பரிசியமும் நாநாவித வித்தைகளும் மனுஷசுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மையாயிராமலவைகளுடைய இல்லாததனத்தினிமித்தமாகச் சுபாவசொரூபத்திலே மனுஷனுக்குக் குறையாகாதிருந்தாலும் அப்படிக்கொத்த நன்மைகள் மனுஷனுக்குண்டானால் அவைகளாலே மனுஷனானவன் அலங்கரிக்கப்பட்டு மனுஷருக்குள்ளே அவன் பூச்சியனாயிருக்கிறானென்று பார்த்துக்கொண்டுவருகிறோம். இத்தொகைப்பட்ட நன்மைகள் மனுஷசுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிராதவைகளாயிருக்கக்கொள்ள மனுஷசுபாவத்துக்கு ஆதிகாரணமாயிருக்கிற கர்த்தன் மனுஷசுபாவத்தை மாத்திரம் பார்த்து அவைகளைக் கொடாமல் அவனவன் படுகிற பிரயாசை முகாந்தரமாக நீதியுள்ள கர்த்தரானவர் கொடுத்து வருகிறாரொழிய மற்றப்படியல்ல.

மனுஷனென்னப்பட்ட யாவரும் வித்தியாவிஷயத்திலே பிரயாசப்பட்டு அவைகளை யடைந்தார்களென்கிறதினாலே யப்படிப்பட்ட நன்மைகளை நீதியுள்ள கர்த்தரானவர் எல்லாருக்குங் கொடாமலிருக்கிறதென்கிறது ஞாயமுள்ள கிரமமாகும். ஆனபடியினாலே சிலபேர்களுக்குக் கர்த்தரானவரித்தொகைப்பட்ட நன்மைகளைக் கொடுத்துச் சிலபேர்களுக்குக் கொடுக்கவில்லையென்கிறதினாலே முறைப்பாடு சொல்லுகிறதுக்கவகாசங்காணமாட்டாது.

இதன்றியே யித்தொகைப்பட்ட நன்மைகளையடைகிறதற்குப் பிரயாசப்பட அவனவனுக்குப் பலமுண்டாயிருக்கையிலே வித்தியாவிஷயத்திலே பிரயாசப் பட்டவனுக்கும் படாதவனுக்குங் கர்த்தரானவர் தயாபரனாயிருக்கக்கொள்ள வித்தைமுதலான நன்மைகளைக் கொடுக்கவேணுமென்று யாதொருத்தன் சொன்னாலவனை நீதிகெட்டவனென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் இத்தொகைப்பட்ட நன்மைகளைப் பிரயாசைப் பட்டவர்களுக்கு மாத்திரங் கர்த்தரானவர் கொடுத்துவருகிறது கிரமமாயிருக்கக்கொள்ள பிரயாசப்பட்டும் படாத மனுஷனென்னப்பட்ட யாவர்க்கும் நீதியுள்ள கர்த்தர் கொடுக்கிறது அக்கிரமமென்று சொல்லப்படும். ஆனபடியினாலே மனுஷனென்னப்பட்ட யாவர்க்கும் வித்தைமுதலான நன்மைகளைத் தயாபரனான கர்த்தரானவர் கொடுக்கவேணுமென்று யாதாமொருத்தன் சொன்னால் முடிவில்லாத நீதி சொரூபமாயிருக்கிறவர் கிரமந்தப்பி லோகத்தை நடத்தவேணுமென்று சொல்லுகிறதுக்கொக்கும்.

இதுவரைக்குஞ் சொல்லப்பட்ட இந்த இரண்டுவகையுள்ள நன்மைகளைத் தவிர ஞானமுள்ள மனுஷனுக்கு வேறே யொருவகையுள்ள நன்மையுண்டென்று சொல்லக்கடவோம். அதாவது முடிவில்லாத சகல நன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தனை ஞானமுடைத்தான வெறுமனே பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து அப்படிப்பட்ட பிரத்தியக்ஷதெரிசனத்தினாலே

வெறுமனே சொல்லப்படாத ஆனந்தத்தையுந் திருப்திகொடுக்கிற சந்தோஷத்தையுமடையுமென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் சகலநன்மை சொரூபமாயிருக்கிற சருவேசுரனானவர் தாம் தமக்கு முடிவில்லாத தெளிவோடு பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறதினாலே முடிவில்லாத ஆனந்த சொரூபமாயிருக்கிறாரென்று சொல்லப்படுமாப்போலே அப்படிப்பட்ட முடிவில்லாத சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தனை ஜீவனானது பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தாலப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே ஜீவனானதனுபவிக்கிற குறையற்ற ஆனந்தத்தையுந் திருப்திகொடுக்கிற சந்தோஷத்தையுந் தேவப்பிரசாதத்தினாலே அதைச்சீவனானதனுபவிக்குமென்பதிற் சந்தேகப்படத்தகாது. இந்த நன்மையாகிற மோக்ஷமானது மனுஷனுக்குத் தேவகிருபையினாலே மேலான பாக்கியமாயிருந்தாலும் அது அவனுடைய சுபாவத்தினெல்லைக்கடந்து மனுஷசுபாவத்துக்கு மேலான பாக்கியமென்று சொல்லப்படும். ஆனபடியினாலே மனுஷசுபாவத்தினுடைய அந்தஸ்திலே யடங்கியிருக்கிற நன்மைகளுக்குள்ளே ஒருநன்மையாயிராமல் அப்படிப்பட்ட நன்மையினாலே மனுஷனானவன் மிகவுமலங்கரிக்கப்பட்டாலும் மோக்ஷமென்கிற பாக்கியமு மனுஷசுபாவத்துக்கு மிகவுமேற்றிருந்தாலும் மனுஷசுபாவத்துக் கேற்றிருக்கிற சரியான நன்மைகளுக்குள்ளே ஒரு நன்மையாயிருக்கிறதென்று சொல்லப்படாமல் உண்டாக்கப்பட்ட ஞானமுடைத்தான சுபாவத்துக்கு மிகவுமேலான நன்மையென்றும் உத்தம பாக்கியமென்றுஞ் சொல்லக்கூடுமொழிய மற்றப்படியல்ல.

ஆனபடியினாலே ஞானமுடைத்தான பொருட்களுக்கு அதுவானான நன்மையாயிருந்தாலுந் தேவகிருபையினாலே மாத்திரம் ஞானமுடைத்தான பொருளானது அப்படிப்பட்ட பாக்கியத்தை யடையலாமென்று சொல்லத்தகுமொழிய உண்டாக்கப்பட்ட ஞானமுடைத்தான பொருளென்னப்பட்டயாதுந் தனது சுபாவபெலத்தினாலே மாத்திரம் பிரயாசப்பட்டு யதை யடையலாமென்று மகாபாவமில்லாமற் சொல்லவுங்கூடாது.

இது இப்படியிருக்கையிலே உண்டாக்கப்பட்டவான சுபாவத்துக்கு மேலானதாயிருக்கிற இப்படிப்பட்ட பாக்கியத்தை யடையலாமென்று மனுஷரெல்லாரையுங் கர்த்தரானவருண்டாக்கினபோதே மனுஷசுபாவத்தைப் பாராமல் தனது முடிவில்லாத கிருபையைப் பார்த்து மனுஷரெல்லாரும் இப்படிப்பட்ட பாக்கியத்தை யடைகிறதுக்குப் பிரயாசப்படத்தக்க சத்தியாகிற சுவாதந்திரியத்தையுந் தவிசாரங்கள் முதலான எண்ணப்படாத வொத்தாசைகளையு மனுஷனென்னப்பட்ட யாவர்க்குந் தயாபரனான சருவேசுரன் கொடுத்தருளிவருகிறாரென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை.

இத்தடைவாகக் கர்த்தரானவர் மனுஷனுக்குக் கிருபை பண்ணிக்கொண்டு வருகையிலே தருமவிஷயத்திலே பிரயாசப்பட்டவனுக்கு மாத்திர மோக்ஷமாகிற மேலானபாக்கியத்தை நீதியுள்ள கர்த்தரானவர் கொடுக்கிறதென்கிறது கிரமமாயிருக்கிறதொழியப் பிரயாசப் பட்டவர்களுக்கும் படாதவர்களுக்கு மோக்ஷமென்கிற பாக்கியத்தை நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கொடுக்கிறதென்கிறது லோகத்திலே நடந்துவருகிற திவ்விய கிரமமுள்ள மேனைக்கு விருத்தமென்று சொல்லத்தகும்.

ஆனபடியினாலே கர்த்தரானவர் எல்லாருக்கு மோக்ஷத்தைக் கொடாமலிருக்கிறதினால் முறைப்பாடு சொல்லுகிறதுக்கவகாசமுண்டாயிருக்கமாட்டாது. அதேதென்றால் அக்ஷராப்பியாச முதலான சகல சாஸ்திரங்களுடைய பரிசியமும் லௌகீகவித்தைகளையும் மோக்ஷபாக்கியத்தையும் பத்தும் பத்தாயி விசாரிக்குமிடத்திலிரண்டுக்குஞ் சொல்லப்படாத வித்தியாசமுண்டென்று சொல்லக்கடவோம். அதெதென்றால் கிளிஞ்சில்முதலான உடைந்த ஓடுகளுக்கும் விலைமதியாத மாணிக்கத்துக்குமுண்டாயிருக்கிற வித்தியாசத்தைப் பார்க்கிலுஞ் சகல வித்தையினாலே வருகிற ஞானபாக்கியத்துக்கும் பராபரவஸ்து விஷயக

பிரத்தியக்ஷதெரிசனத்தினாலே வருகிற பரமஞான செல்வத்துக்கும் எண்ணப்படாத அ முண்டாயிருக்கக்கொள்ள சகலவித்தையினாலே மனுஷனுக்கு வருகிற ஞானஸ்வர்ண ஞானாலங்காரமானது மினுங்கி சிப்பியின் ஒளிவுக்குச் சமானமென்று சொல்லத்தகும். தேவ விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருகிற பரமஞானமாகிற பிரகாசமானதேயென்றால் அது மத்தியானத்திலே எரிகிற சூரியனுடைய பிரகாசத்தை யதிசெயித்திருக்கிற திவ்வியமான பரஞ்சோதியென்று சொல்லக்கடவது. இது இப்படியிருக்கையிலே காசுபெறுத சகல வித்தை ஞான அலங்காரத்தை யடையத்தக்க பிரயாசப்படத்தக்கதாக அனேக பேர்களுக்குக் கர்த்தரானவர் பெலத்தைக் கொடுத்திருக்கையிலே பிரயாசப்படுகிறவர்களுக்குமாத்திரம் வித்தை யலங்காரத்தைக் கர்த்தரானவர் வரப்பண்ணுகிற தென்கிறது பிரயாசப்படாதபேர்களுக்கு அப்படிப்பட்ட ஞானயலங்காரத்தைக் கொடாமலிருக்கிறது ஞாயமுள்ள கிரமமாயிருக்கிறதுக்குத் தப்பாது. அத்தன்மைபோலே மோக்ஷப் பிரசத்தை யடையத்தக்கதாக பிரயாசப்படுகிறதுக்கான பெலத்தை தயாபரனை கர்த்தரானவர் மனுஷனென்னப்பட்ட யாவருக்கு மனுக்கிரகம் பண்ணினபோதே அப்படிப்பட்ட மோக்ஷத்தைப் பெற்றடைகிறதுக்குத் தர்மவழியிலே நடந்து பிரயாசப்பட்ட பேர்களுக்கு நீதிபரனான கர்த்தரானவர் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தையருளுகிற தென்கிறது ஞாயமுள்ள கிரமமாயிருக்கிறதென்று ஓர்ப்பசந்தேகமும்படாமல் அங்கீகரிக்கவேணுமொழிய புண்ணியவழியின் கமனத்திலே பிரயாசப்படாத பேர்களுக்கு மோக்ஷபாக்கியத்தைக் கர்த்தரானவர் கொடுக்கவேணு மென்று சொல்லுகிற தென்கிறது அக்கிரமமென்று சொல்லக்கடவோம்.

ஆனபடியினாலே புண்ணியவழியிலே நடந்து பிரயாசப்பட்ட பேர்களுக்கும், படாதபேர்களெல்லாருக்கும் நீதியுள்ள கர்த்தரானவர் மோக்ஷபாக்கியத்தைக் கொடாமலிருக்கிறதென்கிறது அனியாயமா யிருக்கிறதென்று சொல்லக்கூடாது. மோக்ஷத்தைப்பெற்று அடைகிறதுக்குப் பிரயாசப்பட்ட புண்ணியாத்துமாக்களுக்கு மாத்திரம் மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தைக் கொடுத்தருளித் தனதிச்சையின்படியே திவ்விய கிருபையைத்தள்ளி பாவவழியிலே நடந்து புண்ணியவழியின் கமனத்திலே பிரயாசப்படாத பாவிகளுக்கு நீதிசொரூபமான கர்த்தரானவர் மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தைக் கொடாமலிருக்கிறதினாலே முறைப்பாடு சொல்லுகிறதுக்குச் சற்றாகிலுமவர்பேரிலே யவகாசங் காணமாட்டாது.

அதெப்படியென்றால் யுத்தம் பண்ணிச் சத்துருக்களைச் செயிக்கவேணுமென்று ராசாவினாலே யனுப்பப்பட்ட சேவுகர்களுக்குள்ளே ஜெயம்பண்ணினபேர்கள் மாத்திரம் ராசாவினாலே சம்பாவனை தங்களுக்கு வருமென்று ஞாயத்தின்படியே பார்த்துக் கொண்டிருப்பார்கள். பின்வாங்கி அவமானமுள்ள பேர்களோ வென்றாலவர்கள் தங்களுக்காக்கினை ராசாவினாலே வருமென்று ஞாயத்தின்படியே பார்த்துக்கொண்டிருக்கக் கடவார்களொழிய மற்றப்படியல்ல.

அம்மாறுவாதியே துற்குண முதலான பாவங்களைக் கர்த்தன் கட்டளைப்படி ஜெயித்துக்கொண்டு வருகிற புண்ணியாத்துமாக்களா யிருக்கிறபேர்கள் தங்களுக்குத் தயாபரனுயிருக்கிற கர்த்தனப்படிப்பட்ட ஜெயத்துக்கான சம்பாவனையாகிற மோக்ஷத்தை யனுக்கிரகம் பண்ணுவாரென்று ஞாயத்தின்படியே பார்த்துக்கொண்டிருக்க வேணுமொழியத் துற்குணங்கள் முதலானபாவங்களினாலே தோற்கப்பட்ட பாவிகளை நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் தங்களுக்காக்கினையிடப்போகிறாரென்று பார்த்துக்கொண்டிருக்கிறது ஞாயமாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே பாவிகளானபேர்கள் தங்களை நரகத்திலே கர்த்தரானவர் தள்ளி ஒழியாத அக்கினிவேதனையைத் தாங்களனுபவிக்கிறதுக்கு நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கட்டளையிடப்போகிறாரென்கிறதினாலே முறைப்பாடு சொல்ல அவர்களுக்கு முதலாய்ச் சற்றாகிலும் அவகாச முண்டாயிராதென்று சொல்லக்கடவோம்.

ஆனபடியினாலே மனுஷனென்னப்பட்ட யாவருக்குங் கர்த்தரானவர் கட்டாயமாய் மோக்ஷங்கொடுப்பாரென்று சில துர்மதங்களிலே சொல்லியிருக்கிறதே, அப்படிப்பட்ட பக்ஷமானது ஞாயமுள்ள கிரமத்துக்கு விரோதமா யிருக்கக்கொள்ள அது தப்பறையா யிருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். இவ்விடத்திலே மிகவுமறியவேண்டின ஒரு விசேஷமுண்டு அதை வருகிறபாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

௮-ம். பாடம்.

நீதியுள்ள கர்த்தரானவர் மோக்ஷத்தைக் கொடுக்கிறதுக்குப் போருமான பெலத்தை மனுஷனென்னப்பட்ட யாவர்க்குங் கொடுக்கிற தென்கிறது அவருடைய முடிவில்லாத தயைக்கும் நீதிக்கும் ஏற்றிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் மோக்ஷத்தைப் பெறுகிறதுக் கெல்லாருக்கும் பொதுவான பெலத்தை தயாபரனை கர்த்தர் கொடுத்தபோதே யொருவன் தனது சுவாதந்திரியத்தினாலே கர்த்தர் கொடுத்த தர்மவிசாரங்கள் முதலான வுதவிகளைக்கொண்டு கரையேறுவா னென்றும் வேறொருத்தன் கர்த்தர் பண்ணினவுதவியைச் சட்டைபண்ணாமல் தனது சுவாதந்திரியத்தினாலே பாவம்பண்ணி நரகத்திலே விழுவானென்றும் அளவில்லாத ஞானசொரூபமா யிருக்கிற சர்வேசுரனானவர் கேவலம் பார்த்துக்கொண்டிருக்கையிலே வேறொரு பிரகாரமாய்ப் பலிக்கமாட்டாது. அவ்வளவுமே வர்த்தமானமானது வருமென்று எந்தவடிவிலே கர்த்தராலே காணப்படுகிறதோ அந்தவடிவிலே வர்த்தமானம் பலிக்குமொழிய கர்த்தர் காண்கிறவகைக்கு விரோதமாய்ப் பலிக்கமாட்டாது. ஆதலாலே திவ்விய தெரிசனமானது அந்தந்தக்காரியம் வருகிறதுக்குக் கட்டாயம்பண்ணுகிற காரணமாயிருக்கிறதென்று காண்பித்தாப்போலே யாச்சுது.

இதுக்குப் பிரத்தி யுத்தரமாவது:—திவ்விய தெரிசனமானது லோகத்திலே புண்ணியபாவங்களுண்டாகிறதுக்குக் கட்டாயம் பண்ணுகிற காரணமா யிருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதெப்படியென்றால் ஒருவன் பாவபுண்ணியம் பண்ணுவா னென்கிறதினாலே அவனவன் பாவபுண்ணியம் பண்ணுவா னென்று முடிவில்லாத ஞானசொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் காண்கிறாரொழிய ஆனவர் வருங்காலத்திலே வரத்தக்க பாவபுண்ணியத்தைக் காண்கிறதினாலே லோகத்திலே திரிகிற பாவிகளும் புண்ணியவான்களும் கட்டாயமாகப் பாவபுண்ணியத்தைப் பண்ணிக்கொண்டு வருவார்களென்று சொல்லத்தகாது. அதெப்படியென்றால் மனுஷனானவன் தனது சுவேச்சையுள்ள மனசினாலே வருங்காலத்திலே பண்ணும் விருத்திகளுடைய திவ்வியதெரிசனமானது கர்த்தனுக்குண்டா யிருந்தாலும் அப்படிப்பட்ட தெரிசனமானது அவராலே மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட சுவாதந்திரியமான பலத்தைச் சற்றாகிலும் கெடுக்கவில்லை யென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே பவிஷ்ய காலத்திலே மனுஷன் பண்ணத்தக்க பாவபுண்ணியத்தைத் தனது சுவாதந்திரியத்தினாலே பண்ணுவானென்று கர்த்தரானவர் தமது முடிவில்லாத ஞானத்தினாலே பார்த்துக்கொண்டிருக்கிறாரொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே மனுஷனுடைய சுவாதந்திரியத்தினாலே கட்டாயமில்லாமற் பண்ணப்படுகிற பாவபுண்ணியமானது மனுஷனாலே அது பண்ணப்படாம லிருக்கலா மென்கிறதினாலே அப்படிப்பட்ட பாவபுண்ணியமானது லோகத்திலே வராமலிருக்கலாமென்று கர்த்தன் கூடபார்த்துக் கொண்டிருக்கிறாரொழிய மற்றப்படியல்ல.

இந்த வர்த்தமானமெல்லாம் லோகத்திலே நடக்கிற வொரு விசேஷத்தினாலே வெளியாகும். அதெப்படியென்றால் நீயொருத்தனை யடிக்கிறதையாவது நீயொருத்தனுக்குத் தானங்கொடுக்கிறதை யென்கிலும் நான் பார்த்துக்கொண்டிருக்கிற தருவாயிலே நடக்கத்தக்க வர்த்தமானமாவது, நீ பாவபுண்ணியம் பண்ணுகிறதினாலே பாவபுண்ணியத்தை நீபண்ணுகிறாயென்று நானவசியமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறேனென்று சொல்லக்கூடுமொழிய நானுன்னுடைய பாவபுண்ணியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறதினாலே நீ பாவபுண்ணியத்தைப் பண்ணுகிறாயென்று அறிகெட்டவனொருத்தனுஞ் சொல்லமாட்டானே? அத்தன்மைபோலே நீபாவபுண்ணியத்தைப் பண்ணுவா யென்கிறதினாலே உன்னுடைய பாவ

புண்ணியத்தை முடிவில்லாத ஞானமுள்ள கர்த்தரானவர் பார்த்துக்கொண்டிருக்கிறாரென்று சொல்லவேணுமொழிய இனிமேல் நீபண்ணத்தக்கப் பாவபுண்ணிய விஷயக திவ்விய தெரிசனமானது கர்த்தரிடத்திலே கேவலமா யிருக்கிறதினால் நீபாவபுண்ணியத்தைக் கட்டாயமாய்ப் பண்ணுவாயென்று சொல்லவுங் கருதவுங்கூடாது.

இது அடைவாக விளங்கும்படிக் கதியிலேயுண்டான ஒரு பரம ரகசியமுண்டு. அதேதென்றால் உண்டாக்கப்பட்ட வஸ்துவென்னப்பட்டயாவும் காலப்பிரமாணத்துக்குள்ளே யடங்கப்பட்டதாயிருந்து அப்படிப்பட்ட வஸ்துக்கள் பூர்வாபரக்கால முதலான விகாரங்களையுடைத்தானதா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட வஸ்துகளுக்குச் சென்றகாலமும் வருங்காலமு முண்டென்று சொல்லக்கூடுமென்கிறதுக்குத் தப்பாது. தானுயிருக்கிற கர்த்தரானவரோவென்றால் விகாரமென்னப்பட்டயாவும் அவரிடத்திலே யில்லாததினால் காலப்பிரமாணத்துக்குள்ளே யடங்காதவராயிருக்கிறாரென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே யவரை யுத்தேசித்து பூர்வாபரமும் போனகாலமும் வருங்காலமு முண்டாயிருக்கவில்லையென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே கர்த்தரானவருக்கு வர்த்தமான காலமாத்திர முண்டாயிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கையிலே போனகாலத்திலே நமக்குண்டாயிருந்த வர்த்தமானங்களும் வருங்காலத்திலே இனிமேல் நமக்குவரத்தக்க விசேஷங்களும் அவருடைய முடிவில்லாத ஞானத்தின் சன்னதியிலே யிருக்கிறதினால் நமக்குப்போனதையும் வரத்தக்கதையும் விசாரிக்குமிடத்தில் வர்த்தமான காலத்திலே நமக்குண்டாயிருக்கிற பொருளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோமென்கிறதுபோலே அதையெல்லாங் கர்த்தரானவர் பார்த்துக் கொண்டிருக்கிறாரென்று அங்கீகரிக்க வேணுமொழிய கர்த்தருடைய திவ்வியமான தெரிசனத்துக்குப் போனதும் வரத்தக்கது முண்டென்று சொல்லப்பட்ட விசேஷங்களை யிப்போதாம் காணாமல் முன்னே கண்டோமென்கிறதுபோலே கர்த்தன்போன விசேஷங்களை யிப்போகாணாமல் அதுகளை முன்னே கண்டாரென்றுமினிமேல் வரத்தக்க வர்த்தமானங்களைக் கர்த்தரிப்போ காணாமல் அதுகளைக் காணப் போகிறாரென்றும் அங்கீகரிக்க வொண்ணாது. இதுக்குக்காரணமேதென்றால் சகலமென்னப்பட்டதாமா யிருக்கிற கர்த்தரானவரிடத்திலே பொருளென்னப்பட்டதெல்லா முத்தமப்பிரகாரமா யுண்டாயிருக்கிறதினாற் போனகாலமும் போனகாலத்திலே யுண்டாயிருந்த வர்த்தமானங்களும் வரத்தக்ககாலமும் வருங்காலத்திலே பிறக்கத்தக்க பொருளென்னப்பட்டதெல்லா முத்தமப்பிரகாரமாக அவரிடத்திலே யிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது.

அவரிடத்திலே யிருக்கிறதெல்லா மவருக்குப் பின்னமாயிராமலவரா யிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆனபடியினாலே தாம் தம்மையறிகிறதினாலே நமக்குப்போனதையும் வரத்தக்கதையு மறிகிறாரொழியத் தமக்குப் பின்னமா யிருக்கிற வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்கள் முதலான வேறேயாதொன்றைக் கொண்டு வஸ்துக்களை யறிகிறாரென்று மகாபாவமில்லாமல் அங்கீகரிக்கப்படாது. இது இப்படி யிருக்கையிலே கர்த்தரானவர் தாம்தமக்குக் குறைவற்ற பிரகாரமாக ஆசன்னரா யிருக்கிறாரென்று நாமங்கீகரிக்கிறபோதே நமக்குப்போனதும் வரத்தக்கது முண்டாயிருக்கிற பொருளும் அவைகளைக் குறித்துப் போனதும் வரத்தக்கதுமாயிராமல் அவையெல்லா மவரிடத்திலே உத்தமப்பிரகாரமா யிருக்கிறதினால் தாம்தமக்கு ஆசன்னராயிருக்கிறாப்போலே அவருடைய திவ்விய தெரிசனத்துக்குப் பொருளென்னப்பட்டயாவும் ஆசன்னமா யிருக்கிறதென்றங்கீகரிக்கக் கடவோம். அவ்வண்ணமே நமக்குப்போனதும் வரத்தக்கதும் கர்த்தரானவருக்கு வர்த்தமானகாலத்திலுள்ள ஆசன்னமான பொருளாயிருக்கிறதென்றங்கீகரிக்கக்கடவோம்.

இதெல்லாம் இப்படியிருக்கையிலே உன்முன்பாக இப்போதொருவனாலே பண்ணப்படுகிற பாவபுண்ணியத்தை நீபார்த்துக் கொண்டிருக்கிறதினால் உன்னுடைய பார்வை யவன்பண்ணுகிற பாவ புண்ணியத்துக்குக் காரணமா யிருக்கிறதென்று சொல்லக் கூடாமல் அவன் பாவபுண்ணியம் பண்ணுகிறதினாலப்படிப்பட்ட பாவபுண்ணியத்தை நீ பார்த்துக்கொண்டிருக்கிறாயென்று சொல்லவேணுமொழிய நீ பார்த்துக்கொண்டிருக்கிறதினாலே அவன் பாவபுண்ணியம் பண்ணுகிறானென்று மதிகெட்டவனானாலுஞ் சொல்லமாட்டான். அம்மருவாதியே கர்த்தருடைய தெரிசனத்தை யுத்தேசித்து நமக்கு வரத்தக்க காரியத்தின் விஷயத்திலே சொல்லத்தக்க சத்தியமாவது, இனிமேல் நீ பண்ணத்தக்கது கர்த்தருடைய தெரிசனத்துக்கு வர்த்தமான காலத்திலுள்ள ஆசன்னமான பொருளாயிருக்கக் கொள்ள இனிமேல் நீ பண்ணும் பாவபுண்ணியத்தைப் பார்க்கும்போது அவருடைய திவ்விய தெரிசனத்தின் சன்னதியிலே பாவபுண்ணியம் பண்ணுகிற வனாயிருக்கிறாயென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே யுன்னுடைய சுவாதந்திரியத்தினாலே பாவபுண்ணியம் பண்ணுவாயென்கிறதினாற் கர்த்தரானவர் நீ பாவபுண்ணியத்தைப் பண்ணுவாயென்று பார்த்துக்கொண்டிருக்கிறாரென்று சொல்லவேணுமொழிய நீ பண்ணத்தக்க பாவபுண்ணிய விஷயக திவ்விய தெரிசனமானது நீ பாவபுண்ணியத்தைக் கட்டாயமாய்ப் பண்ணுவாயென்கிறதுக்குக் காரணமா யிருக்கிறதென்று சொல்லவும் எண்ணவுங் கூடாது.

ஆனாற் கர்த்தரானவர் வரும்பாவபுண்ணியத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறாரென்கிற விஷயத்திலே யறியவேண்டின விசேஷமாவது வரத்தக்க பாவபுண்ணியத்தைக் கர்த்தரானவர் அளவில்லாத தெளிவோடு பார்த்துக்கொண் டிருந்தாலும் பாவத்தை வெறுத்துத் தன் சித்தத்துக்கு அரோசகமானதாக அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரொழிய மற்றப்படியல்ல. பண்ணப்படத்தக்க புண்ணியமோவென்றால் அதை யங்கீகரித்து அந்தப்புண்ணியமானது வருகிறதுக்குஸ்திரமான திருவுளமுள்ளவராய்த் தம்முடைய சித்தத்துக்கு உரோசகமானதாக வரும்புண்ணியத்தை முன்சொன்னாப்போலே பார்த்துக்கொண் டிருக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது.

இதுநிமித்தமாகக் கர்த்தரானவர் வரத்தக்க புண்ணியத்தைப் பார்த்து அங்கீகரித்துத் தெரிந்துகொண்டாரென்றும் வரும்பாவத்தை யருதியாகப் பார்த்த மாத்திரத்திலே யதை வரையறுத்து நிராகரித்தாரென்றுஞ் சகலவித்தியாபாரகர்முதலான ஆசாரிய புருஷருக்கு இதேசம்மதமா யிருக்கிறவசனமென்று சொல்லப்படும்.

வரத்தக்க பாவபுண்ணிய விஷயக திவ்விய தெரிசனத்திலே யிற்றைவரைக்கும் நம்மாற் சொல்லப்பட்டதெல்லா மங்கீகரிக்கத்தக்க சத்தியபக்ஷமா யிருக்கையிலே இதுக்கப்பாற் சிலபேர்களினாலே கேட்கப்படுகிற, சந்தேகமாவது பாவவிஷயக திவ்விய தெரிசனமானது பாவத்துக்குக் காரணமாகா விட்டாலுந் தனது திவ்விய தெரிசனத்தினாலே தயாபரனான கர்த்தரானவர் வரும்பாவத்தை யறிந்து அதெல்லாம் வராதபடிக்கு விலக்கவல்லவராயிருக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. இது யிப்படியிருக்கையிலே கர்த்தரானவர் தனது தயை [illegible]ன பெலத்தினாலே பாவமென்னப் பட்டயாவும் லோகத்திலே வராதபடிக்குப் பண்[illegible]ற தென்கிறது அவருடையதயைக் கேற்றிருக்கிற தென்று காண்பிக்கிறது. அதேதென்றாற் பாவமென்னப்பட்டயாவும் வராதபடிக்கு விலக்கினால் மனுஷரென்னப்பட்ட யாவருமோக்ஷத்துக்குப் போவார்களென்கிறதுக்குத் தப்பாது.

இதுக்குப் பிரத்தியுத்தரமாவது மூன்றுவிதமாகத் தயாபரனான கர்த்தரானவர் லோகத்திலே பாவம் வராதபடிக்குப் பண்ணவல்லவரா யிருக்கிறாரென்று சொல்லத்தகும், மனுஷன் ஏவனும் வேண்டாமென்கிற சுவாதந்திரியத்தைக்கெடுத்துப் பாபம்வராதபடிக்குக் கட்டாயம் பண்ணுகிற தென்கிறது முதலாம்வகையாகும். அது முன்சொல்லப்பட்ட

ஞாயங்களினாலே யிருக்கிறவைகளைக் கர்த்தன் நடத்துகிற மேரையாயிருக்கிறதொழிய மனுஷனுடைய சுபாவத்தை விசாரிக்குமிடத்தில் அது மனுஷனை நடத்தத்தக்க மேரையாயிராது. ஆனபடியினாலே ஞாயமுள்ள கிரமத்தோடே சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவரிந்த வுபாயத்தினாலே பாவமென்னப்பட்டதெல்லாம் லோகத்திலே வராதபடிக்குப் பண்ணுகிறதென்கிறது தப்பில்லாக் கிரமமுள்ள திவ்வியநீதிக் கொத்திராதென்று சொல்லத்தகும். வேறேயுபாயத்தினாலே கர்த்தரானவர் லோகத்திலே பாவம்வராதபடிக்கு விலக்கலாமென்று சொல்லுகிறார்கள். அதாவது மனுஷனுக்குப் பாவவிசாரம் வரவொட்டாமற் பற்பல புண்ணிய விஷயத்திலேயித்திரம் வேணும்வேண்டாமென்கிற சுவாதந்திரியத்தை மனுஷனுக்குக்கொடுத்தவிந்த வுபாயத்தினாலே பாவமென்னப்பட்டயாவும் லோகத்திலே வாராமற் பண்ணலாம் வாக்குக்கும் மனசுக்கு மெட்டாததாயிருக்கிற இப்படிப்பட்ட செல்வமானது பராபரவஸ்து விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே புத்தியுடைத்தான பேர்களுக்கு வருமென்கிறதுக்குத் தப்பாது. ஆனாற் புண்ணியவழியின் கடனத்திலே மரணபரியந்தம் பிரயாசப்பட்டு மோக்ஷமாகிற அவதியை யடைந்தபேர்களுக்குத் தயாபரனை கர்த்தன் கொடுக்கத்தக்க சம்பாவனை யாகுமென்கிறதினாலே அவதியை யடையாமலிந்த லோகத்திலே திரிகிறபேர்கள் வழிப்போக்கராய் திரிகிறநாள்மட்டும் அதுவரத்தக்க பாக்கியமாயிருக்கமாட்டாது. ஆதலாலே ஞாயமுள்ள மேரைக்கு யேற்றிராதயிந்த யுபாயத்தினாலே கர்த்தரானவர் பாவமில்லாமல் விலக்கிறதென்கிறது கிரமமாயிராதென்று சொல்லக்கடவோம்.

இவ்விரண்டுவகை யுபாயந்தவிர பாவம்வராதபடிக்கு வேறேயுபாயமுமொன்றுண்டென்று சொல்லலாம். அதாவது அவதிக்குப்போகிற வழியுமாய் யுத்தத்துக்கானஸ்தலமுமாயிருக்கிற இந்தப் பூமியிலே திரிகிற மனுஷனென்னப்பட்ட யாவரும் பாவமென்னப்பட்ட நரகத்துமுட்டன்படாமல் நிர்மல புண்ணியவழியிலே நடக்கிறதுக்கு வேண்டும் வேண்டாமென்கிற சுவாதந்திரியமுள்ள மனசையும் புண்ணியவிசாரங்கள் முதலான உதவிகளையுந் தயாபரனை கர்த்தரானவர் பூமியிலே திரிகிற சகல பிரசைகளுக்குங் கொடுத்தருளுகிற தென்கிறது லோகத்திலே பாவம் வருகிறதுக்குத் தயாபரனை கர்த்தன் பண்ணத்தக்க விக்கினமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்டயுபாயமானது நீதிதயை சொரூபமாயிருக்கிற ஆண்டவராலே பண்ணப்பட்டு தென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றால் மனுஷரெல்லாருந் தனது விருத்திகளைப் பண்ணுகிறதிலே கட்டாயப்படாததுக்கு வேண்டும் வேண்டாமென்கிற பெலமான சுவாதந்திரியத்தை சகலமனுஷருக்குங் கொடுத்தார். இதுதவிர பாவமென்னப்பட்ட யாவுக்கு மனுஷனானவனுடன் படாமற் பாவமென்னப்பட்டதெல்லாந் தள்ளுகிறதுக்கு வேண்டின உதவிகளாகிற புண்ணியவிசாரங்களையும் மற்ற அனேக பிரசாதங்களையுந் தயாபரனை கர்த்தரானவர் சகலமனுஷருக்குங் கொடுத்தபோதே கர்த்தருடைய தயையினாலே அவனவன் கரையேறுகிறதுக்குப் போருமென்னப்பட்ட திவ்விய சகாயத்தை யடைந்தானென்று சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட திவ்விய சகாயத்தைக்கொண்டு மனுஷனானவன் தனது சுவாதந்திரியத்தினாலே பாவத்திலே விழாமற் புண்ணியவழியிலே நடக்கிறதுக்கு வல்லவனாயிருக்கக்கொள்ள கர்த்தரானவர் லோகத்திலே பாவம் வராததுக்கு நல்ல உபாயத்தினாலே விலக்கினாரென்று சொல்லக்கடவோம். ஆனால் மனுஷனானவன் தனது சுவிச்சையினாலே கர்த்தன் பண்ணியருளுகிற திவ்விய சகாயங்களைச் சட்டைபண்ணாமலதுகளைத் தள்ளிப்போட்டு மனுஷன் பிழைக்கிறதுக்கு வேண்டியதாயிருக்கிற சுவாதந்திரியமுள்ள மனசைக் கர்த்தரானவர் கொடுத்தாரே இப்படிப்பட்ட சுவாதந்திரியத்தினாலே மனுஷனானவன் பாவத்திலேவிழுகிறானென்று சம்மதிக்கிறதினால் லோகத்திலே பாவம்வராதபடிக்குக் கர்த்தரானவருபாயம் பண்ணுகிறதிலே மோசமாய்ப்போனாரென்றாவது செய்யத்தக்கதைச் செய்யவில்லையென்றாவது சொல்லப்படாது.

இதெல்லாம் ஒருவமையினாலே வெளியாக்கலாம். அதேதென்றால் மகாராசாவாயிருக்கிற வொருவன் தன்னாளுகையிலே யிருக்கிற பிரசைகள் பிழைக்கவேணுமென்று ஆயிரமாயிரமாயிர முவாயிரமாக அவனவன் பிழைக்கிறதுக்குப் போருமென்னப்பட்ட திரவியத்தைக் கொடுத்தான். இப்படிப்பட்ட தயையுள்ள ராசாவானவனை தனது பிரசைகளுக்குத் தயைகொடுத்தபோதே யவனவன் பிழைக்கிறதுக் கானபாயத்தைப் பண்ணினானென்று சொல்லக்கடவதொழியத் தனதுபிரசைகளை ரக்ஷிக்கிறதிலே செய்யத்தக்கதைச் செய்யாமற் குறைபண்ணினானென்று சொல்லப்படாது. இப்படியிருக்கையிலே யெல்லாருந் தாங்கள் தாங்கள் பிழைக்கிறதுக்குப் போதுமென்னப்பட்ட திரவியத்தை ராசாவின்கையிலே வாங்கினவர்களுக்குள்ளே சிலர்வியாபாரம் பண்ணித்தனுட்டியராய்ப் போய்ச்சிலர் வாங்கின திரவியத்தை யெறிந்து போட்டுக் குடிக்கக் கஞ்சியில்லாமற் செத்துப்போனார்கள். அப்படிப்பட்ட பேர்களுக்குச்சம்பவித்த வர்த்தமானத்தை விசாரிக்குமிடத்தில் தனுட்டியராய்ப் போனபேர்களுடைய பிழைப்புக்குத் தனங்கொடுத்த தயாபரனான ராசாவும் அவனவன் வியாபாரம் பண்ணுகிறதிலே பட்டபிரயாசமுங் காரணமாயிருந்ததென்று சொல்லத்தகும். தனம் வியர்த்தமாக்கி விட்டபேர்கள் பசியினாலே செத்துப்போனதுக்கு அவர்களுடைய மதியில்லாத தனமுதலான துர்க்குணங்கள் காரணமாயிருக்கிறதென்று சொல்லத்தகுமொழியப் பிழைக்கிறதுக்குப் போருமான தனங்கொடுத்த தயையுள்ளராசாவானவருடைய யோசனையானது அவர்கள் செத்ததுக் காரணமாயிருந்ததென்று மதிகெட்டவனானாலுஞ் சொல்லமாட்டான். அத்தன்மைபோல மனுஷரென்னப்பட்ட யாவருக்குந் தயாபரனான கர்த்தரானவர் கொடுத்தருளின சுவாதந்திரியமுந் தர்ம விசாரங்கள் முதலான எண்ணப்படாத சகாயங்களும் அவனவன் பிழைக்கிறதுக்குப் போருமான திரவியமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட திரவியத்தைக் கொண்டு கரையேறினவர்களுடைய பிழைப்பானது கர்த்தரானவருடைய தயையினாலேயு மவர்கள்பட்ட பிரயாசத்தினாலேயும் வந்ததென்று சொல்லவேணும் தனது சுவாதந்திரியத்தினாலே மதிகெட்ட பாவியானவன் பாவத்திலே விழுகிற தென்கிறது தான் பிழைக்கிறதுக்குக் கர்த்தன் கொடுத்த போதுமான திரவியத்தையெறிந்து போட்டதுக்குச் சமானமாயிருக்கிற தென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட பாவிதான பிழைக்கிறதுக்குப் போதுமான திரவியத்தை யெறிந்து போட்டதினால் நரகமாகிற சாகாதசாவை யடைந்ததுக்குப் பாவியினுடைய புத்தியில்லாத தனமுதலான துர்க்குணங்கள் காரணமாயிருக்கிற தென்று சொல்லக்கடவதொழிய மனுஷன் பிழைக்கிறதுக்குப் போருமான திவ்வியசகாயங்களைப் பண்ணின கர்த்தரானவர் ஒரு வன்பிரமாண மாறாலும் பாவியானவன் கெட்டுப்போனதுக் குதவிசெய்தாரென்று சொல்லவுங் கருதவுங்கூடாது.

இந்தச்சத்தியத்தை அங்கிகாரம் பண்ணுகிறதுக்கு வருங்காலத்திலே வரத்தக்க வர்த்தமான மென்னப்பட்டதெல்லாங் கர்த்தரானவர் தமது முடிவில்லாத ஞானத்தினாலே பார்த்துக்கொண்டிருக்கிறாரென்கிறது விக்கினமாயிருக்கமாட்டாது. அதேதென்றால் பாவியானவன் பாவம்பண்ணுவானென்று கர்த்தரானவர் அறிந்தாலும் முன்சொன்னதுபோல அப்படிப்பட்ட திவ்விய ஞானமானது பாவியினுடைய சுவாதந்திரிய பெலத்தைச் சற்றாகுங் குறைக்கிறதுமில்லைப் பாவியானவன் பண்ணத்தக்க பாவத்துக்கு அற்பமானாலும் அது உதவுகிற காரணமாயிருக்கிறதென்றுஞ் சொல்லப்படாது.

இதெல்லாமிப்படியிருக்கையிலே இதுக்கப்பாற் சிலர் கேட்கிற சந்தேகமாவது கர்த்தரானவ ரெல்லாரும் பிழைக்கிறதுக்குப் போருமான சகாயங்களையும் நல்லவிசாரங்கள் முதலான திவ்விய பிரசாதத்தினாலே [illegible] தையுங் கர்த்தரானவ ரெல்லாருக்குங் கொடுத்தபோதே பாவியானவன் [illegible]

விழுகிறதுக்குச் சற்றுனுலும் அவர் காரணமா யிருக்கிறாரென்று சொல்லக்கூடாதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. பின்னையும் பாவியானவன் பாவம்பண்ணுவானென்று முடிவில்லாத ஞானசுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பார்த்துக்கொண்டிருந்தாலுங் கர்த்தருடைய பரமவிஷயக தெரிசனமானது தம்முடைய சித்தத்துக்கு அசெசகமான பாவம் லோகத்திலே பலிக்கிறதுக்குச் சற்றுனுலு முயற்சிசெய்கிற தில்லையென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் வரத்தக்க பாவமானத்தைக் கர்த்தரானவர் பார்த்துக்கொண்டிருக்கிறா ரென்கிறதுக்குச் சந்தேகபடத் தேவையில்லையே அதுவராதபடிக் கவசியமாய் விலக்கிறவுபாயத்தைக் கர்த்தரானவர் அறிகிறதொழிய அறியாமலிருக்கிறதுக்கதில்லையென் சொல்லக்கடவோம். அப்படிப்பட்ட வுபாயத்தைக் கர்த்தரானவர் பண்ணித்தமக்குப் பொருந்தாத பாவத்தை விலக்காமலிருக்கிறதுக்கு ஞாயமேதென்று அறியாமற் சில பேர்களிந்த சந்தேகத்தினாலே தத்தளிக்கிறார்கள். ஆனபடியினாலே நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் தனது தப்பில்லாத பராமரிசத்தினாலே லோகத்தை ஞாயமுள்ள கிரமத்தோடே நடத்திகொண்டு வருகையிலே பாவத்துக்குச் சற்றுனுலுங் காரணமாயிராமற் பாவமென்னப்பட்ட யாவையும்விலக்கி அதுவராமலிருக்கிறதுக் குண்டாயிருக்கிற அனேகஞாயங்களுக்குள்ளே சிலதுகளைக் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்து கிறதுக்குமுன்னே யித்தொகைப்பட்ட கேள்விகளுடைய விஷயங்களுக்குள்ளே மிகவும் அறியவேண்டினவொருவிசேஷமுண்டு அது யித்தொகைப்பட்ட அபத்த சந்தேகங்களுக்குச் சாதாரணபிரத்தி யுத்தாரமாகும். அதேதென்றால் கட்டாய மில்லாமற்றனது சுயேச்சையைக் கொண் டெல்லாத்தையு முண்டாக்கிற கர்த்தரானவர் யெல்லாத்தையும் நடத்துகிற மேரையைப் பார்த்துப்பொருளை வேறே பிரகாரமா யுண்டாக்கலா மென்றும் வேறே அடைவிலே நடத்தலா மென்றுஞ் சொல்லலா மென்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே வேறே பிரகாரமாய்ப் பொருளை யுண்டாக்காமலேன் நடத்தாமலேன் என்கிறது அபத்தக் கேள்வியா யிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றால் யிந்தப்பிரகாரமாய்க் கர்த்தரானவர் பொருளை யுண்டாக்கினாலு மிந்தக்கிரமத்தோடு பொருளை நடத்தினாலு மப்போது மிப்படிப்பட்ட கேள்வி கேட்கலாமென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் அந்தறுவாயிலே கர்த்தரானவர் வஸ்துவை யுண்டாக்கி யிந்தப்பிரகாரமாய் நடத்துவானேனென்றும் வேறே பிரகாரமாய் நடத்தாமலே னென்றும் கேட்கலாமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே சகல தறுவாய்களிலேயுங் கேட்கலானதாயிருக்கிற யிந்த அபத்தக் கேள்வியைவிட்டுக் கர்த்தரானவர் பொருளையுண்டாக்கின வகையிலேயும் அதை நடத்துகிற மேரையிலேயுங் கர்த்தனுடைய நீதியுந் தயையுஞ் சாமார்த்தியமும் இது முதலான நன்மைகளும் விளங்கும் விதத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே கர்த்தரானவர் வஸ்துவை வேறே பிரகாரமா யுண்டாக்காமலே னென்கிறபோது அதை வேறே பிரகாரமா யுண்டாக்கலாமென்கிறதுக்கு ஞாயமுதலானதுகளைக் கேட்கக் கடவதல்ல. ஆதலாலே சகலத்துக்கும் வல்லவருமாய் கரை காணாத கருணைகடலுமா யிருக்கிற கர்த்தரானவர் மனுஷனை நடத்துகிறதிலே மனுஷனுடைய சுவாதந்திரியமுள்ள மனதினாலே பண்ணப்படுகிற பாவமென்னப்பட்ட யாவையுஞ் சகல வுபாயங்களினாலேயும் வரப்பண்ணாமலிருக்கிறதுக்கு வுண்டாயிருக்கிற ஞாயங்களை விசாரித்து அவைகள் பாவம் வரப்பண்ணாமலிருக்கிறதுக்கு ஆனஞாயங்களென்று கண்டுபிடிக்கக்கடவோம். அப்படிப்பட்ட அனேக ஞாயங்களுக்குள்ளே சில ஞாயங்களை மாத்திரங் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்துவோம்.

அவைகளுக்குள்ளே முதலாம் ஞாயமாவது பொருளென்னப்பட்ட யாவையுங் கர்த்தரானவ ருண்டாக்கித் தப்பில்லாத கிரமத்தோடெல்லாத்தையும் நடத்துகிறவரா யிருக்கக்கொள்ள அவர்நடத்துகிறதிலே யெப்போதுமுள்ள மேரையைவிசாரிக்குமிடத்தில் அந்தப் பொருளினுடைய சுபாவத்தையும் பொருளான திருக்கிற அந்தஸ்தையும் பார்த்துப் பொருளி

னுடைய சுபாவத்துக்கும் அந்தஸ்துக்குமான விதமாகப்பொருளை நடத்துகிறாரொழிய மற்றப்படியல்ல. இந்தடைவிலே சுடுகிறதென்கிறது அக்கினிக்குச் சுபாவமா யிருக்கக்கொள்ளச் சில முறை கர்த்தரானவர் தனது திருவுளப்படியே யொரு அற்புதம் பண்ணவேணுமென்று அக்கினியானது சுடாமற் சீதளத்துக்குக் காரணமாயிருக்க அவர்பண்ணுகிறதுக்கு வல்லவராயிருந்தாலுங் கர்த்தரானவர் அக்கினியை நடத்துகிறதிலே யெப்போதுமுள்ள வகையை விசாரிக்கும்போது அக்கினியானது சுடாமலிருக்கத்தக்கதாக யெப்போதும் விலக்கிறதென்கிறது கர்த்தரானவரெல்லாத்தையும் நடத்துகிற மேரைக்கேற்றதாகாது. பின்னையு மக்கினியானது தண்ணீரினாலே யணைந்து போகிறதுக்குப் பாத்திரமாயிருக்கையிலே நரக அக்கினியை நடத்துகிறதினாலே தண்ணீரினாலே ஜெயிக்கவும் அணைக்கவும் படாமலிருக்கப் பண்ணுகிறதென்கிறது கர்த்தரானவ ரக்கினியை நடத்துகிறதிலெப்போதுமுள்ள மேரைக்கொவ்வாது. இந்தடைவிலே மற்றவஸ்துக்க ளென்னப்பட்ட யாவிலும் யோசிக்கக்கடவோம். அவ்வண்ணமே பொருளானது தனது சுபாவத்தின்படியே நாச முதலான குறைவையும் பழுதையுமடைகிறதுக்குப் பாத்திரமா யிருந்தா லப்படிப்பட்ட பொருளான தொருவிடத்திலே யாகிலும் பழுதையடையாமற் கர்த்தன் பண்ணுகிறதுக்குத் திருவுளமா யிருக்கவில்லையென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட திருவுளமானது குறையற்ற ஞாயமுமாய்த் தப்பில்லாக் கிரமமுமா யிருக்கிறதென்று சொல்லக்கூடுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் நாச முதலான குறைகளையும் பழுதுகளையு மடைகிறதுக்கு ஆன சுபாவத்தைப் பொருளானது கொண்டிருக்கிறபோது ஒரு விடத்திலேயாகிலும் அது பழுதை யடையாமலிருக்கக் கர்த்தரானவர்பண்ணி அப்படிப்பட்ட பொருள்களுக் கெங்குங் குறை வராதபடிக்கு விலக்கிவந்தா லந்தப் பொருளிடத்திலே யப்படிப்பட்ட சுபாவமுண்டென்று கண்டுபிடிக்கிறதுக்கு யிடமில்லாம லிருக்கிறதுந் தவிரப் பொருள்களுக்குண்டான சுபாவத்துக்குத் தக்கவிதமாக வொருயிடத்திலேயாகிலுங் கர்த்தரானவர் பொருளை நடத்தவில்லையென்று சொல்லத்தகும். இதன்றியே கர்த்தரானவர் லோகத்தை யெப்போதும் நடத்துகிற மேரையைப் பத்தும் மொத்தாய் விசாரிக்கிறபோது ஞாயமுள்ள கிரமமாயிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கையிலே இது தானே வேறே மேரையாகக் கர்த்தரானவர் நடத்தாமலிருக்கிறதுக்குப் பரிபூரண ஞாயமாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கக் கடவோம். ஆனால் கர்த்தரானவர் லோகத்திலே பாவமென்னப்பட்ட யாவையும் விலக்காமலிருக்கிற தென்கிறது பாவத்தை யுண்டாக்கிறவனுடைய சுபாவத்துக்கு யேற்றிருக்குமென்று இந்த ஞாயத்தினாலே யெப்படி யொப்புவிக்கப் படுமென்று வருகிறபாடத்திலேயப்பச் சொல்லக்கடவோம்.

௯-ம். பாடம்.

உண்டாக்கப்படலான வஸ்துவென்னப்பட்ட யாவுந் சர்வேசுரனைப்போலே நன்மை சொரூபமாயிராமல் நன்மையிலே புத்தியுடையதுமாய்ச் சுவாதந்திரிய மனசுடைத்துமாயிருந்தால் நன்மையிலே அவதியையடையாத அப்படிப்பட்ட வஸ்துவின் சுபாவத்துக்கு விரோதிக்கிறபடியினாலே தனது சுவாதந்திரியத்தினாலே திவ்விய கிருபையைக் கொண்டு நன்மையிலே நிற்க வல்லதாயிருக்குமாப்போலே தனது சுவாதந்திரியத்தினாலே நன்மையிலே நின்று தப்பி நன்மையின் குறைவை யடைகிறதற்கு வல்லதாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆகையினாலே புத்தி யுடைத்தான பொருளானது தனது சுவாதந்திரியத்தினாலே நன்மையை விடாமல் நன்மையிலே யிருந்து நல்லபொருளென்று பெயர் பெற்றுக்கொள்ளுகிறதுப் போலேதனது சுவாதந்திரியத்தினாலே தானும் நன்மையைவிட்டு நன்மையின்குறையை யடையலாமென்கிறதற்கும் நன்மையிலே குறையுள்ளதாய்ப் பொல்லாவஸ்துவென்னப் படலாமென்கிறதுக்குந் தப்பாது. அவ்வண்ணமே யிறைவனாக்கும் நம்மாற்சொல்லப்பட்டதை விசாரிக்குமிடத்தில் வஸ்துவுடைய குறையென்னப் பட்டதெல்லா மிரண்டுவகைக்குள்ளே யடங்குமென்று சொல்லலாம். அதின் நாசமுதலான பழுதுகளானவைகள் ஆகுதலுக்கடுத்த குறையென்று சொல்லத்தகும். ஞாயமில்லாத தனமாகிற பழுதோவென்றால் பாவமென்னவும் ஆசாரிக்க குறையென்றுஞ் சொல்லக்கடவோம். இதெல்லா மித்தனையாக யிருக்கையிலே பாவமாகிற குறையையெங்குங் கர்த்தரானவர் விலக்காமலிருக்கிறதுக்கு முந்தின ஞாயமாவது ஆகுதலுக்கடுத்தகுறை யடைகிறதுக்குப் பாத்திரமாயிருக்கிற பொருளைக் கர்த்தரானவர் பார்த்து அதுக்குக் குறைவராதபடிக்குக் கர்த்தரானவர் விலக்க வல்லவராயிருந்தாலும் அப்படிப்பட்ட வஸ்துவுக்கு ஒருவிடத்திலே யாதொரும் பழுதுவராத படிக்குக் கர்த்தரானவர் விலக்கிவந்தா லப்படிப்பட்ட பொருள்களினுடைய சுபாவத்துக்கு ஒத்தபடியாகக் கர்த்தரானவர் நடத்தவில்லையென்று சொல்லத்தகுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அத்தன்மைபோலப் புத்தியுடைத்தானது மாயச் சுவாதந்திரிய மனசுடைத்துமாயிருக்கிற பொருளானது ஆசாரிக்க குறையாகிற பாவத்தை யடையலாமென்கிற சுபாவத்தைக் கொண்டிருக்கையிலே யப்படிப்பட்ட பொருளான தொருவிடத்திலே யாதொரும் ஆசாரிக்க குறையாகிற பாவத்தை யடையாதபடிக்குக் கர்த்தரானவரெப்போதும் விலக்கிவந்தால் புத்தியுடைத்தான பொருளானது ஆசாரிக்க குறையாகிற பாவத்தை யடையலாமென்கிற சுபாவத்தைக் கொண்டிருக்கிறதென்று கண்டுபிடிக்கிறதுக் கிடமில்லாமற் போகவேணும். ஆனபடியினாலே புத்தியுடைத்தான பொருளினுடைய சாதிக்குள்ளே யடங்கியிருக்கிற வியத்திகளென்னப்பட்ட யாவுக்கு மாசாரிக்க குறையாகிற பாவம் வராதபடிக்குக் கர்த்தரானவர் விலக்கிவந்தால் புத்தியுடைத்தான பொருளினுடைய சாதியானது ஒருவிடத்திலே யாதொரு மொருவிஷயத்திலே யென்கிலுங் குறையாகிற பாவத்தையடையாத போது அதுண்டாக்கப்பட்ட வஸ்துவாயிருந்தாலுந்தானுயிருக்கிற சகலநன்மை சொரூபமான கர்த்தனைப் போலே நன்மையைவிடப் பிரிந்து நன்மையிலேநின்று தாழவும் நன்மையினுடைய குறைவை யடையவு மாட்டாதென்கிற முழுத்தப்பறையை யங்கீகரிக்கிறதுக் கொருவிதமாக அவகாசமும் ஞாயமுங் காணப்பட்டிருக்குமாப்போலேயாகும்.

அப்படியே புத்தியுடைத்தான வஸ்துவினிடத்திலே இம்மாத்திரம். நன்மையினுடைய ஸ்திரமான துண்டென்று யோசிக்கிறதுக்குக் குறையற்ற ஞாயமுமவகாசமுமில்லாமலிருந்தாலும் பாவவிசாரம் வரக்கூடாதென்கிற மகிமையுள்ள விசேஷமும் பாவத்திலே விழமாட்டா தென்கிற பலத்தினுடைய ஆதிக்கமும் புத்தியுடைத்தான பொருளினுடைய சுபாவத்துக்கு மேலான நன்மையா யிராமலந்தப் புத்தியுடைத்தான பொ

ருளினுடைய சுபாவத்துக்குண்டா யிருக்கிற சரியான நன்மைகளுக்குள்ளே பாவத்திலே விழாதிருக்கிற நன்மையான தொன்றாயிருக்கிற நன்மையென்று சொல்லவேண்டியிருக்கும். அதெப்படியென்றால் பஞ்சேந்திரியமுதலான விருத்திகளானவை மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் உண்டாயிருக்கிறதினால் அப்படிப்பட்ட விருத்திகளானது மனுஷருடைய சுபாவத்துக்கு மேலானதா யிராமல் மனுஷசுபாவத்துக்குச் சரியான நன்மையென்று சொல்லப்படுமாப்போலே பாவவிசாரம் வரமாட்டாதென்கிற விசேஷ மகிமையும் பாவத்திலே விழமாட்டா தென்கிற பலத்தினாதிக்கமும் புத்தியுடைத்தான பொருள்களுக்குள்ளே எல்லாத்துக்கு முண்டென்று கண்டோமானாற் சுபாவத்துக்குச் சரியான மற்ற நன்மைகளுக்குள்ளே யிதுவு மொன்றென்று யிப்படி யோசிக்கிறதுக் கடங்கிக்கப்பட்டதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

இந்த ஞாயத்தை யித்தனையிலே நடத்தக்கடவோம். சாதிக்குள்ளே யடங்கியிருக்கிற சகல வியத்திகளுக்குந் தப்பில்லாம லுண்டாயிருக்கிற நற்குணமென்னப்பட்டதெல்லாஞ் சாதியினுடைய சுபாவத்துக்கு மேலானநன்மையா யிராமற் சுபாவத்துக்குவரத்தக்க சரியான நன்மையென்று சொல்லப்படும். புத்தியுடைத்தான சாதிக்குள்ளே யடங்கியிருக்கிற சகல வியத்திகளுக்கும் பாவத்திலே விழமாட்டாத நல்ல குணமானது தப்பில்லாம லுண்டாயிருக்கிறதென்று சொன்னோமானால் பாவத்திலே விழமாட்டாத நல்லகுணமானது புத்தியுடைத்தான பொருளின் சுபாவத்துக்கு மேலான செல்வமாயிராமற் சுபாவத்துக்கு வரத்தக்க சரியான நன்மைகளுக்குள்ளே பாவமில்லாத தன மொருநன்மையா யிருக்கிறதென்று சொல்லக் கடவோம். அதேதென்றாற் பொருளின்சுபாவத்துக்கு வரத்தக்க நன்மைகளிலே யுண்டாயிருக்கிற அடைவானது பாவம்வரமாட்டாதென்கிற நல்லகுணத்திலே காணப்படுகிறதினாலே மற்ற நன்மைகளுக்கும் பாவமில்லாத தனத்துக்கும் வித்தியாசந்துலக்கமாய்க் காணபியாது. வித்தியாசங் காணப்படாதபோதே பொருளின் சுபாவத்தை யுத்தேசித்துப் பாவத்திலே விழமாட்டாத நல்லகுணமு மற்ற நன்மைகளு மொரேதன்மையிலே யிருக்கிறதென்று யோசிக்கிறதுக் கிடமுண்டா யிருக்கிறதென்று சொல்லலாம். இப்படிப்பட்ட தப்பறை விசேஷத்தை அங்கீகரிக்கிறதுக் கிடமிருக்க வொண்ணாதென்று கர்த்தரானவர் திருவுளமானதென்கிறதினாற் புத்தியுடைத்தான சனமானது பாவத்திலே விழாதபடிக்குப் போதுமான திவ்விய சகாயத்தையுஞ் சுவாதந்திரிய பலத்தையும் புத்தியுடைத்தான சனத்துக்குக் கொடுத்தருளிப் புத்தியுடைத்தான சனமானது தனது சுவாதந்திரிய பலத்தினாலே குறையாகிற பாவத்திலே விழாதவண்ணஞ் சகல வுபாயங்களினாலே கர்த்தன் விலக்காததுக்கு அதே ஞாயமென்று கண்டுபிடிக்கத் தக்கதாகும்.

அவ்வண்ணமே சகலத்தையுங் கிரமத்தோடே நடத்துகிறவருமாய்ச் சகல நன்மை சொரூபமானவருமாயிருக்கிற கர்த்தரானவர் தமக்குமிகவும் பொருந்தாத பாவமாகிற பொல்லாப்பைப் புத்தியுடைத்தான சனமானது தனது சுவாதந்திரியத்தினாலே ஒருக்காலும் பண்ணாதபடிக்கு முழுதும் விலக்காம லிருக்கிற தென்கிற திவ்விய பரம ரகசியமானது கிரமத்துக் கொத்திருக்கிறதென்கிறதொன்றை யொருநியாயத்தினாலே ருசுப்பிக்கப்பட்டாப்போலே யாச்சுது. அதேதென்றால் ஆகுதலுக் கடுத்த நாச முதலான குறைகளை யடைகிறதுக்குப் பாத்திரமா யிருக்கிற பொருளை யப்படிப்பட்ட நாச முதலான குறைகளை யடையப் பண்ணுகிறதென்கிறதிலே யவருடைய திருவுளமானது ஞாயமுள்ள கிரமத்துக் கேற்றிருக்குமென்று சொல்லவேணும். அப்படியே பொருளினுடைய சுபாவ சொரூபத்துக்குத் தக்க மேரையாகப் பொருளை நடத்துகிறதொழிய மற்றப்படியல்ல. அத்தன்மையைப்போலச் சுவாதந்திரியமுள்ள சனமானது பாவமாகிற குறையிலே தனது சுவாதந்திரியத்தினாலே விழலாமென்கிற சுபாவத்தை யடைத்தானதா யிருக்கிறபோதே கர்த்தரானவர் அப்படிப்பட்ட

பொருளானது பாவத்திலே விழாதபடிக்கு முழுதும் விலக்காமலிருக்கையிலே அப்படிப்பட்ட பொருளினுடைய சுபாவத்துக்கு விருத்தமான மேரையாய் நடத்தினுரென்று சொல்லக் கூடாது. ஆனபடியினாலே யநியாயம் பண்ணினுரென்றும் புத்தியுடைத்தான பொருளை கிரமந்தப்பி நடத்தினுரென்றுஞ் சொல்லுகிறதுக்கு அவகாசங் காணமாட்டாது. இந்த விஷயத்திலே மிகவும் பராமரிசிக்கத்தக்க விசேஷமாவது நாச முதலான குறைகள் ஈசுரத்துக்கு விருத்தமா யிராததினு லப்படிப்பட்ட குறைகள் ஆண்டவனுடைய திருவுளத்துக் கேற்றிருக்கும். ஆனபடியினாலே பொருளானதை நாச முதலான குறைகளை கர்த்தரானவ ரனுமதிப்பண்ணுகிறாரென்று சொல்லவேணும். ஆசரிக்க குறையாகிற பாவமோவென்றால் சுப நன்மை சொருபமாயிருக்கிற கர்த்தரானவருக்கு மிகவும் அது விரோதமா யிருக்கக்கொண்டு அப்படிப்பட்ட குறையாகிற பாவத்தைப் புத்தியுடைத்தான சனமானது அடையாதபடிக்குப் போதுமென்னப்பட்ட திவ்விய சகாயங்களைப் புத்தியுடைத்தான சனமானதுக்கு கர்த்தன் கொடுத்தானென்கிறதினால் பாவத்திலே விழாதபடிக்குத் திவ்விய சகாயங்களைக் கொண்டிருக்கிற சனமானது பாவமாகிற குறையிலே விழுகிறதென்றால் கர்த்தனுடைய திருவுளத்துக் கேற்றிராதென்று சொல்லக்கடவோம்.

ஆனால் பாவத்திலே விழாதபடிக்குத் திவ்விய சகாயத்தைக் கொண்டிருக்கிற சனமானது தனது சுவாதந்திரியத்தினாலே பாவத்திலே விழுவேனென்று சொல்லி விழுகையிலே கர்த்தரானவர் தமக்கு மிகவும் அரோசகமா யிருக்கிற பாவமாகிற குறையிலே அப்படிப்பட்ட சனமானது விழாதபடிக்குச் சகல உபாயங்களினாலே யவர்விலக்கக் கடமைக்கில்லை. ஆதலாலே கர்த்தரானவர் தமக்கு அரோசகமான பாவமாகிற குறையிலே சுவாதந்திரியமுள்ள சனமானது விழுவேனென்று சொல்லுகிறபோது அதைக் கர்த்தன் விலக்காமலிருக்கிறது சனத்தினுடைய சுபாவத்துக்குத்தக்கதா யிருக்கிறதுந்தவிரக் குறையற்ற திவ்விய நீதிக்கு யேற்றிருக்கிற ஆக்கினையா யிருக்கிறதுக்குச் சந்தேகப்பட [illegible] இல்லை. இது முதலாம் ஞாயமாகும்.

சொல்லப்பட்ட இரண்டாம் ஞாயமாவது அந்தந்தப் பொருளினுடைய சாதிகுண்டான சுபாவத்துக்குமேலான செல்வமானது சாதிகளுடைய சகல வியத்திகளிடத்திலே காணுதிருக்கிற தென்கிறது கிரமமாகும். ஆனபடியினாலே பாவமில்லாத தனமாகிற மகிமையுள்ள நன்மையானது உண்டாக்கப்படலான பொருளின் சுபாவத்துக்குமேலான பாக்கியமாயிருக்கக் கொள்ள பொருளின் சுபாவத்துக்குச் சரியான நன்மைகளைப்போலே சகல வியத்திகளிடத்திலே அது கிடையாம லிருக்கிறதென்கிறது கிரமமாகும் அவ்வண்ணமே திவ்விய கிருபையினாலே சிலபேர்களிடத்திலே பாவமில்லாத தனமுண்டாயிருக்கிற தென்கிறதுஞ் சனத்தினுடைய துற்பலத்தினாலே சிலவிடங்களிலே அப்படிப்பட்ட செல்வமானது காணுமலிருக்கிற தென்கிறதுந் திவ்விய தயைக்கும் பொருளினுடைய துற்பலமுள்ள சுபாவத்துக்கு மொத்திருக்கிற மேரையா யிருக்கிறதென்று சொல்லத்தகும். இந்த ஞாயங்கள் தவிரக் கர்த்தரானவர் சனத்தினுடைய சுவாதந்திரியத்தினாலே வருகிற பாவமென்னப்பட்ட யாவையும் விலகாமலிருக்கிற தென்கிறது ஞாயமுள்ள கிரமத்துக் கேற்றிருக்கிறதென்று வேறே ஞாயத்தினா லொப்புவிக்கலாம். அதாவது பாவமில்லாத தனத்தைப் பூமியிலே திரிகிறபேர்க ளெல்லாருக்குங் கர்த்தரானவர் கொடுத்தருளினால் மூன்று அனர்த்தங்கள் வரும்போலே காண்பிக்கிறது. அதேதென்றால் கண் மூக்கு இது முதலானதுக ளெல்லாருக்கு மிருக்கும்போலே பாவமில்லாத் தனமெல்லாருக்கு முண்டானாற் கர்த்தனெல்லாருக்குங் கொடுத்திருக்கிற கண் மூக்கிது முதலான நன்மைகளை யெண்ணுகிறப்பிலே பாவமில்லாத தன மென்கிற பாக்கியத்தையு மெல்லாரு மெண்ணுவார்களென்று சொல்லத்தகும். அப்படியே பாவமில்லாத தனமாகிற மகா பாக்

யத்தைக் கனமாயெண்ணாமல் மனுஷர் தங்களுக்கு அதைக் கர்த்தன் கொடுத்தருளினதினால் [illegible] ஸ்தோத்திரம் பண்ணுர்கள். ஆகையினாலே பாவமென்கிற குறையை யடையமாட்டாதபேர்கள் நன்றியறியாத் தன மென்கிற குறையை யடைந்தார்களென்று சொல்லவேண்டியிருக்கும். இதன்றியே யிப்படிக்கொத்த நன்மையானது எல்லாருக்கு முண்டான அது வொருத்தனுக்கானாலு மில்லாமலிருக்கையிலே அவனவன் அதைப் போக்கடிக்கு மென்கிற விசாரத்துக் கிடமில்லாதேபோம். இப்படிப்பட்ட விசாரத்துக் கவகாசமில்லாதபோதே அவனவன் அதைப் போக்கடிக்கலா மென்கிறதுக்குப் பயப்படாமற் சாவதானமா நடக்கிறதெப்படி? அவ்வண்ணமே பூமியாகிற ரணஸ்தலத்திலே பயமுஞ் சாக்கிரதையு மில்லாமல் திரியலாமென்று சொல்லத்தகும்.

அதேதென்றாற் பாவமென்னப்பட்ட யாவும் வராதபடிக்குக் கர்த்தரானவர் விலக்கவேண்டி வருகிறதென் றறிந்தோமானாற் பாவமில்லாத தனத்தோடே கூடியிருக்கிற தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கலா மென்று பயப்படுகிறதுக்குக் கனக்கிறது? பாவமில்லாத தனத்தைத் தன்னிடத்திலே மரணபரியந்தம் நீளிக்கப் பண்ணுகிறதுக்கு மகா பிரயாசிக்கையாய் அவனவன் கடக்கிறதுக் குண்டாயிருக்கிற கடனேது. இது தவிரப் பாவமில்லாத தன மெல்லாருக்கும் அவசியமாய்த் தப்பாமலிருக்கு மென்றிந்தோமானால் இப்படிக்கொத்த பாவமில்லாத தனமாகிற பாக்கியமானது போகாதபடிக்குக் கர்த்தனை மிகவும் பிரார்த்திக்கிறவர்களார். இவைகளெல்லாத்துக்கு மொரு பிரத்தியுத்தரத்தைச் சிலர் சொல்லுகிறுர்கள். அதாவது யிந்த அனர்த்தங்களெல்லாம் வராதபடிக்குக் கர்த்தரானவர் கூட விலக்குவாரென்று சொன்னோமானால் தோஷமென்ன. இந்தப் பிரத்தியுத்தரமானது ஞாயமுள்ள கிரமத்துக் கொத்துவராதென்று கண்டுபிடிக்கலாம். அதேதென்றாற் பாவமில்லாத தனமாகிற குறையற்ற செல்வத்தைக் கர்த்தரானவர் சிலபேர்களிடத்திலே சொல்லப்பட்ட அனர்த்தங்கள் வராதபடிக்குத் தனது பிரத்தியக்ஷ [illegible] செல்வத்தினாலே விலக்கவேணும், இது அவசியாயிருக்கக்கொள்ள அவனவை அடையாத வழிபோக்கருக்குக் கர்த்தன் அதைக் கொடுக்கிற தென்கிறது கிரமமாயிராது. அல்லது யிப்படிப்பட்ட அனர்த்தங்கள் வராதபடிக்கு வேறே மகாமகாப்பட்ட வரப்பிரசாதங்களினாலே கர்த்தனொருவிடத்திலே விலக்கினாற்போலே யெங்கும் விலக்குவாரென்று சொன்னோமானால் அது ஞாயமுள்ள கிரமத்துக்கு யேற்றிராது. அதேதென்றால் உண்டாக்கப்படலான சகல ஜனங்களுக்குள்ளே ஒரு ஜனத்தை மாத்திரம் தயாபரனான கர்த்தனுயர்த்தி அப்படிப்பட்ட ஜனத்தை யவர்வைத்த அந்தஸ்தைப் பார்த்து வுண்டாக்கப்படலான பொருளானது யதைக் காட்டிலு முன்னதமான அந்தஸ்திலேற மாட்டாதிருக்கச் செய்தே இப்படிப்பட்ட அந்தஸ்திலே யிருக்கிற ஜனத்துக்குக் கர்த்தன் கொடுத்த பாவமில்லாத தன முதலான மகாமகாப்பட்ட வரப்பிரசாதங்களை எல்லாருக்கும் கைகால் முதலான அவையவங்களைக் கொடுத்தாற்போலே அந்த வரப்பிரசாதங்களையுங் கொடுக்கிறதென்கிறது கிரமத்துக் கொக்குமோவாதென்று புத்திமானு யிருக்கிறவன் பரிச்சேதம் பண்ணக்கடவான். இதன்றியே அந்தகார மொருவிடத்திலே யுண்டாயிருந்தால் வேறொருவிடத்திலே யுண்டான பிரகாசமதிகமாக விளங்கும். அத்தன்மைபோலப் பாவமாகிற அந்த காருமானது வொருயிடத்திலே மூடியிருக்கிறதுக்கு நீதியுள்ள கர்த்தரானவர் அநேக ஞாயங்களினாலே விலக்காமலிருக்கையிலே வேறொருயிடத்திலே பாவமில்லாத தனமாகிற பிரகாசத்தை யதிகமாக அவரதினாலே விளங்கப்பண்ணினாற்போலே யாச்சுது.

இந்தவிடையிலே கர்த்தனுடைய கிருபையானது மிகவும் விளங்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றாற் கால் தலை முதலான நன்மைக ளெல்லாருக்குங் கர்த்தரானவர் கொடுக்கிறாப்போலே பாவமில்லாத தனத்தையு மெல்லாருக்குங் கொடுத்தாரா

னால் மற்ற நன்மைகளைக் கொடுத்ததிலே திவ்வியமான கிருபையானது விளங்குமாப்போல பாவமில்லாத தனத்தைக்கொடுக்கிற விஷயத்திலே திவ்விய கிருபையானது சரியாய் விளங்குமொழிய மற்றப்படியல்ல. கடைசியாய்க் கர்த்தரானவர் பாவமென்னப்பட்டவைகளை விலக்கினால் மகாமகாப்பட்ட நன்மை லோகத்திலே யிராதபடிக்குப் பண்ணினவரென்று சொல்லவேணும். அதேதெனென்றால் வசவு முதலான பொல்லாதவார்த்தைகள் லோகத்திலே யில்லாதபடிக்குக் கர்த்தரானவர் பண்ணினாரானாற் பொறுமையென்கிற தர்மமானது எப்படியுண்டாகும்? ஆனபடியினாலே முன்னே சொல்லப்பட்ட பொல்லாப்புக்களைக் கர்த்தரானவர் விலக்கினாரானால் சொல்லப்பட்ட தர்மமானது லோகத்திலே யில்லாமற் செய்யவேணுமென்கிறதுக்குத் தப்பாது. சத்தியத்தின்பேரிலே பகையுள்ளவர்கள் சத்தியத்தை அநுசரிக்கிற புண்ணியவான்களை உபாதிக்கிறார்களே அந்தப் பாவமானதில்லாதபடிக்குக் கர்த்தரானவர் விலக்கினாற் கர்த்தனிமித்தமாகப் பாடுபடுகிற புண்ணியமானது லோகத்திலே இல்லாதிருக்கவேணும். ஆனபடியினாலே சர்வேசுரனிமித்தமாகப் பாடுபடுகிறதென்கிற தருமத்தோடே கூடியிருக்கிற தயிரிய முதலான அனேக புண்ணியங்கள் பூமியிலே இல்லாமற்போமென்கிறதுக்குத் தப்பாது. கர்த்தனிமித்தமாக அப்படிப்பட்ட பாடுபடுகிறதென்கிறது லோகத்திலே யில்லாவிட்டால் கர்த்தன்பேரிலே யுண்டாயிருக்கிற மிகுந்த பக்தியானது எதினாலே யுண்டாயிருக்கிறதென்று காணப்படும். அதேதெனென்றால் பொல்லாதவர்கள் கையிலே கர்த்தனிமித்தியமாகக் கஸ்திப்பட்டுக் கர்த்தர் கற்பித்த நெறியை மகாத்துமாக்களாயிருக்கிறபேர்கள் நடத்துகிறதினால் நிஷ்டூர் கையினாலே அடிபட்டு மரணத்தை யடைகிறதைக் காட்டிலுங் கர்த்தர்பேரிலே வேறு பக்தியில்லையென்று சொல்லத்தகும். இது யிப்படியிருக்கையிலே லோகத்திலே இப்படிப்பட்ட பாவிகளானபேர்கள் இல்லாதபடிக்குக் கர்த்தரானவர் முழுதும் விலக்கினாரானால் தேவவிஷயக இந்த வுத்தம பத்தியாகிற நன்மையுண்டாக லோகத்திலே கர்த்தரானவ ரில்லாதிருக்கப் பண்ணவேணுமென்கிறதுக்குத் தப்பாது. கர்த்தனிமித்தியமாகப் புண்ணியவான்களா யிருக்கிற பேர்கள் பற்பல நிந்தைகளையும் உபாதையை யனுப்பிக்க ஆசைப்படாமலும் இப்படிப்பட்ட வுத்தம பக்தியை அவர்களடைவார்களென்று சொன்னோமானால் இப்படிப்பட்ட சொல்லுதல்யார்க்குமெளிது செய்தலரிது என்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை.

கடைசியாய்க் கர்த்தரானவர் பாவமென்னப்பட்ட யாவையும் விலக்காமல் விடுக்கிறதினால் மனோவாக்குக் கெட்டாதவரா யிருக்கிற தனது திவ்விய சாமார்த்தியத்தையும் அளவறுக்கப்படாத் பெலத்தையுங் காண்பித்தாப் போலாயிற்று. அதேதென்றால் நன்மையில் நின்று நன்மைபிறக்கப் பண்ணுகிறதென்கிறது எப்போதுமுள்ள சுபாவமேயென்று சொல்லப்படும். கர்த்தரானவர் அனேக ஞாயங்களினாலே மகாமகாப்பட்ட பாவங்களை விலக்காமல் தாம் விலக்காத பாவங்கள் நிமித்தமாக மகாமகாப்பட்ட நன்மைகள் பிறப்பிக்கிறதென்கிறது அளவறுக்கப்படாத சாமார்த்தியமென்றும் அதே முடிவில்லாத திவ்விய பெலமென்றுஞ் சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே பாவமென்னப்பட்ட யாவையும் விலக்கிறதைக் காட்டிலுஞ் சிறிது பாவங்களை விலக்காமல் விலக்காத பாவங்களில் நின்று நன்மை பிறக்கிறதென்கிறது கர்த்தனுடைய நீதியுள்ள திருவுளத்துக்கு அதிகமா யேற்றிருக்குமென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே பாவமென்னப்பட்ட யாவையுங் கர்த்தரானவர் விலக்காமலிருந்ததென்கிறது குன்றாத ஞாயமென்றுந் தப்பில்லாத கிரமமென்றும் லோகத்தை நடத்துகிறதிலே குறையற்ற வகையுள்ள சாமாரிச மென்றும் அதுமாகினதைச் சந்தேகமில்லாமல் முழுமனதோடு அங்கீகரிக்கக்கடவோம். அவ்வண்ணமே தப்பில்லாத கிரமத்தோடே சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர்

இந்த மேன்மையுள்ள கிரமத்தோடே லோகத்தை நடத்துகிறதினால் தனது கரைகாணாத கிருபையுஞ் சாமார்த்தியமும் பெலமும் முடிவில்லாத செவ்வையாயிருக்கிற தனது அளவறுக்கப்படாத நீதியையுங் காட்டிக்கொண்டு வருகிறாரென்கிறதுக்குத் தப்பாது.

அதேதெனென்றால் மனுஷனென்னப்பட்ட யாவரும் கரையேற வேணுமென்று திவ்விய திருவுளத்துக்கு மிகவும் பொருந்தாததா யிருக்கிற பாவத்திலே விழாமல் நிர்மல புண்ணிய வழியிலே நடக்கிறதுக்குச் சுவாதந்திரியமுள்ள மனதையுந் தருமவிசார முதலான எண்ணப்படாத திவ்விய சகாயங்களையும் எல்லாருக்குங் கொடுக்கத் திருவுளமுண்டானபோதே அதிலேதானே வாக்குக்கும் மனதுக்கும் எட்டாததா யிருக்கிற தனது திவ்விய கருணையை மிகவுங்காட்டினாரென்று சொல்லக்கடவோம். அப்படிப்பட்ட கிருபையைத் தெரிந்தனது சுவாதந்திரிய முள்ள மனதைக்கொண்டு சட்டைபண்ணாமல் வேணுமென்று பாவத்திலே விழுவார்களை அதைவிலக்காமற் பார்த்துக் கொண்டிருக்கிற நீதி சொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் ஞாயமுள்ள கிரமத்தோடே காரியத்தை நடத்தினாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. அதேதெனென்றால் அப்படிப்பட்ட பாவம்வராததுக்கு வேறேயுபாயங்களினாலே விலக்காதிருக்கத் திருவுளமானபோது திவ்விய கிருபைக்கும் பாத்திரமாகாத பாவிகளுக்கு வேறே கிருபை பண்ணாமல் அவர்களுடைய பாவங்களுக்கு ஞாயத்தின்படியே ஆக்கினையிடுகிறவராய்த் தனது தப்பில்லாத நீதியைக்காட்டினாரென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. தயாபரனா யிருக்கிற கர்த்தரானவர் தாம்பண்ணியருளின கிருபையைப் பாவிகளானபேர்கள் சட்டை பண்ணாமலிருப்பார்களென்று அவர் பார்த்திருந்தாலும் வேறேயுபாயங் களினாலே பாவமென்னப்பட்ட தெல்லாம் வராமற் பண்ணுகிறதென்கிறது அவருடைய கிருபைக் கேற்றிருக்கிறதென்று சிலவேதிகெட்ட பாவிகளானபேர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்டவார்த்தையைப் புத்தியில்லாதபேர்கள் சொல்லுகிறதினால் அதைச்சட்டைபண்ணக் கடவோமல்ல. அதேதெனென்றால் சகலநன்மைச் சொரூபமாயிருக்கிற கர்த்தனுக்குக் கரைகாணாத கிருபை யுண்டாயிருக்குமாப்போலே செவ்வையா யிருக்கிற முடிவில்லாத நீதி யுண்டாயிருக்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே பாவம்வராதபடிக்கு ஆன திவ்வியசகாயங்களை மனுஷரென்னப்பட்ட யாவருக்குங் கொடுக்கிறதென்கிறது அவருடைய கிருபைக்கு யேற்றிருக்குமாப்போலே திவ்விய கிருபையை மனதுபொருந்தி சட்டைபண்ணாத பாவிகளுக்கு ஆன ஆக்கினை யிடுகிறதென்கிறது தப்பில்லாத திவ்விய நீதிக்கு ஏற்றிருக்கிறதென்று சொல்லத்தகும். ஆனபடியினாலே பாவம் பண்ணாத படிக்கு எண்ணப்படாத சகாயங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற கர்த்தரானவர் தனது தயவைக்காட்டுகிறதென்கிறது ஞாயமுள்ள கிரமத்துக் கொத்திருக்குமென்று சொல்லவேணும் அத்தன்மைபோலத் தனது திவ்விய கிருபையைச் சட்டைபண்ணாத பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஆக்கினை யிடவேணுமென்று வேறேதயை யவர்களுக்குப் பண்ணாமல் அவர்களுடைய பாவங்களை வேறே யுபாயங்களினாலே முழுதும் விலக்காம லிருக்கிறவராய்த் தப்பில்லாத தனது திவ்விய நீதியைக் காட்டுகிறார். இப்படித்தனது திவ்விய நீதியைக்காட்டுகிறதென்கிறது ஞாயமுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே பாவமென்னப்பட்ட யாவையும் விலக்கினால் திவ்விய கிருபையைச் சட்டைபண்ணாத பாவிகளுக்குக் கர்த்தரானவர் இடத்திலே யொருநாளும் ஆக்கினையிடாம லிருக்கவேணும். இந்தத்தப்பில்லாத நீதிக்கொக்குமோ வொவ்வாதோவென்று புத்திமானாயிருக்கிறவன் பரிச்சேதம் பண்ணக்கடவான். அப்படியே பாவமென்னப்பட்ட யாவையுங் கர்த்தரானவர் விலக்காததினால் வேறே அனேக நன்மை வருகிறாப்போலே அவருடைய திவ்விய நீதி விளங்கிறதென்கிற நன்மையானது லோகத்திலே மிகவும் விளங்கிறதென்று சொல்லக்கடவோம்.

இத்தனையிலே சிலபேர்கள் பண்ணின பாவங்களைப் பொறுத்து அவர்களை ஈடேற்றி வேறே சிலபேர்கள் பண்ணின பாவங்களைப் பொறுமல் நரகத்திலே தள்ளுகிறதினால் கர்த்தர் பேரிலே யநியாயத்தை யாகிலும் பக்ஷபாதத்தைத் தா ன்கிலும் ஆரோபிக்கிறதுக் கவகாசமில்லை. அதேதென்றால் [illegible] ம நேருக் கொருத்தனுக் காகிலும் அநியாயம் பண்ணாத கர்த்தரானவர் தனது தயை விளங்கும்படிக்குச் சிலபாவிகளுடைய பாவங்களைப் பொறுக்கிறதினால் தனது திவ்விய தயை விளங்கப் பண்ணுகிறாரென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட மேலாயானது குற்றமென் றெண்ணக்கூடுமோ? எண்ணக்கூடாது. அம்மருவாதியே பாவத்தி னிமித்த பச்சாத்தாபமில்லாத பாவிகளுடைய பாவங்களைப் பொறுமல் அவர்களை நரகத்திலே தள்ளி யாக்கினை யிடுகிறதினால் கர்த்தரானவர் தனது திவ்விய நீதியை விளங்கப் பண்ணுகிறா ரென்கிறது தப்பில்லாக் கிரமமென்று சொல்லக்கடவதொழிய அநியாயத்தையாகிலும் பக்ஷபாதத்தை யாகிலும் அது நிமித்தமாகக் கர்த்தன்பேரிலே ஆரோபிக்கிறதுக் கிடங்காண மாட்டாது.

இதெல்லாம் ஒரு வகையிலே விட்டுச் சொல்லக்கடவோம். கண்ணில்லா நூறுபேர்களுக்குக் கர்த்தன் கண் கிருபை பண்ணினதினால் கண்ணுள்ளவர்களா யிருக்கிறவர்களெல்லாரும் மனசுபொருந்தி தங்களுக்குண்டான கண்களைப் பிடுங்கினால் நீதி சொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் இவர்களை நடத்தத்தக்க கிருபையை விசாரிக்கு மிடத்தில் அவனவன்தான் வேணுமென்று தன்தன் கண்களைப் பிடுங்கி யெறிந்து போட்டினால் அவர்களெல்லாருங் குருடரா யிருக்கட்டுமென்று கர்த்தன் சொல்லுகிற தென்றது நீதிக்கு யேற்றிருக்கு மொழியக் குருடரா யிருக்கட்டுமென்று கர்த்தரானவர் சொல்லுகிறதினாலேயும் அவர்களுக்குக் கண்களைத் தயாபரனை கர்த்தன் கொடாதிருக்கிறதினாலேயுங் கர்த்தன்பேரி லநியாயத்தை ஆரோபிக்கிறதுக் கவகாசங் காணமாட்டாது. இது யிப்படி யிருக்கையிலே கர்த்தரானவர் தனது தயையைப் பண்ணுகிறதுக்குக் கர்த்தரா யிருக்கக்கொள்ள நூறுகுருடருக்குள்ளே யொருத்தனிடத்திலே தனது தயையைக்காட்ட வேணுமென்று கண்கொடுத்தா லிது குற்றமென்று சொல்லலாமோ? மற்றவர் களுக்கு கர்த்தரானவர் கண் கொடாததினால் அநியாயம் பண்ணினாரென்று சொல்லலாமோ அம்மருவாதியே மனுஷனுடைய கரையேற்றத்துக்கு வேண்டியதா யிருக்கிற சுவாதந்தியரிய முதலான திவ்வியசகாயங்களைத் தயாபரனை கர்த்தன் மனுஷருக்குக் கொடுத்தா ரென்கிறது கரையேறுகிற வழியிலே மனுஷன் நடக்கத்தக்கதாக வேண்டின கண்களை யவனுக்குக் கொடுத்ததுக்குச் சமானமாம். மனுஷனானவன் வேணுமென்று கர்த்தன் பண்ணின கிருபையைச் சட்டைபண்ணாமல் தனது சுவாதந்திரியத்திலே பாவத்திலே விழுந்து தேவயிஷ்டப் பிரசாதத்தைப் போக்கடித்த போதே தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத் துக்கு வேண்டினதா யிருக்கிற கண்களை வேணுமென்று பாவியானவன் பிடுங்கினதுக் கொக்கும். இதெல்லாம் இப்படி யிருக்கையிலே ஒருபாவியானவனுக்குக் கர்த்தரானவர் தயை பண்ணித்தனது இஷ்டபிரசாதத்தை யவனுக்குக் கொடுக்கத் திருவுளமானாலும் வேண்டாமென்று சொல்லுவாருண்டோ? மற்றவர்களுக்குச் சுபாவ மேலாயுள்ள கிரமத்தோடு ஆக்கினையிடுகிற கர்த்தன் ஒருவனுக்குத் தயைபண்ணினால் மற்றவர்களுக் கநியாயம் பண்ணினாரென்று சொல்லத்தகாது. இதுதவிர இத்தருவாயிலே யறிய வேண்டின தொருவிசேஷமுண்டு அது யிந்தவிஷயத்திலே சந்தேக மென்னப்பட்டதெளிவாத் தீர்க்கு மொழிய மற்றப்படியல்ல அதேதென்றால் தனது கண்களைப் பிடுங்கின பேர்களுக்குச் சமானமா யிருக்கிற பாவிகளென்னப்பட்ட யாவரும் எப்போதும் பாவ [illegible] பிற்பாடு பூலோகத்திலே யிருக்கிறநாள்மட்டும் அவர்கள் பாவத்திலே நின்று

[illegible]துக்குத் தயாபரனை கர்த்தன் போதுமான திவ்விய சகாயங்களை யவர்களுக்கு பண்ணிக்கொண்டு வருகிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே பாவத்திலே [illegible] திரும்பத்தக்கதாக அவர்களுக்குமனசில்லாததினால் அவர்கள் திரும்பாம லிருக்கிறார்களென்று சொல்லக்கடவோம்.

ஆதலாற் பாவிகளானபேர்கள் பாவத்தில் நின்று திரும்பாதிருப்பது அவர்கள் பேரிலே குற்றஞ் சுமக்குமொழிய அவர்கள் நல்லவர்களா யிருக்கவேணுமென்று அதற்கான ஏற்பாடு பண்ணுகிற கர்த்தன்பேரிலே லவலேசமாகிலுங் குற்றஞ் சுமந்திருக்குமென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. இந்தப் பாடமுதலான வேறே பாடங்களிலே கர்த்தரானவர் பாவங்களை விலக்காம லிருக்கிறாரென்கிற வாக்கியத்துக்கான அர்த்தத்தைச் சாவதானமாய்க் கண்டுபிடிப்பாயாக. அதேதென்றாற் பாவத்தை மனுஷனானவன் பண்ண வேண்டாமென்று கர்த்தரானவர் தமது வேதத்திலே கட்டளையிட்டருளி ஒரு அற்பப் பாவத்துக் கென்கிலும் உத்தாரங் கொடாததினாலேயும் பாவம் செய்யாதிருக்க அதற்கான அனேகவுதவிகளை மனுஷருக்குக் கர்த்தரானவர் செய்து கொண்டு வருவதினாலேயும் பாவத்தை அவர்குறையற்ற விதமாக விலக்கினாரென்று சொல்லத்தகு மென்கிறதுக்குத் தடையில்லை. ஆதலால் கர்த்தரானவர் தாம் விலக்கின பாவத்தை மனுஷனானவன் பண்ணாதபடிக்குக் கட்டளைமுதலான வுபாயங்களை யவர் பண்ணுகிறிருக்கிற தென்கிறது கர்த்தரானவர் பாவத்தை விலக்காம லிருக்கிறாரென்கிற வாக்கியத்துக்குள்ள அர்த்தத்தைக் கண்டுபிடிக்கவே யொழியக் கர்த்தரானவர் பாவத்துக்கு உத்தாரங்கொடுத்தா ரென்கிற அர்த்தத்தை யாகிலும் அவர் பாவஞ்செய்யவேண்டா மென்று கற்பிக்கவில்லை யென்கிற மேரையை யாக வென்கிலும் சொல்லவுங் கருதவுங் கடவாயல்ல.

௰-ம், பாடம்.

ஆத்துமத்தினுடைய வுற்பத்தி யேதென்றும் மனுஷாத்துமா மரிக்கிறதின்னாலே யென்றும் வெளிப்படுத்துகிறதுக்கு முன்னே சரீர சம்மந்தமா யிராத ஞானவிருத்திகளையுஞ் சுவாதந்திரிய சேட்டைகளையுஞ் சொன்னோமென்கிறதினாலே காரியகாரணத்தை யதிக்கிறதிலே ஆனக்கிரமத்தைத் தப்பினோமென்று ஒருவனும் விசாரிக்கவேண்டாம். அதேனென்றால் மனுஷாத்துமமானது தனது விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிறதினால் ஆத்துமமின்னதென்று நிருபணம் பண்ணினபிற்பாடு ஆத்துமத்தில் நின்று ஜெனிக்கிற ஞான முதலான விருத்திகள் இன்னதென்று சொல்லுகிற தென்கிறது கிரமம்போலே தோன்றினாலும் இத்தறுவாயிலே இது அநுசரிக்கத்தக்க கிரமமாயிராது. அதேதென்றால் ஞான விருத்திகள் முதலான சுவாதந்திரிய சேட்டைகளுடைய நிச்சயிக்கப்பட்ட சுபாவ சொரூபமானது மனுஷாத்தும மின்னதென்றும் அதினுடைய வுற்பத்தியின்ன தெப்படிக்கொத்ததென்றுங் கண்டு பிடிக்கிறதுக்கு இதுவே மிகவும் உபயோகமா யிருக்கக்கொள்ள மனுஷாத்துமத்தில் நின்று ஜெனிக்கிற ஞானமுதலான விருத்திகளுடைய சுபாவ சொரூபத்தை நிரூபித்த பிற்பாடு மனுஷாத்துமத்தினுடைய வுற்பத்தி யின்னதென்று வெளிப்படுத்துகிற தென்கிறது யிந்த அவசரத்திலே யநுசரிக்கத்தக்க கிரமமா யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் மனுஷாத்துமத்தினுடைய நிர்ணயம் மகாகனமான விர்த்தாந்தமா யிருக்கிறதுந் தவிரத் தப்பில்லாமற் சத்தியத்தைச் சுமுத்திரையா யநுசரித்து அதினுடைய சுபாவ சொரூபத்தை வெளிப்படுத்துகிற தென்கிறது மிகவும் அரிதாயிருக்கக் கொள்ள எந்தவழியினாலே மனுஷாத்துமம் இன்னதென்று எளிதாய் அதிகவதிகமாய்ப் பிரகாசிப்பிக்கப் படுகிறதோ அந்தவழியினாலே மனுஷாத்துமத்தினுடைய சுபாவ சொரூபத்தை நிரூபிக்கிறதுதான் உத்தம கிரமமென்று சொல்லத்தகும். ஆத்துமத்தினுடைய நிர்ணயமானது கனமான விருத்தாந்தமென்று சொன்னோமென்கிறதுக்குக் காரணமேதெனில் ஆத்துமமானது சகல நன்மை சொரூபமான சர்வேசுரனாயிராமலிருந்தாலும் சர்வேசுரனாலே பூமியிலே யுண்டாக்கப்பட்ட பொருள்களுக்குள்ளே அது வுத்தமபொருளென்று சொல்லக்கடவது. இந்த விஷயத்திலே தெளிவற்ற பாவிகள் கற்பித்த தப்பறை விசேஷங்களைப் பார்க்குமிடத்தில் அவைக ளெண்ணப்படாதவைகளா யிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கும். ஆனபடியினாலே மனுஷனுடைய ஆத்துமமும் அதினுடைய வுற்பத்தியும் இன்னதென்று சுளுபத்திலே சொல்லப்பட்ட பிற்பாடு மனுஷசீவனானது தனது சரீரத்தை மரண நிமித்தமாக விட்டுப்பிரிந்தாலும் என்றென்றும் அழியாத பொருளா யிருக்கிறதென்று சிறிது ஞாயங்களினாலே பன்னிரண்டாம் பாடத்திலே ஒப்புவிக்கக்கடவோம்.

சகல நன்மை சொரூபமா யிருக்கிற சர்வேசுரன் மனுஷசீவனாய்ச் சரீரத்தோடு பூமியிலே திரிகிறானென்று சில தெளிவற்ற பாவிகள் சொல்லுகிறார்கள். வேறு சிலர் ஆத்துமமானது சருவேசுரனுடைய அம்ஷமென்று சொல்லுகிறார்கள். இன்னுஞ் சிலர் மனுஷனிடத்திலே ஸ்தூல சரீரமுண்டென்றும் லிங்கசரீரமாகிற அந்தக்கரண முண்டென்றுஞ் சொல்லிப் பற்பல தண்ணீர்க்குடங்களிலே சூரியனுடைய பிரதி பிம்பம் பலிக்கிறது போலே அப்படிப்பட்ட மனோ புத்தி சித்தம் அகங்காரமென்கிற அந்தக் கரணங்களிலே பரமாத்துமாவாகிற சருவேசுரனுடைய பிரதி பிம்பம் பிரதிபலிக்குமென்றும் ஆனபடியினாலே மனுஷனிடத்திலே யிருக்கிற அந்தக்கரணங்களானவை சீவாத்தும மென்று சொல்லி அதிலே பிரதிபலிக்கிற பராபரவஸ்துவினுடைய பிரதி பிம்பமானது ஞானமுடைத்தான பொருளென்றும் பரமாத்துமமென்றும் வாக்கினாலே மாத்திரஞ் சொல்லுகிறார்களொழியத்

தாங்கள் சொல்லுகிற அந்தவின்னதென்று தாங்களே யறியாதிருக்கிறார்கள். மேலும் தங்களுடைய தப்பறையான பக்ஷத்தைச் சற்றாகிலும் அங்கீகரிக்கிறதுக்கு மனசுக்குச் சரியாகக் காட்டுகிறதுக்கு மாட்டார்கள். வேறே சிலமதி கெட்டவர்கள் ஆத்துமமானது சருவேசுரனா யிருக்கிறதென்று அங்கீகரியாமற் சருவேசுரனோடேகூட அநாதியா யிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே பதி, பசு, பாசமென்கிறமூன்று பொருள்கள் அநாதியா யிருக்கிறதென்று சொல்லி இந்த விஷயத்திலே சில பிராணிகளை லோகத்துக்குக் கேடாகவுண்டு பண்ணிக்கொண்டுவந்தார்கள். வேறே சிலர் மனுஷசீவன்க ளெண்ணப்பட்டவைகளும் லோக ஆரம்பத்திலேதானே கடவுளால் உண்டாக்கப்பட்டிருந்த தென்றும் அவைகள் கர்த்தனை யுத்தேசித்துப் பத்தியா யிருந்ததுக்கும் ஏற்றபடி பிற்காலங்களிலே அந்தந்தச் சரீரங்களோடேகூடி மனுஷனாயிந்த லோகத்திலே திரிகிறதொழிய மற்றப்படியல்ல வென்றும் சிலர் தாய்தகப்பனான பேர்கள் மனுஷசரீரம் உற்பவிக்கிறதுக் குதவிசெய்கிறதுபோலே மனுஷசீவனுக்கும் அவர்கள் காரணமா யிருக்கிறார்களென்றும் ஸ்தாபித்தார்கள். கடைசியாய் வேறே சில முழுது மதிகெட்ட பாவிகள் மனுஷசீவனானது பூதங்களுடைய பிரமாணமுள்ள கூட்டுறவென்று அங்கீகரிக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பக்ஷங்களுக்குப் பொய்யான துர்மதமென்கிற காமமானது செல்லுவிக்கிறதுக்குத் தப்பாது. அதெப்படியெனில் ஞாயத்துக்கும் புத்திக்கும் விருத்தமா யிருக்கிற விஷயங்கள் அப்படிப்பட்ட மதங்களிலே விதிக்கப்படுகிறதினால் இவைகளுடைய அங்கீகாரமானது மனுஷன் கரையேறுகிறதுக்கு விக்கினமா யிருக்குமென்பது நிச்சயம். இதெப்படியென்று வெளியாகும்படிக்கு ஒவ்வொன்றாய்க் கொஞ்சத்துக்குள்ளே யிந்தத் தப்பறை மதங்களை யாராய்ந்து பார்க்கக்கடவோம்.

சர்வேசுரனானவர் தானாயிருக்கிற பொருளென்று முழுதும் அங்கீகரிக்கப்படவேணும். ஆகையினாலே அவர் மட்டில்லாத சகல நன்மை சொரூபமா யிருக்கிறவரென்று யாதொரு அற்பசந்தேகமில்லாமல் யாவரும் சம்மதிக்க வேண்டியிருக்கிறது. சீவனென்றால் சரீரத்துக்கு மாத்திரையா யிருக்கிறதென்று மூன்றாம்பாடங்களிலே ஒப்புவிக்கப்பட்டபோதே அது மனுஷனுடைய பாதியுமாய்க் குறையுள்ள வஸ்துவுமாயிருந்து சரீரத்தோடேகூடி முழு மனுஷனாகப் பண்ணிக்கொண்டுவருகிற தென்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே சீவனானது சகல நன்மை சொரூபமான வஸ்துவென்று அறிவின் குறைச்சலினாலே முழுது மதிகெட்டவர்கள் சொல்லுவதை அங்கீகரித்தால் முடிவில்லாதஞானம், முடிவில்லாத பலம் இது முதலான சகல நன்மை சொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் சரீரத்தோடே கூட அஞ்ஞானத்தையுந் துற்பலத்தையும் அடைந்தாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே கர்த்தருக்குண்டான சுபாவசொரூபம் சரீர உபாதியினாலே அழிந்து போயிற்றென்று சொல்லவேண்டியிருக்கும். அவ்வண்ணமே கர்த்தனுடைய சொரூபமானது அகண்டமா யிருக்கையிலே சற்றென்கிலும் அது கெட்டுப்போயிற்றென்று சொல்லாமல் திவ்விய சொரூபமானது முழுதுமே அழிந்ததென்று அங்கீகரிக்கவேண்டியிருக்கும். இது அவிரத்தீர உபாதியினாலே யித்தனைகேடுவந்ததென்று சம்மதித்தோமானால் கர்த்தன் சகல நன்மையாயிருக்கிறதிலே அவருக்குண்டான பலத்தைப்பார்க்கிலுந் திவ்விய பலம் முதலான நன்மைகளைக் கெடுக்கிறதிலே அற்பசரீரத்துக்கதிக வல்லமையுண்டா யிருக்கிறதென்று அங்கீகரிக்கவருகும். இவ்விதவெவ்வேறனேக தப்பறை விஷயங்களை அங்கிகரியாதபடிக்குச் சகல நன்மை சொரூபமாயிருக்கிற சர்வேசுரனானவர் சரீரத்துக்கு மாத்திரையான சீவனா யிருக்கலாமென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

இதன்றியே அஞ்ஞானங் காமக்குரோத முதலான பாவங்களெல்லாம் மனுஷனிடத்திலே யுண்டா யிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாகக் கண்டு வருகிறோம் அப்படிப்

பட்ட பாவங்களுக்குச் சிவனானது பிரதான காரணனென்று சொல்லவேண்டியதென்கிறதினால் சகல நன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் மனுஷருக்குச் சிவனாயிருக்கிறாரென்றங்கீகரித்தோமானால் அவர் தானே சகல பாவத்துக்கும் [illegible] காரணமாயிருக்கிறாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. பின்னும் பாவ கிரியைகள் முடிவுபெறுகிறதுக்குப் பாவிகளான பேர்கள் கர்த்தரை வேண்டிக் கொள்ளுகிறபோது நீங்கள் பாவங்களைத் தங்களுக்குத் தாங்களே பொறுக்கவேணுமென்று தங்களையே தாங்கள் வேண்டிக் கொள்ளுகிறார்களென்று சொன்னாப்போலே யாச்சுது. கடைசியாய் மரணமடைந்த மாகச் சிவனானது தனது சரீரத்தைவிட்டுப் பிரிகிறபோது பாவகிரியைகளுக்கு நரகத்திலே விழுகிறதென்கிற வார்த்தையானது லோகத்திலே நடந்துவருகிறதல்லவோ? [illegible] கர்த்தரானவர் சிவனாயிருந்தால் அவர்தானே நரகத்திலே விழுகிறாரென்றும் நரக [illegible] அவர்தானே யனுபவிக்கிறாரென்றுஞ் சொல்லக்கூடுமே. இத்தோஷமல்லாமல் [illegible] திவ்விய தீர்வையினாலே வரவேணுமென்றிருக்கையிலே கர்த்தரானவர் நரகத்திலே விழுகிறதுக்குத் தீர்வையிட்டுக் கொண்டாரென்று சொல்லத்தகும்.

அவ்வண்ணமே கர்த்தரானவர் சிவனாயிருந்தால் இத்தனைகோடி ஆத்துமாக்களாகப் பட்ட வேறனேக தேகங்களுஞ் சரீர உபாதியினாலே யவருக்கு வருகிறதென்று சொல்ல வேண்டியிருக்கையிலே அவர் சரீரத்துக்குச் சிவனாயிருக்கிறாரென்று சம்மதிக்கிறபோது தாமே தம்மைக் கெடுக்கிறதுக்குச் சம்மதித்தாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே கர்த்தரானவர் சிஷ்களை அவஸ்தையை யடைக் கிருக்கையிலே தானே சரீரத்தை யெடுத்துச் சரீர உபாதியினாலே பித்தனென்கிறதை யடையத்தக்கதாகத் திருவுளமுண்டாயிருந்த போதே அப்படிப்பட்ட சிஷ்களை அவஸ்தையிலேதானே கர்த்தரானவர் மதிகெட்டவரா யிருக்கிறாரென்று சொல்லத்தகும். அதேதென்றால் யாராகிலுந் தான் கெட்டுப் போகிறதுக்குச் சம்மதித்தால் அவன் முழுது மதிகெட்டவனா யிருக்கிறானென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே பித்தனென்கிறதைத் தனக்குவருத்தி விக்கிற விளையாட்டுகளைக் கர்த்தன் பண்ணுகிறதுக்கு மனசுண்டா யிருக்கலாமென்று சொல்லுகிறவனே முழுது மதிகெட்டவனென்றும் அவன் வெட்கமில்லாத தப்பறைக் காரனென்றும் பாவிகளுக்குள்ளே பெரும்பாவியென்றுஞ் சொல்லக் கூடுமொழிய மற்றப்படியல்ல. சொல்லப்பட்ட இந்த ஞாயங்களினாலே சிவனானது கர்த்தனுடைய அம்சமா யிருக்கமாட்டாதென்று சத்தியத்திலே தாற்பரியமுள்ள புத்திமான் கண்டுபிடிக்கக்கடவான்.

இதன்றியே சர்வேசுரனிடத்திலே நின்று அம்சம் பிரியலாமென்று அங்கீகரித்தோமானால் தனது சிஷ்களை அவஸ்தையிலேதானே கர்த்தரானவருக்கு இடைவிடாமல் விகாரங்கள் பிறக்குதென்று சொல்லவேணும். அதேதென்றால் வஸ்துவினிடத்திலே நின்று இடைவிடாமல் எண்ணப்படாத அம்சங்கள்மேலே அம்சங்கள் பிறக்கிறபோது அப்படிப்பட்ட அம்சங்களுடைய பிரிதலினாலே வஸ்துவுக்கு வேற்றுமையும் விகாரமும் பிறக்கிறதென்று அங்கீகரிக்கப்படவேணும். இதன்றியே சிவனானது பராபரவஸ்துவினுடைய அம்சமா யிருந்தாற் பராபரவஸ்துவைப் போலே சிவனானது ஞானம் பெலம் இதுமுதலான நன்மைகளுடைய சொரூபமா யிருக்கவேணும். ஆனபடியினாலே ஞானத்திலேயும் பலத்திலேயும் மற்றுமுண்டான சகல நன்மைகளிலேயுங் குறையற்றதாயிருக்கவேணும். [illegible]தேதென்றால் பின்னையானவன் பிதாவினுடைய அம்சமா யிருக்கக்கொள்ள அவன் பிதாவுக்குண்டான சரியான சுபாவத்தை யுடைத்தானவனா யிருப்பானேயொழிய மற்றப்படியல்ல. இதுதவிரச் சரீர உபாதியினாலே கர்த்தருடைய அம்சமானது அங்கங்கே சிவனாயிருக்கிறதென்று அங்கீகரித்தோமானால் மனுஷருக்குள்ளே பலகைகளுண்டா [illegible] கெடுக்கிறதென்கிறபோது கர்த்தரானவர் சரீர உபாதியினாலே தாமே தம்மைக்

னாயிருக்கிறாரென்றுந் தாமே தம்மைக் கெடுக்கிறாரென்றும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே சொல்லப்பட்ட தப்பறை விசேஷங்களுடையவும் மற்ற அனேக [illegible]களுடையவும் அங்கிகாரமானது கரையேறுகிறதுக்கு விக்கினமாயிருக்கக் கொள்ளக் கரையேறத்தக்க தாற்பரியமுள்ளவன் இப்படிப்பட்ட துர்மதங்களை முழுமனதோடே விலக்கக்கடவான்.

சிவனானது சர்வேசுரனுடைய அம்சமாகவென்கிலு மிருக்க மாட்டாதென்று சந்தேகப்படாத அசாதாரணசத்தியமா யிருக்கும்போலே யந்தக் காரணத்திலே பிறக்கிற பராபரவஸ்துவினுடைய பிரதிபிம்பமானது சிவனாயிருக்க மாட்டாதென்று [illegible]மாக அங்கீகரிக்கத்தக்க சத்தியமாயிருக்குமென்கிறதுக்குத் தப்பாது. இந்தப் [illegible] அனேகந் தப்பறைகளடங்கி யிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய் விளங் [illegible] திட்டாந்தப் படுத்தலாம். ஆனால் இந்தத் தப்பறையான பக்ஷத்தைச் சமர்ப்பமாய்க் கண்டிக்கிறதுக்கு இது தருவாயல்லவென்கிற தினாலேயும் ஆத்தும விஷயத்தி [illegible] வேண்டின வேறே சத்திய விசேஷங்களை யித்தருவாயிலே வெளிப்படுத்தக் கருத்துண்டா யிருக்கிற தினாலேயும் இந்தத் துர்மத முதலான வேறனேக துர்மதங்களினாலே ஆத்தும விஷயத்திலே கற்பிக்கப்படுகிற தப்பறை விசேஷங்களைத் தனித்தனியே யித்தருவாயிலே தெளிவித்துக் கண்டிக்கக் கடவோமல்ல. இது தவிர இந்தத் தப்பறையானது கொஞ்சமாய்ப் பராமரிக்கப் பட்டாலுந் தப்பறை யென்று தானே வெளிதாய்க் காண்பிக்கிறதினாலே அதை யனேக ஞாயங்களினாலே விஸ்தாரமாய்க் கண்டிக்கிறதுக்குப் பிரயாசப்பட்டவன் வியர்த்த பிரயாசப் பட்டானென்று சொல்லுகிறதுக்கு அவனிடங் கொடுத்தாப்போலேயாகும். ஆனபடியினாலே யிரண்டொரு ஞாயத்தினாலே யிது தப்பறையா யிருக்கிறதென்று காட்டி அப்பால் நடத்தத்தக்க விசேஷங்களை நடத்தக்கடவோம்.

பராபர வஸ்துவினுடைய பிரதிபிம்ப முண்டாக்கப் படலா மென்றுசொல்லி அது சரீர காரணமென்று அங்கீகரித்தோமானால் இப்படி சொல்லுகிறதிலே தானே விருத்தமான அர்த்தங்கள் சொல்லப்படுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அதேதென்றால் பொருளின் வகையானது பொருளினுடைய பிரதிபிம்பத்திலே காண்பிக்க வேணுமொழிய அந்தப் பிரதிபிம்பமானது பொருளாயிரா தென்றிருக்கையிலே யுண்டாக்கப்பட்ட பிரதிபிம்பத்திலே தானுயிருக்கிற சுருதியின் வகையானது தன்னிடமென்று காண்பிக்கிற தெப்படி? ஆனபடியினாலே ஞாயத்தை விசாரிக்கு மிடத்திலே தானுயிருக்கிற வஸ்துவின் பிரதிபிம்பமானது வஸ்துவாயிருக்கால் அதுதானுயிருக்கவேணும். தானுயிருக்கிற பிரதி பிம்பமானது சர்வேசுரனாலே யுண்டாக்கப்பட்டதென்று சொல்லுகிற தென்கிறது முழுத்தப்பறையா யிருக்கிறதென்றதைப் புத்தியுள்ளவனா யிருந்தாலுங் கண்டுபிடிப்பான்.

இது தவிர மனுஷனுக்குண்டான கண் மூக்கு முதலான அவயவங்கள் மனுஷனுடைய பிரதிபிம்பத்திலே காண்பித்திருக்க வேணுமொழிய அது மனுஷனாயிராது. அந்தவண்ணமே போலக் கர்த்தரானவர் மட்டில்லாமற் சகல நன்மையா யிருக்கக்கொள்ள அவருக்குப் பிரதிபிம்பமுண்டாய் அது சர்வேசுரனா யிருந்தால் அந்தப்பிரதி பிம்பத்திலே தானே மட்டில்லாத சகல நன்மை காண்பித்திருக்கிறதுந் தவிர அது சகல நன்மையா யிருக்கவேணும். மட்டில்லாத சகல நன்மையானதென்கிறதும் உண்டாக்கப்பட்ட வஸ்துவிலே அதுவுண்டா யிருக்கிறதென்கிறதும் புத்திக்கொத்திராது. இந்த இரண்டு விசேஷமானது ஞாயமுள்ள புத்திக் கொவ்வாததா யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. பின்னேயும் வஸ்துவினுடைய பிரதிபிம்பமானது வஸ்துவுக்குப் பின்னமா யிருக்கிறதுந் தவிர வஸ்துவில்லாத ஸ்தலத்திலே உண்டாயிருக்கவேணும். அவ்வண்ணமே சூரியனானது அன்னியர்க்குட்டத்திலேயும் மனுஷ

ளுனவன் கண்ணுடியிலேயு மிருக்கவில்லை யென்கிறதினுற் றண்ணீர்க் குடத்திலேயுங் கண்ணுடியிலேயுஞ் சூரியனுடையவு மனுஷனுடையவும் பிரதிபிம்பங்கள் பிரதிபலிக்கிறதொழிய மற்றப்படியல்ல. அனபடியினுலே பரமாத்துமத்தின் பிரதிபிம்பம் அந்தக்கரணங்களான ஸ்தலங்களிலே பிரதிபலிக்கிறதென்று அங்கீகரித்தோமானுற் பரமாத்துமமானது எங்குமில்லை யென்று சொல்லக்கடவோம். கர்த்தரானவர் எங்கு மிருக்கவில்லையென்று தோற்றுகிறதென்கிறது கர்த்தரானவர் கர்த்தரானவ ரல்லவென்றும் லோகத்திலே சர்வேசுரனில்லையென்றுஞ் சொல்லுகிறதுக் கொக்கும். இதன்றியே கர்த்தரானவர் முடிவில்லாத ஞானமாயிருக்கிறபோது அப்படிப்பட்ட முடிவில்லாத ஞானத்தினுடைய பிரதிபிம்பமானது மனுஷனிடத்திலே யிருக்கிறதென்று சொன்னோமானுல் மனுஷனிடத்திலே அஞ்ஞானம் வருகிறதுக்கவகாசமில்லை. அதெப்படியென்றுல் தண்ணீர்க் குடத்திலே சூரியனுடைய பிரதிபிம்ப முண்டாயிருக்கையிலே தண்ணீர்க்குடத்திலே அந்தகாரம் வருகிறதுக் கிடமுண்டாயிராது. அத்தன்மைபோல பரமாத்துமாவாகிற முடிவில்லாத ஞானத்தின் பிரதிபிம்பமானது மனுஷனிடத்திலே யிருந்தால் அஞ்ஞானமாகிற அந்தகாரமானது மனுஷனிடத்திலே வருகிறதுக்கிட மில்லாதிருக்கவேணும். அதேதென்றுற் குடத்தினுடைய உபாதியான சூரியனுடைய பிரதி பிம்பத்தோடே கூட அந்தகார மிருக்கப் பண்ணமாட்டாதது போலே அந்தக்கரணத்தினுடைய உபாதியானது முடிவில்லாத ஞானமாகிய பிரகாசத்தின் பிரதிபிம்பத்தோடே கூடயிருக்கிற அஞ்ஞானம் இருக்கப்பண்ண மாட்டாதென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல.

ஞானவிஷயத்திலே சொல்லப் பட்டதுபோலே மற்றநன்மை விஷயங்களிலேயும் யோசிக்கக்கடவோம். அதேதென்றுற் கர்த்தரானவர் சகல நன்மை சொரூபமா யிருக்கையிலே அவருடைய பிரதி பிம்பமானது சகல நன்மையினுடைய பிரதிபிம்பமா யிருக்கவேணு மென்கிறதுக்குத் தப்பாது. மனுஷனிடத்திலே அஞ்ஞானந் தப்பறை இது முதலான சகல பொல்லாப்புகளு முண்டாயிருக்கையிலே மனுஷனிடத்திலே சகல நன்மைகளுடைய பிரதிபிம்பமும் உண்டென்று கண்டுபிடிக்கிறதுக்கு யிடங்காணமாட்டாது. பின்னையும் மட்டில்லாத சகல நன்மையாகிற பரமாத்துமத்தின் பிரதிபிம்பமானது முன் சொன்னதுபோலே யுண்டாக்கப் படலாமென்று சொல்லக்கூடா தென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றுல் விஷயத்தினுடைய பிரதிபிம்பமானது விஷயமில்லாத விடத்திலே யிருக்கலாமொழிய விஷயமுண்டான விடத்திலே யிருக்கக்காணேம். அவ்வண்ணமே பஞ்சேந்திரியங்களுடைய விஷயமானதுகள் இந்திரியத்துக்குள்ளே யிராததினுல் அவைகளுடைய பிரதிபிம்பமானது இந்திரியங் களுக்குள்ளே யிருந்து, யிந்திரியமானது வஸ்துவினுடைய பிரதிபிம்பத்தைக் கொண்டு வஸ்துவைக் கிரகிக்கும். புத்திக்குள்ளே அந்த வஸ்துக்களில்லாம லிருக்கையிலே வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்கள் புத்திக்குள்ளே யிருந்துகொண்டு அப்படிக்கொத்த பிரதிபிம்பங்களைக் கொண்டு புத்தியானது வஸ்துக்களை யறியும். இது யிப்படி யிருக்கையிலே பராபரவஸ்துவின் பிரதிபிம்பமிருக்கலா மென்று சொன்னோமானுல் அப்பராபர வஸ்துவில்லாத விடத்திலே யதினுடைய பிரதிபிம்பமானது யிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும்.

இதன்றியே யிவர்கள் சொல்லுகிறப் போலே பராபர வஸ்துவின் பிரதிபிம்ப முண்டென்று அங்கீகரிக்கும்போது இப்படிப்பட்ட பிரதிபிம்பமானது அந்தக் கரணத்திலே யிருக்கிறதினுலே என்னவருமென்று கேட்கிறோம்; அதேதென்றுல் அறிக்கை யிந்திரிய முடைத்தான பொருளினிடத்திலே வஸ்துவின் பிரதிபிம்பமானது வஸ்துவைக் கிரகிக்கிறதுக் குதவிசெய்ய மொழிய வேறே யொன்றைப் பண்ணக்காணேம். அந்தந்த விஷயங்களைக் கிரகிக்கிறதுக்குப் பெலமுடைத்தான பொருள்களிடத்திலே யுண்டாயிருக்கிற விஷயங்களுடைய பிரதிபிம்பங்களை ஆராய்ந்து கொள்ளுகிற புத்திமானுக் கிந்தச் சத்தியமானது பிரத்தியக்ஷமாய்க் காண்பிக்கிற தொழிய மற்றப்படியல்ல. இதுயிப்படி யிருக்கையிலே மண்ணுங்கட்டிபோலே யிருக்கிற அந்தக்கரணத்திலே பராபரவஸ்துவினுடைய பிரதிபிம்பமானது இருக்கிறதுக்குப் பலன்காண மாட்டாது. அதேதென்றுல்

அந்தக் கரணமானது தனது சுபாவத்தினுலே ஞான முடைத்தானதா யிராதென்று சொல்லுகிறீர்கள். அனபடியினுலே பராபரவஸ்துவின் பிரதிபிம்பத்தைக் கொண்டு அந்தக் கரணமானது பராபரவஸ்துவை யறியமாட்டாது. சூரியனுடைய பிரதிபிம்பத்தைக் கொண்டிருக்கிற நீருள்ள குடமானது சூரியனை யறியாதது போலே பராபரவஸ்துவின் பிரதிபிம்பத்தைக் கொண்டிருக்கிற அந்தக்கரணமானது பராபரவஸ்துவை யறியமாட்டா தென்று சொல்லக்கடவது. அல்லது அப்படிப்பட்ட பிரதிபிம்பத்தின் காரண நிமித்தமாக மண்ணுங்கட்டிபோலே யிருக்கிற அந்தக்கரணமானது அறிகிறதுக்கு வல்லதா யிருக்கிறதென்று சொன்னோமானுல் அப்படியே யிந்தப் பக்ஷமானது அபத்தத்தப்பறை யென்று கண்டுபிடிக்கலாம்.

அதேதென்று லிந்தவிஷயத்திலே மனுஷனுக்கு நடக்கு மேரையை விசாரிக்கு மிடத்தில் அந்தந்தப் பொருளினுடைய பிரதிபிம்பமானது தனது பொருளை யறியப் பண்ணுகிறதொழிய வொருபொருளின் பிரதிபிம்பமானது மற்றப்பொருள்களை யறிகிறதுக்கு தவாது. அவ்வண்ணமே பராபரவஸ்துவின் பிரதிபிம்பமானது அந்தக்கரணத்திலேயிருந்தா லப்படிப்பட்ட பிரதிபிம்பமானது பராபரவஸ்துவை யந்தக்கரண மறியத்தக்கதாக வுதவு மொழியக் கண்டேறுமை மேரையாயிருக்கிற மற்றப்பொருள்களை யந்தக்கரண மறிகிறதுக்குத் திவ்விய பிரதிபிம்பமானது சகாயம் பண்ண மாட்டாது. யிந்தவிஷயத்திலே யிவர்கள் சொல்லுகிற அபத்தமான பிரத்தி யுத்தரமாவது ஒரு சூரியனானது தான் பிரகாசமுள்ளதா யிருக்கையிலே மற்றப் பொருள்களைப் பிரகாசமுள்ளதாகப் பண்ணுகிறதுபோலே ஒரே பரமாத்துமமானது தான்முடிவில்லாத ஞான சுரூபமாக விருக்கையிலே யென்னப்பட்ட அந்தக் கரணங்களிலே பிரதிபலித்து அந்தக்கரணங்க ளென்னப்பட்ட யாவையும் ஞான முடைத்தானது களாகப் பண்ணிக்கொண்டு வருமென்கிறதுக்குத் தப்பாது. இந்த உவமையினுலே தெளிவற்ற பேர்கள் தனது தப்பறைப் பக்ஷத்தைச் சித்தாந்தம்போ லொப்புவித்தார்க ளென்றெண்ணுகிறார்கள். அவர்களெதிலே மோசம்போறார்க ளென்றறியாதபோது அவர்கள் மோசம் போறவிடத்தை நாமே வெளிப்படுத்தக் கடவோம்.

அதெப்படியென்றுற் பிரகாசத்தைக் கொண்டிருக்கிறதென்கிறதுக்கும், ஞானவிருத்தியைக் கொண்டிருக்கிற தென்கிறதுக்கும் மிகுந்த வேற்றுமை யுண்டென்று சொல்லக் கடவோம். அதாவது வெள்ளை கறுப்பு இது முதலான குணங்களைக் கல்லு மரங்கள் முதலான திரவியங்கள் கொண்டிருக்கிறது போலே சூரியனிடத்தில் நின்று பிறக்கிற பிரகாசத்தை யாகாசமும் ஜலமும் மற்ற அனேக பதார்த்தங்களும் கொண்டிருக்கலா மென்கிறதுக்குத் தப்பாது. ஞானமோ வென்றுல் உயிருள்ள விருத்தியாயிருக்கக்கொள்ள அது எந்த வஸ்துவினிடத்தில் நின்று ஜெனிக்கிறதோ அந்தவஸ்துவினிடத்திலே ஆதேயமா யிருந்து அதை ஞானமுடைத்தான பொருளாகப் பண்ணுமொழிய வொருவஸ்துவினிடத்தில் நின்று பிறந்து தான்பிறந்த வஸ்துவை விட்டுப் பிரிந்து வேறொருவஸ்துவினிடத்திலே தாண்டி இதை ஞானமுடைத்தான பொருளாகப் பண்ணமாட்டாது. நோய்துக்கம் சந்தோஷம் இவை முதலான உயிருள்ள சேட்டைகள் ஒருத்த னிடத்திலே பிறந்து வேறொருத்தனிடத்திலே பாய்ந்து பாய்ந்த பொருளை நோவுஞ் சந்தோஷமு முடைத்தானதாகப் பண்ண மாட்டாததுபோல உயிருள்ள சேட்டைகளுக் குள்ளே உத்தம உயிருள்ள சேட்டையாகிற ஞானமானது தன்னைப் பிறப்பிக்கிற பொருளினிடத்திலே ஆதேயமாயிருந்து அதை ஞான முடைத்தானதாகப் பண்ணி வருமொழிய மற்றப்படியல்ல. இந்த மேரையானது சேட்டை யென்னப்பட்ட யாவுக்கு முண்டா யிருக்கையிலே உயிருள்ள சேட்டையாகிற ஞானத்தினிடத்திலேயுந் துகாணுதென்று யாதொருத்தன் சொன்னுல் அவன் முழுதும் ஞானமில்லாத மிருகத்துக்குச் சரியாயிருக்கிற னென்று சொல்லக்கடவோம். இந்தமதத்தை யனுசரிக்கிற பேர்கள் அந்தக்கரண மெந்தவிதமாக சூபமாய்ப் போமென்றும் பரமாத்துமத்தினுடைய பிரதிபிம்பமானது எந்தப்பிரகாரமாகப் பரமாத்துமத்திலே லயமாய்ப் போமென்றும் சொல்லுகிறார்களோ. அதுவல்லாமல் மனுஷனுடைய ஜீவனானது யென்றென்றைக்கும் நிற்கிற பொருளாயிருக்கிறதென்றுப் புவிக்கிற தருவாயிலே இதெல்லாம் ஆராய்ந்துப்பார்க்கக்கடவோம். இனிமேலிந் தெளிவற்ற பாவிகளினுலே இந்த விஷயத்திலே கற்பிக்கப்பட்ட வெவ்வேறு தப்பறை விசேஷங்களை வருகிற பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

௰௧-ம். பாடம்.

பராபரவஸ்து வென்கிலும் பராபரவஸ்துவினுடைய அம்சம் [illegible]மெ
னுஞ் சீவனுயிருக்கமாட்டாதென்று சிலபேர்கள் சொன்னாலும் ஆத்தும பின்னதெ
ன்று அவர்கள் சொல்லுகிறதிலே வேறேயொரு அபத்த விசேஷத்தைக் கற்பிக்கிறார்கள்
அதாவது சருவேசுரனைப்போலே ஆத்துமமானது அநாதியாயிருக்கிறதென்[று] ஸ்தா
பிக்கவருக்கி, பதி, பசு, பாச, மென்கிற மூன்றுபொருள்கள் அநாதியாயிருக்கிறதென அங்
கீகரிக்கத் தக்கதாருமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகிறதின் அர்த்தமாவது
பதி, பசு, பாச, மென்கிறது, ஒன்றுன சருவேசுரனும், சீவனும், கருமமும்; என்[று] ஸ்தா
பித்து இந்த மூன்றுங்கூட அநாதியாயிருக்க வேணுமென்று அறிவின் குறைச்சலி[னாலே]
அங்கீகரித்து இவர்கள் தனது பக்ஷத்தைப் புராண பிரமாணத்தினாலொப்புவிக்கி[றது]
தவிர வொருநியாயத்தினாலே அதையொப்புவிக்க வருந்துகிறார்கள் அதெதென்றால்.

ஆத்துமமானது உண்டாக்கப்பட்ட பொருளாயிருந்தால் அது அழிந்து போகிற
பொருளென் றங்கீகரிக்கவேணு மென்றும் மனுஷசீவனானது என்றைக்கும் நிற்கிறபொரு
ளாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கக்கொள்ள சீவனை உண்டாக்கப்பட்ட
பொருளென்று சம்மதிக்க வொண்ணாதென்றும் ஆனபடியினாலே சீவனானது சருவே
சுரனைப்போலே அநாதியாயிருக்கிறதென் றொப்புக்கொள்ளக் கடவதென்று சொல்லுகி
றார்கள். இந்தத் தப்பறையை அவர்கள் ஸ்தாபிக்கிறதுக்குச்சொல்லி வருகிற நியாயத்திலே
மோசம்போகிற விடத்தைக் காட்டக்கடவோம்.

அதினுடையதப்பின் குறைச்சலானது விளங்கும்படிக் கதியவேண்டியதாவது
நாசத்துக்குப் பாத்திரமாயிராத பொருட்களிரண்டு விதமாகப்பிரியும் ஒருவனாலே பதிக்கப்ப
டாதென்கிறது முதலாம் விதமாகும். நாசத்துக்குக் காரணமான குணத்தைக் கொண்டிரா
திருக்கிற தென்கிறது இரண்டாம் விதமென்று சொல்லப்படும். இதினொழிய நாசத்துக்கு
பாத்திரமாயிருக்கிற பொருளானது யிரண்டுவகைக்குள்ளே அடங்கும். அதெதென்றால்
அன்னியோன்னியமாய் விரோதகுணங்களைக் கொண்டிருக்கிற பொருளானது முதலாம் வ
கையிலே அடங்கின நாசத்துக்குப் பாத்திரமான பொருளென்று சொல்லப்படும். யித
ற்கேசையாகப் பவுதிக சரீரமானது அன்னியோன்னியமாய் விருத்தமான குணங்களாகிய
உஷ்ணங்குளிர் முதலானதுகளைக் கொண்டிருக்கக்கொள்ள அது நாசத்துக்குப் பாத்திரமான
பொருளென்று சொல்லக்கடவோம். இதுதவிர யாதொரு பொருளானது நாசத்துக்கு
காரணமாயிருக்கிற அன்னியோன்னிய விருத்தமான குணங்களைக் கொண்டிராதிருந்தாலும்
தான் நிற்கிறதுக்கு முன் சொல்லப்பட்ட அழிந்துபோற பதார்த்தத்தை அவசியமாய் அபே
க்ஷித்தால் நாசத்துக்குப் பாத்திரமாயிருக்கிற பொருளென்று சொல்லவேணுமொழிய ம
றப்படியல்ல. இந்தவிடைவிலே ஞானமில்லாத செந்துவினுடைய சீவனானது விரோதமான
குணங்களைக் கொண்டிராதிருந்தாலுந் தான் நிற்கிறதுக் கழிந்து போகிற சரீரத்தை அவசி
யமாயபேக்ஷிக்கிறதினால் ஞானமில்லாத செந்துக்களுடைய சீவங்களென்னப்பட்டவாகு
அழிந்துபோகிற பொருட்களென்று அங்கீகரிக்கத்தக்கதாகும்.

இது இப்படியிருக்கையிலே நரசீவனானது அழியாத பொருளாயிருக்கிறதெ
ன்று நாம் சொல்லும்போது நரசீவனானது நாசத்துக்குக் காரணமாயிருக்கிற உஷ்ண
குளிரென்கிற விரோதமான குணங்களைக் கொண்டிருக்கவில்லையென்றும் அது நிற்கிற
துக் கழிந்துபோகிற பதார்த்தத்தை அவசியமாய் பேக்ஷிக்கவில்லையென்றுஞ் சொல்லு
கிறோமொழிய வேறொரு காரணத்தினாலே அழிக்கப்படாதென்று அங்கீகரிக்கிறோமில்

அதெதென்றால் இந்தவிடைவிலே நாசத்துக்குப் பாத்திரமாகாத பொருளானது சருவேசுரனொ
ருவரேயொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யவ்வொருவரே வேறேயொரு காரணத்
தினாலே அழிக்கப்படாமல் மற்றப்பொருளென்னப்பட்ட யாவையும் அதிகாரனுமான சரு
வேசுரனுண்டாக்கினதுபோலே அத்தெல்லாத்தையும் அவர்தானே அழிக்கவல்லவரென்கிறதுக்
குத் தப்பாது. ஆதலாலே உண்டாக்கப்பட்ட பொருளெல்லாம் அழிந்துபோகவேணுமென்கிற
வாக்கியமானது முதல் விதமுள்ள அர்த்தத்தைக் கொண்டிருந்தால் மெய்யான வாக்கியமென்
றறியக்கூடுந் தப்பாது. உண்டாக்கப்பட்ட பொருளானது விரோதமான குணங்களைக் கொ
ண்டிருக்கிறதினாலே யாதொரும் அது நிற்கிறதுக் கழிந்துபோகிற பதார்த்தத்தை யபேக்ஷிக்
கிறதினாலே யாதொரும் உண்டாக்கப்பட்ட பதார்த்தம் அழிந்துபோகிற பதார்த்தமாயிரு
க்குமென்கிற அர்த்தத்தை முன்சொல்லப்பட்ட வாக்கியமானது கொண்டிருக்கிற
தானால் அதெதென்றால் யாதொரு அது நரசீவனிடத்திலே தப்பறை வாக்கியமாயிருக்கிறதெ
ன்று சொல்லவேண்டியிருக்கும். அதெதென்றால், நரசீவனானது விரோதமான குணங்
களைக் கொண்டிருக்கிறபடியினாலே யாதொரும் அது நிற்கிறதுக் கழிந்துபோகிற பதார்த்தத்
தை யபேக்ஷிக்கிறதினாலே யென்கிலும் அது நாசத்துக்குப் பாத்திரமான பொருளென்று
சொல்லக்கூடாது. ஆகையால் பசு, பாச மென்கிறதிலே யிவர்கள் வெறுமனே கற்பிக்கிற
தப்பறை [illegible] யாராய்ந்து கொண்டு ஆக்ஷேபம் பண்ணக்கடவோம். பசுவென்
கிற சத்தத்தினாலே சொல்லப்பட்ட ஆத்துமமானது அநாதியாயிருக்க யில்லையென்கிற சித்
தாந்தமானது பிரகாசிக்கிற வேதத்தினாலே யறியப்பட்டதுக் கவிர பல பல நியாயங்க
ளினாலே யொப்புவிக்கப் படலாமென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட நியாயங்களுக்கு
[illegible] யொன்றிரண்டை யெடுத்துக்காட்டுவோம். பதி, யென்கிற கடவுளோடே, பசு, பாச
மென்கிற சீவனும் அவர்களுடைய மதத்திலே கற்பிக்கிறபடி வருகிற சரீரமும் அநாதியாயிருக்
கிறதென்கிற பக்ஷமானது அறிவின் குறைச்சலின் மயக்கத்தினாலே வெறுமனே கற்பிக்கப்
பட்ட [illegible] தப்பறையாயிருக்கிறதென்று ஸ்திரமான [illegible] பிரத்தியக்ஷமாய்க்
காட்டக் [illegible] யென்றும்.

ஆத்துமமானது அநாதியாயிருக்குமென்று சொன்னோமானால் யாதொரு சரீரத்
தோடேயிருந்ததென்று சொல்லவேணும், அல்லது சீவனானது அநாதியாயிருந்தது அது
க்குப் பிற்பாடு சரீரத்தையெடுத்த தென்று சொல்லவேண்டியிருக்கும். இந்த யிரண்டில்
எந்தப் பக்ஷத்தை அங்கீகரித்தாலும் பல பல அபத்தங்களுக்குச் சம்மதப்படவேணுமென்
கிறதுக்குத் தப்பாது. அதெதென்றும் சரீரமில்லாமல் ஆத்துமமானது அநாதியாயிருந்தது
என்று சொன்னோமானால் அநேககாலம் போனபிற்பாடு சரீரத்தையெடுத்ததென்று
சொல்லவேணும். சரீரத்தை ஆத்துமமெடுக்கிறதுக்கு இவர்களுடைய மதத்தை யனு
சரித்தோமானால் கருமமுந்தியிருந்ததென்று அங்கீகரிக்கவேணும். கருமமோவென்
றால் அச்சரீரமில்லாமல் உண்டாகமாட்டாதென்று இவர்கள் சொல்லிக்கொண்டு வருகி
றதே. ஆத்துமமானது அநாதிகாலத்துக்குப் பிற்பாடு சரீரத்தை யெடுத்ததென்றும் எடுக்க
வில்லை யென்றுஞ் சொல்லக்கூடாது. இதுதவிர ஆத்துமத்துக்குச் சரீரம் வந்த வகை
யெதென்று கேட்கிறதுக் கிடைக்காதது. அதெதென்றால் தாய் தகப்பன் முகாந்
திரத்தினாலே ஆத்துமத்துக்குச் சரீரம் வந்ததென்று சொன்னோமானால் தாய்தகப்பனெ
ன்கிற யிருவர்க்குஞ் சரீரம் வந்த வகையேது? அல்லது சர்வேசுரனாலே சீவனோடே சரீ
ரங்கூடிற்றென்று சொன்னோமானால் எத்தனை ஆத்துமங்களுக்குக் கடவுள் சரீரங்களைக்
கட்டிவிட்டாரென்று முழுப்பயித்திய காரன் சொற்பனத்திலே கண்டாற் சொல்லுவா
னேயொழிய விதித்திருக்கிற புத்திமானாயிருக்கிறவன் சொல்லமாட்டானே. கடைசியாய் ஆத்து
மாக்கள் சரீரமில்லாம லநாதியாயிருந்ததென்று சம்மதித்தோமானால் ஆத்துமாக்க ளரு

திகாலத்திலே யெங்கேகிடந்து தென்றுஞ் சுகத்தையனுபவித்ததோ அல்லது துக்கத்தை யனுபவித்ததோ வென்றும் ஒப்பச்சொல்லுகிறதுக்கு லவலேசமானாலும் இடங்காணக்கூட்டாது. ஆனபடியினாலே ஆத்துமம் அநாதிகாலத்திலே சரீரமில்லாமலிருந்து அதுக்குப் பிற்பாடு சரீரத்தை யெடுத்ததென்கிற பக்ஷத்துக்குச் சம்மதப்படுகிறவன் இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட அபத்தங்களையும் அத்தொகைப்பட்ட வேறே தப்பறைகளையும் அங்கீகரிக்க வேணுமென்கிறதுக்காக அப்படிப்பட்ட பக்ஷமானது முழுத்தப்பறையா யிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படக்கூடாது. அல்லது சீவனானது அநாதியாய்ச் சரீரத்தோடே யிருந்ததென்று அங்கீகரித்தோமானால் சகல சீவன்களுஞ் சரீரத்தோடே கூடவிருந்ததோ வென்றும் இல்லாவிட்டாற் சிலதுகள் மாத்திரம் சரீரங்களைக் கொண்டிருந்ததோ வென்றுஞ் சொல்லவேண்டி யிருக்கிறதிலே யெந்த வகையாய்ச் சொன்னாலும் பித்தங்கொண்டவன் பிதற்றுகிறதுக்குச் சமானமா யிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஏதே னென்றால் ஸ்திரீ பூமான்கள் அநாதியா யிருந்தார்களானால் இருவரும் விவாகம் பண்ணிக் கூடினதும் பிள்ளை பெற்றதுமெப்போ இதிலே சொல்லத்தக்க மேரையுள்ள வார்த்தை காணமாட்டாது. அதேனென்றால் ஸ்திரீ பூமான் கூடினதினால் ஸ்திரீயானவள் கர்ப்பந் தரித்து ஒன்பதா மாதத்திலே பிள்ளை பெற்றாளென்று சொன்னோமானால் அந்த ஒன்பதாந் துமாதத்துக்கு முன்னே ஸ்திரீ பூமான் கூடிக் கர்ப்பந் தரித்ததால் அநாதிகாலமா யிருந்ததென்று சொல்லக்கூடாது. அல்லது அநாதியாய் ஸ்திரீ பூமான் விவாகம் பண்ணாமலிருந்தார்களென்று சொல்லி வெகுகாலமாகிற அனேக வருஷங்களுக்கு முன்னே விவாகப்பிரசவ மேரையுண்டென்று சொன்னோமானால் மனுஷருடைய ஜென்ம பரம்பரையானது அநாதியாயிருக்கவில்லை யென்று சொல்லவேண்டி யிருக்கிறதுந்தவிர அநாதியாயிருந்த மனுஷர் செத்துப்போன தெப்போவென்றும் செத்துப்போன பிற்பாடு அநாதிகாலத்திலே சரீரமில்லாத சீவன்கள் எவ்விடத்திலே கிடந்திருந்து தென்றும் முழுப்பயித்தியக் காரனைப்போலே தாறுமாறாய்க்குளறி அபத்தவார்த்தைகளைச் சொல்லவேண்டி யிருக்கிறதொழியப் புத்திக்கேற்றிருக்கிற ஒரு வார்த்தையானாலுஞ் சொல்லுகிறதுக் கவகாசங் கிடைக்குமென்று சொல்லக்கூடாது.

இது தவிர அநாதியாயிருக்கிற ஆத்துமாக்கள் ஒன்றில்தானே யிருக்கிற பொருளென்று சொல்லவேணும். ஒன்றில் உண்டாக்கப்பட்ட பொருள்களென்று அங்கீகரிக்கவேண்டியிருக்கும். இரண்டுஞ் சொல்லக்கூடாதபோதே ஆத்துமாக்கள் அநாதியாயிருந்ததென்று முழுமதி கெட்டவன் தனது சொற்பனத்திலே கண்ட தப்பறை விசேஷமென்று சொல்லப்படத்தக்கதாகும். அதேனென்றால் ஆத்துமாக்களானது தானேயிருக்கிற பொருள்களென்று அங்கீகரிக்கும்போது ஆத்துமாக்களுடைய இலக்கம் இம்மாத்திரமென்கிறதிலேயும் ஆத்துமாக்களுடைய ஞானமுதலான நன்மைகளிலேயும் மட்டுக்கட்டினவனார். ஆத்துமாக்களை யுண்டாக்கிறவன் ஆத்துமாக்களுடைய யிலக்கத்திலேயும் அறிக்கை முதலான நன்மைகளிலேயும் மட்டுக் கட்டவேண்டி யிருக்கையிலே ஆத்துமாக்களை யுண்டாக்கிறவனில்லாதபோதே ஆத்துமாக்களுடைய யிலக்கமும் ஆத்துமாக்களுடைய யறிக்கை முதலான நன்மைகளும் மட்டில்லாத்துகளா யிருக்கவேணும். அதெப்படியென்றால் மண் பாத்திரங்களானவைகள் இலக்கத்திலேயும் அளவு பிரமாணத்திலேயும் மட்டுள்ளதுகளா யிருக்கிறதுக்கு அவைகளை மணைகிற குலாலன் காரணமாயிருக்கிறானென்று சொல்லவேண்டி யிருக்கையிலே குலாலனில்லாவிட்டாற் பாத்திரங்களுடைய இலக்கமும் அளவும் பிரமாணமும் மட்டில்லாதவைகளாயிருக்கிறதென்று சொல்லவேணும். அந்தன்மைபோலக் கர்த்தரானவர் ஆத்துமாக்களைச் சிருஷ்டிக்கவில்லையென்று சொல்லும்போது ஆத்துமாக்களுடைய யிலக்கத்துக்கும் நன்மைக்கும் மட்டில்லையென்று சம்மதிக்கவேணும். இதன்றியே யிப்

படிப்பட்ட கர்த்தரானவர் பொருட்களை யுண்டாக்கிறதினாற் பொருள்களுக்கு முழுக் கர்த்தரா யிருக்கையிலே ஆத்துமாக்களை யுண்டாக்காதபோதே அவைகளுக்கு அவர் முழுக் கர்த்தனல்லவென்றும் சொல்லவேண்டி யிருக்கும். இப்படி சொல்லும்போது சர்வேசுரனென்றுஞ் சருவத்துக்கும் ஆதிகாரணனென்றும் முழுக் கர்த்தனென்றுஞ் சொல்லக்கூடாது. அவர் கர்த்தனாகாதபோதே ஆத்துமாக்களை யுத்தேசித்துத் தீர்வைசொல்லி அதுகளை நரகத்திலே தள்ளுகிறதுக்கும் மோக்ஷத்திலே சேர்க்கிறதுக்கும் வல்லவரா யிருக்கிறதெப்படி? இந்தவிடமாக ஆத்துமாக்களை யுண்டாக்கிறதுக்குச் சருவேசுரனானவர் வல்லவராயிராதபோதே சருவத்துக்கும் வல்லவரென்கிற நாமமானது அவருக்குச் செல்லுமென்று சொல்லவொண்ணாது. அநாதியாயிருக்கிற ஆத்துமாக்களைத் தானேயிருக்கிற பொருள்களா யிருக்கிறதென்று அங்கீகரித்தால் இப்படிப்பட்ட தப்பறைகளுந் தவிர வேறே அனேக அபத்த விசேஷங்களை அங்கீகரிக்கவேண்டி யிருக்கும். அதுகளை யெண்ணுகிறதுக்கு மாத்திரம் விஸ்தார பிரசங்கங்களைப் பண்ணவேண்டியிருக்கு மென்கிறதினால் அவைகளை நினையாமல் அப்படிப்பட்ட பக்ஷமானது தப்பறையாயிருக்கிற தென்று பிரத்தியக்ஷமாய் அறிவுள்ளவன் கண்டுபிடிக்கிறதுக்கு யித்தனை தப்பறை விசேஷங்கள் அதினாலே வருகிறதென்று சம்மதிக்கப்பட்ட தென்கிறதுபோதும். இத்தனை அபத்தங்களைச் சிலரங்கீகரியாமல் அநாதியாயிருக்கிற ஆத்துமாக்கள் சர்வேசுரனாலே யுண்டாக்கப்பட்டதுகளாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தப் பக்ஷமானது ஞாயத்துக்கும் புத்திக்கும் ஒவ்வாததா யிருக்கிறதென்று எளிதா யொப்புவிக்கலா மென்கிறதுக்குத் தப்பாது. அதேனென்றால் ஆத்துமாக்கள் சருவேசுரனாலே யுண்டாக்கப்பட்ட பொருள்களென்று அங்கீகரிக்கும்போது கர்த்தனாலே சுவாதந்திரிய மேரையாக வுண்டாக்கப்பட்டதாயிராத பொருளென்று சம்மதிக்கப்படவேணும். இந்த மேரையாக ஆத்துமாக்களுண்டாக்கப்பட்டதுகளா யிருக்கிறதென்று அங்கீகரிக்கும்போது ஆதிகாரணமான சர்வேசுரனோடே கூட ஆத்துமாக்களானதுகள் அநாதியாயிராமற் சருவேசுரனுக்குப் பிற்பாடு உண்டாச்சுதென்று நிச்சயிக்கவேணும்.

இதிலே சிலபேர்கள் மோசம்போகிறவகையை வெளிப்படுத்துக்கடவோம். அதேதென்றால், காரியகாரணத்திலே பூர்வாபர மேரை தேவையில்லையென்று சொல்லுகிறார்கள். இதிலறிய வேண்டிய விசேஷ ரகசியமாவது. காரணத்திலே நின்று காரியம் பிறக்கு மேரையானது இரண்டுவிதமாய்ப் பிரியும். அதுகளிலொன்றுக்கொன்று மிகுந்த வேற்றுமையா யிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். அப்படிப்பட்ட வேற்றுமையேதென்றால் சிலமுறை காரணமானது தனது சுபாவ மேரையாக வொருகாரியத்தைப் பிறப்பிக்கும். அப்படிப்பட்ட காரியத்தினுடைய பிறப்பானது காரணத்தினுடைய சுபாவத்துக் கவசியமாய் வேண்டியிருக்கச்செய்தே அதில்லாவிட்டாற் காரணத்தினுடைய சுபாவத்துக்குக் குறையுண்டாகும். அப்படிப்பட்ட வகையுள்ள பிறப்பை யுடைத்தான காரியமானது தனது காரணத்தோடே யேககாலத்திலே யிருக்கலாமென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே அப்படிப்பட்ட காரியகாரணத்துக்குக் காலப்பிரமாணமுள்ள பூருவாபர மேரையானது தேவையில்லை யென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட மேரையுள்ள பிறப்புந் தவிரக் காரியத்துக்கு வேறே வகையுள்ள பிறப்புண்டென்று கண்டுகொண்டுவருகிறோம். அது காரணத்தில் நின்று காரியத்தினுடைய சுபாவ மேரையுள்ள நிர்க்கமனமாகிற புறப்படுதலாயிராமற் சுவாதந்திரிய முதலான வகைகளினாலே காரணத்தில் நின்று காரியமானது பிறப்படுகிறதென்று கண்டு கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட நிர்க்கமனத்தின் விஷயத்திலே காரியகாரணத்துக்குக் காலத்தினளவிலே பூருவாபர மேரையானது அவசியமாயுண்டாயிருக்கவேணும். இதெல்லாம் அந்தரங்கக் காரணத்தில் நின்று அந்தரங்கக்காரிய.

யான்று பிறக்கும் வகையை வெளிப்படுத்தும்போது வெளியாகுமென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் சூரியனானது தனது சுபாவத்தின் மேன்மையாகப் பிரகாசத்தைப் பிறப்பிக் கிறதென்று சூரியனை காரணத்துக்கும் பிரகாசமாகிற காரியத்துக்கும் காலத்தினாலே பூர்வாபர மேன்மையான [illegible] ண்டாயிருக்கமாட்டாது. அவ்வண்ணமே [illegible] சூரியனானது பிறந்தபோதே அந்த க்ஷணத்திலே தானே தனது பிரகாசத்தைச் சூரியனானது பிறப்பிக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. சர்வேசுரனுகிற காரணத்தில் நின்று ஆத்தும மாகிற காரியமானது முன் சொல்லப்பட்ட மேன்மையாகப் பிறப்பிக்கப்பட்டபோதே சர்வே சுரனுக்கேற்பட அருமையா யிருக்கமாட்டாதென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். இப்படி சொல்லாமல் [illegible] நின்று ஆத்துமமானது அருமையாய்ப் பிறப்பட்டதா [illegible]

மா யுண்டாக்கினு ரென்கிறது அவருடைய அனந்தபெலத்துக்கு யேற்றிருக்கிற மேன்மை யுறு சொல்லவேண்டி யிருக்கச் செய்தே மனுஷனுடைய பாதியானதுமாய்க் குறை ப்பொருளுமாயிருக்கிற நரசீவன்களைச் சரீரமில்லாமல் உண்டாக்கினு ரென்று சொல் லவுங் கருதவுங் கூடாது. அதேதெனென்றால் சீவன்களில்லாத சரீரங்களை யுண்டாக்கினுரென் று சொல்லப்படாததுபோலே சரீரமில்லாத நரசீவன்களை யுண்டாக்கினு ரென்கிறது முழுத் தப்பறையா யிருக்கிறதென்றங்கீகரிக்கக் கட்வோம்.

அதேதென்றாற் பொருள்களென்னப்பட்ட யாவையுங் குறைவில்லாமல் முழு ப்பொருள்களாய்க் கர்த்தரானவ ருண்டாக்கின போதே முழுமனுஷனை யுண்டாக்காமல் மனு ஷனுடைய பாதியாகிற ஆத்துமத்தை மாத்திரஞ் [illegible] உண்டாக்கினுரென்று சொ ல்லுகிறதென்கிறது அங்கிகரிக்க [illegible] முழுத்தப்பறையா யிருக்கிறதென்று கேட் கவேணுமோ? கடைசியாய் [illegible] நன்றாய் நடக்கிறதுக்குப் பல பல அந்தஸ்துகளுள்ள மனுஷர் அவசியமாய் வேண்டியிருக்கச் செய்தே தப்பில்லாத இப்படிப்பட்ட அவசியமா ய் வேண்டின கிரமமானது அந்தந்தச் சீவனுடைய சுவாதந்திரியமுள்ள நடக்கையினாலே வந்ததென்று முழுமதிகெட்டவ [illegible] சொல்லுவானேழியப் புத்தியானு யிருக்கி றவன் இப்படிப்பட்ட தப்பறைக் குடன்படமாட்டான். அதேதென்றால் அந்தந்தச் சீவ ன் [illegible] சுவாதந்திரியத்தினாலே யிந்தவிதமுள்ள விருத்தியைப் பண்ணினுப்போலே வே றுவிதமுள்ள விருத்தியைப் பண்ணக்கூடின தென்று சொல்லவேண்டி யிருக்கிறது அப் படியே வேறேவகையுள்ள விருத்தியைப் பண்ணும்போது லோகத்திலே அதுக்குத்தக்க அந்தஸ்தில்லாதே போகவேணு மென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே லோகம் நன்றாய் நட க்கிறதுக் கவசியமாய் வேண்டின கிரமமானது தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தனுடைய திருவுளத்தின்படியே, நடந்துவருகிற தென் றங்கீகரிக்க வேணு மொழிய அந்தந்தச் சீவனுடைய சுவாதந்திரியமுள்ள நடக்கையினிமித்தமாக வந்ததென்று அறிவின் குறைச்சலினாலே சொல்லப்படு மென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றாலப்படி சொல்லும்போது இராசா, ஈசன் முதலான மனுஷனுடைய அந்தஸ்துக்கள் லோகத்திலே யில்லாதே போகத்திருக்கு தென்கிற அபத்தத்தை யங்கீகரிக்கவேணும்.

ஆத்தும விஷயத்திலே யிதுவரைக்குஞ் சொல்லப்பட்ட அபத்த விசேஷங்க ளுந் தவிர சில தெளிவற்ற பாவிகள் வேறேயொரு அபத்தவிசேஷத்தை அங்கீகரித்துக் கொண்டு வருகிறார்கள், அதேதென்றால் மாதாபிதாக்கள் நரசீவனுற்பவிக்கிறதுக்குக் காரண மா யிருக்கிறார்க ளென்று சொல்லிக்கொண்டு வருகிறதினு லப்படிப்பட்ட பேர்கள் ஞானசத்தி யுடைத்தான சீவனை யினியீரமாய்க் கொண்டிருக்கிறார்க ளென்று சொல்லத் தகும். அதேதென்றால் நரசீவனுக் குண்டான சுபாவத்தின் மகிமையைப்பார்த்து நரசீவ னனது தானிற்கிறதுக்குச் சரீரமுதலான வேறேபொருளை யபேக்ஷியாதபோதே அது உற்ப விக்கிறதுக்கு வேறேயொரு பொருளின் சுபாவத்தை யபேக்ஷியாமல் சர்வேஸ்வரனை வரே யதுக்குக் காரணமா யிருக்கிறுரென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் நரசீவனுன் துற்பவிக்கிற வகையைப் பார்க்கும்போது சர்வேஸ்வரனைவ ரொன்றுமில்லாம லிருக்கையிலேநரசீவனை யுண்டாக்கினு ரென்று சொல்லவேண்டி யிருக் கிறது. இத்தனைவிலே பொருளைப் பிறப்பிக்கிற காரணமானது அனந்தப்பெல முடைத் தானதா யிருக்கவேணும். இந்தச் சத்தியத்தை ஞானோபதேசத்தின் முதற்காண்டத்திலே விரிவாக வொப்பு வித்தோ மென்கிறதினாலே அதை யிவ்விடத்திலே திரும்ப வொப்புவிக் கிறதுக்குக் கணக்கில்லை. இந்த ஞாயத்தினாலே கொஞ்சப் பெலமுள்ள மாதாபிதாக் கள் நரசீவனைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லவர்களா யிருக்கமாட்டார்களென்று ஒப்புவிக்கப்

யழிகிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. இதன்றியே மாதாபிதாக்கள் சுக்கிலவிரத்த முதலிதுகளைக்கொடுத்து அதுகளைக்கொண்டு கர்த்தரானவர் மனுஷசரீரத்தை யுண்டாக்கிறாரென்று சொல்லவேணுமொழிய மாதாபிதாக்கள் மனுஷசரீரத்தை யுண்டாக்கிறார்களென்று சொல்லக் கூடாது. அதேதென்றால் கிரகத்தை யுண்டாக்கிறவன் கிரகத்தினுடைய அம்ஷமாகிற அங்கோபாங்கங்களெல்லா மழிகிறதுந் தவிரக்கிரகம் இடிந்துபோனால் அதை திரும்பக் கட்டுகிறதுக்குச் சாமர்த்திய முள்ளவனா யிருக்கவேணும். அந்தன்மைபோல மாதாபிதாக்கள் மனுஷசரீரத்தைப் பிறப்பிக்கிறார்களென்று சொன்னோமானால் மாதாபிதாக்கள் மனுஷசரீரத்திலுண்டான எலும்பு நரம்புகள் முதலான அம்ஷங்களை யழிகிறதுக்கல்லாமல் அப்படிப்பட்டசரீரத்தினுடைய அம்ஷங்களுக்குள்ளே யாதொரு அம்ஷமானது கெட்டுப்போனால் அதைத் திரும்ப வுண்டாக்கிறதுக்குத் தகுந்த சாமர்த்திய முள்ளவர்களாயிருக்க வேணும். அவர்களுக்கு யிப்படிப்பட்ட சாமர்த்திய மில்லாத போதே மாதாபிதாக்கள் மனுஷசரீரத்தை யுண்டாக்கிறார்களென்று சொல்லுகிறதுக் கிடங்காணமாட்டாது. மனுஷனுக்குண்டான நீசபொருளாகிற சரீரத்தைப் பிறப்பிக்கிறதுக்கு மாதாபிதாக்கள் சாமர்த்திய மில்லாதபேர்களா யிருக்கிறபோதே மிகவும் உத்தம பொருளாகிற நமவேனை மாதாபிதாக்கள் பிறப்பிக்கிறார்களென்று முழுமதிகெட்ட[illegible] சொல்லமாட்டான்.

கடைசியாய்ப் பூதியங்களுடைய கூட்டுறவானது நாசிவனா யிருக்கிறதென்று சொன்னோமானால் வேறேயனேக அடுத்த விசேஷங்களுக்குச் சம்மதப்பட வேண்டியிருக்கும். அதேதென்றால் பூதியங்களினாலே கூடின யதார்த்தமானது சடபதார்த்த மென்றுஞ் சரீரமென்றுஞ் சொல்லப்படு மென்றிருக்கச் செய்தே பூதியங்களுடைய கூட்டுறவானது சீவனென்று சொல்லப்பட்டால் கிரியையில்லாத சடபதார்த்தத்துக்கும் பல பல கிரியைகளுக்குக் காரணமாயிருக்கிற சீவனுக்குஞ் சுபாவ சொரூபத்திலே வேற்றுமை யில்லை யென்கிற அபத்தத்தை யங்கீகரிக்கவேணும். இதன்றியே பூதியங்களுடைய கூட்டுறவானது நாசிவனாயிருக்கிற தென்று சொல்லும்போது நாசிவனானது தானிருக்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷிக்கிறதென்று சந்தேகமற யங்கீகரிக்கவேணும். ஆதலாலே மனுஷர் மரணத்தினிமித்தியமாக நாசிவனானது அழிந்துபோமென்று சம்மதப்படுகிறதுக்கு ஒக்கும். அப்படியே மனுஷனுடைய மரணத்தினிமித்தமாக ஆத்துமமானது அழிந்துபோமென்று சொன்னோமானால் தபசுமுதலான தர்ம சரித்திரங்களிலே பிரயாசைப்படுகிற தென்கிறது நிஷ்பலமாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் நம்முடைய ஆத்துமமானது சரீரத்தை விட்டுப் பிரிந்தபிற்பாடு அதுவும் அழிந்துபோனால் அது அடையத்தக்க பரலோகமில்லை யென்று சொல்லவேணும். அது அடையத்தக்க பரலோக மில்லாவிட்டால் இனிமேல் வரத்தக்க ஆக்கினைக்கு மனுஷனானவன் பயப்படாமல் தனதிச்சைப்படியே கைக்கெட்டின பாவமெல்லாம் பண்ணி அது நிமித்தமாக வரத்தக்க சுகத்தை யிச்சிக்கிறதுக்குக் கணக்கேது. அந்தடைவிலே மனுஷனுடைய ஆத்துமத்துக்குப் பரலோக மில்லாவிட்டால் சர்வபரித்தியாகத்தினாலே வெகுமானத்தையும் ஐஸ்வரியத்தையுஞ் சரீரத்துக்கான ஸ்திரிபோக முதலான சுகத்தையு மனுஷனானவன் விட்டு யிவ்வுலோகத்திலே பலத்தை யனுபவியாமல் தபசு முதலான பல பல தர்மங்களைப் பண்ணுகிறதிலே யெண்ணப்படாத பிரயாசைகளையுங் கஸ்திகளையும் அவனனுபவிக்கத் தக்கதாகத் துணிகிறதுக்கு வேண்டின ஞாயங் காண்பிக்கிறதரிது.

இதுதவிர மரணத்துக்குப் பிற்பாடு மனுஷனுடைய ஆத்துமமானது அழிந்துபோய் நில்லாவிட்டால் இவசத்திலே செப தப தான தர்மங்களைச் செத்தவர்களுக்காக என்னடத்த வேணும். அதேதென்றால் இவசத்திலே பண்ணப்படுகிற செப முதலான தருமங்

களானவைகள் மண்ணாய்ப்போன சரீரத்துக் குதவு மென்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே அவையெல்லாஞ் சரீரத்துக்காகப் பண்ணப்படுகிற தென்று சொல்லத்தகாது. அந்தன்மைபோல் மரணநிமித்தியமாக மனுஷசரீரம் நாசமாய்ப் போனது போலே மனுஷனுடைய ஆத்துமம் அழிந்துபோனால் அப்படி அழிந்துபோன ஆத்துமத்துக்குத் இவசத்திலே பண்ணப்படுகிற செப தப தான தருமங்களுதவாதென்று சொல்லக் கடவோம். ஆதலாலே செத்தவனுடைய சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் இவசத்திலே பண்ணப்படுகிற செப தப தான முதலான தருமங்களுதவாதபோது அதெல்லாஞ் செத்தவனுக்கென்று முதலாம விருக்கிறதினால் செத்தவனுக்காக அதெல்லாம் நடத்துகிறது மிகவு மறிவின்குறைச்சலாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே ஆத்துமமானது அழிந்து போகிற பொருளா யிருக்கிறதென்று அங்கீகாரம் பண்ணினோமானால் இத்தொகைப்பட்ட வேறேயனேகந் தப்பறை விசேஷங்களுக்குச் சம்மதிக்க வேண்டியிருக்கிறதினால் மனுஷனுடைய ஆத்துமமானது யென்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிற தென்றங்கீகரிக்கத்தக்க சத்தியமா யிருக்கிறதொழிய அது அழிந்துபோகிற பொருளாயிருக்கிறதென்று சொல்லுகிறது முழுத்தப்பறையா யிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இந்தச்சத்தியமானது மிகவும் விளங்கி அவனவன் கண்டுபிடிக்கிறதுக்கு முன் கொஞ்சத்துக்குள்ளே நம்மால் சொல்லப்பட்டதைத் தானே யின்னமுந்திரும்ப விரிவாக வெளிப்படுத்தக் கடவோம். அதேதென்றால் அழிந்துபோகிறபொருட்களேதென்றும் அழியாதபொருளேதென்றும் முந்த முந்த நாம் வெளிப்படுத்தி மனுஷனுடைய ஆத்துமமானது அழியாத பொருளாயிருக்கிற தென்று எந்த ஞாயங்களினாலே கண்டுபிடிக்கலா மென்று கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக் காட்டுவோம். அழியாத பொருளாவது இன்னதென்று நிற்செயம் பண்ணின பிற்பாடு அழிந்துபோகிற பொருளேதென்று எளிதாய் நிச்சயம் பண்ணலா மென்கிறதினால் அழியாத பொருளேதென்று முந்த முந்தக்காட்டக் கடவோம்.

அழியாத பொருளான திரண்டு வகைக்குள்ளே யடங்கு மென்று சொல்லத்தகும். அவை யிரண்டில் எந்தெந்தப் பெலத்தினாலேயும் அழிக்கப்படாத வஸ்துவானது முதலாம் வகையாகும். இத்தடைவிலே அழியாதபொருளை விசாரிக்கு மிடத்தில் ஒன்றான சர்வேஸ்வரன் மாத்திர மழியாத பொருளென்று சொல்லக் கூடுமொழிய வேறேபொருளான அழியாத பொருளென்று சொல்லப்படாது. அதேதென்றால் ஒன்றான கர்த்தரானவர் தனியாயிருக்கிறாரென்கிறதினால் தமக்குண்டான ஸ்திதியை மற்றொரு பொருளின் கையிலே வாங்கவில்லை யென்று சொல்லக்கடவோம். வேறேயொரு பொருளின் கையிலே கர்த்தரானவர் தமக்குண்டான ஸ்திதியை வாங்காதபோதே யவருக்குண்டான யப்படிப்பட்ட ஸ்திதியைக் கொடுக்கிறதுக்கானாலுங் கெடுக்கிறதுக் கெ[illegible]ருக்கிற வேறேயொரு வஸ்துவானது காணமாட்டாது. அவ்வண்ணமே யொன்றான சர்வேஸ்வரன் மாத்திரம் இத்தடைவிலே அழியாத பொருளென்று சொல்லக் கூடுமொழிய மற்றுண்டான பொருளென்னப்பட்ட யாவுஞ் சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்டதினால் அவராலே அழிக்கப்படலாமென்று சொல்லக் கடவோம். ஆனபடியினாலே சொல்லப்பட்ட யிந்தவகையின் அழியாத பொருளினுடைய பேரானது பராபரவஸ்துவுக்கு மாத்திரஞ் செல்லுமொழிய மற்றுண்டான பொருளென்னப்பட்டயாவுக்கும் இந்தடைவிலே அழியாத பொருளின் பேரானது செல்லமாட்டாததினால் இந்த மேரையிலே யுண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்ட தெல்லாம் அழிக்கப்படலான பொருளாயிருக்கிறதென்கிற வாக்கியமானது அங்கீகரிக்கத்தக்க குறையற்ற சத்தியமென்று சொல்லத்தகும். இந்தடைவிலே யழியாத பொருளின் வகையைத் தவிர வேறே வகை[illegible] அழியாத பொருளேதென்று அங்கீகரிக்கவேணும்.

அதாவது பராபரவஸ்துவினாலே யுண்டாக்கப்பட்ட பொருளாயிருந்து அவருடைய அளவில்லாத பெலத்தினாலே அழிக்கப்படலான பொருளாயிருந்தாலும் அப்படிப்பட்ட பொருளானது தான் நாசமாய்ப்போகிறதுக்கு நாசத்துக் காரணம் என இயாதொன்றுண்டே. அத்தைத் தன்னிடத்திலே கொண்டிருக்கிறதுமில்லைத் தான் நிற்கிறதுக்கு நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற பொருளை அபேக்ஷிக்கிறதுமில்லை. அப்படிப்பட்ட பொருளிரண்டாம் வகையான அழியாத பொருளென்று சொல்லக்கடவோம். இதெல்லாந் துலக்கமாக விளங்கும்படிக்கு இதிலே அறியவேண்டின தெல்லாம் கிரமத்தோடே யிப்படியே வெளிப்படுத்தவேணும். இயாதொரு பொருளுக்குப் பகையுள்ள வேறே யொரு பொருளுண்டென்று கண்டோமானால் அப்படிப்பட்ட சத்துருவினாலே ஜெயிக்கப்படலாமென்று கண்டு பிடிக்கவேணும். வேறே யொருவஸ்துவினாலே ஜெயிக்கப்படலா மென்றபோதே அப்படிப்பட்ட பொருளானது அழிக்கப்படலான பொருளென்று அங்கிகரிக்கக்கடவோம். அவ்வண்ணமே உஷ்ணங்குளிர் இவ்விரண்டும் அன்னியோன்னியமாய் விரோதமாயிருக்கக்கொள்ள உஷ்ணகுணத்துக்குக் குளிரானது பகையாயிருக்கிற தென்றுங் குளிரென்கிற குணத்துக் குஷ்ணமானது பகையாயிருக்கிற தென்றும் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட சத்தியமாகும். பின்னையுங் குளிருக்கு முஷ்ணத்துக்கும் பகையா யிருக்கிறபோதே குளிரானது யுஷ்ணத்தினாலே ஜெயிக்கப்படலா மென்கிறதுக்கும் உஷ்ணமானது குளிரினாலே ஜெயிக்கப்படலா மென்கிறதுக்குந் தப்பாது. ஆனபடியினாலே யுஷ்ணங்குளிர் இரண்டும் அழியத்தக்க பொருளென் றங்கிகரிக்கவேணும். உஷ்ணத்திலேயுங் குளிரிலேயுஞ் சொல்லப்பட்ட அடைவை நாசகர்கம் என்கிற யிரண்டுகுணங்களிலேயோசிக்கக்கடவோம். ஆதலாலே யுஷ்ணங்குளிர் முதலான நாசகுணங்களானதுகள் நாசமாய்ப் போகத்தக்கதுகளா யிருக்கக்கொள்ள உஷ்ணங்குளிர்முதலான குணங்களைக்கொண்டிருக்கிற பொருளானது நாசமாய்ப் போகிறதற்கான காரணத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்லவேணும். ஆதலால் அது அழிந்துபோகிற பொருளா யிருக்கிற தென்று அங்கிகரிக்கவேணும். அவ்வண்ணமே பூமியிலே காணப்பட்ட சரீரங்களெல்லாம் உஷ்ணங்குளிர் முதலானதுகளைக் கொண்டிருக்கக் கொள்ளப் பூமியிலே யுண்டாயிருக்கிற சரீரமென்னப்பட்டயாவுந் தானழிந்து போகிறதுக்கான காரணத்தைக் கொண்டிருக்கிற தென்கிறதுக்காகப் பூமியிலே யுண்டாயிருக்கிற சரீரமென்னப்பட்ட தெல்லாம் அழிந்துபோகிற பொருளாயிருக்கிற தென்றெண்ணிக் கொள்ளத்தக்க சத்தியமாகும். ஆனால் உஷ்ணங் குளிர் [illegible]ண்டிராத பொருளானது தானிற்கிறதுக் குஷ்ணங் குளிர் முதலான குணங்களைக் கொண்டிருக்கிற பொருளானது அவசியமாய் வேண்டியிருந்தால் உஷ்ணங் குளிர் முதலான குணங்களைக் கொண்டிருக்கிற [illegible]களை யபேக்ஷிக்கிற அப்படிப்பட்ட பொருளானது அழிந்துபோகிற பொருளாயிருக்கிற தென்றே அங்கிகரிக்கவேணும். இந்தவிதமே ஞானமில்லாத ஜெந்துவினுடைய சீவனானது அழிந்துபோகிற பொருளென்று சொல்லவேணும். அதேதென்றா லப்படிப்பட்ட சீவனானது உஷ்ணங் குளிர் முதலான குணங்களாகிற நாசகாரணத்தைக் கொண்டிரா திருந்தாலும் அப்படிப்பட்ட நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானது அந்தச் சீவனானது நிற்கிறதுக் கவசியமாய் வேண்டியிருக்கிறதினாலே நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானது அழிந்துபோகிற பொருளென்று சொல்லப்படுமாப் போலே ஜெந்துவினுடைய சீவனானது தானிற்கிறதுக்கு அப்படிப்பட்ட சரீரத்தை அபேக்ஷிக்கிறபோது அந்தச் சீவனானது அழிந்துபோகிற பொருளென்று சொல்லத்தகும்.

அதெப்படியென்றால், கோபுரமானதுதான் நிற்கிறதுக்கு அஸ்திவாரம் வேண்டியிருக்கிறதினால் அந்த அஸ்திவாரமுண்டானால் மாத்திரம் கோபுரமானது நிற்குமென

றும் அஸ்திவாரம் யில்லாவிட்டால் அது நிற்கமாட்டா தென்றுஞ் சொல்லப்படும். இது இப்படி யிருக்கையிலே கோபுரத்தின் அஸ்திவாரமானது இடிந்து போகலானதா யிருந்தால் அப்படிப்பட்ட அஸ்திவாரத்தை யபேக்ஷிக்கிற கோபுரமானது இடிந்து போகலான கோபுர மென்று அங்கிகரிக்கத் தக்கதாகும் அத்தன்மைபோல ஜெந்துவினுடைய சீவனானது நிற்கிறதுக்கு அழிந்துபோகிற சரீரம் வேண்டியிருக்கிறதினால் அழிந்து போகிறசரீரம் அழியாத நாள்மட்டும் ஜெந்துவின் சீவனானது நிற்குமென்று சொல்லவேணும் சரீரமானது அழிந்துபோனால் ஜெந்துவின் சீவனானது நிற்கமாட்டாமல் அழிந்துபோ மென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அவ்வண்ணமே நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானதும் தான் நிற்கிறதுக்கு அப்படிப்பட்ட சரீரத்தை அவசியமா யபேக்ஷிக்கிற பொருளானதும் இந்தப் பொருள்க ளிரண்டும் அழிந்துபோகிற பொருள்களென்று சொல்லக்கடவது.

இதெல்லாம் இந்தவண்ணமா யிருக்கையிலே மனுஷனுடைய ஆத்துமமானது உஷ்ணங்குளிர் முதலான குணங்களாகிற நாசகாரணமாயிருக்கிற குணங்களைக் கொண்டிராமலிருக்கிறதுந் தவிர அது நிற்கிறதுக்கு நாசகாரணத்தைக் கொண்டிருக்கிற சரீரமானது [illegible]யாத போதே மனுஷனுடைய சீவனானது அழியாத பொருளென்று சொல்லக்கூடு மொழிய சரீரமுஞ் ஜெந்துவினுடைய சீவனும்போலே அது அழிந்துபோகிற பொருளா யிருக்கிற தென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. ஆனால் மனுஷனுடைய ஆத்துமமானது அழியாத பொருளாயிருக்கிற தென்று முந்த இந்த ஞாயத்தினால் ஒப்பச் சொல்லக்கடவோம்.

சீவனென்னப்பட்ட யாவும் முன்சொல்லப்பட்ட சேட்டைகளுக்குக் காரணமா யிருக்கவேணுமென்கிறதினாலே சேட்டைகள் நிமித்தமாகச் சடபதார்த்தத்துக்குச் சீவனது வேற்றுமையா யிருக்கிறதென்று சொல்லவேணும். அவ்வண்ணமே சடபதார்த்தமானது முன்சொல்லப்பட்ட சேட்டைகளுக்குக் காரணமா யிருக்கமாட்டாததுபோலே சீவனானது முன்சொல்லப்பட்ட சேட்டைகளுக்குள் ஒன்றுக்காகிலுங் காரணமா யிருக்கவேணுமொழிய வொருசேட்டைக் கென்கிலுங் காரணமாகாம லிருக்கமாட்டாது. இது இப்படியிருக்கையிலே சீவனானது சேட்டையைப் பண்ணுகிற நாள்மட்டும் அது நிற்கு மென்று சொல்லவேணுமொழிய சேட்டை பண்ணக்கூடாத அவஸ்தைவந்தால் சீவனானது சுபாவமாய் நிற்கக்கூடா தென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதேதென்றாற் சீவனானது சடபதார்த்தமா யிருக்கமாட்டா தென்பது குன்றாத சத்தியமா யிருக்கையிலே [illegible]பண்ணுகிற நிமித்தியமாகச் சீவனானது சடபதார்த்தமா [illegible] சேட்டைக ளில்லாமற் சீவனானது நிற்கலாமென்று சுவத்தினாலே சொன்னோமானாற் சீவனானது சீவனில்லாத சடபதார்த்தமா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. அவ்வண்ணமே சேட்டைபண்ணாத சீவன் சுபாவமா யுண்டாயிருக்கலா மென்று அங்கிகரித்தோமானாற் சீவனானது சடபதார்த்தமா யிருக்கலாமென்று அங்கிகரிக்கிறதுக்கொக்கும். இப்படிப்பட்ட அபத்தமுதலான வேறே அபத்தங்களுக்குச் சம்மதியாத வண்ணஞ் சீவனானது எத்தனை நாள் யாதொரு விருத்திக்குக் காரணமாயிருக்கக்கூடுமோ அத்தனை நாள் சீவனானது நிற்குமென்று சொல்லவேணுமொழிய ஒரு விருத்தியானாலும் பண்ணக்கூடாத அவஸ்தை வந்தால் அப்படிப்பட்ட சுறுவாயிலே சீவனானதில்லாமற் சுபாவமாயழிந்து போகவேணுமொழிய சடபதார்த்தம்போல் ஒரு சேட்டையானாலும் பண்ணாமற் சீவனானது நிற்கலாமென்கிற அங்கிகாரமானது சீவனுடைய சுபாவத்துக்கும் ஞாயத்துக்கும் ஒவ்வாதென்று சொல்லக்கடவோம்.

இது இந்த விஷயத்திலே தப்பில்லாக் கிரமமுங் குன்றாத சத்தியமுமா யிருக்கையிலே அப்படிப்பட்ட சத்தியத்தினாலே யூகிக்கத்தக்க விசேஷங்களாவன. விருக்ஷத்தினுடைய சிவனானது வளர்த்திக்கும் பூக்கிறதுக்கும் இது முதலான சேட்டைகளுக்கு மாத்திரங் காரணமாயிருக்கையிலே அதுக்குச் சரீரமாகிற யோக்கியமான வேர் தூர் இது முதலானதுக ளில்லாவிட்டால் அத்தொகைப்பட்ட சேட்டைகளை விருக்ஷத்தின் சிவனானது பண்ண மாட்டாதபோதே அப்படிப்பட்ட சரீரம் ஆனகுணங்களோடே கூடயிருக்கிற நாள் மட்டும் மாத்திரமாயிருக்கிற அந்தச் சிவனானது முன் சொல்லப்பட்ட தனது சேட்டைகளைப் பண்ணு மென்கிறதுக்குத் தப்பாது. அல்லது அப்படிப்பட்ட சரீரம் ஆனகுணங்களைவிட்டு அழிந்துபோனால் விருக்ஷத்தின் சிவனானது சேட்டை பண்ணக் கூடாததினால் அத்தறுவாயிலே முன் சொல்லப்பட்ட ஞாயத்தினாலே விருக்ஷத்தின் சிவனானது அழிந்துபோமென்று ஒப்புக்கொள்ள வேணுமொழியத் தனது சேட்டையில்லாமல் அப்படிப்பட்ட சிவனானது நிற்கலாமென் றங்கீகரிக்கக்கூடாது. இந்தவகையிலே ஜெந்துவினுடைய சிவனானது வளர்த்தியையும் பஞ்சேந்திரியத்துக் கடுத்த பார்வை முதலான சேட்டைகளையுஞ் சரீர சம்மந்தமா யிருக்கிற உள்ளிந்திரியங்களுடைய விருத்திகளையும் பண்ணுகிறதுக்கு மாத்திரம் வல்லதாயிருக்கையிலே அப்படிப்பட்ட சேட்டைகளெல்லாம் ஆன சரீரமில்லாமல் உண்டாகமாட்டா தென்கிறதினால் ஆன குணங்களை யுடைத்தானதா யிருக்கிற அப்படிப்பட்ட சரீரமிருக்கிற நாள்மட்டும் அதுக்கு மாத்திரமா யிருக்கிற ஜெந்துவின் சிவனானது சரீரத்தோடேகூடத் தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிறதொழிய, அப்படிப்பட்ட சரீரமில்லாமல் தனது சேட்டைகளுக்குள்ளே ஒன்றாகிலும் பண்ணமாட்டா தென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆதலாலே ஜெந்துவினுடைய சிவனானது தனது யோக்கிய சரீரமிருக்கிற நாள்மட்டும் நிலைத்திருக்கு மென்று சொல்லவேணும். அல்லது அப்படிப்பட்ட சரீரங் கெட்டுப்போய்ச் சிவனுக்கு அது பாத்திரமா யிராமல் அதனோடேகூட சிவனானது இருக்கக்கூடாத அவஸ்தை வந்தால் ஜெந்துவினுடைய சிவனானது கூட அழிந்துபோகு மென்று அற்பச் சந்தேகமானாலு மில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமா யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இது நிமித்தமாக ஜெந்துவினுடைய சிவனானது பூமியிலே திரிகிறநாள்மட்டும் பாவ புண்ணிய விஷயக ஞானமில்லாததினாற் பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிராதென்று சொல்லக்கடவோம்.

இதன்றியே தனது சரீரத்தோடேகூட அப்படிப்பட்ட சிவனானது அழிந்துபோ மென்கிறதினால் பாவபுண்ணியத்துக் கொத்தவண்ணம் ஆக்கினை சம்பாவனை அது அனுபவிக்கத்தக்கதாக அதுக்குப் பரலோக முண்டென்று மதிகெட்டவனா யிருக்கிறவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. மனுஷனுடைய சிவனானவென்றால் தனது சரீரத்துக்குமாத்திரமா யிருந்தாலுந் தனது சரீரத்தோடே கூடயிருந்து வளர்த்தி முதலானதுகளையும் பஞ்சேந்திரியங்கள் முதலான சேட்டைகளையும் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதுந் தவிர சரீர சம்மந்தமாயிராத ஞானவிருத்திகளையுஞ் சரீரமில்லாத விஷயங்களை வேணும் வேண்டாமென்கிற சேட்டைகளையும் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிற தென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சேட்டைகளைக் குறையற்ற பிரகாரமா யுண்டாக்கிறதுக்குச் சரீரமானது விக்கினமாயிருக்கிறதென்று அனுபவசித்தியினாலே யறிகிறோ மென்கிறதினால் அப்படிப்பட்ட ஞானமுதலான விருத்திகளை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குச் சரீரமானது அவசியமாய் வேண்டியிருக்கிற தென்று சொல்லக்கடவோமல்ல. ஆதலாலே மனுஷனுடைய சிவனானது தனது சரீரத்தோடே கூட யிருக்கையிலே யித்தொகைப்பட்ட ஞான முதலான விருத்திகளை யொருவிதமாகப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருந்தாலுந் தனது சரீரத்தைவிட்டால் ஞான முதலான விருத்திகளை நன்றாகப்

பண்ணுகிறதுக்கு விக்கினமில்லாத பெலமுடையதா யிருக்குமொழிய மற்றப்படியல்ல. அப்படி மனுஷனுடைய சிவனானது சரீரமில்லாமல் தனது சேட்டைகளைச் சமர்த்தமாக பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதினால் அது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும் அழிந்துபோகாமல் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளா யிருக்கிறதென்று அங்கீகரிக்க வேணுமொழிய ஜெந்துவினுடைய சிவனைப்போலே சரீரமில்லா திருந்தால் அழிந்துபோகு மென்று சொல்லுகிற தென்கிறது மனுஷனுடைய சுபாவத்துக் கொவ்வாத விசேஷமா யிருக்கிறதுந் தவிர வேறே மகாமகாப்பட்ட ஞாயங்களுக்கு விருத்தமா யிருக்கக்கொள்ள மனுஷனுடைய சிவனானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும் அது நிற்குமென்று சொல்லக்கடவோமொழிய அது அழிந்துபோகு மென்கிற முழுத் தப்பறை விசேஷத்தை அங்கீகரிக்கக்கடவோமல்ல.

அவ்வண்ணமே மனுஷ சிவனானது சரீர சம்மந்தமாயிராத ஞான முதலான விருத்திகளைப் பண்ணுகிறதுக்குப் பலமுடைத்தானதா யிருக்கிறதினால் இந்த லோகத்திலே திரிகிற நாள்மட்டும் பாவபுண்ணியத்தைக் கட்டிக்கொள்ளுகிறதுக்கு வல்லதா யிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. மனுஷ சிவனானது பாவபுண்ணியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறபோதே பாவபுண்ணியத்துக்கொத்த வண்ணம் ஆக்கினை சம்பாவனையை அநுபவிக்கத்தக்கதாக மறுலோக முண்டென்று அற்ப சந்தேகமானாலும் இல்லாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே மனுஷனுடைய சிவனானது உஷ்ண முதலான குணங்களாகிற நாச காரணங்களைக் கொண்டிராமல் நாசகாரணங்களைக் கொண்டிருக்கிற சரீரமானது மனுஷனுடைய சிவனானது நிலையாய் நிற்கிறதுக்கு வேண்டியிராதபோதே மனுஷ சிவனானது என்றென்றைக்குஞ் சுபாவமாக நிற்கத்தக்க பொருளாயிருக்கிற தொழிய அழிந்துபோகிற பொருளா யிருக்கிறதென்று சொல்லக்கடவோமல்ல. இப்படிப்பட்ட நர சிவனானது சுபாவமாக அழியாத பொருளாயிருக்கச் செய்தே யிதுக்கடுத்த விஷயத்திலே ஒரு விசேஷத்தின்பேரிலே கவமாயிருக்கிற வித்தியாபராகர்களு வாதத்தைப் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குண்டான சந்தேக நிவாரணம்பண்ணினோமானால் அப்படிப்பட்ட நிவாரணமானது யிற்றை வரைக்குஞ் சொன்ன சத்தியத்தை யொப்புவிக்கிறதுக்கு மிகவு முதவு மென்கிறதினால் அதெல்லாம் வருகிற பாடத்திலே யடைவாக வெளிப்படுத்தினபிற்பாடு யிந்தப்பாடத்திலே நம்மாற் சொல்லப்பட்ட சில ஞாயங்களைத் திரும்பச்சொல்லி அதுகளுக்குச் சில விசேஷங்களைக் கூட்டி மனுஷன் கரையேறுகிறதுக்குமிகவும் அறியவேண்டின இந்தச் சத்தியமானது இன்னமதிக மதிகமாக விளங்குகிறதுக்கு வேறே சில ஞாயங்களை வருகிற மூன்றுபாடங்களிலே தெரிவிக்கக் கடவோம்.

௰௨-ம். பாடம்.

நரசிவனனது சுபாவமாக நிற்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷியாத பொருளாயிருக்கிறதினால் அது அழியாதபொருளா யிருக்கிறதென் றொப்புவிக்கப்படுகிறதென்று சொன்னோம். இதிலேகவமாயிருக்கிற சிலவித்தியாபாரகராயுள்ளபேர்கள் ஒரு சந்தேகத்தை யாராய்ந்து கொள்ளத் தக்கதாகத் தாங்களிடம் பண்ணிக்கொண்டு சித்தாந்த மின்னதென்று நிச்சயம் பண்ணாத வாதத்தை) பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குள்ளே சிலர் அங்கீகரிக்கிற பக்ஷமாவது நரசிவனனது சுபாவமாக நிற்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷியா திருந்தாலுஞ் சர்வேஸ்வரனுடைய அளவில்லாத பெலமுள்ள திருவுளமானது நரசிவனனது நிற்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷிக்கத் தக்கதாகப் பண்ணலாமென்று அங்கீகரிக்கிறார்கள். ஆதலாலே சுபாவமா யழியாத பொருளாகிற நரசிவனன் சர்வேஸ்வரனுடைய பெலத்தினாலே மிருகங்களுடைய சீவனைப்போலே யழிந்து போகிற பொருளாய்ப்போகலாமென்று சொல்லப் பட்டாப்போலே யாச்சுது. இந்தப்பக்ஷத்தை யொப்புவிக்கிற ஞாயமாவது குணமான பரிமாணமானது தானிருக்கிறதுக்குச் சுபாவமா ஆதாரமாகிற திரவியத்தை யபேக்ஷித் திருந்தாலுஞ் சர்வேஸ்வரனுடைய அளவில்லாத பெலத்தினாலே அப்படிப்பட்ட பரிமாணமானது திரவியமாகிற ஆதாரத்திலே ஆதேயமா யிராமல் வேறே யாதாரமான பொருளுமில்லாம லிருக்கலா மென்கிறதுக்கு தேவோக்கித்த வேதத்தை யங்கீகரிக்கிற பேர்கள் சந்தேகப் படமாட்டார்கள். அத்தன்மைபோல ஞானமில்லாத ஜெந்துவி னுடைய சீவனனது தானிருக்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷித்திருந்தாலும் அனந்ததிவ்விய பெலத்தினாலே அப்படிப்பட்ட சீவனனது சரீரத்தை அபேக்ஷியாமற் சரீரமில்லாம லிருக்கலா மென்று சந்தேகமற அங்கீகரிக்கத்தக்க விசேஷமென்று சொல்லுகிறார்கள். ஆதலாலே யிதுக்கு விருத்த மெனையாகச் சரியான விசேஷத்தையவர்க ளங்கீகரித்து தானிருக்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷியாத நரசிவனனது திவ்விய திருவுளப்படியே அது நிற்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷித்து நாசத்துக்குப் பாத்திரமான பொருளா யிருக்கலாமென்று சொல்லுகிறார்கள். இவர்களுடைய பக்ஷமானது ஞாயத்துக் கொவ்வாததுமாய்ச் சகல பாவங்களுக்கும் வழிதிறக்கிற பக்ஷமானதுமா யிருக்குங்கொள்ள அது அங்கீகரிக்க வொண்ணாத முழுத்தப்பறையா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது.

இதெல்லாந் துலக்கமாக விளங்கும்படிக்கு அறியவேண்டின சில விசேஷங்களுண்டு அவையாவன பூமியிலே காணப்படுகிறவஸ்து வென்னப்பட்டயாவினும் இரண்டுவகையுள்ள ஆகுதலுண்டென்று சகல வித்தியாபாரகருக்குஞ் சம்மதமாகும். அதில் முதலாம் வகையுள்ள ஆகுதலானது பரிமாணமும்வர்ணம் ருசி முதலானவைகளும் ஒன்றிலே யாதேயமா யிருக்கிற தென்று கண்டு கொண்டு வருகிறோம். அப்படிப்பட்டவைகளுக்குக் குணமென்கிறபேர் செல்லுமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்டவைகளுக்கு ஆதாரமாயிருக்கிற பொருளேதனிலுமொன்றுண்டு அதுக்கு வித்தியாபாரகராயிருக்கிறபேர்கள் திரவிய மென்கிற பேரிட்டார்கள். அப்படிப்பட்ட பொருளானது சரீரத்தின் கண்ணுக்கு விஷயமாயிராத சீவனாயிருக்கிற மாத்திரையுங் காணப்படுகிற குண மென்னப்பட்ட யாவுக்கும் பிரதான ஆதாரமாயிருக்கிற உபாதான காரணமுந் திரவிய மென்று சொல்லப்படும். இதிப்படி யிருக்கையிலே முன் சொல்லப்பட்ட பக்ஷத்தையங்கீ

கரிக்கிற பேர்களினாலே சொல்லப்படுகிற ஞாயமாவது நரசிவனுஞ் செந்துவினுடைய சீவனுமென்கிற இரண்டு பொருளுந்திரவிய ரூபமான பொருட்களா யிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. செந்துவின் சீவனாகிற திரவியமானது ஆதாரமாகிற சரீரத்திலே ஆதேயமாயிருக்கிற போதே யாதாரத்திலே ஆதேயமாயிருக்கிறமெனையானது திரவியத்தின் சாதாரணமெனைக்கு அத்தியந்த விரோதமா யிருக்கிறதென்று சொல்லக் கடவோமல்ல. ஆதலாலே நரசிவனனது திரவியரூபமாயிருந்து சுபாவமாய்ச் சரீரத்திலே யாதேயமா யிராதிருந்தாலுந் திவ்வியமாய் அனந்தபெலமானது அதைச் சரீரத்திலே யாதேயமா யிருக்கப் பண்ணினாலே அது திரவிய மெனைக்கு விரோதமா யிராதிருக்கக் கொள்ள நரசிவனாந் திரவியமானது சரீரத்திலே யாதேயமா யிருக்கிற தென்கிறது அத்தவிரோதமான தென்றுந் திவ்விய பெலத்தினாலே பண்ணப்படாத விசேஷமென் றுஞ் சொல்லக் கடவோமல்ல. இப்படிப்பட்ட தப்பறைப் பக்ஷத்துக்கு அஸ்திவாரமா யிருக்கிற இந்தஞாயமானது யெதிலே சத்தியத்தை விலகித்தப்புகிற தென்றும் இந்தஞாயத்தை யங்கீகரிக்கிறபேர்களெதிலே மயங்கி மோசம் போகிறார்களென்றும் வெளிப்படுத்தக் கடவோம்.

அதெதென்றால் ஆதேயமாயிருக்கிற மெனையானது திரவியத்துக் குண்டான சாதாரண மெனைக்கு யத்தியந்த விரோதமா யிராமலிருக்கச் செய்தே யாதொரு திரவியமான பொருளானது ஆதாரத்திலே ஆதேயமா யிருக்கலாமென்று சொல்லக்கூடுமொழிய ஆதாரத்தை அபேட்சியாத திரவியமானது திவ்விய பெலத்தினாலே ஆதாரத்திலே ஆதேயமா யிருக்கலாமென்று சொல்லவுந் தருதவுங் கூடாது. அதெப்படி யென்றால் திரவிய ரூபமான பொருளானது முழுப்பொருளாயிராமற் பொருளினுடைய பாதியான மாத்திரையா யிருக்கலா மென்கிறதுக்குத் தப்பாது. அதெதென்றால் திரவிய ரூபமான நரசிவனனது முழுப் பொருளாயிராமல் மனுஷனுடைய பாதியாகிற மாத்திரையா யிருக்கக்கொள்ளத் திரவியமான பொருளின் மெனைக்குப் பொருளின் பாதியான மாத்திரையாயிருக்கிற தென்கிறது விரோதமா யிராதென்று சொல்லவேண்டி யிருக்கையிலே யாதொரு திரவியமான பொருளானது பொருளின்பாதியான மாத்திரையா யிருக்கலாமென்று சொல்லத்தகுமொழியத் திரவியமான பொருளென்னப்பட்ட யாவும் பொருளின் பாதியான மாத்திரையாயிருக்கலாமென்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே திரவியரூபமான சம்பூரணமாகிற முழுப்பொருளானது குறையுள்ள பொருளுமாய் வேறேயொரு பொருளினுடைய பாதியான மாத்திரையுமாய்த் தேவபெலத்தினாலே யிருக்கலாமென்று சொல்லக்கூடுமோ? அதில்லையே அதெதென்றால் பொருளின் மாத்திரையா யிருக்கிறதுக்கு முழுப்பொருளானது தனது சுபாவமாகிற முழுப்பொருளின் மெனையைவிட்டு விடவேணும். அப்படிச் சொல்லும்போது தனது சுபாவத்தை விட்டபொருளானது நாசமாய்ப் போகவேணுமென்கிறதுக்குத் தப்பாது. யித்தன்மையாகத் திரவியமான ஜெந்துவினிடத்திலே யிந்திரிய விருத்திகளுக்குக் காரணமானதும் ஞானமில்லாத் தனமெனையு மொன்றாய்க் கூடுமென்கிறதினாலே யிந்திரியக விருத்திகளுக்கு ஆதிகாரணமாகிற திரவிய ரூபமான பொருளினுக்கு ஞானமில்லாத மெனையானது விருத்தமா யிருக்கிறதென்று சொல்லக் கூடாது. ஆனாலப்படிப்பட்ட இந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது ஞான மெனையாகிற விசேஷந் தோட்டகூடினா லப்படிப்பட்ட இந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது. ஞானமில்லாததனமெனை யோடே இருமப்படக் கூடாமென்று சொல்லவுந் தருதவுங்

கூடாது. இதுகாரணமாக மனுஷனிடத்திலே ஐயிந்திரியக விருத்திகளுக்குக்கா
ரணமானது ஞானமேனையுள்ள விசேஷத்தோடே கூடியிருக்கச் செய்தே அப்படி
ப்பட்ட ஐயிந்திரியக விருத்திகளுக்குக் காரணமானது மிருகாதிகளிடத்திலே ஞா
னமில்லாததன மேனையுள்ள விசேஷத்தோடே கூடியிருப்போலே மனுஷனிடத்
திலே யிருக்கிற அப்படிப்பட்ட ஐயிந்திரியக காரணமானது தெய்வீகமாக தன
மேனையுள்ள விசேஷத்தோடே தேவபெலத்தினாலே கூடலாமென்று சொல்லக்
கூடுமோ ? அதில்லையே. அத்தன்மைபோல மிருகாதிக ளிடத்திலே யிருக்கிற திர
விய ரூபமான சீவனானது தான் நிற்கிறதுக்குச் சரீரத்தை அபேக்ஷித்திருந்தாலு
மனுஷனிடத்திலே யிருக்கிற திரவிய ரூபமான சீவனானது சரீரத்தை அபேட்சியா
தமேனையுள்ள விசேஷத்தோடே கூடச்சுபாவமாய்க் கூடியிருக்கச் செய்தே அப்
படிப்பட்ட சீவனானது தானிற்கிறதுக்குச் சரீரத்தை யபேக்ஷிக்கிறாமென்று
சொல்லக்கூடாது. அதேதென்றால் நரசீவனானது சரீரத்தை யபேக்ஷியாத மே
னையாகிற தனது சுபாவத்தை விட்டு மிருகாதிகளுடைய சீவன்போலே சரீர
த்தை யபேக்ஷிக்கிற மேனையோடே கூடவேணுமென்று சொல்லவேண்டியிரு
க்கிறதே யிப்படி சொல்லுகிற தென்கிறது நரசீவனானது நாசமாய்ப் போகவே
ணுமென்று சொல்லுகிறதுக் கொக்கும்.

நம்முடைய பக்ஷத்துக்கு விரோதமான விபக்ஷத்தை யனுசரிக்கிறபோ
கள் நாம்பண்ணின பிரசங்கத்தை யாக்ஷேபம் பண்ணுகிறதுக்கவர்கள் சொல்
லுகிற ஞாயமாவது நரசீவனானதுதான் நிற்கிறதுக்குச் சரீரத்தைச் சுபாவமாக
அபேட்சியாததுபோலப் புத்தியில்லாத செந்துவினுடைய சீவனானது தானிற்
கிறதுக்கு ஆதாரமான சரீரத்தைச் சுபாவமாய் அபேட்சிக்கிற தென்கிறதுக்குத்
தப்பாது. ஆனலப்படிப்பட்ட செந்துவினுடைய சீவனானது சர்வேசுரனுடைய
பெலத்தினாலே சரீரத்தை யபேக்ஷியாம லிருக்கலா மென்று சொல்லுகிறோம்.
ஆதலாலே நரசீவனானது தான் நிற்கிறதுக்குத் தேவபெலமானது சரீரத்தை
யபேக்ஷிக்கத் தக்கதாகப் பண்ணலா மென்று சொல்லக் கூடவோம். இந்த
ஞாயமானது தப்பு மேனையையும் விபக்ஷத்தை அனுசரிக்கிற போர்கள் தாங்
கள் மோசம்போய் மயங்கிற விடத்தையுங் கண்டு பிடியாததினாலிந்த ஞாய
த்தினாலே தங்களுடைய விபக்ஷத்தை நிற்கிறகத்தக்க சித்தாந்தமாக ஸ்தா
பிக்கலா மென்று விசாரிக்கிறார்கள். அப்படியினாலே நம்முடைய சத்தியமும்
அவர்கள் மோசம் போகிறவிடமும் விளங்கும்படிக்கு அறியவேண்டின சில வி
சேஷங்களுண்டு அதாவது :—

பொருளானதுதான் நிற்கிறதுக்குப் போரு மென்னப்பட்ட பெலத்தைத்
தன்னிடத்திலே கொண்டிராததினாலே வேறேபொருளைத் தனக்காதாரமா யிரு
க்கத்தக்கதாக வேண்டி யிருக்கிற தென்று சொல்லத்தகும். ஆதலால் நிலை
நிற்கிறதுக்குப் போரு மென்னப்பட்ட பெலத்தைக் கொண்டிராத பொருளை
ஆதாரமான பொருள் தாங்கிறதுபோலே அது நிலை நிற்கிறதுக் காதாரமா யி
ருக்கிற பொருளுபகாரம் பண்ணுமென்கிற ரகசிய விசேஷத்தைப் பாமரராயிரு
க்கிறபோர்கள் கண்டுபிடியா திருந்தாலும் அதைப் புத்திமான்களா யிருக்கிறபோர்
கள் கண்டுபிடிக்கக் கடவார்கள். இது யிப்படியிருக்கச் செய்தே நிலை நிற்கிற
துக்கு ஆதாரத்தை யபேக்ஷிக்கிற துற்பெலமான பொருளின் சுபாவத்தைக்
கெடாமற் கர்த்தாவானவர் தனது அளவில்லாத பெலத்தினாலே யதை யாதா
ரமில்லாம லிருக்கப் பண்ணலா மென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால்
திவ்விய பெலத்தினாலே யிப்படிப்பட்ட அற்புதமான துண்டாகு மேனையாய்

பத்தும் பத்தாய் விசாரித்தோமானால் துற்பெலமா யிருக்கிற பொருளைத் தாங்
கிறவனையாக ஆதாரமான பொருளானது துற்பெலமா யிருக்கிற பொருளானது
நிற்கிறதுக்கு உபகாரம்பண்ணுகிற சூக்ஷமான விசேஷத்தைச் சிலவித்தியாபா
கராயிருக்கிற போர்கள் கண்டு பிடியாதிருந்தாலுந் துற்பெலமான பொருளான
து நிற்கிறதுக் காதாரமான பொருளினாலே பண்ணப்படுகிற யுபகாரத்தைக்
கர்த்தாவானவர் தம்முடைய அளவில்லாத பெலத்தினாலே யதினுதாரமாயிராத
வேறே பொருளாய்க் கொண்டானாலும் தம்முடைய திவ்விய திருவுளத்தைக்
கொண்டேனாலும் பண்ணுவிக்கலா மென்று யங்கீகரிக்கும்போது ஞாயத்து
க்குந் திவ்வியமான அனந்த பெலத்துக்கும் ஏற்றிருக்கிற மேனையானது அங்
கீகரிச்சியப்படி மென்கிறதுக்குத் தப்பாது. இப்படிக்கொத்த அற்புதத்தைக்
கர்த்தாவானவர் தமதளவில்லாத பெலத்தைக் கொண்டு பண்ணும்போது துற்
பெலமான பொருளுக்கு ஆதாரத்தினாலே வருகிற யுபகாரத்தை வேறே மே
னையா யதுக்கு வரத்தக்கதாக யவர் பண்ணிக் கொண்டு வருகிறாரொழியத்து
ற்பெலமான பொருளினுடைய சுபாவத்தைக் கர்த்தாவானவர் கெடுக்கிறதுமில்
லை, அப்படிப்பட்ட துற்பெலமான பொருளின் சுபாவத்திலே கனமானவிகாரங்
களைப் பண்ணி விக்கிறதுமில்லை. ஆதலாலே திரவியத்திலே யாதேயமா யிருக்
கிற பரிமாணமானது திரவியமாகிற யாதாரமில்லாமற் கர்த்தாவா லிருக்கப்
பண்ணலாகு மென்பது ஞாயமாகினுஞ் சந்தேகமில்லாம லொப்புக் கொள்ளத்
தக்க குன்றாத சத்தியமாகும்.

அவ்வண்ணமே கர்த்தாவானவர் இந்த அற்புதத்தைப் பண்ணும்போது
பரிமாணமாகிற குணமானது நிற்கிறதுக்கு ஆதாரமாகிற திரவியத்தினாலே
வருகிறவுபகாரத்தை வேறே மேனையாக அதுக்கு வரத்தக்கதாகக் கர்த்தா
வானவர் பண்ணுகிறாரொழியப் பரிமாணமாகிற குணத்தின் சுபாவத்தைக் கர்த்
தாவானவர் கெடுக்கிறாரென்றும் அப்படிப்பட்ட குணத்தின் சுபாவத்திலே கனமா
ன விகாரங்களைப் பண்ணுகிறாரென்றுஞ் சொல்லுகிறதுக் கிடங்காணமாட்டாது.
ஆதலாலே பரிமாணமாகிற குணமானது தான் நிற்கிறதுக்குச் சுபாவமாக ஆதா
ரத்தை யபேக்ஷித் திருந்தாலுந் திவ்விய பெலத்தினாலே யாதாரமில்லாமல்
அப்படிப்பட்ட குணங்கள் முதலான குணங்களானவைகள் ஆதாரமில்லாமல்
நிற்கலாமென்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். ஜெந்துவினுடைய சீவ
னானது சுபாவமாகச் சரீரமாகிற யாதாரத்தை யபேக்ஷிக்கிற தென்று அறிந்
திருக்கிறோம். அப்படிப்பட்ட சீவனிடத்திலே யிந்தவிடைவாக யோசிக்கலாமோ
யில்லையோ வென்கிறதிலே சந்தேகப்படுகிறதுக் கிடமுண்டு. அதேதென்றால்
சுபாவமாய் ஆதாரமென்கிற சரீரத்தை யபேக்ஷிக்கிற சீவனானது சரீரத்தினுதவி
கொண்டு கிரிகைகளைப் பண்ணுமொழிய சரீரமில்லாமற் கிரிகைகளை அது பண்
ணுகிறதுக்கு வல்லதாயிராது என்றிருக்கையிலே அப்படிப்பட்ட சீவனானது
சரீரத்தைவிட்டுப் பிரிந்து கிரிகைகளைப் பண்ணமாட்டாத பொருளாயிருந்து
கொண்டு அது சீவனாகாத பொருளுமாய்ச் சீவனாயிருக்கிற பொருளுமா யிருக்க
வேணுமென்று காண்பித்திருக்கிறது. இதிலே அங்கீகரிக்கத்தக்க விசேஷமா
வது. அப்படிப்பட்ட சீவன் சரீரமில்லாம லிருந்தாலும் அது சீவனென்று சொ
ல்லப்படுகிறதுக்குச் சரீரமில்லாமல் அப்படிப்பட்ட சீவனை நிற்கத்தக்கதாகப்
பண்ணுகிற கர்த்தாவானவர் ஒன்றிற் சரீரமில்லாமல் அந்தச் சீவன் கிரிகை பண்
ணுகிறதுக்குவேறே அற்புதத்தைப் பண்ணிக்கொண்டு வரவேணும். இல்லா
விட்டாற் கிரிகையைப் பண்ணுகிறதுக் கப்படிப்பட்ட சீவனிடத்திலே யுண்டா
யிருக்கிற போக்கினையானது அது சீவனென்று சொல்லப் படுகிறதுக்குப்

போருமென்று அங்கீகரிக்கவேணும். இதிலே போம்வழியேதென்றும் அங்கீகரிக்கத்தக்க சித்தாந்தமேதென்றும் வித்தியாபாரகரா யிருக்கிற பேர்கள் பரிச்சேதம் பண்ணக் கடவார்கள்.

நரசீவனனது சரீரத்திலே யாதேயமா யிருக்கக் கூடாதென்கிற சித்தாந்தத்திலே சந்தேகப்படாததுக்கான மேலாயுள்ள ஞாயங்களைச் சொல்லிக் காட்டக்கடவோம். அதேதெனில் நரசீவனுஞ் சமமனசாகிய திரவியமான பொருளும் இந்த யிரண்டு பொருள்களும் ஆதாரமில்லாமல் இருக்கத்தக்கதாக அதுகளுக் குண்டாயிருக்கிற பலமானது அதுகளுடைய சுபாவமா யிருக்கிறதென்று அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதாரத்தை அபேக்ஷியாத அப்படிப்பட்ட பெலமாகிற சுபாவமானது ஆதேயமான தற்பெலமாய்ப் போகலாமென்று சொல்லுகிற தென்கிறது முன் சொல்லப்பட்ட குறையற்ற பெலமானது நாசமாய்ப்போக வேணுமென்று சொல்லுகிறதுக் கொக்கும். அல்லது அப்படிப்பட்ட குறையற்ற பெலமானது நாசமாய்ப்போகத் தேவையில்லையென்றங்கீகரித்தோமானால் பின்ன பேதமில்லாமல் ஒரு பொருள்தானே குறையற்ற பெலமானதுமாய்க் குறையுள்ள தற்பெலமானதுமா யிருக்கலாமென்கிற பரஸ்பர அர்த்த விரோதமான விசேஷங்களை அங்கீகரிக்கவேணும். இது காரணமாக ஆதாரத்தை அபேக்ஷியாத நரசீவனனது தனது சுபாவத்தை விட்டு நாசமாய்ப்போகாமல் திவ்விய பெலத்தினாலே யாதேயமான பொருளாய்ப் போகக்கூடா தென்கிற சத்திய விசேஷமானது யிதிலே ஒப்புக்கொள்ளத் தக்க சித்தாந்தமா யிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆதலாலே ஆதாரத்தை யபேக்ஷிக்கிற பொருளானது திவ்விய பெலத்தினாலே யாதாரமில்லாமலிருக்கலான மேலைக்கும் ஆதாரத்தை அபேக்ஷியாத பெலமாகிற சுபாவமானது யாதேயமான பொருளாய்ப் போகிறவகைக்கும் உண்டாயிருக்கிற வித்தியாசத்தைப் பத்தும் பத்தாய் விசாரிக்கக்கடவோம்.

அதேதென்றால் ஆதாரத்தை அபேக்ஷிக்கிற பொருளானது தானிருக்கிறதுக்கு வேண்டியிருக்கிற ஆதாரத்தின் உபகாரத்தைத் தேவ பெலத்தினாலே வேறே மேலாயா யடையலாமென்கிறதுக்காக ஆதாரத்தை அபேக்ஷிக்கிற பொருளானது தேவ பெலத்தினாலே ஆதாரமில்லாம லிருக்கலாமென் றங்கீகரித்துக்கொண்டு வருகிறோம. ஆதாரத்தை அபேக்ஷியாத பொருளோவென்றால் அது தனது சுபாவத்தைவிட்டுத் தான் கெட்டுப்போகாமல் ஆதேயமான பொருளாய்ப்போகமாட்டா தென்கிறதினாலே ஆதாரத்தை அபேக்ஷியாத நரசீவன் முதலான திரவியமானபொருள்கள் தேவ பெலத்தினாலே யாதேயமான பொருள்களாய்ப் போகக்கூடா தென்கிற அங்கீகாரமானது குறையற்ற ஞாயத்துக்குங் கர்த்தரானவர் தனது திவ்விய பெலத்தைக் கொண்டு நடத்தலான மேலைக்கு மேற்றிருக்கிற தென்று சொல்லவேண்டி யிருக்கிறது.

இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட ஞாயந்தவிர வேறே யொரு ஞாயத்தினாலே நரசீவனனது சரீர ஆதேயமான பொருளாயிருக்கமாட்டா தென்றொப்பிக்கக் கடவோம். அதேதென்றால் நரசீவனனது சரீர ஆதேயமாயிருக்கலாமென்று சொன்னோமானால் அப்படிப்பட்ட சீவனனது தனது சரீரத்தைவிட்டுப் பிரியும்போது அது அழிந்துபோக வேணுமென்று அங்கீகரிக்கவேணும். ஆதலாலே யிப்படிப்பட்ட நரசீவனுக்குப் பரலோக சம்மந்தமா யிருக்கிற நரக மோக்ஷமில்லை யென்று சம்மதிக்கவேணும். இந்த விசேஷமானது அங்கீகரிக்கப்பட்டால் இன்னம் வேறே யிரண்டு அபத்தவிசேஷங்களிலே சம்மதப்பட வேணும்

யிருக்கிறது. அதெப்படியென்றால் சரீரத்திலே ஆதேயமா யிருக்கிற நரசீவனனது ஞானமுஞ் சுவாதந்திரியமு முடைத்தானதா யிருக்கவேணும். ஆதலாலே முடிவில்லாத மகிமையுள்ள கர்த்தனை நிந்தித்து முடிவில்லாத பொல்லாப்புள்ள பாவத்தைப் பண்ணினால் அப்படிப்பட்ட சீவனனது தான் பண்ணின பாவத்துக்குக் கர்த்தரானவர் வேறே அற்புதம் பண்ணாமல் என்றென்றைக்குஞ் சரியான ஆக்கினை யிடமாட்டா ரென்று சம்மதிக்க வேண்டியிருக்கிறது. ஆதலாலே நரசீவனனது முடிவில்லாத பாவத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருந்தும் மீளவும் அந்தச் சீவனனது தான் பண்ணின பாவத்துக் கென்றென்றைக்குஞ் சரியான ஆக்கினை அனுபவிக்கிறதுக்கு யோக்கியதை யில்லாமலிருக்கிறதென்கிற விபக்ஷமானது பழுதற்ற ஞாயத்துக்குங் குறையற்ற திவ்விய நீதிக்கு மொவ்வாததா யிருக்கக்கொள்ள அது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். மீளவும் விபரீத மேலையாக அப்படிப்பட்ட நரசீவனனது கர்த்தன்பேரிலே குறையற்ற விசுவாசமும் பத்தியுமுண்டாய் மோக்ஷசாதகமான புண்ணியங்க ளென்னப்பட்ட யாவையும் பண்ணினாலும் அதுகளால் வருகிற பலனாகிற மோக்ஷத்தை அனுபவிக்கிறதுக்கு அந்தச் சீவனனது யோக்கியதை யில்லாததா யிருக்கிறதினால் கர்த்தனுடைய அனந்த கிருபைக்கது பாத்திரமாகாததா யிருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இந்த அபத்தங்களிலே சம்மதப்படாதபடிக்கு நரசீவனனது சரீராதேயமா யிருக்கலாமென்கிற தப்பறையான விபக்ஷத்தை முழுதும் வெறுத்து அதை நினையாம லிருக்கக்கடவோம். அதேதென்றால் அப்படிப்பட்ட விபக்ஷத்தைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானால் சகல பாவங்களுக்குங் காரணமா யிருக்கிற நாஸ்திகருடைய மதத்துக்கேறக்குறைய வழியாயிருக்கிற தென்று சொல்லலா யிருக்கிறது. அதேதென்றால் வெட்கங்கெட்ட பாவியானவன் தனது சீவனும் வேறே அனேக மனுஷருடைய சீவன்களுஞ் சரீராதேயமான பொருள்களாய்க் கர்த்தரானவர் தனது பலத்தைக் கொண்டு பண்ணினாரென்று கர்த்தரானவர் தானே அறிவித்ததினால் பாவியானவன் தானறிகிறேனென்று சொன்னானால் அப்படிப்பட்ட வெட்கங்கெட்ட பாவிக்கும் அவனையனுசரிக்கிற மதிகெட்ட மிலேச்சருக்கும்பரலோகமுண்டென்றொப்புவிக்கிறதுக்கு வழிகாணாது.

இந்தவிஷயத்திலே நம்மால் விரிவாகப் பண்ணப்பட்ட பிரசங்கத்துக்குக் காரணமேதென்றால் நரசீவனனது தானிருக்கிறதுக்குத் திவ்விய பலத்தினாலேயானாலுஞ் சரீரத்தை அபேக்ஷிக்கமாட்டா தென்றொப்புவித்த போதே சுபாவமாக அது அழியாத பொருளா யிருக்கிறதென்று உத்தமவிதமாக வொப்புவிக்கப்பட்டதென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆனால் நம்மாலொப்புவிக்கப்பட்ட சத்தியத்தை யின்னந் துலக்கமாக வொப்புவிக்கிறதுக்குப் போனபாடத்திலே சொல்லப்பட்ட சில ஞாயங்களையிதிலுஞ் சொல்லி அதுகளுக்கிந்தச் சத்தியத்தை யொப்புவிக்கிற சில விசேஷங்களைக் கூட்டக்கடவோம்.

அதெப்படியென்றால் நரசீவனனது அழியாத பொருளாயிருக்கிறதென்று சிலபேர்கள் சொல்லுகிறதுக்குச் சம்மதிக்கிறவர்களோடேகூட அது அனாதியாகத் தானேயிருக்கிற பொருளா யிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இவர்கள் மயக்கத்தினாலே தாறுமாறாகச் சொல்லுகிற விசேஷந் தப்பறை யாயிருக்கிறதென்றின்னம் வெளிப்படுத்தக் கடவோம். அதேதென்றால் பதி, பசு, அனாதியாயிருக்கிற தென்றொப்புக் கொள்ளத் தக்கதென்று சொல்லுமாப் போலே, பாசமானது கூட அனாதியா யிருக்கிறதென்று ஒப்புக் கொள்ளத்தக்க தென்று

சொல்லுகிறார்கள். இந்த ஞாயத்துக்கான பிரத்தியுத்தாரத்தை மனுஷ சீவனுடைய அழியாத பாவத்தை யொப்புவிக்குந் தறுவாயிலே சொல்லுவோமென்கிறதிலே இந்த அவசரத்திலே யிவர்களாலே கற்பிக்கப்பட்டதுகள், ஒப்புக்கொள்ளத் தக்கதா யிருக்கமாட்டா தென்றேயப்பச் சொல்லக்கடவோம். அதேதென்றால் சீவனானது தானாகவும் அனாதியாகவும் இருக்கிறதென்று சொன்னோமானால் சர்வேஸ்வரனைப்போலே அது மட்டில்லாதே சகல நன்மை சொரூபமா யிருக்கிறதென்று சம்மதிக்கவேணும். நரசீவனானது ஞான முதலான நன்மைகளிலே மட்டோடிருக்கிறதுந் தீவிர நன்மை விஷயத்திலே குறையுள்ள பொருளாயிருக்கிறதென்று அனுபவசித்தியினாலே சந்தேகமில்லாமல் அறிந்திருக்கிறோமென்கிறபோது நரசீவனானது தானாயிருக்கிற பொருளாக மாட்டாதென்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

இந்த ஞாயத்தை யிந்தவிடமாகக் கண்டுபிடிக்கலாம். ஞான முதலான நன்மைகள் நரசீவனிடத்திலே அதிகமாயிருக்கலா மென்றுங் குறைவாக யிருக்கலாமென்றும் அங்கீகரிக்கவேணு மென்றிருக்கையிலே இதெல்லாம் ஏற்றக் குறைச்சலாகாததுக்கு மட்டோடு ஞான முதலான நன்மைகள் ஆத்துமத்திலே யுண்டாயிருக்கிறதுக்கும் ஞாயமாவது:—ஆத்துமத்தை யுண்டாக்கிறவன் ஞானம் பெலம் இது முதலான நன்மைகளை மட்டோடு ஆத்துமத்துக்குக் கொடுத்தாரென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே ஆத்துமத்துக்குக் காரணமில்லாவிட்டால் நன்மை விஷயங்களிலே மட்டுக் கட்டுகிறவனில்லாதே ஆத்துமத்திலே யிருக்கிற நன்மைகள் மட்டில்லாதே யிருக்கவேணு மென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் ஆத்துமமானது தான் தனக்கு முன்னே யிருக்கமாட்டாததினால் தானே தனக்கு ஞான முதலான நன்மைகளிலே மட்டுக்கட்டிக் கொண்டு வந்ததென்று சொல்லவு மெண்ணவுங் கூடாது. அதேதென்றால் இப்படிப்பட்ட விஷயங்களிலே மட்டுக்கட்டி வருகிறதென்கிறது காரணத்துக்கடுத்த செயலாயிருக்கக்கொள்ளப் பொருளானது தான் தனக்குக் காரணமாயிருக்க மாட்டாதது போல தான் தனக்கு அதிலே யிதிலே மட்டுக்கட்டிக்கொண்டு வரமாட்டாதென்று சொல்லக்கடவது.

இது தவிர கர்த்தரானவர் ஆத்துமாக்களை யுண்டாக்கினாரென்று சொல்லாதிருந்தோமானால் ஆத்துமாக்களுடைய இலக்கமானது அம்மாத்திரமென்றும் இம்மாத்திரமென்றும் பண்ணினவனார். அப்படியே ஆத்துமாக்களுடைய இலக்கமானது அம்மாத்திர மென்றும் இம்மாத்திர மென்றும் பண்ணினவனில்லாதபோதே ஆத்துமாக்களுடைய விலக்கமானது முடிவில்லாததா யிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆத்துமாக்களுடைய சங்கியையானது மட்டில்லாதே முடிவில்லாத சங்கியையாயிருக்கிறதென்று சொல்லுகிறபோது அநேக அபத்தங்களை அங்கிகரிக்க வேண்டியிருக்கும். இதெல்லாம் ஞானோபதேசத்திலொப்பச் சொன்னோமென்கிறதினாலே இவ்விடத்திலே திரும்பச் சொல்லக் கணக்கில்லை. யிந்தஞாயத்தினாலே மாத்திரம் இவ்விடத்திலே யிவர்கள் சொல்லுகிற வார்த்தை தப்பறையென்று கண்டுபிடிக்கலாம். அதேதென்றால் ஆத்துமாக்களுடைய முடிவில்லாத கூட்டங்கள் எண்ணப்படாத சரீரங்களோடேகூட யிருக்கிறதென்று சொன்னோமானால் சரீரங்களிலே தானே பரார்த்த சங்கியை யுண்டென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். எண்ணப்படலான சங்கியைகளுக்குள்ளே யதிகமான சங்கியையானது பரார்த்த சங்கியையென்று சொல்லப்படும். ஆனபடியினாலே பரார்த்த சங்கியைக் காட்டிலும் மதிக சங்கியை யுண்டாயிருக்க

மாட்டாதென்று சொல்லவேணும். இப்படி யிருக்கிறபோது சரீரவகையிலே பரார்த்த சங்கியை கிடைக்கலாமென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் சரீரங்களிலே யங்கீகரிக்கப்படுகிற பரார்த்த சங்கியையைக் காட்டிலும் சரீரங்களுக்குண்டான ரோகங்களுடைய சங்கியையானது அதிகமா யிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். இப்படி யங்கீகரிக்கிறபோது முடிவில்லாத எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கை யுண்டென்கிற அடுத்த விசேஷத்தை யங்கீகரிக்கவேணும். இப்படிப்பட்ட அபத்தங்களை அங்கீகரியாதபடிக்குக் கர்த்தரானவர் ஆத்துமாக்களை யுண்டாக்கி அதுகளுக்கு ஞான முதலான நன்மைகளை மட்டோடே கொடுத்தருளினாரென்று ஆத்துமாக்களுடைய இலக்கத்தை இம்மாத்திரமென்று பண்ணி நன்மையிலேயுஞ் சங்கியையிலேயுந் தனது கிருபையுள்ள திருவுளப்படியே மட்டுக் கட்டினாரென்றும் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும்.

இது தவிர லோகத்திலே மனுஷருக்குள்ளே ராசாக்க முதலான கர்த்தத்துவங்களைப் பிரசைகளெல்லாங் கூடிச் சிலருக்குக் கட்டளை யிட்டதினாற் சிலர் மனுஷருக்குள்ளே கர்த்தாக்களா யிருக்கிறார்களென்று சொல்லப்படி மாப்போல ஒன்றான சர்வேஸ்வரன் சகலத்துக்குங் கர்த்தரா யிருக்கிறாரென்று சொல்ல வொண்ணாது. அதேதென்றால் உலக கட்டளைப் படியே பிரசைகள் சம்மதிக்கிறதினாலே யானாலும் பலாத்காரத்தினாலே யென்கிலும் லோகத்திலே யுள்ளராசாக்கள் கர்த்தாக்களா யிருக்கிறார்களென்று சொல்லக்கூடுமேயொழிய சுபாவமான கர்த்தனென்கிற நாமதேயம் அவர்களுக்குச் செல்லமாட்டாது. அதேதென்றால் சுபாவகர்த்தரென்கிறது ஒன்றான கடவுளுக்குச் செல்லுமொழிய மற்றப்படியல்ல. யிதுக்குக் காரணமேதெனில் சர்வேஸ்வரனானவர் தானேமாத்திரங் காரணமில்லாத வருமாய்த் தானா யிருக்கிறபொருளுமா யிருந்து மற்றுண்டான பொருளென்னப்பட்ட யாவும் நவமாயுற்பவிக்கிறதுக்கும் இருக்கிறதுக்கும் அவர் மெய்யான காரணமா யிருக்கக்கொள்ள சகலத்துக்குஞ் சுபாவமான கர்த்தரா யிருக்கிறாரென்று சொல்லக்கடவோம்.

அவ்வண்ணமே யாதாமொரு யெதார்த்தப்பொருள் உற்பவிக்கிறதுக்கும் இருக்கிறதுக்குஞ் சர்வேஸ்வரனானவர் காரணமா யிருக்க வில்லையென்று அங்கீகரித்தோமானால் அப்படிப்பட்ட பொருட்களுக்குச் சர்வேஸ்வரன் கர்த்தரா யிருக்கவில்லை யென்று அங்கீகரிக்கவேணும். ஆதலாலே லோகத்திலே சர்வத்துக்கு முடையவரா யிருக்கிற பராபரவஸ்து இல்லையென்று சொல்லவேண்டி யிருக்கும். இன்றியே சகலத்தையு முண்டாக்கிறதுக்கு வல்லவராயிருக்கிற சர்வேஸ்வரனானவர் இல்லையென்றங்கீகரிக்கக் கடவது. கடைசியாய்ச் சர்வேஸ்வரனானவர் ஆத்துமாக்களை யுண்டாக்காமல் அவைகளுக்குச் சுபாவகர்த்தரா யிருக்க வில்லையென்று சம்மதிப்பட்டோமானால் ஆத்துமாக்களை நடத்துகிறதிலேயும் ஆக்கினை சம்பாவனை அவைகளுக் கிடுகிறதிலேயுங் கர்த்தரானவர் சுபாவமாக வல்லவராயிருக்க மாட்டாரென்று சொல்லக்கடவது. ஆதலாலே சகலத்தையும் நடத்துகிற வருமாய் நீதிப்பிரகாரமாகப் பாவிகளுக்கும் புண்ணியவான்களுக்கும் ஆக்கினை சம்பாவனை தருபவருமாய்க் குறையற்ற பிரகாரமா யிருக்கிற கர்த்தரானவர் லோகத்திலே யிருக்கவில்லை யென்று அங்கீகரிக்க வேண்டி யிருக்கிறது. இந்தப்பொய்யான விசேஷங்கள் முதலான வேறே அநேக அபத்தத் தப்பறைக்கு அங்கீகார முண்டாகாதபடிக்கு ஒன்றான சர்வேஸ்வரன் மாத்திரங் காரணமில்லாத வருமாய்த் தானாயிருக்கிற பொருளுமா யிருக்கிறாரென்று அங்கீகரித்து ஆத்தும முதலான யெதார்த்த பொருளென்னப்பட்

டயாவும் நூதனமா யுற்பவிக்கிறதுக்கும் இருக்கிறதுக்கும் அவரே மெய்யா காரணரா யிருக்கிறாரென்று சந்தேகமில்லாம லங்கீகரித்து அவர்தானே சகலத்தையும் நடத்துகிற வருமாய்ப் பாவிகளுக்கும் புண்ணியவான்களுக்கும் நீதிப் பிரகாரம் ஆக்கினை சம்பாவனை தருபவருமாய்ச் சர்வத்துக்குஞ் சுபாவமான கர்த்தா யிருக்கிறாரென்று அற்ப சந்தேகமாகிலு மில்லாமல் முழு மனதோடொப்புக் கொள்ளக் கடவோம்.

இந்தச்சத்தியத்தை அங்கீகரிக்கிறதிலே வேறேதப்பறை விசேஷங்களைக் கலவாமல் ஆண்டவர் திருவுளம்பற்றின குறையற்ற ஞாயத்துக் கொத்திருக்கிற வேதத்தினாலே ஆத்துமவிஷய முதலான மற்றுமுள்ள விஷயங்களிலே யறிவிக்கப்படுகிற சத்திய விசேஷங்களைச் சந்தேக மறவிசுவாசிக்கத் தக்கதாகும். அவ்வண்ணமே சரீரத்துக்கு மாத்திரையா யிருக்கிற மனுஷனுடைய ஆத்துமத்தைச் சர்வேஸ்வரனானவர் ஒன்று மில்லாம லிருக்கையிலே யுண்டாக்கி மாதா கெர்ப்பத்திலே யுற்பவித்து வளர்ந்த சரீரமானது யெந்தக்ஷணத்திலே ஆத்துமத்துக்குப் பாத்திரமாயிருக்கிறதோ அந்தக்ஷணத்திலே தானே யெங்குமிருக்கிற சர்வத்துக்கும் வல்லவரான கர்த்தரானவ ரொருபொருளாயிராத மனுஷாத்துமத்தைப் பொருளா யிருக்கட்டு மென்று சொல்லி அத்தை நவாயுண்டாக்கிக் கொண்டு வருகிறாரென்று சொல்ல வேணுமொழிய லோகத்தை யுண்டாக்கினபோதே ஆத்துமாக்களை யெல்லா முண்டாக்கினாரென்று சொல்லக் கடவோமல்ல. அதேதென்றாற் குறையற்ற கர்த்தரானவர் தனது சுபாவத்திலே குறையுள்ளவைகயாய் வஸ்துக்களை யுண்டாக்காமற் குறையில்லாத ஸ்திதியிலே அதுகளை யுண்டாக்கினா ரென்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே ஆத்துமத்திலேயுஞ் சரீரத்திலேயுங் கூடின பொருளாகிற மனுஷனிடத்திலே ஆத்துமமான தொருபாதியா யிருக்கையிலே சரீரமில்லாமலிருந்தால் தனது சுபாவஸ்திதியிலே யிராமற் குறையுள்ள ஸ்திதியிலே யிருக்கிறதென்று சொல்லவேணும்.

அவ்வண்ணமே மனுஷனுடைய ஆத்துமமான தழியாதபொருளாயிருக்கக்கொள்ளச் சுபாவமாக மரணநிமித்தமாகச் சரீரமில்லாம லிருக்கலா மென்று சொன்னாலும் அப்படிப்பட்ட ஸ்திதியானது ஆத்துமத்துக்குச் சுபாவமானதாயிராமற் குறையுள்ள ஸ்திதியா யிருக்கக்கொள்ள வஸ்துக்களை யெல்லாந் தனது சுபாவத்திலே குறையற்றவைகளா யுண்டாக்கின கர்த்தரானவர் லோகத்தை யுண்டாக்கிறபோது சரீரமில்லாமல் ஆத்துமாக்களை யுண்டாக்கினாரென்று சொன்னோமானால் ஆத்துமத்துக்குச் சுபாவமானதாயிராத ஸ்திதியிலேயுங் குறையுள்ள ஸ்திதியிலேயும் ஆத்துமாக்களை யுண்டாக்கினாரென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும். இதன்றியே யிப்படிப்பட்ட ஆத்துமாக்கள் சரீரத்திலே கூடுகிற நாள்மட்டும் இருக்கிற ஸ்தலத்தையும் கர்த்தரானவர் அவைகளைச் சரீரங்களிலே வுகிற மேரையையுஞ் சொல்லுகிறதிலே அநேக அபத்த விசேஷங்களைக் கற்பிக்க வேண்டியிருக்கும். இதெல்லாம் வாராதபடிக்கு மாதா கெர்ப்பத்திலே யிருக்கிற பிண்டமானது அந்தந்த மாத்திரையோடு யிருந்துகொண்டு மெள்ள மெள்ள மனுஷசரீரமாக வளர்ந்து எந்த க்ஷணத்திலே ஆத்துமத்துக்கு அதி பாத்திரமாச்சுதோ அந்த க்ஷணத்திலே தானே சரீரத்துக்கு மாத்திரையான ஆத்துமத்தை நவமாய்க் கர்த்தரானவர் உண்டாக்கினாரென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

ஆனால் மனுஷசீவனுடைய தோற்றத்திலே பராமரிக்கத்தக்க வொரு விசேஷமுண்டு. அதாவது ஜெந்துவினுடைய சீவனானது சரீரத்துக்கு மாத்தி

ரையா யிருக்கிறதுந்தவிர வளர்த்தி சேட்டையும் இந்திரிய சேட்டையும் மாத்திரமுடைத்தானதா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட சீவனானது சரீர சம்பந்தமா யிருக்கிற பொருளென்று சொல்லக்கடவது. சரீர விஷயக சுகதுக்க முதலானதுகளைச் சிரகிக்கிறதுக்கும் அனுபவிக்கிறதுக்கு மாத்திரம் வல்லதாயிருக்கிற சீவனானது சரீரசம்மந்தமா யிருக்கிற பொருளென்று சொல்லத்தகுமென்கிறதினாலே ஜெந்துவினுடைய சீவனானது சர்வேஸ்வரன் முதலான சரீரமில்லாத விஷயங்களைச் சிரகிக்கிறதுக்கும் அனுபவிக்கிறதுக்கும் வல்லதாயிராமற் சரீரத்துக்கடுத்த பொருள்களைத் தாண்டி யேறுமலிருக்கக்கொள்ள சரீரத்துக் கடுத்த சேட்டைகளை மாத்திரம் பண்ணுகிறதுக்குப் பெலமுடையதா யிருக்கிறதொழியச் சரீரத்துக்கு மேலா யிருக்கிற ஞான விருத்திகளைப் பண்ணமாட்டாது. சரீரத்துக்கடுத்த சேட்டைகளை மாத்திரம் பண்ணுகிறதுக்கு ஜெந்துவின் சீவனானது வல்லதா யிருக்கிறபோது தனது சேட்டை யென்னப்பட்டயாவும் பண்ணுகிறதுக்குச் சரீரம் வேண்டியிருக்கிற தொழியச் சரீரமில்லாம லொரு சேட்டையானாலும் பண்ணமாட்டாது. ஒரு சேட்டையானாலுஞ் சரீரமில்லாமற் பண்ணமாட்டாத சீவனானது தானிருக்கிறதுக் கவசியமாய்ச் சரீரத்தை அபேக்ஷிக்கு மென்று சொல்லக்கடவது. ஆனபடியினாலே அப்படிப்பட்ட சீவனானது தனது சரீரம் தான் கூட விருக்கிறதுக்குப் பாத்திரமா யிருக்கிற நாள்மட்டும் அது சரீரத்தோடே கூடி யிருக்கையிலே பிழைக்கு மென்று சொல்லவேணும். அல்லது சீவனானது தானிருக்கிறதுக்குத் தனது சரீரம் உஷ்ண முதலான பிரமாண மில்லாததுமாய் வேண்டின அவையவங்களற்றதுமா யிருந்தால் அப்படிப்பட்ட சரீரத்துக்கு அந்தச் சீவனானது மாத்திரையா யிருக்கமாட்டாததினாற் சரீரத்தை விட்டுப் பிரியவேணும். சரீரமில்லாமல் அது சேட்டை பண்ணுகிறதுக்கும் தானிருக்கிறதுக்கும் வல்லதா யிராதபோதே யெந்தத் தறுவாயிலே தனது சரீரம் தானிருக்கிறதுக்குப் பாத்திரமாகாமற் போயிற்றோ அந்தத் தறுவாயிலே தானே அப்படிப்பட்ட சீவனானது அழிந்துபோ மென்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. அவ்வண்ணமே மிருகாதிகளுடைய சீவனானவைகள் தனது சரீரத்தோடேயிருக்கிறநாள்மட்டும் பிழைத்திருக்கும் தனது சரீரத்தோடேத்தாங்களிருக்க யெக்காலத்திலே கூடாமற் போயிற்றோ அக்காலத்திலே தானே மிருகாதிகளுடைய சீவனானது அழிந்துபோமென்று சொல்லக்கடவோம். அவ்வண்ணமே பூமியிலே சரீரத்தோடேகூடி யிருக்கிற நாள்மட்டும் ஞான விருத்திகளில்லாததுகளுமாய்ப் பாவ புண்ணியம் பண்ணாதவைகளுமாயிருந்து சரீரத்தோடேகூட அழிந்துபோ மென்கிறதினாற் பரலோக சம்மந்தமாயிருக்கிற அவதியாகிற நரக மோக்ஷத்தை யடையமாட்டாது.

இதெல்லா முன்னே யொப்பச்சொன்னோ மென்கிறதினாலே திரும்ப இங்கே அதை யொப்புவிக்கக் கணக்கில்லை. ஆனால் மிருகாதிகளுடைய சீவன்கள் உற்பவிக்கிற மேரையைக் கண்டுபிடிக்கிறதுக் கிதெல்லா மறியவேணு மென்கிறதினால் அதைத்திரும்பவும் இங்கே சொல்லவேண்டி யிருந்தது. அதேதெனென்றாற் பொருளுடைய ஸ்திதியு முற்பத்தியு மொத்திருக்கிற தென்கிறதினாற் சரீரத்தின் சகாயமில்லாம லிருக்கமாட்டாத பொருளானது அது உற்பவிக்கிறதுக்குச் சரீர சகாயம் வேண்டியிருக்கிற தொழிய சரீர சகாயமில்லாமல் சுபாவ மேரையைப் பார்க்குமிடத்தில் உற்பவிக்க மாட்டாது. ஆதலாலே செந்துவின் சீவனானது தானிருக்கிறதுக்குச் சரீரத்தின் சகாயமானது அவசியமாய் வேண்டியிருக்கையிலே யிப்படிப்பட்ட சீவனுடைய ஸ்திதிக்கு அதினுடைய உற்

பத்தியானது ஒத்திருக்கவேணு மென்கிறதினுற் செந்துவின் சீவனானது சுவமாயுற்பவிக்கிறதுக்குத் தாய் தகப்பனுடைய சரீர சம்பந்தமா யிருக்கிற வித்து ரத்த முதலானதுக ளொருவிதமாகக் காரணமாயிருந்து சகாயம் பண்ணவேணு மென்று சொல்லக்கடவது.

அவ்வண்ணமே இந்த ஞாயத்தை யிந்தடைவிலே [illegible]ம் எடுத்தத்தக்கதாகும். சீவனானது முன் சொல்லப்பட்ட சேட்டைகளுக்குள்ளே [illegible] ட்டைக்காகிலுங் காரணமா யிருக்கவேணு மென்கிறதினுற் சேட்டையில்லாமற் சீவனானது உண்டாயிருக்க மாட்டாதென்று சொல்லக்கடவது. ஜெந்துவினுடைய சீவனானது சரீரமில்லாமற் சேட்டைபண்ணமாட்டா தென்கிறபோது அப்படிப்பட்ட சீவனானது சரீரமில்லாமல் இருக்கிறதுக்கு வல்லதா யிராதென்று சொன்னோம். இப்படிப்பட்ட சீவனுடைய ஸ்திதிக்கு அதினுடைய வுற்பத்தியானது ஒத்திருக்கவேணுமென்கிறதினுல் அப்படிப்பட்ட சீவனுடைய ஸ்திதிக்குச் சரீரமானது காரணமாயிருக்கும்போலே அப்படிப்பட்ட ஜெந்துவின் உற்பத்திக்குத் தாய்தகப்பனுடைய சரீரசம்பந்தமா யிருக்கிற வித்துரத்த முதலானதுகள் காரணமாயிருக்கிறதென்று சொல்லக்கடவது. ஆதலாலே ஜெந்துவினுடைய வுற்பத்திவகையிலே தாய் தகப்பன் ஜெந்துவினுடைய சரீரத்துக்குக் காரணமாயிருக்கிறதுந் தவிர ஜெந்துவினுடைய சீவனுக்குத் தாய் தகப்பனுடைய வித்துரத்தஞ் சீவன்கள் முதலானதுகள் காரணமாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே அவசியமாய்ச் சரீரத்தை அபேக்ஷிக்கிற சீவனைச் சரீர சம்மந்தமா யிருக்கிற பொருட்களானவைகள் பிறப்பிக்குதென்கிற ஞாயத்துக் கொத்திருக்கக் கொள்ள அது ஒப்புக் கொள்ளத்தக்க சத்தியமென்று சொல்லத்தகு மொழிய மற்றப்படியல்லை.

மனுஷ வுற்பத்தியினுடைய வகையை விசாரிக்குமிடத்தில் ஜெந்துவினுடைய வுற்பத்திக்கும் இதுக்கும் வெகுவேற்றுமை யுண்டாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் மனுஷசீவனானது ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்குஞ் சர்வேஸ்வரன் முதலான சரீரமில்லாத விஷயங்களைக் கிரகிக்கிறதுக்கும் அபேக்ஷிக்கிறதுக்கும் வல்லதா யிருக்கிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சேட்டைகளானவைகள் சரீரசம்பந்தமா யிருக்கிற பொருளென்னப்பட்ட யாவையுந் தாண்டிச் சரீரமில்லாத பொருட்களை விஷயீகரிக்கிறதினுல் அப்படிப்பட்ட சேட்டையானது கேவலம் உண்டாகிறதுக்குச் சரீர சரீர சம்பந்தத்துக்கடுத்த பொருள் வேண்டியிருக்கிறதென்று சொல்லப்படாது. மனுஷனுடைய சீவனானது தனது சேட்டையைக் கேவலம் பண்ணுகிறதுக்குச் சரீரத்தின் சகாயம் வேண்டியிராததினுல் மனுஷனுடைய சீவனானது தானிருக்கிறதுக்கு அவசியமாய்ச் சரீரம் வேண்டியிராதென்று சொல்லக்கடவதாகும். ஆனபடியினுலே மனுஷசீவனானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தால் அழிந்துபோமென்று சொல்லக்கூடாது. அது அழியாதபோதே யாதொரு ஸ்தலமாகிற நரகத்தையாகிலும் மோக்ஷத்தை யென்கிலும் அடையவேணு மென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக் கடவோம். இதெல்லாம் வருகிறபாடத்திலே சொல்லுவோ மென்கிறதினுல் இவ்விடத்திலே கொஞ்சத்துக்குள்ளே யெடுத்துக்காட்டினது போதும். ஆனால் மனுஷனுடைய சீவனானது தனது சேட்டையைப் பண்ணுகிறதுக்கும் தானிருக்கிறதுக்கும் அவசியமாய்ச் சரீரசகாயம் வேண்டியிராதபோதே மனுஷசீவனானது ஜெந்துவின் சீவனைப்போலே சரியான பொருளென்றும் சரீரத்தின் அந்தஸ்திலே அடங்கின பொருளென்றுஞ் சொல்-

லாமல் அதினுடைய சுபாவத்தைப் பார்க்குமிடத்தில் சரீரமாகாததுமாய் ஞானப் பொருளுமா யிருக்கிறதென்று சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட ஞானப் பொருளானது சகல சரீரத்தின் மேலே மிகவும் உயர்ந்திருக்கிற வுத்தம பொருளா யிருக்கக்கொள்ள அப்படிப் பட்ட சீவனானது உற்பவிக்கிறதுக்குத் தாய்தகப்பனுடைய வித்து இரத்த முதலானவைகள் காரணமா யிருக்கிறதென்று புத்திகெட்டவனாகிலுஞ் சொல்லமாட்டான்.

அதேதென்றாற் பிரதான காரணமானது தனக்குச் சரியானதை யாகிலும் அல்லது தனக்குக் கீழானதா யிருக்கிறபொருளை யென்கிலும் பிறப்பிக்கிறதுக்கு வல்லதா யிருக்குமொழியத் தன்னைக்காட்டிலு முத்தமபொருளைப் பிறப்பிக்க மாட்டாதென்கிற பக்ஷமானது சகல நியாயத்துக்கும் ஒத்திருக்கக் கொள்ளச் சகல வித்தியா பாரகருக்கும் சம்மதமாயிருக்கிற சித்தாந்தமாகுமொழிய மற்றப்படி யல்லை. அவ்வண்ணமே தாய்தகப்பனுடைய வித்து இரத்த முதலானவைகள் கெர்ப்பத்திலே யிருக்கிற பிள்ளைகளுடைய சரீர முண்டாகிறதுக்கும் வளருகிறதுக்குஞ் சகாயம் பண்ணுமொழியப் பிள்ளைகளுடைய ஆத்துமமானது வித்துரத்த முதலானவைகளைப் பார்க்க மிகவும் மேலானதுமா யுத்தமமானதுமா யிருக்கிறதினுல் மிகவும் நீசமான பொருளாகிற வித்தும் இரத்தமும் அதைப் பிறப்பிக்கிறதுக்குச் சற்றாகிலுஞ் சகாயம் பண்ணமாட்டாதென்று சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆனபடியினுலே ஒன்றான சர்வேஸ்வரன் மாத்திரம் மனுஷசீவனைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லவரா யிருக்கிறாரொழிய வேறொரு வஸ்துவும் அதைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லதா யிருக்கமாட்டாது. அதேதென்றால் அசரீரியானதுமாய் ஞானப் பொருளானதுமா யிருக்கிற சீவனை ஒன்றுமாகாம லிருக்கையிலே யுபதான காரணத்தின் சகாயமுமில்லாமல் கர்த்தனானவர் பிறப்பிக்கவேணும். இந்தவடைவாக வஸ்துவை யுற்பவிக்கப் பண்ணுகிறதுக்கு முடிவில்லாத பலம் வேண்டி யிருக்கிறதென்று ஞானோபதேசத்திலே யேழாம் எட்டாம் பாடங்களில் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது. அப்படியே தானாயிருக்கிற கர்த்தனுக்கு மாத்திர முடிவில்லாத பலமுண்டா யிருக்கிறதினுல் தானாயிருக்கிற கர்த்தன் மாத்திர மனுஷனுடைய சீவனைப் பிறப்பிக்கிறாரொழிய அப்படிப்பட்ட வுத்தம பொருளினுற்பத்திக் குண்டாக்கப்பட்ட பொருள்களுக்குள் ஒன்றாகிலும் அற்ப சகாயத்தைப் பண்ணிவருகிறதென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

கர்ப்பத்திலே யிருக்கிற பிள்ளையின் சரீரத்துக்கும் சர்வேஸ்வரனுலே மாத்திர முண்டாக்கப்படுகிற சீவனுக்கும் உண்டாயிருக்கிற பந்தனத்தைத் தாய் தகப்பனுடையவித்து இரத்த முதலானதுகள் பண்ணுகிறதென்கிறதினுலே மாத்திரம் மனுஷன் மனுஷனைப் பிறப்பிக்கிறானென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றாற் சரீரமும் ஆத்துமமுந் தனித்தனியே முழுமனுஷனென்று சொல்லப்படாமல் அன்னியோன்னியமாய்க் கட்டப்பட்ட நிமித்தமாக மனுஷனா யிருக்கிறதினுற் பந்தன நிமித்தியமாக மனுஷனுண்டானென்று சொல்லத்தகும். ஆனபடியினுலே மனுஷனுண்டாகிறதுக்கு நிமித்தமான பந்தனத்தை யுண்டாக்கிற தாய்தகப்பனென்பேர்கள் மெய்யாகவே மனுஷனைப் பிறப்பித்தார்களென்று சொல்லத்தகும். அதெப்படியென்றால் மனுஷனைக் கொல்லுகிறவன் மனுஷனுடைய ஆத்துமத்தையுஞ் சரீரத்தையுங் கெடுத்துப் போடாமல் ஆத்தும சரீரத்துக் குண்டான பந்தனத்தைக் கெடுத்து ஆத்துமத்தைத் தனது சரீரத்தைவிட்டுப் பிரியப் பண்ணினதினுல் அப்படிக் கொத்தவன் மனுஷனைக்

கொன்று போட்டானென்று சொல்லத்தகும். அத்தன்மைபோல் மனுஷாத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் உண்டான பந்தனத்தைச் சுபாவ விதமாக வுண்டாக்கிற தாய்தகப்பனான பேர்கள் ஆத்துமமானதைத் தனது சரீரத்தோடே கூடியிருக்கப் பண்ணுகிறதினால் மனுஷனைப் பிறப்பித்தார்களென்று சொல்லவேணுமொழிய ஆத்தும சரீரத்தை அவர்களுண்டாக்க வேணுமென்று சொல்லக்கடவதல்ல. இற்றைவரைக்கும் பண்ணின பிரசங்கத்தினாலே மனுஷசீவனானது சர்வேஸ்வரனாலே மாத்திர முண்டாக்கப்படுகிற தென்றொப்புவிக்கப்பட்டாப்போலே யாச்சுது. சர்வேஸ்வரனாலே மாத்திரம் அது வுண்டாக்கப்படும்போதே தாய்தகப்பனான பேர்கள் மனுஷசீவ னுற்பவிக்கிறதுக் காரணமாயிருக்க மாட்டார்களென்று சந்தேகமற அங்கீகரிக்கக் கடவோம்.

இதன்றியே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே மனுஷசீவனானது பூதியங்களுடைய கூட்டுற வென்று சிலபேர்கள் சொல்லுகிறார்களே அதெல்லா முழுத் தப்பறையா யிருக்கிறதென்று சொல்லப்பட்ட ஞாயங்களினாலே கண்டுபிடிக்கலா மென்கிறதுக்குத் தப்பாது. ஆனாலிந்த சத்தியத்தைத் தானே வேறொரு கெட்டி ஞாயத்தினாலொப்பச் சொல்லலாம். அதேதென்றாற் பூதியங்களுடைய வுஷ்ணசீதள முதலான குணங்கள் மனுஷனிடத்திலே யுண்டாயிருக்கிறதினால் அதுகளோடே கூடியிருக்கிற உள்ளிந்திரியங்களான கீழான அம்சமானது மனுஷனிடத்திலே காமக்குரோத முதலான வியசனங்களானவைக ளுற்பவிக்கிறதுக்குக் காரணமா யிருக்கிற தென்று சொல்லவேண்டி யிருக்கையிலே மனுஷனானவன் அதுகளெல்லாம் நிக்கிரகம் பண்ணிக்கொண்டு வருகிறானென்கிறதினால் அப்படிப்பட்ட நிக்கிரகத்துக்கு மனுஷனுடைய புத்தி மனசென்கிற மேலான அம்சமானது காரணமா யிருக்கிற தென்று சொல்லக் கடவோம். ஆனபடியினாலே மனுஷனுடைய புத்தியு மனசென்கிற மேலாங்கிஷமானாலும் பூதியங்களுடைய கூட்டுற வென்றுஞ் சரீரத்துக் காதேயமா யிருக்கிற இந்திரியங்களென்றுஞ் சொல்லக்கூடாது. அதேதென்றால் அப்படி சொல்லும்போது காமக்குரோத முதலான வியசனங்க ளுற்பவிக்கிறதுக்குக் காரணமான யாதொன்றுண்டோ, அதுதானே காமக்குரோதத்தின் நிக்கிரகத்துக்கும் காமக்குரோதம் நாசமாய்ப் போகிறதுக்கும் ஏககாலத்திலே தானே ஒரே காரணமா யிருக்கிற தென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். இப்படிக்கொத்த அபத்தத்தை ஒப்புக் கொள்ளாதபடிக்கு மனுஷனுடைய சீவனானது பூதியங்களுடைய கூட்டுற வென்கிலுஞ் சரீரத்துக் காதேயமாயிருக்கிற யிந்திரியங்க ளென்கிலும் ஆகமாட்டாதென்றொப்புவிக்கிறதுக்கு இந்த ஞாயமானது காட்டினதுபோதும்.

௯-ம். பாடம்.

௧. போனபாடத்திலே மனுஷனுடைய சீவனானது உண்டாக்கப்பட்டதுமா யென்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளுமா யிருக்கிறதென்று சொன்னாப்போலே யாச்சுது. ஆனாலுண்டாக்கப்பட்ட பொருளெல்லாம் அழியத்தக்கபொருளாயிருக்கிறதென்று சொல்லுகிறார்களே. யிப்படிப்பட்ட வாக்கியமானது நாம்சொன்னதுக்கு விருத்தமாயிருக்கிறதென்று சொல்லக்கடவதல்ல. அதேதென்றால் உண்டாக்கப்பட்ட மனுஷசீவனானது சர்வேஸ்வரனைப் போலே அழியாத பொருளாயிருக்கிறதென்று சொல்லாமல் இரண்டாம் வகையுள்ள அழியாத பொருளாயிருக்கிறதென்று சம்மதப்படுகிறோமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யுண்டாக்கப்பட்ட பொருள் அழியாத பொருளாயிருக்க மாட்டாதென்கிற வாக்கியமானது மூன்றின வகையுள்ள அழியாத பொருளாயிருக்க மாட்டாதென்கிறதுக்குச் செல்லுமொழிய யிரண்டாம் வகையுள்ள அழியாத பொருளாயிருக்கிற சீவன் முதலான ஞானமுடைத்தான பொருட்களுக்குச் செல்லாதென்றொப்புக் கொள்ளத்தக்க புத்தியாகும். மனுஷசீவனானது அழியாதபொருளாயிருக்கிறதென்கிற சத்திய விசேஷத்தை வேறே சில ஞாயங்களினாலே யொப்புவிக்கலாம். அதின் முதலாம் ஞாயமாவது நம்மாலே சொல்லப்பட்ட ஞான முதலான விருத்திகளுடைய மகிமையை வர்ணிக்கும் பக்ஷத்தில் சரீரத்தின் மேன்மையை அது மிகவுங் கடந்திருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே அப்படிப்பட்ட விருத்திகளுக்குக் காரணமா யிருக்கிற பொருளாகிற சீவனானது அதுகளைக் காட்டிலும் உத்தம வஸ்துவா யிருக்கவேணும். அதுகளைக் காட்டிலு மனுஷ சீவனானது மிகவுங் கடந்து உத்தம வஸ்துவா யிருக்கிறபோதே சரீரமென்னப்பட்ட யாவினுடைய அங்கங்களை மனுஷசீவனானது மிகவுங் கடந்து சகல சரீரத்தைக் காட்டிலும் அது சொல்லப்பட்ட மேன்மை யுடையதா யிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. இது நிமித்தமாக மனுஷசீவனுடைய உற்பத்திக்குச் சர்வேஸ்வரன் மாத்திரங் காரணமா யிருக்கக் கூடுமொழியச் சரீரமானாலும் வேறே யுண்டாக்கப்பட்ட பொருளென்கிலும் அதினுடைய உற்பத்திக்குக் காரணத்தின் மேரையாக உதவமாட்டாதென்று சொல்லக்கடவது. சீவனுடைய வுற்பத்திக்குச் சர்வேஸ்வரன் மாத்திரங் காரணமாயிருந்து சரீர மென்கிலும் வேறே யுண்டாக்கப்பட்ட வஸ்துவானாலும் வேண்டியிரா தென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே மனுஷசீவனானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும் அது அழிந்துபோகாமல் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளா யிருக்கிறதென்று சொல்லக்கடவதொழிய மற்றப்படியல்ல.

இதன்றியே யெந்த மதமானது சகல பாவத்துக்கும் வழிதிறந்து மனுஷரா யிருக்கிறவர்கள் அதை அனுசரிக்கிறதினால் முழுப்பாவிகளா யிருக்கிறார்களென்று காண்கிறோமோ அது துர்மத மென்றும் முழுத்தப்பறையான தென்றுஞ் சொல்லக்கடவோம். அதேதென்றால் நிர்மல பிரகாசமானது அந்தகாரம்பிறக்கிறதுக்குக் காரணமாயிருக்க மாட்டாதது போலே பழுதற்ற புண்ணியத்தோடு கூடியிருக்கிற சத்திய விசேஷத்தின் அங்கீகாரமானது மனுஷனானவன் குறையற்ற புண்ணியவானா யிருக்கிறதுக்கும் சத்தியத்தை அவனவன் அனுசரிக்கிறதுக்கும் உதவுமொழிய பாவமாகிற இருட்டிலே மனுஷனானவன் திரிகிறதுக்கு அதுகாரணமா யிருக்கமாட்டாது. இதிப்படியிருக்கையிலே மனுஷனுடைய ஆத்துமமானது என்றென்றைக்கும் நிற்கிறபொருளாயிராமற் சரீரத்தோடே கூடவென்கிலுஞ் சிறிது காலைக்குப் பிற்பாடானாலும் அழிந்துபோகு மென்கிற மதமானது மனுஷனானவன் சகல பாவத்திலேயும் விழுந்து முழுப்பாவியாய்ப் போகிறதுக்குக் காரணமா யிருக்கிற தென்கிறதுக்குத

தப்பாது. அதேதென்றால், மனுஷன் பண்ணுகிற பாவத்தினிமித்தமாக ஆன ஆக்கினையை அனுபவிக்கிறதுக்குப் பரலோக மில்லாவிட்டால் மனுஷனென்னப்பட்ட யாவரும் பயப்பட்டுச் சகல பாவத்தையும் வெறுக்கிறதுக்குக் காரணமேது. இதன்றியே தன் கைக்கெட்டினபாவமென்னப்பட்ட யாவையும் ரகசியமாகவாகிலும் மனுஷனானவன் பண்ணியிருக்கிறதுக்குக் கணக்கேது. அப்படியே ஆத்துமமானது அழிந்துபோகிற பொருளாயிருந்தால் இந்தப் பூமியிலேயிருக்கிறநாள்மட்டும். ஸ்திரீபோக முதலான சுகமென்னப்பட்டதெல்லாம் மனுஷனானவன் ஏன் அநுபவியாமலிருக்க வேணும். இதன்றியே தனது சில [illegible] பாயத்தின் காரணமாக மனுஷனானவன் பரருடைமையை அபேக்ஷியாமலிருக்கிறதுக்கும் [illegible] களவானக் கூடுமானாலும் களவு பண்ணுகிறதுக்கவுங் காரணமேது. இதைத் தவிர மனுஷனானவன் தனது கோபத்தைத் தீர்க்கத்தக்க தனக்கு அவமான முதலான அபராதங்கள் பண்ணினவன்பேரிலே குரோதப்பகையாயிருக்கிறதுக்கும் அவனைக் கொல்லுகிறதுக்கும் ஏன் துணியாமலிருக்கவேணும்.

இந்தத் தர்க்கவிஷயத்திலே யிந்தச்சத்தியத்தை யிலகுவாகக்கண்டுபிடிக்கலாம். அதேதென்றால் மிருகங்களினுடைய ஜீவனானது சரீரத்தோடே கூட அழிந்துபோகிற பொருளாயிருக்கக்கொள்ள ஸ்திரீபோக முதலான [illegible] அனுபவிக்கிறதுக்கு [illegible] தனக்குப் பொல்லாப்பு செய்கிறவனைக் கொல்லுகிறதுக்கும் அஞ்சாது. அப்படி நேர்ந்த விபசாரங்களைச் செந்துவானது பண்ணத்தக்கதாக அடி முதலான [illegible] பொல்லாப்புகளை விட்டு அஞ்சத்தக்க ஞாயமில்லை. அந்தன்மைபோல மனுஷனுடைய ஜீவனானது அழிந்துபோகிற பொருளாயிருக்கிறதென்று அங்கீகரித்தோமானால் செந்துவைக் காட்டிலும் மனுஷனானவன் கெட்ட பொருளாயிருந்து ரகசியமாகவாகிலும் பாவமென்னப்பட்ட யாவையும் பண்ணத்தக்கதாக அஞ்சுகிறதுக்கு நல்லகாரணங் காணுதென்று சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட [illegible] வாய்ப்பு முதலான வேறே அநேக துரிதங்களுக்கும் மனுஷனுடைய ஆத்துமமானது அழிந்துபோகிற பொருளாயிருக்கிறதென்கிற மதமானது காரணமாயிருக்கக்கொள்ள, அது [illegible] மதமாயிருக்கிறதென்றும் முழுத்தப்பறையாயிருக்கிறதென்றுஞ் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல.

இந்தத் தர்மத்துக்கு விபரீத மதமோவென்றால் மனுஷனானவன் சகல பாவத்துக்கும் பயப்பட்டுச் சகல நிர்மல புண்ணியவழியிலே பிரயாசத்தோடாகிலும் நடக்கத் துணிகிறதுக்கு மிகவும் உதவுகிறதினாலே மனுஷஜீவனானது என்றென்றைக்கும் நிற்கிற பொருளாயிருக்கிறதென்கிற மதமானது அனுசரிக்கத் தக்கதுமாய்க் குறையற்ற சத்தியமுமாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். அவ்வண்ணமே பரலோக முண்டென்று முழு மனதோடு அங்கீகரிக்கிறபேர்கள் தாங்கள் நரகத்திலே விழாதபடிக்குப் பாவ மென்னப்பட்டயாவையும் வர்ச்சிக்கிறதுந் தவிரப் பரலோகத்திலே தங்களுக்கு அதிகமதிகமாகப் பலனுண்டாக வேணுமென்று தபசு முதலான சகல புண்ணியங்களையும் நிறைவேற்ற வேணுமென்று சர்வபரித்தியாகத்தினாலே லௌகீகத்தையும் லோகத்திலே தங்களுக்குண்டான தாய் தகப்பன் முதலான பந்துஜனங்களையும் வெகுமானத்தையும் ஐஸ்வரியத்தையும் லோகத்திலே தங்களுக்கு வரத்தக்க பாக்கிய மென்னப்பட்ட யாவையும் [illegible] ஒரு திரணமாயெண்ணிக் கொண்டு வருகிறார்கள். ஆத்துமமானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிறதென்று சொல்லுகிற மதமானது இத்தனை புண்ணியங்களை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் காரணமாயிருக்கக்கொள்ள இதே சத்தியம் இதே யெல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்க மதமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

பழுதற்றதாயிருக்கிற இப்படிப்பட்ட சத்தியத்தை முழு மனதோடு மனுஷனானவன் அங்கீகரிக்கிறதுக்குக் கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிற கிரமத்தினாலே அவருதவி செய்யவேணுமென்றுந் திருவுளமானாரென்றுஞ் சொல்லக்கடவோம். அதெப்படியென்றால் சல நீதி சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் சிலபாவிகள் சகல ஆக்கினைகளுக்கும் பாத்திரராயிருக்கையிலே அப்படிப்பட்ட பேர்களுக்கு இந்தலோகத்திலே சிறிது ஆக்கினையை மாத்திரமிட்டு வேறே சிலபாவிகளாயிருக்கிற பேர்கள் சகல ஆக்கினைக்கும் பாத்திரர்களாயிருக்கையிலே மரணபரியந்தஞ் சகல பாக்கியங்களையும் அனுபவிக்கப்பண்ணி ஒரு ஆக்கினையையாகிலும் இடாமலிருக்கிறார். அப்படிப்பட்டவர்கள் முழு அவமானத்தையுந் தூஷணத்தையும் படத்தக்கபேர்களாயிருக்கையிலே அவர்கள் மகாராசாக்களாய் மரணபரியந்தம் எல்லாராலும் [illegible] பூசிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இதுக்கு விபரீதமேலாயாக மகாமகாப் பட்ட புண்ணியவான்களாயிருக்கிறபேர்கள் இவ்வுலோகத்திலே ஓரற்பசுகத்தையாகிலும் அனுபவியாமல் மரணபரியந்தம் வியாதிமுதலான சகல நோய்களையுந் துன்பங்களையும் அனுபவிக்கப் பண்ணுகிறார். இப்படிப்பட்ட புண்ணியவான்கள் சகல வெகுமானத்துக்கும் பாத்திரவான்களாயிருக்கையிலே மகாமகாப்பட்ட பாவிகளினாலே தூஷிக்கப்பட்ட பேர்களாயிருந்து அவர்கள் முழு அவமானப்படுகிறதுக்குக் கர்த்தரானவர் திருவுளமாயிருக்கிறார். [illegible] தப்பில்லாக் கிரமத்தோடே கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிறதினால் லேசத்துக்கு முழுதன்மை பண்ணுகிற திவ்விய திருவுளத்தைப் [illegible]தியில்லாதவர்கள் அறியாததினால் அநியாயமாய் மயக்கத்தைத் தாளிக்கிறார்கள். அதேதென்றால் அப்படிப்பட்ட திருவுளத்தினாலே மனுஷனுக்கு வருகிற பழுதற்ற ஞானமார்க்கமானது மனுஷனானவன் கரையேறுகிறதுக்கு மிகவுமுதவுமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. அதெப்படியென்றால் மனுஷனானவன் கரையேறுகிறதுக்குப் பாவமென்னப்பட்ட யாவுக்குஞ் சம்மதப்படாமல் நிர்மலமான புண்ணியவழியிலே பிரயாசத்தோடாகிலும் நடக்கிறதுக்கு அவனவன் துணியவேணும். இப்படிப்பட்ட நல்ல துணிவை மனுஷனானவன் அடைகிறதுக்கு இரண்டு [illegible]தியவிசேஷங்களை அங்கீகரிக்கவேணும். அதிலே பாவபுண்ணியத்துக் கொத்தவண்ணம் ஆக்கினை சம்பாவனை யிடுகிற கர்த்தனுண்டென்று அங்கீகரிக்கத்தக்கது முந்தின சத்தியவிசேஷமாகும். இது தவிர மனுஷனுடைய ஆத்துமம் அழிந்துபோகிற பொருளாயிராமல் தனது சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிற்பாடு பரலோகத்திலே மனுஷனாலே பண்ணப்பட்ட பாவபுண்ணியத்துக் கொத்தவண்ணம் ஆக்கினை சம்பாவனையனுபவிக்கிறதுக்குப் பரலோகமுண்டென்று ஒப்புக் கொள்ளத்தக்கது இரண்டாஞ் சத்தியவிசேஷமென்று சொல்லத்தகும். இதுயிப்படியிருக்கையிலே தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் பாவிகளுக்கொரு ஆக்கினையாகிலும் புண்ணியாத்துமாக்களுக் கிவ்வுலோகத்திலொருக்காலு மொருசம்பாவனையென்கிலும் இடாதிருந்தால் தேவன் இல்லையென்று மனுஷராயிருக்கிற பேர்கள் அங்கீகரிக்கிறதுக்குத் தங்களுக்கிடம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள் அல்லது பாவிகளும் புண்ணியவான்களென்னப்பட்ட யாவரும் இவ்வுலோகத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்கொத்த வண்ணம் தப்பில்லாமல் எப்போதும் ஆன ஆக்கினை சம்பாவனையையுங் கர்த்தரானவ ரிட்டுக்கொண்டு வந்தால் பாவபுண்ணியத்துக் கொத்தவண்ணம் இவ்வுலோகத்திலே தானே மனுஷனானவன் அனுபவிக்கிறானென்று பாவியும் புண்ணியவானும் விசாரிப்பார்களொழியப் பாவபுண்ணியத்துக் கொத்தவண்ணம் மனுஷனானவன் அனுபவிக்கும்படிக்குப் பரலோகமுண்டென்று சம்மதிக்கிறதரிது. மனுஷன்கரையேறுகிறதுக்கு விக்கினமாயிருக்கிற இப்படிப்பட்ட இரண்டு தப்பறை விசேஷங்களை மனுஷனானவன் அங்கீகாரம் பண்ணாததுக்குத் தயாபரனான கர்த்தரானவர் லோகத்தை நடத்துகிறதிலே முன்சொல்லப்பட்ட தப்பில்லாத கிரமத்தினாலே ஆன உபாயத்தைப் பண்ணத்திருவுளமானாரென்று சொல்லக்கடவது.

அதெப்படியென்றால் சிலபாவிகளுக்குஞ் சிலபுண்ணியாத்துமாக்களுக்கும் ஆக்கினை சம்பாவனையுஞ் சிலமுறை யிடுகிறதினால் லோகத்தைப் பராமரிசித்து நடத்துகிற தேவனுண்டென்கிற குன்றாத சத்தியத்தை யெல்லாருஞ் சந்தேகப்படாமல் முழுமனதோடே அங்கீகரிக்கிறதுக்குக் கர்த்தரானவருபதேசம் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட கர்த்தரானவர் முடிவில்லாத நீதிசுரூபமாயிருக்கையிலே சிலபாவிகள் பண்ணின பாவங்களுக்கொத்த வண்ணம் பூலோகத்திலே யொரு ஆக்கினை யானாலுமிடாமல் மரண பரியந்தம் பெருமான முதலான பாக்கியமென்னப்பட்டவைகளையும் அவர்களனுபவிக்கப்பண்ணுகிறாரென்கிறதினாலே பாவியானவன் பண்ணின பாவத்துக்கு நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் ஆக்கினையிடத்தக்க பரலோக நரகமுண்டென்றும் பிரத்தியட்சமாய்க் காட்டினாப்போலேயாச்சுது. பின்னையுஞ் சிலபுண்ணியாத்துமாக்களாயிருக்கிறபேர்கள் இடைவிடாமல் வியாதி முதலான வுபாதைகளையு மற்றுமுண்டான நிர்ப்பாக்கியங்களையும் கர்த்தருடைய திருவுளப்படியே மரணபரியந்த மனுபவித்தவர்கள் பண்ணின புண்ணியத்துக்குத் தயாபரனான கர்த்தரானவர் சம்பாவனையைத் தராதபோதே அப்படிப்பட்ட புண்ணியவான்கள் பண்ணின புண்ணியங்களுக்குத் தக்க [illegible] சம்பூரண பலனை யவர்கள் பொசிக்கிறதுக்குப் பரலோக முண்டென்று மனுஷரென்னப்பட்டவர்களெல்லாரும் [illegible] கர்த்தரானவர் ஆன வழியைத் திறக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது.

அவ்வண்ணமே சகல நன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தருக்குக் குறையற்ற நீதியுங் கனாகாருண்ணியமுங் கூடிருக்கிறதென்கிற சத்தியத்தைப் புத்தியுள்ள ஜனங்களானவர்கள் அற்ப சந்தேகமாகிலும் படாமல் ஒப்புக்கொள்ளுகிறதுக்கு மனுஷனுடைய சீவனானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிறதென்றும் அது பண்ணின பாவபுண்ணியத்துக்கொத்தவண்ணமாக்கினை சம்பாவனையை யனுபவிக்கிறதற்கினிமேல் வடையத்தக்க பரலோக நரகமுண்டென்றும் இருக்கப்படாமல் [illegible] பண்ணவேணும். அல்லது சரீரத்தோடே கூட மனுஷசீவனுந் தீர்ந்துபோமென்று சொன்னோமானால் குறையற்ற நீதிசுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் [illegible] பண்ணின யெண்ணப்படாத பாவங்களுக்கு ஆனயாக்கினையை யிடவில்லையென்று சம்மதிக்க வேண்டியிருக்கிறது. ஆனபடியினாலே குறையற்ற நீதிசொரூபமாயிருக்கிற கர்த்தர் பேரிலே நீதிக்குறையை யாரோபித்தாப்போலாச்சுது. இந்நடைவாகச் சீவனானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிறதென்று யங்கீகரியாதபோனோமானால் அனேக புண்ணியாத்துமக்களாயிருக்கிறபேர்கள் சொல்லப்படாத பிரயாசத்தோடே பண்ணின மகாப்பட்ட புண்ணியங்களுக்குக் கர்த்தரானவர் ஒருப்பமாகிலும் பலனைக்கொடாதே போனாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. அப்படிசொல்லுகிறபோது கனாகாருணியசுரூபமாயிருக்கிற கர்த்தனுக்குத் தயைக்குறைச்சலுண்டென்று சம்மதித்தாப்போலேயாகும். இத்தனையப்பத்தத் தப்பறைகளை யங்கீகாரம் பண்ணாதபடிக்கு மனுஷனுடைய சீவனானது அழியாததுமா யென்றென்றைக்கும் நிற்கத்தக்கபொருளுமாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

மனுஷனுடைய சீவனானது அழியாதபொருளாயிருக்கிறதென்றங்கீகரிக்கத்தக்க சத்தியமாயிருக்கிறது தவிர அப்படிப்பட்ட [illegible] சரீரமாகாததுமாயிருக்கிறதுக்குச் சரீரத்தை யபேட்சியாதபொருளுமாயகண்டமானதுமாய்ச் சரீரசம்பந்தமாயிராத ஞானமுதலான விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிறதென்றங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அதெப்படியென்றால் சீவனில்லாமற் சரீரத்துக்குப்பிழைப்பில்லையென்றும் பார்த்துக்கொண்டிருக்கிறதினால் சீவனானது சரீரத்துக்குப் பிழைப்பா யிருக்கிறதென்று சொல்லக்கடவது. சரீரத்தின் பி

ழைப்புக்குச் சரீரமானது காரணமாகாதபோதே சீவனானது சரீரமாயிருக்க மாட்டாதென்று சொல்லக்கடவோம். மனுஷனுடைய சீவனானது அழியாதபொருளாயிருக்கிறதென்று ரூப்பிக்கப்பட்டதினாலெப்படிப்பட்ட சீவனானது தானிருக்கிறதுக்குச் சரீரத்தை யபேட்சிக்க மாட்டாதென்று சொல்லக்கடவது. பின்னையும் அது அழிந்துபோகாததுக்குச் சரீரத்தோடே கூடியவசியமாயிருக்க வேணுமென்று சொல்லவொண்ணாதென்கிறதினால் மனுஷனுடைய சீவனானது சரீரத்தோடே கூடவிருந்தாலுஞ் சரீரத்தைவிட்டுப் பிரிந்தாலும் எப்போதும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதனாலே சரீரமாகாததுமாய் முன்சொன்னாப்போலே தானிருக்கிறதுக்குச் சரீரத்தை அபேட்சியாததுமாயிருக்கிற மனுஷசீவனானது ஞானப்பொருளாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஞானப்பொருளாயிருக்கிறபோதே அது கண்டிப்பில்லாததுமாய் அகலநீளமுதலான பிரமாணமில்லாத பொருளுமாயிருக்கிறதென்று அங்கிகரிக்கத் தக்கதாகும். அந்த வண்ணமே சரீரசம்பந்தமாயிராத ஞானமுதலான விருத்திகளுக்கு அது காரணமாயிருக்கிற போதே அப்படிப்பட்ட சீவனானது சரீரமில்லாமலிருந்தாலுஞ் சரீர சம்பந்தமாயிராத ஞான முதலான விருத்திகளுக்கு அதுகாரணமாயிருக்கிற போதே அப்படிப்பட்ட சீவனானது சரீரமில்லாமலிருந்தாலுஞ் சரீர சம்பந்தமாயிராத ஞானமுதலான விருத்திகளைப் பண்ணுகிறதுக்குப் பலமுடையதாயிருக்கிறதென்கிறதைச் சந்தேகப்படத்தகாது.

ஆனபடியினாலே ஆத்துமத்துக்கு மரணமென்றுங் கால் கை முதலான அவயவங்களை யறுத்தாலோ வெட்டினாலோ வென்றுஞ் சரீரத்தை விட்டுப் பிரிகிறபோது காயாலோ கண்ணாலோ [illegible] போகிறதென்றும் உச்சந்தலையிலே பிரமரந்திர மென்றும் அதில் நின்று [illegible] சீவனானது போமென்றும் அபானத் துவாரத்தில் நின்று பிரிந்துபோனால் நரகத்திலே போமென்றும் இதுமுதலான அயுக்த விசேஷங்களை நடத்தியிருக்கிற பேர்கள் சொல்லுகிறார்களே. நம்மாற் சொல்லப்பட்ட ஆத்தும நிருணயத்திலே அப்படிப்பட்ட அயுக்த விசேஷங்களுக்குச் சொல்லத்தக்க பிரத்தியுத்தரத்தைப் புத்திமானாயிருக்கிறவன் கண்டுபிடிப்பான். அதெப்படியென்றால் மனுஷ சீவனானது சரீரமாகாததுமாய்க் கண்டிப்பும் பிரமாணமுமில்லாததுமாயிருக்கிறபோது வெள்ளை கறுப்பு முதலான வர்ணங்களுக்கும் உஷ்ணம் குளிர் முதலான குணங்களுக்கும் சுபாவமாக அது ஆதாரமாக யிருக்கமாட்டாது. அப்படிப்பட்ட ஞானப் பொருளானது சரீரத்தைப் பிழைப்பிக்கிறதென்கிறது சரீரத்திலே யிருக்கிறதென்கிறதாகுமொழிய மற்றப்படியல்ல. இப்படிப் [illegible] இந்திரியானது அவயவங்களினாலே ஸ்பரிசமாயிராமற் சக்தி ஸ்பரிசமாயிருக்கிறதென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட சக்தி ஸ்பரிசத்தினாலே மனுஷசீவனானது சரீரத்துக்குப் பிழைப்பைக் கொடாமலிருக்கிறதென்கிறது சரீரத்தை விட்டுப் பிரிகிறதென்று சொல்லப்படும். ஆனபடியினாலே சீவனானது சரீரத்தைவிட்டுப் பிரிகிறதென்கிறது சரீரத்தைப் பிழைப்பியாமலிருக்கிறதென்கிறதாகும். இதுக்குவாய் கை பிரமரந்திரம் அபானத்துவாரம் இதுமுதலான ஸ்தலங்கள் வேண்டியிருக்கிறதென்று மூடதுமதிகெட்டவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே பாவியினுடைய சீவனானது தனது சரீரத்தைப் பிழைப்பியாதக்ஷணத்திலே நரகத்திலே வேதனையை யனுபவிக்கிறதென்கிறது பாவியினுடைய சீவனானது தனது சரீரத்தைப் பிரிந்ததென்றும் நரகத்திலே விழுந்ததென்றுஞ் சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. புண்ணியவானுடைய ஆத்துமமோவென்றால் தனது சரீரத்தைப் பிழைப்பியாத க்ஷணத்திலே சர்வேஸ்வரனைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதென்கிறது அது மோக்ஷத்தின் கரைசேர்ந்ததென்றுஞ் சொல்லத்தகும்.

ஆனால் மனுஷனுடைய ஆத்துமமானது சரீரமாகாததுமாய்த் தான் பிழைக்கிறதுக்குச் சரீரத்தை அபேட்சியாத பொருளுமாய் அகண்டமானதுமாய்ச் சரீர சம்பந்தமாயிராத ஞானமுதலான விருத்திகளுக்குக் காரணமானதுமா யிருக்கிறதென்று சொன்ன போதே

மூடாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் இதெல்லாம் அடைவாகக் கிரகியாமல் முன்சொல்லப்பட்ட அபத்தவிசேஷங்களை அவர்கள் கேட்கிறார்களென்று ஆச்சரியப்படத் தேவையில்லை. அதேதென்றால் மனுஷனென்னப்பட்ட யாவரும் இருக்கிற நாள் மட்டும் பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட விஷயங்களைப் பிரத்தியக்ஷமா யறிகிறார்களொழிய பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்படாத பொருட்களை யறியமாட்டார்கள். அதுகளை யறிகிறதுக்கு வேண்டியவைகளைத் தோற்றுவிக்கிற சுபாவமான பிரதிபிம்பங்கள் புத்திக்குள் இல்லாததினாற் பஞ்சேந்திரியங்களினாலே மனுஷனானவன் கிரகியாத பொருளைப் பிரத்தியக்ஷமாயறியமாட்டான். கறுப்பு வெள்ளை முதலான பிரகாசத்தோடே யிருக்கிற வர்ணங்களும் ருசி சத்தங் கந்தங் கண்டிப்புள்ள பரிமாணங்களும் உஷ்ணங்குளிர் முதலானதுகளும் பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்படுகிற விஷயங்களாயிருக்கிறதொழிய வேறே வஸ்துவானது பஞ்சேந்திரியங்களுக்கு விஷயமாயிருக்க மாட்டாதென்கிறதினாலே ஆத்துமமுதலான சரீரமாகாத பொருட்களும் அந்தப்பொருட்களுடைய விசத சுபாவங்களும் இத்தொகைப்பட்டதும் பஞ்சேந்திரியங்களுக்கான விஷயங்களாயிருக்கமாட்டாது.

ஆதலாலே யித்தொகைப்பட்ட பொருட்களைத் தோற்றுவிக்கிற சுபாவமான பிரதிபிம்பங்கள் புத்திக்குள்ளே யுண்டாயிராமல் அவைகளை மனுஷனானவன் அறிகிறதுக்கு அவன்தானே நவமான பிரதிபிம்பங்களைத் தன்னுடைய புத்திக்குள்ளே பிறப்பிக்கவேணும். நவமான பிரதிபிம்பங்களைப் பிறப்பிக்கிறபோது பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட பதார்த்தங்களிடத்திலே நின்று பிரதிபிம்பங்களை யெடுத்து எடுத்த பிரதிபிம்பங்களைக் கொண்டு சரீரமில்லாததுகளை அறியவேணும். ஆனபடியினாலே பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட பொருட்களுடைய [illegible]க்குள்ளே எந்தப் பொருளினுடைய பிரதிபிம்பமானது அறியவேண்டின சரீரமாகாத பொருள்களுக்கு அதிகமாகக் கிட்டினதாயிருக்கிறதோ அந்தப்பொருளினுடைய பிரதிபிம்பத்தைப் போலே நவமான பிரதிபிம்பத்தை ரூபிகரித்து அப்படிப்பட்ட பிரதிபிம்பத்தைக் கொண்டு சரீரமாகாத பொருளையும் அத்தொகைப்பட்ட விஷயங்களையும் மனுஷனானவன் அறிவானேயொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே காற்றும் வெறுஞ்சாயலு[illegible] ஆகாயமுஞ் சோதியுஞ் சரீரகண்டிப்புக்கு அதிகமாகத் தூரமாயிருக்கக்கொள்ள இப்படிக்கொத்த வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களைக் கொண்டறியவேண்டின சரீரமாகாதபொருள் முதலானதுகளை மனுஷனானவன் அறியவருந்துவான். ஆனபடியினாலே யறிகிறதிலேதானே புத்தியைக்கொண்டு அறியப்பட்ட ஞாயத்தினாலே மனுஷனானவன் தப்புத்திக்கிறவன்போலே காற்று ஆகாய முதலான பிரதிபிம்பங்கள் ஆத்துமத்தினுடைய பிரதிபிம்பங்களல்லவென்று அந்த ஆத்துமத்தைத் தோற்றுவிக்கிற சுபாவமான பிரதிபிம்பங்கள் புத்திக்குள்ளே யில்லாததினால் ஆத்தும முதலான சரீரமாகாதபொருட்களை யித்தொகைப்பட்ட பிரதிபிம்பங்களைக்கொண்டு பூமியிலேயிருக்கிற நாள்மட்டுமறியக்கூடுமொழிய வேறே பிரகாரம் இப்படிப்பட்ட வஸ்துகளை யறியக்கூடாதென்று புத்திமானாயிருக்கிறவனறிவான். ஆத்துமமானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தபின்பாடு சரீர சம்பந்தமாயிருக்கிற பஞ்சேந்திரியங்களைக் கொண்டிராததினால் அறியவேண்டின வஸ்துக்களை யறிகிறதுக்குச் சகலத்தையுங் கிரமத்தோடு நடத்துகிற கர்த்தரானவர் ஆத்துமத்திலேயறியவேண்டின பொருள்களைத் தோற்றுவிக்கிற சுபாவமானபிரதிபிம்பங்களை நவமாய்க் கொடுப்பார். அந்தப் பிரதிபிம்பங்களைக் கொண்டு ஆத்துமமானது அறியவேண்டின விஷயங்களை யறியுமொழியப் பொருள்களிடத்தில் நின்று பஞ்சேந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு பொருட்களை யறியமாட்டாது. இதெல்லா முண்டாயிருக்கிறவை யறியாமல் ஆத்துமத்துக்கு வர்ணமேதென்றும் அவையவங்களேதென்றுஞ் சரீரத்திலே யெந்தப் பக்கத்தில் நின்று பிறப்படுகிறதென்றும் இது முதலான அபத்தக் கேள்விகளையுங் கேட்பாரொழிய மற்றப்படியல்ல.

௰௪-ம். பாடம்.

போனபாடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே மனுஷனுடைய சீவனானது தனது சரீரத்தைவிட்டுப் பிரிந்த பிற்பாடு மென்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளாயிருக்கிற தென்றொப்புவிக்கப் பட்டாப்போலே யாச்சுது. அப்படிப்பட்ட சத்திய விசேஷமானது தானே வேறே ருசிதப் பிரசங்கத்தினாலொப்புவிக்கப்படலாமென்றிந்தப் பாடத்திலே காட்டக்கடவோம். அதெப்படி யென்றால் மனுஷனுடைய சீவனிடத்தில் நின்று ஜெனிக்கிற சத்திரூபமான குணங்களானதுகள் பலபலதுகளாயிருந்தாலும் அதுகளெல்லாம் இரண்டு விதத்திலே யடங்குமென்று சொல்லத்தகும். கண் காது இது முதலான புறவிந்திரியங்களும் உள்ளிந்திரியங்களாகிற பொது இந்திரியமுஞ் சரீரத்துக்கானது ஆகாதது உபயோகிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்கும் மதிக்கிற சத்தியானதும் வேறே யாதொரு உள்ளிந்திரியமு முண்டாயிருந்தால் இதெல்லாம் இந்திரியமென்று சொல்லப்படும். ஆதலால் இவைகளை முதற்பங்கிலே யிருக்கிற சத்திரூபமான குணங்களென்று சொல்லக்கடவோம். இப்படிப்பட்ட சத்திரூபமான குணங்களெல்லாஞ் சீவனிடத்திலே உற்பத்தியாயிருந்து சீவனிடத்தில் நின்று ஜெனித்தாலுஞ் சரீரத்தினுடைய பலபல அவையவங்களிலே அப்படிப்பட்ட சத்திகளானதுகள் ஆதேயமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இத்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களானது ஜெந்துவினுடைய சீவனிடத்தில் நின்று ஜெனித்து ஜெந்துவின் சரீரத்திலே ஆதேயமாயிருக்குமாப்போலே மனுஷனுடைய சீவனிடத்திலே நின்று அப்படிப்பட்ட சத்திரூபமான குணங்கள் ஜெனித்தாலுஞ் சரீரத்திலே ஆதேயமாயிருக்கிறதுக்குத் தப்பாது. மிருகாதிகளிடத்திலேயு மனுஷனிடத்திலேயு முண்டாயிருக்கிற இப்படிப்பட்ட சத்திரூபமான குணங்களானதுகள் சரீர சம்பந்தமாயிருக்கக்கொள்ள மனுஷாத்துமத்தினுடைய கீழ்ப்பங்கு என்று சொல்லத்தகும். மிருகாதிகளிடத்திலே யித்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்கள் காணப்படுமொழிய இதுக்கு மேலான வேறொன்றுங் காணமாட்டாது.

மனுஷ சீவனென்றால் அதில் நின்று இப்படிப்பட்ட சத்திரூபமான குணங்கள் ஜெனிக்கிறதுந் தவிர மேலாயிருக்கிற வேறே சத்திரூபமான குணங்கள் ஜெனிக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அதுகள் சரீரத்திலே ஆதேயமாயிராமல் ஆத்துமமானது தானே அத்தொகைப்பட்ட சத்திரூபமான குணங்களுக்கு ஆதாரமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இத்தொகைப்பட்ட சத்திகளானதுகள் ஞான விருத்திகளுக்குக் காரணமான புத்தியுஞ் சுவாதந்திரியமுள்ள மனசுமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட சத்திகளைக் கொண்டு மனுஷனுடைய சீவனானது சர்வேஸ்வரன் முதலான சரீரமில்லாத விஷயங்களை அறிகிறதுக்கும் அபேக்ஷிக்கிறதுக்கும் வெறுக்கிறதுக்கும் வல்லதாயிருக்கிறதென்று சொல்லத்தகும். ஆதலாலே இத்தொகைப்பட்ட சத்திரூபமான புத்தி மனசானது சரீரத்திலே ஆதேயமாயிராமல் சரீரத்தினுடைய சம்பந்தமாயிராததினால் அதுகள் மனுஷ சீவனுடைய மேல்பங்கென்று சொல்லப்படும். இதெல்லா மிந்தவடைவாகயிருக்கையிலே அதினாலே தானே ஜெந்துவினுடைய சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாற் பின்பு நிலைநிற்காமல் அழிந்துபோகுமென்றும் மனுஷனுடைய சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தாலு மென்றென்றைக்கும் அது அழியாமல் நிற்கத்தக்க பொருளாயிருக்கிறதென்றுஞ் சந்தேகமறக் கண்டுபிடிக்கலாம். அதேதென்றால் மிருகாதிகளுடைய சீவனானது சரீரத்துக்கு ஆதேயமாயிருக்கிற சத்திரூபமான இந்திரியங்களை மாத்திரங் கொண்டிருக்கிறதினால் சரீரத்தோடே கூட அது இருந்து கொண்டு தனது சேட்டைகளைப்

பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிற தொழியத் தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தால் ஒரு சேட்டையாகிலும் பண்ணுகிறதுக்குப் பலமுடையதாயிராது. சீவனென்னப்பட்டயாவுஞ் சேட்டையில்லாமற் பிழைக்கமாட்டா தென்கிற நியாயமுண்டா யிருக்கையிலே தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த செந்துவின் சீவனானதொரு சேட்டையாகிலும் பண்ணமாட்டாதென்கிறதினாற் செந்துவினுடைய சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தால் அழிந்துபோகு மென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. மனுஷனுடைய சீவனோ வென்றாற் சரீரத்துக் காதேயமா யிருக்கிற சத்திரூபமான இந்திரியங்களைக் கொண்டிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட இந்திரியங்களைக் கொண்டு ஆன சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கும். அன்றியுஞ் சத்திரூபமான குணங்களான புத்தியையுஞ் சரீரமாகாத விஷயங்களை அபேக்ஷிக்கவும் வெறுக்கவுஞ் சுவாதந்திரிய முள்ள மனசையுங் கொண்டிருந்து அப்படிப்பட்ட மேலான அம்சத்துக்கு ஆத்துமமானது ஆதாரமா யிருக்கக்கொள்ள மனுஷனுடைய ஆத்துமமானது சரீரத்தை விட்டுப்பிரிந்தாலும் ஞான விருத்திகளென்னப்பட்டயாவையும் பண்ணுகிறதுக்குஞ் சரீரமாகாத விஷயங்களை வெறுக்கிறதுக்கும், அபேக்ஷிக்கிறதுக்கும் வல்லதா யிருக்கக்கொள்ள மனுஷ சீவனானது சரீரத்தை விட்டுப்பிரிந்தாலுந் தனது அநேக விருத்திகளைப் பண்ணுகிற சீவனுமா யழியாத பொருளுமா யென்றென்றைக்கும் நிற்கத்தக்க ஆத்துமமுமா யிருக்கிறதென்று சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமென்று அங்கீகரிக்கக் கடவோம்.

இதெல்லாம் இரண்டுவமைகளினாலே விளங்கச் சொல்லக்கடவோம். இராச்சியபாரம் பண்ணிக்கொண்டு வருகிற இராசாவானவ னிரண்டுவகையுள்ள சேட்டைகளைப் பண்ணிக்கொண்டு வருகிறானென்று சொல்லத்தகும். ஒருவகைச் சேட்டையானது ஒருத்தனுக்குத் துரைத்தனங் கொடுக்கிறானென்கிறதும் வேறொருத்தனுக்குத் துரைத்தனம் வாங்கிறதென்கிறதும் ஒருத்தனுக்குச் சம்பாவனை பண்ணி வேறொருத்தனுக் காக்கினை யிடுகிறதென்கிறதும் ஒருத்தன் மேலே படையிறங்கி வேறொருத்தனோடே சமாதானம் பேசுகிறதென்கிறதும் இத்தொகைப்பட்ட சந்திவிக்கிரக முதலான ஆறு உபாயங்களைத் தனதுத்திரமையோடு பண்ணிக் கொண்டுவருகிற தென்கிறதும் இராசாவுக்குண்டான முதல் வகையுள்ள சேட்டைகளென்று சொல்லத்தகும். இந்தவகையுள்ள சேட்டைகள் தவிர நித்திரையும் போசனமும் வார்த்தைசொல்லுகிற தென்கிறதும் பஞ்சேந்திரிய மூலமான கிரியைகளும் ஞானவிருத்திகளும் இத்தொகைப்பட்ட சுபாவமான சரித்திரங்களும் இராசவீட்டிலே யிருக்கிற இரண்டாம் வகையுள்ள சேட்டைகளென்று சொல்லக்கடவோம். இது இப்படியிருக்கையிலே இராசாவானவன் தனது ராச்சியத்தைப் பறிகொடுத்தால் அத்தோடே கூட முதல் வகையுள்ள சேட்டைகளென்னப்பட்டயாவும் போமென்கிறதுக்குத் தப்பாது. ராச்சியபாரம் பண்ணுகிறதுக்கடுத்த விப்படிப்பட்ட சேட்டைகள் போனாலும் ராசாவானவன் தனது சுபாவமான சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லவனாயிருக்கக்கொள்ள ராச்சியம் போனாலும் இராசாவானவன் சாகாமற் பிழைத்திருப்பானென்கிறதுக்குச் சந்தேகப்படுவாரில்லை.

அத்தன்மைபோற் சீவனானது ராச்சியமாகிற சரீரத்திலே இராசாவானவனிருந்து கொண்டு ராச்சியத்தைப் பண்ணுகிறப்போலே பஞ்சேந்திரியங்கள் முதலானஇந்திரியங்களைப் பார்த்து அந்தந்த விருத்தியைத் தனது கற்பனைப்படியே யுண்டாகப் பண்ணும். சரீரத்தை விட்டுப் பிரிந்தால் ராச்சியத்தைப் பறிகொடுத்து ராச்சியமானாத ராசாவைப்போலே ராச்சியமாகிற சரீரத்துக்கடுத்த கிரியைகளைப் பண்ணாதிருக்கு மென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட அவஸ்தையை யடைந்திருக்கிற மனுஷ சீவனானதைப் பார்க்குமிடத்திற் சுபாவமான நித்திரை போசனாதி கிரியைகளை யுடைத்தான ராசாவானவன் போலே மனுஷனுடைய சீவனானது தனது சுபாவமான ஞானாதி விருத்திகளைப் பண்ணுகிறதுக்குச் சத்தி ரூபமாகிய

புத்தியையுஞ் சுவாதந்திரியமுள்ள மனசையுங் கொண்டிருக்கக் கொள்ளப் பலபல ஞான விருத்திகளையுஞ் சுவாதந்திரியமுள்ள மனசினுடைய சேட்டைகளையும் பண்ணிக்கொண்டிருக்கும். அதேதென்றால் இப்படிப்பட்ட விருத்திகளுடைய காரணமாகிற புத்தியும் மனசுஞ் சரீரத்திலே யாதேயமாயிராமல் ஆத்துமாவையே ஆதேயமா யிருக்கிறதினாலேயும் அப்படிப்பட்ட ஞானாதி விருத்திகள் சரீர சம்பந்தமா யிராததினாலேயும் மனுஷசீவனானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தபிற்பாடு அப்படிப்பட்ட விருத்திகளைப் பண்ணிக்கொண்டிருக்குமென்கிறதினாற் சரீரத்தைவிட்ட மனுஷனுடைய சீவனானது அழியாமல் என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளா யிருக்கிற தொழிய மற்றப்படியில்லை.

இதுக்குக் காரணமேதென்றால் சீவனானது சுபாவமாய்ச் சேட்டைகளில்லாமலிருக்க மாட்டாமல் யாதொரு சேட்டையை யெப்போதும் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கவேணும். இப்படி சொல்லாவிட்டாற் சீவனுஞ் சீவனாகாத சடபதார்த்தமும் ஏக பொருளாயிருக்கிறதென்கிற அபத்தத்தைச் சொல்லுகிறதுக்கொக்கும். ஆதலாலே செந்துவினுடைய சீவனானது சரீரத்தை விட்டுப் பிரிந்தால் ஒரு சேட்டையாகிலும் பண்ணமாட்டாததினாலே சரீரத்தை விட்டவுடனே அழிந்துபோகுமென்று சொல்லக் கடவோம். மனுஷனுடைய சீவனோ வென்றாற் சரீரமில்லாமல் ஞான முதலான அநேக சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கக் கொள்ளச் சரீரத்திலே யிருந்துகொண்டு முன் சொல்லப்பட்ட இரண்டுவகைச் சேட்டைகளைப் பண்ணும். சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும் ஞானாதி சேட்டைகள் மாத்திரம் பண்ணும். ஆதலால் சரீரத்தோடே யிருக்கிறபோது தான் பிழைத்திருந்து சரீரத்தைப் பிழைப்பித்துக் கொண்டிருக்கும். சரீரத்தை விட்டாற் சரீரத்தைப் பிழைப்பிக்கப் பண்ணாமல் தான் பிழைக்கிற பொருளா யென்றென்றைக்கும் நிற்குமென்றொப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகுமென்கிறதுக்குத் தப்பாது.

இந்தவிடமாகச் சொல்லப்பட்ட இந்தச் சத்தியத்தை வேறொரு உவமையினாலே விளக்கலாம். சமுத்திரத்திலே யிருக்கிற செந்துக்களானவை இரண்டு வகைக்குள்ளே அடங்கியிருக்கிற தென்று சொல்லத்தகும். சிலதுகளுக்குச் சமுத்திரத்திலே மாத்திரஞ் சீவனானது இருக்கு மொழியச் சமுத்திரத்தை விட்டுக் கரையேறினாற் கரையிலேயிரையானாலும் அவைகளுக்குக் கிடைக்கமாட்டாது. இத்தொகைப்பட்ட செந்துக்களானவைகள் தண்ணீரை விட்டுப் பிரிந்தவுடனே செத்துப்போமென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த மச்சியங்கள் தவிர வேறே சில செந்துக்களுண்டு அவையாவன ஆமை முதலை நீர்ப்பாம்புகள் நண்டுகள் இவைமுதலான செந்துக்களுக்குத் தண்ணீரிலேயும் இரைகிடைக்கும். தண்ணீரைவிட்டு அவைகள் கரையேறினாற் கரையிலேயும் புல் முதலான பக்ஷணங்களைத் தின்று கொண்டு வரும். இத்தொகைப்பட்ட செந்துக்களானவைகள் சமுத்திரத்திலேயுஞ் சமுத்திரத்திற்குப் புறத்தியிலேயும் பிழைக்குமென்கிறதுக்குத் தப்பாது. அம்மருவாதியே யிரைகிடையாமற் பிழைக்கமாட்டாத சீவன்களை விசாரிக்குமிடத்தில் இத்தொகைப்பட்ட சீவன்களுக்குள்ளே இரண்டுவகையுள்ள சீவன்களுண்டென்று சொல்லப்படும் சில சீவன்களுக்குத் தண்ணீராகிற சரீரத்திலே மாத்திரஞ் சேட்டைகளுண்டாய்த் தண்ணீராகிற சரீரத்துக்குப் புறத்தியிலே ஒரு சேட்டையாகிலும் உண்டாயிராது. தண்ணீரிலே மாத்திரம் இரைகளைத் தின்றுகொண்டு பிழைத்திருக்கிற செந்துக்களைப்போலே இத்தொகைப்பட்ட சீவன்கள் தண்ணீராகிற சரீரத்திலே சேட்டைகளைப் பண்ணுகிறவைகளாய்த் தண்ணீராகிற சரீரத்துக்குப் புறத்தியிலே சேட்டைகளைப் பண்ணுகிறதுமில்லை பிழைத்திருக்கிறதுமில்லை யென்று அங்கீகரிக்க வேணும். மிருகாதிகளுடைய சீவன்களென்னப்பட்டயாவும் ஞானமுடைத்தானவைகளா யிராததினால் இத்தொகைப்பட்ட அந்தஸ்திலே யிருக்கிற சீவன்களென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அதேதென்றால்

மனுஷனுடைய ஜீவனென்றே ஞானமுடைத்தானதா யிருக்கக்கொள்ள அது சரீரத்தைவிட்டு [illegible]நிற்பாமற் சேட்டைகளைப்பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே தண்ணீராகிற சரீரத்திலேயுஞ் சரீரத்துக்குப் புறத்தியிலேயும் மனுஷனுடைய ஜீவனானது பலபல சேட்டைகளை யு[illegible]த்தானது [illegible]கள் தண்ணீரிலேயுந் தண்ணீருக்குப்புறத்திலேயும் இரையைத் தி[illegible]ண்டு பிழைத்திருக்கிற செந்துக்களைப்போலே, தண்ணீராகிற சரீரத்திலேயுஞ் சரீரத்துக்குப் புறத்தியிலேயும் மனுஷ ஜீவனானது பிழைத்திருக்கிற பொருளாயிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகப்படக் கடவோமல்ல.

ஆதலாலே மனுஷனுடைய ஜீவனாலேபண்ணப்படுகிற சேட்டைகளென்னப்பட்டவையாவுமொரே அந்தஸ்திலேயிருக்கிற தென்று சொல்லவுமென்னவுமொண்ணாது. அதேதென்றால் மனுஷனுடைய ஜீவனாலே பண்ணப்படுகிற சிலசேட்டைகளானவைகள்கேவலஞ் சரீரசம்பந்தமாயிருக்கிற சேட்டைகளுமாய் மிருகாதிகளுக்கும் மனுஷனுக்குஞ் சாதாரணமானவைகளுமாயிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவ்வண்ணமே நித்திரையும் போசனமும் பஞ்சேந்திரியங்களுடைய கிரிகைகளும் இத்தொகைப்பட்டமற்றுண்டான விருத்திகளுமனுஷனிடத்திலேயு மிருகாதிகளிடத்திலேயுங் காணப்படுகிறதினால் அதுகளெல்லாஞ் சரீர சம்பந்தமா யிருக்கிற கிரிகைகளென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றா லப்படிப்பட்ட விருத்திகளெல்லாஞ் சரீரத்தினுடைய மேரையைக் கடந்து மேலாகப்போகாமலிருக்கிறதினாற் சரீரத்திலே ஆதேயமாயிரு[illegible]த்திரூபமான குணங்களானதுகள் இத்தொகைப்பட்டகிரிகைகளுக்குக் காரணமாயிருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே அப்படிப்பட்ட விருத்திகள் சரீரத்தினுடைய மேரைக்கப்பாற் கடவாததினாலதுகள் சரீர சம்பந்தமாயிருக்கிற கிரிகைகளென்று சந்தேகமறக்கண்[illegible]க்கக்கடவோம்.

இது யிப்படியிருக்கையிலே மிருகாதிகளிடத்திலே காணப்படாததுகளுமாய்ச் சரீரத்து மேரையை மிகவுங்கடந்து மேலாகப் போகிறதுகளுமாயிருக்கிற சிலவிருத்திகள் மனுஷனிடத்திலே யுண்டாயிருக்கிற தென்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த விருத்திகளுடைய சுபாவ சொரூபத்தைப் பார்க்கும்போது சரீரமில்லாத பொருட்கள் அப்படிப்பட்ட விருத்திகளுக்கு விஷயங்களா யிருக்கக்கொள்ள அதுகளுக்குக் காரணமாயிருக்கிற சத்தியானது சரீரத்திலே யாதேயமாயிராமல் ஆத்துமத்திலே தானே யது ஆதேயமா யிருக்கிற தென்று சொல்லத்தகு மொழிய மற்றப்படியல்ல.

இந்தச் சத்திய விசேஷத்தை யொரு ஞாயத்தினாலே புத்தியாறு யிருக்கி[illegible] கண்டுபிடிக்கக் கடவான். அதேதென்றால் மனுஷனானவன் இரண்டு விருத்தமான கிரிகைகளைத் தன்னிடத்திலே யனுபவித்துக் கொண்டு வருகிறான். அப்படிப்பட்ட விருத்தமான விருத்திகள் ஏகக்ஷணத்திலே யிருக்கும்போது பின்ன பேத சத்திகளினாலே யதுகளிரண்டும் பண்ணப்படுகிற தென்று சொல்லவேணு மொழிய வொருசத்தி ரூபமான குணத்தினின்று அப்படிப்பட்ட விருத்தமான விருத்திகள் பிறக்கிற தென்று சொன்னோமானால் ஏக சத்தியான தேகக்ஷணத்திலே தானேயேக பொருளின் பேரிலே வெறுப்பையு மாசையையும் பிறப்பிக்கிற தென்கிற அபத்தத்தை யங்கீகரிக்கவேணும். அதெப்படியென்றாற் சரீர சுகத்தை யனுபவிக்கவேணு மென்று காமாதுரனா யிருக்கிறவன் நல்ல ஸ்திரீயைப்பார்த்து அவள்பேரிலே யாசையானது காமாதுரனுடைய ஆத்துமத்திலேபிறக்கும். அந்தக்ஷணத்திலேதானே ஸ்திரீபேரிலேயாசையானதுண்டா யிருக்கையிலே அப்படிப்பட்டவாசையை நிக்கிரகம் பண்ணுகிறவேறொரு விருத்தியானது காமாதுரனுடைய ஆத்துமத்திலே யுண்டாயிருக்கும். இத்தொகைப்பட்ட இரண்டு விருத்திகளுடைய சுபாவ சொரூபத்தைப் பார்க்கும்போது ஆசையாகிறவிருத்தியினாலே ஸ்திரீவேணுமென்று சொல்லப்படும், ஸ்திரீயாசை

யினுடைய நிக்கிரகமோவென்றால் அப்படிப்பட்ட நிக்கிரகத்தினாலே கர்த்தனுடையமுகத்தைப்பார்த்து ஸ்திரீவேண்டாமென்று சொல்லப்படும். ஸ்திரீவேணும் வேண்டாமென்[illegible]கிற இரண்டு விருத்தமான விருத்திகளானதுகள் ஏக க்ஷணத்தில் ஏக சத்தியினாலே பிறக்கமாட்டாதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இதுயிப்படியிருக்கையிலே சரீரசுகத்தையபேக்ஷிக்கிற சேட்டையானது சரீரத்துக்கடுத்த சுகத்தை யங்கீகரிக்கிறதினா லப்படிப்பட்ட ஆசையானது சரீரசம்பந்தமாயிருக்கிறதென்று சந்தேகமறச் சொல்லக்கடவோம். கர்த்தனுடையமுகத்தைப்பார்த்துச் சரீரத்தினுடைய சுகத்தைவெறுக்கிற நிக்கிரகமோவென்றால் அது சரீரத்துக்குவிருத்தமானதா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட விருத்திக்குக்காரணமான சத்தியானது சரீரசம்பந்தமா யிராததுமாய்ச் சரீரத்திலே ஆதேயமா யிராததுமா யிருக்கிற சத்தியென்று ஒப்புக் கொள்ளக்கடவது.

இந்தவகையாகத் தேவ பத்தனா யிருக்கிறவன் அனுபவிக்கிற வியாதியை வெறுத்து அதைவேண்டாமென்கிற ஆசையவனிடத்திலே யுண்டாயிருக்கும்போது ஆண்டவனிமித்தமாக வியாதி முதலான நோவுகளைத் திரளாயனுபவிக்க வேணுமென்கிற அபேக்ஷை யுண்டாயிருக்கிறது. இதுக்குச் சரியாகப் பாவ நிவாரணமுண்டாகிறதுக்குப் பலபலவாதைகளையும் நிர்ப்பந்தங்களையு மனுபவிக்க வேணுமென்கிற இச்சையானது தேவ பத்தனுக்குண்டாயிருக்கையிலே யப்படிப்பட்ட வுபத்திரவங்களை வெறுக்கிற விருத்தியான தவனிடத்திலே கூடப்பிறந்திருக்கும். கடைசியாய் வியாதிக் காரனானவன் தனது வியாதி போகவேணு மென்கிறதுக்காகக் கசப்புள்ளகொண்டு சகிக்கிற நிமித்தமாக வருகிற நோவுக்குச் சம்மதப்படுகிற க்ஷணத்திலே தானே யப்படிப்பட்ட தகனத்தை வெறுத்து அதுக்குப் பின்வாங்கிற பயமாகிற விருத்தியானது அவனிடத்திலே யுண்டென் றனுபவசித்தியினாலே கண்டுகொண்டு வருகிறோம். இதைப் பார்க்கும்போது வேணும் வேண்டாமென்கிற விருத்திகளிரண்டும் ஒரேக்ஷணத்திலே யுண்டாகுமென்று சொல்லப்படும். ஒருகாரணத்தினாலே ஒருக்ஷணத்திலே வஸ்துவைக் கிரகிக்கிறதுக்கும் தள்ளுகிறதுக்கும் வல்லதா யிராததுபோலே ஏக சத்தியானது யேகக்ஷணத்தில் ஒருவஸ்துவை வேணும் வேண்டாமென்கிற விருத்திகளி[illegible]ரண்டையும் பண்ணமாட்டா தென்கிறதுக்குச் சந்தேகமில்லை.

இதெல்லா மிப்படி கடந்து வரச்செய்தே [illegible]வாதைகளை யனுபவிக்கிறதுக்குப் பின்வாங்கிற விருத்தியானது அதுகளை வேண்டா மென்கிறதுக் கொக்கும். ஆனபடியினாலே அதெல்லாஞ் சரீரத்தின் சுகத்தைமாத்திரந் தேடுகிற ஆசையா யிருக்கக்கொள்ளச் சரீரத்தைத் தாண்டிப்போகாத அப்படிப்பட்ட விருத்திக்குச் சரீரத்திலே யாதேயமாயிருக்கிற சத்தியானது காரணமாயிருக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. இதுக்கு விரோதமாயாக நோவுவாதைகளை யனுபவிக்க வேணுமென்கிற இச்சையானது [illegible]க்கு விரோதமானதுமாயச் சரீரத்தின் வகையைக் கடந்து நீதியையும் ஞாயத்தையும் அது விஷயிகரிக்கிறதினாலே அப்படிப்பட்ட விருத்திக்குக் காரணமான சத்தியானது சரீரத்தின் சம்பந்தமாகாததுமாய்ச் சரீரத்திலே ஆதேயமா யிராததுமாயிருக்கிற சத்தியென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. [illegible]ரசீவனுக்குண்டான யிப்படிப்பட்ட மேலாம்சமானது சரீரத்தை யபேக்ஷியாம லிருக்கிறதினால் மனுஷனுடைய ஆத்துமமானது தானே யப்படிப்பட்ட சத்திக்கு ஆதாரமாயிருந்து சரீரத்தை விட்டுப் பிரிந்தாலும் அப்படிப்பட்ட சத்தியை யிடைவிடாமல் எப்போதுங் கொண்டிருக்கு மென்கிறதுக்குத் தப்பாது.

ஆனபடியினாலே ஆத்துமமானது தனது சரீரத்தைவிட்டுப் பிரிந்திருந்தாலும் அதைக்கொண்டு ஆனவிருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே மனுஷனுடைய ஜீவனானது சரீரமில்லாமற் பலபல சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கக் கொள்ள அப்படிப்பட்ட ஜீவனானது என்றென்றைக்கும் நிற்கத்தக்க பொருளா யிருக்கிற தென்று சந்தேகமற வொப்புக் கொள்ளத்தக்க சத்தியமென்று சொல்லக்கடவோம். என்றென்றைக்கும் நிற்கத்தக்க இப்படிக்கொத்த ஜீவனானது ஒரு சரீரத்தை விட்டுப் பிரிந்து பலபல சரீரங்களை யெடுத்து வெவ்வேறே ஜென்மங்களை யடையலாமோ யில்லையோ வென்கிற விசேஷமானதிலே அனேகம் பேர்கள் மயங்கினார்களென்கிறதுக்காக அதிலே யங்கீகரிக்கத்தக்க சத்தியத்தை வருகிற யெட்டுப் பாடங்களிலே விரிவாக வெளிப்படுத்தக் கடவோம்.

௰௩-ம். பாடம்.

அனாதிஞான சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் சகலத்தையுந் தப்பில்லாததுமா யளவிடுக்கப்படாததுமாயிருக்கிற [illegible] திட்டத்தின்படி நடத்திவருகையிலே வாக்குக்கும் மனசுக்கு மெட்டாததாயிருக்கிற அப்படிப்பட்ட [illegible] கிரமத்தின்வகையைத் தெளிவுற மனுஷர் மேலெழுந்தவாரியாகமாத்திரம் பார்த்ததினால் அதுபோம்வழியின்னதென்று சத்தியமாகக் கண்டு பிடிக்கமாட்டார்கள். ஆனபடியினாலே கண்ணில்லாதபேர்கள் கையினாலேமாத்திரம் யானையை ஸ்பரிசித்து உரல் உலக்கைமுதலான ரூபங்களை யானையானது கொண்டிருக்கிறதென்று குருடராயிருக்கிறபேர்கள் சொல்லி நிலை நிறுத்தினதுபோலே அற்பபுத்தியுடைத்தான மனுஷரானபேர்கள் சர்வேஸ்வரன் லோகத்தை நடத்துகிறதிலே அவருக்குப் பொருந்தியிருக்கிற குறையற்ற ஞானமுள்ள கிரமத்தை யனுபவத்தினாலேமாத்திரம் தொட்டதுபோலே மதியுடைய வற்பனைத்தையறியாமல் அதுபோம்வழி யின்னதென்று சொல்லுகிறபோது சத்தியத்தின் வழியை மிகவுந் தப்பிப் பற்பல அபத்தவிசேஷங்களைச் சித்தாந்தப் பக்ஷமாக அறியாத பேதைகளிடத்திலே நிலை நிறுத்தினார்கள்.

இப்படிப்பட்டவர்களுடைய அஞ்ஞானத்தினாலே அறியாத பேர்களுக்குப் பலபல விஷயங்களிலே மகாமகாப்பட்ட கேடுகளான மயக்கங்களானவைகள் வந்து விழுந்தாப் போலே பெரியவர்களென்றுந் தணித்தவர்களென்றும் ஸௌரியங் கொள்ளுகிற பேர்களென்றும் ஸௌக்கியம் பண்ணுகிறபேர்களென்றும் வியாதிமுதலான உபாதியை யனுபவிக்கிற பேர்களென்றும் கர்த்தன் திருவுளப்படியே லோகத்திலே இரிகிறார்களே இப்படிப்பட்ட பின்னபேதங்களுக்கும் ஏற்றக் குறைச்சல்களுக்கும் ஆனகாரணங்களை மெய்யாகவே மதிகெட்டபேர்கள் கண்டு பிடியாததினால் இவர்களுடைய அஞ்ஞானத்தினாலே பூர்வ ஜென்ம முண்டாயிருந்ததென்கிற மயக்கமானது தேவோக்தித்த வேதத்தை யறியாதபேர்களுக் குண்டாச்சுது. அவ்வண்ணமே மனுஷனுடைய ஜீவனானது பூருவகாலங்களில் எண்ணப் படாத சரீரங்களைக் கொண்டிருந்து பலபல சாதியன்னதாய்ப் பிறந்ததும் போராமல் கல்லாய் மரமாய் ஊர்வன பறப்பன மிருகங்களாய் மிருகங்களாய்ப் பிறந்ததென்று சொல்லி இந்த டைவிலே பூர்வஜென்மத்திலே நிறுத்தினார்கள்.

மனுஷன் கடைத்தேறுகிறதுக்கு மிகவும் விக்கினமாயிருக்கிற இப்படிப்பட்ட தப்பறைப் பக்ஷத்தை நிலை நிறுத்தத்தக்கதாக அவர்களுடைய புத்திக்கு நியாயம்போலே தோன்றின காரணமேதெனில் பாக்கியமென்னப்பட்டதெல்லாம் அவனவன் பண்ணின புண்ணியத்துக்குப் பலனாயிருக்கவேணும் பின்னையும் வியாதி நிர்ப்பாக்கிய மென்னப்பட்டதியாவும் ஆக்கினைரூபமாயிருக்கக்கொள்ள அவனவனாலே பண்ணப்பட்ட பாவத்தினிமித்தியமாக அவனவன் பூலோகத்திலே வியாதி தாரித்திரிய மிடி முதலான நிர்ப்பாக்கியங்களை யனுபவித்துக்கொண்டு வரவேணுமென்பதுமொழிய மற்றப்படியல்ல. இது காரணமாக அவனவன் இராசாங்க முதலான ஐஸ்வரியமுள்ளவனாய்ப் பிறக்கிறதுக்கும் சரீர வாரோக்கிய முதலான சுகங்களை யனுபவிக்கிறவனாய்ச் செனிக்கிறதுக்கும் அவன் இந்த ஜென்மத்திலே புண்ணியம் பண்ணினானென்று சொல்லக்கூடாததினால் அவனவன் பூருவகாலத்திலே பிறந்து அப்படிப்பட்ட பூருவஜென்மத்திலே அவனவன் பண்ணின புண்ணியங்களுக்கான பலன்களைப் போசிக்கிறதுக் கவனவன் இராசாங்க முதலான ஐஸ்வரியமுள்ளவனாய்ப் பிறக்கிறானென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மேலும் அவனவன் பூருவஜென்மத்திலே பண்ணின பாவங்களுக்குத்தக்க ஆக்கினை யனுபவிக்கிறதுக்கு அவனவன் ஈனனாய் வியாதி முதலான நிர்ப்பாக்கியமுள்ளவனாய் இந்த ஜென்மத்திலே பிறக்கிறானென்று கற்பித்தார்கள். அவ்வண்ணமே அவனவன் பூருவ ஜென்மங்களிலே பண்ணின பாவ புண்ணியமானதுகள் இந்த ஜென்மத்திலே துலையுமென்று அங்கீகரிக்கிறார்கள்.

முழுதுந் தப்பறையாயிருக்கிற இந்தப் பக்ஷமானது தேவனருளிச்செய்த வேதத்துக்கு இதரமாயிருக்கிற அநேகமதங்களிலே விதிக்கப்படுகிறதினாலே அப்படிப்பட்ட பக்ஷத்தின் தப்பறையை அடைவாகப் பலபல நியாயங்களினாலே வெளிப்படுத்தின பிற்பாடு கர்த்தன் திருவுளப்படியே லோகத்திலே நடக்கிற ஏற்றக் குறைச்சலானது பூர்வஜென்மங் கற்பிக்கப்படுகிறதுக்கு இவர்களுடைய மதங்களிலே அதேநியாயம் அதேகாரணமாயிருக்கிறதென்று சொல்லப்பட்டிருக்கக் கொள்ள லோகத்திலே உண்டாயிருக்கிற பலபல பொருள்களுடைய முன் சொல்லப்பட்ட வேற்றுமைக்கும் ஏற்றக்குறைச்சலுக்குஞ் சுமுத்திரையான காரணம் இன்னதென் றொப்பச் சொல்லிக் காட்டின பிற்பாடு அஸ்திவாரமில்லாத கோபுரமானதிடிந்து விழுந்தாப்போலே அநேகந் தெளிவற்ற மனுஷருடைய மனசிலே பூரண அங்கீகாரத்தினாலே கோபுரம்போலே நிலைநிறுத்தப்பட்ட பூர்வஜென்ம பக்ஷமானது அஸ்திவாரமில்லாத முன் சொல்லப்பட்ட இடிந்த கோபுரம்போல் அது விழுமென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே யிப்போது பூமியிலே இரிகிறபேர்கள் ஈனத்தன முதலான நிர்ப்பாக்கியத்தையும் ராசாங்க முதலான பாக்கியத்தையு மனுபவிக்கிறதுக்குப் பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவபுண்ணியமானது காரணமாயிருக்கமாட்டாதென் றிந்தப் பாடத்திலேயும் வருகிற பாடத்திலேயு மொப்பச் சொல்லி யடைவாகக் காட்டக்கடவோம்.

சண்டாளனொருத்தன் முழுத் தாரித்திரத்தை யடைந்திருக்கிறதும் போராமல் துர்க்கந்தப் புண்கள் முதலான பலபல கெட்ட வியாதிகளினாலுபாதிக்கப்படுகிறான். அவனண்டையி லொருத்தனாகிலு மிருந்து அவனுடைய துர்க்கந்தத்தையுந் துற்குணங்களையுஞ் சகிக்கமாட்டாமற் சகலராலும் முழு அவமானப்பட்டு அகோராத்திரம் ஆவஸ்திரப்படுகிறான். இப்படிக்கொத்த சண்டாளனுடைய அவஸ்தைக்கு இந்தடைவாக இவர்கள் காரணத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சண்டாளனுடைய ஆத்துமமானது பூர்வஜென்மத்திலே வேறே சரீரத்தைக் கொண்டிருந்து மகாமகாப்பட்ட பாவங்களைப் பண்ணி லவுகீக ராசாவானவன் கள்ளனைச் சிறைச் சாலையிலே போட்டு அடிக்கிறதென்கிறது நியாயமுள்ள கிரமமாகுமே. அத்தன்மைபோலக் குறையற்ற நீதியுள்ளவராயிருக்கிற கர்த்தரானவர் பூர்வஜென்மத்திலே பாவம் பண்ணின அந்தத் துஷ்டாத்துமத்தை முன் சொல்லப்பட்ட துர்க்கந்த வியாதிகளோடேயு முழு அவமான தூஷணங்களோடேயும் கூடியிருக்கிற சிறைச்சாலையாகிற சரீரத்திலே யடைத்துப் போட்டார். அப்படிப்பட்ட சரீரத்திலேயிருக்கிற ஆத்துமமானது கஸ்தியை அனுபவிக்கிறதினால் முன் பண்ணப்பட்ட பாவங்களெல்லாந் துலையுமொழிய மற்றப்படியல்ல.

இந்தடைவிலே சொல்லப்பட்ட வர்த்தமானத்திலே அடங்கியிருக்கிற தப்பறை விசேஷங்களைத் தனித்தனியே யாராய்ந்து கொள்ளக்கடவோம். அதெப்படியென்றால் துஷ்டாத்துமமானது ஆக்கினையை அனுபவிக்கிறதுக்குச் சண்டாளனுக்குண்டான சகல நிர்ப்பாக்கியத்தோடேகூடியிருக்கிற சரீரமானது ஆன சிறைசாலையாயிருந்தால் துஷ்டாத்துமமானது அப்படிப்பட்ட சரீரத்திலே கட்டுப்பட்டிருக்கிறது கட்டாயமென்று சொல்லவேணும். கட்டாயமுண்டாயிருக்கையிலே அப்படிப்பட்ட சரீரத்திலே ஆத்துமத்தினுடைய ஸ்திதியானது மனசுக்குப் பொருந்தாமலிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தகும். அது மனசுக்குப் பொருந்தாத ஸ்திதியாகிறபோது சிறைச்சாலையாகிற சரீரத்தில் நின்று துஷ்டாத்துமமானது பிறப்படுகிறதுக் கிடைவிடாமல் ஆசைப்படவும் வேணும். இதன்றியே சிறைச்சாலையான சரீரமானது நாளுக்குநாள் கெட்டுப்போனால் அதுநிமித்தியமாகத் துஷ்டாத்துமமானது மிகவுஞ் சந்தோஷப்படவும்வேணும். சந்தோஷப்படுகிறதினாற் றானப்படிப்பட்ட சரீரமாகிற சிறைச்சாலையை நீங்கிப்போகிறதுக்குப் பிரயாசைப்படவேணும். இதெல்லாம் சிறைசாலையிலே

கட்டாயமா யடைக்கப்பட்ட கள்ளனுக் குண்டாயிருக்கிறதினுல் அப்படிப்பட்ட கள்ளனைப் போலே சிறைசாலையாகிற சண்டாளனுடைய சரீரத்திலே அடைக்கப்பட்ட ஆத்துமத் துக்கிந்தக் குணங்களெல்லா முண்டாயிருக்க வேணுமென்றிருக்கையிலே அப்படிப்பட்ட குணங்களெல்லாஞ் சண்டாளனுடைய துர் ஆத்துமத்திலே காணுகிறதுந் தவிர அதுக்கு விருத்த விருத்திகள் சண்டாளனுடைய ஆத்துமத்திலே காணப்படுகிற தொழிய மற்றப் படியல்ல. அதேதென்று லெப்படிப்பட்ட மகாமகா கடின வியாதிகள் சண்டாளனுடைய சரீரத்திலே யுண்டாயிருந்தாலும் எப்படிக்கொத்த அவமான தூஷணங்கள் நிமித்தமாகச் சண்டாளனவன் சொல்லப்படாததுக்கத்தை அனுபவித்தாலுஞ் சண்டாளனுடைய ஆத்துமமானது தனது சிறைச்சாலையாகிற சரீரங் கெடவேணுமென்று தனது சிறைச்சாலை யாகிற சரீரத்தைத் தான் கெடுக்கவுந் தனக்குச் சிறைச்சாலையாகிற சரீரத்தில் நின்று பிறப் படவு மாசைப்படவுமில்லை. அப்படிப்பட்ட சரீரமாகிற சிறைச்சாலையினுடைய விமோசனத்தைச் சண்டாளனுடைய ஆத்துமமானது ஆசைப்படாம லிருக்கிறதுந் தவிரச் சண்டாளனுடைய ஆத்துமமானது தனது சரீரத்திலே எப்போது மிருக்கிறதுக்கு மிகவுஞ் சந்தோஷப்பட்டு இருக்கிற தொழியத் தனது சரீரத்தை விட்டுப் பிரிவாமென்கிற விசாரமாத்திரஞ் சொல்லப்படாத மனஸ்தாபத்தை யனுபவிக்கிறதுக்குக் காரணமாயிருக்கும். ஆனபடியினுலே அப்படிப்பட்ட பிரிதலுக்கு மிகவும் பயப்பட்டுத் தனது சரீரங் கெட்டுப் போகாதபடிக்குத் துஷ்டாத்துமமானது அரியப்பட்ட நல்ல ஔஷதங்களுடைய பிரயோகங் களைப் பண்ணித் தனது சரீரத்தைத் தான் விட்டுப் பிரியாததுக்குத் தனக்கு வேண்டின வுபா யங்களென்னப்பட்ட யாவையும் பண்ணிக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல.

இதெல்லா மிந்தடவிலே நடக்குமளகையிலே புத்திமானு யிருக்கிறவன் யோசிக்கத்தக்க மெய்யான விசேஷமேதென்று சண்டாளனுடைய ஆத்துமமானது யென்னப்படாத நிர்ப் பாக்கியங்களை யடைந்தாலும் சரீரத்தோடே கூடயிருக்க மிகவுமாசைப்பட்டு இப்படிப்பட்ட சரீரத்தை விட்டுப் பிரிவாமென்கிற நினைவுமாத்திர மென்னப்படாத மனஸ்தாபத்தை அநு பவிக்கத்தக்கதாகக் காரணமா யிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினுலே ஆத்துமமானது தனது சரீரமழியாததுக்குத் தனக்குக் கூடினமாத்திரம் பிரயாசைப்பட்டுத் தனது சரீரத்தைச் சம்பாதித்துக்கொண்டு வருமொழிய மற்றப்படியல்ல. இதெல்லா மிப் படியிருக்கையிலே சண்டாளனுடைய ஆத்துமமானது தனது நிர்ப்பாக்கிய சரீரத்திலே யிருக்கிற தென்கிறது கட்டாயமா யிராதென்று சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட ஸ்திதி யானது கட்டாயமா யிராதபோதே அது ஆக்கினையா யிருக்கிற தென்றுஞ் சொல்லவுங் கூடாது. கடைசியாய் நிர்ப்பாக்கிய சரீரத்தோடே கூடியிருக்கிற தென்கிறது சண்டா ளனுடைய ஆத்துமத்துக்குச் சிறைசாலையாகிற ஆக்கினையா யிராதபோதே அப்படிப்பட்ட நிர்ப்பாக்கிய சரீரத்தைச் சண்டாளனுடைய ஆத்துமங் கொண்டிருக்கிற தென்கிறது பாவ நிமித்தியமாக வந்ததென்று மதிகெட்டவனுனாலுஞ் சொல்லமாட்டான். அதேதென்று லெப்படிப்பட்ட மதிகெட்ட கள்ளனானாலுஞ் சிறைச்சாலையிலே யிருக்கச் சந்தோஷப்பட்டுச் சிறைச்சாலையில் நின்று பிறப்படமாட்டே னென்று சொல்லமாட்டான். சிறைச்சாலையி னுடைய விடுதல் நிமித்தமாக மிகவும் பயப்பட்டு யத்தை வெறுத்துத் தனக்கு வரவேண்டா மென்றெண்ணவு மாட்டானென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அவ்வண்ணமே நிர்ப்பாக்கிய முடைத்தான சரீரமானது ஆத்துமத்துக்குச் சிறைச்சாலையா யிருக்கிற தென்று பாவ நிமித்தமாக அந்தச்சிறைச்சாலையிலே ஆத்துமமானது சர்வேஸ்வரனாலே போடப்பட்ட தென்று மதிகெட்டவன் ஞாயத்தைப் பாராமற் சொல்லுவானொழியப் புத்திமானுயிருக்கிறவ னிதெல்லாத்தையும் நன்றாய்ப்பாராய்ந்து பத்துப்பத்தாய் விசாரித்தானுனால் ஞாயத்துக்குவிருத் தமா யிருக்கிற அப்படிப்பட்ட தப்பறை வர்த்தமானத்தை அங்கிகரிக்கமாட்டான்.

இந்தச்சத்தியத்தை வேறொரு ஞாயத்தினுலே கண்டுபிடிக்கலாம். அதேதென்றுற் சுரமானது ஆரோக்கியமா யிருக்கிற சுகம் வருகிறதுக்குக் காரணமா யிருக்கமாட்டாதென்று சொல்லுவார்களொழியச் சுரமானதாரோக்கியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிற தென்று சொல்லக்கூடாது. இது இப்படியிருக்கையிலே மனுஷனானவன் வியாதி முத லான வுபத்திரவங்களை அனுபவிக்கிறதினுலேயும் அவமான முதலான தூஷணங்களைச் சகிக்கிறதினுலேயுஞ் சில முறை மிகுந்த பொறுமையுள்ளவனுய்ச் சர்வேஸ்வரன்பேரிலே மிகுந்த பத்தியாயிருப்பான். அப்படிப்பட்ட பத்தியினுலே பாவமென்னப்பட்ட யாவையும் விட்டு நிர்மல புண்ணிய வழியிலே பழுதற நடப்பான். இதெல்லாத்துக்கும் வியாதிமுதலான நிர்ப்பாக்கியங்கள் சிலமுறை காரணமா யிருக்கக்கொள்ளக் கர்த்தரானவர் பாவ நிமித்திய மாக மாத்திரம் வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை மனுஷனுக்குக் கட்டளையிட்டாரென்று அங்கீகரிக்கிறதுக்கு ஸ்திரமுள்ள ஞாயங் காணமாட்டாது. அதேதென்று லிந்த முகாந் திரத்தினுலே யாதொரும் அந்த முகாந்திரத்தினுலே யொன்றிலும் வரலானகாரியமான தொரு முகாந்திரத்தினுலே மாத்திரம் வந்ததென்று அங்கீகரிக்கிறவன் புத்திமானு யிருக்கிற னென்று சொல்லக்கூடாது. அம்மருவாதியே தேவபத்தியையு மகாபலனுக்குக் காரணமா யிருக்கிற பொறுமையையு மற்றுமுண்டான தர்ம குணங்களையு மனுஷனானவன் வியாதி முத லான நிர்ப்பாக்கியங்கள் நிமித்தமாக அடையலா மென்கிறதினுலே அப்படிப்பட்ட தர்ம குணங்களை மனுஷனானவ னடையவேணு மென்று வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களைத் தயாபரனுன கர்த்தரானவர் மனுஷனுக்குக் கட்டளையிட்டா ரென்று சொல்லலா மென் றிருக்கையிலே பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் நிமித்தமாக மனுஷனானவன் ஆக்கினையை யநுபவிக்கிறதுக்கு மாத்திரங் கர்த்தரானவர் வியாதிமுதலான நிர்ப்பாக்கியங் களைக் கட்டளையிட்டா ரென்று அங்கீகரிக்கத்தகாது. இதன்றியே தேவதத்தனென்கிறவன் வியாதி முதலான உபாதைகளை யநுபவிக்கிறதால் மகாமகாப்பட்ட பாவங்களுக் குடன் படுவா னென்றும் அவைகள் நிமித்தமாக நரகத்திலே விழுவா னென்றுந் தனது ஞானதிருஷ்டி யினுலே பார்த்துக் கொண்டிருக்கிற கர்த்தரானவர் தேவதத்தனென்கிறவன் பாவங்களைப் பண்ணி நரகத்திலே விழாதபடிக்கு வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களைத் தேவதத்த னென் கிறவனுக்குத் தயாபரனுன கர்த்தரானவர் கட்டளையிடலா மென்றிருக்கையிலே தேவதத்த னென்கிறவன் பண்ணின பாவத்துக்காக ஆக்கினையை அனுபவிக்கிறதுக்கு மாத்திரங் கர்த்தரானவர் வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களைக் கட்டளையிட்டாரென்று ஸ்திரமாய்ச் சொல்லுகிறதுக் கிடங்காணுது.

இதுநிமித்தங் கள்ளர் முதலான பாவிகள் ஆக்கினையை அநுபவிக்கிறார்க ளென்று பார்த்துப் பூர்வ ஜென்மத்திலே யவர்கள் பண்ணின பாவங்களுக்கிந்த ஆக் கினை அநுபவிக்கிறார்களென்றுஞ் சொல்லுகிறதினுல் மதிகெட்டவர்களுடைய அறிவின் குறைச்சலானது மிகவுங் காண்பிக்கிற தொழிய மற்றப்படியல்ல. அதேதென்றுற் கள் ளனானவன் பலபல களவுகளை யிந்தச் ஜென்மத்திலே பண்ணினதினுலவனை ஆக்கினையிடுகிறது ஞாயமாகும். ஆனபடியினுலே கள்ளனானவன் தலை வெட்டுண்டு கழுவிலே போடப்பட்ட துக்குக் கள்ளனானவனின்று நேற்று பண்ணின களவுகள் போதாதோ? இன்று நேற்றுக் கள்ளனானவன் பண்ணின பாவங்களவனுக்கிந்த யநுபவிக்கிறதுக்குப் போதுமென்றிருக் கையிலே கள்ளனானவன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவத்துக் காக்கினைப்பட்டா னென்று புத்தியீனனு யிருக்கிறவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. இத்தன்மையாகக் காமாதுரனு யிருக்கிறவன் கெட்ட வெள்ளாட்டிகளோடே திரிந்து பாவம் பண்ணினதினுல் ஒட்டிய புண் முதலான வியாதிகளை யடைந்தானென்று சொல்லவேணு மொழியப் பூர்வ ஜென்மத்திலே பாவியானவன் பண்ணின பாவத்தினுலே யிப்போது பறங்கிப் புண் முதலான அரையாப்புந் ஸீக்கிரியாகக் கிடக்கிறு னென்று சொல்லுகிற தென்கிற அறிவின் குறைச்ச

லானது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால் அது புத்திமானா யிருக்கிறவன் சிரிக்கத்தக்கதாகக் காரணமா யிருந்தாப்போலே யாகும்.

ஆனால் துர்க்கந்த வெள்ளாட்டிகளோடே திரிகிற தென்கிறது பூர்வஜென்மத்திலே பண்ணின பாவத்துக்குக் கர்த்தரானவரிந்தச் சென்மத்திலே காயாதானா யிருக்கிறவனுக் காக்கினை யிடவேணுமென்று இப்போது துர்க்கந்த வெள்ளாட்டிகளோடே சங்கம் பண்ணக் கற்பித்தாரென்று சிலர் சொல்லுகிறாப்போலே அங்கீகரித்தோமானால் இந்தப் பிரத்தியுத்தரத்திலே தானே முழுத்தப்பறையைக் கண்டு பிடிக்கலாம். அதெப்படியென்றால் சகல நன்மைச் சுரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பதினோராம் பாடத்திலே காண்டு சொல்லப்பட்ட நியாயங்கள் முதலான வேறே அனேக நியாயமுள்ள நிமித்தங்களினாலே சில பாவங்களை விலக்காமலிருக்கிறாரென்று சொல்லவேண்டியிருந்தாலும் பாவியானவன் பண்ணின பாவத்துக்கு நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பாவியை நரக வேதனை முதலான தண்டனைகளையநுபவிக்கத் தக்கதாகக் கற்பிக்கிறாப்போலே பாவியானவன் பண்ணின பாவத்துக்காக அவனைப் பார்த்து இன்னம் வேறே யொரு பாவம் பண்ணென்று கர்த்தரானவர் கற்பித்தாரென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. அதெனென்றால் பாவத்தைக் கற்பிக்கிற தென்கிறது சகல நன்மைச் சொரூபமாயிருக்கிற கர்த்தருக்குண்டான சுபாவத்துக் கொத்திரா தென்கிறதுந் தவிரப் பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவமானாலிந்தச் சென்மத்திலே துலைகிறதுக்கு வேறே பாவத்தைப் பண்ணுகிற தென்கிறது நியாயமா யிருக்கமாட்டாது. ஆதலாலே நீதி சொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் பண்ணப்பட்ட பாவங்களுக்குப் பாவிகளைப் பார்த்து இன்னம் பாவங்களைப் பண்ணுங்களென்று கற்பிக்கிறாரென்பது தப்புக் கொள்ளு மென்னுத யித்திய விசாரமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

ஆனால் பாவியானவன் பூர்வ ஜென்மத்திலே பண்ணின பாவத்துக்காக விந்தச் சென்மத்திலே வியாதிமுதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்கிறதுக்கென்கள் சொன்னாப்போலே கர்த்தன் கற்பித்தாரென்று சொல்லுகிற தென்கிறது வேறொரு கெட்டி நியாயத்தினாலே தப்பறையா யிருக்கிற தென்றெப்படிச் சொல்லலாம். அதெதென்றால் பாவியானவன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவத்துக்காக விந்தச் சென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை அனுபவிக்கிறதினாற் பூர்வஜென்மத்திலே பாவியினாலே பண்ணப்பட்ட பாவங்கள் துலையுமென்று சொல்லுகிறார்களே. இது முழுத்தப்பறையா யிருக்கிற தென்று இந்த வடைவி லொட்டுவிக்கலாம். அதெதென்றால் பாவநிவாரண முண்டாகிறதுக்குப் பாவத்தினிமித்தியமாகப் பாவியானவன் பச்சாத்தாபமா யிருக்கவேணுமென்கிற [illegible]வமானது சர்வேஸ்வரனுடைய வேதத்தினாலே விதிக்கப்படுகிறதுந் தவிரப் பாவத்தினிமித்தியமாக அனுதாபமில்லாமற் பாவநிவாரணம் பண்ணமாட்டா தென்கிறது சர்வேஸ்வரனுடைய வேதத்துக்கு இதமாயிருக்கிற அனேகத் தர்மதங்களுக்கு முதலாய்ச் சம்மதமாயிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே சகல வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களையுடைத்தான சரீரத்தைச் சண்டாளனானவன் கொண்டிருக்கிறதினால் அவன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவங்கள் துலையமாட்டாதென்று கண்டுபிடிக்கலாம். அதெதென்றாற் பாவ நிமித்தமாகப் பச்சாத்தாபமில்லாமற் பாவ நிவாரண முண்டாகமாட்டாதென் றங்கீகரிக்கிறபோது பாவ நிவாரண முண்டாகிறதுக்கும் பாவ நிமித்தமாகப் பச்சாத்தாபம் வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறதுக் கொக்கும். பாவ நிமித்தியமாகப் பச்சாத்தாப முண்டாகிறதுக்குப் பாவியானவன் தான் பண்ணின பாவத்தை யறிந்து அது நிமித்தமாகப் பச்சாத்தாபமா யிருக்கலாமொழியத் தான் பண்ணின பாவத்தையறியாமற் பண்ணின பாவ நிமித்தியமாகப் பச்சாத்தாபமா யிருக்கலாமென்று சொல்லுவாரில்லை. ஆதலாலே சண்டாளனா யிருக்கிறவன் பூர்வஜென்மத்திலே தான் பண்ணின பாவத்தை யறியாதபோதே அப்படிப்பட்ட பாவ

த்தினிமித்தமாகப் பச்சாத்தாபமா யிருக்கமாட்டான். பாவ நிமித்தமாக அனுதாபமில்லாதபோது பாவந் துலையுமென்று சொல்லக்கூடாது.

இந்தச் சத்தியமானது வெளியாகும்படிக்கு இதை யடைவாக வெளிப்படுத்தக் கடவோம். பாவந்துலையுமென்று சொல்லுகிறது உண்டான பாவம்போயிற்றென்றும் அதை நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் பொறுத்தாரென்றுஞ் சொல்லுகிறதுக் கொக்கும். இப்படியிருக்கையிலே பாவம் வருவழி யெதென்றும் பண்ணின பாவம் போம்வழி யெதென்றும் ஆராய்ந்து கொள்ளக்கடவோம். அநியாய விஷயத்தின் பேரிலே மனதானது ஞான பூர்வமாகச் சந்தோஷப்பட்டிருக்கிற தென்கிறது பாவத்தை மனசான தங்கீகாரம் பண்ணினதினால் மனுஷனானவன் பாவத்திலே விழுந்தானென்றும் பாவியாய்ப் போனானென்றுஞ் சொல்லப்படும். அனபடியினாலே பாவத்தினிமித்தமாகப் பட்ட சந்தோஷத்திலின்று மனசானது திரும்பாத நாள்மட்டும் பாவத்திலே மனசானது விழுந்திருக்கிற தென்றும் மனுஷனானவன் பாவியா யிருக்கிறானென்றும் பாவமானது துலையவில்லையென்றுஞ் சொல்லக்கடவது. பாவமானது பண்ணப்படுகிறவகை யிதேயென்று சொல்லவேண்டி யிருக்கையிலே சந்தோஷத்தினாலே பாவத்திலே விழுந்த மனசானது பண்ணின பாவத்து நிமித்தியமாகத் துக்கப்பட்டால் அப்பாவத்தில் நின்று திரும்பிற்றென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே அநியாய விஷயத்திலே விழுதலானது பாவமென்று சொல்லப்பட்டு அநியாய விஷயத்தில் நின்று திரும்புதல் பாவந் துலைகிறதுக்கும் நீதியுள்ள கர்த்தரானவர் பாவத்தைப் பொறுக்கிறதுக்கும் வேண்டியிருக்கிற தென் றங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆதலாலே பாவத்தில் நின்று திரும்புதலில்லாமற் பாவந்துலைந்து போயிற்றென்றும் பாவத்தைச் சர்வேஸ்வரன் பொறுத்தாரென்றுஞ் சொல்லுகிற தென்கிறது பாவமுண்டா யிருக்கையிலே பாவமில்லையென்கிற அபத்தத்தைச் சொல்லுகிறதுக் கொக்கும். சர்வேஸ்வரனானவர் பாவத்தைப் போக்காமற் பாவத்தைப் பொறுத்தாரென்று மனுஷனானவன் பாவியா யிருக்கையிலே பாவமில்லாமல் தருமவானாக யிருக்கிறானென்றும் அங்கீகரித்தாப்போலே யாச்சுது. அனபடியினாலே பாவியானவன் தான் பண்ணின பாவத்தினிமித்தமாக அனுதாபப்பட்டுப் பாவத்தில் நின்று மனதைத் திருப்பாதிருந்தாற் பாவியானவன் பண்ணின பாவமொருக்காலுந் துலையாதென் றொப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகும்.

பாவந்துலைந்து போகிறதுக்குப் பாவத்தினிமித்தியமாகப் பச்சாத்தாபம் வேண்டியிருக்கையிலேயிப்படிப்பட்ட பச்சாத்தாபமானது பாவத்தினுடைய ஞானமில்லாமற் பிறக்கமாட்டாதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அதெனென்றால் பாவத்தை யறிந்து பாவத்திலே சந்தோஷப்படலாமொழிய அறியாத பாவத்திலே சந்தோஷப்படக் கூடாது. அத்தன்மைபோல அறிந்த பாவத்தினிமித்தியமாகத் துக்கப்படலாமொழிய அறியாத பாவத்தினிமித்தியமாகத் துக்கப்படக்கூடாது. அனபடியினாலே பாவியானவன் தான் பண்ணின பாவத்தை யறிந்து அது நிமித்தமாக மனஸ்தாபப்பட்டு இந்தவடைவாகப் பாவத்தில் நின்று மனதைத் திருப்புகிறதினாற் பாவ நிவாரணமாயிற்றென்று சொல்லத்தகு மொழிய வேறேபிரகாரமாய்ப் பாவந்துலைந்த தென்று புத்திமானா யிருக்கிறவ னொப்புக்கொள்ளமாட்டான். இது இப்படியிருக்கையிலே இந்தச் சென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை யனுபவிக்கிறவன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவத்தை யறியானென்றனுபவசித்தியினாலே கண்டு கொண்டு வருகிறோமே. பாவியானவன் பூர்வஜென்மத்திலே தான் பண்ணின பாவங்களை அறியாதபோதே அப்படிப்பட்ட பாவங்கள் நிமித்தியமாகப் பச்சாத்தாபமா யிருக்கமாட்டான். பாவியானவன் தான்பண்ணின பாவங்கள் நிமித்தமாகப் பச்சாத்தாபமா யிராதபோதே பாவத்தில் நின்று பாவியானவன் தனது மனதைத் திருப்பவில்லையென்று சொல்லக்கடவோம். அனபடியினாலே பாவந்துலைந்து போச்சுதென்று புத்திகெட்டவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல.

இதெல்லாம் ஒருவமையினாலே தெளியப் பண்ணலாம். அதெப்படியென்றால் தாசனாயிருக்கிறவன் தனது ராசாவுக்கு வேறொன்று துரோகம்பண்ணி ராசாவைக் கொல்லப் பார்த்தான். ஆனபடியினாலே சுவாமித் துரோகியென்கிற பேரானது தாசனானவனுக்கு மெய்யாகவே யுண்டாச்சுது. இப்படியிருக்கையிலே தாசனைச் சிறைசாலையிலே போட்டு வேணத்தக்க அடி முதலான ஆக்கினைகளைத் தாசனானவ னனுபவித்துக்கொண்டு வந்தாலும், இராசாவைக் கொல்லவேணுமென்கிற மனதைத் தாசனானவன் விடாதவனாயிற் சுவாமித் துரோகமறியாமற் பண்ணினேனென்றுஞ் சொல்லி அப்படிப்பட்ட துரோகத்தில் நின்று தனது மனதைத் திருப்பாதிருக்கையிலே வேணத்தக்க ஆக்கினையை அனுபவிக்கிறதினாலே தாசனானவன் சுவாமித் துரோகியென்கிற பேரைப்போக்கடித்து ராசாவுக்கு நல்லவனாய்ப் போனானென்று சொல்லக்கூடாதென்கிறதுக்குச் சந்தேகப்படுவாரில்லையே. அத்தன்மைபோலப் பாவியானவன் தான் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவத்தையறியாதே பாவத்தினிமித்தமாக ஆன அனுதாபமாயிராமல் வேணத்தக்க வியாதிமுதலான ஆக்கினைகளை அனுபவித்தாலும் பாவத்தில்நின்று தனதுமனதைத் திருப்பாதபோதே அவனுடைய பாவந்தொலைந்து பாவியானவன் சகல நன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தனுக்கு நல்லவனாய்ப் போனானென்று சொல்லக்கணக்கில்லை. இதுக்குக் காரணமேதெனிற் பாவத்தின்பேரிலே சந்தோஷப்பட்டதினாற் பாவத்திலே விழுந்த மனசானது பாவத்தினிமித்தமாக ஆனபச்சாத்தாபமாயிராமற் பாவத்திலே நின்று எத்தனை நாள் மனசானது திரும்பாதிருந்ததோ அத்தனை நாள் பாவத்திலே விழுந்திருக்கிற மனசென்று சொல்லத்தகும். அதெப்படியென்றாற் சகல பாவங்களை வெறுத்துச் சகல தருமத்திலே தாற்பரியமுள்ள மனசானது ஒரு பாவத்துக்கானாலும் உடன்படாமல் தருமத்தில் நின்று எத்தனைநாள் திரும்பாதிருந்ததோ அத்தனை நாள் தருமத்திலே நிலை நிற்கிறதுமாய்த் தருமமுள்ள மனசுமாயிருக்கிறதென்று சொல்லத்தகும். இத்தன்மையிலே பாவத்திலே விழுந்த மனசானது பாவத்தில் நின்று திரும்பாத நாள் மட்டும் அது பாவத்திலே நிலைநிற்கிறதுமாய்ப் பாவமுள்ள மனசுமாயிருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

இந்தப் பாடத்திலே சொல்லப்பட்ட நியாயங்களை விசாரிக்குமிடத்திற் பாவியானவன் பூர்வஜென்மத்திலே பாவம்பண்ணின நிமித்தியமாக ஆன பச்சாத்தாபமாயிராததினாலே அவனுடைய பாவமானது தொலையாதென்று மெய்ப்பிவித்தாப்போலே யாச்சுது. பாவியானவன் நாய் முதலான மிருகங்களாய் மரமாய்க் கல்லாய்ப் பிறந்தானென்கிற தப்பறை விசேஷத்தை அங்கீகரித்தாலும் அப்படிப்பட்ட ஜென்மங்களிலே பிறந்தபோதி பூர்வஜென்மத்திலே தான் பண்ணின பாவங்களை யறியாமல் அதுகள் நிமித்தமாக ஆனபச்சாத்தாபமாயிராததினாற் பூர்வஜென்மத்திலே பாவியினாலே பண்ணப்பட்ட பாவங்கள் நாய் மாடு மரச்சென்ம முதலான நீச ஜென்மங்களினாலே தொலைந்துபோச்சென்று அங்கீகாரம் பண்ணுகிறவன் தான் தன்னை மதிகெட்ட மடனென்று ரூப்புவித்தானென்று சொல்லத்தகுமொழியப் பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் தொலைந்ததென் றொப்புவிக்கவில்லை.

கடைசியாய்ச் சிறுபிள்ளை ராசாவானவன் குடியானவனை ஆக்கினையிட்டால் அப்படிப்பட்ட ஆக்கினை நிமித்தியமாகக் குடியானவனுக்குப் பிரயோசனம் வரும்படிக் கின்னின்ன பாவம் பண்ணினதினாலே இந்த ஆக்கினை யிடுகிறேனென் றறக்குறைய ராசாவானவ னறிவிக்கிறதென்கிறது நல்ல கிரமமாகும். அத்தன்மைபோல் மனுஷனானவன் இந்தச் ஜென்மத்திலே பண்ணின பாவ நிமித்தமாகக் கர்த்தரானவர் ஆக்கினையிட்டால் ஆக்கினைப் படுகிற மனுஷனானவன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவங்களை அறுக்கவியலேனும் அப்படியே மனுஷனானவன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவங்களை யறிந்திருந்தால் அப்பேர்ப்பட்ட பாவங்களைப் பண்ணினேனென்று சொல்லிப் பாவங்களில் நின்று பாவியானவன்

தனது மனதைத் திருப்புவான். ஆதலாலே பாவியானவன் கல்லானாய்ப்போய் ஆக்கினையினுடைய அனுபவமானது பாவிக்குச் சபலமாச்சுதென்று சொல்லப்படும். அவ்வண்ணமே யிந்தச் ஜென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை யடைந்தான சரீரமானதைப் பூர்வஜென்மத்திலே ஆத்துமமானது பண்ணின பாவத்தினிமித்தியமாக யடைந்ததென் றொப்புக்கொள்ள வொண்ணாத தப்பறையென்றும் இந்தச் ஜென்மத்திலே வியாதி முதலான நிர்ப்பாக்கியங்களை யனுபவிக்கிறதினாற் பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் தொலையவில்லையென்றும் ஒப்புவித்தாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே இதுக்கெல்லாத்துக்கும் வேறே காரணத்தைச் சொல்லிக்காட்ட வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே பாவத்தினிமித்தமாகத் தெளிவற்ற மனுஷர்களினாலே கற்பிக்கப்படுகிற பூர்வஜென்மமானது வெறுமனே கற்பிக்கப்பட்டதாயிருக்கிறதென்றும் நியாயத்துக் கேற்காத தப்பறையென்றுஞ் சொல்லக்கடவோம்.

இதன்றியே யிவர்கள் கற்பிக்கிற மறுசென்மத்தினுடைய பேரையை அங்கீகரித்தோமானாற் பூலோகத்திலே திரிகிற பாவியும் புண்ணியவானும் பண்ணிக்கொண்டு வருகிற பாவ புண்ணியத்துக்குத் தக்க ஆக்கினையுஞ் சம்பாவனையு மனுபவிக்கிற துக்கான ஸ்தலமானது பரலோகத்திலே யுண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறதரிது. இந்த நியாயத்தின் பெலனானது விளங்கும்படிக் கித்தன்மையாகச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றாற் பூர்வசென்மத்திலே ஏதனென்கிறவன் பண்ணின பாவத்தினிமித்தமாக இந்தச் ஜென்மத்திலே நிர்ப்பாக்கியத்தை யனுபவிக்கத் தக்கதானாற் பூர்வ ஜென்மத்திலே ஏதன் பண்ணின பாவத்தினிமித்தமாக நரகமுண்டென்று சொல்லக்கூடுமோ கூடாது. இத்தன்மையாகத் தேவதத்தனென்கிறவன் பூர்வஜென்மத்திலே பண்ணின புண்ணியத்தினிமித்தமாக இந்தச் சென்மத்திலே பலனாக ஐசுவரிய முதலான போக பாக்கியங்களை யனுபவிக்கப் போகிறானென் றங்கீகரித்தோமானாற் தேவதத்தன் பூர்வஜென்மத்திலே பண்ணின புண்ணியத்தினிமித்தமாக ஆனபலனை யனுபவிக்கிறதுக்குப் பரலோகத்திலே ஸ்தலங்கிடைக்குமென் றங்கீகரிக்கிறதெப்படி.

நம்மாற் சொல்லப்பட்ட இந்த நியாயத்துக்குத் தெளிவற்ற பாவிகளினாலே சொல்லப்படத்தக்க மறுவுத்தரங்களெல்லாம் பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால் அதுகளுக்குள்ளே தனித்தனியே ஒவ்வொரு பிரத்தி யுத்தரமானது முழுதுந் தப்பறையாயிருக்கிறதென்றெளிதாய்க் கண்டுபிடிக்கலாயிருக்கிறது. இதெல்லாம் விளங்கும்படிக்குச் சொல்லப்படத்தக்க பிரத்தி யுத்தரங்களெல்லாந் தனித்தனியே ஆராய்ந்து கொள்ளக்கடவோம். அதேதென்றாற் சில பாவங்களுக்கு மாத்திரம் நரகத்திலே பாவியானவன் வேதனையை யனுபவித்து வேறே சில பாவங்களினிமித்தமாகப் பூலோகத்திலே பாவியானவன் நிற்பாக்கியனாய்த் திரிகிறானென்கிற பிரத்தியுத்தரமானது கற்பிக்கப்பட்டதாயிருக்கிற முழுத் தப்பறையென்று புத்திமானாயிருக்கிறவன் எளிதாய்க் கண்டுபிடிப்பானென்கிறதுக்குத் தப்பாது. இத்தன்மையாகப் புண்ணிய விஷயத்திலே சொல்லப்படத் தக்க சரியான பிரத்தியுத்தரமானது தப்பறையாயிருக்கிறதென்று யோசிக்கக்கடவோம். அதேதென்றாற் பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவத்தினாலாவது புண்ணியத்தினாலெண்கிலும் பாதிக்கு யிந்தச் ஜென்மத்திலே பலனாகிற நிர்ப்பாக்கியத்தையும் பாக்கியத்தையு மனுபவிக்கக் கூடுமானால் மற்றப்பாதிக்கு அனுபவிக்கக் கூடாதென் றொப்புக் கொள்ளுகிறதுக் கிடங்கானமாட்டாது. இத்தன்மையாகச் சிலபேர்கள் நரகத்திலே விழுந்து பண்ணின பாவங்களுக்காக வருந்துகிறார்களென்றுஞ் சிலபேர்கள் வேறே ஜென்மத்திலே யுத்தரிக்கிறார்களென்றுங் கற்பிக்கப்பட்ட பிரத்தி யுத்தரமானது முன் சொல்லப்பட்ட நியாயத்தினாலே தப்பறையாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கலாயிருக்கிறது.

இதன்றியே வரதனானவன் பூர்வ ஜென்மத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்காகப் பரலோகத்திலே ஆன ஆக்கினையுஞ் சம்பாவனையு மனுபவித்தானென் றங்கீகரித்தோமானாற் பூர்வ ஜென்மத்திலே யவனவன் பண்ணின பாவ புண்ணியங்களெல்லாந் துலைந்ததென்று சொல்லவேணும். ஆதலாலே யிந்த லோகத்திலே சென்மத்தை யெடுத்தாலதிலே பாக்கிய நிற்பாக்கியத்தையுஞ் சுக துக்கத்தையும் அவன் அனுபவியாம லிருக்கக்கடவான். அல்லது பாக்கிய நிற்பாக்கியத்தையுஞ் சுக துக்கத்தையும் இவ்விரண்டி லொன்றை அவசியமாய் வரத னனுபவிக்க வேணுமென் றங்கீகரித்தோமானாற் சுக துக்க அனுபவமானது பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட தருமத்தி னிமித்தியமாய் வந்ததல்லவென் றங்கீகரித்தாப்போலே யாச்சுது. அவ்வண்ணமே பூர்வசென்மத்திலே பண்ணப்பட்ட தர்மங்களானவைக ளில்லாமல் அவனவனிந்தச் சென்மத்திலே பாக்கியத்தை யானாலும் நிற்பாக்கியத்தை யென்கிலு மனுபவிக்கலாமென்று யங்கீகரிக்கும்போது பூர்வசென்மமானது கற்பிக்கப் படுகிறதுக்கு விளக்கச் சொல்லப்படுகிற யுக்தியை பின்னப்பட்டயாவுங் கனமான காற்றினாலே பறந்துபோகிற பஞ்சுபோலே பறந்து போச்சுதென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே அவனவனிந்த லோகத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்கான ஆக்கினையுஞ் சம்பாவனையு மனுபவிக்கிறதுக்குப் பரலோகத்திலே யானஸ்தலங்களுண்டாயிருக்கிறதென்கிற குன்றாத சத்தியமான முதலவருக்குஞ் சம்மதமாயிருக்கையிலே பூர்வசென்மத்தி னங்கீகாரத்தினாலே அவைகளங்கீகரிக்கப்படா தென்கிறதுக்காகப் பூர்வசென்மத்தின் பக்ஷமானது கற்பிக்கப்பட்ட முழுத்தப்பறையா யிருக்கிறதென்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவதாகும்.

இந்தப்பாடத்திலே வியாதி முதலான நிற்பாக்கியங்களுடைய அனுபவத்துக்குப் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட பாவங்கள் காரணமா யிருக்க மாட்டாதென் றொப்புவித்தாப்போலே ராசாங்க முதலான பாக்கியங்களை யவனவனிந்தச் சென்மத்திலே யனுபவிக்கிறதுக்குப் பூர்வசென்மத்திலே அவனவனாலே பண்ணப்பட்ட புண்ணியங்களானவைகள் காரணமா யிருக்கமாட்டா தென்று வருகிறபாடத்திலே சந்தேகங்க ளறும்படியான பற்பல நியாயங்களைச்சொல்லிக் கர்த்தருடைய அநுக்கிரகத்தைக்கொண்டு மெய்ப்பிவிக்கக் கடவோம்.

௰௬-ம். பாடம்.

இராசாங்க முதலான பாக்கியங்களை அவனவன் அநுபவிக்கிறதுக்குக் காரணமேதென்று இருபத்திரண்டாம் பாடத்திலே சொல்லுவோமே அவ்விடத்திலே யவனவன் பாக்கியத்தை யனுபவிக்கிற துக்குப் பூர்வ சென்மத்திலே பண்ணப்பட்ட செபபூசை முதலான தர்மங்கள் காரணமா யிருக்கமாட்டா தென் றொப்புவிக்கிற போது பூர்வ ஜென்மமானது வீணிலே கற்பிக்கப் பட்ட தப்பறையா யிருக்கிறதென் றொப்பு விக்கப் படுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இந்தப்பாடத்திலே யிந்தச் சத்தியத்தைத் தானே யொப்பச்சொல்லி வேறே நியாயங்களினாலே பூர்வஜென்மமானது கற்பிக்கப்பட்ட தப்பறையா யிருக்கிறதென்று வெளிப்படுத்தக் கடவோம்.

அதெப்படி யென்றாலிந்த ஜென்மத்திலே யவனவன் இராசாங்கமுதலான பாக்கியங்களை யனுபவிக்கிறதுக்குப் பூர்வ ஜென்மத்திலே யவனவனாலே பண்ணப்பட்ட ஜெபபூசை முதலான தர்மங்கள் காரணமா யிருக்கிறதென்று சொன்னோமானா லிந்தவிஷயத்திலே பாராய்ந்து கொள்ளத்தக்க விசேஷமாவது. பூர்வ ஜென்மத்திலே யவனவன் பண்ணின செப பூசை முதலான தர்மங்கள் விசாரிக்கப்பட்டா லொன்றிலே லலாடலிபியினாலே யிவர்கள் சொல்லுகிறப்போலே யதுகள் கட்டாயமாய்ப் பண்ணப்பட்டதென்று சொல்லவேணும். இல்லாவிட்டால் தனது சுவாதந்திரியமுள்ள மனசினாலே ஜெபபூசை முதலான தர்மங்களைப் பண்ணினானென்று சொல்ல வேணும். அப்படி சொல்லும் போது லலாட லிபியினாலே கட்டாயப் பட்டு அவனவன் பண்ணின ஜெபபூசை முதலான தர்மங்களுக்குப் புண்ணியத்தி னுடைய நாமமானது செல்லுமென்று சொல்லக்கூடாது. இந்தச் சத்தியத்தைப் போனபாடத்தி லொப்புவித்தாப்போலாச்சுது. அது யின்னுமொரு திஷ்டாந்தத்தினாலே மெய்யா யிருக்கிறதென் றொப்பச் சொல்லிக் காட்டலாம்.

அதெப்படி யென்றால் என்மனசு பொருந்தாமலெனக்கு ராசாவானவன் கட்டாயம் பண்ணி அவனவனுக்கு யென்னுடைமையை யென்னைக் கொண்டு கொடுப்பித்தால் அப்படிப்பட்ட தானத்துக்குப் புண்ணிய மென்கிற நாமஞ் செல்லமாட்டா தென்று சந்தேகப் படுவாரில்லை. பின்னையும் என்னை ராசாவானவன் பட்டினியே வைத்தால் அப்படிப்பட்ட வுபவாசமானது நான் பண்ணின தர்மமென்று சொல்லுவாருண்டோ இல்லையே. பின்னையு மொன்றான கர்த்தனை நமஸ்கரிக்கத் தக்கதாகப் பாவியானவனுக்குச் சற்றாகிலும் மனசுண்டாயிராமல் அப்பாவியானவன் கட்டாயமாய்ச் சருவேசுரனை நமஸ்கரித்தா லப்படிப்பட்ட நமஸ்க்காரமானது புண்ணியமா யிருக்கிறதென்று மதிகெட்டவனானாலுஞ் சொல்லமாட்டான். ஆனபடியினாலே அவனவன் லலாடலிபி யினாலே கட்டாயப்பட்டுச் செபபூசை தான முதலானவைகளைப் பண்ணினா லப்படிப்பட்ட தர்மங்களுக்குப் புண்ணியத்தினுடைய நாமமானது செல்லமாட்டாதென றங்கீகரிக்கத் தக்கதாகும். அப்படிப்பட்ட தர்மங்களானவைகள் புண்ணியங்களாகாதபோது புண்ணியத்துக்குக் கொடுக்கத்தக்க பலனானது நீதியுடைய கர்த்தனாலே யவைகளுக்குக் கொடுக்கப்படுதென்று சொல்லுகிறது நியாயமுள்ள கிரமத்துக் கேற்பிராது. ஆதலாலே ராசாங்க முதலான பாக்கியமானது பூர்வஜென்மத்தை யங்கீகரிக்கிற பேர்கள் சொல்லுகிறப்போலே பண்ணப்பட்ட தர்மங்களுக்குக் கொடுக்

கதத்தக்க பலனாயிருக்கையிலே பூர்வஜென்மத்திலே யவனவனாலே கட்டாயமாய்ப்
பண்ணப்பட்ட தர்மங்களுக்கு ராசாங்க முதலானவைகள் பலனாகக் கொடுக்கப்
பட்டதென்று அவர்கள் சொல்லும்போது தர்மமாகாத தர்மங்களுக்குப் பலனாக
ராசாங்கமுதலான பாக்கியங்கள் கொடுக்கப்பட்டதென்று அவர்களங்கீகரிக்கவே
ணு மொழிய மற்றப்படியல்ல. அப்படி யங்கீகரிக்கும் போது தங்களுடைய
பக்ஷத்துக்குத் தாங்கள் தானே விபரீதமாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார்களெ
ன்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் மெய்யான புண்ணியங்களுக்குக் கொ
டுக்கத்தக்க பலனானது கட்டாயத்தினாலே பண்ணப்பட்ட தர்மங்களுக்குக் கொ
டுக்கப்பட்டபோதே புண்ணியமாயிராத தர்மங்களுக்குப் பலனானது கொடுக்கப்
பட்டதென்று அவர்கள் சொன்னாப்போலே யாச்சுது.

ஆனலிப்போது ராசாங்க முதலான பாக்கியங்களை யனுபவிக்கிற பேர்
கள் பூர்வஜென்மத்திலே கட்டாய மில்லாமல் தனது சுவாதந்திரிய முள்ள மன
சினாலே மெய்யான புண்ணிய தர்மங்களைப் பண்ணினார்களென்கிறதினா லப்படிப்
பட்ட மெய்யான புண்ணியங்களுக்குப் பலனாக ராசாங்க முதலான பாக்கியத்
தை இந்த ஜென்மத்திலே சிலரனுபவிக்கிறார்களென்று சொல்லுகிற பேர்கள் அ
ப்படியே யங்கீகரித்துத் தனது பக்ஷத்தை நிலையாக நிறுத்த வருந்தச்செய்த
வேறேயொரு மகா அபத்த விசேஷத்தை யவர்களங்கீகரிக்க வேணுமென்கிற
துக்குத் தப்பாது. அதேதென்றால் அவனவன் பூர்வஜென்மத்திலே தனது சுவாதந்
திரியத்தினாலே பண்ணினபுண்ணியங்களை விசாரிக்குமிடத்தி லப்படிப்பட்ட புண்
ணிய தர்மங்களை யவனவன் பண்ணாம லிருக்கலாமென் றங்கீகரிக்கவேணும். அ
வர்களிப்படிப்பட்ட தர்மங்களைப் பண்ணாம லிருக்கலாமென் றங்கீகரிக்கிறபோது
ராசாங்க முதலான பாக்கியங்களை யனுபவிக்கிற பேர்கள் லோகத்திலே யில்லாம
லிருக்கலா மென்று சொல்லுகிறதுக் கொக்கும்.

அதேதென்றால் புண்ணியமாகிற காரணம் வாராமலிருக்கலா மென்று
சொல்லுகிறவன் அந்தக் காரணத்தினாலே பிறக்கத்தக்க பாக்கிய அனுபவமாகிற
காரியமானது பிறவாம லிருக்கலாமென் றங்கீகரிக்கக் கடவானென்கிறதுக்குத்
தப்பாது. இதனைப்போல பூர்வஜென்மத்திலே பாவம்பண்ணினபேர்க ளிந்தச்
ஜென்மத்திலே நீசராயிருக்கிறார்களென்கிறதிலே யோசிக்கக் கடவது. அதே
தென்றால் கட்டாயமாய்ப் பண்ணப்பட்ட பாவமாகாத கர்மங்களுக் காக்கினை
யிடப்பட்டதென்று ஒன்றிலே சொல்லவேணும். அல்லது பூர்வஜென்மத்திலே
பாவியானவன் தனது சுவாதந்திரிய முள்ள மனசினாலே பாவம் பண்ணினானெ
ன்று சொன்னோமானால் பாவியானவன் அப்படிப்பட்ட பாவங்களைப் பண்ணாம
லிருக்கலா மென்றங்கீகரிக்கக் கடவோம். பாவம்வாராம லிருக்கலா மென்று
அங்கீகரிக்கிறபோது ஊழியம் பண்ணுகிறவர்களும் நீசரும் லோகத்திலே யில்
லாம லிருக்கலா யிருந்ததென்று சம்மதிக்கப் படவேணும். ஆனால் சரீரமானது
நன்றா யிருக்கிறதுக்குக் காலுந்தலையும் அவசியமாய் வேண்டியிருக்கிறதினால் அதி
ல்லாமற் சரீரமானது யிருக்கமாட்டா தென்றிருக்கையிலே சரீரமானது காலுந்
தலையுமில்லாம லிருக்கலாயிருந்த தென்கிற வாக்கியமானது அபத்தமாயிருக்கிற
தென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அத்தன்மைபோலச் சரீரமாகிற
லோகமானது நன்றாய் நடக்கிறதுக்குக் காலுக்குந் தலைக்குஞ் சமானமாயிருக்கிற
நீசரும் பெரியவர்களும் லோகத்திலே யுண்டாயிருக்கவேணு மென்கிறதுக்குத்
தப்பாது. இப்படிப்பட்ட பலபல அந்தஸ்திலே யிருக்கிறபேர்கள் லோகம் நன்றா

யிருக்கிறதுக்கு வேண்டியிருக்கையிலே அப்படிப்பட்ட அந்தஸ்திலே யிருக்கிற
பேர்கள் லோகத்திலே யில்லாமலிருக்க அவகாசமுண்டாயிருந்ததென்று சொல்
லுகிறதென்கிறது சரீரமானது கால் தலையில்லாம லிருக்கலா யிருந்ததென்று
சொல்லுகிறதுக் கொக்கும். ஆனபடியினாலே லோகமானது நன்றாய் நடக்கிறது
க்கு அவசியமா வேண்டியிருக்கிற ஞாயமுள்ள கிரமமானது அவனவன் தனது
சுவாதந்திரியத்தினாலே வந்ததென்றும் வாராதிருக்கலா யிருக்கிறதென்றுஞ் சொல்
லுகிற தென்கிறது அபத்தத்திலே கூட்டொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட
அபத்தவிசேஷமானது பூர்வஜென்மத்தினுடைய அங்கிகாரத்தினாலே அங்கிகரிக்கத்
தக்கதா யிருக்கிறதினால் பூர்வஜென்ம அங்கிகாரமானது தானே யபத்தமாயிருக்
கிறதென்றொப்புக்கொள்ளத் தக்கதென்று சொல்லத்தகும்.

அதேதென்றால் பிரகாசத்தினுடைய தெரிசனத்து நிமித்தமாக அந்தகார
மானது தோன்றமாட்டா தென்கிறாப்போலே பிரகாசத்துக்குச் சரியாயிருக்கிற
சத்திய விசேஷத்தினுடைய அங்கிகாரத்து நிமித்தியமாக வேறே சத்திய விசே
ஷத்தினுடைய ஞானம் பிறக்குமொழிய அபத்தவிசேஷத்தி னுடைய அங்கிகார
மானது சத்தியத்தின் தெரிசனத்தி னிமித்தமாக வுண்டாக மாட்டாதென்கிறதுக்
குத் தப்பாது. அவ்வண்ணமே நீசரும் பெரியவர்களும் லோகத்திலே யில்லாதே
யிருக்கலாயிருந்ததென்கிற அபத்த விசேஷத்தி னங்கிகாரமானது பூர்வஜென்ம
த்தி னங்கிகாரத்தில் நின்று ஜெனிக்கிற தென்கிறதினாலே பூர்வ ஜென்மத்தினு
டைய அங்கிகாரமானது அபத்தத் தப்பறையா யிருக்கிற தென்று சொல்லத்தகு
மொழிய அதைக் சுபத்த விஷயமென்றும் உண்டான விருத்தாந்த மென்றுஞ்
சொல்லவுங் கருதவுங் கூடாது.

இவர்களாலே அங்கிகரிக்கப்படுகிற பூர்வஜென்மத்தினுடைய பட்சமான
து இன்னம் வேறே யொரு ஞாயத்தினாலே மறுக்கப்படுமென்று சொல்லிக்
காட்டலாம். அதேதென்றா லிந்தச் ஜென்மத்திலே சுகபோகங்க ளுடைய அ
னுபவத்துக்குப் பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட புண்ணியங்கள் காரண
மா யிருக்கிற தென்று சொல்லுகிறார்கள். ஆதலாலே யனேகம் ஸ்திரீகளோடே
கூடப் புருஷனானவனிருந்து அவர்களோடே போக முதலான சுகங்களை யனு
பவிக்கிற தென்கிறது பூர்வஜென்மத்திலே புருஷனானவன் பண்ணின புண்ணி
யங்களுக்குப் பலனென்று அங்கிகரித்தாப் போலே யாச்சுது. அப்படி சொன்
னோமானா லிப்போ இந்தச் ஜென்மத்திலே பதிவிரதையா யிருக்கிறவள் பல பல
புண்ணியம் பண்ணிக்கொண்டு வந்தால் வருகிற ஜென்மத்திலே அவளனேகம்
புருஷரோடே கூடியிருந்து அவர்களோடே சங்கம்பண்ணுகிற தென்கிறது இப்
போது அவள் பண்ணுகிற புண்ணியத்துக்குப் பலனாக வருகிற ஜென்மத்திலே
கிடைக்குமென்று சொல்லக் கடவோம். அவ்வண்ணமே யிக்காலத்திலே கண்ட
கண்டபேருடனே கூடித்திரிகிற வெட்கங்கெட்ட வெள்ளாட்டிகள் பூர்வஜென்மத்
திலே மகா மகாப்பட்ட புண்ணியம் பண்ணினார்க ளென் றங்கிகரிக்க வே
ணும். அதேதென்றா லனேக ஸ்திரீகள் நிமித்தமாக வருகிற போகத்தின் சுக
மானது புருஷன் பண்ணின புண்ணியத்துக்குப் பலனாயிருக்கிற தென் றங்கி
கரிக்கிறபோது அனேகம்பேர்கள் நிமித்தமாக ஸ்திரீயானவளுக்கு வருகிறபோகத்
தின் சுகமானது பூர்வஜென்மத்திலே அவள் பண்ணின புண்ணியங்களுக்கு வந்த
பல னென்று சொல்லவேணு மொழிய மற்றப் படியல்ல. ஆதலாலே அனே
கம் ஸ்திரீகளோடே கூடிப் போகத்தின் சுகத்தை யனுபவிக்கிற லெச்சையில்
லாத காமாதுரன் பூர்வஜென்மத்திலே புண்ணியவானா யிருந்தானென்று சொ

ல்லுகிறாப் போலே யிக்காலத்திலே யனேக புருஷரோடே திரிகிற அர்க்கந்த வெள்ளாட்டி யானவள் பூர்வ ஜென்மத்திலே புண்ணியவதியா யிருந்தாளென்று சொல்லக் கடவோம். அதேதென்றால் விரண்டிடத்திலே பலனிறே போகத்தின் சுகமானது சரியாகக் காணப்படுகிறதினால் விரண்டிடத்திலேயும் இப்படிப்பட்ட பலனைப்பெறுகிற புண்ணியமானது சரியாக யிருந்ததென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல.

இதிலே பூர்வஜென்மத்தினுடைய பக்ஷத்தை யங்கீகரிக்கிறபோர்கள் மிகவு மதிகெட்ட பேர்களா யிருக்கிறார்க ளென்று காண்பித்திருக்கிறது. அதேதென்றா லிந்தச் சென்மத்திலே தன்தார பாதார புத்திரனாயிருக்கிறவனுங் குறையற்ற விரத்தனா யிருக்கிறவனுந் தேவபூசை ஜெபமுதலான தபோதர்மத்திலே மிகவும் பிரயாசப்படுகிறவனு மிப்படிப்பட்டவர்களிந்த ஜென்மத்திலே பண்ணின புண்ணியங்களுக்கு நாய்க்கும் பன்றிக்குங் கிடைத்திருக்கிற புணர்ச்சி போகமான தினிமேல் வருகிற சென்மத்திலே பலனாயிருக்கு மென்றங்கீகரிக்கவேணும். அவ்வண்ணமே மகாமகாப்பட்ட புண்ணியங்களுக் கிதே வரத்தக்க பலனென்று சொல்லுகிறவனை நாய் நரி பன்றி முதலான மிருகங்களைக் காட்டிலு மதிகெட்டவனென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல.

இதுதவிர வேறொரு ஞாயத்தினாலே ராசாங்க முதலான ஐஸ்வரியங்களும் பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாகவந்ததென்று சொல்லக் கணக்கில்லை. அதேதென்றா லிவர்க ளனுசரிக்கிற பக்ஷத்தைப் பார்க்குமிடத்தில் ராசாக்களுக் கவசியமாய் நரகங்கிடைக்கு மென்று சொல்லுகிறார்களே. அவ்வண்ணமே யிவர்க ளனுசரிக்கிற பக்ஷத்திலே ராசாங்கமானது நரகத்துக்குப் போகிறவழியா யிருக்கிறதென் றங்கீகரிக்கிறபோது பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட புண்ணியங்களுக்கு ராசாங்கமானது பலனா யிருக்கிற தென்று மதிகெட்டவன் சொன்னால் சொல்லுவானொழியப் புத்திமானா யிருக்கிறவன் சொல்லமாட்டான். இத்தனையிலே யிராசாங்கமானது யெண்ணப்படாத பாவங்களுக் கேதுவா யிருக்கச்செய்தே ராசாங்கத்தை யனுபவிக்கிற ராசாவானவன் அனேகம் பாவங்களைப் பண்ணுகிறதுக்கான ஸ்திதியை யுடைத்தானவனா யிருக்கக்கொள்ள ராசாங்கமான ஸ்திதியானது பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாக வந்ததென்று சொல்லுகிறது அறிவின் குறைச்சலா யிருக்கிறவ னொப்புக்கொள்ளுவா னொழிய மற்றப்படியல்ல. இதன்றியே புண்ணியத்தின் பலனை வேண்டா மென்கிறவன் மதிகெட்டவனா யிக்கிறா னென்று சொல்லவேணும். ஆதலாலே ஸ்திரீபோகமுதலான ஐஸ்வரியங்கள் பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாயிருக்கிறதென்று அங்கிகரித்தோமானால் புண்ணியத்தினுடைய பலனாகிற ஸ்திரீபோக முதலான ஐஸ்வரியங்களைச் சர்வபரித்தியாகத்தினாலே வேண்டாமென்று சொல்லியிருக்கிற யதீசுரரா யிருக்கிற பேர்கள் மதிகெட்டவர்களா யிருக்கிறார்களென்று சொல்லக் கடவோம்.

இதுதவிர அயிஸ்வரியமானது புண்ணியத்துக்குப் பலனாயிருந்தா லிவர்கள் சொல்லுகிறாப்போலே தாரித்திரமானது பாவத்துக்கு வரத்தக்க ஆக்கினையென்று சொல்லவேணும். அவ்வண்ணமே நாம் சொன்ன ஞாயத்தைத் திருப்பி அங்கீகரிக்கத்தக்க மேனா யேதென்றால் மோக்ஷத்தை யடையத் தக்கதாக ஆசையுள்ள யதீசுரனானவன் பூர்வஜென்மத்திலேதான் பண்ணின புண்ணியத்துக்குப் பலனாகிற அயிஸ்வரியத்தை விட்டுத் தன்னால் பண்ணப்பட்ட பாவத்

துக்கு வரத்தக்க ஆக்கினையாகிற தாரித்திரத்தைத் தெரிந்து கொண்டானென் றங்கீகரிக்கத் தக்கதாகும். இதெல்லா முழுமதி கெட்டவ னங்கீகரிப்பா னொழியப் புத்திமானா யிருக்கிறவ னொப்புக்கொள்ள மாட்டான். அவனவனுக் கிப்போகிறதாகிற ஜென்மந் தவிரப் பூர்வஜென்மங்க ளிருந்ததென்றும் இன்னும் வேறே சென்மங்கள் வரத்தக்க தென்றுஞ் சொல்லுகிற தென்கிறது முழுதப்பறையா யிருக்கிறதென் றொப்புவிக்கிற துக்குச் சொல்லப்பட்ட ஞாயங்கள் தவிர யின்னமும் வேறே அனேக ஞாயங்களினாலே அற்ப சந்தேகத்துக் கானாலு மிடமில்லாமல் அதை யொப்புவிக்கக்கடவோம்.

அதேதென்றால் ஆத்துமத்தி னுடைய சுபாவத்தை விசாரிக்கு மிடத்து இந்த ஆத்தும நிருணயத்தின் முதற்பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயங்களினாலே சீவனானது தனது சரீரத்தைவிட்டு வேறே சரீரத்திலே புகமாட்டாதென்று கண்டுபிடிக்கலாம். அதேதென்றால் சீவனானது சரீரத்திலே யிருக்கும் வகையை விசாரிக்குமிடத்தில் இரதத்திலே யானாலும் பஞ்சரத்திலே யானாலும் மனுஷனும் பக்ஷியும் மிருக்கிறாப்போலே சீவனானது சரீரத்திலே யிராதென்று பிரத்தியக்ஷமா யந்தப்பாடத்தி லொப்புவித்தாப் போலே யாச்சுது. அதேதென்றால் சீவனானது சரீரத்துக்கு மாத்திரையாயிருந்து பிரதானமாகப் பொருளைப் பண்ணுகிறதொழிய மற்றப்படியல்ல. இதெல்லாஞ் சந்தேகத்துக் கிடமில்லாமல் முன் சொன்னபாடத்தி லொப்புவிக்கப் பட்டபோதே சீவனானது தனது சரீர மொன்றுக்கே மாத்திரையா யிருக்கிறதினால் வேறே சரீரத்துக்குச் சுபாவமாக மாத்திரையா யிருக்கமாட்டாதென் றங்கீகரிக்கவேணும். அதெப்படி யென்றால் கலசத்துக்கு மாத்திரையா யிருக்கிற ரூபமானது தோண்டிக்கு மாத்திரையா யிருக்கக்கூடுமோ பின்னையுந் தோண்டிக்கு மாத்திரையான ரூபமானது பானைக்கு மாத்திரையா யிருக்கிற தென்று சொல்லுவாரில்லையே. அதேதென்றால் கலசத்துக்கு மாத்திரையான ரூபமானது மண்ணோடே கூடித் தனது சுபாவத்தினாலே கலசமாகிற பதார்த்தத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதொழிய வேறே பதார்த்தத்தை யுண்டாக்கிறதுக்கு வல்லதா யிருக்கமாட்டாது. அதேதென்றால் பாதியாகிற மாத்திரையானது தனது சுபாவத்தை வேறொருபாதியாகிற பதார்த்தத்துக்குக் கொடுத்து அந்தப்பாதியாகிற பொருளோடே கூடி யொரு விசேஷமான முழுப்பொருளைப் பண்ணுகிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே கலசத்தின் மாத்திரையான ரூபமானது மண்ணுக்குத்தன்னைக் கொடுத்தாப்போலே மண்ணோடே கூடக் கலசமென்கிற பதார்த்தத்தைச் சுபாவமாகப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதொழிய வேறே பொருளுண்டாக்கிற துக்கு யதுபல முடையதாயிராது. ஆதலாலே கலசத்தினுடைய மாத்திரையானது தானிருந்து தனது சுபாவத்தை விடமாட்டாதென்கிறதினால் தனது சுபாவத்தை மண்ணுக்குக் கொடுத்து மண்ணோடே கூடக் கலசமென்கிற பதார்த்தத்தைத் தான் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதொழிய வேறேபொருளை யுண்டாக்கிறதுக்கு யதுபலமுடையதா யிராது. அவ்வண்ணமே நிமித்த காரணமானது தன்னை வேறொரு பொருளோடே கூட்டாமற் றனக்குப் பின்னமாயிருக்கிற பல பல காரியங்களை உண்டாக்கிற தென்கிறது நிமித்த காரணமானது காரியங்களை யுண்டாயிருக்கிற விதமா யிருக்கையிலே மாத்திரையான காரணந் தன்னைக் கொடுத்துப் பொருளையுண்டாக்கிறதினால் அந்தந்த மாத்திரையான காரணமானது அந்தந்த விசேஷ பொருளைமாத்திரம் பண்ணுமொழிய வேறேபொருளைப் பண்ணமாட்டா தென்று சொல்லக்கடவது.

அதெப்படியென்றால் நிமித்த காரணமாகிற முத்திரை போடுகிறவன் பதினாயிர முத்திரைகளையும் வெகுவாயு முண்டாக்கிறதுக்கு வல்லவனாயிருப்பான். முத்திரையினுடைய மாத்திரையான காரணமாகிற ரூபமோவென்றால் தன்னை மெழுகுக்குக் கொடுத்துத் தான்மெழுகோடே கூடி முத்திரையாகிற விசேஷப் பொருளைப்பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்குமொழிய மரங்கல்லிது முதலான வேறே பதார்த்தங்கள் அதினாலே யுண்டாக்கப் படலாமென்று சொல்லவு மெண்ணவுங்கூடாது, அத்தன்மைபோல மனுஷனுடைய பாதியாகிற சீவனானது மனுஷ பாதியாகிற சரீரத்துக்கு மாத்திரையா யிருந்து தன்னைச் சரீரத்துக்குக் கொடுத்துத்தான் சரீரத்தோடே கூடி மனுஷனாகிற விசேஷமான முழுப்பொருளை யுண்டாக்கிறதுக்கு வல்லதாயிருக்கு மொழிய நாய் முதலான மிருகங்களை யுண்டாக்கிறதுக்கு வல்லதாயிராது. அதேதென்றால் தன்னைச் சரீரத்துக்கு கொடுத்துத் தான்சரீரத்தோடே கூடி மனுஷனாகிற பொருளை யுண்டாகப் பண்ணுகிற சீவனானது தான் தன்னை யல்லவென்று பண்ணவுந் தனது சுபாவத்தைப் பேதிப்பிக்கவு மாட்டாததினாலே தான் சரீரத்தோடே கூடி விசேஷ பொருளாகிற மனுஷனுண்டாகும் படிக்குப் பெலமுடையதா யிருக்குமொழிய வேறே யொன்றைத் தோற்றுவிக்க மாட்டாது.

உஷ்ணமுதலான குணங்கள் வேறேயொரு பதார்த்தத்தோடே கூடுகிற மேரையை விசாரித்தோமானால் இந்தச் சத்தியவர்த்தமானத்தைக் கண்டுபிடிக்கிறதுக் குதவுமென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் உஷ்ணமானது தான் தன்னைவேறேயொரு பதார்த்தத்துக்குக் கொடுத்தாப்போலே யந்தப் பதார்த்தத்தோடே கூடியிருந்தால் உஷ்ணமுள்ள பொருளைப் பண்ணுமொழியக் குளிருள்ள பொருளையாகிலு மீரமுள்ள பதார்த்தத்தை யென்கிலும் பண்ணமாட்டாது. இந்தவிதமே பச்சைவர்ணமானது வேறே பதார்த்தத்தோடேகூடினாற் பச்சை வர்ணத்தைத் தோற்றுவிக்கு மொழிய வெள்ளை கறுப்புள்ளதைத் தோற்றுவிக்கமாட்டாது. அம்மரியாதியே மனுஷனுடைய சீவனானது சரீரத்துக்குத் தன்னைக் கொடுத்து தான் சரீரத்தோடேகூடி மனுஷனென்கிற விசேஷப் பொருளைத் தோற்று விக்குமொழிய நாய் நரி மிருக பட்சி முதலான வெவ்வேறே பொருள்களைத்தோற்று விக்கமாட்டாது. அவ்வண்ணமே யிந்தக்கலசத்துக் கிந்த மாத்திரையான ரூபமானது வேறே மண்ணோடேகூடிப் பானை முதலான வேறேபாத்திரத்தைத் தோற்றுவிக்க மாட்டாதது போலே மனுஷனுடைய பாதியாகிற மாத்திரையான சீவனானது பூதியங்களிலே யுண்டாயிருக்கிற சரீரத்தோடே கூடி மனுஷனாகிற விசேஷப்பொருளைத் தோற்றுவிக்கு மொழியக் கல்லையு மரத்தையு மிருகத்தையு மானாலும் வேறேபொருளை யென்கிலுந் தோற்றுவிக்க மாட்டாதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை, ஆதலாலே யிந்தச் சரீரத்துக்கு மாத்திரையான சீவனானது வேறே சரீரங்களோடே கூடி நாயா யிருந்ததென்றும் பன்றியா யிருந்ததென்று மினிமேல் வேறே சரீரத்தோடே கூடிக் குரங்காய்ப் பிறக்கு மென்றுஞ் சொல்லுகிற தென்கிறது முழுத்தப்பறையா யிருக்கிற தென்கிறதும் போராமல் அந்தச் சரீரத்துக்கு மாத்திரையான ஆத்துமத்தினுடைய சுபாவத்துக்கு கேவலம் விரோதமானதுமா யுண்டாகமாட்டாத விருத்தாந்தமுமா யிருக்கிற தென்று சொல்லக் கடவோம்.

அதேதென்றால் நாய் நரி குரங்கு பசுமுதலான மிருகங்க ளென்னப்பட்ட யாவையும் பார்க்கும்போதந்தந்த விசேஷ மிருகமான துண்டாகிறதுக்கு வெவ்வேறே விசேஷ மாத்திரையான சீவனானது தனக்குப் பாத்திரமா யிருக்கிற

வெவ்வேறே சரீரத்தோடே கூடவேணு மொழிய மற்றப்படியல்ல. இதன்றியே சீவனுள்ள பொருளினிடத்திலே சீவனானது பொருளினுடைய வொருபாதியுஞ் சரீரமானது வேறேபாதியுமா யிருந்துகொண்டு யிரண்டுங்கூடினால் முழுப்பொருளாகுமென் றங்கீகரித்தாலுஞ் சீவனானது பிரதானமான தென்றுஞ் சீவனானது தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்குச் சரீரமானது யத்தனமாயிருந்த தென்றும் எல்லாரு மங்கீகரிக்கத்தக்க சத்தியமா யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே சீவனுக்குச் சரீரமானது யத்தனமா யிருக்கிறபோதே சரீரமானது அந்தச் சீவனுடைய சேட்டைகளுக்கான யத்தனமா யிருக்க வேணுமென்றறிந்து கொள்ளத் தக்க விசேஷமாகும். அந்தந்தச் சீவனுடைய சேட்டைகளை விசாரிக்கு மிடத்தி லந்தந்தச் சீவன் பண்ணுகிற சேட்டைகளுக் கொத்த பரிபூரண வேற்றுமை யுண்டா யிருக்கிற தென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதேதென்றால் மச்சத்தினுடைய சீவனானது நீந்துகிறதும் இது முதலான யோக்கிய கிரிகைகளுக்குக் காரணமாயிருக்கச் செய்தே பக்ஷியினுடைய சீவனானது பறக்கிறது மிது முதலான விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருமே. மற்ற மிருகாதிகளை யெல்லாம் விசாரிக்கும்போது அந்தந்தச் செந்துவின் சீவனானதுக்குத் தனித்தனியே மிகவும் வேற்றுமையான வெவ்வேறே விருத்திகளுண்டா யிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மனுஷனுடைய சீவனோவென்றால் மிருகாதிக ளென்னப்பட்ட யாவுக்கு மில்லாததுகளுமாய் விசேஷமானதுகளுமா யிருக்கிற அனேக விருத்திகளானதுகள் மனுஷ சீவனொன்றுக்கே யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல, ஆனபடியினாலே சீவனானது தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்குச் சரீரமானது யத்தனமா யிருக்கிற தென் றெல்லாரு மங்கீகரித்து வருகிற சத்திய விசேஷமா யிருக்கக்கொள்ள அந்தந்தச் சீவனுடைய வேற்றுமையுள்ள கிரிகைகளுக்குச் சரீரமானது ஆன யத்தனமா யிருக்கும்படிக்கு அந்தந்தச் சீவன்பண்ணிக் கொண்டு வருகிற மிகுந்த வேற்றுமை யுள்ள சேட்டைகளுக்கு ரூபத்திலேயு முஷ்ண முதலான குணங்களுடைய பிரமாணத்திலேயு மற்றுள்ள மேரை மரியாதிகளிலேயும் பரிபூரண வேற்றுமையுள்ள சரீரங்களுண்டாயிருக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே ஒரு சீவனுக்கான சரீரம் வேறே சீவனுக் காகாததா யிருக்கிறதென்று சொல்லவேணு மென்கிறதினா லந்தந்தச் சீவன் தனக்குப் பாத்திரமா யிருக்கிற அந்தந்தச் சரீரத்தோடே கூடி யிருந்து அந்தந்தச் சரீரத்தைப் பிழைப்பிக்கிறதுக்கும் அந்தந்தச் சரீரத்தோடே கூடித் தனது சேட்டைகளைப் பண்ணுகிறதுக்கும் வல்லதாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யெறும்பினுடைய சீவனானது யானையினுடைய சரீரத்தோடே யிருந்தப்படிப்பட்ட சரீரத்தைப் பிழைப்பிக்கவு மப்படிப்பட்ட சரீரத்தோடே கூடித்தனது சேட்டைகளைப் பண்ணவு மாட்டாதென் றங்கிகரிக்கத்தக்க சத்தியமாயிருக்கு மொழிய மற்றப்படியல்ல. இந்தவிதமாக அந்தந்தச் சீவனுடைய வகையிலே யோசிக்கக்கடவது.

இதெல்லா மொருவமையினாலே தெளியப் பண்ணலாம். அதேதென்றால் தொழிலாளிகளாயிருக்கிற நாலுபேர்களைப் பார்த்தால் அவர்களுக்குள் ளொருவன் மண் வெட்டுகிறான், மற்றொருவன் ஓலை யெழுத்தனாயிருக்கிறான், வேறொருவன் கல்லிலே விக்கிரகங்களைப் பண்ணுகிறான், இன்னுமொருவன் படத்திலே சித்திரங்களை யெழுதிக்கொண்டு வருகிறான். இந்த நாலுபேர்களும் வெவ்வே

றே வேற்றுமையுள்ள வியாபாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறவனானவன் வேற்றுமையுள்ள இயற்பினங்களைக் கொண்டிருக்க வேண்டியிருப்பான். மற்றப்படியல்ல. அவ்வண்ணமே ஒருவனுக்கு மண்வெட்டியும் ... தன்னை முத்தாணியு மூன்றாவானுக்குளியுங் கடகியானவனுக்குத் தூரிகையு ... மிருக்கவேணும். இதிப்படி யிருக்கையிலே மண் வெட்டுகிறவனுக்கு முதலானதை யுஞ் சித்திரக்காரனுக்கு மண் வெட்டியு மிப்படியே யொவ்வொருவு மொன் இயற்பினத்தை வேறொருவனுக்குக் கொடுத்தோமானால் அது எந்த மனுஷ அக்கிரமமா யிருக்கிறதுந் தவிர அவனவன் பண்ணத்தக்கதுத் தனது கிரி கொடுத் இயற்பினங்களைக்கொண்டிராம லாகாதயற்ப ... கொண்டிருக்கக்கூடிய அவனவன் தனது கிரிகைகளைப் பண்ணவுமாட்டான். அதனாலே யவனவனுடைய யிலே யிருக்கிற யற்பினமானது வியர்த்தமா யிருக்குமொழியச் சபலமா ... மாட்டாது. யிதெல்லா மிப்படி யிருக்கையிலே யிந்த நாலுபேர்கள் பண்ணிக் கொண்டுவருகிற வேற்றுமையுள்ள கிரிகைகளைக் காட்டிலும் அந்தந்தச் சீவன்கள் அதிகமாக வேற்றுமையுள்ள விருத்திகளைப் பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறதுக்குத் தப்பாது. அது காரணமாக அந்தந்தச் சீவனானது வேற்றுமையா யிருக்கிற தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்கு அந்தந்த வேற்றுமையுள்ள யெற்பினமாகிற சரீரத்தைக் கொண்டிருக்கு மொழிய முன் சொல்லப்பட்ட நாலு தொழிலாளிகளுக்குள் ளொருவனியற்பின மொருவனுக் காகாமலிருக்குமாப் போலே மிகுந்த வேற்றுமை விருத்தியுள்ள சீவனுக்குள்ளொரு சீவனுக்கான இயற்பினமாகிற சரீரமானது மற்றச் சீவனுக் காகாதென்று சொல்லக் கடவோம். அப்படியே யிந்தச்சீவனுக் காகாத இயற்பினமாகிற சரீரமானதிந்தச் சீவனோடே கூடி யிருக்கலாமென்று சலத்தினாலே யாதொருத்தன் சொன்னால் மண் வெட்டுகிறவன் கையிலே தூரிகையுஞ் சித்திரகாரனுக்கு மணவெட்டியுங் குடுத்தாப் போலே யாகும். அதேதென்றால் அந்தந்தச் சீவனானது தனக் காகாத இயற்பினமாகிற சரீரத்தைக்கொண்டு தனது விசேஷ விருத்திகளைப் பண்ணமாட்டாது. அப்படிப்பட்ட சரீரமான தந்தச் சீவனோடே தனது சுபாவத்துக்கு விருத்தமாய்க் கூடி யிருக்கிறதினால் தூரிகையெழுத தன் கையிலே மண்வெட்டி யிருக்கிறாப்போலே அது வீணா யந்தந்தச் சீவனோடே கூடி யிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலினாலே சீவனுடைய சுபாவத்தையுஞ் சீவனுக்கான விருத்திகளையும் பார்க்கும்போது அந்தந்தச் சீவன் தனது விசேஷ சரீரத்தோடேயிருக்கக் கூடுமொழிய மற்றப்படி யல்லவென் றொப்புவிக்கப் பட்டதினாற் பூர்வ ஜென்ம முண்டாயிருந்த தென்றும் இனிமேல் வேறே ஜென்ம முண்டா யிருக்குமென்றுஞ் சொல்லுகிற தென்கிறது பிழுத்தப்பறையா யிருக்கிறதென் றொப்புவித்தாப் போலே யாச்சுது. யிற்றைவரைக்கும் நம்மாற் சொல்லப் பட்ட ஞாயத்தைப் பத்தும் பத்தாய் விசாரித்துப் புத்திமானா யிருக்கிறவனுடைய ... யளவறுத்துக் கொண்டு வந்தா லப்படிப்பட்ட ஞாயத்தினாலே நரசீவனானது புத்தியில்லாத ஜெந்துவினுடைய சரீரத்தோடே கூட யாட்டாதென்கிற சத்திய விசேஷமான தொப்புவிக்கப்படுகிற தென்று அவன் நிச்சயம் பண்ணுகிறதுந் தவிர நரசீவன் களுக்குள் ளொரு சீவனானது தனது சரீரத்தைவிட்டுப் பிரிந்தால் வேறொரு நர சரீரத்தைப் பிழைப்பிக்கிறதுக்கும் அதோடே கூட வேறொரு மனுஷனா யநுபவிக்கிறதுக்கும் அது வல்லதா யிருக்கமாட்டா தென்கிற சத்திய விசேஷமானது முன் சொல்லப்பட்ட ஞாயத்தினாலே வெளிப்படுத்தப்படுகிற தென்று புத்திமானா யிருக்கிறவன் சந்தேகமறக் கண்டுபிடிப்பா னென்கிறதுக்குத் தப்பாது.

... விரோதமான சத்தியங்களானதுகள் முன் சொல்லப்பட்ட ஞாயத்தினாலே ... சீவனுள்ள ... படுகிற மேனையை யெல்லாரு மறியும்படிக் கதினுடைய பெல சரீரமானது ... மென்று விளங்கப் பண்ணுகிறோம். தேவதத்த னென்கிற விசேஷ ளாகுமென் ... மனுஷனானவ னிடத்திலே யிதல்லா மாரோப்பித்து இந்தவைவி ... க் கடவோம். தேவதத்தனென்கிற வியக்தியாகிற மனுஷனானவன் ... ருந்த ... ராமல் சுபாவமாக ஒரு விசேஷ வியக்தியாகிற மனுஷனாயிருக்கி றப்படியல் ... சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இப்படி சொல்லா விட்டா சரீரமா ... நமக்கும் அப்புறமாகிலும் ... யில்லாமல் நீ நானாயிருக்கிறாயெ னுமெ ... ரானியாயிருக்கிறோ மென்றும் அங்கீகரித்துப் பயித்தியக் காரன்போலே சேட்டை ... பிதற்ற வேண்டியிருக்கு மென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே ... றதுக் கிடமாயிருக்கிற விந்தப் பயித்தியத்தை விட்டுத் தேவதத்த னென் றவன் சுபாவமாக வொருவிசேஷ வியக்தியாகிற மனுஷனா யிருக்கிறா னென்கிற தன்றாக சத்தியத்தையுங் கண்ணாலே காணப்படுகிற வர்த்தமானத்தையு மங்கீகரிக்கக் கடவோம். அதேதென்றால் விப்படி யங்கீகாரம் பண்ணாத பேர்களுக்குப் பயித்தியங்கொண்ட பேர்களுடைய காமமானது செல்லுமொழிய மற்றப்படி யல்ல. அவ்வண்ணமே தேவதத்த னென்கிறவன் சுபாவமாக வொருவிசேஷ வியக்தியாகிற மனுஷனா யிருக்கிறா னென்கிற சத்தியத்தைச் சந்தேகமற உட்படுக்கொண்டு அப்பால் நடத்தத்தக்க விசேஷங்களை நடத்தக் கடவோம். அவைகளில் முதலாம் விசேஷமாவது இந்த விசேஷ சீவனானது மாத்திரந் தேவதத்த னென்கிற விசேஷ வியக்தியாகிற மனுஷனானவனா யிருக்கிறதென்று ஒன்றில் அங்கீகரிக்கவேணும். அல்லது யிந்தவிசேஷ சீவனானது மாத்திரந் தேவதத்த னென்கிற விசேஷ வியக்தியாகிற மனுஷனா யிருக்கவில்லை யென்று சொல்லியிந்த விசேஷ சீவனும் இந்த விசேஷ சரீரமுமென்கிற யிரண்டுபாதிக ளொன்றாய்க் கட்டப்பட்டால் சுபாவமாகத் தேவதத்த னென்கிற விசேஷ வியக்தியாகிற மனுஷனானவனா யிருக்கிறானென் றங்கீகரிக்க வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட பக்ஷங்களுக்குள் ளொவ்வொரு பக்ஷத்தை யாராய்ந்து கொண்டு அது நிமித்தமாகத் தெளிவற்ற மனுஷர் மறு ஜென்மத்தை யங்கீகரிக்கிறதினால் நடத்தத்தக்க விசேஷங்கள் அபத்தத் தப்பறைகளா யிருக்கிறதென்று காட்டக் கடவோம்.

அதெப்படியென்றால் இந்த விசேஷசீவனானது ஒன்றில் சுபாவமாக விந்த விசேஷ வியக்தியாகிற மனுஷனான தேவதத்தனா யிருக்கிறதென்று ஒப்புக் கொள்ளவேணும். இப்படி ஒப்புக்கொள்ளும் போது இந்த விசேஷ வியக்தியாகிற தேவதத்தனென்கிற சீவனானது யெந்தச் சரீரத்திலே யிருந்தாலும் அது தனது சுபாவத்தை விடுமென்று சொல்லக்கூடாது. ஆதலினாலே அந்தச் சீவனானது தனது சுபாவத்தை விடாதபோதே சுபாவமாய் முழுப் பொருளா யிருக்கிற தேவதத்தனாகிற அப்படிப் பட்ட சீவனானது யெந்த நரசரீரத்திலேயிருந்தாலும் யெப்போது முழுப்பொருளாகிற தேவதத்தனா யிருக்கவேணு மொழிய வாதன் பொம்மன் முதலான வேறே மனுஷராக மாட்டாது. அதெப்படியென்றால் சுபாவமாக வொருவிசேஷ பக்ஷியானது அந்தந்தப் பஞ்சரத்திலே யடைக்கப் பட்டதினால் அது தனது சுபாவத்தை விடாதபோ தெந்தெந்தப் பஞ்சரத்திலே யடைக்கப் பட்டாலும் எப்போதுஞ் சுபாவமா யிருக்கிற இந்த வொரு விசேஷ பக்ஷியானது யிந்த விசேஷப் பக்ஷியா யிருக்குமொழிய வேறொரு விசேஷப் பக்ஷியா யிருக்கமாட்டாது. யிந்தவகையாக யிந்த விசேஷ மனுஷ வியக்தியாகிற வாதன் அந்தந்தக் கிரகப்பிரவேச நிமித்தமாகத் தனது சுபாவத்

தை விடாததினால் வாதனானவன் எந்தெந்தக் கிரகத்திலே பிரவேசித்தாலுந் தன் சுபாவமா யிருக்கிற வாதனாகவே யிருக்கிறானொழியப் பல பல கிரக ப்பிரவேச நிமித்தியமாக அப்படிப்பட்ட வாதனானவன் பொய்யன் திம்மன் முதலிய வேறே மனுஷர்களா யிருக்கமாட்டான். அத்தன்மை போல இந்த விசேஷ சிவனானவனொன்றே மாத்திரஞ் சுபாவமாக இந்த விசேஷ மனுஷவியக் தியாகிற தேவதத்தனா யிருக்கிறதென் றங்கீகரிக்கும்போது யிந்த சிவனான து பல பல நர சரீரங்களுடைய பிரவேசத்து நிமித்தமாக வொருவிலுந் தனது சுபாவத்தை விட்டுதென் றங்கீகரிக்கவும் .... அல்லது தனது சுபாவ த்தை விட வில்லை யென்று சொல்லவேண்டி யிருக்கும். தனது சுபாவத்தை விட்ட பொருளழிந்து போன பொருளா யிருக்கிறதென்கிற ஞாயத்தினாலே. தேவதத்தனாகிற யிந்த விசேஷ சிவனானது வேறே சரீரப்பிரவேசத்து நிமித்த மாகத் தனது சுபாவத்தை விட்டுதென் றங்கீகரிக்கத் தோமானால் தேவதத்த னாகிற இந்த விசேஷ சிவனானது வேறே சரீரத்திலே புகும்போது சுத்தமா யழி ந்து போச்சுதென்று அங்கீகரிக்கக் கடவோம். முழுது மழிந்துபோன சிவனா னது வேறே சரீரத்தோடே வேறே மனுஷனாய்ப் பிறக்கலா மென்று மதிக்கத பயித்தியங் கொண்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான். அல்லது இந்த வி சேஷ சிவனானது பல பல நர சரீரப் பிரவேசத்து நிமித்தமாகத் தனது சுபா வத்தை விட வில்லையென்று சம்மதப் படவேணும். இப்படி சம்மதிக்கும் போது, முன் சொன்னாப் போலே பல பல பஞ்சரப் பிரவேச நிமித்தியமாகத் தனது சுபாவத்தை விடாத பக்ஷியானது போலவும் விவித கிரகப் பிரவேசங்களினாலே தனது சுபாவத்தை விடாத வாதனானவன் போலவும் பல பல நர சரீரப்பிர வேசத்தின் காரணமாகத் தனது சுபாவத்தை விடாத தேவதத்தனாகிற யிந்தச் சிவனானது யெந்த நர சரீரத்திலே புகுந்தாலு மெப்போதுந் தேவதத்த னென் கிற விசேஷ வியக்தியாகிற மனுஷனானவனா யிருக்கவேணு மொழிய அதுவாதன் திம்மன் முதலான வேறே மனுஷராயிருக்கமாட்டாது.

இதன்றியே சுபாவமாய்த் தேவதத்தனாகிற இந்தச் சிவனானது இந்தச் சென் மத்திலே யொருவிசேஷ மனுஷனுக்குத் தகப்பனாயிருக்கிறவன் விசேஷ மனுஷ னாகிற தனது மகனுக்கு அல்லது பேரனுடைய பேரனுக்கு மகனாய்ப் பிறக்கலா மென்றங்கீகரிக்கவேணும். இதுதவிரத் தேவதத்தனாகிற யிந்தச் சிவனானது பல பல நரசரீரங்களுடைய பிரவேசத்தினாலே தனது சுபாவத்தை நீங்காமலெப் போதும்போலே யழியாத பொருளா யிருக்கச்செய்தே தேவதத்தனாகிற யிந்தச் சிவனானது பல பல நரசரீரங்களிலே கூடுகிறதினால் தேவதத்தனானவன் செத் துப்போனானென்கிற வசனமானது முழுதுந் தப்பறையாயிருக்கிறதென்கிறதுக் குத்தப்புது. அதெப்படி யென்றால் ஒரு விசேஷபக்ஷியும் வாதனாகிற விசேஷ மனுஷனானவனும் பல பல பஞ்சரக்கிரகப் பிரவேசங்களினாலே பக்ஷி செத்துப் போயிற்றென்றும் வாதன் மரித்தானென்றுஞ் சொல்லப்படாது. அத்தன்மை போல் இந்த விசேஷ சிவனாகிற தேவதத்த னென்கிறவன் பல பல நர சரீரங்களி லே பிரவேசித்ததினால் தேவதத்த னென்கிறவன் செத்துப்போனானென்கிற வச னமானது முழுத்தப்பறையா யிருக்கிறதென் றங்கீகரிக்கத் தக்கதாகும் இந்தவை யிலே விசேஷபக்ஷியும் வாதனாகிற விசேஷ மனுஷனானவனும் பல பல பஞ்சரக் கிரகங்களிலே பிரவேசிக்கிறதினாலே யிந்த விசேஷ பக்ஷியும் வாதனென்கிற விசேஷ மனுஷனானவனும் ஏற்பமாகிலும் வேற்றுமையில்லாமலிந்த விசேஷ பக்ஷி யுமாய வாதனாகிற விசேஷ மனுஷனுமா யிருக்கிறதென்று சொல்லத்தகு மொழி

யப் பல பல பஞ்சரக் கிரகங்களுடைய பிரவேசங்களினாலே யந்தவிசேஷ பக்ஷி யானது அநேகவித வேற்றுமையுள்ள பக்ஷிகளா யிருக்குதென்றும் ஒரு விசேஷ மனுஷனாயிருக்கிற வாதனானவன் பின்னபேதமுள்ள பல பல மனுஷனாய்ப்போனா னென்றுஞ் சொல்லவு மெண்ணவுங் கூடாது.

அம்மரு வாதியே ஒரு விசேஷ வியக்தியாகிற மனுஷனான தேவதத்த னென்கிற யிந்தவிசேஷ சிவனானது நர சரீரங்களிலே பிரவேசித்திருந்தாலு மெப்போதும் பின்னபேத மில்லாமல் தேவதத்த னென்கிற விசேஷ மனுஷனான வன் தேவதத்தனாகவே யிருந்தானென்று சொல்லத்தகு மொழிய யெண்ணப் படாத நர சரீரப் பிரவேசத்தி னிமித்தமாக யிந்த விசேஷ சிவனாகிற தேவதத்த னொருவன் மெய்யாகவே யெண்ணப்படாத மனுஷனாய்ப் போனானென்று பயித் தியங் கொண்டவன் சொன்னாற் சொல்லுவா னொழியப் புத்தியான யிருக்கிற வன் சொல்ல மாட்டான். அதெப்படி யென்றால் பிராமணனாயிருக்கிற மல்ல னானவன் கோமுட்டி வெள்ளாழன் சண்டாளனிவர்கள் முதலான பல பல பேர்களுடைய வேஷங்களைக் கொண்டிருந்தாலும் அப்படிப்பட்ட வேஷங்கள் நிமித்தமாகப் பல பல சாதியுள்ளபேர்களாய் மல்லன் போகாமல் மெய்யாகவே யெப்போதும் விசேஷ பிராமணனாகிற மல்லனா யிருப்பானொழிய முன் சொல்லப் பட்ட விசேஷங்களினாலே விசேஷ பிராமணனென்கிற மல்லனானவன் கோ முட்டி வெள்ளாழன் சண்டாளனாய்ப் போனானென்று மதிகெட்ட மிலேச்சன் முதலாய்ச் சொல்லமாட்டான். அத்தன்மை போலப் பல பல வேஷங்களுக் குச் சரியாயிருக்கிற வெவ்வேறே நர சரீரங்களிலே யிந்த விசேஷ சிவனாகிற தே வதத்த னென்கிறவன் பிரவேசித்தாலு மப்படிப்பட்ட பிரவேசங்களி னிமித்த மாக விசேஷ மனுஷனாகிற தேவதத்த னொருவன் மெய்யாக வெண்ணப்படாத மனுஷனாய்ப் போனானென்கிற வசனமானது பரியாசத்துக்கிடமா யிருக்குமொ ழிய அங்கீகரிக்கத்தக்க விசேஷமாயிராது.

அல்லவண்ணமே யிந்தச் சிவனொன்றே மாத்திரந் தேவதத்தனென்கிற வி சேஷ மனுஷனாயிருக்கிறதென்று சொல்லிப் பல பல நர சென்மங்களை யெடுக்கலா மென்கிற அங்கிகாரத்தினாலே யிந்தத் தப்பறைகள் முதலான வேறே யனேக அப த்த விசேஷங்களை யங்கிகரிக்க வேண்டி யிருக்கிறதினால் தேவதத்தனாகிற வொ ருசிவனானது பல பல நர சரீரங்களை யெடுக்கலா மென்கிற வர்த்தமானத்தை வி சாரிக்கும் போது முழுப்பயித்தியங் கொண்டவன் சொற்பனத்திலே யதைக்க ண்டாலன்றி .... மொழிய விழித்திருக்கிற மனுஷனானவன் அதை யங்கிகரிக்கலா மென்று சொல்லுகிறதுக் கிடங்காண மாட்டாது.

அனுலிந்த விசேஷ சிவனானது மாத்திரந் தேவதத்த னென்கிற விசே ஷ வியக்தியாகிற மனுஷனா யிருக்கிறதென் றெப்படிக் கொண்டாமல் யிந்த விசேஷ சிவன் இந்த விசேஷ சரீரமென்கிற பாதிகளிரண்டும் அந்நியோ ந்நியமாய்க் கட்டப்பட்டால் இந்த விசேஷ மனுஷ வியக்தியாகிற தேவ தத்த னென்கிறவ னுண்டாமென்று சம்மதித்தோமானால் அப்போதும் இந்த விசேஷ மனுஷனாகிற தேவ தத்தனுடைய சிவனானது தனது பாதியாகிற விசே ஷ சரீரத்தைப் பிழைப்பித்து அதோடே கூடக் கட்டப்பட்டதா யிருந்து தே வதத்த னென்கிற முழுவிசேஷ மனுஷனை யுண்டாக்கப் பண்ணுகிறதுக்கு வல் லதா யிருக்கிறதொழிய வேறே நர சரீரத்தைப் பிழைப்பித்து அதோடே கூ டியிருக்கலா மென் றங்கிகரித்தோமானால் வேறேயனேக அபத்த விசேஷங்களை அங்கிகரிக்க வேண்டியிருக்கும். அதெதெனில் முழு மனுஷனாகிற தேவதத்த

னுடைய மெய்யான பாதியாகிற விந்த விசேஷ சிவனுனது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால் அது தனது சுபாவத்தினுலே தேவதத்தனுடைய பாதியா யிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினுலே தேவதத்த னென்கிற வனுடைய பாதியான விந்தவிசேஷ சிவனுனது வேறே சரீரத்திலே கூடுகிறதினுலே யது யழிந்து போகாமல் தனது சுபாவத்தை விடாதபோதே யெந்த நர சரீரத்திலே பிரவேசித்தாலு மெப்போதுந் தேவதத்தனுடைய பாதியா யிருக்கு மொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே தேவதத்தனுடைய பாதியாகிற யிந்தச் சிவனுனது தனது விசேஷ பாதியாகிற சரீரத்தோடே கூடாமல் வேறே சரீரத்தோடே கூடிற்றென்று அங்கிகரித்தோமானுல் தேவதத்த னென்கிற முழு மனுஷனை யுண்டாக்க மாட்டாம லிருக்கவேணும். தேவதத்தனென்கிற முழு மனுஷனை யுண்டாக்கமட்டாதபோதே வேறே சரீரத்தி னிமித்தியமாக யெந்தமனுஷனை யுண்டாக்கப் பண்ணிற்றென்று ஸ்தாபித்தோம்? அதேதென்றுற் கேவலம் விருத்தமான பக்ஷங்களை யங்கிகரிக்க வேண்டி யிருக்கும். இதெல்லா பொருவ மையினுலே வெளியாக்கலாம்.

அதேதெனில் யோநிரத்தினுடைய ரூபமானது விசேஷப் பொருளாகிற யோதிரத்தை யுண்டாக்கப் பண்ணுகிறதுக்கு வல்லதாயிருக்குமொழிய மற்றொரு பொருளாகிறகடுக்கனை யதுண்டாக்க மாட்டாது. அத்தன்மைபோல இந்த விசேஷ சிவனுகிற மாத்திரையானது யிந்த விசேஷப் பொருளாகிற தேவதத்தனை யுண்டாக்கிறதுக்கு வல்லதா யிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. இப்படி சொல்ல வேண்டி யிருக்கையிலே தேவதத்தனுடைய பாதியாகிற யிந்த விசேஷ சிவனுனது வேறே நர சரீரத்தோடே கூடினுல் அதோடே வேறே மனுஷனுண்டா யிருக்கிறதுக்கு யது காரணமா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. இந்த விரண்டு வகையுள்ள வாக்கியங்களும் ஏக விஷயத்திலே கேவலம் விரோதார்த்தமா யிருக்கக்கொள்ள யிதிலே போம்வழி யேதென்று காணுமல் எந்த வார்த்தை சொன்னுமானுலும் எப்போதும் பித்து பிதற்றுகிறவன்போலே வார்த்தை சொல்லவேண்டி யிருக்கு மொழிய ஞாயத்துக்கும் புத்திக்கு பொருத்திருக்கிற வார்த்தைச் சொல்லுகிறதுக் கிடங்காண மாட்டாது.

அதேதென்றுல் தேவதத்தனென்கிற பொருளினுடைய பாதியாகிற யிந்த விசேஷ சிவனுன தெப்போதுந் தேவதத்தனுடைய பாதியா யிருக்கையிலே வேறே நர சரீரத்தோடே கூடிற்றென்று சொலலும்போது அப்படிப்பட்ட சரீரியானது வேறே மனுஷனுடைய பாதியாயிருக்கிறதென்று சொல்லக் கூடுமொழிய மற்றப்படியல்ல. அப்படியே யிரண்டு மனுஷனுடைய பாதியா யிருக்கிற தென்று சொல்லக் கூடுமொழிய மற்றப்படியலல. அப்படியே யிரண்டு மனுஷனுடைய பாதிகளிரண்டு மொன்றுய்க் கூடினுலப்படிப்பட்ட பொருள்களுக் கென்ன பேரிடலா மென்று சொல்லுகிற தென்கிறதரிது. அதேதென்றுல் தெளிவற்ற பாவிகளுடைய கற்பனைப்படியே பெண்சாதியும் புருஷனு மென்கிற பாதிக ளிரண்டு மொன்றுய்க் கூடினுல் அர்த்த நாரி யென்கிற பேர் வழங்கிறுப் போலே தேவதத்த னென்கிற பாதியாகிற யிந்த விசேஷ சிவனுனது வேறே மனுஷனுடைப் பாதியாகிற சரீரத்தோடே கூடினு லிப்படிப்பட்ட யிரண்டு பாதிகளாகிற பொருள்களுக்கு இடத்தக்கப் பேரேதென்று யிந்தப் பயித்தியமான பக்ஷத்தை யனுசரிக்கிற பேர்கள் அபத்தத்தைச் சொல்லுகிறதுக்கு இலச்சைப்படாமலிருக்கக்கொள்ள அவர்களே சொல்லவேணுமொழிய அபத்தத்தைச் சொல்லுகிறதுக்குச் சங்கோசப்படுகிறவ னிப்படிப்பட்ட பொருள்களுக்குப் பேரிடுகிறதுக்குப் பின்வாங்குவா னொழிய மற்றப்படியல்ல.

விசேஷ ஞான [illegible]

[illegible] மாய வசன [illegible]

இதிலே யறியவேண்டின விசேஷமாவது. தேவதத்தனுடைய பாதியாகிற விந்த விசேஷ நர சரீரமானது தேவதத்தனுடைய மற்றொரு பாதியாகிற விசேஷாத்துமத்துக் கெற்பனமா யிருக்கிறதுந்தவிரத் தேவதத்தனுடைய பாதியாகிற யிந்த விசேஷாத்துமமான தந்த விசேஷமான தனது சரீரத்தோடே கட்டப்பட்டு முழு மனுஷனுகிற தேவதத்தனை யுண்டாகப் பண்ணுகிறதினுற் சுபாவமாகத் தனது விசேஷ சரீரத்தோடே கட்டப்பட்டிருந்து தேவதத்தனென்கிற வொரு முழுப்பொருளை யுண்டாக்கிறதுக்கு வல்லதா யிருக்கிறதென்று சொல்லக் கூடுமொழியக் கோடி சரீரங்களோடே யந்த விசேஷ சிவனுனது கட்டுப்பட்டுக் கோடிமனுஷரா யிருக்கலாமென்று மதிகெட்டவன் சொற்பனத்திலேகூட்டாய்ச் சொல்லுவா னொழியப் புத்திமானு யிருக்கிறவன் இந்த அபத்தத்தைச் சொல்லவு மெண்ணவு மாட்டான். இது காரணமாக லேகிகனு யிருக்கிறவன் தனது எழுத்தாணியோடே கட்டப்பட்டு அதோடுகூட ஒரு பொருளாயிராததினுல் ஒரு லேகிகனுயிருக்கிறவன் தனது எத்தனமாகிற பல பல யெழுத்தாணிகளைக் கொண்டிருக்கலாம். தேவதத்தனுடைய பாதியாகிற யிந்த விசேஷ சிவனுனது எத்தனமாகிற தனது விசேஷ சரீரத்தோடே கட்டப்பட்டொரு முழுப் பொருளாகிற தேவதத்தனை யுண்டாக்கிற தினுல் தனது விசேஷ சரீரத்தோடே கட்டப்பட்டுத் தேவதத்தனென்கிற வொரு முழுப்பொருளை யுண்டாக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதென்று சொல்லவேணு மொழிய வொரு பொருளானது நூறுயிரம் பொருள்களா யிருக்கமாட்டாதென்கிற ஞாயத்தினு லொரு பொருளாகிற தேவதத்தனுடைய பாதியான யிந்த விசேஷ சிவனுனது நூறுயிரம் பொருள்களுடைய பாதியா யிருக்கலாமென்கிற தப்பறைப் பக்ஷத்துக்குச் சம்மதப்படலாமென்கிறதுக் கிடங்காண மாட்டாது.

ஆதலாலே அந்தந்த விசேஷ நரசிவனுனது அந்தந்த விசேஷ நர சரீரத்தோடே கட்டப்பட்டு அந்தந்த விசேஷ மனுஷனை யுண்டாகப் பண்ணலாமென்று சொல்லத்தகுமொழிய வொரு விசேஷ சிவனுனது நூறுயிரம் நர சரீரத்தோடே கட்டப்பட்டு நூறுயிர மனுஷரை யுண்டாகப் பண்ணமாட்டாதென் றெப்புவிக்கப் பட்டாப்போலே யாச்சுது. ஆனுலொரு சிவனுனது பலபல மிருகங்களுடையவு மனுஷனுடையவுஞ் சரீரங்களிலே பிரவேசித்துப் பலபல ஜென்மங்களை யெடுக்கலாமென்கிற பக்ஷமானது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று வருகிற ஆறுபாடங்களிலும் ஒப்பச் சொல்லக்கடவோம்.

௰௩-ம் பாடம்.

புனர் ஜென்மத்தினுடைய அங்கீகாரமானது மூடத்தப்பறையா யிருக்கிறதென்று இவ்வுலோகத்திலே மனுஷனுக்குண்டான ஸ்திதியினுடைய சொரூபத்தினாலொப்பச் சொல்லலாம். அதேதென்றால் மனுஷனானவன் பூமியிலே திரிகிற நாள்மட்டும் அவதிக்குப் போகிறவழியிலே நடக்கிறானென்று சொல்லத்தகுமொழிய அவதியை யடைந்தானென்று சொல்லத்தகாது. இப்படி யிருக்கையிலே பூர்வ ஜென்மத்தையும் இனிமேல் வரத்தக்க ஜென்மத்தையும் அங்கீகரித்தோமானால் இந்நாளிலே அவனவனுக்குண்டான ஜென்மந் தானே அவனவனுக்கு அவதியுமாய் அவதிக்குப்போகிற வழியுமா யிருக்கிறதென்கிற அபத்தத்தைச் சொன்னாப்போலே யிருக்கும். அதேதென்றால் கடைசியாக ஆக்கினையுஞ் சம்பாவனையு மனுபவிக்கிறதென்கிறது அவதியாகும். ஆக்கினையுஞ் சம்பாவனையு மனுபவிக்கிறதுக்கு ஆன கர்மங்களைப்பண்ணுகிறதென்கிறது அவதிக்குப்போகிற வழியினுடைய சொரூபமாயிருக்கிறதென்று சொல்லப்படும். ஆதலாலே பூர்வஜென்மத்திலே அவனவன் பண்ணின பாவபுண்ணியத்துக்கு அவனவனாக்கினையுஞ் சம்பாவனையு மிப்போ தனுபவிக்கிறானென் றொப்புக்கொண்டோமானால் பூர்வஜென்மத்துக் கிப்போதிருக்கிற ஜென்மமானது அவதிரூபமாயிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கும்.

பின்னையும் அவதியினுடைய சுபாவ சொரூபத்தை விசாரிக்குமிடத்திலே அது வொன்றிற்பாவத்தினிமித்தியமாக வரத்தக்க ஆக்கினை யனுபவத்தோடே மாத்திரம் இருக்கவேணும். அல்லது புண்ணியத்தினிமித்தியமாகவரத்தக்க சம்பாவனையினுடைய அனுபவத்தோடே மாத்திர மிருக்கவேணும். இதுகாரணமாகப் பரலோக சம்மந்தமா யிருக்கிற நல்லபதவியு நரகமும் முண்டென்று சகலபேர்களுக்கும் சம்மதமாகும். இதிப்படி யிருக்கையிலே பூர்வஜென்மத்திலே பண்ணின பாவபுண்ணியங்களுக் கிந்தச் ஜென்மத்திலே நிற்பாக்கியத்தையும் பாக்கியத்தையும் அவனவனனுபவிக்கிறானென்று சொல்லும்போது நல்வினை தீவினை யிரண்டுங் கலந்திருக்கிற வேறேயொரு அவதியுண்டென்றாப்போலே வெறுமனே கற்பித்தாப்போலே யாச்சுது. இப்படிப்பட்ட வியர்த்தமான கட்டுக்கதைகள் அவதியினுடைய சுபாவசொருபத்துக்கு விருத்தமா யிருக்கிறதுந் தவிர அப்படிப்பட்ட தப்பறையை அங்கீகாரம் பண்ணுகிறவன் ஞாயத்தை பார்க்குமிடத்தில் பரலோக சம்மந்தமாயிருக்கிற நரகமும் நல்லபதவியு மில்லையென்று அங்கீகரிக்கக் கடவான். அதேதென்றால் பாவ புண்ணியத்துக் கொத்த வண்ணம் பலனை அவனவனனுபவிக்க வேணுமென்கிற காரணத்தினாலே அப்படிப் பட்ட ஸ்தலங்களிரண்டு முண்டென்று சொல்லுகிறோமொழிய மற்றப் படியல்ல வென்றிருக்கையிலே பாவ புண்ணியத்துக் கொத்த வண்ணம் பலனுடைய அனுபவமானது இவ்வுலோகத்திலே கிடைக்குமென்று சொன்னோமானால் இதுக்காக வேறே பரலோக முண்டென்று சொல்லுகிறதுக்கு ஞாயங்காணாது. அதேதென்றால் மகாமகாப்பட்ட கொலைபாதக முதலான பாவங்களைத் தொலைக்கிறதுக்கிந்த லோகத்திலே ஆன நிற்பாக்கியத்தினுடைய அனுபவம் வல்லதாயிருக்கையிலே மற்றுண்டான பாவங்களைப் போக்கடிக்கிறதுக்கு அது வல்லதாயிராதென்று வெறுமனே ஞாயமில்லாமற் சொன்னாலொழிய வொருவன் ஞாயத்தைப்பார்த்து ஞாயத்தினாலே அப்படிப்பட்ட தப்பறையை யொப்பச் சொல்லமாட்டான்.

ஆனால் யிந்தடைவாக இவர்கள் சொல்லுகிறதை விசாரிக்கும்போது இந்தச் சென்மமானது பூர்வஜென்மத்துக்கு அவதியா யிருக்கிறதென்றங்கீகரிக்க வேண்டி யிருக்கிறதல்லாமல் இந்தச் ஜென்மமானது தானே அவதிக்குப்போகிற வழியாயிருக்கிறதென்று

சொல்லக்கடவது. அதேதென்றால் இந்தச் சென்மத்திலே பண்ணப்படுகிற பாவ புண்ணியத்துக்கு வருகிற ஜென்மத்திலே அவனவனாக்கினையுஞ் சம்பாவனையும் அவனவனனுபவிப்பானென்று சம்மதிக்கும்போது வருகிற சென்மமானது யிந்தச் சென்மத்துக் கவதியுமா யிந்தச் சென்மமானது அவதியாகிற வரத்தக்க ஜென்மத்துக்கான வழியுமா யிருக்கிறதென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. இதெல்லாம் ஞாயத்துக்கொத்திராதென்று புத்திமானா யிருக்கிறவன் கண்டுபிடிக்கக் கடவான். அதெப்படியென்றால் ஏககாலத்திலே வேலையுங் கூலியும் ஏககாலத்தி லொன்றிலே விளையு மறுப்பு முண்டென்கிறதும் ஒரு பொருளானது அவதியாகிற முடிவுமாய் நடவாகிற வழியுமா யிருக்கிறதென்கிறதும் கிரமத்துக்கேற்றிருக்க மாட்டாததுபோல இந்தச் சென்மந்தானே பலனனுபவிக்கிறதுக்கு அவதியுமினிமே லனுபவிக்கத்தக்க பலனுக்கு வழியுமா யிருக்கிறதென்று சொல்லுகிறதென்கிறது ஞாயத்துக்கொவ்வாது.

அவ்வண்ணமே யிந்தச் சென்மமானது அவதியாகிற நரகத்துக்கானாலும் அவதியான மோக்ஷத்துக் கென்கிலும் வழியாயிருக்கிற தென்றங்கீகரித்திந்தச் சென்மத்திலே பாவியானவன் தான் பண்ணின கனபாவத்தைப் போக்கடியாமல் அப்படி பாவத்தோடே மரணநிமித்தமாக அவதியாகிற நரகத்தை யடைந்து அவ்விடத்திலே பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ளவனா யென்றென்றைக்கும் நரகத்தி லொழியாத அக்கினிக்குள் அவியாதக்கட்டையா யிருப்பானென்று சந்தேகமற வொப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகும். அல்லது தேவவிஷயக விசுவாச பத்தியோடே தருமப்பிரகாரனானவன் மரணத்துக்குப் பிற்பாடு நன்மையிலே நிலைகொண்ட மனசுள்ளவனாய்ப் பராபரவஸ்து விஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே குறையற்ற சந்தோஷத்தையுந் திருத்தியைக் கொடுக்கிற ஆனந்தத்தையும் யென்றென்றைக்கும் அனுபவிப்பானென் றங்கிகரிக்கத்தக்க சத்தியமாகும்.

அவ்வண்ணமே யிக்காலமானது கேவலம் விதைக்கிறகாலமென்றும் பரலோக சம்மந்தமா யிருக்கிற நரகமோக்ஷம் விளைப்புக்குத் தக்க பலனை அனுபவிக்கிற காலமென்றுஞ் சொல்லத்தகும். இந்த ஞாயமுள்ள அடைவானது சகல நன்மை சொரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்கு மிகவுமொத்திருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்றால் சர்வேஸ்வரனானவர் சகல நன்மை சொரூபமா யிருக்கிறபோது மிகவும் பாவத்தை வெறுக்கவும்வேணும், பாவம் வெறுக்கத்தக்கதாக மனுஷருக்குக் கெட்டிமனதாசை யெந்த வுபாயத்தினாலே வரப்பண்ணலாமோ அப்படிப்பட்ட இயற்றினமுள்ள கற்பினை சித்தனுடையமட்டில்லாத சகலநன்மையினுடைய மேன்மைக் கேற்றிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. இது இப்படியிருக்கையிலே பூலோகத்திலே இருக்கிற மனுஷரான பேர்கள் பண்ணுகிற கனபாவங்களுக்குச் சிறிதுகாலமாத்திரம் ஆக்கினை யனுபவித்துத்திரும்பப் பிறக்கலாமென்றும் இந்தடைவாக வருகிறதும் போகிறதும் ஆண்டவன் கற்பித்தால் மனுஷனானவன் சகல பாவத்துரோகத்தைப் பண்ணுகிறதுக்குப் பயப்படாமல் துணிவான்.

அதேதென்றால் சிறிதுகால மாக்கினைப் பட்டாலும் படவாறொழிய இப்போதைக் கென்னுடைய ஆசைதீர்த்துப்போட்டு என் கைக் கெட்டின பாவ மென்னப்பட்ட யாவையும் பண்ணுவேனென்று துணிந்து நடப்பான். இப்படிப்பட்ட பாவத்தின் பேரிலே துணிவுள்ள மனசுவராதப்படிக்குக் கர்த்தரானவர் மனுஷன் பண்ணின பாவமென்னப்பட்டதெல்லா மரணத்துக்கு முன்னே மனுஷனானவன் போக்கடிக்கிறதுக்குத் தயை பண்ணிக் கொண்டுவருகிறவர் இப்படிப்பட்ட தயையைச்சட்டை பண்ணாமல் தனது கனபாவங்களைப் போக்கடியாத பாவிகளுக் கென்றென்றைக்கும் அவதியாகிற நரகத்திலொழியாத அக்கினி

வேதனையினுடைய அனுபவத்தைக் கற்பித்த தென்கிறது குறையற்ற ஞாயத்துக் கொத்திருக்கிறதுந் தவிர பாவத்திலே மனுஷனானவன் துணியாததுக்கு மேலான வுத்தம வுபாயத்தினாலே கர்த்தன் விலக்கினானென்று சொல்லத்தகும். மீளவு மொருக்காலும் ஒழியாத அனந்தமாய்த் திருத்திக் கொடுக்கிற சந்தோஷமுமா யிருக்கிற குறையற்ற பாக்கிய மென்கிற மோக்ஷத்தைத் தருமபாரகருக்குக் கொடுப்பேனென்று கர்த்தரானவர் திருவுளம்பற்றின போதே மனுஷனானவன் பிரயாச மென்னப்பட்ட யாவையுஞ் சட்டைபண்ணாமற் சகல நிர்மல புண்ணியவழியிலே யிடைவிடாமல் மரணபரியந்தம் நடக்கிறதுக்குச் சஞ்சலமில்லாமற் கெட்டியுள்ள மனதை மனுஷனானவன் அடைகிறதுக்கு மேலான வுத்தம வுபாயத்தைக் கர்த்தன் பண்ணினானென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட ஞாயமுள்ள வுபாயமானது ஒன்றான சர்வேஸ்வரனுக்குண்டா யிருக்கிற சகல நன்மையான சுபாவத்தினுடைய மேலாக்கேற்றிருக்கிற தென்பேருமையினாலொப்பச் சொல்லலாம்.

அதேதென்றால் நீதிபரனான ராசாவானவன் நன்றாயி ராச்சியம்பண்ண வேணுமானாற் பாவம் பண்ணினபேர்களைக் காக்கினையிடவும் நன்றாய் நடக்கிற புண்ணியபாரகருக்குச் சம்பாவனை கொடுக்கவும் வேணும். இது ராச்சியம் பண்ணுகிறதுக்கு முக்கியமாயிருக்கையிலே கொலைபாதக முதலான மகாமகாப்பட்ட பாவங்களைப் பண்ணுகிற பேர்களுக்குச் சிறிது காலமாத்திரஞ் சிறைசாலையிலே போடுவித்துக் கொஞ்சத்துக்குள்ளே அடிப்பித்துராச்சியத்திலே திரியச்சொல்லிவிட்டா லிப்படிப்பட்ட சொற்பாக்கினைக்குப் பாவியானவன் பயப்படாமலிருக்கிறதினாற் கொலைபாதக முதலான மகாமகாப்பட்ட பாவங்களைப் பண்ணுகிறதுக்குத் துணியதவனோ? மீளவும் ராசாவின் சித்தத்துக்குச் சரியாக நடக்கவேணுமென்று மிகவும் பிரயாசைப்பட்டு அவனுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிற புண்ணியவான்களான பேர்களுக்குப் பத்தஞ்சுகாசு மாத்திரஞ் சம்பாவனை கொடுத்துச் சிறிதுகாலமாத்திரம் பல்லக்கேறவுந் துரைத்தனத்தை யாளவுங் கட்டளையிட்டால் ராசாவின் காரியத்துக்கு மிகவும் பிரயாசைப்படுகிறதுக்கும் ராசாவுக்காகத் தனது பிராணனைச் செலவழிக்கிறதுக்கும் ஒப்பிக்கிறவனோ? ஆனபடியினாலே ராச்சியம் பண்ணுகிறதிலே யிப்படிப்பட்ட நீதியானது ஆனபிரகாரமாய்ப் பாவங்களை விலகி அவனவனுக்குப் பாவத்தினிடத்திலே மனசு வராப்படிக்குப் பழுதற வுபாயத்தைப் பண்ணுகிறதினாலேயும் அவனவன் பிரயாச மென்னப்பட்ட யாவையுந் தனது பிராணனையுஞ் சட்டைபண்ணாமற் புண்ணியமாகிற நல்ல ராசாவின் சித்தத்துக்குச் சரியாய் நடக்கிறதுக்குக் கெட்டி மனசு அவனவனுக்கு வரப்பண்ணுகிறதினாலேயும் ராச்சியம் பண்ணுகிறதிலே யிப்படிப்பட்ட நீதியானது நல்லதா யிருக்கிறதென்று சொல்லத்தகாது.

அத்தன்மை போல மகாராசாதி ராசனாயிருக்கிற சர்வேஸ்வரனானவர் கொலைபாதக முதலான மகாமகாப்பட்ட பாவங்களை மனுஷனானவன் பண்ணித் துலையப்பண்ணத்தக்க ஸ்தலமாகிற யிந்தப் பூமியிலே பாவங்களைத் துலையப்பண்ணாமல் அனுபவத்துக்கான ஸ்தலமாகிற பரலோகத்தைப் பாவியானவனடைந்து சிறைசாலையாகிற நரகத்திலே பாவியானவனைக் கர்த்தரானவர் சிறிது நாள்மாத்திர மிருக்கக் கட்டளையிட்டாற் பாவங்களுக்காக நாய் கழுதை முதலான பலபல ஜென்மங்களை யெடுக்கப் பண்ணினாலொக்கே ராசாவானவன் மகாமகாப்பட்ட பாவங்கள் நிமித்தமாகக் கள்ளனைச் சிறைசாலையிலே சிறிது நாள் போடுவித்துங் கொஞ்சத்துக்குள்ளே யடிப்பித்துந் திரும்பக் கள்ளன் பாவங்களைப் பண்ணுகிறதுக்கு ராச்சியத்திலே யவனைத் திரியச்சொல்லிவிட்டதுக்குச் சமானமாகும். இது தவிர மனுஷனானவன் பயப்படாம லெக்கெத்துப் பாவத்தைப் பண்ணத்தக்கதாகத் துணிகிறதுக்கு அது உதவி செய்கிற நீதியென்று சொல்லத்தகும்.

ஆனால் ராசாவானவன் கனபாவங்களைப் பண்ணுகிறபேர்களை அனகாலத்திலே தலை வெட்டுவித்தால் தனது ராச்சியத்திலே அப்படிப்பட்ட பாவி யொருக்காலும் வராதபடிக்குக் கட்டளையிட்டதுக்குச் சமானமாம். ராச்சியம் நடக்கிறதிலே யிப்படிப்பட்ட நியாயமானது மிகவும் நல்லதாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் ராச்சியத்திலுள்ள ஜனங்களுக்குள்ளே சிலர் பாவிகளாய்ப் போனார்களானால் அவர்களை ராச்சியத்திலே யிராதபடிக்குப் பண்ணினதென்கிறது தப்பில்லாக் கிரமமுள்ள தருமமென்று சொல்லப்படும். இதன்றியே யிருக்கிறபேர்கள் பயப்பட்டுப் பாவத்தைப் பண்ணத் துணியாததுக்கு இது பண்ணப்படத்தக்க வுத்தம வுபாயமாகும். அப்படிப்பட்ட வுபாயமானது குறையற்ற ஞாயத்துக் கேற்றிருக்கிற புண்ணியமென்று சொல்லத்தகும். இது இப்படியிருக்கையிலே தயாபரனான கர்த்தரானவர் மனிதர் மோக்ஷத்தை யேறவேணுமென்று அவர்களை யுண்டாக்கினபோதே மோக்ஷராச்சியமானது மனுஷனானவன் குறையற்ற பாக்கியத்தை யென்றென்றைக்கும் அனுபவிக்கிறதுக்கான ராச்சியமென்று சொல்லத்தகும். ஆதலாலே அதை மனுஷனைப் போதுஞ் சுகத்திலே யிருக்கிறதுக்கான ராச்சியமென்று சொல்லவேணும். கனபாவங்கள் நிமித்தியமாக அப்படிப்பட்ட மோக்ஷராச்சியத்திலே பாவியானவனொருக்காலும் வரவேண்டாமென்று சொல்லி அவனைக் கர்த்தரானவர் நரகத்திலே எப்போதுமிருக்கத் தள்ளுகிறதென்கிறது லௌகிகராசாவானவன் கள்ளனைத் தலைவெட்டித் தனது ராச்சியத்திலொருக்காலுமவன் வரவேண்டாமென்று கட்டளையிட்டதுக் கொக்கும். இப்படிப்பட்ட தருமமானது குறையற்ற நீதியென்று சொல்லப்படுமாப்போலே கர்த்தரானவர் பாவியானவனை யென்றென்றைக்கும் நரகத்திலே யிருக்கப்பண்ணுகிற தென்கிறது பழுதற்ற நீதியென்றுந் தப்பில்லாக் கிரமமென்றுஞ் சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் தர்மமென்னப்பட்ட யாவிலேயும் ஸ்திரமான நிலைகொண்ட மனசுள்ளபேர்களுடைய ராச்சியமாகிற மோக்ஷத்தில் நின்று அருவருப்புள்ள பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ள பாவிகளைத் தள்ளினதென்கிறது குறையற்ற ஞாயத்துக் கேற்றிருக்கிற கிரமமாகுமென்று சொல்லத்தகுமென்கிறதுக்குத் தப்பாது.

இதன்றியே பூமியிலேயிருக்கிற மனுஷரானவர்கள் பயப்பட்டு யிப்படிப்பட்ட கிரமத்தினாலே பாவமென்னப்பட்டதெல்லாத்தையும் வெறுக்கிறதுக்கு நல்லமனசுண்டாகவும், பாவத்தைப் பண்ண அவனவன் துணிகிறதை யிந்த வுபாயமானது தடுக்கவும் கூடுமொழிய அதுக்குதவி செய்யமாட்டாது. ஆனபடியினாலே கனபாவத்தோடே மரணத்தையடைந்தபாவியானவனைக் கர்த்தரானவ ரென்றென்றைக்கும் நரகத்தினொழியாத வக்கினிக்குள் அவியாமல் முழுகியிருக்கப்பண்ணுகிற தென்கிறது குறையற்ற நீதியாயிருக்கிறதென்று சொல்லவேணுமொழிய யிதுகர்த்தனுடைய தயைக்கேற்றிராத மேலாயா யிருக்கிறதென்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே பலன்பெறத்தக்க ஸ்தலமாகிற பூமியானது தயைக்கான ஸ்தலமென்றுசொல்லப்படுமென்றிருக்கையிலே கர்த்தரானவர் பூமியிலேயிருக்கிற மனுஷனானவன் பாவம்பண்ணாதபடிக்கான திவ்விய சகாயங்களைமனுஷனுக்குப்பண்ணிக்கொண்டு வருகிறதென்கிறதும் மனிதன் பண்ணின பாவங்களைப் பொறுக்கிறதென்கிறதுந் தயை பண்ணத்தக்க ஸ்தலமாகிற பூமிக்கொத்திருக்குமென்கிறதினாலப்படிப்பட்ட நீதியானது குறையற்ற நீதியென்று சொல்லப்படும். அதேதென்றால் தயையானது காட்டப்படத்தக்க ஸ்தலத்திலே காட்டப்படுதொழிய மற்றப்படியல்ல. ஆனால் பரலோகமானது பேறுபெற்றதுக்கான பலனை யனுபவிக்கத் தக்க ஸ்தலமா யிருக்கக் கொள்ள பாவத்தோடே கூடப்பரலோகத்தையடைந்த பாவியானவன்தான் பண்ணின பாவங்களிலே நிலைகொண்ட மனசுள்ளவனா யப்படிப்பட்ட பாவங்களுக்குத் தக்கபலனை யனுபவிக்கிற ஸ்தலத்திலே யிருக்கிறபோ தென்றன்றைக்கும் பாவியானவன் அக்கினையை யனுபவிக்கிறது குறையற்ற

ஞாயமென்று சொல்லவேணு மொழியத் தகையக் கேற்றிராத மெய்யாயிருக்கிறதென்று சொல்லக்கடவதல்ல. இந்தடைவிலே தேவவிஷயக பத்திமுதலான...ங்களோடே கூ மரணத்துக்கு நிச்சயதமாகப் பரலோகத்தை யடைந்த புண்ணியாத்துமாக்களா யிருக்கிற பேர்கள் அவரவர்கள் பேறுபெற்றதுக்கான பலனை யனுபவிக்கிற ஸ்தலத்தை யடைந்தார்களென்கிறதினலே அவர்கள் பண்ணின புண்ணியத்துக் கொத்த வென்னங் குறையற்ற பாக்கியமுந் திருப்தியைக்கொடுக்கிற ஆனந்தமுமென்கிற மோக்ஷத்தை யென்றென்றைக்கு மனுபவிக்கிறதென்கிறது பழுதற்ற ஞாயமென்றுசொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

அதெப்படி யென்றால் விளைக்கிற குடியானவனுக்குப் பயிர்விளைத்தியாகத் தக்கதாகச் சர்வேஸ்வர னவர் தண்ணீர் வெயில் முதலான சகாயங்களைப் பண்ணுகிற தென்கிறது கிரமமாகும். அறுப்புக்கால முண்டா யவனவன் விளைத்ததுக்குத் தக்கதாகக் கோதும்பையானாலும் விஷமாகிற எட்டிப் பழமானாலு முள்ளானாலு மவனவன் விளைத்ததுக்குத்தக்க பலனைப் அவனவன் பாதிக்கிறதுக்குக் கர்த்தரானவர் திருவுளமாகவேணுமொழியக் கோதும்பை விளைத்தவனை முள்ளும் எட்டிப் பழமும் அவர் பாதிக்கப் பண்ணத்தக்கதுமில்லை. முள்ளும் எட்டியும் விளைத்தவனைக் கோதும்பையைப்பாதிக்கப்பண்ணத்தக்கது மில்லை. இது யிப்படி யிருக்கையிலே பூலோகத்திலே மனுஷனானவன் வாழ்வாயிருந்து பாவி புண்ணியத்தைப் பண்ணிக்கொண்டு வருகிற தென்கிறது விளைத்துப் பயிரேற்றுகிற துக்குச் சமானமும் மரண காலமோவென்றால் அறுப்புக்கால மென்றுஞ் சொல்லப்படும். இப்படிப்பட்ட மரணமானது மனுஷனுக்கு முடிவாகி யிருக்கக்கொள்ள முன் பண்ணப்பட்ட விளைப்பும் பயிரேற்றமு மறுப்புந் திரும்பவரக் கூடாதென்று சொல்லக்கடவது. பரலோகமோ வென்றால் விளைத்ததுக்குத் தக்கப்பலனுடைய அனுபவமாகும். அது அவதியா யிருக்கக்கொள்ள அதுமுடியத் தக்கதுமில்லை. அதை யடைந்த மனுஷனைவிட்டுப் பிரியத் தக்கதுமில்லை. அதேதென்றா லவதிக்கும் அதுக்குப் போகிறவழிக்குங் காணப்பட்ட வேற்றுமையானது துலைகிற தென்கிறது வழிக்கான மேரையாகும். என்றென்றைக்குஞ் சஞ்சலமில்லாமல் நிலையாக நிற்கிற தென்கிறது அவதிக்கான சுபாவமென்று சொல்லத்தகு மொழிய மற்றப்படியல்ல. இதெல்லா மிப்படி யிருக்கையிலே பாவத்தைப் பண்ணின மனுஷனானவன் முள்ளையு மெட்டியையும் விளைத்தா னென்றும் புண்ணியத்தைப் பண்ணினவன் கோதும்பையை விளைத்தானென்றுஞ் சொல்லக்கடவோம். முள்ளை விளைத்த பாவிக்குங் கோதும்பை விளைத்த புண்ணியவானுக்கு மறுப்புக் காலமாகிற மரணகாலம் வந்ததானா லப்படிப்பட்ட மரணமாகிற அறுப்புக்குப் பிற்பாடு அவனவன் விளைத்ததுக்குத் தக்க பலனைக் கர்த்தரானவ ரனுபவிக்கப் பண்ணுகிற தென்கிறது குறையற்ற ஞாயமுள்ள கிரமமாகும். இப்படிப்பட்ட அனுபவமானது வழியாயிராம லவதியா யிருக்கக் கொள்ள யென்றென்றைக்கும் நிலையாக நிற்குமென்று சொல்லக்கடவோம்.

அவ்வண்ணமே நரகத்திலே விழுந்தபாவிகளை அதிலுண்டாயிருக்கிற அக்கினிக்குள் ளென்றென்றைக்கும் உபாதையை யனுபவிக்கத் தக்கதாகக் கர்த்தரானவர் பண்ணுகிற தென்கிறது அவருடைய முடிவில்லாத நீதிக்கு மவர்களடைந்த ஸ்தலத்தின் சுபாவத்துக்கு மேற்றிருக்கிறதுக் தவிரப் பாவிகளானபேர்கள் முடிவில்லாத மகிமையுள்ள கர்த்தனை நிந்தை பண்ணினதினலே அவர்கள் கட்டிக்கொண்ட முடிவில்லாத பாவத்துக் கொத்திருக்கிற முடிவில்லாத யாக்கினையை யனுபவிக்கிற தென்கிறது குறையற்ற ஞாயமா யிருக்கிறதென்று சொல்லத்தகும். இந்தடைவாகப் புண்ணியம் பண்ணினபேர்களுக் கொருக்காலும் முடியாத ஆனந்தமென்கிற மோக்ஷத்தைக் கர்த்தன் கொடுத்தருளுவாரென் றங்கீகரிக்கிறபோது பூமியிலே ஜீவிக்கிறகாலமெல்லாம் அற்பகாலமா யிருக்கக்கொள்ள இப்படிக் கொத்த அற்பகாலத்திலே

புண்ணிய வழியிலே நடக்கிறதுக்குப் பாரமான பிரயாசத்தை யனுபவிக்க வேண்டினாலு மொருக்காலும் முடியாத பாக்கியத்தை யடைகிறதுக்குப் பிரயாச மென்னப்பட்ட யாவையு மனுஷன் சட்டை பண்ணும லிருப்பான். அப்படியே யொருக்காலு முடியாத ஆனந்தத்தோடேயுந் திருப்தி கொடுக்கிற சந்தோஷத்தோடேயு மிருக்கிறதுமா யென்றென்றைக்கும் நிற்கத்தக்கதுமா யிருக்கிற பிழைப்பைப் புண்ணியவழியிலே நடக்கிறவர்களுக்குக் கர்த்தரானவர் கொடுப்பாரென் றேற்றுக்கொள்ளுகிறபோது லோகத்திலுள்ள செல்வமென்னப்பட்ட யாவையும் ஐஸ்வரியமென்னப்பட்ட செல்லாத்தையுஞ் சகல சுகத்தையும் லௌகீகபெருமையு மனுஷனானவன் கனமாயெண்ணமற் குறையற்ற பாக்கியமுமாய் நித்திய சீவனுமாயிருக்கிற மோக்ஷத்தைப் பெறுகிறதுக்கு அதெல்லா மண்ணாங்கட்டிபோலே யெண்ணி யெளிதாய்விட்டு விடத்தக்கதாக மனுஷன் துணிகிறதுக்குக் குறையற்ற ஞாயமுண்டென்று சொல்லத்தகும்.

மனுஷனாலே பண்ணப்படுகிற புண்ணியங்களுக்கு வருகிற ஜென்மத்திலே சிறிதுநாள் மாத்திரம் பாக்கியத்தைக் கர்த்தரானவ ரனுபவிக்கப் பண்ணுவாரென்று அங்கீகரித்தோமானா லிப்போது புண்ணிய மென்னப்பட்ட யாவையும் மனுஷன் பண்ணத்தக்கதாகத் துணிகிறதுக்குக் கணக்கில்லையென்று காண்பிக்கிறது. அதேதென்றால் தனது மனசையும் ஆசையையும் நிக்கிரகம் பண்ணாமல் வேறே பலபல பிரயாசங்களைப்படாமற் புண்ணியம் பண்ணக்கூடா தென்கிறதுக்குத் தப்பாது. வருகிற ஜென்மத்திலே சிறிதுநாள் மாத்திரம் பாக்கியத்தை யனுபவிக்கிறதுக்கு யிப்போ சிறிதுநாள் சுகத்தை யனுபவியாமற் பிரயாசங்களையுங் கஸ்திகளையும் மனுபவிக்கவேணும்.

இதெல்லா மிந்தடைவிலே தெளிவாகக் கண்டுபிடிக்கலாம். இப்போ தெனக்குண்டான அயிஸ்வரியங்களைப் பலபல தானங்களைப் பண்ணுகிறதிலே செலவழித்தேனானால் இனிமேல் வருகிற ஜென்மத்திலே அயிஸ்வரியவானா யிருப்பேன். இதன்றியே தானங்கள் நிமித்தமாகச் சில பாவங்கள் துலைந்துபோய்த் தாரித்திர முதலான கஸ்திகளை வருகிற ஜென்மத்திலே யனுபவியாமலிருக்கலாமென்று அங்கீகரிக்கத்தக்க விசேஷமாகும் ஆகட்டும் யிப்போதென் கையிலே யிருக்கிற அயிஸ்வரியமானது காணப்பட்ட அயிஸ்வரியமென்று சொல்லப்படும். இனிமேல் வருகிற ஜென்மத்திலே வரத்தக்க அயிஸ்வரியங் காணப்படவில்லையே. இதுதவிர யெனக்கது வருமென் றேற்றுக் கொள்ளுகிறதுக்கு ஞாயங்காணுது. அப்படிப்பட்ட அயிஸ்வரியம் வந்தாலிந்தச் ஜென்மத்திலே யிந்த அயிஸ்வரிய மென்கையிலே யிருக்குமாப்போலே வருகிற ஜென்மத்திலே சிறிதுநாளென்கையிலே யிருக்குமொழிய மற்றப்படியல்ல. இது இப்படியிருக்கையிலே வருகிற ஜென்மத்திலே சிறிதுநாள் அயிஸ்வரியத்தை நானனுபவிக்கிறதுக் கிந்தச் ஜென்மத்திலே நானனுபவிக்கிற அயிஸ்வரியத்தை அனுபவியாமலிருக்கவேணும். இதன்றியே யென்னுடைய திரவியத்தை நான் செலவழியாதிருந்தால் இந்தச் ஜென்மத்திலே தாரித்திர கஷ்டத்தை அனுபவிப்பேன். இதிப்படி யிருக்கையிலே வருகிற ஜென்மத்திலே சிறிதுநாள் மாத்திரம் தரித்திர கஷ்டத்தை அனுபவியாம லிருக்கிறதுக்கு இப்போது சிறிதுநாள் தரித்திர கஷ்டத்தை அனுபவிக்கத் துணிகிறதுக்கு நன்றாய்ப் பத்தும் பத்தாய் விசாரிக்கிறவன் ஞாயத்தைக் காணமாட்டான். இந்தடைவாகவருகிற ஜென்மத்தின் பலத்தை யனுபவிக்கிறதுக்குப் பண்ணத்தக்க மற்றுண்டான தருமங்களிலே யோசிக்கக்கடவோம்.

ஆண்டவன் திருவுளம்பற்றின வேதத்தை அங்கீகரிக்கிற ப...த்துமாக்கள் பேரிலே அத்தனை அபத்தங்களைச் சுமத்துகிறதுக் கிடங்காணமாட்டாது. அதேதென்றால்

...துமான தும்மாய் ...க்ஷேத்திரமாயுமா யொருக்காலு முடியாததுமா யிருக்கிற பாக்கியமாகிற மோக்ஷத்தி னிமித்தமாக மிகவுஞ் சொற்பமானதுமா யெண்ணப்படாத குறைகளுள்ளதுமாய் க்ஷணநேரத்திலேமாத்திரம் நிற்கத்தக்கதுமாயிருக்கிற செல்வத்தைத் தேங்கள் விடுகிறதொழிய மற்றப்படியல்ல அப்படிப்பட்ட சொற்பசெல்வத்தையடைவாகச் சட்டைபண்ணுகிற புண்ணியவான்களுக்குக் குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷமானது கிடைக்குமென்று அற்ப சந்தேகமில்லாமல் லொப்புக்கொள்ளுகிறதுக்கு மகாமகாப்பட்ட ஞாயங்களுண்டென்கிறதுக்குத் தப்பாது. இதெல்லா மோக்ஷத்தின் இலக்ஷணத்தைச் சொல்லுகிறபோது துலக்கமாக வெளியாகுமே இப்போதைக்கு மறுஜென்ம மில்லாமற் கர்த்தரானவர் பாவிகளுக்கு முடிவில்லாத நரகத்தையும் புண்ணியவான்களுக்கு முடியாத ஆனந்தமென்கிற மோக்ஷத்தையுங் கட்டளை யிடுவாரென்கிற அடைவானது கர்த்தனுக்குண்டான முடிவில்லாத் தன்மையாகிற சுபாவத்தின் சேனைக்கு யேற்றிருக்கிறதென் றொப்புவிக்கப்பட்டது போதும். கர்த்தனுடைய மேனைக் கேற்றிருக்கிற யிந்தடைவுக்கு மறுஜென்மமானது கேவலம் விருத்தமா யிருக்கக்கொள்ள மறுசென்மமானது மனுஷராலே வெறுமனே கற்பிக்கப்பட்ட கதையென்று சொல்லவேணு மொழிய ஒப்புக் கொள்ளத்தக்க சத்திய விசேஷமா யிருக்கிறதென்று சொல்லவு மெண்ணவுங் கூடாது.

௰அ-ம் பாடம்.

புநர்ஜென்ம அங்கீகாரமானது பத்தும்பத்தாய் விசாரிக்கப் பட்டால் அது முழுத் தப்பறையா யிருக்கக்கொள்ளச் சிறிது விஷயங்களிலே லௌகிக ஆசாரத்துக்கு முதலாய் மகா விருத்தமா யிருக்கிறதென்று கண்டுபிடிக்கலாம். இது வெளியாகும்படிக்கு மறுஜென்மத்தை யிவர்களங்கீகரிக்கிற அடைவை யாராய்ந்துகொண்டு அப்படிப்பட்ட அங்கீகாரத்தில் நின்று வருகிற யெக்கச்சக்கமான விசேஷங்களை வெளிப்படுத்தக் கடவோம். அதெப்படியென்றால் லெண்ணப்படாத உயிருள்ள பொருட்களிடத்திலே சீவனென்றே யொன்று சொல்லுவார்கள். அன்படியினாலே ஞான முடைத் தானதுமா யழியாததுமா யெந்நென்றைக்கும் நிற்கத்தக்க பொருளுமா யிருக்கிற சீவனானது கிரகத்திலே குடியா யிருக்கிறவன் போலே கிரமமாகிற சரீரத்திலே வாசமாயிருக்கிற தொழிய மற்றப்படியல்லவென்று சொல்லுவார்கள். அவ்வண்ணமே மனுஷனுடைய சரீரமாகிற கிரகத்திலே யிப்போதிருக்கிற சீவனானது நாய் நரி கழுதை பன்றி முதலான சகல மிருகாதிகளுடைய சரீரங்களாகிற கிரகங்களிலே பூர்வ காலங்களிலே வாசமாயிருந்ததென்றும் இனிமேல் வாசமாயிருக்கப் போகிறதென்றும் அங்கீகரித்துக்கொண்டு வருகிறார்கள். இதுவும் போதாமல் அந்தச் சீவனானதானது சகல மிருகாதிகளுடைய சரீரமாகிற கிரகங்களிலே வாசமா யிருக்குமாப் போலே சகலமரங்கள் முதலான செடி புல்லுகளுடைய காணப்பட்ட சரீரங்களாகிற கிரகங்களுக் குள்ளே வாசமாயிருக்கிறதென்று அங்கீகரிக்கிறார்கள். இப்படியே போகப்போக யதிகமதிகமாய் மதிகெட்டவர்களாய்ப் போகிறதினால் மனுஷனுடைய சீவனானது கல்லாய் இரும்பா யிதுமுதலான பதார்த்தங்களா யிருக்கிறதென்று லெச்சை யில்லாமற் சொல்லிச் சிறிது பிரபந்தங்களைக் கட்டிப் பாடிக்கொண்டு வருகிறார்கள்.

இந்தடைவா யங்கீகரிக்கப்பட்ட மறுஜென்ம வர்த்தமானத்திலே யடங்கியிருக்கிற பல பல வியர்த்தங்களைதகளை முன்சொன்ன மூன்று பாடங்களிலேயுஞ் சொல்லப்படுகிற ஞாயத்திலேயே புத்தியோ டிருக்கிறவன் கண்டு பிடித்துப் புநர்ஜென்ம வர்த்தமானத்தை யங்கீகாரம் பண்ணத்தக்கதாக லெச்சைப்படுவா னென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் நாய்க்குங் கழுதைக்கு முண்டான பேதமாத்திரந் தனக்கும் நாய் முதலான மிருகங்களுக்கு முண்டென்று சொல்லக்கூடு மொழிய, அதிகவேற்றுமை யுண்டென்று அவர்கள் சொல்லக்கூடாது. அதெப்படி யென்றால், நாய்க்குங் கழுதைக்குஞ் சரீரபேத முண்டென்று யவர்கள் சொல்லுகிறாப்போலே மனுஷனுக்கு நாய்க்குஞ் சரீரபேத மொழிய வேறே யதிக வேற்றுமை யில்லை யென்றங்கீகரிக்கவேணும். அவ்வண்ணமே மனுஷனுக்குண்டான புத்தி ஞான சுவாதந்திரியமுள்ள மனதை யுமிதனாலே மனுஷனுக்கு வருகிற பெருமையு மொன்றுக்கு மதெல்லாம் நாய் கழுதை முதலான மிருகாதிக ளிடத்திலேயுண்டா யிருக்கிறதென்று சொல்லுகிறதுந் தவிர அப்படிப்பட்ட ஞான முதலான பெருமைகள், முதலானதுகள் மரங்கள் முதலான செடி புல்லுக ளிடத்திலேயுங் கல்லுமுதலான சடபதார்த்தங்க ளிடத்திலேயு முண்டா யிருக்கிறதென் றங்கீகரிக்க வேணும். ஆனால் புத்தி ஞான முதலான மகிமைகளானவைகள் நாய்கழுதை முதலான மிருகாதிகளுக்குங் கல்லு முதலானதுகளுக்கு முண்டென்கிறதுக் கொருஞாயமொரு லக்ஷணமுண்டாயிராம லப்படிப்பட்ட வஸ்துக்க ளிடத்திலே யந்தமகிமைக ளில்லை யென்கிறதுக்கும் பல பல பிரத்தியக்ஷ ஞாயங்க ளுண்டா யிருக்கிறதினால் நாய் கழுதை யிதுமுதலான மிருகாதிக ளிடத்திலேயு மற்றுண்டான பதார்த்தங்க ளிடத்திலேயு முண்டென்று சொல்லுகிறவன் கேட்கிறபேர்கள் சிரிக்கிறதுக் கிடங்கொடுத்துத் தான்றன்னோ டறுமைக்கிடானவைக் காட்

ட்டினும் மதிகெட்டவ னென்று காட்டுவா னொழிய மிருகாதிகளுக்கும் மனுஷனுக்குஞ் சரீரபேதமாத்திர முண்டென்றும் மிருகாதிகளிடத்திலேயுங் கற்களிடத்திலேயும் புத்திஞான முதலான மகிமைகளுண்டென் றொப்புவிக்க மாட்டானென்கிறதுக்குத் த[illegible]து.

இது தவிர ராசாவானவன் அரமனையிலே யிருக்கிறபோது அவனை யாதொருத்த னடித்து அரமனையில் நின்றோட்டினால் மகாமகாப்பட்ட பாவங்கட்டிக் கொண்டானென்று சொல்லவேணும். அப்படிப்பட்ட இராசாவானவன் வேறேயொரு வீட்டிலேயாகிலுங் குச்சிலென்கிலு மிருக்கும்போது அவனையடித்து யிருக்கிற வீடு குச்சு இதுகளிலே யிருக்கவொட்டாமல் யாதொருத்தன் தள்ளிவிட்டால் அரமனையில் நின்று ராசாவைத் தள்ளினவனும் அந்த வீடுகளிலே யிருக்கிற இராசாவை அடிக்கிறவனுந் தள்ளுகிறவனு மிவர்களிருவருஞ் சரியாகச் சுவாமித் துரோகத்தைக் கட்டிக்கொள்ளுவார்களொழிய மற்றப்படியல்ல. அத்தன்மைபோல் மனுஷனிடத்திலே யிருக்கிற மகாராசாவான சீவனானது ஆடு கோழி இது முதலான மிருகங்களுடைய சரீரங்களிலேயுங் கீரை முதலான செடிகளிலேயும் வாசமாயிருக்கிறதென்று அங்கிகரித்தோமானால் மனுஷனுடைய சரீரமாகிற அரமனையில் நின்று மகாராசாவாயிருக்கிற சீவனைத் தள்ளுகிறவன் மகா கொலைபாதகத்தைக் கட்டிக் கொள்ளுகிறானென்று சொல்லப்படுமாப்போலே ஆடு கோழி இது முதலான மிருகங்களுடைய சரீரங்களாகிற கிரகங்களிலே மகா இராசாவாயிருக்கிற சீவனையடித்துத் தள்ளுகிறவன் கொலைபாதகங் கட்டிக்கொண்டா னென்று சொல்லக்கடவோம். இதன்றியே மகா ராசாவாயிருக்கிற சீவனானது தானே கீரைக்குள்ளேயுங் கல்லுக்குள்ளேயு மிருக்கிறதென்று அங்கிகரிக்கிறபோது கீரை அறுக்கிறதினாலேயுங் கல்லைச் சுண்ணாம்பாய்ச் சுடுகிறதினாலேயு மப்படிப்பட்ட ஸ்தலங்களிடத்திலேயிருக்கிற மகா இராசாவான சீவனை அந்தந்த ஸ்தலங்களிடத்திலே நின்று தள்ளிப் பாதிக்கிறவ னெப்போதுங் கொலைபாதகங் கட்டிக்கொண்டு வருகிறானென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. இந்தவகையாக யிவர்களாலே புண்ணியமென் றங்கிகரிக்கப்பட்ட எக்கிய மென்னப்பட்ட தெல்லாத்திலே மகா இராசாவாயிருக்கிற சீவனானது மிருகாதிகளுடைய சரீரமாகிற கிரகத்தினின்று தள்ளப்படுகிறதினால் அதெல்லாங் கொலைபாதகமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

இந்த ஞாயத்தினுடைய வலுமையைச் சிலபேர்கள் கண்டுபிடித்து அதுக்குப் பிரத்தியுத்தரமாகப் போம்வழியை யறியாமல் வேறே யோரபத்தத்தைக் கற்பித்தார்கள் அதேதென்றால் * "அஹிம்ஸா பரமோ தர்ம:, அதர்ம: ப்ராண[illegible]ம்வது:" என்கிற வாக்கிய முதலான அத்தொகைப்பட்ட அனேகம் வாக்கியங்களினாலே அந்தந்தச் சரீரத்திலே சீவனொன்றே வாசமாயிருக்கிற பக்ஷத்தைச் சம்மதித்து மனுஷனையாகிலு மிருகாதிகளையென்கிலுஞ் சம்மதித்துக் கொல்லுகிற தென்கிறது சரிபாவமா யிருக்குமென்று சொல்லுகிறார்கள். இதுவும் போராமல் மனுஷனுடைய சீவனானது புல் செடி விருக்ஷங்கள் இவைகளுக்குள்ளே யுண்டாயிருக்கிறதினால் கீரை முதலான வஸ்துக்களை யறுக்கிறதும் அரைக்கிறது மிடிக்கிறதும் வேகவைக்கிறதும் கடிக்கிறதும் இந்த அஞ்சுபாவங்கள் மனுஷனாலே எப்போதும் பண்ணிக்கொண்டு வரப்படுகிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள்: அதற்கான பிராயச்சித்தங்கள் விதிக்கப்படுகிறது அவ்வண்ணமே யிப்படிக் கொத்த பக்ஷத்தை யனுசரிக்கும்போது மகா பாவங்களில்லாமல் மனுஷனானவன் பக்ஷணங்களைப் பக்ஷித்துப் பிழைக்க மாட்டானென்னு சொன்னாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே மனுஷனுடைய சீவன் அந்தந்த மிருகாதிகளுடையசரீரங் களுக்குள்ளேயுங் கீரைக்குள்ளேயு மிருக்கிறதென்று அங்கி

கரித்தோமானால் அவன் தனது சாதியினுடைய ஆகாரத்தைக் கூட்டுகிறதினால் பிராமணனானாலுஞ் சூத்திரனென்கிலுங் கொலைபாதகங் கட்டிக்கொள்ளுகிறானென்று சொல்லக்கடவது. அவ்வண்ணமே சகல சரீரங்களிலே யிருக்கிற சீவன்களானவைகள் சுபாவத்திலே வேற்றுமை யில்லாதவைகளா யிருக்கிறதென்கிற பக்ஷத்தை யங்கீகரிக்கும்போது யிப்படிப்பட்ட அபத்த விசேஷங்களை அங்கீகரிக்க வேணுமென்கிற தினால் சகல சரீரங்களிலே சுபாவத்தின் வேற்றுமை யில்லாமல் ஒரே சீவனாயகனிருக்கிற தென்கிற பக்ஷமானது முழுத் தப்பறையென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

அதேதென்றால் ஒரு சத்திய விசேஷத்தின் அங்கீகாரமானது வேறே யொரு சத்திய விசேஷத்தின் அங்கீகாரத்தைப் பிறப்பிக்குமொழிய அதில் நின்று தப்பறை விசேஷத்தி னங்கீகாரமானது பிறப்பிக்கமாட்டாது. அத்தன்மைபோல ஒருதப்பறை விசேஷத்தின் அங்கீகாரமானது வேறொரு தப்பறை விசேஷத்தின் அங்கீகாரத்தைப் பிறப்பிக்குமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட தப்பறை விசேஷத்தின் அங்கீகாரத்தில் நின்று சத்திய விசேஷத்தின் அங்கீகாரமானது பிறக்கிறதென்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே மனுஷனுக்கும் நாய்க்குஞ் சரீர வேற்றுமை மாத்திர முண்டென்று யிரண்டு மனுஷருக்குள்ளே யுண்டான வேற்றுமையைக் காட்டிலுங் கழுதைக்கு மனுஷனுக்கும் அதிகமான வேற்றுமை யில்லையென்றும் கீரைமுதலான வஸ்துக்களை யறுக்கிறதிலேயு மனுஷனை வெட்டுகிறதிலேயு மொரே கொலைபாதகம் பலிக்கிறதென்றுங் கீரைமுதலான பக்ஷணங்களைப் பாவமில்லாமல் பக்ஷிக்கக்கூடாதென்றும் இது முதலான வேறே அபத்த விசேஷங்களுடைய அங்கீகாரமானது சகல சரீரங்களிலே யிருக்கிற சீவன்கள் சுபாவத்திலே வேற்றுமை யில்லாதவைகளாயிருக்கிறதென்கிற பக்ஷத்தினாலே வருகிறதினால் அப்படிப்பட்ட மதமானது முழுத் தப்பறையா யிருக்கிறதென்று கேட்கவேணுமோ.

இதன்றியே மனுஷனுடைய சரீரத்திலே யின்றுண்டான சீவன் நாளை நாயினுடைய சரீரத்துக்குள்ளேயும் கீரைக்குள்ளேயு மிருக்குமென்று அங்கிகரித்தோமானால் இப்படிப்பட்ட சீவனானவன் மனுஷ சரீரத்தில் நின்று பிறப்படுகிறபோது பொல்லாத ஸ்தலத்தை யடையாமல் நல்பதவியை யடையவேணுமென்று ஓம் செபதான முதலான தர்மக்கிரிகைகளை நடத்தத் தக்கதாக விதித்திருக்கிறாப்போலே யிந்தச் சீவனாயகனானவனே நாயினுடைய சரீரத்தில் நின்றுங் கீரை முதலானவைகளில் நின்றும் பிறப்படுகிற போது அது பொல்லாத ஸ்தலத்தை யென்கிலும் பொல்லாத சென்மத்தை யாகிலும் அடையாமல் நல்ல பதவியையும் நல்ல சென்மத்தையுஞ் சீவனானது அடைகிறதுக்குச் செபதான முதலான தருமங்களை விதித்திருக்கவும் வேணும். விதியாததுக்கு ஞாயமுங் காணமாட்டாது. அப்படியே நாயின் சரீரத்துக்குள்ளே யென்கிலுங் கீரைக்குள்ளே யாகிலும் புகுந்திருக்கிறவனுடைய சீவநாயகனானது அப்படிப்பட்ட ஸ்தலங்களிடத்தில் நின்று பிறப்படுகிற போது அது நல்ல ஸ்தலத்தை யடைகிறதுக்கு யாதொருத்தன் செபதான முதலான தருமக்கிரிகைகளை நடத்திக்கொண்டு வந்தால் அபத்தம் பண்ணினானென்று சொல்லக்கடவதல்ல. அவ்வண்ணமே சகல சரீரங்களிலே யிருக்கிற சீவன்கள் சுபாவத்திலே வேற்றுமை யில்லாதவைகளா யிருக்கிற தென்கிற பக்ஷத்தினாலே நாய் கழுதை இது முதலான மிருகசாதிகளுக்குங் கீரை காயுருவி யிது முதலான புற்களுக்குந் திவசம் பண்ணலாமென்று சொன்னாப்போலே யாச்சுது.

இத்தருவாயிலே யறியவேண்டின சத்தியத்தை யொப்புக் கொண்டோமானால் இப்படி அபத்தத்தையாகிலும் அங்கீகாரம் பண்ணத் தேவையில்லை. அதேதென்றால் கீரை முதலான புற்களுக்கும் நாய் முதலான மிருகங்களுக்கும் மனுஷனுக்கும் வெவ்வேறே சாதியுள்ள சீவன்களுண்டென்று சொல்லி விருக்ஷ முதலான புற்றானவைகள் வெவ்வேறே

சாதியுள்ள வஸ்த்திச் சீவன்களுள்ளவைகளா யிருக்கிறவைக ளென்றும் நாய் கழுதை முதலான மிருகஜெந்துக்களுஞ் சுபாவத்திலே வேற்றுமையுள்ள வென்னப்படாத சீவன்களை யுடைத்தானவைகளா யிருக்கிறவைக ளென்றும் மனுஷரென்னப்பட்ட யாவருமொரே சாதிக்குள்ளே அடங்கின வென்னப்படாத ஞான சீவன்களைக் கொண்டிருக்கிறார்க ளென்றும் அங்கிகரித்தோமானால் இவை முதலான விருக்ஷங்களுக்கும் நாய் முதலான மிருகஜெந்துக்களுக்கும் மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் சரீர பேதந் தவிர மிகுந்த வேற்றுமையுள்ள சீவபேத முண்டென்று சொல்லுவோ மென்கிறதினாலே மனுஷன் மனுஷன் இரண்டுக்கு முண்டான பேதத்தைக் காட்டிலும் புல் நாய் முதலான மிருகஜெந்துக்களுக்கும் மனுஷனுக்கும் அதிகமான பேதமாகிற சுபாவத்திலே மிகுந்த வேற்றுமையுண்டென்று அங்கிகரித்தாற்போலே யாகும். அதேதென்றால் மனுஷரென்னப்பட்ட யாவர்க்கும் ஒரு சுபாவத்தை யுடைத்தான சீவன்களுஞ் சரீரங்களு முண்டாயிருக்கையிலே லோக சங்கேதத்தினாலே மாத்திரஞ் சாதி பேத முண்டென்று சொல்லத்தகுமொழிய சுபாவத்திலே அசகசாத்திரமுண்டா யிருக்குமாப்போலே மனுஷன் மனுஷனிருவருக்கும் அப்படிப்பட்ட சுபாவ வேற்றுமையுண்டா யிருக்கிறதென்று சொல்லக்கூடாது. பின்னையும் புண்ணிய பாவத்தை யறியாதவைகளுமாய்ச் சரீரத்தோடேகூட அழிந்துபோகிறதுமாய்ப் பரலோக சம்மந்தமா யிருக்கிற நரக மோக்ஷத்தை யடையமாட்டாத வைகளுமா யிருக்கிற சீவன்களை யுடைத்தான புற்களு மிருக செந்துக்களும் பரலோக சம்மந்தமா யிருக்கிற நரக மோக்ஷத்தை யடையமாட்டாததினால் அப்படிப்பட்ட பொருட்களுக்காகத் திவசம் செபத்தியான முதலிய புண்ணிய தருமங்களை நடத்த வேண்டியதில்லையென்றும் நடத்தினால் வியர்த்தமா யிருக்கிறதுந் தவிரத் தப்பறை விசேஷத்தின் அங்கீகாரமாகிற பாவங்களில்லாமல் அப்படிப்பட்ட தருமங்களை நடத்தவே கூடாதென்றும் சொல்லிக் காட்டினாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே யிது அங்கிகரிக்கத்தக்க சத்தியமொழிய யிதற்கு விருத்தமான புனர்செனம பக்ஷத்தை யங்கிகரிக்கும்போது அதோடேகூட முன் சொல்லப்பட்ட தப்பறை விசேஷங்கள் முதலான வேறே யனேகந் தப்பறை விசேஷங்களை யங்கிகரிக்கவேண்டி யிருக்கிறதினால் மறுசெனம பக்ஷமானது கற்பிக்கப்பட்ட முழுத் தப்பறையென்று சொல்லக் கடவோம்.

இப்படிப்பட்ட மறுசெனம பக்ஷமானது கேவலங் கற்பிக்கப் பட்டதுமாய்க் காணப்படுகிற வேறே சிறிது ஞாயங்களுக்கு விருத்தமானதுமா யிருக்கிற தென்றெப்படிச் சொல்லிக் காட்டலாம். அதேதென்றால் மனுஷனாலே யிந்தச் செனமத்திலே பண்ணப்படுகிற கர்மமென்னப்பட்ட யாவும் பூர்வசெனமத்திலே அவனாலே பண்ணப்பட்ட கர்மங்களுக்கு மாத்திர மொத்திருக்கிற தர்மங்களா யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே பூர்வசெனமத்திலே யிருந்த மனுஷனானவன் பண்ணின கர்மங்களுக்கு ஒத்திருக்கிற கர்மங்களை மாத்திர மிந்தச் செனமத்திலே பண்ணுவானொழிய வேறே கர்மங்களைப் பண்ணமாட்டானென்று சொல்லவேணும். அல்லது பூர்வசெனமத்திலே யிவன் பண்ணின கர்மங்களுக்குத்தக்க சிறிது கர்மங்களைமாத்திர மிந்தச் செனமத்திலே யிவன் பண்ணுகிறானென்று சொல்லிப் பூர்வசெனமத்திலே பண்ணப்பட்ட கர்மங்களினாலே வராததாயிருக்கிற அனேக கர்மங்களை யிந்தச் செனமத்திலே நவமாக யிவன் பண்ணிக்கொண்டு வருகிறானென்று சொல்லவேணும். இந்த யிரண்டாம் பக்ஷத்தை யங்கிகரித்தோமானால் பூர்வசெனமத்தி னிமித்தியமாக வராத சிறிது கர்மங்களை மனுஷனானவன் இந்தச் செனமத்திலே பண்ணிக்கொண்டு வருகிறானென்று சொல்லுமாப்போலே மற்றுண்டான கர்மங்களைத் தானே பூர்வசெனமத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாகப் பண்ணாமல் அதுகளை நவமாய்ப் பண்ணுகிறானென்று சொல்லக்கடவோம், இப்படி சொல்வதினால் தோஷமென்ன.

இதெல்லா மிகவும் விளங்கும்படிக்கு நாம் நடத்துகிற ஞாயத்தை யொரு விசேஷ மனுஷன்பேரிலே யாரோபிக்கக் கடவோம். அதெப்படி யென்றால் மல்லனானவன் இருபதினாயிரங் கர்மங்களைப் பண்ணிச் செத்தான். இதிலே கேட்கத்தக்கதாவது மல்லனென்கிறவன் பண்ணின இருபதினாயிரங் கர்மங்களை யெல்லாம் பூர்வஜென்மத்திலே அவன் பண்ணின கர்மங்கள் நிமித்தமாகப் பண்ணினானென்று ஒன்றி லங்கிகரிக்கவேணும். அல்லது மல்லனென்கிறவன் பூர்வஜென்மத்திலே பண்ணின கர்மங்கள் நிமித்தமாக யிந்தச் செனமத்திலே பண்ணின கர்மங்களுக்குள்ளே பாதியாகிற பதினாயிரங் கர்மங்களை மாத்திரம் பண்ணினானென்று சொல்லி மற்றப்பாதியாகிற பதினாயிரங் கர்மங்களைப் பூர்வசெனமத்திலே மல்லன் பண்ணின கர்மங்கள் நிமித்தமாக யிந்தச் செனமத்திலே பண்ணாமல் அதுகளை நவமாகப் பண்ணினானென்று அங்கிகரிக்கத்தக்கதாகும். அவ்வண்ணமே மல்லனென்கிறவன் பூர்வசெனமத்திலே பண்ணின கர்மங்களானதுகள் இந்தச் செனமத்திலே அவன் பண்ணின கர்மங்களுடைய பாதிக்கு மாத்திரங் காரணமாயிருந்து மற்றுங் கர்மங்களுடைய பாதியானது பூர்வஜென்மத்திலே அவனாலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாக வராமல் மல்லனானவன் அப்படிப்பட்ட கர்மங்களுடைய பாதியை யொருகாரணமுமின்றி நவமாய்ப் பண்ணினானென்று அங்கிகரிக்கவேணும். இந்த இரண்டாம் பக்ஷத்தை அங்கிகரித்தோமானால் இந்தச் செனமத்திலே மல்லனானவன் பண்ணின கர்மங்களுடைய வொரு பாதிக்குப் பூர்வசெனமத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் காரணமாயிராதென்று அங்கிகரிக்குமாப்போலே மற்றக்கர்மங்களுடைய பாதியானது பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட கர்மங்கள் நிமித்தமாகப் பண்ணப்பட்டதில்லை யென்றங்கிகரிக்கலா மென்கிறதுக்குத் தப்பாது.

அதேதென்றாற் கர்மங்களுடைய வொரு பாதியிலே அங்கிகரிக்கப்படுகிற மேரையானது கர்மங்களுடைய மற்றப்பாதியிலே சரியா அங்கிகரிக்கப் படத்தக்கதா யிருக்கிறதொழிய கர்மங்களுடைய பாதிகளிரண்டி லொரு பாதிக்கு அங்கிகரிக்கப்படுகிற மேரையானது மற்றப்பாதிக்கு அங்கிகரிக்கப்படாம லிருக்கிறதுக்கு ஞாயங்காணாது. ஆதலாலே பாதிகளிரண்டுக்குஞ் சரியான மேரை அங்கிகரிக்கப்பட்டு ஞாயமுள்ள அப்படிப்பட்ட அங்கிகாரத்தினாலே பூர்வசென்ம அங்கிகாரம் வியர்த்தமா யிருக்கிறதென்றும் பூர்வஜென்மத்துக்கு யாதொரு ஞாயமுமான காரணமில்லாததினாலே அது கற்பிக்கப்பட்ட கதையாயிருக்கிற தென்றுங் காட்டப்பட்டு தொழிய மற்றப்படியல்ல.

அல்லது முதலாம் பக்ஷத்தை யங்கிகரித்து மனுஷனானவன் பூர்வசென்மத்திலே பண்ணின கர்மங்களுக் கொத்த கர்மங்களைமாத்திர மிந்தச் செனமத்திலே பண்ணுகிறானொழியப் பூர்வ செனமத்தி னிமித்தமாக வராததாயிருக்கிற வொருகர்மத்தை யானாலும் பண்ணமாட்டா னென்கிற அபத்த விசேஷத்தை யங்கிகரித்தோமானால் வேறே யொரு அபத்தத் தப்பறையை யங்கிகரிக்கவேண்டி யிருக்கிறது. அதாவது பூர்வஜென்மத்திலே புண்ணியவானா யிருக்கிறவனிந்தச் செனமத்திலேயும் வரத்தக்க ஜென்மங்களிலேயு மெப்போதும் புண்ணியவானா யிருப்பானொழிய மற்றப்படியல்ல. பொல்லாதவனே யென்றாற் பூர்வஜென்மத்திலே கள்ளனாயிருந்தவனிந்தச் செனமத்திலேயும் வருகிற செனமத்திலேயு மெப்போதுங் கள்ளனாயிருக்கவேணு மென்கிறதுக்குத் தப்பாது.

இந்த ஞாயத்தை யிந்தடைவாகச் சொல்லி நடத்தலாம். ஒருவனிந்தச் செனமத்திலே தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணிக்கொண்டு வந்தானென்று சொல்லும்போது யிப்படிப்பட்ட தர்மக்கிரிகைகளுக்குத் தர்மக்கிரிகைகள் மாத்திரம் ஒத்திருக்கிற கிரிகைகளா யிருக்கக்கொள்ளப். பூர்வசெனமத்திலே தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணினவன் இந்தச் செனமத்திலேயுந் தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணிக்கொண்டு வருவானென்று அங்கிகரிக்கவேணும். இந்தடைவாக வருகிற செனமங்களிலே தர்மக்கிரிகைகளை மாத்திரம் பண்ணினவனொழியுள்ள காலம் புண்ணியவானா யிருப்பானென்றுஞ் சொல்லத்தகுமொழிய மற்

றப்படியல்ல. இதுக்குச் சரியான மேரையாக இந்தச் சென்மத்திலே பாவியானவன் பண்ணின கர்மங்களுக்கு கொத்திருக்கிற கர்மங்களை மாத்திரம் வருகிற சென்மத்திலே பண்ண மாட்டுவானொழிய வேறே கர்மங்களைப் பண்ணமாட்டானென்று சம்மதிக்கத்தக்கதாகும். ஆதலாலே புண்ணியத்துக் கொத்திருக்கிற கர்மமானது புண்ணியமென்று சொல்லப்படு மாப்போலே பாவகர்மத்துக் கொத்திருக்கிற கர்மமானது பாவமென்று சொல்ல வேண்டியிருக்கையிலே பாவியானவன் இந்தச் சென்மத்திலே பண்ணின கர்மங்கள் மாத்திரம் வருகிற சென்மத்திலே பண்ணுவானொழிய மற்றப்படியல்ல வென்றும் அங்கிகரிக்கவேணும் இப்படி அங்கிகரித்தோமானால் இந்தச் ஜென்மத்திலே பத்துப் புண்ணியமாத்திரம் பாவியானவன் பண்ணி அவனாலே பண்ணப்பட்ட மற்றுண்டான கர்மங்களெல்லாம் பாவமாயிருக்கக் கொள்ள இந்தச் ஜென்மத்திலே பண்ணின பத்துப் புண்ணியங்களுக் கொத்திருக்கிற பத்துக் கர்மங்களைமாத்திரம் வருகிற சென்மத்திலே பாவியானவன் பண்ணுவானென்றும் பின்னையுமிந்தச் சென்மத்திலே பண்ணின எண்ணப்படாத பாவகர்மகளுக் கேற்றிருக்கிற எண்ணப்படாத பாவகர்மங்களை வருகிற சென்மத்திலே பாவியானவன் பண்ணுவானென்றுஞ் சொல்லவேணு மொழிய வேறே நவமான கர்மங்களைப் பண்ணமாட்டானென்று சொல்ல வேண்டியிருக்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. யிந்தவிடைவாகப் புண்ணியவான்க ளிடத்திலே யோசிக்கக் கடவது. ஒரு சென்மத்திலே புண்ணியவானென்கிலும் பாவியென்கிலும் வருகிற ஜென்மங்களிலே யெப்போதும் புண்ணியவானாயிருப்பானென்றும் பாவியாயிருப்பானென்றும் ருப்புவிக்கப் பட்டாப்போலே யாச்சுது.

ஆனால் இந்தச் சென்மத்திலே கள்ளனானவன் பண்ணின பத்துப் புண்ணியங்களுக்கும் எண்ணப்படாத பாவங்களுக்கும் ஆன பலன்ரூபமான பாக்கியத்தையும் நிற்பாக்கியத்தையும் வருகிற சென்மத்திலே யனுபவிப்பானென்று யாதொருத்தன் சொன்னால் அப்படிப்பட்ட பிரத்தியுத்தர நிமித்தமாக யிந்தச் சென்மத்திலே வித்தியா பாரகராயிருக்கிற பேர்களையும் புண்ணியவான்களையும் பாவிகளையும் பார்த்து இப்படிப் பட்டவர்களுக்குண்டான விதத்தையும் புண்ணிய பாவத்திலே விழுந்திருக்கிற மனசும் பூர்வஜென்ம சம்ஸ்கார மென்றும் பூர்வ சென்மவாசினை யென்றுஞ் சொல்லுகிறார்களே, யிந்தவார்த்தைகளெல்லாந் தப்பறையா யிருக்கிற தென்று பிரத்தியக்ஷமா யந்தப்பிரத்தியுத்தரத்தை லொப்புவித்தாப்போலே யாச்சுது. அதேதென்றால் அப்படிப்பட்ட சம்ஸ்காரமும் வாசனையும் பூர்வ சென்மத்தினுடைய வித்தைப் பாவமுதலான கர்மங்களுக்குப் பலனு மாக்கினையுமா யிருக்கிற தென்று சொல்லவேணும். ஆனபடியினாலே கூலி பெறுகிற கிரிகையுங் கிரிகைக்குவருகிற கூலியும் ஒரு விதமா யிருக்கிற தென்கிற அபத்தத்தை அங்கிகரிக்கப் பட்டாப்போலே யாச்சுது.

கடைசியாய்ப் பூர்வசென்மத்தை யங்கிகரிக்கிற பேர்கள் வேறொருபெரிய அபத்தத்தை யங்கிகரிக்கவேணும் அதாவது காணப்பட்ட லோகமானதும் அதிலுண்டான பொருளென்னப்பட்ட யாவுஞ் சுபாவமுதலான சகல குணங்களிலே யட்டோடே யிருக்கக் கொள்ள லோகமும் லோகத்திலுண்டான வஸ்து என்னப்பட்டயாவும் உண்டாக்கப்பட்டு தென்கிறதுக்கு ஞாயத்தின்படியே சந்தேகப்படவரில்லை, அப்படியே சர்வேசுரனுடைய சுவாதந்திரியமுள்ள மனசினாலே யுண்டாக்கப்பட்டு தென்று அங்கிகரிக்கு மிடத்தில் அதுக்குக் காரணமாயிருக்கிற சர்வேசுரனானவர் அவரொருத்தரே யனாதியா யிருக்கிறாரென்று அங்கிகரிக்கக் கூடியொழிய அவருடைய சுவாதந்திரிய முள்ள திவ்விய மனசினாலே சிஷ்டிக்கப்பட்ட யிந்தலோகமானது அனாதியாயிராமல் தனது காரண மிருக்கிறதுக்குப் பிற்பாடு துவக்கின தென்று, சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதெனின் சூரியனாகிற காரணத்தில் நின்று பிரகாசமாகிற காரியமானது அவசியமாய்ச் சுபாவத்தினாலே யுற்பவிக்கிறதினால் காரண காரியத்துக் கேககால முண்டென்று சொல்லவேண்டி

யிருக்கிறது. அப்படிப்பட்ட காரண காரிய மேரைக்குங் காரணத்தில் நின்று ஆவசியகமில்லாமல் சுவாதந்திரியத்தினாலே யுற்பவிக்கிற காரியத்தின் மேரைக்கும் உண்டான வேற்றுமையாவது ஆவசியகமாகவுஞ் சுபாவமாகவுங் காரணத்தில் நின்றும் பவிக்கிற காரியமானதுதனது காரணத்தோடே சமானகாலத்தை யுடைத்தானதா யிருந்து, அப்படிப்பட்ட காரண காரியத்துக்குக் காலப் பிரமாணத்திலே பூர்வாபர விசேஷ மென்கிற முன் பின்னென்கிறதில்லை. காரணத்தில் நின்று காரியமானது சுபாவமாகவும் ஆவசியக மாகவு முற்பவியாமல் சிற்பர் சாரியனாலே விக்கிரகமானது பண்ணப்படு மாப்போலே சுவாதந்திய மேரையாகக் காரணத்தில் நின்று காரியமானது உற்பவித்தால் அப்படிப்பட்ட காரியமானது காரணத்தோடே சமானகாரியமாயிராமல் அப்படிப்பட்ட காரணகாரியத்துக்குக் காலப் பிரமாணத்திலே பூர்வாபர விசேஷ மென்கிற முந்தின தென்றும் பிந்தினதென்றும் உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். ஆதலாலே காரணமானதெப்போதும் ஒருகண்டேராய்ப் பெலமுடைத்தானதா யிருந்தாலுஞ் சுவாதந்திரிய மில்லாமல் சுபாவமாகப் பிறப்பிக்கத்தக்க காரியத்தைப் பிறப்பிக்கிறாப்போலே சுபாவமாகப் பிறப்பிக்கக் கூடாத காரியத்தைப் பிறப்பிக்கலாமென் றங்கிகரிக்கக் கூடாது. ஆதலாலே சுவாதந்திரியத் தினுடைய சுபாவத்தைப் பார்க்கும்போது தனது காரணத்தோடே சமானகால முடைத்தானதா யிருக்கக் கூடாதென்கிறதினா லப்படிப்பட்ட காரணம் முந்தினதென்றும் அப்படிப்பட்ட காரியம் பிந்தினதென்றும் அங்கிகரிக்கக்கடவோம். அல்லது யிப்படிப்பட்ட காரியமானது காரணத்தோடே சமானகால முடைத்தானதா யிருக்கலாமென்று சொன்னோமானால் காரணத்தில் நின்று சுபாவமாய் உற்பவியாத காரிய காரணத்தில் நின்று சுபாவமாக உற்பவித்த காரியத்தினுடைய வியத்தி யுடைத்தானதா யிருக்கிறதென்று சொல்லுகிறதுக்கொக்கும்.

ஆதலாலே சர்வேஸ்வரனிடத்தில் நின்று லோகமானது ஆவசியகமாகவுஞ் சுபாவமாகவும் உற்பவியாமல், கர்த்தரானவர் தனது சுவாதந்திரிய முள்ள திவ்விய மனசினாலே லோகத்தை யுண்டாக்கினபோதே கர்த்தரானவர் முன்னே யிருந்தாரென்றும் லோகமானது பின்னே யிருந்ததென்றுஞ் சொல்லவேணு மொழியக் கர்த்தரானவரும் லோகமானதும் அனாதியாயிருந்த தென்றுங் கர்த்தராகிற காரணத்தோடு லோகமாகிற காரியமானது சமான காலத்தை யுடைத்தானதா யிருக்கிறதென்றுஞ் சொல்லக்கூடாது.

இதுவல்லாமல் மெய்யாகவே முழுதுமுண்டாக்கப்பட்ட வஸ்துவானது வொன்றுமில்லாமலிருக்கையிலே யுண்டாக்கப் பட்டதென்றும் அங்கிகரிக்கவேணும். உற்பவிக்கிறதுக்கு முன்னே வஸ்துவானது வொன்று மில்லாம லிருந்தால் அது அனாதியாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் முன்னேயென்கிற வார்த்தையானது அனாதியென்கிற மேரைக்குச் செல்லுமென்று சொல்லக்கூடாது. இது தவிர அனாதியா யிருக்கிற வஸ்துவானது தொருக்ஷணத்திலே யானாலும் ஒன்று மில்லாததாயிருந்த தென்று சொல்லக் கூடாததினால் அப்படிப்பட்ட வஸ்துவான தொன்று மில்லாம லிருக்கையிலே சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்டு தென்று சொல்லக்கூடாது. அவ்வண்ணமே யனாதியாயிருக்கிற தென்கிறது சுவாதந்திரிய முள்ள காரணத்தினாலே யுண்டாகப்பட்ட பொருளினுடைய சுபாவத்துக்கு விருத்தமா யிருக்கக்கொள்ள பொருளானது அனாதியாயிருக்கிற தென்கிறது ஒன்று மில்லாம லுண்டாக்கப்பட்ட பொருளானது உண்டாக்கப்பட்ட பொருளா யிருந்ததென்று சொல்லுகிறதுக் கொக்கும். ஆனாலொரு பொருளிடத்திலே ஏக விஷயத்திலே உண்டில்லையென்று சொல்லப்படுகிற தப்பறையானது சர்வத்துக்கும் வல்லவராயிருக்கிற கர்த்தராலேயுண்டாக்கப் படலாமென்று சொல்லவுங்கருதவுங்கூடாது. ஆதலாலே யுண்டாக்கப்பட்ட லோகமும் அதிலே யுண்டாக்கப்பட்ட மனுஷசாதியு முன்னே யொன்று மில்லாம லிருக்கையி லொருகாலத்திலே யுற்பவிக்கத் துவக்கிறதென்று சொல்லக்கடவோம்.

இதிப்படியிருக்கையிலே ஆரம்பத்திலே சர்வேஸ்வரனானவர் உண்டாக்கின மனுஷரின்னொன்று கீர்த்திக்கத்தக்க விசேஷ வியக்திகளாகிற மனுஷரிருந்தார்களென்று சொல்லக்கடவோம். அவர்களொன்றுமில்லாமலிருக்கையிலே கர்த்தனாலே யுண்டாக்கப்பட்டார்களென்கிறதினால் முன்னே பிறந்தார்களென்றும் அவர்களுக்குப் பூர்வஜென்மமுண்டாயிருந்ததென்றும் மதிகெட்டவனானாலுஞ் சொல்லமாட்டான். மூந்தின மனுஷருக்குப் பிள்ளைகளும் பேரமாரும் பிறந்தார்கள். இவர்களொன்றுமில்லாமலிருக்கையிலே முன்னே பிறந்தார்களென்று சொல்லவேண்டியிருக்கிறதினாலிவர்களுக்குப் பூர்வஜென்மமுண்டாயிருந்ததென்று சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட பேர்கள் பூர்வஜென்மமில்லாமற் சுகத்தையும் வியாதி ஆரோக்கியத்தையும் அனுபவித்து மரணத்தையடைந்தார்களென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இதுதவிர அவர்களுக்குள் ளேற்றக் குறைச்சலில்லாமற் பெரியவர்கள் சிறியவர்களில்லாமல் அக்காலத்திலே லோகம் நடந்ததென்று சொல்லக்கூடாதே. ஆதலாலே சுகதுக்கம் முதலான வியாதி யாரோக்கியத்தினுடைய அனுபவமும் மரணமும் பெருமையும் இது முதலான விஷயங்களில் ஏற்றக் குறைச்சல்கள் மூந்தின மனுஷனுக்கும் பூர்வசென்மமில்லாம லுண்டாயிருந்ததென்று அங்கிகரிக்கிறாப்போலே யிக்காலத்திலே யிருக்கிற மனுஷருக்குச் சுகதுக்க முதலானதுகளுடைய அனுபவமும் பெருமையிலேற்றக் குறைச்சலும் மரணமுதலான நிற்பாக்கியங்களும் பூர்வசென்மமில்லாம லுண்டாயிருக்கிறதென் றங்கிகரிக்கத்தகும்.

பூர்வசென்மமில்லையென்று கெட்டியாக யொப்புவிக்கிற யிந்த ஞாயத்தினுடைய வலுமையைப் பார்த்துப் பூர்வசென்மமென்கிற அபத்தத்தைத் திரும்ப ஸ்தாபிக்கிறதுக்கு வேறே அபத்தமான மறுவுத்தாரத்தைத் தேடினார்கள். அதேதென்றால் மூந்த முதற் சர்வேசுரனாலே மூந்தின மனுஷரானவர்களுண்டாக்கப் படவில்லையென்று சொல்லி மனுஷனுடைய சென்ம பாரம்பரை யனாதியாய் நடந்துவருகிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இந்தப் பிரத்தியுத்தாரமானது பரார்த்த சங்கியை முதலான ஞாயங்களினாலே அபத்தமென்று ஒப்புவித்தோமென்கிறதினாலே யிவடத்திலே திரும்ப அப்படிப்பட்ட ஞாயங்களைச் சொல்லக்கணக்கில்லை. மனுஷசாதியானது உண்டாக்கப்பட்டதென்று அங்கீகரிக்கிறபோது அனாதியாயிருக்கக் கூடாதென் றொப்புவித்தாப்போலேயாச்சுது. இது தவிர்ச்சிறிது மனுஷனைச் சர்வேசுரன் அனாதியா யுண்டாக்கினாரென்று அங்கிகரித்தாலும் அவர்களெத்தனை நாளைக்குப் பிற்பாடு பிள்ளை பெற்றார்களென்று சொல்லவேணும். அதேதென்றாற் பிள்ளை பெறுகிறதுக்கு முன்னே தகப்பன்மாரிருந்தார்களென்கிறதுக்குத் தப்பாது. இப்படி சொல்லும்போது பிள்ளைகள் அனாதியாயிராததினாலே மனுஷ சென்ம பாரம்பரை யனாதியாயிருக்க வில்லையென்று சொல்லிக் காட்டினாப்போலேயாச்சுது. அல்லது பிள்ளைகள் அனாதியாயிருந்தார்களென்று சொல்லும்போது பிள்ளைகளானவைகளொன்பது மாசந் தாயாருடைய கெர்ப்பத்திலே யிருந்தார்களென்று சொல்லவுங் கூடாது. தகப்பன்மாருக்குப் பிற்பாடு பிள்ளைகள் பிறந்தார்களென் றங்கிரிக்கவுங் கூடாது. ஆனால் பூர்வசென்ம அங்கிகாரத்து நிமித்தியமாக இத்தனை யபத்தங்களை யொன்றுமேலொன்றாயடுக்கி ஒப்புக்கொள்ளுகிறதைக் காட்டிலும் ஓரபத்தமாகிற பூர்வசென்ம வார்த்தமானத்தை யங்கிகரியாமலிருக்கிறது புத்திமானுக்கான லக்ஷணமென்று சொல்லத்தகும். அதேதென்றால் இத்தனை ஞாயங்களினாலே பூர்வசென்மமானது தப்பறையாயிருக்கிறதென் றொப்புவிக்கப் பட்டபோதே அதை வீண்வார்த்தையினாலே யின்னம் ஸ்தாபிக்க [illegible]மென்று வருந்துகிறவன் பஞ்சிலே சரடு திரிக்கிறாப்போலே கல்லிலே நாருரித்து அதிலே கயிறு திரிக்க வருந்துகிறவனென்று சொல்லத்தகும்.

௰௯-ம். பாடம்.

பூர்வஜென்மத்திலே பண்ணின பாவ புண்ணியத்துக்கு வருகிற ஜென்மத்திலேயான பலன் வரமாட்டாதென்றும் அது நிமித்தமாகப் பாவங்கள் அழிய மாட்டாதென்றும் ஆத்துமத்தினுடைய சுபாவத்துக்கும் ஆத்துமமானது தனது விருத்திகளைப் பண்ணுகிறதுக்குஞ் சகல நன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தனுடைய சுபாவத்துக்கும் அவர் நடத்திவருகிற தப்பில்லாத கிரமத்துக்கும் மறுஜென்மமானது விருத்தமாயிருக்கிறதென்றும் இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட போன நாலுபாடங்களிலொப்புவித்தாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே மறுஜென்மமானது தப்பறையாயிருக்கிறதென்று காட்டப்பட்டது. ஆனால் தெளிவற்ற பேர்கள் கர்த்தன் லோகத்தை நடத்துகிற வகையை யறியாததினாலே அப்படிப்பட்ட மறுஜென்மமாகிற தப்பறையைக் கற்பிக்கத்தக்கதாக அவர்களுக்குத் தோன்றின நிமித்தங்களைச் சொல்லிக் காட்டின பிற்பாடு அவைகள் மறுஜென்மங் கற்பிக்கப்படுகிறதுக்கு நல்ல ஞாயங்களாயிருக்கமாட்டாதென்று கர்த்தன் கிருபையினாலே வருகிற நாலுபாடங்களிலே சந்தேகமறக் காட்டக்கடவோம்.

சர்வேஸ்வரனுடைய நீதி திருவுளப்படியே மனுஷருக்குள்ளே நடந்துவருகிற லௌகிக பெருமையிலேற்றக் குறைச்சலும், வியாதி யாரோக்கியத்தை அவனவனனுபவிக்கிறதென்கிறதும், பிறந்தநாள் துவக்கி நடுவாந்தரத்திலே அவனவன் பாக்கிய நிற்பாக்கியத்தை யடைகிறதுக்கு யோக்கிய காரணங் காணாதிருக்கிறதென்கிறதும் இந்த மூன்று நிமித்தங்களினாலே மாத்திரம் மறுஜென்மமானது அறியா மனுஷரினாலே கற்பிக்கப்பட்டதென்கிறதுக்குத் தப்பாது. இதெல்லாந் தனித்தனியே பிரித்துச் சொல்லிக் காட்டும்போது சத்தியமானது மிகவும் விளங்குமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அதெப்படியென்றால் லோகத்திலே சிலபேர்கள் ராசாங்க முதலான துரைத்தனங்களையும் அயிஸ்வரியங்களையும் அனுபவிக்கவும் மகாராசாக்களாய்ப் பல்லக்கேறவும் பிறக்கிறார்கள். இது நன்மையா யிருக்கக்கொள்ளப் பலனாயிருக்கவேணும். பலனாயிருந்தால் பண்ணப்பட்ட புண்ணியத்தி னிமித்தமாக அது வரவேணும். இந்தச் ஜென்மத்திலே இவர்கள் ஒரு புண்ணியத்தையானாலும் பண்ணவில்லையென்கிறதினால் ராசாங்க முதலான நன்மைகளுக்குக் காரணமா யிருக்கிற புண்ணியத்தை யிவர்கள் பண்ணுகிறதுக்கு வேறே யொரு ஜென்மத்திலே பிறந்திருக்கவேணுமென்று சொல்லக்கடவோம். இந்தவகையாகச் சரீரசம்மந்தமாயிருக்கிற ஆரோக்கியம் அழகு இது முதலான நன்மைகளோடே பிறக்கிறவர்களிடத்திலேயுங் காணப்பட்ட காரணங்களில்லாமல் நடுவாந்தரத் திருந்தாப்போலே பாக்கியவான்களாய்ப் போகிறவர்களிடத்திலேயும் யோசிக்கக்கடவோம்.

இத்தன்மையாக நீசசாதிக்குள்ளே பிறந்த பேர்களையும் தாரித்திர முதலான நிற்பாக்கியங்களிலேயும் வியாதிகளிலேயும் பிறந்தநாள் துவக்கி நித்த முழுந்தியிருக்கிற யேழைகளையும் பார்க்குமிடத்தில் தாரித்திரம் நீசத்தனம் இது முதலான ஆக்கினை ரூபமான நிற்பாக்கியங்களை யனுபவிக்கிறார்களென்கிறதுக்குத் தப்பாது. பாவமில்லாமல் ஆக்கினை வரமாட்டாதென்கிற ஞாயமுண்டாயிருக்கையிலே யிவர்கள் பண்ணின பாவத்து நிமித்தியமாகத் தாரித்திர முதலான நிற்பாக்கியங்களை யனுபவிக்கவேணுமொழியப் பண்ணப்பட்ட பாவங்களில்லாமல் இப்படிப்பட்ட நிற்பாக்கியங்களாகிற ஆக்கினைகளை யனுபவிக்கிறார்க

ளென்று சொல்லக்கூடாவதல்ல. இதிப்படி யிருக்கையிலே நிற்பாக்கியங்களாகிற ஆக்கினைகளை யிப்போதனுபவிக்கிற பேர்க ளிப்படிப்பட்ட ஆக்கினைகளை அனுபவிக்கிறதுக்கான பாவங்களை யிந்தச் சென்மத்திலே பண்ணாதபோதே யிவர்கள் வேறே யொரு ஜென்மத்திலே முன்னே பிறந்து இப்போதனுபவிக்கிற நிற்பாக்கியங்களாகிற ஆக்கினைகளுக்குக் காரணமா யிருக்கிற பாவங்களை அந்தச்சென்மத்திலே பண்ணினார்களென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே மறுஜென்மங் கற்பிக்கிறதுக்கு யிதே நியாயம். பூர்வஜென்ம அங்கிகாரமானது இவர்கள் மனசிலே நிலையாக நிற்கிறதுக்கு இதே அஸ்திவாரமொழிய மற்றப்படியல்ல.

இந்த விஷயத்தைப் பத்தும் பத்தாய் விசாரித்து அதை யாராய்ந்து கண்டோமானால் நடக்கத்தக்க ஆச்சரியமானது வார்த்தை முகாந்தரமாய் வர்ணிக்கத்தக்கதாயிராது. அதேதென்றால் ஒன்றுக்கு மாகாததுமா யொன்றை நிறுத்துகிறதுக்குப் பெலமில்லாததுமா யிருக்கிற யுத்திகளின லெண்ணப்படாத ஜனங்களுக்குக் கேவலம் விருத்தமா யிருக்கிற மறுசென்மத்தின் பக்ஷத்தைச் சில பேர்கள் கற்பித்த விதத்தையும் அதை நிலையாக நிறுத்தின வகையையும் அதை யங்கிகாரம் பண்ணுகிற ரீதியையும் புத்திமானாயிருக்கிறவன் பார்த்துத் தான் சிரிக்கிறதுக்கு இடங்கண்டு பிடிப்பானொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் ஞானமில்லாத மிருகாதிகளாயிராமல் மனுஷரா யிருக்கிறபேர்களுக்கு இந்த அபத்தமான தெப்படி அபத்தமாய்த் தோன்றிற்றென்றுஞ் சத்தியத்தைப்போலே அந்தத் தப்பறையை யெப்படி அங்கிகாரம் பண்ணினார்களென்றும் நியாயங் காணாதென்கிறதினாலே அனேகம் பாவங்களினாலே சர்வேஸ்வரனாலே கைவிடப்பட்டபேர்களுமா யனேகம் பாவங்களினாலே தானே மதிகெட்டபேர்களுமா யிருக்கக்கொள்ள மறுசென்ம பக்ஷத்தைக் கற்பித்தார்களொழிய மற்றப்படியல்லவென்றெண்ணிக் கொண்டு வரத்தக்கதாகும். இதெல்லாமல் மறுசென்மங் கற்பித்தவர்கள் சொல்லுகிற யுத்திகளை ஒன்றுக்கு மாகாத யுத்திகளென்று ருசுப்புவிக்கிறபோது மிகவும் வெளியாகு மென்கிறதுக்குத் தப்பாது.

சகலத்தையுந் தப்பில்லாக் கிரமத்தோடு நடத்துகிற கர்த்தரானவர் லோகமானது நன்றாய் நடக்கவேணுமென்று பின்னபேதமுள்ள அந்தரத்திலே யிருக்கிற வெண்ணப்படாத பொருட்களை யுண்டாக்கினா ரொழியப் பண்ணப்பட்ட பாவ புண்ணியத்து நிமித்தமாகப் பலபல அந்தரத்திலே யிருக்கிற சூரியன் முதலான நக்ஷத்திரங்களையும் வாயு ஆகாசமுதலான பூதியங்களையும் உண்டாக்கவில்லை யென்று அங்கிகரிக்கத்தக்க சத்தியமாகும். அதேதென்றால் லோகத்துக்கு வேண்டியிருக்கிற இப்படிப்பட்ட சாதாரண நன்மையானது ஆண்டவனுடைய பரமசாமார்த்தியமுள்ள திருவுளக்கட்டளைப்படியே யுண்டாச்சுதென்று சொல்ல வேண்டியிருக்கிறதொழிய பொம்மன் இம்மனுடைய மனசினாலே பண்ணப்பட்ட பாவ புண்ணியத்து நிமித்தமாக வொருவன் சூரியனாய்ப் போனானென்றும் வேறொருவன் சந்திரனாய்ப் போனானென்றும் இன்னுமனேகர் நக்ஷத்திரங்களாய்ப் பிறந்தார்களென்றும் யாதொருத்தன் சொன்னால் அறிவின் குறைச்சலினாலே [illegible]பட்ட வார்த்தைகள் சொன்னானென்கிறதினாலே யெல்லாருஞ் சிரிக்கிறதுக்கிடங் கொடுத்தானொழிய அவனாலே சொல்லப்பட்ட வார்த்தையானது அங்கிகரிக்கத்தக்க விசேஷமென்று சொல்லத்தகாது.

ஆனால் சிலபேர்கள் இந்த விசேஷத்திலே சொல்லிக் கொண்டு வருகிற மூடபாவித்தியங்கொண்ட வார்த்தைகளை வெளிப்படுத்த வேணுமொழிய அவைகளைச் சொல்லாமலிருக்க வொண்ணாது. அதேதென்றாற் பூமியிலே நின்று சூரி

னானது பலபல ஆவிகளை யானைகாலத்திலே யெடுத்து அவைகளை மேலே யெழுப்புகிறதென்று கண்டு கொண்டு வருகிறோம். இதெல்லாம் மலைகளுண்டான ஸ்தலத்திலே வெகுத்துவமாக உண்டாம். அதேதென்றால் சீதமும் ஈரமுமா யிருக்கிற மலையிலே யித்தொகைப்பட்ட ஆவிகளைச் சூரியனானது வெகுவாயெடுத்துக் கிளப்புகிறதினால் விடியற்காலையில் புகைபோல் இத்தொகைப்பட்ட ஆவிகள் கிளம்புகிறதென்று பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறோம். இத்தொகைப்பட்ட ஆவிகள் ஆகாசத்தினுடைய மிகுந்த குளிருள்ள ஸ்தலத்திலேறி யவ்விடத்திலே கெட்டியாய்ப்போய் மேகமாய்ச் சேரிக்கும். அது சூரிய ரச்மியினாலே யழிந்துபோனால் மழையாகப்பெய்யும் இப்படிப்பட்ட ஆவிகளுக்குள்ளே அக்கினிரூபமாயிருக்கிற வுஷ்ணமுள்ள அம்சங்களானவைகள் ஈரமுஞ் சீதமுமா யிருக்கிற மேகத்துக்குள்ளே யிருக்கமாட்டாமற் பிரகிருதியிலே நின்று பிறப்படுகிற அக்கினியானது ஆகாசத்தை மிகுந்த பலத்தோடு பிளக்கிறதினால் அது சத்திக்கிறாப்போலே மேகத்தைப்பிளந்து அதினின்று பிறப்படுகிற அக்கினிரூபமான ஆவியானது இடியாகிற சத்தத்தைப் பண்ணிக்கொண்டுவரும். அதனோடுகூட மண்ணைப்போற் கெட்டியான ஆவியினுடைய யாதொரு அம்சமானதுண்டாயிருந்தால் பீரங்கியில் நின்று தள்ளப்பட்ட குண்டைபோலே அப்படிப்பட்ட கெட்டியான ஆவியானது மேகத்தில் நின்று தள்ளப்பட்டுப் பூமியிலே இடியாய்விழும்.

இதெல்லாம் பண்ணப்பட்ட புண்ணியத்து நிமித்தமாக வந்ததென்று இவர்கள் சொல்லாமல் அதிலே சம்பவிக்கிற வொரு விசேஷமானது பாவ புண்ணியத்தினாலே வந்ததென்று சொல்லுகிறார்கள். அதேதென்றால் சிலமுறை யீரமுஞ் சீதமுமா யிருக்கிற ஆவியானது கெட்டியாயிராமல் அதிலே யிருக்கிற அக்கினிரூபமான அம்சமானது யாதொன்றுண்டு. அதில் நின்று பூமியிலே அது விழுகிறபோது பிரகாசமாயிருக்கிற நக்ஷத்திரம்போலே கண்ணுக்குத் தோன்றும். இதெல்லாஞ் சுபாவ காரணங்களினாலே யித்தடைவாக வுற்பவித்து நடந்துவரும்போது இந்த விஷயத்திலே முழுதும் மதிகெட்டவர்கள் கற்பித்த வியர்த்தகட்டுக்கதையாவது, பூலோகத்திலே யிருந்த மனுஷனானவன் அனேகம் புண்ணியம் பண்ணினதினால் நக்ஷத்திரமாய்ப்போய்த் தேஜஸுள்ள வடிவைக் கொண்டிருக்கிறவனாய்த் தான் பண்ணின புண்ணியங்களுடைய பலன்களைச் சுவர்க்கத்திலே போசிப்பான். அதுகளைப் போசிக்கத்தக்க நாளொழிந்த பிற்பாடு சுவர்க்கத்திலே நின்று தள்ளப்பட்டவனாய் விழுவான். அந்தப் பிரகாசமாயிருக்கிற புண்ணியவானானவன் புல்லின்மேலே விழுந்து அப்படிப்பட்ட புல்லானது எந்த மிருகத்தினாலே பக்ஷிக்கப்பட்டதோ அந்த மிருகத்தின் வயிற்றிலே அதினுடைய சுக்கிலமாய்ப்போய் அந்த மிருகமாய்ப் பிறக்கும். அத்தன்மைபோலந்த மிருகமானது எந்த மனுஷனாலே பக்ஷிக்கப்பட்டதோ அது அப்படிப்பட்ட மனுஷனுடைய வயிற்றிலே சுக்கிலமா யந்தச் சாதியுள்ள மனுஷனாய்ப் பிறப்பார்களென்று சொல்லக்கடவார்கள். அவ்வண்ணமே சண்டாளன் முதலான நீசர்களினாலே பக்ஷிக்கப்பட்ட பசுவானது நீசருடைய வயிற்றிலே நீசருடைய சுக்கிலமாய்ப்போயினிமேற் சண்டாள ஜென்மத்தை யடையுமென்று சொல்லக்கடவது.

இத்தனை யொன்றுக் கொன்றேவ்வாமலிருக்கிற விபரீத விசேஷங்களில் இவர்கள் கற்பித்ததைப் பார்த்து விழித்திருக்கையிலே யிவர்கள் கற்பித்த அன்னியோன்னிய விருத்த விசேஷ தப்பறைகளுக்குச் சரியான அபத்த விசேஷங்களை நித்திரையிலே சொற்பனங் காண்கிறபேர்களுங் காணமாட்டார்கள். அதேதென்றால் லோக ஆரம்பத்திலே கர்த்தரானவர் சந்திர சூரியனை யுண்டாக்கி

ஞைப்போலே நக்ஷத்திரங்களையு முண்டாக்கினுரென்று சொல்லவேணும். இது தவிர வொவ்வொரு நக்ஷத்திரமும் பூமியைவிடப் பெரிதாயிருக்கிற தென்று சோதிர சாஸ்திரத்திலே நிச்சயமாயிருக்கும். பின்னையு மந்தந்த மாதத்திலே கணுவானது அசையாமற் பிறந்திருக்கிறாப்போலே சந்திர சூரியன் முதலான நக்ஷத்திரங்களானவைகள் மேலாயிருக்கிற அந்தந்த மண்டலங்களிலே கர்த்தன் திருவுளப்படியே பதிந்திருக்கிறாப்போலே அசையாமற் பிறந்திருக்கிற தென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. இப்படி யிருக்கையிலே ஒவ்வொரு நாளிலே நவமான நக்ஷத்திரம் பிறந்ததாவதேது. குருசாபத்தினலே பறைய ஞைப்போன திருசங்கு ராசாவானவன் சுவர்க்கத்திலே போயதில் நின்று தள்ளப்பட்டவனாய் விழுகிறபோது விசுவாமித்திரனாலே நிறுத்தப்பட்டு நக்ஷத்திரமாய்ப் பிறந்தா னென்றும் பிர்மாவானவன் கலைரூபத்தை யெடுத்து மான்ரூபங் கொண்டிருந்த தன்மகளோடு காட்டிலே யனேக நாள் சஞ்சாரம் பண்ணினதினால் ருத்திரனாலே தலைவெட்டுண்டு வெட்டுண்ட அந்த பிரமாவின் தலையானது மிருகசிர்ஷ நக்ஷத்திரமாய்ப் போனதென்றும் ருத்திர சம்பந்தமா யிருக்கிற திருவாதிரை யென்கிற நக்ஷத்திரமானது சேவித்திருக்கக் கொள்ள மிருகசீர்ஷத்தை யின்னமும் உபாதிக்கிற தென்றும் அவனவன் புண்ணியம் பண்ணினதினால் நக்ஷத்திரமாய்ப் போகிற தென்றும் இத்தொகைப் பட்ட யெண்ணப்படாத தப்பறை விசேஷங்களை விசாரிக்கு மிடத்திற் பொழுது போக்க வேணுமென்கிற போக்கனைங் கெட்ட கிழவிகள் தனது பேரர்களுக்குச் சொல்லுங் கட்டுக் கதைகளென்று சொல்லவேணு மெழிய மற்றப்படியல்ல. ஆதலாலே புத்திமான்களா யிருக்கிறபேர்கள் அதுகள் பொய்யான விசேஷங்களா யிருக்கிறதென்று சந்தேகப் படாமல் விசாரிப்பார்க ளென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினலே அவைகளைக் கண்டிக்கிறதிலே வியர்த்த காலக்ஷயம் பண்ணாமல் மறுசென்மத்தை யொப்புவிக்கிற மற்ற யுத்திகளுக்குப் பிரத்தி யுத்தாரஞ் சொல்லக்கடவோம்.

இற்றை வரைக்கு மிந்தப் பாடத்திலே சொல்லப்பட்ட ஞாயத்தைக் கொஞ்சத்துக் குள்ளே சொல்லவேணுமானல் இந்தவிதமாகச் சொல்லிக் காட்டலாம். சகலத்தையு முண்டாக்கிறதிலே முடிவில்லாத பெலமுடைய வருமாய்ச் சகலத்தையுந் தப்பில்லாக் கிரமத்தோடு நடத்துகிற வருமா யிருக்கிற கர்த்தரானவர் சந்திரன் முதலான நக்ஷத்திரங்களையும் அக்கினிமுதலான பூதியங்களையும் லோகத்தி லுண்டான மற்றுண்டான அனேக வஸ்துக்களையு மொருவகை ரூபத்தை யுடைத்தான வைகளுமா யொரு அந்தஸ்திலே யிருக்கிற வைகளுமா யுண்டாக்கலாம் பெலம் அழகு பெருமை யிதுமுதலான நன்மைவகையிலேற்றக் குறைச்சலுள்ள வைகளா யிருக்கிற யெண்ணப்படாத பொருட்களை யுண்டாக்கினு ரொழியப் பெல முதலான நன்மையினுடைய விஷயங் களிலே சரியானவைகளாகப் பொருளை யெல்லா முண்டாக்க வில்லையென்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். யிந்தவிதமாகக் கர்த்தரானவர் பின்னபேத முள்ள பொருட்களை யுண்டாக்கிறதுக்கு ஞாயமுள்ள காரணத்தை விசாரிக்கு மிடத்திலே பலபல அந்தஸ்துகளிலே யிருக்கிற பொருட்க ளில்லாமல் உலகமானது நன்றாயிருக்க மாட்டா தென்கிற தினல் உலகமானது குறைவில்லாமல் நன்றாயிருக்கிறதுக்குப் பல பல அந்தஸ்துக் களிலே கிரமத்தோடு அடங்கி யிருக்கிற பொருளானது அவசியமாய் வேண்டி யிருக்கிறதென்று சொல்லக் கடவதொழியக் கிரமத்தோடு பொருட்க ளானவைகள் பல பல அந்தஸ்துக ளுள்ளவை

களா யிராமற் பொருள்க ளெல்லாம் நன்மைகளுடைய விசேஷங்களி லொருகண்டு சிராஞ்சி சரியானவைகளா யிருந்தால் உலகமானது நன்றாயிருக்கமாட்டா தென்று அங்கிகரிக்கத்தக்க சந்தேகமற்ற சத்தியமாகும். ஆனபடியினலே கர்த்தரானவர் நன்மையிலே யேற்றக்குறைச்சலோடு பொருட்களை யுண்டாக்கினதுக்கு லோகத்திலே சாதாரண நன்மையுண்டாக வேணுமென்கிற திருவுளமானது காரணமென்று சொல்லத்தகும். இந்தவிதமாகப் பலபல பொருட்களை யேற்றக் குறைச்சலோடு கர்த்தனுண்டாக்கிறதுக்கும் நடத்துகிறதுக்கும் லோகத்திலே நடக்கத்தக்க சாதாரண நன்மையானது காரணமா யிருக்கிற தென்று சொல்லப்படுமாப்போலே லௌகீக பெருமை முதலான அயிஸ்வரியங்களிலே சரிசமான மான மனுஷரைக் கர்த்தரானவ ருண்டாக்காமல் நன்மையோடு லோகமானது நடக்கவேணு மென்கிறதுக்கு ராசாங்க சேவுக துரைத்தனமும் நீசத்தனமுமாகிற பலபல அந்தஸ்துக்களிலே மனுஷரை யுண்டாக்கினுரென்று சொல்லவேணுமொழிய அறியப்படாததுமாய் ஞாயத்துக்கு விருத்தமானதுமா யிருக்கிற பூர்வசென்மத்திலே பண்ணப்பட்ட பாவபுண்ணிய நிமித்தியமாகப் பல பல அந்தஸ்துள்ள மனுஷரைக் கர்த்தரானவ ருண்டாக்கினுரென் றங்கிகரிக்கிறதுக் கிடங்காணமாட்டாது. இந்த ஞாயத்தை விரிவாக வெளிப்படுத்தக் கடவோம்.

லோகமானது நடக்கும் பிரகாரமாய்ச் சர்வஞானமுள்ள கர்த்தரானவர் லோகத்தைநடத்தவேணுமொழிய லோகமானது நடவாத பிரகாரமாகக் கர்த்தரானவர் லோகத்தை நடத்தவேணுமென்று சொல்லவுமெண்ணவுங்கூடாதென்றிருக்கையிலே மனுஷரெல்லாரும் பலபல அந்தஸ்துகளிலேயிராம லொரே அந்தஸ்திலே யிருந்தார்களானல் உலகமானது நடக்கமாட்டாதென்கிறதினுற் பலபல அந்தஸ்துகளிலுள்ள மனுஷரானவர்க ளுண்டாயிருக்கிற தென்கிறது லோகமானது நடக்கும் பிரகாரமாய் நடக்கிறதுக்கு வேண்டியிருக்கிற கிரமமென்று சொல்லத்தகும். பின்னையும் மனுஷரென்னப்பட்ட யாவரு மொரே அந்தஸ்தி லிருந்தார்களானல் உலகம் நடவாதென்கிறதினல் லோகம்நடக்கவேண்டிய பிரகாரத்துக்கு லோகத்தைநடத்துகிற கர்த்தரானவர் லோகம் நன்றாய் நடக்கிறதுக்கு மனுஷரெல்லாரையு மொரு அந்தஸ்திலே யுண்டாக்காமல் பலபல வந்தஸ்துகளுள்ள மனுஷரை யுண்டாக்கினுரென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. இதெல்லாத்தையுந் தனித்தனியே யாராய்ந்து கொண்டோமானல் வெளியாகும்.

எல்லாரும் ராசாக்களா யிருந்தோமானற் சேவுகரெங்கே? சேவுகரே யில்லாமல் உலகம் நடக்கக்கூடுமோ? எல்லாரும் ஊழியங் கொள்ளுகிற பேர்களா யிருந்தோமானல் சம்பளங் கொடுத்து ரக்ஷிக்கிறபேர்கள் காணக்கூடுமோ? கூடில்லையே. ஆனபடியினலே ராசாங்க முதலான பெருமைகளிலேயும் அயிஸ்வரிய முதலான செல்வங்களிலேயும் ஏற்றக்குறைச்சலுள்ள மனுஷர் லோகத்திலே யில்லாவிட்டால் உலகம் ஒருநாளைக்கு முதலாய் நன்றாய் நடக்கமாட்டா தென்கிறதினல் தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் இராசாங்க முதலான அயிஸ்வரியங்களி லேற்றக்குறைச்சலுள்ள மனுஷரை யுண்டாக்கினதுக்கு லோகமானது நன்றாய் நடக்கவேணு மென்று திருவுளமானது காரணமா யிருக்குதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

இதுக்குக்கெட்டியான ஞாயமேதெனில் பொருளானது குறைவில்லாமல் நன்றாயிருக்கிறதுக்கு வேண்டியிருக்கிற நன்மையாதொன்றுண்டு. பொருளின் காரணமான வருமாய்ப் பொருளை நடத்துகிற வருமா யிருக்கிற யாதொருவருண்டா

யிருக்கவேணுமே. அவர்தானே அப்படிப்பட்ட நன்மையைப் பொருள்களுக்குக் கட்டளையிட வேணுமொழிய வேறே யொரு நிமித்தத்தினாலே அப்படிக்கொத்த அவசியமான நன்மையானது பொருளுக்கு வந்திருக்கிற தென்று சொல்லக்கூடா தென்கிறதினாலே மனுஷருக்குள்ளே யுண்டாயிருக்கிற ராசாக்க முதலான அயிஸ்வரியங்களி லேற்றக்குறைச்சலானது லோகம் நன்றாய் நடக்கிறதுக்கு வேண்டின நன்மையா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட நன்மையானது லோகத்துக்குக் காரணமானவருமாய் லோகத்தை நடத்துகிற வருமாயிருக்கிற கர்த்தனுடைய திருவுளப்படியே லோகத்துக்கு வரவேணுமொழியப் பொம்மன் திம்மன் பண்ணின பாவபுண்ணியத்து நிமித்தமாக இப்படிப்பட்ட நன்மையானது லோகத்துக்கு வரவேணுமென்று மூடிகெட்டவன் சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. அதெப்படி யென்றால் விக்கிரகத்தினுடைய மேனைக்கு வேண்டியிருக்கிற கை கால் கண் மூக்கு இது முதலானவைகள் விக்கிரகத்தினுடைய காரணத்தினாலே விக்கிரகத்துக்கு வரவேணுமொழிய மற்றப்படியல்ல வென்றாற்போலே பெரிய விக்கிரகமாகிற லோகத்துக்குப் பலபல அவையவங்கள்போலே வேண்டியிருக்கிற பலபல அந்தஸ்துள்ள மனுஷரானவர்கள் லோகத்தினுடைய காரணமாகிற கர்த்தன் திருவுளப்படியே வருகிறதென்று சொல்லவேணுமொழிய பொம்மன் திம்மன் பூர்வஜென்மத்திலே பண்ணின பாவபுண்ணியத்து நிமித்தமாக லோகமாகிற விக்கிரகத்துக்குத் தனது அவையவங்களானவைகள் வந்ததென்று சொல்லவு மெண்ணவுங்கூடாது. இதெல்லாம் வருகிற பாடத்திலே யின்னுமதிகமாக விளக்கிக் காண்பிக்கக் கடவோம்.

௨௰-ம் பாடம்.

போனபாடத்திலே சொல்லப்பட்ட சத்திய விசேஷத்தை லோகத்திலே நடந்துவருகிற வொரு பிரசித்த வார்த்தையினு லொப்புவிக்கலாம். லோகத்திலே நடந்துவருகிற பிரசித்த வார்த்தையாவது அண்டத்திலே யுண்டான தெல்லாம் பிண்டத்திலே யுண்டென்றும் பிண்டத்திலே யுண்டான தெல்லாம் அண்டத்திலே யுண்டென்றுஞ் சொல்லுகிற வார்த்தையானது எல்லாரு மறிய லோகத்திலே பிரசித்தமாய் நடந்துவருகிற தென்கிறதுக்குத் தப்பாது. லோகத்திலே நடந்துவருகிற இப்படிப்பட்ட பிரத்தியக்ஷ வார்த்தைக்கு இந்தவிடைவாக அர்த்தத்தைச் சொல்லக் கடவோம்.

அண்டமானது சரீரத்துக்குச் சரியென்றும் பிண்டமானது அண்டத்துக்குச் சமான மென்றும் அங்கிகரிக்கிற போது அண்டமானது பெரியலோக மென்று சொல்லவேண்டி யிருக்கையிலே பிண்டமானது சின்ன லோகமென்று சொல்லக்கடவோம். பிண்டமானது சின்னசரீரமென்று சொல்லும்போது அண்டமானது பெரிய சரீரமாயிருக்கிறதென்று சொல்லலாமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. முன் சொன்ன பிரத்தியக்ஷ வார்த்தைக்கு இதே யொப்புக் கொள்ளத்தக்க தாற்பரியமாகும். அவ்வண்ணமே சின்னலோகமாகிற பிண்டமானது நன்றாயிருக்கிறதுக்குப் பல பல அவையவங்கள் வேண்டி யிருக்கிறாப்போலே பெரிய சரீரமாகிற அண்டமானது குறையற்ற பிரகாரமாய் நன்று யிருக்கிறதுக்குப் பல பல அந்தஸ்துகளுள்ள மனுஷராகிற அவையவங்களானவைகள் அண்டமாகிற சரீரத்துக் குண்டாயிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது.

அதேதென்றால் சின்னலோக மாகிற சரீரத்துக்குத் தலையானது வேண்டி யிருக்கிறாப் போலே அண்டமாகிற பெரிய சரீரத்துக்குத் தலையான ராசாக்கள் முதலான பெரியவர்க ளுண்டா யிருக்கவேணும். சின்னலோகமாகிற சரீரம் நன்றாயிருக்கிறதுக்குக் கண்களுண்டா யிருக்கவேணுமே அம்மாதிரியே பெரிய சரீரமாகிற அண்டமானது நன்றாயிருக்கிறதுக்குக் கண்களாகிற பிராமணர் முதலான வித்தியாபாரகரும் ஞானிகளு முண்டா யிருக்கவேணு மென்கிற துக்குத் தப்பாது. பின்னையும் சின்னலோக மாகிற சரீரமானது குறையில்லாமல் நன்மை யோடே யிருக்கிறதுக்கு அதுவாயை யுடைத்தானதா யிருக்க வேணுமே அத்தன்மை போல் அண்டமாகிற பெரிய சரீரமானது குறையில்லாமல் நன்மையோடே யிருக்கிறதுக்கு வாய்க்குச் சரியான மகாத்துமாக்கள் லோகத்திலே யுண்டா யிருக்கவேணும். அப்படிப்பட்ட பேர்கள் தர்ம சரித்திரமாகிற பிழைக்கும் வழியை யறியாத பேர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறதினால் அப்படிப்பட்ட குருக்கள் முதலான பெரியவர்கள் வாய்க்குச் சமானமா யிருக்கிறார்க ளென்று யோசிக்கக்கடவோம்? பின்னையுஞ் சின்ன லோகமாகிற சரீரத்துக்குக் காதுவேண்டியதாயிருக்கிறாப் போலே காதுகளாயிருக்கிற உபதேசங்கள் கேட்கிற சிஷாக்களான பேர்கள் அண்டமாகிற பெரியசரீரத்துக் குண்டாயிருக்க வேணும் இதுதவிரச் சின்ன லோகமாகிற சரீரமானது பிழைக்கும்படிக்குக் கைகளுடைத் தானதாயிருக்கவேணும் அம்மாதிரியே அண்டமாகிற பெரியசரீரமானது பிழைக்கிறதுக்குக் கைகளுக்குச் சமானமா யிருக்கிற கிரிஷிகாரரும் ஊழியர் முதலான வெண்ணப்படாத வேலைகளைப் பண்ணிக்கொண்டு வருகிற பேர்களும் அப்படிப்பட்ட அண்டமாகிற பெரிய சரீ

ரத்துக்கு அவசியமாயுண்டா யிருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. இதல்லாமலே சின்னலோகமாகிற சரீரமானது நடக்கிறதுக்குக் காலுள்ளதா யிருக்கவேணுமென்கிறப்போலே அண்டமாகிற பெரிய சரீரமானது கிரமத்தோடே பாங்காகவே நன்றாய் நடக்கிறதுக்கு அது காலாகிற நீசசாதியுள்ள பேர்களை யுடைத்தானதா யிருக்கவேணும். அதேதென்றால் காலில்லாத சரீரமானது நடக்கமாட்டாதது போல லோகத்துக்கு வேண்டியிருக்கிற அந்தந்த வினைவேலைகளைப் பண்ணிக்கொண்டு வருகிற நீசரானபேர்கள் லோகத்திலே யில்லாவிட்டால் நீசரில்லாத லோகமானது நடக்க அறியாதென்கிறதுக்குத் தப்பாது. இது யிப்படியிருக்கையிலே பிண்டமாகிற சரீரத்தை யுண்டாக்கின கர்த்தனைப்பார்த்து அண்டமாகிற பிண்டமாகிற சரீரத்திலே இத்தனை அவையவங்களை யுண்டாக்குவானேன்? ஏனென்னும், தலையானது உத்தம அங்கமுமாய்க் கண்ணானது நல்ல அவையவமுமா யிருக்கையிலே சரீரமெல்லாம் உத்தம அங்கமுமாய்க் கண்ணுள்ளதுமா யேனுண்டாக்காதே போனீரென்றும் கேட்டோமானால் சின்னலோகமாகிற சரீரத்தை யுண்டாக்கிற பரமஞான சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் இப்படிப்பட்ட விசேஷக்கேள்விகளுக்குச் சொல்லத்தக்க பிரத்தியுத்தரமாவது மதிகெட்டவனே சரீரமெல்லாந் தலையாயிருந்தால் நடக்கிறதுக்குக் காலெங்கே? சரீரமெல்லாங் கண்ணாயிருந்தால் சீவனோபாய மென்கிற பலபல வேலைகளைப் பண்ணி வருகிறதுக்குக் கைகளெங்கே, அவ்வண்ணமே வேறுபட்டதுகளுமாய் ஒருவனுடைய மேல் கீழானதுமா யிருக்கிற அவையவங்களில்லாமற் சரீரமானதிருக்கமாட்டாததினால் அப்படிப்பட்ட சரீரமானது தனது சுபாவத்திலே குறைவில்லாமல் நன்றாய்ப் பிழைத்துத் திரியவேணு மென்கிறதினாலே மேல் கீழான அந்தஸ்துள்ள அவையவங்களை யுடைத்தான சரீரத்தைக் கர்த்தருண்டாக்கினாரொழிய மற்றப்படியல்ல.

இந்தவிதமாக அண்டமாகிற பெரியசரீரத்தையுண்டாக்கின சகலத்தையு மறிந்த சர்வேஸ்வரனைப் பார்த்து இப்படிப்பட்ட அண்டமாகிற லோகத்திலே பலபல அந்தஸ்திலே யிருக்கிற மனுஷரான ராசாக்களையுஞ் சேவகரையும் பல்லக்குச் சுமக்கிறபேர்களையும் பல்லக்கேறுகிற துரைகளையும் ஐசுவரியத்தினாலே தனமானபேர்களையுந் தாரித்திரமுள்ள வேழைச்சனங்களையு மிவர்கள் முதலான வேற்றுமையான மனுஷரை யேனுண்டாக்கினீரென்று கேட்டோமானால் முன்சொன்ன பிரத்தியுத்தரம்போலே யிந்தக் கேள்விக்குங் கர்த்தரானவர் சொல்லத்தக்க பிரத்தியுத்தரமா யிருக்குமொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்றால் தலைபோலேயிருக்கிற ராசாக்களான துரைகள் உத்தம அங்கம்போலே மேலான அந்தஸ்திலே யிருக்கிற பேர்களென்கிறதுக்குத் தப்பாது. ஆனாலெல்லாருந் தலைபோலே ராசாக்களா யிருந்தால் லோகமானது பிழைக்கிறதுக்கு வேண்டியிருக்கிற பயிர்ச்செலவு முதலான வேலைகளைப் பண்ணுகிற குடியானவர்களெங்கே? கண்ணாகிற பிராமணர் முதலான வித்தியாபாரகரையும் ஞானிகளையும் விசாரிக்குமிடத்தில் அப்படிப்பட்ட பேர்களுத்தம புருஷர்களென்றும் லௌகீக பெருமையினுடைய மேலான அந்தஸ்திலே யிருக்கிற பேர்களென்றும் மற்றுண்டான மனுஷருக்கும் பூச்சியரென்றுஞ் சொல்லக்கடவோம். ஆனாலெல்லாருங் கண்ணாகிற பிராமணர் முதலான வித்தியாபாரகரா யிருந்தோமானால் எல்லாரும் பிழைக்கிறதுக்கு வேண்டியிருக்கிற தரையிலே நடக்கிற காலைப்போலே சமாச நடக்கைச் சண்டாளர் முதலானபேர்கள் லோகத்திலே யில்லாதே போகவேணும். அவ்வண்ணமே பலபல அவையவங்களில்லாமற் சின்னலோகமா

கிற சரீரமானது பிழைக்க மாட்டாததுபோலே பலபல அவையவங்களுக்குச் சரியான மேல் கீழான அந்தஸ்திலே யிருக்கிற சாதிகளில்லாமற் பெரிய சரீரமாகிற லோகமானது நடக்கமாட்டாது ஆனபடியினாலே லோகமானது நன்றாய் நடக்கிறதுக்குப் பலபல அந்தஸ்துள்ள மனுஷரை லோகத்திலே கர்த்தரானவர் கட்டளையிட்டாரென்று சொல்லவேணுமொழியப் பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவபுண்ணிய நிமித்தமாக இப்படிப்பட்ட தப்பில்லாக் கிரமம் வந்ததென்று சொல்லக் கடவோமல்ல.

அவ்வண்ணமே லோகமானது நடக்கிறதுக்குக் கர்த்தரானவர் கற்பித்திருக்கிற மதத்தை மதிகெட்டவர்கள் தாங்களேற்படுத்துகிறதுக்கு யிடம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இதிலே யிவர்களேற்படுத்துகிற வகையை வெளிப்படுத்தக் கடவோம். அதைப்போகிற ராசமார்க்கத்திலே மத்தியான சமையமாகிற போது வழிதப்பிப் போகிறவன்போலே, இவைலேசமானது மயங்கிறதுக் கிடமிராத விஷயத்திலே அறிவின் குறைச்சலினாலே அநேகம் பேர்கள் மயங்கிறார்களென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அவர்கள் சொல்லுகிற வார்த்தையாவது. "சர்வேஸ்வரனானவர் எல்லாருக்குஞ் சரியான தகப்பனா யிருக்கையிலே யெல்லாரையும் பாக்கியத்தை அனுபவிக்கத் தக்கதாக கட்டளை யிடவேணும். அல்லது ஒருத்தன் பாக்கியத்தையு மொருத்தன் நிற்பாக்கியத்தையும் இவன் ஐசுவரியத்தையும் அவன் தாரித்திரத்தையு மனுபவிக்கக் கட்டளை யிட்டால் அவரிடத்திலே பக்ஷபாத முண்டென்று காண்பிக்கிறது. அதேதென்றால் இவன் பல்லக்கேறவும் அவன் பல்லக்குச் சுமக்கவுங் கட்டளை யிட்டபோதே யொருவன் பிரயாசப்படவும் வேறொருவன் சுகத்தை யனுபவிக்கவுங் கட்டளை யிட்டதும் போராமல் ஒருவன் பிரயாசத்திலே வேறொருத்தன் சுகத்தை யடையத்தக்க தாகக் கற்பித்தாப்போலே யாச்சுது. ஆனபடியினாலே சர்வேசுரனுக்குப் பக்ஷபாதம் வராதபடிக்குப் பூர்வ ஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவபுண்ணியமானது லௌகீக பெருமையிலே யிருக்கிற இப்படிப்பட்ட ஏற்றக்குறைச்சலுக்குக் காரணமா யிருக்கிறதென்று சொல்லத்தக்கது." என்று அங்கீகரிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதிலே தானே தங்களைத் தாங்கள் முழுதும் மதிகெட்ட பேர்களென்று காட்டிக்கொண்டு வருகிறார்கள். அதேதென்றால் சர்வேஸ்வரன் பேரிலே பக்ஷபாதத்தை யாரோபிக்க வேண்டாமென்று தாங்கள் வெட்கமில்லாமல் தங்களுடைய புத்தியில்லாத தனத்தை யவர் பேரிலே யாரோபித்தாப் போலேயாச்சுது. அதேதென்றால் பக்ஷபாதமில்லாமலெல்லாரையும் லௌகீக பெருமை முதலான நன்மைகளிலே சமானராகக் கர்த்தரானவ ருண்டாக்க வேணுமென்று சொன்னோமானால் உலகமானது நடவாத பிரகாரமாகப் புத்தியில்லாதவன்போலே லோகத்தைக் கர்த்தரானவர் நடத்தவேணு மென்று சொல்லுகிறதுக் கொக்கும். பின்னையுந் தப்பித்துக் கொள்ளவேணுமென்று யிதுக்காகப் பூர்வஜென்மத்தை யங்கீகரிக்கிறோ மென்று சொன்னார்களானால் சர்வேசுரனிடத்திலே பக்ஷபாத முண்டென்கிற வோரபத்தத்தை யங்கீகாரம் பண்ணுதபடிக்குக் கர்த்தரானவர் பூர்வஜென்மங் கட்டளை யிட்டாரென்று சொல்லும்போது அநேக அபத்தங்களை யங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. ஆதலாலொரு பொய்யான விசேஷத்தை யங்கீகரிக்க மாட்டேனென்று சொல்லுகிறவன் அநேக தப்பறை விசேஷங்களை யங்கீகரித்தாப் போலே யாச்சுது. இதன்றியே இப்படிக்கொத்த கிரமத்திலே மயங்கிறதுக்கு யிடமில்லையென்று சொல்லக்கடவோம்.

அதேதென்றா லொருவனுடைய பிரயாசத்தினாலே வேறொருவனுக்குப் பிரயோசனம்வருகிற தென்கிற கிரமமானது தப்பில்லாக் கிரமமுங் குறையற்ற நியாயமுமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் உலகத்தினுடைய சாதாரண நன்மைக்கு அப்படிப்பட்ட கிரமமானது வேண்டியிருக்கிறதுந்தவிர அவனவன் தனித்தனியே விசேஷநன்மையை யடைகிறதுக்கும் அப்படிப்பட்ட கிரமமானது அவசியமாய்வேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

இத்தசத்திய விசேஷத்தைச் சின்னலோகமாகிற சரீரத்திலே தானே நடந்துவருகிற வொருவிசேஷ வர்த்தமானத்திலே துலக்கமாக வொப்புச்சொல்லிக் காட்டலாம். அதேதென்றாற் சின்ன சரீரமாகிற பிண்டமானது கெட்டுப்போகாதபடிக்குப் பிரயாசப்படாத குக்ஷியானது சகல அவயவங்களும் பிரயாசப்படுகிறதினால் வருகிற பிரயோசனத்தை யனுபவிக்கப் பிரயாசப்படாததா யிருக்கிற அப்படிப்பட்ட குக்ஷியானது சின்னலோகமாகிற சரீரத்திலே யுண்டா யிருக்கவேணு மென்கிறபோலே அண்டமாகிற பெரிய சரீரமானது கெட்டுப்போகாதபடிக்கு அதைத் தன்னு புத்தியுபாயத்தினாலே நடத்திப் பிழைப்பித்துக்கொண்டு வருகிற பெரியவர்கள் லோகத்திலே யுண்டாயிருக்கவேணும். இவர்கள் அண்டமாகிற சரீரத்திலே குக்ஷியாகிற அவயவமென்று சொல்லப்படும். அதேதென்றாற் கண்காண்கிறதென்கிறதும் கைவேலைசெய்கிற தென்கிறதுங் கால் நடக்கிற தென்கிறதும் இந்தவிதமாக மற்ற அவயவங்கள் பிரயாசப்படுகிற தென்கிறதும் எல்லாம் பிசாயிருக்கிற குக்ஷிக்கு அசனமுதலான நன்மைதேடுகிறதுக்குப்பிரயாசைப் படுகிறாப்போலே கால்கை யிவைமுதலான அவயவங்களுக்குச் சமானமா யிருக்கிற பலபல வந்தஸ்துகளுள்ள மனுஷர்கள் பலபல விதமாகப் பிரயாசைப் படுகிறதை விசாரிக்கு மிடத்திற் புத்திமதி சொல்லி லோகத்தை நடத்திக் கொண்டு வருகிற மகாத்துமாக்களுக்கு நன்மை பிரயோசன முண்டாகவேணு மென்று மனுஷரெல்லாரும் பிரயாசப் படுகிறார்களென்று காணபித்திருக்கிறது. அவ்வண்ணமே ஜனங்களெல்லாரும் பிரயாசப்பட லோகத்தை நடத்துகிற மகாத்துமாக்களா யிருக்கிறபேர்கள் பிரயாசப் படாமற் சுகத்திலே யிருந்து மற்றவர்களுடைய பிரயாசங்கள் முதலான ஊழியங்களினாலே வருகிற பிரயோசனத்தைக் கைக்கொண்டு வருகிறார்க ளென்கிறதினால் அண்டமாகிற பெரிய சரீரத்துக்கு அப்படிப்பட்ட பெரியவர்கள் குக்ஷியாக விருக்கிறார்களென்று சொல்லக் கடவோம்.

இனிக் கால்கை யிதுமுதலான அவயவங்கள் அசைகைப்பட்டாற்போலே பிசாயிருக்கிற குக்ஷிக்கு அசனமுதலான நன்மைகளைத் தேடத் தக்கதாகக் காலானது தானேன் நடக்கவேணு மென்றும் கையானது தானேன் வேலை செய்யவேணுமென்றும் இந்தவிதமாக அவயவங்களெல்லாம் என்னத்துக்குப் பிரயாசப்பட வேணுமென்றுஞ் சொல்லிப் பிரயாசப்படாமற் பிசாயிருக்கிற குக்ஷிக்கசனந்தேடத் தக்கதாகக் கால் கை யிதுமுதலான அவயவங்களெல்லாம் பிசாயிருந்து கால்நடவாமலுங் கை வேலை செய்யாமலு மிருந்தாற் கால் கை முதலான அவயவங்களெல்லாம் ஓய்ந்து செத்துப்போமென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே அவயவங்களெல்லாம் பிசாயிருக்கிற குக்ஷிக்காகப் பிரயாசப்படுகிறதென்கிறது தங்களுக்கே நன்மைவருத்துகிறதாகப் பிரயாசப்படுகிறதுக் கொக்கும். அத்தன்மைபோலக் கால்கை முதலான அவயவங்களுக்குச் சரியாயிருக்கிற சுமக்கிற சிவ்விப்பாரும் பயிரிடுகிற குடியானவர்களும் மற்றுமுண்டான பலபல ஊழிய வேலைகளினாலே பிரயாசப்படு

களும் பேர்களுங் குக்ஷிபோலே பிசாயிருக்கிற ராச்சியத்தை நடத்துகிற பேர்களுக்குப் பிரயோசன முண்டாக வேணுமென்று பிரயாசைப் படுகிறாப்போலே காணபித் திருக்கிற தொழிய மற்றப்படியல்ல.

ஆனாலுண்டான வர்த்தமானத்தைப் பத்தும்பத்தாய் விசாரிக்குமிடத்திற் பிசாயிருக்கிற குக்ஷியாகிற ராச்சியத்தை நடத்துகிற பேர்களுக்காகக் கால் கை யிவைகள் முதலான அவயவங்களாகிற ஜனங்கள் பிரயாசப்படாமல் அவர்களுக்கு ஊழிய முதலான பிரயோசனங்களை வரப்பண்ணுதிருந்தால் அண்டமாகிற சரீரத்துக்குண்டான குக்ஷிபோலேயிருக்கிற துரைகளுக்குக் கேடுவருமென்கிறதுந் தவிர மற்றுமுண்டான ஜனங்களாகிற அவயவங்களானவைகள் ஓய்ந்து செத்துப்போமென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே அவயவங்கள் போலேயிருக்கிற ஜனங்களானவர்கள் குக்ஷிபோலே யிருக்கிற துரைகளுக்கு ஊழிய முதலான பிரயோசனங்களைப் பண்ணிக் கொண்டுவருகிறது தாங்கள் தங்களுக்குத்தானே நன்மை பண்ணிக்கொண்டு வருகிறதுக்குப் பிரயாசைப்படுகிறதென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே லோகத்திலே அன்னியோன்னியமாக ஊழியம் பண்ணுகிற பேர்களையும் ஊழியங் கொள்ளுகிற பேர்களையும் பார்க்கும்போது இவர்களுக்குள்ளே யொருவனிமித்தியமாக மற்றவன் பிழைக்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் ஊழியம் பண்ணுகிறவர்களால் ஊழியங் கொள்ளுகிறவர்கள் சுகத்தை யனுபவித்துக் கொண்டு வருகையிலே ஊழியம் பண்ணுகிற பேர்கள் சம்பளம் வாங்கிக்கொண்டு பிழைக்கிறார்கள். அவ்வண்ணமே பிசாயிருக்கிற அண்டமாகிற பெரிய சரீரத்துக்குப் பிசாயிருக்கிற குக்ஷிக்குச் சமானரான ராசாக்களும் பிரபுக்களும் பிரயாசைப்படுகிற பலபல அவயவங்கள்போலேயிருக்கிற ஜனங்கள் கையிலே நியாயத்தின்படியே பகுதியையும் ஆயங்களையும் வாங்கி ஆன ஊழியங்களைக் கொள்ளும்போது அது நிமித்தமாக ஜனங்களை யாண்டு கொண்டிருக்கிறதினாற் குடியானவர்களுக்குப் பலபல அநியாயங்கள் வரவொட்டாமல் அவர்களைப் பலபல விதமாக இரக்ஷித்துக்கொண்டு வருகிறார்களென்கிறது பிரயாசைப்படுகிற அவயவங்களினாலே அசன முதலானதுகளை வாங்கிற குக்ஷியானது திருப்ப அவயவங்களுக்குப் பல முதலான நன்மைகளைக் கொடுத்துவருகிறதுக்குச் சமானமென்று சொல்லப்படும்.

இந்தவிதமாகக் குடியானவர்கள் பகுதியும் ஆயங்களையுங் கொடாமலும் ஊழியங்களினாலே ராசாக்கள்முதலான பிரபுக்களுக்குப் பலபலபிரயோசனங்களை வருத்தாமலுமிருந்தால் அசனமுதலானவைகளைப் பிரயாசப்படுகிற அவயவங்கள் பிசாயிருக்கிற குக்ஷிக்குத்தேடி யிடாவிட்டாற் குக்ஷியினாலே வரத்தக்கபல முதலான நன்மைகள் வாராமல் அவயவங்களழிந்து ஓய்ந்து செத்துப்போகுமாப்போலே ஜனங்கள் ராசாமுதலான பிரபுக்களுக்குப் பகுதி ஆய மிது முதலானதினாலே பலபல பிரயோசனங்களைவருத்தி யிராமலிருந்தால் அசனமில்லாத குக்ஷிபோலே பலமில்லாத ராசாக்களினாலே அவயவங்களாகிற குடியானவர்கள் இரக்ஷிக்கப்படாமல் அது நிமித்தமாக அனேகங் கேடுகளை யனுபவித்து முழுதுங் கெட்டுப்போவார்களென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. இப்படிப்பட்ட அன்னியோன்னிய நன்மை வருகிற மேரையானது லோகமானது நன்றாய் நடக்கிறதுக் கவசியமாய் வேண்டியிருக்கிறதினால் உலகம் நன்றாய் நடக்கிறதுக்குப் பெரியவர்களுஞ் சிறியவர்களுமாகிற பலபல அந்தஸ்துள்ள மனுஷரைச் சகலத்தையுந் தப்பில்லாக் கிரமத்தோடு நடத்துகிற கர்த்தரானவர் லோகத்திலே கட்டளை யிட்டாரென்று சொல்லவேணு மொழிய மல்லன் றிம்மன்

முதலானவர்கள் பண்ணின புண்ணிய பாவத்திலே லோகம் நடக்கிறதுக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற வொழுங்கானது வந்ததென்று புத்தியிராத மதிகெட்டவன் சொல்லுவானேயொழியப் புத்தியாளுயிருக்கிறவன் சொல்லவு மெண்ணவு மாட்டான்.

அவ்வண்ணமே அவையவங்க ளென்னப்பட்ட தெல்லாம் வெறுமனே யிருக்கிற குக்ஷிக்கு அசன முதலான வைகளைத் தேடிக் கொடுக்கிறதினால் அவையவங்கள் தானே தனக்குப் பிலமுண்டாய்த்தனது பிழைப்புக்காகவும் பிரயாசைப்படுகிற தென்று சொல்லத்தகும். வெறுமனே யிருக்கிற அவையவங்களானவைகள் பிரயாசைப்படாமலும் அசன முதலானதுகளைத் தேடியிடாமலுமிருந்தால் அவையவங்கள் தானே கெட்டுச் செத்துப்போ மென்கிறதுக்காக வெறுமனேயிருக்கிற குக்ஷிக்கு அவயவங்கள் பாடுபடுகிற தென்கிறது அவயவங்களுடைய சுகமைக்குக் காரணமென்றிருக்கையிலே அவயவங்களானவைகள் வெறுமனேயிருக்கிற குக்ஷிக்குப் பிரயாசைப்படாமலும் ஊழியம் பண்ணாமலுமிருந்தால் அவையவங்கள் தானே கெட்டுப்போ மென்கிறதுக்கு அவைகளே காரணமென்று சொல்லக்கடவோம். இந்தடை வெல்லா முன் சொன்னபடி போலே ராசாக்களுக்குங் குடியானவர்களுக்கும் நடந்துவருகிற தென்றங்கீகரிக்கக்கடவோம். அப்படியே அண்டமாகிற பெரிய சரீரத்துக்கு பலப்பல அந்தஸ்துள்ள பேர்கள் அவயவங்களா யிருக்கக்கொள்ள வொருகண்டச் சரீரமும் பலப்பல வேற்றுமையுள்ள விருத்திகளைப் பண்ணுகிற அவையவங்களைப்போலே பலப்பல அந்தஸ்திலே யிருக்கிற வேற்றுமையுள்ள கிரிகைகளைப் பண்ணிக் கொண்டு வருகிறவர்களா யிருக்கவேணு மென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட அண்டமாகிற பெரிய சரீரத்துக்குத் தலையிலேயுஞ் சேற்றிலேயும் நடந்து திரிகிற கால்களைப்போலே யீனமான கிரிகைகளைப் பண்ணுகிறதிலே திரிகிற பேரிருக்கவேணும். சிலர் பலபல வேலைகளைப் பண்ணுகிற கைகளைப்போலே நானாவகையுள்ள வேலைகளாகிற ஊழியங்களைப் பண்ணிக்கொண்டு வரவேணும். சிலர் கூர்மையுள்ள கண்களைப்போலே நானாவித வித்தைகளைக் கற்று யெல்லாருங் காணத்தக்கிய சத்தியங்களை யறிந்துகொண்டு வரவேணும். சிலர் வாயைப்போலே யறியவேண்டின விசேஷங்களை யவனவனுக்குப் போதிக்கவுஞ் சிலர் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் காதுபோலே கேட்கவும்வேணும். ஆதலாலே பலபல வகையுள்ள அவையவங்களுக்குச் சமானமாயிருக்கிற பலபல அந்தஸ்திலே யிருந்து வெவ்வேறே ஊழிய வியாபாரங்களைப் பண்ணிக்கொண்டு வருகிறபேர்கள் வெறுமனே யிருக்கிற குக்ஷிக்குச் சமானமான ராசாக்கள் முதலான துரைகளுக்காகப் பிரயாசப்படுகிற தென்கிறது லோகமானது நடக்கிறதுக்கான கிரமமும் அவனவனுக்குத் தனித்தனியே வாழ்க்கை சேஷ்நன்மை யடைகிறதுக்கு ஆன வுபாயமுமென்று சொல்லவேணுமொழிய இப்படிப்பட்ட கிரமத்து நிமித்தமாகக் கர்த்தர்பேரிலே பக்ஷபாதத்தைத் தூரீகரிக்கக்கூடாது. அப்படிப்பட்ட கிரமமானது பூர்வஜென்மத்திலே பண்ணப்பட்ட பாவபுண்ணியத்து நிமித்தமாக வந்ததென்று சொல்லவு மெண்ணவுங் கூடாது. இதிலே மிகவுமறிய வேண்டின வொரு விசேஷமுண்டு அதை வருகிற பாடத்திலே வெளிப்படுத்தக் கடவோம்.

௨௧-ம் பாடம்.

அனந்த ஞானமும் தயையுமா யிருக்கிற கர்த்தரானவர் பிண்டமாகிற சரீரத்திலே பலபல அவயவங்களை யுண்டாக்கினதும் அசனமென்கிற பிரசாதத்தினால் அவையவங்களுக்குப் பலம் அழகு முதலான நன்மைகளு வரத்தக்கதாகக் கட்டளை யிட்டார். அத்தன்மைபோல அண்டமாகிற சரீரத்துக்குப் பலபல அவையவங்களாகிற சிறியவர் பெரியவர்கள் முதலான பேர்களும் வெவ்வேறே அந்தஸ்திலே யிருந்தாலும் திவ்விய அசனமாகிற பரமசத்தியப் பிரகாசத்தினாலே பலபல அவையவங்கள் போலே வெவ்வேறந்தஸ்துள்ள மனுஷரென்னப்பட்ட யாவருக்குந் தேவ இஷ்டமுங் கரையேற்றமும் வரக்கட்டளையிட்டார். பின்னையும் அசனமானது வாய் வழியாகச் சென்று அவையவங்களுக்குள்ளே பரவிப்போகுமாப் போலே வாய்போலே யிருக்கிற குருவினுடைய வுபதேசத்தின் வழியிலே பலபல அவையவங்களாகிற வெவ்வேறே அந்தஸ்துள்ள மனுஷரென்னப்பட்ட யாவருக்கும் அசனமாகிற பரமசத்தியமானது சென்று வருமென்கிறதுக்குத் தப்பாது. இந்த விஷயத்திலே யறியவேண்டினதாவது. வாயின் வழியாக வுள்ளே தரிக்கிற அசனத்தின் பிரயோசனமானது பிண்டமாகிற சரீரத்தினுடைய வேற்றுமையுள்ள அவையவங்களினாலே அவசியமாய்ச் சுவீகரிக்கப்படுமொழியச் சுவிகரியாதிருக்கக்கூடாது. அண்டமாகிற பெரிய சரீரத்தினுடைய அவயவங்களான பலபல அந்தஸ்துள்ள மனுஷரானபேர்களோ வென்றா லிப்படிப்பட்ட அவையவங்கள் தனித்தனியே சுவாதந்திரியமுள்ளவைகளா யிருக்கக்கொள்ள வாயாகிற குருவானவர் கொடுக்கிற திவ்விய பக்ஷணப்பிரசாதமாகிற பரமசத்திய வுபதேசத்தை அப்படிப்பட்ட அவையவங்களான மனுஷரானவர்கள் கேட்டு அதின்படியே நடக்கவேணுமானால் அப்படியே நடப்பார்கள். குருவினுடைய வுபதேசத்தைச் சட்டைபண்ணாமல் அதைத் தள்ளவேணுமானால் அதைத் தள்ளலாமொழிய மற்றப்படியில்லை. ஆனபடியினாலே அப்படிப்பட்ட வுபதேசமாகிற திவ்விய அசனத்தைப் போசிக்கத்தக்க காலமுடிந்த பிற்பாடு போசனம் பண்ணின அவையவங்களுக்குக் கரையேற்றமாகிற நித்திய சீவனமானது வருமொழிய போசனம் பண்ணாத நிர்ப்பாக்கிய அவையவங்களுக்கு நரகத்தினுடைய சாகாத சாவுபலிக்கு மென்கிறதுக்குத் தப்பாது.

இந்தச் சத்திய விசேஷத்தை வேறொருவகையுள்ள வுவமையினாலே துலக்கமாக வெளிப்படுத்தலாம். யுத்தகால முண்டாயிருக்கையிலே மகாராசாவான வொருவன் தனது கோட்டையை ரக்ஷிக்கவேணு மென்று தனக்குக் கீழாயிருக்கிற மனுஷரைப் பார்த்து சிலபேர்களை யொரு கொத்தளத்திலே வைப்பான். வேறே சிலபேர்களைக் கொம்மையன்னடையிலே நிறுத்துவான். வேறே சிலபேர்களை அந்தந்த மூலையிலே யிருக்கக் கட்டளையிடுவான். வேறே சிலபேர்களை வாசலிலே காத்திருக்கச் சொல்வான். வேறே சிலபேர்களை யார்ப்புக்கோட்டையிலே திரியச்சொல்லுவான். இந்தடைவாக மேலுங் கீழுமாயிருக்கிற பலபல ஸ்தலங்களிலே தனது மனுஷரை யிருக்கக் கட்டளையிடுவான். இப்படிப்பட்ட ராசாவானவன் கோட்டையை ரக்ஷிக்கவேணு மென்று கோட்டையினுடைய நன்மையானது மாத்திரமுத்தேசித்து மேலுங்கீழுமாயிருக்கிற பலபல ஸ்தலங்களிலே தனது மனுஷரை யிருக்கக் கட்டளையிட்டானென்று சொல்லவேணு மொழிய அவனவன் முகத்தினழகைப்பார்த்து நீ மேலான ஸ்தலத்திலேயிரென்றும் நீ கீழான ஸ்தலத்திலே நில்லென்றுஞ் சொன்னானென்று சொல்லக்

கூடாது. ஆனால் யுத்தத்தினுடைய காலமானது முடிந்த பிற்பாடு அவனவன் யுத்தம்பண்ணினதையும் பண்ணாததையுஞ் சத்துருக்களுக்குக் கொடுத்ததையுஞ் சத்துருக்களைத் தள்ளிச் செயித்ததையும் ராசாவானவன் பார்த்து அவனவன் பண்ணின வூழிய துரோகங்களுக்குத் தக்க ஆக்கினை சம்பாவனை கொடுப்பானென்கிறதுக்குத் தப்பாது.

அவ்வண்ணமே நீதியுபாபரனான ராசாவானவன் மேலுங்கீழுமா யிருக்கிற பல பல ஸ்தலங்களிலே அவனவனை யிருக்கக் கட்டளையிடும்போது கோட்டையினுடைய சாதாரண ரக்ஷணையாகிற நன்மையைப் பார்த்தானொழிய அவனவன் பண்ணின கர்மங்களையானாலும் அவனவன் முகத்தினழகை யானாலும் பார்த்து மேலுங் கீழுமாயிருக்கிற ஸ்தலங்களிலே யவனவனை நிறுத்தினானென்று சொல்லவுங் கருதவுங்கூடாதென் றிருக்கையிலே யுத்தத்தினுடைய காலமானது முடிந்த பிற்பாடு அவனவன் பண்ணின கர்மங்களைப் பார்த்து ஆக்கினை சம்பாவனையைக் கொடுப்பானொழிய மற்றப்படியல்ல. அத்தன்மைபோல் முடிவில்லாத நீதியுந் தயையுமாயிருக்கிற கர்த்தரானவர் அவனவனை நவமாகவுண்டாக்கி லோகமுஞ்செவ்வையாய் நடக்கிறதுக்கு அவனவனை மேலுங்கீழுமா யிருக்கிற ஸ்தலங்களுக்குள்ளே யொரு ஸ்தலத்திலே நிறுத்தவேணு மொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யுயர்ந்த ஸ்தலத்திலே அநேகரை யிருக்கப்பண்ணி வேறே சிலபேர்களைக் கீழான ஸ்தலத்திலே நீசராயிருக்கக் கட்டளையிட்டார். இப்படிப்பட்ட அந்தஸ்துகளிலே யெண்ணப்படாத மனுஷரை யிருக்கக் கட்டளையிடும்போது லோகமானது நன்றாய் நடக்கவேணுமென்கிற நன்மையைப் பார்த்தாரொழிய மற்றப்படியல்ல. லோகத்திலே யிருக்கிற மனுஷர் பாவமாகிற சத்துருக்களைத் தோற்கடிக்கப் பண்ணுகிறதென்கிறதுந் தர்மமாகிற செயம் லோகத்திலே யுண்டாகப் பண்ணுகிறதென்கிறதும் நீதியுள்ள கிரமமா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட கிரமமானது லோகத்தினுடைய நன்மையென்று சொலப்படும். ஆதலாலே மனுஷரென்னப்பட்ட யாவரையுங் கர்த்தரானவர் பலபல அந்தஸ்துக்களிலே யிருக்கப் பண்ணும்போது லோகத்திலே முன் சொல்லப்பட்ட நன்மை யுண்டாகவேணுமென்று பார்த்தாரொழிய நவமாக அவராலே யுண்டாக்கப்படுகிற பேர்கள் பண்ணின பாவபுண்ணியங்களுமில்லை அவர்களாலே பண்ணப்படாததிலே கர்த்தரானவர் பார்க்கத்தக்கது மொன்றுமில்லை. ஆனால் கர்த்தருடைய கட்டளைப்படியே அவனவன் தனது அந்தஸ்திலே யிருந்துகொண்டு நன்றாய்ப் பாவங்களாகிற சத்துருக்களோடே யுத்தம் பண்ணினதையும் பண்ணாததையுஞ் சகல நன்மை சொரூபமான கர்த்தனுக்கு விரோதமா யிருக்கிற பொல்லாப்பாகிற பாவத்துக்கு உள்ளாயிருந்ததையும் உடன்பட்டதையும் அதைத் தள்ளிச் செயித்ததையுங் கர்த்தன் கற்பித்த புண்ணிய நெறியிலே நடந்ததையும் பிரயாசத்துக்குப் பயப்பட்டும் புண்ணியவழியிலே நின்று திரும்பிப் பள்ளத்திலே வேணுமென்று விழுந்ததையும் அப்படிப்பட்ட அந்தந்த அந்தஸ்துகளிலே யிருக்கிற மனுஷர்களினாலே பண்ணப்பட்ட தர்மாக்கங்களையுஞ் சுகிர்தகர்மங்களையுங் குறையற்ற நீதிபரரான கர்த்தரானவர் பார்த்து அப்படிப்பட்ட கர்மங்களுக்கு ஆக்கினை சம்பாவனை பண்ணுவாரென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே அவரவரைக் கர்த்தர் நவமாயுண்டாக்கி அவரவரை மேலுங்கீழுமாயிருக்கிற அந்தஸ்திலே வைக்கிறதுக்கு அவரவர் பண்ணின பாவபுண்ணியத்தைப் பாராமல் உலகமானது நன்றாய் நடக்கவேணுமென்கிற ஞாயத்தையுஞ் சகல அந்தஸ்துக்களிலே யிருக்கிற மனுஷர்களினாலே தர்மசெயமாகிற நீதியுள்ள கிரமம் லோகத்திலே யுண்டாகவேணுமென்கிற நன்மையையும் பார்த்திருக்கிற கர்த்தரானவர் அ

னவன் தனது அந்தஸ்திலே யிருந்துகொண்டு பிரயாசைப்பட்டுப் பலன் பெறுகிற காலம் மரணத்து நிமித்தமாக அவனவனுக்கு முடிந்து நித்தியத்தோடனுபவ காலம் வந்திருக்கையிலே அவனவன் பண்ணின பாவபுண்ணியங்களைப் பார்த்துப் பாவ புண்ணியத்துக்கொத்த ஆக்கினை சம்பாவனையையு மெப்போதும் அவனவன் அநுபவிக்கிறதுக்கு நீதிபரனான கர்த்தரானவர் கட்டளையிடுவாரொழிய மற்றப்படியல்ல.

இத்தருவத்திலே மூடராயிருக்கிற பேர்கள் கேட்கிற கேள்வியும் அதுக்கான பிரத்தியுத்தரமும் அறியவேண்டினதாகும். அவர்கள் கேட்கிற கேள்வி யாவது ஒருவனிடத்திலே பாவபுண்ணியங் கலந்திருந்தால் அவனுக்குப் போம் வழி யென்ன பாவபுண்ணியத்தையுஞ் சுபாவ சொரூபத்தையு மறியாததினாலே தெளிவற்றவர்க ளிப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கிறார்க ளொழியப் பாவ புண்ணியத்தினுடைய சுபாவ சொரூபத்தை யின்னதென்றறிந்தா லிப்படிப் பட்ட அர்த்த சந்தேகத்தைக் கேட்கமாட்டார்கள். இந்தச் சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தரமாவது. யாதொருத்தன் அநேகம் புண்ணியங்களைப் பண்ணின பிற்பாடு கனமான பாவத்தைப் பண்ணினால் அப்படிப்பட்ட பாவத்து நிமித்தமாகத் தேவவிஷ்டப் பிரசாதத்தைப் போக்கடித்து ஆன பச்சாத்தாப நிமித்தமாகப் பாவத்தைத் தள்ளாதிருந்தாற் கர்த்தனுடைய விஷ்டத்தைத் திரும்பவரப்பண்ணும் விருத்தியுமில்லாதிருக்கிறது பாவ அவஸ்தையென்று சொல்லப்படும் இப்படிப்பட்ட அவஸ்தையிலே யிருக்கிறவன் மரணத்தை யடைந்தா லிப்படிப்பட்ட பாவத்தின் அருவருப்பை நீதிசொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் பார்த்து ஆன நரகத்தின் முடியாத வேதனையை யநுபவிக்கக் கட்டளையிடுவாரொழிய மற்றப்படியல்ல. அவனவன் முன்னே பண்ணின புண்ணியங்களைப் பாழ்த்தத்தக்கதாகக் கணக்கிலே யெனாகிற ஞாயமுள்ள கிரமமானது லோகத்திலே நடந்துவருகிற அடைவுள்ள ஆசாரத்தினாலே நல்லதா யிருக்கிறதென்று கண்டுபிடிக்கலாம்.

இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்டவு [illegible] வழியினுலே பூலோகத்திலே திரிகிற யெண்ண [illegible] த தெளிவற்ற மானிடர்க்குச் சம்பவிக்குஞ் சோர்வெருமோசத்தை இத்தனைவரை அத்தோடே யோசித்துக் [illegible]கலாம் அதேதெனில் பூலோகத்திலே திரிகிற மனுஷரென்னப்பட்ட யாவரும் குறையற்ற [illegible]த்தை யனுபவிக்கிறதுக்கு மிகவும் ஆசைப்படுகிறதினுற் பூமியிலே திரிகிற பேர்களெல்லாருந் [illegible] யுத்தேசித்துப் பொறுக்கப்படாத தாகமுள்ளவனுக்குச் சமானமா யிருக்கிறார்களென்று சொல்லக்கடவோம். சலத்தின்பேரிலே யுண்டாயிருக்கிற தாகத்தைத் தீர்க்கிறதுக்கு வல்லதாயிருக்கிற நிர்மலசலமானது வுண்டென்கிறாப்போலே மனுஷரென்னப்பட்ட யாவர்க்கு முண்டானகுறையற்ற சுகானுபவத்தின் பேரிலே தாகமாகிற ஆசையைப் பரிபூரணமாகப் பூரிக்கிறதுக்குங் குறையற்ற அமிர்தமான சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் வல்லவராயிருக்கிறா ரென்று சந்தேகமற முழுமனதோடே அங்கீகரிக்கத்தக்க சத்தியவிசேஷமாமே. சலத்தின்பேரிலே யுண்டாயிருக்கிற தாகத்தைத் தீர்க்கிறதுக்கு நிர்மல சலமானது உபாயமாயிருக்கிறதொழிய வேறேயுபாயங் காணமாட்டாதென்கிறாப்போலே குறையற்ற சுகானுபவத்தின்பேரிலே மனுஷனுக்குண்டாயிருக்கிற தாகமாகிற ஆசையைப் பூரிக்கிறதுக்கு அளவறுக்கப்படாத பரமானந்த சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் [illegible]க்கருண்டு. அப்படிப்பட்ட பராபரவஸ்துவைப் பிரத்தியக்ஷதெரிசனத்தினுலேயுங் குறையற்ற [illegible]லேயு மடைகிறதென்கிறது குறையற்ற சுகத்தின்பேரிலே மனுஷனுக் குண்டாயிருக்கிற [illegible]ாகிறவாசையைப் பூரிக்கிறதுக்கு இவ்விய திருவுளப்படியே காணப்பட்ட மெய்யான வுபாயமொழிய வேறே யுபாயதந்திரங்கள் காணமாட்டாதென்று சற்றுமேனுஞ் சந்தேகமில்லாமற் சம்மதப்படக்கடவோம். இதிப்படி யிருக்கையிலே தெளிவற்ற மனுஷரானவர்கள் குறையற்ற சுகத்தை யனுபவிக்கத் தங்களுக்குண்டான திருப்தியில்லாத ஆசையைத் திருப்தியடையப் பண்ணுகிறதுக்கு வல்லவராகிற பரமானந்த சொரூபமான சர்வேசுரனை விட்டுச் சுகானுபவ விஷயக ஆசையைப் பூரிக்கிறதுக்குப் பூமியிலுண்டாயிருக்கிற தூரத்திலுள்ள பொய்யான செல்வங்களை மிகவும் [illegible] மெய்யெண்ணப்படாத வுபாயங்களினுலே யதுகளைத் தேடும்போது தாகத்தைத் தீர்க்கிறதுக்கு வல்லதாயிருக்கிற நிர்மலசல பானத்தை விட்டுத் தூரத்திலே சலம்போலே காண்பித்திருக்கிற கானலை

[illegible]யவேணுமென்றேடி [illegible] பிரயாசைப்பட்ட மதிகெட்டவனுக்குச் சரிசமானராயிருக்கிறார்களென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

[illegible] பூலோகத்திலே யுண்டாயிருக்கிற [illegible] சுகமென்னப்பட்ட [illegible] மெய்யான பாக்கியத்தினுடைய முன்சொல்லப்பட்ட லக்ஷணங்கள் காணமாட்டாதென்கிறதினுலே பூலோகத்திலே யுண்டாம் போகாதி பாக்கியங்களுக்கு மெய்யான செல்வத்தின் பேரானதும் சத்தியமான பாக்கியத்தினுடைய மேயமானதுஞ் செல்லாதென்றுஞ் சொல்லக்கூடுமொழிய மற்றப்படியல்ல. இதிப்படி யிருக்கையிலே கானலானது சலமாயிராதிருந்தாலுந் தூரத்திலே பார்த்தவனுக்கு அது சலம்போல் காண்பித்திருக்கிறாப்போலே [illegible] காண்பித்திருக்கிற போகாதி சுகங்களும் தன சம்பத்துக்களும் வெகுமானபெருமைகளும் பொய்யான பாக்கியங்களாயிருந்தாலும் மீதுகளில்லாதவனுகிற [illegible]த்திலே பார்த்தவனுக்கு மெய்யான பாக்கியங்களைப்போலே காண்பித்திருக்கிற [illegible] மற்றப்படியல்ல. ஆனபடியினுலே பாக்கியவானுயிருக்கவுஞ் சுகத்தையனுபவிக்கவும் [illegible] ஆசைப்படுகிற பேர்கள் தங்களுக்குச் செல்வமும் பாக்கியமும் போலே காண்பித்திருக்கிற போகாதி சுகங்களையுந் தனவெகுமானங்களையு மடைகிறதுக்கு மிகவும் [illegible]ாசைப்படுவார்கள். ஆனுல் [illegible] தேடுகிற [illegible] தனது [illegible] திரிமல் அதிகமான தவிப்பும் பிரயாசமுந் தனக்கு மிச்சமென்று கா[illegible] நன்மையாயிருக்கிற [illegible] செல்வமுமாகாமல் செல்வம்போலே காண்பித்திருக்கிற போகாதிசுகங்களை [illegible]த் துக்கங்களையும் வெகுமான பெருமைகளையுந் தேடிப்பிரயாசைப்ப[illegible] மதிகெட்டபேர்கள் சுகபாக்கியத்தின்பேரிலே தங்களுக்குண்டான வாஞ்சை [illegible] பிரயாசமுந் தவிப்புந் தங்களுக்கு மிச்சமென்று [illegible] கண்டுகொண்டு [illegible]றொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே லோகத்திலே யுண்டாயிருக்கிற செல்வ பாக்கியமென்னப்பட்ட யாவு மனுஷனுக்கவதிருபமான குறையற்ற பாக்கியமா யிருக்கமாட்டாதென்று [illegible]த்திலே யொப்புவித்தாப்போலே யாச்சுது. தெளிவற்ற பாவிகளினுலே [illegible] சுவர்க்கத்திலான [illegible]ஸ்தலங்களிலே அவதிருபமான குறையற்ற பாக்கியமானது மனுஷனுக்குக் கிடைக்குமோ இல்லையோவென்று வருகிற [illegible]லே வெளிப்படுத்தக் கடவோம்.

உ௭-ம். பாடம்.

ஸ்திரீபோக முதலான சுகங்களிலேயும் பலபல வெளிக்க [illegible]ங்களிலே விருந்து பெருந்தூதுகளிலேயும் தனமுதலான சம்பத்துகளைச் சம்பாதிக்கிறதினாலே யடையப்பட்டலான பிரயோசனங்களிலேயும் அடங்கியிருக்கிற செல்வமானது மெய்யானபாக்கியத்தினுடைய லக்ஷணங்களைக் கொண்டிராததினால் பூலோகத்திலே மனுஷனானவன் திரிகிறநாள்மட்டும் அவதிரூபமான குறையற்ற பாக்கியத்தை யனுபவிக்க மாட்டானென்று சிலபேர்கள் சம்மதப்பட்டு ஆத்துமத்தினுடைய மோக்ஷமானது பரலோக சம்மந்தமாயிருக்கிறதென்று சொல்லத்தக்கதொழிய மனுஷனானவன் பூலோகத்திலே வழிப்போக்கனாய்த் திரிகிறநாள்மட்டும் [illegible] பாக்கியமாகிற முத்தியையடையாமல் மரணத்தை மனுஷனானவன் அடைந்த பிற்பாடு சிவனானவதியாகிற வொடுக்கத்தை யடையுமென்றங்கீகரித்து இப்படிப்பட்ட விஷயத்தில் பூர்வகாலத்திலே அனைவராலே கற்பிக்கப்பட்ட வெண்ணப்படாத கதைகளைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே அக்ஞானமாகிற வந்தகாரத்தினாலே [illegible] கற்பிக்கப்பட்ட பாவிகளான பேர்கள் பூர்வகாலந் தொடுத்து எண்ணப்படாத மதங்களைக் கற்பித்து அப்படிப்பட்ட மதங்களிலே ஆத்துமத்தின் ஒடுக்கத்துக்கடுத்த பரஸ்பர விருத்தமான கதைகளை யெழுதிவைத்தார்கள். அப்படிப்பட்ட கதைகளைப் பத்தும் பத்தாயிரமாய்க் கொண்டோமானால் சர்வேஸ்வர விஷயக ஞானமில்லாமல் அஞ்ஞான முதலான வெண்ணப்படாத பாவங்களினாலே மதிகெட்டுப் போயிருக்கிற அந்தந்த தேசங்களிலுள்ள பேர்களிடத்திலே பரஸ்பர விருத்தமுள்ளதுகளுமாய் ஞாயமுள்ள கிரமமற்றவைகளுமாய்ச் சத்தியத்துக் கொவ்வாததுகளுமாயிருக்கிற வெண்ணப்படாத அப்படிப்பட்ட கதைகள் நடந்துவருகிறதினால் அதுகளை யெல்லா மொவ்வொன்றாயெண்ணி அனேக ஞாயங்களினாலே யாக்ஷேபம் பண்ணியதுகளெல்லா முழுத்தப்பறை விசேஷங்களாயிருக்கிற தென்றெருப்பிக்கிற தென்கிறது வெகுகாலப்படத்தக்க வேலைகாரியமும் அப்பிரயோசகப் பிரயாசமுமாயிருக்கிறதினாலே யிருக்கக்கொள்ள இப்படிப்பட்ட விருத்தத்துக்குத் துணியத்தக்கதாகக் கணக்கில்லை. ஆனபடியினாலே யிந்த விஷயத்திலே தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட [illegible] விசேஷங்களை மாத்திரஞ் சொல்லிக்காட்டி அதுகள் முழுத்தப்பறைகளென்றெருப்பிக்கும் ஞாயங்களினாலே யதுக்குச் சரியான அந்தஸ்திலே கற்பிக்கப்பட்ட எண்ணப்படாத மற்றுமுண்டான கதைகளைக் கண்டித்து அதுகளெல்லா முழுத்தப்பறைகளாயிருக்கிற தென்றெருப்புவிக்கத் தக்கதாக வழிதிறந்ததுக்குச் சமானமாயிருக்குமென்று சொல்லத்தகும்.

அவ்வண்ணமே பூலோகத்திலே திரிகிறமனுஷனானவன் பண்ணின புண்ணியத்தின் பலன்களைப் போசிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட கதியாகிற சுவர்க்கமானது யிந்த விஷயத்திலே முக்கியமாகப் பத்தும்பத்தாய்ப் பராமரிசித்து ஆராய்ந்து கொள்ளத்தக்க விசேஷமென்கிறதினால் அப்படிப்பட்ட பாவிகள் கற்பித்த பிரகாரமாகச் சுவர்க்கமானது இன்னதென்றும் அதிலே நடந்துவருகிற மேரையானது எப்படிப்பட்டதென்றும் கடைசியாய் அதெல்லாம் சத்தியத்துக் கொவ்வாத தப்பறை யென்றும் வெளிப்படுத்தக் கடவோம்.

அதெப்படியென்றால் புண்ணியாத்துமாக்களாயிருக்கிற பேர்கள் பூலோகத்திலே புண்ணிய சரித்திரங்களாய் நடந்துவிட்ட பிரயாசங்களுக்கு அவதிரூபமாகிற ஸ்திரீபோக முதலான சுகங்களை யனுபவிக்கிறதுக்குத் தெளி

வற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட ஸ்தலமானது சுவர்க்கமென்று சொல்லப்படும். அதெதென்றால் மாலை, சந்தனம், ஸ்திரீகளினாலே வருகிற சுகங்களுக்கு [illegible] பதத்திலே சொல்லப்படும். அடைகிற [illegible] கம், என்கிறபதத்துக்கு அர்த்தமாகும் ஆதலாலே யிவ்வுலோகத்திலே சரீரத்தோடே கூட [illegible]னானது பண்ணின புண்ணியங்களுக்காக பலனாகிற மாலை, சந்தனம், ஸ்திரீகளினாலே வேணிக்கிற போக முதலான சுகத்தைப் பவுதிக சரீரத்தைவிட்ட சீவனானது அனுபவிக்கத்தக்கதாக அந்த ஸ்தலத்துக்குச் சுவர்க்கமென்கிற நாமமானது செல்லுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே மிருகங்களுடைய மைத்துனத்தைக் காட்டிலும் தேவர்களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது கெட்டமைத்துனமென்று சொல்லப்படும். ஆனபடியினாலே தேவர்களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது முழு [illegible]க்கிரமமென்றும், மோக்ஷ சம்மந்தமாயிருக்கிற கனமான பாவமென்றும் அங்கீகரிக்க வேணுமென்றிருக்க அப்படியல்ல. அவ்வண்ணமே சுவர்க்கத்திலே புண்ணியவான்கள் பண்ணின புண்ணியங்களுக்கான பலனை யனுபவிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட ஸ்தலத்தை விசாரிக்கும்போது பூலோகத்திலே நாய் நரி முதலான ஜெந்துக்களோடே அழிந்துபோகிற சரீரத்தோடே [illegible] யில் எண்ணப்படாத மகாமகாப்பட்ட பாவங்கள் நிமித்தமாக வெறுக்கப்படத்தக்க பாவிகள் பிரபுக்கள் முதலான பேர்கள் வாசமாயிருக்கிற வுத்தியான சிங்காரத்தேர் [illegible] இவை முதலான அழிந்துபோகிற செல்வ அலங்காரத்தை யுடைத்தான [illegible]மனைகளுக்குப் பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனை யனுபவிக்கிறது [illegible] ஆன ஸ்தலமாகிற பரலோகமானது சமானமாயிருக்கிற தென்று சொல்லிக்கொண்டு வருகிறார்களென்கிறதினாலே தனது சரீரநிக்கிரகம் பண்ணிக்கொண்டு [illegible]றவனுக்கு இப்படிப்பட்ட அழிந்துபோகிற செல்வங்களை விட்டு நிர்மல [illegible]வழியிலே நடக்கவேணுமென்றனுபவித்த வருத்தங்களுக்கான பலனை [illegible]விக்கத்தக்கதாக அழிந்துபோகிற செல்வத்தை யுடைத்தான ஸ்தலமானது [illegible] கிடைத்ததென்று சொல்லக் கடவோம். ஆதலாலே புண்ணியவான்[illegible]யிருக்கிறபேர்கள் பாவத்திலே விழாதபடிக்குத் தாங்கள் அருவருத்துவிட்ட [illegible]லன்தானே பண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாக அடைந்தாப்போலே [illegible] அப்படிப்பட்ட சுகமுள்ள ஸ்தலமாகிற சுவர்க்கத்தைச் சீவன்களானது [illegible] மரணத்தால் நிமித்தமாகப் பவுதிக சரீரங்களைவிட்டு வேறே திவ்விய [illegible] சரீரங்களைக் கொண்டிருந்து அடையுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே சுவர்க்கமான சுகமுள்ள ஸ்தலத்திலே வேசிகளுடைய ஆடல் பாடல் நடந்து வருகிறதுக்குத் தம்புராதிகள் முதலான [illegible]வமாருண்டா[illegible]ருக்கிறார்களென்றும் அங்கங்கே தாங்கியிருக்கிற பஞ்சுமஞ்சக் கட்டில்களிலே புண்ணியவான்கள் படுத்துக்கொண்டிருக்க மகா[illegible]ப்பட்ட சவுந்திரியமுள்ள தேவிகள் பாடி யூஞ்சலாட மதுரமான பழங்களைப் பழுக்கிற விருக்ஷாதிகள் சாலையாகவிருக்க அங்கேயு மிங்கேயுந் திரிகிறதுக்கு விமானங்களும் ரதங்களுமுண்டாயிருக்க யிதுகள் முதலான செல்வபாக்கியங்களிலே யலங்கரிக்கப்பட்ட சுவர்க்க ஸ்தலமானது விளங்கியிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட ஸ்தலத்திலே புண்ணிய யாத்துமாக்கள் மறுப்படாத மலர்கிற புஷ்பங்களினாலே கட்டப்பட்ட மாலைகளை யிடைவிடாமல் தரித்து [illegible]மணித்திருக்கிற சுகந்த திரவியங்களைப் பரிபூரணமாகப் பூசி ரம்பை மேனகை யிவர்கள் முதலான மனோகர ரூபலாவண்ணிய முடைத்தான ஸ்திரீகளோடே கூட இராப்பகல் மைதுனம் பண்ணிக்கொண்டு வருகிற தென்கிறது [illegible]ப்

[illegible]ண்ணியங்களுக்கிதே பலனென்று தெளிவற்ற பாவிகளானபேர்கள் அங்[illegible]கொண்டு வருகிறார்களென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் பூமிலோகத்திலே புண்ணியாத்துமாக்கள் சர்வேசுவரன்கட்டளைப்படி [illegible]கேவிட்ட [illegible]புராதங்களும் அவர்களாலே யிருவருக்கப்பட்ட விஷயங்க[illegible]கிற பாவ காரணங்களும் மிகவும் பாவத்தை விலகியிருக்கிற சர்வேசுவரனு[illegible] புண்ணிய[த்]துக்குப் பலனாக வொப்புக் கொண்டாப்போலே யாச்சுது. ஆதலாலே சுவர்க்[க]சுவிஷேத்திலே மிகவும் காமாதுரராயிருக்கிற பாவிகளி[னா]லே கற்பிக்கப்பட்ட விசேஷங்களைத் தனித்தனியே யாராய்ந்துகொண்டு ய[ஞ்]ஞ[ங்]களெல்லாஞ் சகலஞா[ன]யத்துக்கும் நீதிக்குமொவ்வாதவைகளா யிருக்கிறதென்றிக்[க]ட்டிலே வெளிப்படு[த்]துக்கடவோம்.

அதெப்படியென்றால் அந்தந்த வியாபாரக் கிரி[யை]களிலே யபேக்ஷிக்கத்தக்க பிரயோசனமும் அவதியுங் காணப்பட்டால் அப்படிப்பட்ட கி[ரி]கையானது கிரமத்தோடே கூடியிருக்கிறதென்று சொல்ல[த்]தகும். அல்லது [கி]ரிகையிலே யபேக்ஷிக்கத் தக்க பிரயோசனத்தையும் அவதியுங் காணாதிருந்தோமானால் அப்படிக்கொத்த வியாபாரமானது அக்கிர[ம]மென்றும் அநியாயமென்றுஞ் சொ[illegible]மென்கிறதுக்[கு] [illegible]தகப்படத் தேவையில்லை. இப்படியுண்டா யிருக்கச்செய்தே ஸ்திரீபுமானுக்கு நடந்துவருகிற மைத்துனமாகிய வியாபாரத்தைப் பார்க்கும்போது புத்திரலாபமும் பிறந்தசந்ததியை ரக்ஷிக்கி[ற]தென்கிறதும் ஸ்திரீபூமானுக்கு நடந்துவருகிற புணர்ச்சியாகிற வியாபாரத்து[க்]கவதியும் பிரயோசனமுமா யிருக்கிறதென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணை[யி]ல்லை. இதெல்லாம் ஞானஉபதேசத்தி னிரண்டாங்காண்டத்திலே ஆறு, ஏ[ழு], எட்டென்கிற மூன்றுபாடங்களிலும் ஒப்பச்சொன்னோ மென்கிறதினாலே [இ]ல்லா மொப்புவிக்கப்பட்டதா யெண்ணிக்கொண் டிவ்விடத்திலே நடக்[கு]ம் விசேஷங்களைக் கொஞ்சத்துக்குள்ளே நடத்தக்க டவோம். அதெப்படியென்றா[ல்] புத்திரலாபமானது ஸ்திரீபூமான் சங்கத்துக்குப் பிரயோசனமா யிரு[க்கிற]தென்கிற சந்தேகமற்ற சத்தியமானது மத்தியானத்துச் சூரியபிரகாசத்[தைக்] காட்டிலும் பிரத்தியக்ஷ சத்தியமாயிருக்கச் செய்தே காமமுதலான பாவ[ங்க]ளினாலே கண்ணற்ற மதிகெட்டவர்கள் அப்படிப்பட்ட சத்தியத்தைச் ச[ற்]குருவுபதேசத்தி னிமித்தமாகவாகிலுங் கண்டுபிடியாத போதே [illegible] முதலான புத்தியில்லாத செந்துக்களண்டையிலே போயதுகள் நடக்கிற நட[க்]கையைப்பார்த்து இப்படிப்பட்ட சத்தியத்தைத் தெளியக்கடவார்கள். அ[து]ப்படியென்றால் மைதுனவி[ஷய]த்திலே புத்தியில்லாத செந்துக்க ளானவை யெப்போதும் நடக்கிறது[illegible]யை விசாரிக்குமிடத்தில் புத்திரலாபம் வருகிற[து]க்குக் கெற்பந்தரிக்கத்தக்க காலத்திலே மாத்திரம் ஆண்பெண் செந்துக்களி[ர]ண்டும் புணர்ச்சிபண்ணிக்கொண்டு வருகிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறோ[ம]ொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்றால் சகலத்தையுந் தப்பில்லாத கிர[ம]த்தோடு நடத்துகிற கர்த்தரானவர் புத்தியுங் குறையற்ற சுவாதந்திரியமுமில்லாத செந்துக்கள் வர்த்திக்கிறதுக்குப் புணர்ச்சியாகிற வுபாயத்தைக் கட்ட[ளை]யிட்டபோதே இப்படிப்பட்ட புத்தியில்லாத செந்துக்களுக்குக் [illegible] குணத்தினிமித்தியமாகப் புத்தியின் குறையற்ற சுவாதந்திரியமில்லா[த செந்]துக்கள் நடக்கிற அடைவிலே கர்த்தர்தானே பிரேரகனா யிருக்கிறாரென் [று சொ]ல்லத்தகும். முடிவில்லாத ஞானசுரூபமா யிருக்கிற கர்த்தரானவர் ப[ண்]ண[ு]கிற கிரிகைக்குப் பிரேரகனாயிருக்கும்போது அப்படிப்பட்ட கிரிகையா[ன]து [illegible]லாக் கிரமத்தோடு பொருந்தியிருக்கிற கிரிகையாயிருக்குமொழிய ம[ற்றப்படியல்ல.]

[illegible]படியல்ல. இதுகாரணமாகக் கர்ப்பந்தரிக்கிறதுக்குப் பக்குவமான காலத்தி[லே]மாத்திரம் புத்தியில்லாத செந்துக்கள் புணர்ச்சியைப் பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் பிரேரகன்மேனாயாய்க் கட்டளையிட்டபோதே ஸ்திரீபுமான் சங்கத்துக்குப் புத்திரலாபமானது தானே பிரயோசனமும் அவதியுமாயிருக்கிறதென்று சொல்லக்கடவோமொழிய மதிகெட்டவன் முதலாய் அதிலே யல்லவென்று சொல்லுகிறதுக் கவகாசங்காணமாட்டான். ஆகையாலே புத்திரலாபத்து[க்]கா[க] ஸ்திரீபூமான் பண்ணிக்கொண்டு வருகிற புணர்ச்சியானது கிரமமுள்ள கிரிகையா யிருக்கச்செய்தே காமமாகிற வியாதியினால் ஒருக்காலானாலும் புத்திரலாபத்தை யபேக்ஷியாத மைத்துனமானது ஞாயமில்லாத கிரிகையும் அக்கிரமமுமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

இதெல்லா மோரற்பமானாலுஞ் சந்தேகமில்லாம லொப்புக்கொள்ளத்தக்க சத்தியவிசேஷமா யிருக்கச்செய்தே மிகவுங் காமாதுரரா[ன] [illegible]லே கற்பிக்கப்பட்ட சுவர்க்கஸ்தலத்தை யடைந்திருக்கிற புண்ணியாத்துமாக்களானவர்கள் பண்ணிக்கொண்டுவருகிற மைத்துனவகையை விசாரிக்கு[ம்]போது பூலோகத்திலே [illegible]வேசிகளோடே யொருக்காலும் புத்திரலாபத்தை [அபே]க்ஷியாதவர்களாலே பண்ணப்படுகிற மைத்துனத்தைக் காட்டிலுந் தேவர்களாலே பண்ணப்படுகிற மைத்துனமானது [illegible]ட மைத்துனமென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே தேவர்களாலே பண்ணப்படுகிற மைதுனமானது முழு அக்கிரமமென்றும் மோகசம்பந்தமாயிருக்கிற கனமான பாவமென்றும் அங்கீகரிக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே சுவர்க்கத்திலே பண்ணப்படுகிற மைத்துனமானது அக்கிரமமும் பாவமுமாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறதினால் பாவமற்ற சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் அப்படிப்பட்ட பாவமானமைத்துனத்தை விலக்குவாரென்று சொல்லவேணுமொழிய அதைப்பூமியிலேபண்ணப்பட்ட புண்ணியங்களுக்குப் பலனாகக் கட்டளையிட்டாரென்று முழுப்பயித்தியங் கொண்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான். இதுதவிர சுவர்க்ககாமனாயிருக்கிறவன் யக்கியம்பண்ணக் கடவனென்கிற வசனத்திலே அடங்கியிருக்கிற விபரீதமேரையை ஆராய்ந்துகொள்ளக்கடவோம்.

அதெதென்றால் யக்கியம்பண்ணிச் சுவர்க்கத்தையபேக்ஷிக்கிறவன் அருவருப்புள்ள சுகத்தின்போகத்தைமாத்திரம் பிரதானமாய் அபேக்ஷிக்கிறானென்று சொல்லவேண்டியிருக்கையிலே இப்படிப்பட்ட பலனாகிற போகத்தின் சுகமானது பூலோகத்திலேயக்கியமில்லாமலெறிஞ்சுபோட்ட தூர்த்தனாலே ய[னு]பவிக்கப்படுகிற செளவமாயிருக்கிறதென்று கண்டுகொண்டு வருகிறோம். [illegible]யத்துக்கும்புண்ணிய சரித்திரங்களுக்கும் பரலோகத்திலே வரத்தக்க பலனாயிருக்கிறதென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. யக்கியத்தைப்பண்ணுகிற தீக்ஷதனுக்குச் சமானமாகத் தீக்ஷதனுடைய ஸ்திரீயாகிற நங்கையார் தனது புருஷனோடேகூடச் சரியாகயக்கியம் பண்ணுகிறாளென்று சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே அநேகம் வேசிகளோடே கூட மைத்துனம் பண்ணித் தீக்ஷதனானவன் பண்ணின யக்கியத்துக்குப் பலனை யனுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்டு [ய]க்கியசாலே, யேறும்போது சரியாக யக்கியம் பண்ணுகிற நங்கையாரானவள் [சு]வர்க்கத்திலே அநேகம் புருஷரோடேகூட மைத்துனம் பண்ணவேணுமென் [று] அபேக்ஷித்துத் தனது புருஷனோடே கூடத் தீக்ஷத யக்கியத்தைச் சரியாக [நி]றைவேற்றுகிறாளென்று சொல்லத்தக்க ஞாயமா யிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. அப்படியே நங்கையாரானவள் யக்கியம் பண்ணுகிறதுக்கு முன்

னுபவித்தபின் பேருக்குச் சுண்ணும்பிட்டேனென்று லெச்சையோடே சொல்லுகிறதுள்ளதாய் பண்ணுகிற யக்கியத்துக்குப் பலனாக அனேகம் பேர்களோடே மைத்துனம் பண்ணுவேனென்று வெட்கமில்லாமற் சொன்னப்போலே யிச்சகதானால் நங்கையாரானவள் தனது பத்தாவோடே மாத்திரஞ் சுவர்க்கத்திலே போகிப்பாளென்று தெளிவற்ற பாவிகள் சொல்லி நடத்திக்கொண்டு வருகிற வார்த்தையானது ஞாயத்துக்கொவ்வாத தப்பறை விசேஷமா யிருக்கிறதென்று இந்தடைவிலே கண்டுபிடிக்கலாம்.

அதேதென்றாலனேகம்பேர்களோடே பண்ணுகிற மைத்துனமானது யக்கியம் பண்ணுகிற பத்தாவுக்குப் பலனாயிருக்கும் போது அனேகம் பேர்களோடே கூடப்பண்ணுகிற மைத்துனமானது அவனுக்குச் சரியாகக்கூட யக்கியம்பண்ணுகிற நங்கையாருக்கு வரத்தக்க பலனென்றும் அங்கிகரிக்கத் தக்கதுமல்லவோ. இந்த நங்கையாரானவள் சுவர்க்கத்துக்குப் போகிறதுக்கு முன்னே பத்தாவானவன் செத்துச் சுவர்க்கத்துக்குப் போனால் திவ்விய சரீரத்தையடைந்து யக்கியத்தினுடைய பலனாகிற சுவர்க்கத்திலே யிருக்கிற வேசிகளோடேகூட மைத்துனம் பண்ணிக்கொண்டு வருகிறானென நங்கையாரும்போது தீக்ஷதனானவன் சாகிறதுக்கு முன்னே நங்கையார் செத்துச் சுவர்க்கத்திலேபோய்த் திவ்விய சரீரத்தைக் கொண்டிருப்பாளானால் அனேகம் புருஷர்களோடே கூடத்திரிவளென்றும் ஒப்புக்கொள்ளத்தக்க ஞாயமாகும். இப்படி சொல்லாவிட்டால் நங்கையார் பண்ணின யக்கியத்துக்குச் சுவர்க்கத்தை யடைந்தபின் அனேகநாள் யக்கியத்தின் பலனை யனுபவியாமற் போனளென்று சொல்லவேணும். அல்லது பத்தாவான தீக்ஷதன் குறையற்ற விதமாகச் சன்னியாசம் பண்ணினனென்று சொன்னோமானால் அப்படிப்பட்ட பத்தாவானவன் சுவர்க்கத்துக்குப் போகாமல் மோக்ஷத்தை யடைவானென் றிவர்களுடைய மதத்திலேயான சித்தாந்தமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட தறுவாயிலே அப்பாவி நங்கையாரானவள் சுவர்க்கத்திலே விரத்தினியாயிருந்து தான்பண்ணின யக்கியத்துக் கேன்னபலனை யனுபவித்தாளென்று சொல்லப்போகிறோம்.

இதல்லாமல் திவ்வியசரீரத்தை யடைந்து சுவர்க்கத்திலே யிருக்கிற ஸ்திரீகளெல்லா மொன்றில் வேசிகளா யிருக்கிறார்கள். அல்லது வேசிகளோடே மைத்துனம் பண்ணுகிற பேர்களா யிருக்கிறார்களென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட ஸ்தலத்திலே யிருக்கிற நங்கையாரானவள் விரத்தினியா யிருப்பாளென்று அங்கிகரிக்கத்தகாது. அதேதென்றால் சுவர்க்கத்தை யடைந்த அப்பாவி நங்கையாரானவர்கள் விரத்தினியாயிருக்க மனசாயிருந்தாலுஞ் சுவர்க்கத்திலேயிருக்கிற காமாதுரர்களுடையவும் வேசிகளுடையவும் சந்தோஷத்தினாலே யழிந்துபோவாளென்று சொல்லக் கணக்கொழிய மற்றப்படியல்ல, கடைசியாய் யக்கியம்பண்ணுகிற தீக்ஷதருக்குள் ஒருத்தனானவன் சுவர்க்கத்திலே போய் ஸ்திரீகளோடே மைத்துனம்பண்ணுமல் குறையற்ற விரத்தனாயிருப்பானென்று சொல்லப்படாததுபோலே தீக்ஷதரோடேகூட யக்கியந்தைச் சரியாகப் பண்ணின நங்கையாரானவள் சுவர்க்கத்திலேபோய் விரத்தினியாயிருப்பாளென் றொப்புக்கொள்ளக் கடவதல்ல, அவ்வண்ணமே யக்கியம்பண்ணின அப்பாவி நங்கையாரானவள் தெளிவற்ற பாவிகளினாலே யக்கியத்துக்குக் கற்பிக்கப்பட்ட பலனை யிந்தப்பூமியிலே தானே யனுபவித்தாலே யனுபவித்தாள். மரணத்துக்குப் பிற்பாடு யக்கியத்தின் பலனை யனுபவிக்கிறதுக்குச் சுவர்க்கஸ்தலத்தை யடைவாளென்று கீர்த்தனையிலே காணப்பட்ட சொற்பனம்போலே அங்கீகரிக்கத்தக்க விசேஷமா யிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

இப்படிப்பட்ட அபத்தவிசேஷந்தவிர சுவர்க்கவிஷயத்திலே வெட்கங்கெட்ட பாவிகளினாலே கற்பிக்கப்பட்டவேறே அனேகந் தப்பறை விசேஷங்களுமுண்டு. அதுகளுக்குள் ளொன்றிரண்டாராய்ந்து கொள்ளக்கடவோம். அதெப்படியென்றால் திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற புண்ணியவந்துமாக்கள் சுவர்க்கத்திலேயிருக்கிற ரூபலாவண்ணியமுள்ள வேசிகளோடேகூடப் பண்ணுகிற மைத்துனத்தி னிமித்தியமாகப் பூமியிலே திரிகிற யெறிந்துபோட்ட காமாதுரர்போலே திருத்தியையடைகிறார் களில்லையென்று சொல்லக்கடவோம். இந்தடைவாகச் சுவர்க்கத்திலே யிருக்கிற சகலவேசிகளோடே திரிகிற திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற தேவேந்திரனானவன் அப்படிப்பட்ட வேசிகளோடே அவன் பண்ணிக்கொண்டு வருகிற மைத்துனத்தி னிமித்தியமாகத் தனது போகத்திலே திருத்தியடையாததினாலே பூலோகத்திலே திரிகிற ஸ்திரீகளை யாசைப்பட்டு யங்கங்கே அவர்களோடே மைத்துனம் பண்ணுகிறதுக்கு வருந்தினனென்றெண்ணிக்கொண்டார்கள். அவ்வண்ணமே கவுதமரிஷியினுடைய ஸ்திரீயாகிற அகலியாதேவியோடே மைத்துனம் பண்ணிப் பிறப்படுகிறபோது ரிஷியாகிற கவுதமன் கண்டு யோனியையாசைப்பட்டதினாலே உன் சரீரமெல்லாம் யோனியாய்ப் போகக்கடவதென்று சபித்தானாம். அப்படிப்பட்ட சாபத்தினாலே தேவேந்திரனுக்குச் சரீரமெல்லாம் யோனியாய்ப் போனதினால் அவன் வெட்கப்பட்டுப் பிறப்படாம லிருந்ததினாலவனைக் குறித்து கௌதமனை பிரதிசாபம் பண்ணவேணுமென்று சுவர்க்கத்திலே யிருக்கிறபேர்கள் வேண்டிக்கொண்டார்களாம். அவர்களை வேண்டிக் கொண்டதினால் யோனியெல்லாம் கண்ணாய்ப்போகக் கடவதென்று பிரதிசாப மிட்டானாம். அவ்வண்ணமே யெங்கெங்கே நல்ல ஸ்திரீகளுண்டோவென்று கேட்கத்தக்கதாகத் தேவேந்திரனுக் கிரண்டுகண்போராமல் மைத்துனம்பண்ணத் தக்கவர்களான வெள்ளாட்டிக ளெங்கேயிருக்கிறார்களென்று தேடுகிறதுக்குக் கௌதமன் ஆயிரங்கண்களைக் கொடுத்தானென்று சொல்லுகிறதுக் கிடமாச்சுது. இப்படிப்பட்ட பாவத்தி னிமித்தியமாகச் சபிக்கப்பட்ட தேவேந்திரனானவன் தனது பீசத்தைப் போக்கடித்தானாம். தேவேந்திரனுக்கு ஸ்திரீபோகமில்லாமற் போச்சென்கிறதினா லுண்டாயிருக்கிற பிதிருக்கள் கண்டிப்பட்டுத் தேவேந்திரனானவன் கொண்டிருக்கிற திவ்விய சரீரத்துக்கு ஆட்டுடைய பீசத்தை யொட்டினார்க ளென்கிறதினாலே மேஷ விருஷணனென்கிற நாமமானது தேவேந்திரனுக்குச் சென்று வருகிறது இதுதவிர தமயந்தியென்கிற ராசகுமாரத்தியைத் தனக்குத் தமையந்தி பெண்டாட்டியா யிருக்கவேணுமென்று நளனைத் தூதனுப்பினனென்று சொல்லுகிறார்கள். தேவேந்திரன் தமயந்தியை யாசைப்பட்டாப்போலே வேறேசில தேவர்களும் இவள் பேரிலே மோகமாயிருந்து தங்களுக்குப் பெண்டாட்டியா யிருக்கத்தக்கதாக வருந்தினார்கள். அவளிவர்களை யெல்லாஞ் சட்டைபண்ணுமல் அருவருத்துத் தள்ளிப்போட்டு ராசாவாகிற நளனோடு விவாகம் பண்ணினளாம். ஆதலாலே திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற தேவர்களானவர்கள் திவ்விய சரீரத்தை யுடைத்தான வேசிகளோடே மைத்துனம் பண்ணுகிறது போருமென்றிராமற் பூமியிலே திரிகிற பவுதீக சரீரமுள்ள ஸ்திரீகளோடே மைத்துனம் பண்ணுகிறதுக்கு வருந்துகிறபோதே போகத்திலே அவர்களுக் குண்டாயிருக்கிற ஆசையானது திருத்தி யடையவில்லையென்று கண்டுபிடிக்காப்போலே யாச்சுது.

இந்தச் சத்தியத்தை யின்னமொரு பிரசித்த கதையினாலேயாப்பச் சொல்லக்கடவோம். அதேதென்றால் ரிஷியாகிற காலவனுக்கு மிகுந்த ரூபலாவண்ணிய முடைத்தான வேதமதி யென்கிற பெண்ணுண்டாயிருந்தாளாம். அவள்

தனது தகப்பனார் பூசை பண்ணுகிறதுக்குப் புஷ்பம் பறிக்கிற போது, சுதர்ச னுரு சுவர்ணனு மென்கிற இரண்டு தேவர்கள் விமானத்தி லேறிக்கொண் டு ஆகாச மார்க்கத்திலே போகிறபோது ரூபலாவண்ணியமுள்ள இந்த வேதமந் திரவாதியைப் பார்த்துக் [illegible] அவர்களைத் தங்களுக்கு [illegible] யிருக்கத்தக்க தாகக் கேட்டார்கள். அவர்கள் கேட்டதுக்கு வேதமந் திரவாதியானவன் தனது தகப்பனுடைய உத்தாரமில்லாமல் விவாகம் பண்ணமாட்டே னென்று தகப்பனுடைய உத்தாரங் கேட்டு அவருடைய உத்தாரத்தின்படியே விவாகம் பண்ணு வேனென்று சொன்னானாம். தேவர்கள் அவனுடைய மறுவுத்தாரத்தைக் கேட் டு அவனோடே மைத்துனம் பண்ணத்தக்கதாகக் கொண்ட ஆசையைத் தணி க்கமாட்டாமற் பலாத்காரத்தினாலே அவனைப் பிடித்திழுத்ததினாலே அவன் வாய்க் கூப்பிட்ட சத்தம் அநேகம் ரிஷிகளுக்கும் இவனுடைய தகப்பனுக்குங் கேட்டு அந்த ஸ்தலத்திலே கூடிவந்தார்களாம். அவ்வனைவருமவன் தேவர்கள் பண்ணின அநியாயத்தைப் பொறுக்கமாட்டாமல் [illegible] அவர்களையும் சபித்தானும், அதெப்படியென்றால பலாத்காரத்தினாலே [illegible] யைப் பிடித்திழுக்கிற தென்கிறது பிசாசுகளுக்கடுத்த வியாபாரமாயிருக்கிற தேயொ ழிய மற்றப்படியல்ல, ஆகையால் பிசாசுகளுக்கடுத்த வியாபாரத்தை நீங்கள் பண் ணினபோதே அப்படிப்பட்ட அக்கிரமத்தின் நிமித்தமாக நீங்கள் பிசாசுகளாய்ப் போவீர்களென்று சபித்தானும். அவர்களிருவரும் காலவனைக்கெஞ்சி பிரதி சாபம் பண்ணவேணுமென்று வேண்டிக் கொண்டதுக்குக் காலவனானவன் பண்ணின பிரதிசாபமாவது நீங்கள் வேதாளமென்கிற நாமமுடைத்தான பிசா சுகளாய்ப் பூமியிலே திரிந்து கடைசியாய் ராமசேதுவிலே யிருக்கிற யிருபத்திநாலு தீர்த்தங்களுக்குள்ளே தருமதீர்த்தத்திலே நீங்கள் ஸ்நானம் பண்ணினால் உங்க ளுக்குண்டான பிசாசுத்துவம் போகக்கடவது. இதுதவிர உங்களுக்குண்டான பிசாசுத்துவத்தைப் போக்கடித்த தீர்த்தமானது உங்களுடைய பேர்கொண்டு சகல மனுஷர்களினாலே வேதாளதீர்த்தமென்று சொல்லப்படும்.

சுவர்க்க விஷயத்திலே தெளிவற்ற பாவிகள் கற்பித்த இந்தக் கைக் கதைகளை எண்ணப்படாது. அதுகளெல்லாங் கற்பிக்கப்பட்டு தப்பறையா யிருக்கிறதென் றெளிதாய்க் கண்டுபிடிக்கிறதுக்கு அப்படிப்பட்ட கதைகளிலே சொல்லப்படுகிற ஞாயத்துக் கொவ்வாத அநேகந்தப்பறை விசேஷங்களுக்குள் ளே சிறிதுமாத்திரஞ் சொல்லி அதுகளுக்குண்டான ஞாயநீதிக்கு விபரீத பே ரையானது பிரத்தியக்ஷமாய் நம்மாலே காட்டப்படுகிறதுவல்லவோ? பூமிஸ்தலத்திலே புண்ணியவான்களுடைய புண்ணியங்கள் பண்ணினதுக்குப் பலனாக போக மைத்துன த்தின் சுகானுபவமுதலான செல்வங்களைச் சுவர்க்கலோகத்திலே சகலமும் ஞானசொ ரூபமாயிருக்கிற கர்த்தரானவர் கட்டளையிட்டாரென்றும் இதுமுதலான அ நேகங்கதைகளுந் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட முழுத்தப்பறை விசேஷங்களா யிருக்கிறதென்று வெளிதாய்க் கண்டுபிடிக்கலாம்.

அதேதென்றாற் புத்திர சந்தானலாபத்தை யபேக்ஷியாமற் போகத்தின் சுகத்தை மாத்திரம் அபேக்ஷித்துக் கொண்டுவருகிற மைத்துனமேயானது அக்கிரமமாயிருக்கக்கொள்ளக் கிரமரூபமாகிற புண்ணியசரித்திரங்களுக்குப்பல னாயிருக்கலாமென் றங்கீகரிக்கப்படாது. அப்படிப்பட்ட அக்கிரமமான மைத்துன அனுபவத்தைத் தபசுமுதலான தப்பில்லாதப் புண்ணிய சரித்திரங்களுக்குக் கி ருதகிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவர் பலனாகக் கட்டளை யிட்டாரென்றறிவின் குறைச்சலினாலே ஞாயநீதியை மறந்திருக்கிற பாவிகளா

[illegible] கற்பித்தார்களொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் அநேகம்நாள் பெருபாவங்களிலே திரிந்ததினாலவர்களுடைய புத்தியானது மயங்கிப்போய் நீருந் தீக்குஞ் சரியாகக்கண்ணுகிற மதியுள்ளவர்களுமாய் ஞாயநீதியைக் கண்டுபி டிக்கிறதுக்குக் கண்ணுகிற மதிகெட்டவர்களுமாயிருந்து புண்ணியத்துக்கு வரத் தக்க இப்படிப்பட்ட பலனைக் கற்பித்தார்களொழிய மற்றப்படியல்ல. அதேதெ ன்றால் புத்தியுடைத்தான பேர்களாயிருந்தாலும் பெருபாவங்களைப் பண்ணிப் பண்ணி நாள்வட்டத்திலே புத்தியில்லாத நாய்நரிமுதலான ஜெந்துக்களைவிட க்கெட்டுப்போய் நாய்நரிமுதலான ஜெந்துக்களுக் குண்டாயிருக்கிற மைத்துனத் தின் சுகமானது அதேமாத்திரம் சுகமென்று விசாரித்து அப்படிப்பட்ட மைத்து னசுகானுபவத்தை முடிவில்லாத ஞாயநீதி முதலான நன்மை சொரூபமாயிரு க்கிற சர்வேசுரன் பேரிலே யநியாயமா யாரோபித்தாப்போலே தபசுமுதலான குற்றமற்ற புண்ணிய சரித்திரங்களினாலே விளங்கியிருக்கிற மகாத்துமாக்கள் மோக்ஷலோகத்திலே அந்தந்தக் கற்பித்த நிர்மல புண்ணியத்தின் நெறியைத் தப்பில்லா மல் நடந்து நடக்கிறதிலே யவர்களனுபவித்த மகாமகாப்பட்ட பிரயாசங் களுக்குத் தபசுமுதலான புண்ணியங்களைப் பண்ணுகிறதிலே பிரயாசைப்பட மாட்டாத புத்தியில்லாத ஜெந்துக்களனுபவித்துக்கொண்டு வருகிற அப்படிப்ப ட்ட மைத்துனசுகத்தைப் புண்ணியபலனாக அநியாயமாகக் கற்பித்ததினால் ஆக் கினைக்குப் பாத்திரமாயிருக்கிற களங்கமாகிற மைத்துனவியாபாரத்தைப் புண் ணியபலனாகக் கற்பித்தாப்போலே யாச்சுது.

இதுதவிரச் சுவர்க்கத்தை யடைந்திருக்கிற புண்ணியாத்துமாக்கள் தேசோமயமான திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிறதென்று சொல்லும்போது அப்படிப்பட்ட திவ்வியசரீரமானது பவுதிகசரீரம்போலேயிராமல் உஷ்ணங்குளிர் முதலான அன்னியோன்னிய விருத்தகுணங்கள் அதுக்கில்லாமலிருக்கவேணும். ஆகலால் உஷ்ணமுதலான குணங்களை யுடைத்தான பவுதிக சரீரமானது அழிந் துபோகிற சரீரமாயிருக்கக் கொள்ளப்படுகிற சேதனகவனமாகிற க்ஷயமானது தேசோமயமான திவ்வியசரீரத்துக்கு வரமாட்டாதென்று சொல்லக்கடவோம். ஆனபடியினாலே அப்படிப்பட்ட திவ்வியசரீரத்தைக் கொண்டிருக்கிற பேர்களுக் குக் கற்பிக்கப்பட்ட மைத்துனமானது திவ்வியசரீரத்தின் சுபாவமேயல்லாமல் விப ரீதமேயாயிருக்கிறதென்கிறதினால் அதுமுதலான தப்பறைவசனங்களிலே கூட் டத்தக்க விசேஷமென்று சொல்லத்தகும்.

இதன்றியே தேசோமயமான திவ்விய சரீரத்தையும் பவுதிக சரீரத் தையும் பார்க்கும்போது மனுஷ சரீரத்துக்கும் நாய்நரி முதலான மிருகசரீரத் துக்கு முண்டாயிருக்கிற வித்தியாசத்தைக் காட்டிலும் அப்படிப்பட்ட திவ் விய சரீரத்துக்கும் மனுஷனுக் குண்டான பவுதிக சரீரத்துக்கும் அதிகமான வித்தியாசபேத முண்டாயிருக்க வேணுமென்று சொல்லக்கடவோம். திவ்வியசரீ ரத்தையும் பவுதிக சரீரத்தையுங் கொண்டிருக்கிற பேர்களுக்கு இப்படிப்பட்ட வித்தியாச பேதமுண்டாயிருக்கையிலே திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற வனாலே பவுதிகசரீரத்தைக் கொண்டிருக்கிற ஸ்திரீயோடே பண்ணப்படுகிற மை த்துனத்தை விசாரிக்கும்போது பவுதிக சரீரத்தைக் கொண்டிருக்கிற மனுஷ னானவன் பவுதிக சரீரத்தைக் கொண்டிருக்கிற நாயோடே மைத்துனம் பண்ணப்ப ட்டால் அப்படிப்பட்ட மைத்துனத்தைக் காட்டிலும் பவுதிகசரீரத்தைக் கொண் டிருக்கிற ஸ்திரீயோடே திவ்வியசரீரத்தைக் கொண்டிருக்கிறவனாலே பண்ணப் பட்ட மைத்துனமானது அதிகமான அக்கிரமமென்று சொல்லவேண்டியிருக்கி றது. ஆனபடியினாலே அப்படிப்பட்ட அக்கிரமத்தைப் பண்ணிக்கொண்டுவரு

கிற பேர்கள் தேவர்களா யிருக்கிறார்களென்கிறது கற்பிக்கப்பட்ட முழுத்தப்ப
றையா யிருக்கிறதென்று சொல்லக்கடவது.

இது தவிரத் திவ்விய சரீரத்தைக் கொண்டிருக்கிற சுவர்க்கத்திற்குக்
கர்த்தனுமாய்ச் சகல தேவர்களுக்கும் அதிபதியுமாயிருக்கிற தேவேந்திரனானவன்
மனுஷனாகிற கவுதமனுடைய மனைவியின் பேரில் ஆசைப்பட்டு அவளோடே
மைதுனம் பண்ணிப் பிறப்படுகிறபோது அவனைக் கவுதமன் கண்டானாம்.
கவுதமனிட்ட சாபத்தினாலே தேவேந்திரன் சரீரமெல்லாம் யோனிமயமாய்ப் போ
யிற்றென்றும் பிறகு சாபத்தினாலே யோனியெல்லாம் கண்களுடைய ரூபத்தை
யடைந்ததென்றும் பின்னுஞ் சாபத்தினாலே தேவேந்திரனுக்குண்டான திவ்விய
பீசம் விழுந்ததென்றுந் தேவேந்திரனுடைய திவ்வியபீசத்துக்குப் பாத்திரமாயிரு
க்கிற திவ்வியசரீரத்துக்கு நீசமிருகமாகிற ஆட்டினுடைய பீசத்தைப் பிடுங்கிக
ளொட்டி வைத்தார்களென்றும் இத்தொகைப்பட்ட வேறே அநேகம் விசே
ஷங்களும் அங்கீகரிக்கத்தக்க சத்திய விசேஷங்களோ வென்றும் அல்லது வித்
தை பண்ணுகிறவனாலே காணப்பட்ட பரியாசத்துக் காஸ்பதமாய் [illegible] விப
ரீத சொற்பனங்களா யிருக்கிறதோ வென்றும் புத்திமானா யிருக்கிறவன் பரி
சேதம் பண்ணக்கடவான்.

இதுதவிரத் தேவர்களுக் கதிபதியாயிருக்கிற தேவேந்திரனானவன் தான
புண்ணிய மகாமகாப்பட்ட புண்ணியவான்களுக்கு அவதியுமான பலனை யனுப
விக்கிறபோது புண்ணிய அவதியிலே யிருக்கிற அப்படிப்பட்ட தேவனுடைய
மேன்மையும் அந்தத் தேவத்துவத்தினுடைய மகிமையுள்ள மேன்மையுந் தன்றனுடைய
வேணுமென்று மகாமகாப்பட்ட தபசுமுதலான புண்ணியங்களைப் பண்ணிக்கொ
ண்டுவருகிறவனுடைய வகையையும் விசாரிக்கும்போது தபசியாகிற மனுஷனு
டைய அந்தஸ்தானது தேவனுடைய உன்னதமான அந்தஸ்துக்கு மிகவுங் கீழா
யிருக்கிற அந்தஸ்தா யிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமலொப்புக்
கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும். ஆனபடியினாலே மனுஷனானவன் எப்ப
டிப்பட்ட கனமான தபோமகிமை யுடைத்தானவனா யிருந்தாலும் அவதியிலே
யிருந்து தபோ புண்ணிய பலனை யனுபவிக்கிற புண்ணியாத்துமத்துக்குத் தபசி
யாயிருக்கிறவன் மிகவுங் கீழாயிருக்கிறானென்று சொல்லக்கடவோம். இப்படி
யங்கீகரிக்கிறபோது அவதியாகிறசுவர்க்கத்திலே யிருக்கிற மேலான மகிமையுள்ள
புண்ணியாத்துமாக்களான பேர்கள் கீழாயிருக்கிற மனுஷனாகிற தபசியினாலே
சபிக்கப்படலா மென்றும் ஆசீர்வாத மடையலா மென்றுஞ் சொல்லுகிற தென்
கிறது சுத்த தப்பறையா யிருக்கிறதென்று சொல்லப்படும்.

அதேதென்றால் நிக்கிரக அனுக்கிரகத்தைப் பண்ணுகிறவன் தனக்குக்
கீழா யிருக்கிறவனை யுத்தேசித்து நிக்கிரக அனுக்கிரகத்தைப் பண்ணமாட்டுகிறா
னொழியத் தனக்கு மேலா யிருக்கிறவனைச் சபிக்கிறதுக்கும் ஆசீர்வதிக்கப் பண்
ணுகிறதுக்கும் வல்லவனா யிருக்கிறானென்று மதிகெட்டவன் சொல்லுவானொ
ழிய மற்றபடியல்ல. அவ்வண்ணமே மேலா யிருக்கிற குருவானவன் தனக்குக்
கீழாயிருக்குகிற சீஷனுக்கு ஆசீர்வாதம் பண்ணவுஞ் சபிக்கவும் வல்லவனாயிருக்கி
றானென்று சொல்லவேணுமொழியக் கீழாயிருக்கிற சீஷனானவன் தனக்கு மேலா
யிருக்கிற குருவைச் சபிக்கிறதுக்கும் ஆசீர்வதிக்கிறதுக்கும் வல்லவனாயிருக்கிறா
னென்று சொல்லுகிறதென்கிறது பரியாசத்துக்காஸ்பதமாயிருக்கிற முழுப்
பயித்தியமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யிவ
ர்கள் சொல்லுகிறப்போலே அவதியாகிற சுவர்க்கத்திலேயிருந்து திவ்விய சரீ
ரத்தோடே கூடத் தேவதத்துவத்தையடைந்த புண்ணியாத்துமாக்களான பே

ர்களும் அவதியாகிற சுவர்க்கத்திலே தேவதத்துவமாகிற பாக்கியத்தையினிமே
லடைகிறதுக்குப் பூமியிலே மகாமகாப்பட்ட தபோமுதலான பலபலபுண்ணியங்
களைப் பண்ணுகிற மனுஷரையும் பார்த்து மிகவுந் தேவர்கள் மேலானபேர்களா
யிருக்கிறார்களென்று சொல்லக் கடவோம். சுவர்க்கத்தினுடைய பாக்கிய
மடையவேணுமென்று தபோ முதலான பலபல புண்ணியங்களைப் பண்ணுகிறதி
னாலே பூமியிலே யிருந்து பிரயாசைப்படுகிற மனுஷரொழியன்றாற் சுவர்க்கத்தி
லேயிருக்கிற புண்ணியவான்களான மகாராசாக்களைக் காட்டிலும் பூமியிலே
தபசுபண்ணுகிற மனுஷரானபேர்கள் மிகவுங் கீழ்த்தரமாயிருக்கிற தென்று
அங்கீகரிக்கத்தக்க கிரமமாகும். இப்படி தப்பில்லாத ஞாயமுள்ள கிரமமாயிருக்
கிறதென்று சொல்லவேண்டி யிருக்கச்செய்தே சுவர்க்கத்தின் பாக்கியத்தை
யடைந்திருக்கிற மகாராசாக்களா யிருக்கிற புண்ணியாத்துமாக்களான பேர்கள்
பூமியிலே யிருக்கிற மனுஷரிட்ட சாபத்தினிமித்தமாக ஆக்கினையை யனுபவித்
தார்களென்று சொல்லுகிறதென்கிறது பூலோகத்திலே இராசபட்டத்திலே மகா
ராசனாயிருக்கிறவன் ராசாங்கத்தை யடையவேணுமென்று சேவகவிருத்தியிலே
பிரயாசைப்படுகிறவன் கையினாலே யாக்கினைப்பட்டானென்று சொல்லுகிற
துக்கொக்கும் இந்தவிதமாய்ச் சுவர்க்கத்திலே யிருக்கிற மகாராசாக்களாயிரு
க்கிற பேர்கள் தபசிகளாகிய மனுஷனுடைய ஆசீர்வாதத்தினாலே நன்மையை
யடைந்தார்களென்று அங்கீகரிக்கிறதென்கிறது வேலையாகிற தபோமுதலான
புண்ணியங்களுக்குப் பலனுங் கூலியுமாயிருக்கிற ராசாங்கமுதலான ஐசுவரி
யங்களை மெய்யாகவே அனுபவித்துக் கொண்டிருக்கிற மகாராசாக்கள் பலனுங்
கூலியுமாயிருக்கிற அப்படிப்பட்ட ஐசுவரியங்கள் முதலான செல்வங்களை
யினிமே லடையவேணுமென்று இப்போது பூமியிலே தானே தபோமுதலான புண
ணியங்களாகிய வேலைநிமித்தமாகப் பிரயாசப்படுகிற முழுத்தாரித்திரர் கையிலே
பிச்சையாகத் துணித்தனமுதலான நன்மைகளைக்கேட்டு வாங்கினார்களென்று
சம்மதப்படுகிறதுக் கொக்கும். ஆதலாலே தபோபலத்தின் மகிமையினாலே ரிஷி
களாகிற மனுஷனுக்குத் தேவர்களைச் சபிக்கவும் ஆசீர்வாதம் பண்ணவும் பல
முண்டாச்சு தென்கிற அபத்த விசேஷத்தை அங்கீகரிக்கிறவன் முழுதும் மதிகெ
ட்டவனா யிருக்கவேணுமொழிய மற்றப்படியல்ல.

அதேதென்றால் தபோமுதலான புண்ணிய மென்னப்பட்டவை யாவுஞ்
சுவர்க்கத்தினுடைய கனமான பாக்கியமுதலான மகிமைகளை யடையவேணு
மென்று மனுஷராகிற ரிஷிகளினாலே பண்ணப்படுகிற தென்கிறதுக்குத் தப்பாது.
ஆனபடியினாலே மனுஷராகிற ரிஷிக ளென்னப்பட்ட பேர்களெல்லாருந் தங்க
ளைக் காட்டிலும் மிகவும் பெரியவர்களுமாய்த் தபோமுதலான புண்ணியங்களி
னாலே ரிஷிகளுக்கு வாய்த்தக்க சுவர்க்க முதலான மகிமைகளைக் குறைவற்ற பிர
காரமாயடைந்த பேர்களுமா யிருக்கிற தேவேந்திரன் முதலான தேவர்களைச்
சபிக்கிறதுக்கும் ஆசீர்வாதம் பண்ணுகிறதுக்குந் தபோவலுமையினாலே ரிஷிகளா
னவர்கள் வல்லவர்களா யிருக்கிறார்களென்று சொல்லும்போது தனமுதலான
ஐசுவரியத்தை யடைகிறதுக்கு அனுபவிக்கத்தக்க வருத்தத்தின் வலுமையி
னாலே அப்படிப்பட்ட வருத்தத்தை யனுபவிக்கிற கூலிக்காரனுக்குச் சகல தன
முதலான ஐசுவரியங்களை யனுபவித்துக்கொண்டு வருகிற மகாராசாவுக்குப்
பாக்கிய நிர்ப்பாக்கியத்தை வருத்துவிக்கத் தக்கதாகப் பெலமுண்டாச்சு தென்கிற
அபத்த விசேஷத்தையொப்புக் கொள்ளுகிறதுக் கொக்கும்.

இதன்றியே பிராமணராயிருக்கிறபேர்கள் சுவர்க்கத்திலே செல்வ முத
லான பெருமைகளை யடையவேணுமென்று யக்கிய முதலான புண்ணியங்களைப்

பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று இப்படிப்பட்ட பிரசித்த விசேஷமாகுமென்றிருக்கும்போது பிராமணிக்கத்தைக் காட்டிலுஞ் சுவர்க்க சம்பந்தமாயிருக்கிற செல்வமும் மகிமையுங் கனமானதென்றுஞ் சொல்லக் கடவோம். ஆதலாலே அந்தக் கதையிலுஞ் சுவர்க்கத்திலேயிருக்கத்தக்க தேவேந்திரன் முதலான தேவர்களையும் நவமாக வுண்டாக்கினதுக்கு வல்லவனாயிருக்கிற விசுவாமித்திரனானவன் தனக்குப் பிராமணிக்கம் வரவேணுமென்று வெகுகாலந் தபசுபண்ணினானென்கிற கதையைக் கற்பித்தெழுதி வைத்தவன் நித்திரையிலே சொற்பனங் காண்கிறதுடைய மேனாயா யிப்படிப்பட்ட கதைகளைக் கற்பித்தானென்றழிய மற்றப்படியல்ல.

இதன்றியே பூமியிலே பண்ணப்படுகிற தபசுமுதலான புண்ணிய சரித்திரங்கள் சகலநன்மைக்குஞ் சொரூபமாயிருக்கிற சர்வேசுரனுக் கேற்றிருக்கிற நடக்கையென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே தபோ முதலான புண்ணியங்களுக்குச் சுவர்க்கத்திலேயிருக்கிற தேவேந்திரன் முதலான தேவர்கள் விக்கினம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்கிற கதைகளைக் கட்டினவன் சுவர்க்கத்திலே யிருக்கிற தேவேந்திரன் முதலான தேவர்கள் கனமான பாவிகளும் மகாமகாப்பட்ட புண்ணியாத்துமாக்களுமா யிருக்கிறார்களென்று அர்த்தவிரோதமான தப்பறைவிசேஷத்தைக் கற்பித்து லோகத்துக்குக் கேடாக வெழுதிவைத்தானென்று சொல்லத்தகும். அதேதென்றாற் பூமியிலே பண்ணப்பட்ட மகாமகாப்பட்ட புண்ணியங்களினாலுங் கர்த்தன் திருவுளப்படியே அதினுடைய பலனையனுபவிக்கிற பேர்கள் சர்வேசுரனுக் குகந்தபேர்களுமா யிருக்கிறதுமல்லாமல் புண்ணியத்திலே கைகொண்ட மகாசுகிர்த பேர்களுமா யிருக்கிறார்களென்று சொல்லவேண்டி யிருக்கையிலே அப்படிப்பட்ட பேர்கள் தபோ முதலான புண்ணியங்களுக்கு விக்கினம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று சொல்லும்போது அவர்கள் மகாகனமான பாவிகளா யிருக்கிறார்களென்று சொல்லத்தகும். ஆதலாலே சுவர்க்கத்திலே யிருக்கிற தேவேந்திரன் முதலான பேர்கள் கனமான பாவிகளுமாய் மகா புண்ணியாத்துமாக்களுமாயிருக்கிறார்களென்று அங்கிகாரம் பண்ணினாற்போலே யாச்சுது. இப்படிப்பட்ட தப்பறை விசேஷங்களைக் கற்பித்த பாவியானவன் லோகத்துக்குக் கேடாக வெழுதிவைத்தானென்று சொல்லத்தகும். அதேதென்றாற் சுவர்க்கத்திலே யிருக்கிற தேவேந்திரன் முதலான தேவர்கள் தபோமுதலான புண்ணியங்களுக்கு விக்கினம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்றும் ஊரார்பெண்டுகளைப் பலாத்காரத்தினாலே பிடிக்கிறார்களென்றும் பதிவிரதைகளோடே மைத்துனம் பண்ணிக் கற்பழித்துப் போட்டார்களென்றுஞ் சொல்லும்போது பூமியிலே திரிகிற மனுஷர் இத்தொகைப்பட்ட பாவங்களைப் பண்ணலாமென்று கேட்கத்தேவையில்லையென்றும், ஆதலாலே இப்படிப்பட்ட கதைகளைக் கட்டினவன் பூலோகத்திலே மனுஷரான பேர்கள் கனபாவங்களைப் பண்ணுகிறதுக்கு விஸ்தாரவழி திறந்துவைத்தே இப்படிப்பட்ட கதைகள் லோகத்துக்குக் கேடாகக் கற்பிக்கப்பட்டதென்று சொல்லக் கடவோம்.

கடைசியாய்த் தபோ முதலான புண்ணிய சரித்திரங்கள் நிமித்தமாகப் பூலோகத்திலேயுஞ் சுவர்க்கத்திலேயும் இருக்கிற பேர்களுக்குக் கேடுவருகிறதென்கிற விசேஷத்தைக் காட்டிலுங் கனமான விசேஷங் காணமாட்டாது. அதேதென்றாற் பாவத்துநிமித்தமாகக் கேடுவருமென்று சொல்லவேணுமொழிய நிர்மலபுண்ணிய நடக்கையாலே பொல்லாப்பு வருமென்று முழுப்பயித்தியகாரன் முதலாய்ச் சொல்லமாட்டான். அப்படியே புண்ணிய நிமித்தமாகக் கேடுவருமென்று சொல்லும்போது அருவருப்புள்ள பாவநடக்கைகள் முகாந்திரமாக கன

மைவருமென்று அங்கீகரிக்கவேணும். இப்படிப்பட்ட தப்பறை விசேஷத்துக்குச் சம்மதிக்கிறவன் மகாகெட்ட விஷத்தினாலே பிழைப்பு வந்ததென்றும் அமிர்தரூபமான சஞ்சீவியினாலே மரணம் பிறந்ததென்றும் கசப்புநிமித்தமாகத் தித்திப்புஞ் சர்க்கரையினாலே கைப்பும் பிறந்ததென்றும் அங்கீகரித்ததுக்குச் சமானம். இதுதவிரத் தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட சுவர்க்கத்திலே யனுபவிக்கப்படுகிற போகத்தின் சுபாவசுரூபத்தை யாராஞ்சு கொண்டோமானால் அப்படிப்பட்ட கதைகளைக் கற்பித்தபேர்கள் எப்படியானாலும் பொருந்தச் சொல்ல வேண்டிய ஞாயத்தைப் பாராமல் சகலஞாயத்துக்கும் விருத்தமாக வொன்றுக்கொன் றொவ்வாத விபரீத விசேஷங்களை யறிவீன் குறைச்சலினாலே கற்பித்தார்களென்று சொல்லக் கடவோமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றாற் சுவர்க்கத்திலேயிருக்கிற மைத்துன போகமானது ஒன்றிற் பூமியிலேயிருக்கிற போகத்தைக் காட்டிலுங் கனமான சுகத்தைக் கொடுக்கிறதென் றங்கிகரிக்கவேணும், அல்லது சுவர்க்கத்திலே பண்ணப்படுகிற மைத்துனத்தினுடைய சுகமானது பூமியிலே பண்ணப்படுகிற மைத்துனத்தினுடைய சுகத்துக்குச் சமானமாயிருக்கிறதென்று சொல்லவேணும். இப்படியிருக்கையிலே சுவர்க்க சம்பந்தமாயிருக்கிற மைத்துனத்தின் சுகமானது பூமியிலேயிருக்கிற மைத்துனபோகத்தின் சுகத்தைக்காட்டிலும் கனமாயிருக்கிறதென்று அங்கிகரித்தோமானாற் சுவர்க்கத்திலே யிருக்கிறபோகத்தின் சுகத்தை யனுபவித்துக் கொண்டுவருகிற தேவேந்திரன் முதலான தேவர்களும் இரம்பை மேனகை யிவர்கள் முதலான ஸ்திரீகளும் பூமியிலேயிருக்கிற ஸ்திரீபுருஷர்களோடே பண்ணப்படுகிற மைத்துனத்தின் சுகத்தை யபேட்சித்துத் தேடப்பண்ணினபோதே தேவேந்திரன் முதலான தேவர்கள் முழுப்பயித்தியக்காரரென்றுங் கனமான அக்கிரமத்தைப் பண்ணினபேர்களென்றும் அங்கிகரித்ததுக்குச் சமானம். அதெப்படியென்றால் ரூபலாவண்ணியமுள்ள ஸ்திரீகளோடேயும் புருஷர்களோடேயும் சங்கம் பண்ணிக்கொண்டு வருகிற புருஷர்களும் ஸ்திரீகளும் அருவருப்புள்ள நாயின் மைத்துனத்தை யிச்சித்துப் பண்ணினால் அப்படிப்பட்ட பேர்களுக்குத் தேவேந்திரன் முதலான பேர்கள் சரியாக வெறுக்கப்படத்தக்க பாவிகளா யிருக்கிறார்களென்று சொல்லத்தகும். அல்லது சுவர்க்கத்திலே பண்ணப்படுகிற மைத்துனத்தின் சுகமானது பூலோகத்திலே மனுஷராலே யனுபவிக்கிற போகத்தின் சுகமானதுக்குச் சமானமானாலுங் கொஞ்சமென்கிலுமென்று சொன்னோமானால் சுவர்க்கத்துக்குப்போய் அவ்விடத்திலே பண்ணப்படுகிற மைத்துனத்தின் சுகத்தை இனிமேலனுபவிக்கிறதுக்குப், பூமியிலே திரிகிற மனுஷனானவன் இப்போது தர்மதானங்கள் முதலான புண்ணிய சரித்திரங்களைப் பண்ணுகிறதினாலே மகாமகாப்பட்ட திரவிய சேதங்களையுங் கடின பிரயாசைகளையும் ஏன்படவேணும். அதேதென்றாற் சுவர்க்கத்திலே யினிமேல் வரத்தக்க பலனைப் பார்க்கும்போது பூமியிலே திரிகிற காமாதுரனானவன் இப்போது தானே பலபல அருவருப்புள்ள வெள்ளாட்டிகளோடே திரிந்ததினாலே திரவிய சேதங்களும் பிரயாசங்களும் படாமற் சுவர்க்கத்தின் பலனை யடைந்தனுபவிக்கலாமென்கிறதுக்குத் தப்பாது. கடைசியா யறியவேண்டின விசேஷமாவது சுவர்க்க சம்பந்தமாயிருக்கிற தெளிவற்ற பாவிகளினாலே கற்பிக்கப்பட்ட எண்ணப்படாத தப்பறை விசேஷங்களுக்குச் சிறிதுகளைமாத்திரம் இந்தப்பாடத்திலே சொல்லிக்காட்டி அதுகளை யாசேஷமும் பண்ணினாற்போலே யாச்சுது. ஏனென்றால் இத்தொகைப்பட்ட வேறே யனேகங் கதைகளைச் சுவர்க்கவிஷயத்திலே மோக பிராந்தியினாலே கெட்ட காமாதுரரா யிருக்கிற பேர்கள் கற்பித்தெழுதி வைத்தார்கள். அப்படிப்பட்ட

கதைகளெல்லாஞ் சொல்லிக்கட்டி [illegible]வ்வொன்றாய் ஆக்ஷேபம் பண்ணினேமா
னால் இந்த நாள் முடிக்கப்படாத பிரசங்கத்தி னிமித்தமாக வியர்த்த பிரயா
சைப்பட்டதைப் போலே யாகும்.

அதேதென்றாற் கண்டுயோசிக்கிறதுக்குத் தாற்பரியமுள்ளவர்கள் [illegible]
பாடத்திலே நம்மாற் சொல்லப்பட்ட விசேஷ ஞாயங்களைச் சகலமுமாக ப[illegible]
[illegible]தும் பத்தாய்ப் பராமரிசித்தாராய்ந்து கொண்டார்களானாற் புண்ணியவாத்து
மாக்களா யிருக்கிற பேர்கள் [illegible]தத்திலே பண்ணின [illegible]மகாப்பட்ட புண்
ணியங்களுக்காக ஆன பலனை [illegible]பவிக்கிறதுக்குத் [illegible]தெளிவற்ற பாவிகளாலே
லே கற்பிக்கப்பட்ட பரலோக [illegible]யிருக்கிற சுவர்க்க ஸ்தலத்தைச்
சகல நன்மை சொரூபமாயிருக்கி[illegible] கர்த்தரானவர் கட்டளை யிட்டருளினாரென்று
கனபாவமில்லாமற் சொல்லவுங்கூடா[illegible]தென்று அற்பமாகிலுஞ் சந்தேக
மில்லாமற் கண்டு பிடிப்பார்களென்கிறதுக்குத் தப்பாது. இந்தச் சந்தேகத்தை
நிச்சயம் பண்ணினவன் சுவர்க்க சம்மந்தமாகக் கற்பிக்கப்பட்ட கதைகள்
பாவத்தை மனுஷனானவன் கட்டிக்கொள்ளுகிறதுக்கும் நரகத்திலே வி[illegible]
துக்கும் உபயோகமா யிருக்கிறதென்று ஸ்திரமாக அறிந்துகொள்ளுவான். [illegible]
தலாலே அதுகளெல்லாம் வெறுக்கப்படத்தக்க அபத்தத் தப்பறை விசேஷங்
களா யிருக்கிறதென்று யிருமனப்படாம லெண்ணிக்கொண்டு அதுகளைச் [illegible]
[illegible]ண்ணமை யிருக்கக் கடவான்.

உ[illegible]-ம் பாடம்.

ஆத்துமத்துக்கு வரலான[illegible]ற்ற[illegible]க்கியமானது பூலோகத்திலேயிருக்கிற ஐசு
ஸ்வரிய பெரிய சுகங்களினாலே வரமாட்டாதென்று யிருபத்துமூன்றும் பாடத்திலே யொப்பு
வித்[illegible]னால் ஆத்துமத்தினுடைய அவ[illegible]யொடுக்கமாகிறது பூமியிலேயுண்டா யிருக்க
மாட்டாதென்றொப்புவித்[illegible] [illegible]தமான சுவர்க்கத்தைப் பத்துப்
பத்தாய் விசாரிக்கும்போது அதிலே ரம்பை[illegible] முதலான வேசிகளோடே பண்ணப்
படுகிறமைத்துனமானது புண்ணியவான்க[illegible]ள் [illegible]வில் உலகத்திலேபண்ணிக்கொண்டுவரு
கிற புண்ணியங்களுக்குப் பலனாயிருக்கிற[illegible] [illegible]ல் லுகிறதென்கிறது ஞாயமுள்ளகிரமத்
துக்கு முழுதும்விருத்தமாயிருக்கிறதென் [illegible]பத்தொ[illegible]ாவாம்பாடத்திலே பலபலஞாயங்களை
த்[illegible]கொண்டொப்புவித்தபோதே சுவர்க்க[illegible]மானது அறிவற்றபாவிகளினாலே கற்பிக்கப்பட்ட
[illegible]முழுத்தப்பறையாயிருக்கிறதென்று [illegible]சந்தேகமில்லாமல் நம்மாலொப்புவிக்கப்பட்டு தென்கி
றதுக்குத்தப்பாது. சுவர்க்கமான[illegible] கற்பிக்கப்பட்ட தப்பறையா யிருக்கிறபோதே ஆத்தும
மான[illegible]து தனது அவதியையும் ஒடுக்கத்தையும் அதிலேயடையலாமென்று முழுமதிகெட்
டவன் சொன்னாற்சொல்லுவானேயொழியப் புத்திமானாயிருக்கிறவன் சொல்லமாட்டான். சுவ
[illegible]தவிர அந்தந்தமதத்தையனுசரிக்கிறபோர்கள் வைகுண்டமென்றுங் கைலாசமென்றும்
பிரமலோகமென்றும் அங்கீகரித்துக்கொண்டுவருகையிலே அந்தந்தமதத்திலே[illegible]
க்கு அவதியொடுக்கமுங் கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு[illegible]கள். அப்படியே
வைஷ்ணவமதத்தை யங்கீகரித்துக்கொண்டு வருகிறபேர்கள் [illegible]துமக்குறையற்ற பாக்கியம
னுபவிக்கிறதுக்கு வைகுண்டமானது ஆனஸ்தலமென்று[illegible]சொல்லிக்கொண்டுவருகிறார்கள்.
சைவமதத்துக்குட் பட்டபேர்களோவென்றாற்கைலா[illegible]திலே ஆத்துமமானது தனது அவ
தியாகிறகுறையற்ற [illegible]பாக்கியத்தை யனுபவிக்கி[illegible]தென்று அங்கீகரித்துக் கொண்டுவருகி
றார்கள். பதினெட்டுப் புராணங்களிலேயும் [illegible]சொல்லப்படுகிற விசேஷ வர்த்தமானங்கள்
பரஸ்பர விருத்தமா யிருந்தாலும் அவைகளுக் குண்டான விருத்த மேனைகளை விசாரியா
மற் [illegible]நியாகிற கண்ணை மூடிக்கொண்டு அவையெல்லா மொப்புக் கொள்ளத்தக்க வைகளா
யிருக்கிறவைகளென்று தன்தன் மத[illegible]ன்படியே ஸ்தாபித்துக் கொண்டு வருகிறார்களே
அப்படிப்பட்டமதிகெட்ட அஞ்ஞானிகள் பிரமலோகத்திலேயும் வைகுண்ட முதலான மோ
க்ஷவகைகளிலேயுஞ் சிவஞானிகளுக்கும் குறையற்ற பாக்கியமாகிற அவதியையடைந்து கொ
ண்டுவருகிறதென்று விசுவாசித்துக் கொண்டுவருகிறார்கள். இதிலே பராமரிக்கத்தக்க
து, அவனவன்தனது மதத்தை யனுசரித்த அந்தந்தஸ்தலத்தைவர்ணிக்கி[illegible] ஞாயத்
துக்கும்புத்திக்கு மொ[illegible]பலபல விசேஷங்களையும் [illegible] கதைகளையுங் கற்பித்துக்
கொ[illegible]ருக்கிறார்களென்கிறதுக்குத்தப்பாது. [illegible]வும் அந்தக்கதைகளையெல்லாம் பத்தும்பத்
தா[illegible]சாரித்தோமானால் அவை[illegible]லாம் பிரத்தியக்ஷமாய்ப் பரஸ்பரவிருத்தங்களா
யிருக்கின்றனவென்கிறதுக்குத்தப்பாது.

இது [illegible] யிருக்கையிலே அந்தந்த மதானுசாரத்தின்படியே அ[illegible] அப
த்த விசேஷங்களை யங்கீகரிக்கிறவனுக்கு அறிவின் குறை[illegible] [illegible]னென்கிற நாமஞ்செல
[illegible] சொல்லவேண்டி யிருக்கையிலே ஒன்றாலேயொன் றுவ்வாதிருக்கிற அப்படிப்
பட்ட கதைகளை யெல்லாம் அங்கீகரிக்கிற போர்கள் எப்படிப்பட்ட புத்திமான்களென்றும்
அவர்களுக்கேற்ற நாமகரண மிடவேண்டு மென்றும் பக்ஷபாதமில்லாத புத்திமானானவன்
[illegible]சேதம் பண்ணக்கடவான். ஆனபடியினாலே இதெல்லாம் நாம்விட்டு இப்படிப்பட்ட
ஸ்தலங்களிலே ஆத்துமத்திலே தனது அவதியு மொடுக்கமு மடையப்படுமோ வில்லையோ
வென்று யிந்தப்பாடத்திலே கொஞ்சத்துக்குள்ளே [illegible] காட்டக்கடவோம்.

விகுண்டையென்கிற நாமத்தைக் கொண்டிருக்கிற ஸ்திரீயினுடைய மகனுக்கு வைகுண்டனென்கிற பேருண்டாச்சுது; அப்படிப்பட்ட வைகுண்டனென்கிற விஷ்ணு லக்ஷ்மியோடே கூட வாசமாயிருக்கிற ஸ்தலத்துக்கு வைகுண்டமென்று சொல்லப்படுகுது. இப்படிக்கொத்த வைகுண்டத்திலே ஆத்துமாவுக்கு குறைற்ற பாக்கியமென்கிற சுகதியையடையமாட்டாதென்று பலபல நியாயங்களினாலே யொப்புவிக்கலா மென்றிருக்கையிலே அதுகளையெல்லா மொருகெட்டிலே யெடுத்தினாலே யிந்தச் சத்தியவிசேஷத்தை யொப்புவிக்கக்கடவோம். அப்படிப்பட்ட [illegible] ருத்திரன் பார்வதியோடே கூடியிருக்கிற கயிலாசத்திலேயுங் கயிலாசத்துக்கொக்க மற்றுமுண்டான கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களிலேயும் அவனிருப்பான குறையற்ற பாக்கியமானது மனுஷீவனுக்கு வரமாட்டாதென்று கண்டுபிடிக்கலாயிருக்கும்.

அதெப்படியென்றால் அப்படிப்பட்ட பாக்கியத்தைச் சீவனுக்குத் தலைப்பண்ணுகிறதுக்கு வல்லவனாயிருக்கிறவன் சகல நன்மைச் சொரூபமாயிருக்க வேணுமென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் அவனவன் தனக்குண்டானதைப் பிறத்தியானுக்குக் கொடுக்கத் தக்கதாகச் சமர்த்தனாயிருக்கிறானென்று சொல்லத்தகுமொழிய அவனவன் தனக்கில்லாததைப் பிறத்தியானுக்குக் கொடுக்கலாமென்று முழுப் பயித்தியக்காரன் சொன்னாற் சொல்லுவானொழியப் புத்திமானாயிருக்கிறவன் சொல்லவுஞ் சந்தவுமாட்டான். இந்த நியாயத்தைப் பத்தும்பத்தாய் விசாரித்தோமானால் குறையற்ற பாக்கியந்தருகிறவன் ஒன்றுங் குறையில்லாமல் மட்டில்லாத சகலநன்மைச் சொரூபியாயிருக்க வேணுமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. அப்படிப்பட்டவர் பிறத்தியப்பட்ட வஸ்து விடத்தில் நின்று சகலமுமான நன்மை விஷயங்களிலே யொன்றானாலு மடையமாட்டாரென்று சொல்லக்கடவோம். இது இப்படியிருக்கையிலே புராண முதலான பிரபந்தங்களிலே சொல்லப்படுகிற விசேஷங்களை யங்கீகரித்தோமானால் லக்ஷ்மி பார்வதியென்கிற யிரண்டு ஸ்திரீகள் முகாந்திரமாக விஷ்ணு ருத்திரன் இவ்விருவரு மானந்தத்தையும் மற்றுண்டான நன்மையையுங் கொண்டிருக்கிறார்களென்றும் அப்படிப்பட்ட ஸ்திரீகளல்லாமல் நன்மைவிஷயத்திலே அவர்களிரண்டுபேரு முழுதுங் குறையுள்ளபேர்களா யிருக்கிறார்களென்றுஞ் சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். ஸ்திரீகள் நிமித்தமாக அப்படிப்பட்ட பேர்கள் சகலநன்மையும் உடையவர்களா யிருக்கிறபோதே அவர்களிரண்டுபேருக்குந் தங்களால் குறையற்ற பாக்கியவான்களென்கிற நாமமானது செல்லுமென்று சொல்லவு மெண்ணவுங்கூடாது. ஆதலாலே யவ ரிருப்பான குறையற்ற பாக்கியமானது மனுஷீவனுக்கு அவர்களாலே கொடுக்கலாமென்று மதிகெட்டவனானாலுஞ் சொல்லமாட்டான். இதுவல்லாமல் அப்படிப்பட்ட விஷ்ணு ருத்திரனென்கிற யிருவருக்கும் ஆனந்தமுதலான நன்மைகளெல்லாம் ஸ்திரீகள் முகாந்திரத்தினாலே வருகிறதென்று அவர்களுடைய புராணவழியா யங்கீகரிக்கச்செய்தே வைகுண்டத்திலேயுங் கயிலாசத்திலேயும் மற்றுமுண்டான ஸ்தலங்களிலேயும் விஷ்ணு ருத்திரர்களைச் சென்றடைந்த பேர்கள் ஸ்திரீசங்கத்தினாலே யானந்த சுகமுதலான நன்மைகளை யடைவார்களென்று ஒப்புக்கொள்ளத்தக்க விசேஷமாகும். இதிப்படி சொல்லும்போது தேவேந்திரபதம் வெறுமனே கற்பிக்கப்பட்ட [illegible] வந்த நியாயங்களினாலே யிருபத்து நாலாம்பாடத்திலே நம்மாலொப்புவிக்கப்பட்டதோ அந்த நியாயங்கள்தானே வைகுண்டம் கயிலாசம் [illegible] முதலான ஸ்தலங்கள் சர்வேசுரனை யறியாதபேர்களினாலே வெறுமனே கற்பிக்கப்பட்டவைகளா யிருக்கிறதென்று கண்டுபிடிக்கத் தக்கதாக மிகவு முதவுமென்கிறதுக்குச் சந்தேகப்படுகிறதுக்குக் காரணமில்லை. இதன்றியே அந்தந்த ஸ்தலத்துக்கடுத்த விசேஷங்களையும் அதுகளை வர்ணிக்கிற பேர்களையும் பார்த்தோமானால் பூமியிலேயுண்டான ஸ்தலங்களுக்குள்ளே வைகுண்டமுங் கயிலாசமு முண்டா யிருக்கிற ஸ்தலமென்று சொல்லப்ப

டுமென்கிறதுக்குத் தப்பாது யிதுநிமித்தமாக முன்சொற்பட்ட நியாயங்களினாலே ஆத்துமத்தினுடைய மோக்ஷமாகிறகடைசி அவதியானது அப்படிப்பட்ட ஸ்தலங்களிலே யுண்டாகமாட்டாதென்றொப்புக் கொள்ளத்தகுந்தாகும்.

இதுதவிர விஷ்ணுவும் ருத்திரனுமெய்யான சர்வேசுரனாயிராமல் கற்பிக்கப்பட்ட தேவர்களுக்குள்ளே அடங்கின தேவர்களா யிருக்கிறார்களென்று ஸ்திரமாகவிதாயொப்புவிக்கலாமென்றிருக்கையிலே அவர்களுக்கு இதுகள் [illegible] ஸ்தலங்களென்று கவீசுரராலே கற்பிக்கப்பட்டிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க விசேஷமாகும். அவ்வண்ணமே வைகுண்ட ஸ்தலத்தை அவர்கள் வர்ணிக்கிறபோது யிவ்விடத்திலே காவேரிநதியானது காணப்படுகிறாப்போலே அவ்விடத்திலே விரசாநதியோடுகிறதென்றும் இவ்விடத்திலேயிருக்கிற ரங்கமந்திரமானது வைகுண்டத்துக்குச் சமானமாயிருக்கிறதென்றும் இது முதலான விசேஷங்களை அவரவர்கள் சொல்ல வேறே ரகசியமான அர்த்தத்தை யத்தேசியாமல் வைகுண்டத்தை வர்ணிக்கிறதினால் வைகுண்டமானது பூமியிலே யிருக்கிற ஸ்தலங்களுக்குள்ளே அது கற்பிக்கப்பட்ட வொருஸ்தலமென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். இந்தண்டைவாகக் கயிலாச பருவதத்தை யிராவணனென்கிறவன் பிடுங்கப்போய் அதை யசைத்தானென்றும் அது நிமித்தமாகப் பார்வதி பயந்து ருத்திரனையாலிங்கனம் பண்ணினாளென்றும் இது முதலான வியர்த்த விசேஷங்களை யவர்கள் சொல்லுகிறபோதே யிந்த விசேஷங்களெல்லாங் கற்பிக்கப்பட்ட கதைகளா யிருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றபடியில்லை. இதன்றியே இப்படிப்பட்ட ஸ்தலங்களுடைய சுபாவசொரூபமானது நன்றாய்விசாரிக்கப்பட்டால் மோக்ஷமாகிறகுறையற்ற பாக்கியத்தைச் சீவனானது அநுபவிக்கிறதுக்கு இதுகள் ஆனஸ்தலங்களாயிருக்கிறதென்று மோக்ஷத்தின் சொரூபத்தை யறியாதமிலேச்சன் சொன்னாற்சொல்லுவானொழிய மோக்ஷத்தின் மகிமையைமெய்யாக வெயறிந்தவன் இப்படிப்பட்ட ஸ்தலங்களைச் சீவனானது மோக்ஷமென்கிற குறையற்றபாக்கியத்தை யநுபவிக்கிறதுக்கு ஆனஸ்தலங்களென்று சொல்லவுங்கருதவுமாட்டான் அதேதென்றால் சகல நன்மைகளினுடைய விஷயங்களினுடைய குறையற்ற பரிபூரணபாக்கியத்தையநுபவிக்கிறதுக்கு ஆனஸ்தலத்தைப் பார்க்கும்போது அது நதிமுதலான பொருள்களினாலே யலங்கரிக்கப்படுமென்றும் ஒருத்தனாலே அப்படிப்பட்ட ஸ்தலங்கள் அசைக்கவும் அவ்விடத்திலே யிருக்கிற பேர்களுக்குப் பயம் வருத்துவிக்கலாமென்றும் முழுமதிகெட்டவனானாலும் எண்ணவுஞ் சொல்லவுமாட்டான்.

மோக்ஷமாகிறபரமானந்தத்தின் மேன்மையை முப்பத்திரண்டாம் பாடந்துவக்கி முப்பத்தஞ்சாம்பாடமட்டும்நாம்சொல்லும்போதுயிந்தச்சத்தியவிசேஷமானது வெளியாகுகிறதுக்காக இவ்விடத்திலே யிந்த யர்த்தமானத்தை யெடுத்துக் காட்டினோமில்லை. இருபத்துநாலாம் [illegible] தப்பாடத்திலேயும் இத்தறைவரையும் நம்மாற்பண்ணப்பட்ட பிரசங்கத்தைப்பத்தும்பத்தாய் விசாரித்தோமானால் மோக்ஷமாகிறகுறையற்ற பாக்கியத்தைச் சீவன் சொல்லவேணுமென்றிருக்கையிலே [illegible] அபத்தவார்த்தைகளைப் பிரயோகிக்கிறார்களென்று சிலருக்குக் கண்டுபிடிக்கலாயிருக்கிறது. அதேதென்றால் தேவேந்திரபதமாகிற சுவர்க்கமானது ஸ்திரீபோகமும் சந்தனமுதலானபரிமளங்களினாலேயும் புஷ்பங்களினாலேயும் வருகிற சுகத்தையும் அனுபவிக்கிறதுக்குத் தெளிவற்ற பாவிகளால் [illegible] ஸ்தலமாயிருக்கிறது மோக்ஷமென்கிற குறையற்ற பாக்கியத்தைச் சொல்லவேண்டிருக்கையிலே சுவர்க்கமென்கிற நாமதேயத்தைப் பிரயோகிக்கிறதென்கிறது மிகவுமனுச்சிதமாயிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. துலுக்கருடைய மதமானது அனேக ஸ்திரீகளோடே கூடப்போகிக்கிறதிலே மோக்ஷமாகிற பாக்கியமானது அடங்கியிருக்கிறதென்று விதிக்கிறதினாலே அப்படிப்பட்ட துர்மதத்தை யங்கீகரித்துக்கொண்டு வருகிற சுத்தமிருகங்களாகிற தெளிவற்ற பாவிகள் மோக்ஷத்தினுடைய ஆனந்தம் இப்படிக்கொத்ததென்று அபத்தவிச

வாசத்திலே அங்கீகரிக்கிறார்களென்றும் மோக்ஷமென்கிற பாக்கியத்தைச் சொல்லவேண்டியிருக்கையிலே சுவர்க்கமென்கிற சப்தத்தை அவர்கள் பிரயோகிக்கிறார்களென்றும் ஆச்சரியப்படுகிறதுக்குக் கணக்கில்லை. அப்படியிருந்தால் மோக்ஷத்தின் சுபாவசொரூபத்தை யறியாமல் அவர்களா லங்கீகரிக்கப்படுகிற மோக்ஷமேன்மையைச் சுவர்க்கமென்கிற பதத்தின் அர்த்தமானது வெளிப்படுத்து மென்கிறதினால் அவர்களால் அபத்தமாகக் [illegible] இல்லாத மோக்ஷத்தின் [illegible]க்குச் சுவர்க்கமென்கிற நாமத்தின் அர்த்தம் [illegible] திருக்குமென்கிறதுக்குத் தப்பாது.

தேவோக்தித்த வேதத்தை யனுசரிக்கிற பேர்களோவென்றால் குறையற்ற பாக்கியமாகிற மெய்யான மோக்ஷமானது சகலநன்மை சொரூபமாயிருக்கிற பராபர வஸ்துவின் பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலேயுந் தேவவிஷயக பரிபூரண பத்தியினாலேயும் அதினாலே வருகிற பரமானந்த முதலான சகல நன்மைகளுடைய அனுபவத்திலேயும் அடங்கியிருக்கிறதென்று அங்கீகரிக்கும்போது மனுஷருக்கும் நாய் நரிகளுக்கும் [illegible]மாயிருக்கிற ஸ்திரீபோக முதலான நீசசுகங்களை யனுபவிக்கிறதிலே மனுஷனுக்கு கூடத்தக்க பரலோக சம்பந்தமா யிருக்கிற அவதிரூபமான பாக்கியமானது அடங்கியிருக்கிறதென்று சொல்லக்கூடாது. அதேதென்றால் தெளிவற்ற பாவிகள் ஞாயத்துக்குஞ் சத்தியத்துக்கும் விருத்தமேயாயிக வெறுமனே கற்பித்த அப்படிப்பட்ட பொய்யாகிய பாக்கியத்துக்கும் அதினுடைய அனுபவத்துக்கான ஸ்தலத்துக்கும் அவர்களிட்ட சுவர்க்கமென்கிற நாமமானது மெய்யான மோக்ஷபரமானந்தத்துக்குஞ் செல்லுமென்று சுவர்க்கமென்கிற நாமத்தின் அர்த்தத்தை யறியாதவன் சொன்னாற் சொல்லுவானொழிய சுவர்க்கமென்கிற சப்தத்தின் அர்த்தத்தை யறிந்தவன் மெய்யான மோக்ஷத்தைச் சொல்லுகிறதுக்குச் சுவர்க்கமென்கிற பதத்தைப் பிரயோகிக்க மாட்டான்.

இவிடத்திலே நம்மாலே [illegible]புவிக்கப்படுகிற சத்தியவிசேஷத்தை சிலபேர்கள் ஒருபிரத்தி யுத்தாரத்தினாலே தட்டிப்போடத்தக்கதாக வருந்துகிறார்கள். இந்தப் பிரத்தியுத்தாரத்தைப் பத்தும்பத்தாய் விசாரிக்கப்பட்டால் வெதிராளிகளுடைய தாற்பரியத்துக்கு அதினாலே நிற்கமாட்டாதென் றெளிதாய்க் கண்டுபிடிக்கலாம். இவர்கள் சொல்லுகிற பிரத்தியுத்தாரமாவது. சுவர்க்கமென்கிற நாமமானது தேவேந்திர பதவிக்கு அஞ்ஞானிகளிட்ட நாமமாயிருந்தாலும் அந்தச் சப்தத்தைத்தானே மெய்யான பாக்கியத்துக்குத் தேவோக்தித்த வேதத்தை யனுசரிக்கிற பேர்களாயிருக்கிற நாம் இட்டோமென்கிறதினால் மோக்ஷமென்கிற பாக்கியத்தைச் சொல்லுகிறதுக்குச் சுவர்க்கமென்கிற நாமத்தைக் குற்றமில்லாமற் பிரயோகிக்கலாமென்றெண்ணிக் கொண்டிருக்கிறோம். இந்தப் பிரத்தி யுத்தாரமானது நானாவிதமான குறையுள்ளதா[illegible] வெதிராளிகளுடைய தாற்பரியத்தை யுப்பவிக்கிறதுக்கு வல்லதாயிராது. அதெப்படியென்றால் [illegible] யிருநூறு காதவழி[illegible]லே வாசமாயிருக்கிற கோடாகோடி மனுஷரான பேர்களுடைய சங்கேதத்தினாலேயும் இவர்களிலே வழங்கிற வேத சாஸ்திரிகளுடைய எண்ணப்படாத [illegible]ங்களினாலேயுஞ் சுவர்க்கமென்கிற நாமமானது ஸ்திரீபோகமுதலான நீசசுகங்களைப் பிரதானமாகச் சொல்லுமே[illegible] சிலபேர்களுக்குள்ளே பிழைக்கிற பிரசைகளுடைய சங்கேதத்தினாலே சுவர்க்கமென்கிற நாமமானது [illegible] கொண்டிருக்கவும் மோக்ஷபாக்கியத்தைச் சொல்லவு மாட்டாது. இந்தச் சத்தியத்தை இப்படிப்பட்ட கொஞ்சப் பிரசைகளுக்குள் [illegible] பிரபந்தத்தினாலே கண்டுபிடிக்கக் கடவோம். அதேதென்றால் மோக்ஷபாக்கியத்தை வர்ணிக்கிறதிலே சுவர்க்கமென்கிற பதப்பிரயோகத்தி னிமித்தியமாக மோக்ஷத்துக்குக் காரணமாயிருக்கிற பராபரவஸ்துவின் பிரத்தியக்ஷ தெரிசனமுதலான மகிமைகளை நினையாமற் கற்பிக்கப்பட்ட தேவேந்திரபதவியிலே யிருக்கிற நட்டுவரும் வேசிகளுடைய [illegible]லே பாடலுங் கட்டில் சப்பிரமஞ்சங்களிலே உஞ்சலாடுகிறதும் வேசிகளுடைய இடுப்பிலே

யிருக்கிற மணிகள் சத்திக்கிறதும் [illegible]ம்பை முதலான வேசிகளும் ஐந்து சர்ப்பவிருக்ஷங்களும் மன்மதந்துவசமாகிற மகரக்கொடியும் இ[illegible]தானைப்பட்ட இல்லாத அபத்த விசேஷங்களைக் கவீசுரனாயிருக்கிறவன் சொல்ல [illegible]தாமெழுதிய மற்றப்படியல்ல. இந்த அபத்த விசேஷங்களெல்லாங் கவீசுரனாயிருக்கிறவ னெழுதினதுக்குச் சுவர்க்கமென்கிற சப்தத்தின் பிரயோகமானது காரணமாயிருந்த தென்கிறதுக்குச் ச[illegible]த்தப்படக் கணக்கில்[illegible]லாம். [illegible]ரமாக அறியத்தக்க ஆசையுள்ளவன் கந்தபுராணமென்கிற பிரபந்தத்திலே பனிரண்டாம் விருத்தந்துவக்கி அப்பால் வாசிக்கக்கடவன். அதிலே சொல்லப்பட்டதிலே யிரண்டு மூன்று [illegible] காட்டுகிறோம். அதென்னவென்றால்.

"அருவிகள் [illegible]ம்பலமுழக்கஞ் [illegible] அடுக்கலெல்லாம் பனியின்பாங்கால்
உருவெல்லாம் வயிரத்தின்கல் உறுப்பெல்லா மரகதத்தின்கால்
[illegible]திருவெல்லாங் கொடிமுத்தின் சிறப்பெல்லாங் காட்டுவித்தி
மருவெல்லாம் வீசுமாடம் வளமெல்லாம் பேசங்கூடம்." (க.)

"ஆடரங்கினங்குஞ்சாலே பணியரங்கினங்குஞ்சாலே
வீடரங்கிணங்கும்பாயல் வெளியரங்கினங்குமடை
நீடரங்கூஞ்சலாடும் நிலைமணித் தாயவோசை.
பாடரம்பையர்கள் நாதகீத பண்ணொலியமுத[illegible]ஓசை." (உ.)

"சந்தனவிமான வீதி தண்பனி விமானவீதி
சுந்தரவிமானவீதி தும்புருவிமானவீதி
அந்தரவி[illegible]னவீதி யமந்தரவிமானவீதி.
நந்தரவிமானவீ[illegible]மந்தனவிமானவீதி." (ங.)

இத்தொகைப்பட்ட வேறே அபத்த விசேஷங்களைக் கவீசுரனாயிருக்கிறவன் எழுதி வைத்தது அதுக்குச்சுவர்க்கமென்கிற சப்தத்தின் பிரயோகமானது [illegible]தானொப்போலே காரணமாயிருந்ததொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே பத்தன் [illegible]டிலேயிருக்கிற பிரசைகளுடைய சங்கேதமானது யெல்லாருக்குந் தோற்றுவிக்கிற [illegible]ந்தத்தைப் பேதிப்பிக்கவுமில்லை. நாலுபிரசைகள் சகலலோகருக்கு விருத்தமாக இந்த[illegible]த்தத்தைக் கற்பித்ததினாற் சுவர்க்கமென்கிற பதமான மோக்ஷத்தைச் சொல்லு[illegible]திலே பிரயோகிக்கலாமென்று அங்கீகரிக்கிற[illegible]டமில்லை. இதுதவிரச் சருவேசுர[illegible]க் கடுத்த விஷயமென்னப்பட்ட யாவும் [illegible] புண்ணிய சொரூபமாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட விஷயங்களைச் சொல்லுகி[illegible]லே ஸ்திரீபோகமுதலான வியர்த்த விளையாட்டுகளை யிலவலேசமாகிலும் ஆரோபிக்கவுங் கற்பிக்கவுமொண்ணாது. ஆதலாலே ஒருபொருளைச் சொல்லி வேறேயொரு அர்த்தத்தை யுத்தேசிக்கிற உபோத்தகார யலங்காரத்தினாலே மோக்ஷராச்சியத்தை வர்ணிக்கிற [illegible] மாணிக்கங்கள்முதலான அலங்காரங்களைச் சொல்லலாமென்று அங்கீகரித்தோமானாலும் புத்திர சந்தானத்துக்[illegible]ரணமாகாததா யிருக்கிற பாவமான மைத்துனத்தின் மேன்மையையும் [illegible] படிக்க வேசிகளுடைய அருவருப்புள்ள நடக்கையையு[illegible] மோக்ஷ ராச்சியத்தை வர்ணிக்கிறதிலே கனபாவமில்லாமற் கற்பிக்கவுங் கூடாது. [illegible] காரணமாகச் சகல[illegible]ணங்களுடைய எண்ணப்படாத [illegible]களினாலேயுங் [illegible]க்கிற மனுஷருடைய சங்கேதத்தினாலேயுஞ் சுவர்க்கமெ[illegible]ன்சொல்லப்பட்ட மைத்துனத்தின்மேன்மையும் அரம்பைமுதலான வே[illegible]ருப்புள்ள நடக்கையும் பிரதானமாகச்சொல்லும்போது சகலநன்மை சொ[illegible]வஸ்துவினுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலேவருகிற மோக்ஷமா[illegible] பாக்கியத்தைச்சொல்லுகிறதிலே சுவர்க்கமென்கிறசப்தமானது பிரயோகிக்[illegible]லாமோ [illegible]ன்று சற்குருக்களாயிருக்கிறவர்கள் பரிச்சேதம்பண்ணக்கடவார்கள். இதுதவிர மோக்ஷராச்சியமென்னவென்று [illegible]கையிலே நாங்கள் [illegible]க்கிற சப்தத்தைக் கேட்கிற பேர்கள் அந்தச் சப்தத்தினிமித்தமாக மோக்ஷராச்சியத்திலே மைத்துன முதலான போகங்களுண்டோவென்று விசாரிக்கிறதுக் கிடங்கொடுத்தோமானால் அந்த பாவத்திலேயோ புண்ணியத்திலேயோ கூட்டென்று பக்ஷபாதமில்லாத புத்திமான்கள் வகையறுக்கக் கடவார்கள்.

[illegible] இந்தவகையாக மோக்ஷராச்சிய மிப்படிக்கொத்ததென்று சொல்லும்போது வைகுண்டம் கயிலாசமென்கிற இரண்டு சப்தங்களுடைய பிரயோகமானது மிகவு மநுசிதமாயிருக்கிற[illegible] கொள்ளாத் தேவோக்தித்த வேதப்பிரகாரமாக மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியமி

ன்னதென்று அங்கீகரிக்கிறவன் இப்படிப்பட்ட சப்தங்களுடைய அர்த்தத்தை [illegible]யாதிருந்தால் மோக்ஷமின்னதென்று சொல்லுகிறதுக்கு அப்படிப்பட்ட சப்தங்களைப் [illegible]யோகிப்பானென்றிய அதுகளுடைய அர்த்தத்தையறிந்தவன் மெய்யான மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்துக்கு வைகுண்டமென்கிற பேரையுங் கயிலாசமென்கிற நாமத்தையும் [illegible] [illegible]கரிக்கமாட்டான். அதேதென்றால் மார்பிலே ஸ்திரீயைக் கொண்டிருக்கிற வைகுண்டனென்கிறவனையுந் தலையிலே மனைவிட்டியைக் கொண்டிருக்கிற ருத்திரனென்கிறவனையும் இத்தன்மைப்பட்ட மற்றுமுண்டான பேர்களையும் சலமுடு பக்ஷபாதமுமில்லாமல் பத்தும்பத்தாய் விசாரித்தோமானால் [illegible] [illegible] அஞ்ஞானத்தினாலே அவனவன் தனக்குத்தோன்றின விதமாய் [illegible]பட்ட [illegible] ருத்திர பிர்ம்மாதிகளை வெறுமனே கற்பித்த தேவர்களென்று அதுப்புயிதிலுஞ் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளக் கடவோம். இவையெல்லாம் ஞானோபதேசத்தின் இரண்டாங் காண்டத்திலே விரிவாக வொப்புவிக்கப்படுமென்கிறதினால் அதை யொப்புவிக்கப் பட்டதென்று அங்கீகரித்து [illegible]றுவாமிலொப்புவிக்கத்தக்க விசேஷத்தை யொப்புவிப்போம்.

அரி அரன் பிர்ம்மாதிகள் வெறுமனே கற்பிக்கப்பட்டவர்களாயிருக்கிற வைகுண்டமுங் கயிலாசமும் அவர்களிருக்கிற ஸ்தலங்களென்று அவர்களுடையபுராணங்களிலே சொல்லப்படுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இதுஇப்படியிருக்கையிலேவெறுமனே கற்பிக்கப்பட்ட பேர்கள் வாசமாயிருக்கிற ஸ்தலங்கள் சத்தியத்துக்கு விருத்தமாகக் கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வேறுமொழியமற்றப்படியல்ல. [illegible]டியே வைகுண்டங் கயிலாசமுதலானதுகளை யில்லாத தேவர்களுக்கு வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களென்று ஞாயத்தின்படியே சொல்லவேண்டியிருக்கையிலே இல்லாத ஸ்தலங்களாகிய வைகுண்டமுங் கயிலாசமு மெய்யான மோக்ஷத்தைச் சொல்லும்போது பிரயோகிக்க வொண்ணாதென்று சந்தேகமில்லாமற் சொல்லக்கடவோம்.

இந்தச் சத்திய விசேஷத்தை வேறேயொரு ஞாயத்தினாலே கண்டுபிடிக்கலாம். அதேதென்றால்மெய்யான சர்வேசுரனைச் சொல்லும்போது வைகுண்டனென்கிற நாமத்தைச்சொல்லவும் நினைக்கவுமாட்டோமென்றிருக்கையிலே மெய்யான சர்வேஸ்வரனுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலேவருகிற மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தின் ஸ்தலத்துக்கு வைகுண்டமென்கிற நாமமானது செல்லுமென்று சொல்லுகிறதெப்படி. இதுகடைவாகச் சர்வேசுரனின்னதென்று சொல்லும்போது வைகுண்டனும் ருத்திரனுமென்கிற நாமங்களுடைய பிரயோகம் பண்ணவொண்ணாதென்று அங்கீகரிக்கிறபேர்கள் இரமத்[illegible] வார்த்தைகளை நடத்தவேணுமானால் இப்படிப்பட்ட பேர்களுக்கு வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களாகிற வைகுண்டமுங் கயிலாசமுமென்கிற நாமங்களை மெய்யாகவே யுண்டாயிருக்கிற முன் சொல்லப்பட்ட குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தைச் சொல்லும்போது பிரயோகியாம லிருக்கிறதென்கிறது [illegible] கிரமமுள்ள வசனமென்று சொல்லப்படும். அவ்வண்ணமே சர்வேசுரனுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே வருங் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமின்னதென்று சொல்லும்போது சுவர்க்கமும் வைகுண்டமுங் கயிலாசமுமென்கிற நாமங்களைப் பிரயோகிக்க வொண்ணாதென்று அங்கீகரிக்கப்படும். போலே [illegible] யித்தொகைப்பட்ட இல்லாத [illegible]களுடைய நாமங்களை மோட்சராச்சியமின்னதென்று சொல்லும்போது வர்ச்சிக்கக்கடவோம் [illegible].

இற்றைவரைக்கும் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே சுவர்க்கமும் இப்படிப்பட்ட ஸ்தலங்கள் இல்லாத ஸ்தலங்களாய் வெறுமனே கற்பிக்கப்பட்டவைக்கமென்று [illegible]று ஒப்புவிக்கப்பட்டாற்போலே யாச்சுது. ஆதலாலே இப்படிக்கொத்த ஸ்தலங்களிலே ஆத்துமத்தினுடைய மோக்ஷமாகிற அவதிருபமான நன்மை கிடைக்குமென்று சொல்லுகிறது [illegible]. ஆனால்மெய்யாகவே மோட்சமின்னதென்று நாம் நிரூபணம் பண்ணுகிறதுக்கு முன் இவர்களால் கற்பிக்கப்படுகிற மோட்சங்களை யாராய்ந்து பார்த்து அவைகளுக்குள்ளே சத்தியத்துக்கு விருத்தமாகக் கற்பிக்கப்பட்ட தப்பறை விசேஷங்களைத்தள்ளி மெய்யான மோட்சமின்னதென்று நிரூபிக்கத் தக்கதினாலே சத்தியத்துக் கொத்திருக்கிற மோக்ஷமென்கிறதை யங்கீகரித்துச் சிறிது ஞாயங்களினாலே அப்பால் வருகிற பாடங்களிலே யொப்புவிக்கக் கடவோம்.

உசு-ம் பாடம்.

சர்வேஸ்வரனை யறியாதபேர்கள் ஒருவழியாய் [illegible]மமாக நடவாமல் பரம்பரையிருக்கிறார்கள், மதங்களை யனுசரித்து நரிவருன [illegible] இன்ன [illegible] றுசொல்லுகிறதிலே [illegible] யற்ற [illegible]ண்ணும் பண்ணாமற் பலபல விதங்களை [illegible] பிரிந்த [illegible]ஞானியோன்னியமான விபரீத விசேஷங்களைக் கற்பிக்கிறாப்போலே ஆத்துமத்தினுடைய [illegible]ந்திகத்தைக் கண்டுபிடியாமல் அந்த விஷயத்திலே [illegible] [illegible] [illegible] வகையாய்ப் பலபல கதைகளைக் கற்பித்தெழுதி வைத்தார்கள். [illegible] [illegible] [illegible] கூட மனுஷசீவனுக்கு அழிந்துபோமென்கிற தப்பறைவிசேஷத்தை அங்கீகரித்துக்கொண்டு வருகிற பாவிகள் [illegible]த்துக்கு வருகின்ற சுகதுக்க மென்னப்பட்டயாவும் மரணத்துக்கு முன்னே மனுஷனுக்குப் பழக்கமொழிய மற்றப்படியல்ல வென்கிறார்கள். ஆதலாலே யிவர்களால் அங்கீகரிக்கப்பட்ட [illegible]பட்சத்தை அங்கீகரித்தோமானால் ஆத்துமத்தினுடைய வொடுக்கமான பூலோகத்திலே கிடைக்குமென்கிற அபத்தத்தைச் சொல்லவேண்டியிருக்கிறது. ஆதலாலே [illegible]லோகத்திலே திரிகிறபேர்கள் வழிப்போக்கருக்குச் சமானராயிருந்து அவதியை யடைந்தபேர்களா யிருக்கக்கொள்ள முன்சொல்லப்பட்ட பாவிகளுடைய வார்த்தைகளுக்குச் [illegible]டோமானால் ஆத்துமத்துக்கு ஒடுக்கமில்லை யென்றங்கீகரிக்கிற தென்கிறதுக்குச் சமானமாகும். வேறே சிலதுஷ்ட பாவிகள் நரிவருனது பலபல ஜென்மங்களிலே [illegible] வெண்ணப்படாத ஜெந்துக்களுடைய சரீரங்களைக் கொண்டிருந்து பலபேர்க ளிடைவிடாமற் பிறந்துவருகிறதென்கிற ஞாயத்தைக்கொள்வாத பட்சத்தை [illegible] குறைத்சலினாலே விசுவாசிக்கிறார்க ளென்கிறதினாலே தேவேந்திரபதவியாகிற சுவர்க்கத்திலே மனுஷசீவனுக்கு ஒடுக்கம் கிடைக்குமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதிலே நரிவருனது இவ்வுலோகத்திலே [illegible]ரத்தைக் கொண்டிருக்கப்பண்ணின புண்ணியங்களுக்கான பலனை யனுபவித்தபிற்பாடு திரும்பப் பூமியிலேவிழுந்து கல்லாய்மரமாய் முற்றுமுண்டான வஸ்துக்களாய்ப் பிறக்குமென்கிற எந்தஞாயத்துக்கும் ஏற்கிராத [illegible] விசேஷத்தைச் சம்மதித்துக்கொண்டு வருகிறார்கள்.

இவர்களுடைய மதத்தைப் பத்தும்பத்தாய் விசாரித்தோமானால் ஆத்துமத்துக்குப் [illegible] மாத்திரத்திலே ஒடுக்கங் கிடைக்குமென்று சம்மதித்துக்கொண்டு வருகிறார்களென்று சொல்லவேணுமொழிய அவர்களுடைய [illegible]த்தின் அநுசாரணத்தினாலே ஆத்துமத்துக்கு மெய்யான வொடுக்கங் கிடையாதென்று சொல்லவேண்டியிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது அதேதென்றால் ஒடுக்கமானது கடைசியான அவதியென்று சொல்லப்படுகிறதுக்காக அவதிக்கப்பால் வேறொரு வஸ்துவுண்டென்று மதிக்கப்படாதென்று சொல்லுவாரிருந்து [illegible] யிருக்கிறவன் சொல்லமாட்டான். அதேதென்றால் அவதியானது முடிவென்று சொல்லவேண்டியிருக்கையிலே முடிவுக்கப்பால் வேறொன்று இடைக்குமென்று சொல்லத்தகாது. அப்படியே வேறேயொன்று கிடைக்குமென்று சொன்னோமானால் ஒன்றுதானே முடிவுமாய் முடிவாகாததுமாயிருக்கிறதென்கிற முதிர்ந்த விரோதத்துக்குச் சம்மதித்தாப்போலே யாச்சுது. இதுகாரணமாக [illegible] [illegible]களுக்கு அவதிகளுக்கு ஒவ்வொருவர்க்கொள்ள மோட்சத்தையடைந்த பேர்முதலானவர்கள் என்றென்றைக்கும் அப்படிப் [illegible] [illegible]தமாகிற சுகசன்மைகளுடைய விஸ்தீரணங்களிலே குறையற்ற பாக்கியத்தை யனுபவிப்பார்களென்றும் நரகத்திலே விழுந்த நிற்பாக்கியர்கள் அதில் நின்றெருக்காலும் பிறப்படாமல் நரகத்தினுடைய ஒழியாத அக்கினிக்குள் என்றென்றைக்கும் அவியாத்தகட்டைகளா யிருப்பார்களென்கிறதுக்கும் தப்பாது. இந்தச் சத்தியங்க ளிரண்டையுந் தேவோக்திச் சேவேதத்தினுடைய அனேக வுதாகரணங்களிலே சந்தேகமற அங்கீகரித்துக்

கொண்டு வருகிறோம். அந்தச் சத்தியங்களிரண்டையுந் தானே பல பல ஞாயங்களினாலே யினிமேல் முப்பத்திரண்டாம்பாடந் துவக்கி அப்பால் சொல்லப்படத்தக்க ஆறு பாடங்களிலும் ஒப்பச்சொல்லக் கடவோம்.

அப்படிப்பட்ட ஞாயங்களைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானால் ஒன்றிலே கவர்க்க பதத்திலே நரசிவனுக்கு [illegible] டுக்கம் கிடையாதென்று சொல்லக்கடவோம். அப்படிச் சொல்லாவிட்டால், நரசிவனுக்கு [illegible] தன்னை [illegible] தடைப்படி அவதிகள் கிடைக்கிறதென்கிற முழுதும் அபத்தமான [illegible] விரோதமானதுமாயிருக்கிற [illegible] தமானத்தை அங்கீகரித்தோமென்கிறதுக்குச் சமானமாம். வைகுண்ட வகையானது எப்படிக்கொத்ததென்றால் ஜெனார்த்தனனென்கிற காமதேயத்தை விஷ்ணுவாகிற வைகுண்டனுக்கு வீணுக் கற்பித்தார்களென்கிறதினால் வைகுண்டத்தை யடைந்தவன் வேறே ஜென்மத்தையடைந்து வேறே பொருளாய்ப் பிறக்கமாட்டானென் றங்கிகரிக்கத்தக்கதாக சிலபேர்கள் தங்களுக்கு இடம் பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அதேதென்றால் ஜென்ம மெனப்பட்ட [illegible] நீக்கியிருக்கிறதென்கிறது ஜெனார்த்தனனென்கிற பதத்துக்கு அர்த்தமாகும். அவ்வண்ணமே சிவனுக்கு வேறே ஜென்மமில்லாதபடிக்கு வைகுண்டன் காரணமாயிருக்கிறதென்று விசுவாசிக்கிற பேர்கள் வைகுண்டனுடைய ஸ்தலமாகிற வைகுண்டத்தை யடைந்திருக்கிற சிவன் [illegible] நின்றிறங்காம லென்றென்றைக்கும் அவ்விடத்திலே யிருக்குமென்று விசுவாசிக்கிறதினாலே வைகுண்டத்திலே யவதிரூபமான நன்மையாகிற [illegible] மோக்ஷமானது சிவனுக்குக் கிடைக்குமென்று சொல்லிக்கொண்டுவருகிறார்கள். ஆனால் மார்பிலே பெண்டாட்டியை யிடைவிடாமல் சுமந்துகொண்டிருக்கிறவனை வெறுமனேகற்பிக்கப்பட்ட தேவனென்கிறதினாலே அவனுக்கான வைகுண்டமென்கிற ஸ்தலமானது வெறுமனேகற்பிக்கப்பட்ட காணப்படாத ஸ்தலமாயிருக்கிறதென் றொப்புவிக்கப்பட்டாற் போலேயாச்சுது. அப்படிப்பட்ட இல்லாத ஸ்தலமோவென்றால் மெய்யானபாக்கியமென்கிற மோக்ஷத்துக்கான ஸ்தலமாயிருக்கலாமென்று மதிகெட்டவன் முதலாய்ச்சொல்லமாட்டான்.

இதன்றியே வைகுண்டனென்கிற காமத்தைக் கொண்டிருக்கிறவ [illegible] த்தமாக ஆனந்தமுதலான நன்மையென்னப்பட்டவைகளையும் அடைந்திருக்கிறானென்றும் அவனுடைய புராணபிரபந்தங்களினாலே அங்கிகரிக்கத்தக்க சித்தாந்தமாயிருக்கச்செய்தே ஆனந்தமுதலான நன்மைகளுடைய விஷயங்களிலே வைகுண்டனென்கிறவன் இகவுங்குறைவுள்ள பொருள்க்ளென்று கண்டுபிடிக்கலாகும். ஆதலால் வைகுண்டனென்கிற காமத்தைக்கொண்டிருக்கிற வனிடத்திலே சகல நன்மைவிஷயங் குறையற்ற [illegible] யமானது இல்லாத போது அவதிரூபமான குறையற்றபாக்கியத்தைச் சிவனுக்குக்கொடுக்கத்தக்கதாக வைகுண்டனானவன் வல்லவனாயிருக்கவில்லையென்று கேட்க [illegible] ஆனபடியினாலே வைகுண்டமென்கிற ஸ்தலத்திலே அவதிரூபமானகுறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தைச் சிவனானது அடையுமென்று அறிவின்குறைச்ச லுள்ளபேர்கள் அங்கீகரிப்பார்களேயொழிய மற்றப்படியல்ல. சொல்லப்பட்ட இந்த இரண்டு ஞாயங்களினாலே ருத்திரனுடைய ஸ்தலமாகிய கயிலாசமானது வெறுமனேகற்பிக்கப்பட்ட ஸ்தலமாயிருக்கிறதென்று காட்டப்பட்டாற் போலேயாச்சுது. அப்படிப்பட்ட கயிலாசமாகிற ஸ்தலமதிலே வந்தாலும் பார்வதிபதியினுடைய நிமித்தமாக நன்மையென்னப்பட்டதெல்லாம் அடைந்திருக்கிறானென்று சிவனுக்கவதிரூபமான குறையற்ற பாக்கியத்தைத் தருபவனாயிருக்கிறானென்று அங்கீகரிக்கிறதுக்கு யெள்ப்பிரமாணமானது மிடங்காணமாட்டாது.

இற்றைவரைக்கும் நம்மாற்பண்ணப்பட்ட பிரசங்கத்தினிமித்தமாகத் தேவேந்திர பதமாகிற சுவர்க்கமும் வைகுண்டமுங் கயிலாசமும் இத்தொகைப்பட்ட ஸ்தலங்களும் வெறுமனே கற்பிக்கப்பட்ட ஸ்தலங்களாயிருக்கிறதென்று ஒப்புவிக்கப்பட்டது தவிர அப்ப

டிப்பட்ட இல்லாத ஸ்தலங்களுண்டென்று அங்கீகரிக்கப்பட்டாலும் அவைகளிலே குறையற்றபாக்கியமாகிற மோக்ஷமானது மனுஷசிவனுக்குக் கிடையாதென் றொப்புவித்தாற்போலேயாச்சுது. ஆனால் சிவனுக்கு ஒடுக்கமான வருகையைவிசாரித்துப் படித்தால் இந்த வகையத்திலே சத்திய மின்னதென்று அறியாமலிருக்கிற வேறே சிலபேர்களை மோக்ஷத்தினித்தியமாகச் சிவனுக்குக்கொடுக்கக் கிடைக்குமென்று ஸ்தாபித்து மோக்ஷமின்னதென்று சொல்லும்போது அநேக அபத்தவிசேஷங்களைச் சொல்லித் தாறுமாறாய்க் [illegible] கொண்டு வருகிறார்கள். அப்படியே வையாயிகத்திலே மோக்ஷமின்னதென்று [illegible] பிக்கப்படுகிறபோது யிருபத்தொருதுக்கம் இனிவாராதமானது மோக்ஷமாயிருக்கிறதென்று [illegible] பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் [illegible] மான தேகத்திலே அடங்கியிருக்கிறதென்று [illegible] தனிவற்றுப்பாவிகள் நிருபிக்கிறபோது பராபர வஸ்துவாகிற சர்வேஸ்வரனானவர் மோக்ஷத் தருபவரென்று எல்லாருக்குஞ் சம்மதமாம் இதிப்படியிருக்கையிலே மோக்ஷத்தின்வகையிலே அவனவன் தனக்குத்தோன்றின பிரகாரமாகப்பலபலவிஷயங்களை யெழுதிவைத்தானேயொழியச் [illegible] ஒருத்தனானாலும் மோக்ஷமின்னதென்று நிருபிக்கமாட்டினானில்லை. அவ்வண்ணமே பராபரவஸ்துவினுடைய சந்நிதியிலேயிருந்தால் அப்படிப்பட்ட சந்நிதியின் மையிலே அதுக்கு மோக்ஷங்கிடைக்குமென்றுசொல்லுகிறார்கள். வேறேசிலபேர்கள்பராபரவஸ்துவினுடைய சாமிப்பியமானது சிவனானது மோக்ஷத்தையனுபவிக்கிறதுக்குச் சம்பூரணகாரணமாயிருக்குமென்று அங்கிகரிக்கிறார்கள்வேறேசிலபேர்கள் பராபரவஸ்துவோடே [illegible] யமானது சிவனானதை மோக்ஷத்தை யடையத்தக்கதாகப் பண்ணிக்கொண்டு வருகிற [illegible] க்கொள்ளத்தக்கசத்தியவிசேஷமாயிருக்கிறதென்றுசொல்லுகிறார்கள். இவர்கள் [illegible] தெளிவற்றபாவிகள் முழுதும் ஞாயமின்னதென்று அறியாமல் ஞாயத்துக்கும் புத்திக்கும் விருத்தமாகவேறேமெனாக்குள்ளே மோக்ஷமானது அடங்கியிருக்கிறதென்றுகற்பித்தார்கள். அதேதென்றால் பராபரவஸ்துவிடத்திலே சிவனானது லயமாய்ப்போனாலொழிய அது மோக்ஷத்தையடையமாட்டாதென்று குளறிக்கொண்டுவருகிறார்கள். பராபரவஸ்துவினிடத்திலே அவர்களாற் கற்பிக்கப்படுகிற சிவனுடைய லயத்துக்குச்சாரூப்பியமென்கிற காமமு [illegible] பண்ணினார்கள்.

கடைசியாய்வேறே சிலபேர்கள் சிவனானது பராபரவஸ்துவைக்கண்டுவந்தால் அப்படிப்பட்டதெரிசனத்திலே மோக்ஷ அனுபவமானது சிவனுக்குச் சித்திக்குமென்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட பேர்கள் கிரமந்தப்பாமல் தங்களுடைய பக்ஷத்தையொப்புக்கொள்ளத்தக்க விதமாகச் சொல்லிக் காட்டவேணுமானால் அப்படிப்பட்ட தெரிசனமானது பிரத்தியக்ஷதெரிசனமாயிருக்கிறதென்று அவர்கள் அங்கீகரிக்கவேணும். அதேதென்றால் சிவனானது குறையற்றபாக்கியமாகிற மோக்ஷத்தையனுபவிக்கிற இவ்வுலகத்திலே பராபரவஸ்துவை அனுமானதெரிசனத்தினாலேயுஞ் சப்தெரிசனத்தினாலேயும் அது கண்டுபிடிக்கிறதென்கிறதுக்குத்தப்பாது. ஆகையாலே சர்வேஸ்வரனைச் சிவனானது தெரிசிக்கிறதினாலே மோக்ஷபாக்கியத்தையடையுமென்று சொல்லும்போது அப்படிப்பட்ட தெரிசனமானது பிரத்தியக்ஷதெரிசனமாயிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகப்படக்கூடாது. அந்த தெரிசனத்துக்குச் சாலோக்கியமென்கிற பேரையிட்டார்கள். அப்படியே மோக்ஷமாகிய குறையற்ற பாக்கியமானது சாலோக்கியத்திலே யடங்கியிருக்கிறதென்று அங்கீகரித்துக் கொண்டுவருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சம்மதித்துக்கொண்டுவருகிற மோக்ஷமேதோவென்று பார்த்தோமானால் அது ஒன்றிலேமாத்திரஞ்சத்தியத்திலே கூடுமென்றுசொல்லலாயிருந்தாலும் அப்படிப்பட்ட பிரத்தியக்ஷதெரிசனத்தினாலே சிவனுக்குக் குறையற்றபாக்கியமானது சித்திக்கும்வகையை அவர்கள் செவ்வையாகச்சொல்லக்காணோம். ஆனபடியினாலே மோக்ஷமாகிய குறையற்றபாக்கியமானது பராபரவஸ்துவின் பிரத்தியக்ஷ தெரிசனத்திலே அடங்குமென்கிற மெய்யானவசனத்தைமாத்திரம்இவர்கள் சொல்லிக்கொண்டுவரச்செய்தே

இந்த விஷயத்திலே வெளிப்படுத்தத்தக்கபரமரகசியங்களெல்லாம்வெளிப்படுத்தி [illegible] மோக்ஷமின்னதென்றும் மற்றவிஷயங்களுக்குச் சம்மதப்படுகிறபேர்களைப்போலே இவர்கள் கண்டுபிடியாமற்போனார்களென்று சொல்லக்கடவோம். ஆனாலிவர்கள் அங்கீகரிக்கிறமதத்தை விட்டு மோக்ஷவிஷயத்திலே மற்றவர்களனுசரித்துக் கொண்டுவருகிறமதங்களைக்கொஞ்சத் துக்குள்ளே சொல்லிக்காட்டி அதுகளெல்லாஞ்சத்தியத்தின் வழியைவிலகிஞாயத்துக்கும் புத்திக்கு மேற்படாத தப்பறைகளாயிருக்கிறதென்று சுருபத்திலேயொப்புவிக்கக்கடவோம்.

இதெல்லாங்கிரமத்தோடேயும் எல்லாருக்கும் அதைவிளங்கப்பண்ணும்படிக்குச்சான்னித்திய முதலானபதங்களுடைய அர்த்தத்தைவெளிப்படுத்தி அவர்களுடைய தாற்பரியமானது சத்தியத்துக் கொவ்வாதென்று சங்ஷேபமாகக் காட்டுவோம். சான்னித்தியமானது முன்னேயிருக்கிறது அப்படியே சிவனானவன் பராபரவஸ்துவின் சன்னிதியிலேயிருந்தால் அது மாத்திரமோக்ஷானுபவத்தைச் சிவனுக்குவரப்பண்ணத்தக்கதாகச் சம்பூரணகாரணமாயிருக்கிறதென்று அவர்களங்கீகரிக்கவேணும். அதேதென்றால் சாலோக்கியமுதலென்று அவர்களாற்சொல்லப்படுகிற மோக்ஷமேனைக்குச் சான்னித்தியமானது வெறுமையுள்ளபேறாயிருக்கிறதென்று சொல்லுகிறதுக்குச் சாமீப்பியாதிவகைகள் சான்னித்தியவகையோடே கூடியிருக்கவேணுமென்கிறதுக்குத்தப்பாது, இத்தறுவாயிலே அவர்களாற்சொல்லப்படுகிற உவமையிலே யிதே அவர்களுடைய தாற்பரியமாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கலாயிருக்கிறது. அதேதென்றால் குளத்திலேயிருக்கிற தாமரைப்புஷ்பமானது சூரியனுடையசன்னிதியிலே விகசிக்குமாப்போலே சிவனானது சர்வேசுரனுடையசன்னிதியிலே மோட்சமாகிற [illegible] பாக்கியத்தை யனுபவிக்குமென்கிறதுக்குச் சந்தேகப்படக்கூடாதில்லையென்று சொல்லுகிறார்கள் ஆதலாலேமோட்ச அநுபவத்துக்குத்தேவசந்நிதியானது ஒன்றேசாட்சாத்காரணமாயிருக்கிறதென்று இவர்களுடைய விபட்ச அநுசரணத்தினாலேசொல்லத்தகும். [illegible] கிறதென்கிற அர்த்தத்தைச்சாமீப்பியமென்கிற பதமானதுகொண்டிருக்கும். [illegible] மே சிவனானது பராபரவஸ்துவினண்டையிலே யிருக்கிறதினாலேமாத்திரம் மோட்சமாகிற குறையற்றபாக்கியத்தையடையுமென்றுசொல்லுகிறார்கள். இந்த இரண்டுமதங்களை அநுசரிக்கிறபேர்கள் சர்வேசுரனுடைய சுபாவசொரூபத்தைச் சுத்தமாயறியாமல் அவரெங்கும் வியாபித்திருக்கிற சத்தியவர்த்தமானத்தை இலவலேசமாகிலும் கண்டுபிடித்தார்களென்று சொல்லவுங் கருதவுங்கூடாது.

அதேதென்றால் அனந்த ஞானசொரூபமாயிருக்கிற கர்த்தாவானவர் ஒன்றுமுண்டான வர்த்தமானத்தையும் உள்ளும் புறம்புமாக வஸ்துவென்னப்பட்டயாவையும் அளவில்லாததெளிவோடேபார்த்துக் கொண்டிருக்கிறதினால் அவருடைய திவ்வியசன்னிதியிலே வஸ்துவென்னப்பட்டயாவு மிருக்கிறதென்று சந்தேகமற அங்கீகரிக்கவேணும். இதன்றியே கர்த்தாவானவர் தமது திவ்விய சத்தியிலே சர்வத்தையும் [illegible]கிறதினால் வஸ்துவென்னப்பட்டதெல்லாங்கர்த்தனுக்குச்சமீபமாயிருக்கிறதென்று சொல்லவுங்கூடவேது. ஆதலாலே ஒன்றாகிலும் அவருக்கு மறைக்கப்பட்டதா யிருக்கிறதென்று சொல்லவுங்கருதவுங்கூடாது. சான்னித்திய சாமீப்பிய வென்கிற இரண்டு பதத்துக் குண்டான இந்த அர்த்தத்தையனுசரித்தோமானால் சகல அசேதனவஸ்துக்களும் பூலோகத்திலே [illegible]கிற மனுஷரென்னப்பட்டயாவரும் நரகத்திலேவிழுந்து மீளவொண்ணாததாயிருக்கிற கோரபாதைகளையனுபவிக்கிற பிசாசுமுதலான நிற்பாக்கியபாவிகளுஞ் சர்வேசுரனுடைய சன்னிதியிலேயிருந்து அவருக்குச் சமீபமாயிருக்கிறார்களென்று சொல்லவேண்டியதாகிறது. அப்படிப்பட்டபேர்களெல்லாரும் மோட்சத்தையடையாமலிருக்கிறார்களென்று பிரத்தியட்சமாய்க்கண்டிருக்கிறதுக்காகச் சான்னித்தியமுஞ் சாமீப்பியமும் மோட்சானுபவத்துக்குக் காரணங்களாயிருக்கிறதென்று மதிகெட்டவர்கள் [illegible] வருகிறார்கள் [illegible] இரண்டும் முழுதுந்தப்பறையாயிருக்கிறதென்று அறியலாகிறது சந்தேகமில்லாமலொப்புவிக்கப்பட்டதாக்கடவோம். அனைப்படியினாலே இவர்கள் சொல்லுகிற வியர்த்தவிசேஷங்களைவிட்டு அப்பால் அவர்கள் கற்பித்துக்கொண்டுவருகிற மோட்சத்தின் வேறுமேனைகளையாராய்ந்து கொள்ளக்கடவோம்.

கூடயிருக்கிறதென்றும் கலந்திருக்கிறதென்றும், சாயுச்சியமென்கிற பதத்துக்கு அர்த்தமாகும். இத்தறுவாயிலே கலந்திருக்கிற அர்த்தத்தை அங்கீகரிக்கவேணும். அப்படியே அங்கீகரியா திருந்தால் சாமீப்பிய மென்கிறபதத்தின் அர்த்தத்துக்குச் சாயுச்சியத்தின் அர்த்தமானது வேறுபட்டதாயிராது. ஆதலாலே கலந்திருக்கிற தென்கிற அர்த்தத்தை யித்தறுவாயிலே சாயுச்சியமென்கிற சப்தமானதுகொண்டிருக்கிறதென்று சொல்லக்

[illegible]வோம். இப்படிப்பட்ட அர்த்தத்தைக் கொண்டிருக்கிற சாயுச்சியமானது உண்டாகமாட்டாத வர்த்தமானத்தை யுண்டாயிருக்கலா மென்றுசொல்லிக்கொண்டு வருகிறதினால் சாயுச்சியமானது மோக்ஷ அநுபவம் பிறப்பிக்கலா மென்கிறபக்ஷமானது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. இதெல்லாம் வெளியாகும்படிக்கு இவர்கள் சொல்லிக்கொண்டு வருகிற திஷ்டாந்தரத்தினாலே இவர்களனுசரிக்கிற மதத்தினுடைய அபிப்பிராயத்தைக் கண்டுபிடிக்கலாகும். அதேதென்றால் தண்ணீர்களிரண்டும் அன்னியோன்னியமாய்க் கலந்து போகிறாப்போலே பராபரவஸ்துவோடேகூடச் சிவனானது கலந்துபோமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே பராபர வஸ்துவோடேகூடச் சிவனுடைய கலப்பானது [illegible] ஐக்கியமாகிற மோட்சத்தைச் சிவனானது அநுபவிக்கிறதுக்குச் சாட்சாத்காரணமா யிருக்கிறதென்று அறிவில் குறைச்சலினாலே கற்பித்துக் கொண்டிருக்கிறார்களென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. அதேதென்றால் கலப்புக்குக் [illegible]யிருக்கிற பொருள்களானதுகள் அவசியமாய் அம்ஷங்களுள்ளதுகளாயிருக்கவேணுமென்றிருக்கையிலே அகண்டவிதமாயிருக்கிறபராபர வஸ்துவுக்கு அம்ஷங்களுண்டாயிருக்கிறதென்கிற கருதவொண்ணாத தப்பறைக்குச் சம்மதப்பட்டாப்போலேயாகும். இப்படிப்பட்ட தப்பறையை அங்கிகரிக்கிறது கடவுளானவருண்டாக்கப்பட்ட வஸ்துவாயிருக்கிறதென்று அங்கிகரிக்கிறதுக் கொக்கும்.

இதுதவிர இரண்டு பொருள்களினுடைய கலப்பைப் பத்தும்பத்தாய் விசாரித்தோமானால் அது மூன்றுவிதமாகப்பிரியுமென்றுசொல்லலாயிருக்கும். அதில் முதலாங்கலப்பின் [illegible]மானது இரண்டு பொருள்கள் அன்னியோன்னியமாய்க்கலந்துபோயிரண்டுபொருளில்ஒரு பொருளாகிலுங் கெடாமல் இரண்டு பொருளு மொன்றோடொன்று சம்மந்தித்திருக்கும் [illegible] பிரகாரமாகத் தண்ணீராயிருக்கும் தண்ணீரானது கலந்துபோனால் தண்ணீர்களிரண்டுங் கெட்டுப்போகாமல் ஒன்றோடொன்று சம்மந்தித்திருக்குமென்று கண்டுகொண்டு வருகிறோம். அது காரணமாக வெவ்வொரு தண்ணீரைக் காட்டிலும் சம்மந்தித்திருக்கிற தண்ணீர்களிரண்டும் அதிகமாயிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. இப்படிப்பட்ட வகையுள்ள கலப்பை விசாரித்தோமானால் சிவனுக்குஞ் சர்வேஸ்வரனுக்கும் அப்படி யுண்டாகமாட்டாதென்று சந்தேகமற அங்கிகரிக்கக்கடவோம். அதேதென்றால் சர்வேஸ்வரனுக்குஞ் சிவனுக்குந் தண்ணீர்போலே சம்மந்திக்கப்படத்தக்க பலபல அம்ஷங்களுமில்லை. சர்வேஸ்வரனிருந்தாலும் இந்தப் பிரகாரமாகக் கலக்கப்பட்டால் ஒவ்வொன்றைக் காட்டிலும் அதிக [illegible]பொருள் பிறக்கலாமென்று முழு மதிகெட்ட பிலேச்சனானவன் சொல்லவுங் கருதவு மாட்டான். இந்தக் கலப்புத் தவிர வேறே யிரண்டாம் வகையுள்ள கலப்பாவது அன்னியோன்னியமாய்க் கலந்துபோகிற பொருளிரண்டுங் கெட்டுப்போய் வேறே யொரு மூன்றாம் பொருளாகிறது உற்பவிக்கும். இதற்குதாரணமாக மாதாவின் கர்ப்பத்திலே மனுஷன் முதலான செந்துக்களுடைய சென்மங்களிலே கலந்துபோகிற மாதாவினுடைய இரத்தமும் தகப்பனுடைய சுக்கிலமும் இரண்டுங் கெட்டுப்போய் மூன்றும் பொருளாகிற சரீரம் பிறக்கும். இப்படிப்பட்டகலப்பானது பராபரவஸ்துவுக்குஞ் சிவனுக்கு முண்டாகலாமென்று [illegible] சொல்லக்கூடாது. அதேதென்றால் சிவனானது சர்வேசுரனாலே அழிக்கப்படலான பொருளாயிருந்தாலுஞ் சிவனிடத்திலே க்ஷயத்துக்குக் காரணமானது அடங்கியிராததினால் சிவனானது அக்ஷயமாயிருக்கிற வஸ்துவென்றுசொல்ல வேண்டியிருக்கிறது. சர்வேசுரனானவரோவென்றால் அவரிடத்திலே க்ஷயத்துக்குக்காரணமான [illegible] யாதொன்றுமில்லாததினாலேயும் அவரோ வேறேயொருவஸ்துவினாலே அழிக்கப்படலான வஸ்துவாயிராததினாலேயும் சர்வேசுரனுக்கும் சிவனுக்கும் முன்சொல்லப்பட்டகலப்பானது உண்டாயிருக்குமென்று [illegible] தப்பறையுமில்லாமல் அங்கிகரிக்கக்கூடாது. மூன்றாம்வகை கலப்பாவது இரண்டு வஸ்துக்களொன்றோடொன்று கலந்தபோதல் அந்தப்பொருள்களில் ஒன்று கெட்டுப்போய் மற்றப்பொருளுக்கு அபிவிர்த்தி யுண்டாம் இந்தவகை கலப்பானது சாரூப்பியத்திலே கூடுமென்கிறதுக்காகச் சாரூப்பியமானது எந்த ஞாயங்களினாலே ஆக்ஷேபனை நம்மால் பண்ணப்படுமோ அந்த ஞாயங்களினாலே சிவனுக்குஞ் சர்வேசுரனுக்கும் அப்படிப்பட்டகலப்பானது உண்டாயிராதென்று சந்தேகமற அங்கிகரிக்கப்படுமென்கிறதுக்குத் தப்பாது இதெல்லாஞ் சர்வேஸ்வரனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே வருகிறபாடத்திலே கொஞ்சத்துக்குள்ளே நிறைவேற்றவருந்தக்கடவோம்.

௨௭-ம் பாடம்.

சாரூப்பியமாவது மோக்ஷத்துக்குக் காரணமாயிருக்கிறதென்று முன் பின்விசாரியாமல் சிலமதிகெட்டபேர்களங்கீகரித்துக்கொண்டிருக்கிறார்கள். சர்வேசுவரனோடே சிவனானது ஒருரூபமாய்ப்போகிறதென்கிறதுக்குச் சாரூப்பியமென்கிற நாமத்தைச் சொல்லிக்கொண்டுவருகிறார்கள். இப்படிப்பட்ட சாரூப்பியமானது பலிக்கும் வகையெப்படியென்றால் விறகானது அக்கினியிலே லயமாய்ப் போறாப்போலே சிவனுந் பரம்பரவஸ்துவிடத்திலே சேர்ந்துபோம். அதுக்காக சிவனானது குறையற்ற ராச்சியமென்கிற மோக்ஷத்தையடைகிறதென்று அங்கீகரிக்கிறார்கள். இதெல்லாமுழுப்பயித்தியகாரன் நித்திரையிலே கண்டசொற்பனம்போலே யிருக்கிறதென்றெல்லாருஞ்சொல்லுகிறதுக் கிடமுண்டாயிருக்கிறதொழியமற்றப்படியல்ல. இந்தச்சாரூப்பியமானது தப்பறைச் சொரூபமாயிருக்கிறதென்றொப்புவிக்கத்தக்கதாக உண்டாயிருக்கிற ஞாயங்களுக்குள் ஒன்றிரண்டுமாத்திர மெடுத்துக்காட்டக் கடவோம்.

அதில் முந்தின ஞாயமாவது சகல நன்மை சொரூபமாயிருக்கிற பரம வஸ்துவினிடத்திலே வேறொரு வஸ்துலயித்துப்போகிறதென்கிறது சர்வஞாயங்களுக்கும் ஒவ்வாத தப்பறையாயிருக்கிறதென்று சொல்லவேண்டியதொழிய மற்றப்படியல்ல. அதெனென்றால் இயாதொரு வஸ்துவிடத்திலே வேறேயொரு வஸ்துவானது லயித்துப்போனால் லயிப்பிக்கிற வஸ்துவானது அபிவிர்த்தியையும் விகாரத்தையும் அடைகிறதென்று பிரத்தியக்ஷமாய்க் கண்டு கொண்டு வருகிறோம். இந்த விஷயமானது லோகத்திலே காணப்படுகிற சகலலயங்களுடைய விதங்களினாலொப்புவிக்கப் படுகிறதினாலே முழுதுமதிகெட்ட மிலேச்சனும் இதிலே சந்தேகப்பட்டாற் படவாறொழியப் புத்தியாயிருக்கிறவன் அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ விஷயத்திலே லவலேசமும் சந்தேகப்படமாட்டான். அதெதென்றால் அக்கினியிலே விறகு முதலான திரவியங்கள் லயிச்சுப்போனால் அக்கினியானது அபிவிர்த்தியையும் விகாரத்தையும் அடையவில்லையென்று சொல்லக்கூடுமோ. அதெனென்றால் அப்படிப்பட்ட அபிவிர்த்தியும் விகாரமும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுமென்கிறதுக்காக முழு மதிகெட்ட பயித்தியக்காரன் அப்படிப்பட்ட அபிவிர்த்தியும் விகாரமு முண்டாயிராதென்று சொல்லவுங் கருதவுமாட்டான்.

இந்தச் சத்தியமுள்ள மேரையை மற்றலயங்களுடைய விதங்களினாலே யோசிக்கக்கடவது. அதெனென்றால் பக்ஷிக்கப்படுகிற பக்ஷணதிபானங்களும் சீரணத்தின் சத்தியினாலே லயிச்சுப்போமென்கிறதுக்காகச் சரீரத்துக்கு அபிவிர்த்தியும் விகாரமும் வருகிறதென்று பிரத்தியக்ஷமாய்க் காணப்படும். தீபத்திலே யெண்ணெயானது அக்கினியிலே மெள்ளமெள்ள லயிச்சுப்போகிறதுக்காக அக்கினியானது இடைவிடாமல் நவமாய்ச் செனிக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படவாருண்டா. இப்படிச் செலவழிவிட்டால் எண்ணெயில்லாமல் தீபம் அணைந்து போகிறதுக்குக் காரணமேது அவ்வண்ணமே, அக்கினியிலே லயிச்சுப்போகிற ஸ்நேகமில்லாதபோது லவமான அக்கினிபிறவாம லிருக்கிறதென்கிறது இந்த தீபமணைந்து போகிறதுக்குக் காரணமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. இத்தடைவாகப் பக்ஷணதிபானங்கள் சீரணத்தின் சத்தியினாலே சரீரத்திலே அவைகளானவைகள் லயித்துப்போகாமல் சரீரத்தின் மாங்கிஷம் இரத்தம் முதலானவைகள் லவமாய்ப் பிறவாமலிருக்கிறதென்கிறது சரீரமானது அழிந்துபோகிறதுக்கு இதே சாக்ஷாத்துக் காரணமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல.

இந்தச் சத்திய விசேஷமானதுகள் அனேகம்பேரறியாத லயங்களினாலே கண்டுபிடிக்கலா யிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் அனேகம்பேர்களிப்படிப்பட்ட லயங்களைச்சுத்தமாயறியாததினால், அதுகளிலே நாமொப்புவித்துக் கொண்டு வருகிற சத்தியத்தைக் கண்டுபிடிக்கிறது அரிதென்று சொல்லத்தகும். அவைகளுக்குள் ஒன்றிரண்டு நாம்சொல்லிக்காட்டி அனேகம்பேர்களறியாதிருக்கிற ஒருவிசேஷத்தை வெளிப்படுத்துவோமென்கிறதுக்காகப் பலபல தீர்த்தங்களுண்டாகிறதிலே ஆச்சரியப்படுகிறதுக்குக் கணக்கில்லை திருக்கச்சேத்த அதுக்காக அனேகம்பேர் ஆச்சரியப்பட்டு அதைத்தெய்வீகமென்று சொல்லுகிறார்கள். அவர்கள்முழுதுமறிவில்லாதவரா யிருக்கிறார்களென்று நம்மாலறிவிக்கப்படுகிற ரகசியத்தினாலே கண்டுபிடிக்கலாயிருக்கும். ஆனால் கண்டுபிடிக்கிறதுக்கு அருமையாயிருக்கிற இந்த ரகசியத்தைத் தெளிவாகச் சந்தேகமில்லாமல் நிச்சயம் பண்ணுகிறதுக்குப் பூதியங்களிடத்திலே யுண்டாயிருக்கிற குணங்களையும் பூதியங்கள் பரஸ்பரமாக ஒன்றுஒன்றிலே லயித்துப்போய் ஒருபூதியமானது வேறொரு பூதியமாய்ப் பிறக்கிற மேரையையும் அனேகம்பேர்களறியாமலிருக்கிறார்களே. அதெல்லாவற்றையுங் கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தக்கடவோம். இதிலே அனேகர் கூட்டப்பட்ட ஆகாசமானது வாயுவென்று சொல்லப்படுமென்கிறதினால் இவ்விடத்திலே வாயுவுக்கும் ஆகாசத்துக்கும் பின்னபேதமில்லையென்று அங்கீகரித்து அப்பால் நடத்தத்தக்க விசேஷங்களை நடத்துவோம்.

குளிரும் வரக்ஷியும் பிருதிவிக்குண்டான பிரதானகுணங்களென்று சொல்லப்படும். ஈரமுங் குளிரும் அப்புவுக்குரிய பிரதானகுணமென்று சொல்லவேண்டியிருக்கிறது. தேஜஸாகிற அக்கினிக்கோவென்றால் வரக்ஷியும் உஷ்ணமுமென்கிற பிரதான குணங்களிருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். கடைசியாய் ஆகாசமானது உஷ்ணத்தையும் ஈரத்தையும் பிரதானமாகக் கொண்டிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும். இதிப்படி யிருக்கையிலே அந்தந்தக் குணத்தை அந்தப் பூதியமானது போக்கடிக்கிறதினாலப்படிப்பட்ட லயத்தின் நிமித்தமாக ஒருபூதியமானது வேறே பூதியமாய்ப் பிறக்கிறதென்ற விசேஷத்தைத் தெரிந்திருக்கிற கண்ணாகிற மதியுள்ளவன் கண்டுபிடிப்பதொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே பிருதிவியானது அனேகந் தண்ணீருக்குள்ளே யிருந்து வரக்ஷியென்கிற குணத்தை நாள்வட்டத்திலே முழுதும்போக்கடித்த பிற்பாடு மண்ணானது ஜலத்திலே லயிச்சுப்போய் மண்ணானது ஜலமாய்ப் போமென்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை. இத்தடைவாகச் ஜலமானது அனேகமண்ணுக்குள்ளே யிருந்துயீரமென்கிற குணத்தை முழுதும் போக்கடித்து அப்படிப்பட்ட லயத்தினிமித்தியமாக அதுகுளிரும் வரக்ஷியுமடைந்திருக்கிற மண்ணாய்ப் பிறக்குமென்கிறதுக்குச் சந்தேகப்படக்கணக்கில்லை.

ஆகாசத்திலே நடந்துவருகிற ஒருவிசேஷ மேரையை மிகப் பராக்கிரக. அது நிமித்தமாக ஆச்சரியப்படுகிறதுக்கு இடமில்லாத விஷயத்திலே ஆச்சரியப்படலாம். சுபாவமான வர்த்தமானமாவது. தெய்வீக விஷயமாயிருக்கிறதென்று சொல்லி அது நிமித்தமாக அறியாதபேர்கள் கனபாவத்தைக் கட்டிக் கொள்ளுவார்கள். அதெப்படியென்றால் ஈரமு முஷ்ணமு மென்கிற இருகுணங்களைக் கொண்டிருக்கிற ஆகாசமானது யாதொரு காரணத்தினாலே உஷ்ணத்தை முழுது மிழந்துபோய்க் கனமான சீதள குணத்தைக் கொண்டிருந்தால் அப்படிப்பட்ட லயத்தி னிமித்தமாக ஆகாசமானது ஜலமாய்ப் போமென்கிறதுக்குச் சந்தேகமில்லாம லங்கீகரிக்கத் தக்கதாகும். இது நிமித்தமாத மகாகாப்பட்ட பருவதங்களுடைய ரந்திர முதலான கெபிகளுக்

குள்ளே சூரியனுடைய ரஸ்மியானது லவலேசமானாலும் பூராததினாலே அ[illegible] படிப்பட்ட ரந்திரங்களுக்குள்ளேயுங் கெபிகளுக்குள்ளேயுங் கனமான குளி[illegible]ண்டாயிருக்கச்செய்தே யந்தஸ்தலங்களுக்குள்ளே பூருகிற ஆகாசத்தினாலே உஷ்ணமானது லகிச்சிப்போனதினால் ஆகாசமானது சலமாய்ப் பிறக்குமென் றதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட சீதளமுள்ள ஸ்தலங்களுக்குள்ளே பூருகிற ஆகாசமானது ஜலமாய்ப் பிறக்கப்பிறக்க அதில்நின்று இடைவிடாமல் ஊற்றூற்று ஸ்தலவிசேஷத்துக்குத் தக்கது அதிகமானாலுங் கொஞ்சமானாலும் புறப்பட்டு ஓடிவரும். ஆனால் ஆகாசமானது இந்தச்சுபாவமேனாயாகத் தண்ணீராய்ப்பிறக்கிறதை யறியாதபேர்கள் பறுவதங்கள் முதலான ஸ்தலங்களி[illegible] பிறப்படுகிற தண்ணீரைப்பார்த்து ஆச்சரியப்பட்டு அதுதெய்வீகமான விசேஷமாயிருக்கிறதென்று சொல்லுகிறதும் போராமல் அப்படிப்பட்ட தீர்த்தங்[illegible] நிமித்தமாகப் பாவநிவாரண முண்டென்றும் ஒருஞாயமில்லாம லங்கீகரிக்கிறார்கள். நீதிஞாயத்துக்கேற்றிராத இப்படிப்பட்ட அங்கிகாரத்து நிமித்தமாய் [illegible] பாவங் கட்டிக்கொள்ளுகிறார்களொழிய வுண்டாயிருக்கிற பாவத்தைப் போக்கடிக்கமாட்டார்க ளென்கிறதுக்குத் தப்பாது.

அதேதென்றால் ஆகாசமானது தண்ணீராய்ப் பிறக்கிற சுபாவமேனாயாய்த் தெய்வீக அற்புத மென்று சகல நீதிஞாயத்துக்கும் விருத்தமாக அங்கீகரிக்கிறார்கள். அதேதென்றால் அந்தந்த வஸ்துவானது வருகிற மேனாயை யறியாமலிருந்தோமானால் அதை யறியாமலிருக்கிறோ மென்று சொல்லுகை கணக்கொழிய அது தெய்வீக அற்புதமாயிருக்கிற தென்று கள பாவமில்லாமல் சொல்லவுங் கருதவுங்கூடாது. இதுதவிரத் தேவவிஷய ஞானமும் பத்தியும் பாவத்தின் நிமித்தமாகப் பச்சாத்தாபமு மில்லாமல் அப்படிப்பட்ட தீர்த்தங்கள் தலையிலே விழுந்ததினாலே மாத்திரம் பாவங்கள் போமென்கிற அங்கிகாரமானது சகல பாவங்களையெளிதாய் மனுஷனானவன் பண்ணுகிறதுக்கு வழிதிறக்கிற வுபாயமென்று சொல்லப்படுமேயொழியப் பாவ நிவாரணம் அதினாலே சித்திக்குமென்கிற விசுவாசமானது அனியாய விசுவாசமென்று சொல்லக்கடவது.

[illegible]றைவரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே யொருவஸ்துவினிடத்திலே ஒருவஸ்துவானது லகிச்சுப்போகிறது நிமித்தமாக நிக்கிறவஸ்துவானது அபிவிர்த்தியையும் விகாரத்தையும் நவமான அம்சங்களுடைய வுற்பத்தியையும் அடைகிறதென்கிற சத்தியவிசேஷமானது அந்தந்தஸ்தலத்தினாலே நம்மாலொப்புவிக்கப் பட்டதுபோலே யாதொருத்தரையாகிலும் [illegible]கையாலே அந்தந்தவஸ்துக்கள் வேறே வஸ்துக்களிடத்திலே லகிச்சுப்போகிறது. அப்போலே மனுஷசீவனென்கிற வஸ்துவானது சர்வேசுரனென்கிற பராபர வஸ்துவினிடத்திலே லகிச்சுப்போகலாமென் றங்கீகரித்தோமானால் பராபரவஸ்துவாகிற சர்வேசுரனானவர் அபிவிர்த்தியும் பலபல விகாரங்களையும் அடைகிறாரென்று அங்கீகரிக்கிறதென்கிறதுக்குச் சமானமாகும். அல்லது சர்வேசுரனானவர் அபிவிர்த்தியையும் விகாரத்தையு மடையாம லெப்போதும்போலேயிருக்கிற [illegible]ரிடத்திலே சீவனானது லகிச்சுப்போச்சுதென்று சொல்லுகிறதுக்கு ஞாயமும் இலக்ஷணமுங் காணமாட்டாது.

இதன்றியே யொரு வஸ்துவினிடத்திலே அந்தர்க்கத மேனாயாய்ப் புதுவசனமானது நவமாய்ச் சொல்லப்படுகிறதுக்கு வஸ்துவினிடத்திலே யாதொரு விகாரமுண்டாயிருக்கவேணும். அதேதென்றால் விகாரமில்லாவிட்டால் வஸ்துவினிடத்திலே நவமானவசனஞ் சொல்லப்பட்டிருக்கிறதுக்குக் கணக்கில்லை. அவ்வண்ணமே சீதளமுங் கறுப்புமாயிருக்கிற வசனமானது வஸ்துவி

[illegible]டத்திலே முன்னே சொல்லப்படாமற் பின்னே நவமாகச் சொல்லப்பட்டால் அதுவஸ்துவினிடத்திலே விகாரம் அவசியமாய் வரவேணு மென்கிறதுக்குத் தப்பாது. அந்தவண்ணமேபோல் இந்தவிசேஷ சீவனுடைய லயத்தைக் கொண்டிருக்கிற வசனமானது இன்றுவரைக்குஞ் சர்வேசுரனிடத்திலே யுண்டாயிராமல் இப்போது நவமாய் வந்ததென்று சொன்னோமானால் சர்வேசுரனிடத்திலே விகாரம் வந்ததென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் இருக்[illegible]சன மிதுமுதலான விசேஷங்கள் சர்வேசுரனுக்குப் [illegible] [illegible]தங்[illegible] அதுகளிலே சர்வேசுரனுக்கு [illegible]காரம்வராத[illegible]மென்று அங்கீகரிக்கப்பட்டாலுஞ் சீவனுடைய [illegible]மானது [illegible] சொல்லுகிறதுபோலே சர்வேசுரனிடத்திலே அந்தர்க்கதமாயிருக்கக்கொண்டு சீவனானது சர்வேசுரனிடத்திலே லயமாய்ப்போய்ச் சர்வேசுரனாய்ப்போச்சுதென்கிற வசனமானது சர்வேசுரனிடத்திலே ஆரோபிக்கப்பட்டால் சர்வேசுரனிடத்திலே அபிவிர்த்தியும் விகாரமுமில்லாமல் அப்படிப்பட்ட வசனமான[illegible] நடக்கமாட்டாது. ஆனால் சர்வேசுரனானவர் அபிவிர்த்திமுதலான விகாரங்களை யடையலாமென்கிற முழுத்தப்பறை விசேஷத்தைத் தோஷத்துக்கு [illegible] பயப்படாத பதிதனானவன் அங்கீகரிப்பானொழிய மற்றப்படியல்ல. ஆகையாலே இப்படிப்பட்ட லயத்தினிமித்தமாகச் சீவனானது மோக்ஷத்தை [illegible]யடையலாமென்கிற மேனாயானது ஒப்புக்கொள்ள வொண்ணாத முழுத்தப்பறை விசேஷமாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம்.

இதன்றியே சகல லயங்களுடைய மேனாயை விசாரிக்கு மிடத்தில் யாதொரு வஸ்துவினிடத்திலே வேறொரு வஸ்து லகிக்க அந்த வஸ்துவாய்ப்போனால் லயமாய்ப்போகிற வஸ்துவுக்கு விருத்தமான குணமானது லயிப்பிக்கிற வஸ்துவினிடத்திலே யுண்டாயிருக்கக்கொள்ள லகிச்சுப்போகிற வஸ்துவானது அத்தோ[illegible]மல் அப்படிப்பட்ட விருத்த குணத்தினாலே வஸ்துவானது லகிச்சுப்போய் அந்த லயத்தினிமித்தமாக அது வேறே வஸ்துவாய்ப் போமென்கிறதுக்குத் தப்பாது. இதெல்லா மொன்றிலே காட்டப்பட்டால் இதிலேயடக்கிற மேனாயானது மிகவும்விளங்கும். அதெப்படியென்றால் அக்கினியிடத்திலே அத்தியந்த உஷ்ணமு முக்கியமு மென்கிற இரண்டுகுணங்களைப் பார்க்குமிடத்தில் இந்த இரண்டு குணங்களானதுகள் விறகானதுக்கு அத்தியந்த விருத்தங்களானதுகளா யிருக்கக்கொள்ள விறகானது அக்கினியோடே கூட லயிக்கமாட்டாமல் அதுகளாலே விறகானது லகிச்சுப்போய் விறகானது அக்கினியாய்ப் போமென்றும் அங்கிகரிக்கத்தக்க விசேஷமாகும். இந்தமேனாயானது மற்றுண்டான சகல லயங்களிலே யோசிக்கத்தக்கதாகும். அதேதென்றால் ஒரு வஸ்துவினிடத்திலே வேறொரு வஸ்துவானது லகிச்சுப்போய் அந்த வஸ்துவாய்ப்போகிற மேனாயானது விசாரிக்கப்பட்டால் லகிச்சுப்போகிற வஸ்துவுக்கு விருத்தமான குணமானது லயிப்பிக்கிற வஸ்துவினிடத்திலே யுண்டாய் அதினாலே லகிக்கத்தக்க வஸ்து லகிச்சுப்போமொழிய மற்றப்படியல்ல.

இது இப்படியிருக்கச் செய்தே பராபரவஸ்துவினிடத்திலே மனுஷசீவனானது லகிச்சுப்போகலாமென் றுசம்மதித்தோமானால் நசீவனுக்கு விருத்தமான குணமானது சர்வேசுரனிடத்திலே யுண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்கவேண்டியிருக்கிறது. சகலநன்மை சொரூபமானவருமாய் நசீவதயாபரனானவருமாயிருக்கிற கர்த்தரிடத்திலே நசீவனையுண்டாக்கிறதுக்கு அனேகபெலமும் நசீவனை ரக்ஷிக்கிறதுக்கு அளவறுக்கப்படாத கிருபையும் விளங்கியிருக்கிறதென்று கண்டு

வருகிறமொழிய [illegible] சிவனைக் கெடுக்கிற குணமானது சகலநன்மையுமுள்ள பராபர வஸ்துவினிடத்திலே யுண்டாயிருக்கிறதென்று சொல்லவுங் கூடாது. அதேதெனென்றால் நன்மையினுடைய சுபாவசொரூபத்தை விசாரித்தோமானால் நன்மையானது நன்மையைப் பிறப்பிக்குமொழியக் கேவலம் லயத்தை [illegible] பிறப்பிக்கிறதைக்காணோம், அவ்வண்ணமே சகலநன்மை சொரூபமான கர்த்தரானவர் தமக்குத்துரோகிகளாயிருக்கிற பாவிகளை நரகத்திலேதள்ளி [illegible] ஆக்கினைப்படுத்துகிறதிலே முதலாய் நன்மை பிறப்பிக்கிறாரென்று சொல்லவேண்டியிருக்கிற தொழிய மற்றப்படியல்ல.

அதேதெனென்றால் தம்முடைய திவ்விய நீதியானது விளங்கும் [illegible] மையாயிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை, பாவிகளுக்காக்கினை [illegible] கிற இவருடைய நீதிவிளங்குகிறதினாலப்படிப்பட்ட அவகாசத்திலே [illegible] கர்த்தரானவர் நன்மையைப் பிறப்பிக்கிறாரென்று அங்கீகரிக்கக்கடவோம். சிவனுடைய லயத்திலோவென்றாலொரு நன்மையாகிலும் பிறப்பிக்கப்பட்டதாக [illegible] சொல்லவேண்டியிருக்கும். அதேதெனென்றால் அப்படிப்பட்ட லயத்தினிமித்தம் சகலநன்மைசொரூபமாயிருக்கிற சர்வேசுரனிடத்திலே லயமான [illegible] றதென்று சொல்லக்கூடாது. லயிக்கப்போன ஆத்துமத்தினிடத்திலே நன்மை பிறக்கலாமென்று முழுப்பயித்தியக்காரனானாலுஞ் சொல்லவுங் கருதமாட்டான். அப்படியே அனந்தபெலசொரூபமாயிருக்கிறவர் [illegible] யுண்டாக்கின [illegible] யழிக்கலாமென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமெய்யுமாயிருந்தாலும் [illegible] இப்படி லயிக்கிறதினாலொரு அற்பநன்மையாகிலும் பிறக்கிறதென்று காணுமென்கிறதுக்காகச் சிவனுடைய லயத்தைச் சர்வேசுரன்பண்ணுகிறாரென்று சொல்லுகிறதுக்குப் பலபல நியாயங்கள் காணபிக்கிறதொழியக் கிருபையுள்ளவருமான கர்த்தரானவர் தம்முடைய அனந்தபெலத்தினாலே சிவனைக் கெடுக்கிறாரென்று அங்கீகரிக்கிறதுக்கு ஒரு அற்ப நியாயமாகிலும் உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது. ஆகையாலே தெளிவற்ற பாவிகளினாலே நியாயத்துக்கு விருத்தமான இப்படிப்பட்ட லயமானது வெறுமனே கற்பிக்கப்பட்டதென்று [illegible] சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக்கடவோம்.

இதன்றியே லோகத்திலே நடந்துவருகிற வெவ்வேறான [illegible] வஸ்துக்களுடைய அழிவென்கிற லயங்களை விசாரித்தோமானால் அந்தந்த லயத்தினிமித்தமாக வெப்போதும் யாதொரு வஸ்துவாகிற நன்மையானது உண்டாயிருக்கிறதென்று கண்டிருக்கிறோம். இல்லாவிட்டால் தன்னிடத்திலே வஸ்துவை லயிப்பிக்கிற வஸ்துவானது அபிவிர்த்தியடையுமென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே லயிக்கப்போகிற பூமியானது வேறே பூமியைப் பிறப்பிக்கிறதென்றும் லயிக்கப்போகிற விறகினாலே [illegible] நெருப்பானது மூளுகிறதென்றும் லயிக்கப்போகிற வித்தினாலே பயிர்களுக்கு [illegible] அபிவிர்த்தியாகிறதென்றும் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இத் [illegible] நகத் தொப்ப வுற்பத்தியினுடைய வகையிலேயும் பிராணிகளிடத்திலே நடந்துவருகிற பக்ஷணத்தின் சீரணமானவிலேயும் எப்போதும் லயத்தினிமித்தமா யாதொரு நன்மையாகிற வஸ்துவானது நவமாக வுற்பவிக்குமென்று [illegible] பிக்கிறதுக்கு இடமில்லை. ஆனபடியினாலே யாதொன்னைப்பட்டதாகிலும் இல்லாதொரு நவமான நன்மையாகிற வஸ்துவுக்கு அவசியமா யொருவித்தாகக் காரணமாயிருக்கிறதென்று சந்தேகமற ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். இதுவிப்படியிருக்கச் [illegible] சர்வேசுரனிடத்திலே சிவனுடைய லயத்தினிமித்தமாக [illegible]

[illegible] நன்மையாகிலும் பிறவாதேபோகிற இவர்களால் வெறுமனே கற்பிக்கப்படுகிற இப்படிப்பட்ட லயமானது சகல லயங்களைக் காட்டிலும் கிசித லயமென்றும் வியர்த்தமாயிருக்கிறதென்றும் அங்கீகரிக்கத் தக்கதாகும். ஆதலாலே சிவனுக்கு இவர்களால் கற்பிக்கப்படுகிற இப்படிப்பட்ட லயமானது ஒருநன்மைக்காகிலுங் காரணமாகாததுமாய் வியர்த்தமானதுமாய் நீசமானதுமா யிருக்கிறதென்று சொல்லவேணும். அப்படிப்பட்ட லயமானது சகலநன்மை சொரூபமான பராபர வஸ்துவினிடத்திலே யுண்டாகுமென்றும் லயமாய்ப்போன சிவனுடைய குறைவற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது அப்படிப்பட்ட லயத்திலே யடங்கியிருக்கிறதென்றும் முழுப்பயித்தியங் கொண்டவன் சொற்பனத்திலேகண்டு அதை யங்கீகரித்தானென்று சொல்லத்தகு மொழிய விழித்திருக்கிற அற்பப் புத்திமானாகிலுமொருவன் இப்படிப்பட்ட லயத்தைச் சொல்லவுங் கருதவுமாட்டானென்கிறதுக்குத் தப்பாது.

இதன்றியே இவர்களால் சிவனுக்குக் கற்பிக்கப்படுகிற மோக்ஷமானது கேவல லயமென்று சொல்லத்தகு மொழிய அது வேறே யொன்றுமில்லை யென்று சொல்லவேணும். இப்படிப்பட்ட கேவல லயமோவென்றால் அது அபேக்ஷிக்கப்படத்தக்க விஷயமாயிராது. ஆகையாலே அப்படிப்பட்ட லயமானதுக்கு அனந்த ஞானசொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் காரணமாயிருக்கிறதில்லையென்று சொல்லுகிறதுக்கு நியாயமுண்டாயிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. ஆனால் சர்வேசுவரனிடத்திலே சிவனானது லயமாய்ப்போய் அப்படிப்பட்ட லயத்தினிமித்தமாகச் சிவனானது மோக்ஷத்தை யடைகிறதென்கிற அசத்திய விசேஷத்தை புத்தியினுடைய பரிபூரண குறைச்சலினாலே சிலர் கற்பித்தார்களென்று இன்னுமிரண்டு நியாயங்களினாலே பிரத்தியக்ஷமா யொப்புவிக்கக்கடவோம். அதெப்படியென்றால் குறையற்ற பாக்கியமும் செல்வமுந் திர்த்திருக்கிற சந்தோஷமும் மோக்ஷமா யிருக்கிறதென்கிற பக்ஷமானது புத்தியான்களென்னப்பட்டவர்களுக்குஞ் சம்மதமா யிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. இந்தக்குறையற்ற நன்மையைப் பார்க்கும்போது அதைச்சிவனானது அனுபவிக்கத்தக்கதாகச் சிவனானது வுண்டாயிருக்க வேணுமென்று அவசியமாய்ச் சொல்லவேண்டியிருக்கும். ஆகையாலே லயமாய்ப்போன சிவனானது இப்படிப்பட்ட பரமானந்தமாகிற மோக்ஷத்தை அனுபவிக்கிறதென் றங்கீகரிக்கிறவன் முழுமதிகெட்டவனா யிருக்கவேணுமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. அதேதெனென்றால் பரமானந்தமாகிற நன்மையானது வொன்றுக்குச் சுபாவமா யிருந்தாலும் அல்லது வொருவஸ்துவினிடத்திலே அது ஆதேயமா யிருந்தாலும் இப்படிப்பட்ட வஸ்து இரண்டுமுண்டா யிருக்கவேணுமென்று சொல்லவேணுமொழிய இல்லாதவஸ்துவானது பரமானந்த சொரூபமா யிருக்கவுங் கூடாது பரமானந்தத்துக்கு அது ஆதாரமா யிருக்கலாமென்று சொல்லவுங்கூடாது. அப்படி சொல்லாவிட்டால் இனிமேல் பிறக்கத்தக்க மனுஷனானவன் இப்போது சந்தோஷத்தை யனுபவிக்கிறானென்றும் வித்தியாபாரகனா யிருக்கிறானென்றும் ராச்சியத்தை ஆளுகிறானென்றுஞ் சொல்லவே யிருக்குமென்று அங்கீகரிக்கவேணும். இத்தொகைப்பட்ட வசனங்களை யங்கீகரிக்கிற தென்கிறது சர்வேஸ்வரனிடத்திலே லயமாய்ப்போன சிவனானது பரமானந்தமாகிற குறையற்ற பாக்கியமான மோக்ஷ மனுபவிக்கிறதென்று சொல்லுகிறதுக் கொக்கும்.

இதிலே ஸ்திரமாகக் கண்டுபிடிக்கத்தக்க சமான விசேஷமாவது. இனிமேல் வரத்தக்க சிவனானதும் லயமாய்ப்போன சிவனானதும் விசாரிக்கப்பட்

டால் அப்படிப்பட்ட சிவன்களிரண்டுக்கும் இல்லாத தன்மானது ச[illegible]மென்றிருக்கையிலே இனிமேல் வரத்தக்க சிவனானது வொன்றுமில்[illegible] யென்று சொல்லப் படுமாப்போலே லயிச்சுப்போன சிவனானது வொன்றுமில்[illegible] யென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஒன்றுமில்லாததோ வென்றால் சந்தோ[illegible]த்தையுங் குறையற்ற பாக்கியத்தையும் அநுபவிக்கலாமென்று சொல்லுகிறவன் முழுப் பயித்தியக்காரனா யிருக்கிறானென்று கேட்கவேணுமோ இதிலேபராமரிசிக்கத்தக்கதாவது. சிவனானது சர்[illegible]வஸ்வீரனிடத்திலே லயமாய்ப் போச்சுதென்று இவர்கள் வெறுமனே கற்பித்தாலும் அதிலே நம்மாற்சொல்லப்பட்ட ஞாயமானது [illegible]தள்ளுண்டுபோமென்று விசாரிக்கக்கடவதல்ல. அதேதென்றால் [illegible]லே லயிச்சுப்போன வஸ்துவானது இனிமேல் பிறக்கத்தக்க வஸ்துவைப்போலே ஒன்றுமில்லையென்று சொல்லவேணும். ஆதலாலே யினிமேல் பிறக்கத்தக்க வஸ்துவுக்கு நடவாத வசனங்கள் ஒன்றிலே லயமாய்ப்போன வஸ்துவுக்கு [illegible]வாதென்றுசொல்லக் கடவோம். அதெப்படியென்றால் இனிமேல் முளைக்கத்தக்க விருக்ஷமானதுக்கு இப்போது துளிர்க்கிறதென்கிறதும் பூக்கிறதென்கிறதும் பழுக்கிறதென்கிறதும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான வசனங்களுஞ் செல்[illegible]தென்று சொல்லவேண்டியிருக்கும். அத்தன்மைபோல அக்கினியிலே லயமாய்ப்போன மரத்துக்கு அத்தொகைப்பட்ட வசனங்கள் ஏற்றக் குறைச்சலில்லாதே செல்லாதென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. இதுதவிர அக்கினியிலே மரமானது லயிச்சுப்போ யிருக்கையிலே உஷ்ணமாயிருக்கிறதென்கிறதும் பிரகாசிக்கிறதென்கிறதும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான வசனங்களும் அக்கினி யென்கிற பொருளுக்குச் செல்லு மொழிய அக்கினியிலே லயமாய்ப்போன மரத்துக்குச் செல்லுமென்று முழுப் பயித்தியக்காரனா யிருக்கிறவன் முதலாய்ச் சொல்லமாட்டான்.

அம்மருவாதியே பராபர வஸ்து விடத்திலே சிவனானது லயமாய்ப் போகிறதென்றும் இவர்கள் கற்பித்திருக்கையிலே பரமானந்த சொரூபமுமாய்க் குறையற்ற பாக்கியமுமா யிருக்கிறதென்கிற மேனாகளும் இத்தொகைப்பட்ட மற்றுண்டான மகிமையுள்ள வசனங்களும் பராபர வஸ்துவினிடத்திலே செல்லுமென்று சொல்லக்கடவோ மொழியப் பராபர வஸ்துவிடத்திலே லயமாய்ப்போன சிவனுக்கு அத்தொகைப்பட்ட மகிமையுள்ள வசனங்கள் செல்லுமென்று யாதொருவ னங்கீகரித்தா லவனை முழுப்பயித்தியக் காரனென்று சொல்லுகிறதுக்குச் சந்தேகப்படக் காரணமில்லை. அப்படியே பரமானந்த முதலான மகிமையுள்ள வசனங்கள் பராபரவஸ்துவிடத்திலே லயிச்சுப்போன சிவனுக்குச் செல்லாதபோதே அப்படிப்பட்ட லயத்தினாலே சிவனானது குறையற்றபாக்கியமாகிற மோக்ஷத்தை யடையுமென்கிற பக்ஷமானது முழுதும் அபத்தத்தப்பறைக்குள்ளே முந்தின தப்பறைவிசேஷமா யிருக்கிறதென்று ஒரு அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கக் கடவோம்.

இற்றைவரைக்கும் நம்மாற்சொல்லப்பட்ட ஞாயங்கள்தவிர இன்னுமொரு ஞாயத்தினாலே இப்படிப்பட்ட லயத்தைக் கற்பிக்கிறவர்களுடைய முழுப்பயித்தியத்தைச் சந்தேகமில்லாம லொப்புவிப்போம் அதேதென்றால் புத்தியுடைத்தான பொருளென்னப்பட்ட யாவும் தானிருந்து கொண்டு சுகத்தையுஞ் சந்தோஷத்தையும் மற்றுமுண்டான மகிமைகளையும் அடையத்தக்கதாக ஆசைப்பட்டு தன்னுலயத்தை அருவருத்து வெறுக்குமொழிய அதை யபேக்ஷிக்கா லும் அபேக்ஷிக்கத் தக்கதுமில்லை. இது காரணமாக யிவர்களால் கற்பிக்கப்படுகிற லயமாகி

மோக்ஷதலத்தைப் புத்தியுடைத்தான சிவனானது அருவருத்து அதை வெறுக்கிறதுக்கு ஞாயமுண்டா யிருக்கிற தொழிய புத்தியுடைத்தான சிவனானது அதை யபேக்ஷிக்கிறதுக்கு ஒரற்பமாகிலு மிடங்காணமாட்டாது.

இந்த ஞாயத்துக்கு வேறொரு ஞாயத்தைக்கூட்டி இவர்களுடைய அறிவின்குறைச்சலை அதிலே யின்னுங் கண்டுபிடிக்கலாயிருக்கும். அதேதென்றால் புத்திமானாயிருக்கிறவன் முன் சொன்னபோலே தானிருந்துகொண்டு சுகத்தையுஞ் சந்தோஷத்தையும் மற்றுமுண்டான மகிமையுள்ள பாக்கிய நன்மைகளையும் அநுபவிக்கவேணுமென்று பிரயாசைப்படுவானொழியத் தான் கெட்டுப்போக வேணுமென்று பிரயாசைப்பட்டு வருந்துகிறவன் முழுமதிகெட்ட பேர்களுக்குள்ளே முதிர்ந்த பயித்தியங் கொண்டவனா யிருக்கிறானென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அப்படியே சிவனுடைய குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது முன் சொல்லப்பட்ட விதமாகச் சிவனுடைய லயத்திலே யிருக்குமென்றிருக்கிற பக்ஷமானது மெய்யானதானாற் சிவனானது மோக்ஷ ஆசைப்படுகிறதென்கிறது சிவனானது கெட்டுப்போக வேணுமென்று அபேக்ஷிக்கிறதுக்குச் சமானமாகும். இது நிமித்தியமாக மோக்ஷத்தை யடையவேணு மென்று தபோசெபத்தியானா முதலான புண்ணியங்களைப் பண்ணுகிறதிலே மிகவும் பிரயாசப்படுகிற சன்னியாசிகள் முதலான மகாத்துமாக்களா யிருக்கிற பேர்கள் தாங்கள் கெட்டுப்போகிறதுக்குப் பிரயாசப் படுகிறார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது. அவ்வண்ணமே சன்னியாசிகள் முதலான மகாத்துமாக்களா யிருக்கிறபேர்கள் தாங்கள் கெட்டுப்போக வேணு மென்று ஆசைப்பட்டுப் பிரயாசைப்படுகிறார்களென்கிறதுக்காக மற்றப் பாவிகளைக் காட்டிலுஞ் சன்னியாசிகள் முதலான மகாத்துமாக்கள் முழுமதிகெட்ட பாவிகளா யிருக்கிறார்களென்று அங்கீகரிக்கவேண்டி யிருக்கிறது. இத்தனை அபத்தங்கள் முதலான வேறே யனேகந்தப்பறை விசேஷங்களுக்குச் சம்மதப்படாதபடிக்குச் சாயுச்சிய மென்னையிலே சிவனானது மோக்ஷத்தை யடையலாமென்கிற கற்பனையானது தெளிவற்ற பாவிகளாலே [illegible] கற்பிக்கப்பட்ட தப்பறையா யிருக்கிறதென்று சந்தேகமில்லாம லொப்புக்கொள்ளக் கடவோம்.

இனிமேல் மோக்ஷ மெதிலே யடங்குமென்று வெளிப்படுத்துகிறதென்றிருக்கிறோம். இப்படிப்பட்ட பரம ரகசியத்தை நாம் வெளிப்படுத்தும்படிக்கு அதைக் கண்டுபிடிக்கிறதுக்கு வுபயோகமா யிருக்கிற சில ரகசியவர்த்தமானங்களை யறியவேண்டி யிருக்கிறது. அதுகளை வருகிற நாலுபாடங்களுக்குள்ளே அடைவாக விரித்துரைத்த பிற்பாடு சிவனுடைய குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது இன்னதென்றும் எதிலே யடங்குமென்றுஞ் சர்வேசுரனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே யெவ்வளவாகிலும் வெளிப்படுத்தத் தக்கதாகப் பிரயாசப் படுவோம்.

உஅ - ம் பாடம்.

அஞ்ஞானமாகிற அந்தகாரத்திலே திரிகிற மனுஷரானவர்கள் பராபரவஸ்து இன்னதென்று அறியாமற் பராபரவஸ்துவை நிர்ணயம்பண்ணுகிறதிலே யெணணப்பீ[illegible]த அபத்தங்களைக் கற்பித்தாப்போலே மனுஷிவன் இன்னதென்று சுத்தமாயறியா[illegible] அதினுடைய தோற்றமாகிற வுற்பத்திவிஷயத்தையும் அதுக்குண்டான சுபாவமேனையும் அதுக்குவரத்தக்க வொடுக்கமாகிற அவதியையுஞ் சொல்லும்போது பரஸ்பர விருத்தங்களானதுகளுமாய் நீதிநியாயத்துக் கொவ்வாததுகளுமாய்ச் சலமில்லாமல் சத்தியமின்னதென்று அறிகிறதுக்கு[illegible] கரையேறுகிறதுக்குத் தாற்பரியமுள்ள புத்திமானுக்குப் பொரு[illegible]தாததுகளுமா யிருக்கிற யெண்ணப்படாத அபத்தத்தப்பறைகளை நித்திரையிலே செற்பனங்காண்கிற பேர்களைப்போலே கற்பித்துக்கொண்டு வந்தார்களொழிய பொய்சொன்னாலும் பொருந்தச் சொல்லவேணுமென்கிற வசனத்தின் மே[illegible] அனுசரித்தார்களில்லை. ஆனபடியினாலே அப்படிப்பட்ட பொய்போடே பொ[illegible]திருக்கிற யெண்ணப்படாத துர்மதங்களைச் சட்டைபண்ணி ஆக்ஷேபம் பண்ணாமல் கரையேறுகிறதுக்கு மோக்ஷவிஷயத்திலே யறியவேண்டின [illegible]த்திய விசேஷத்தைக் கொஞ்சத்துக்குள்ளே சொல்லக்கடவோம். அதேதென்றால் மனுஷசீவனுக்கு வரலான செல்வங்களுக்குள்ளே மோக்ஷபாக்கியமா[illegible] அவதிரூபமான நன்மையா யிருக்கக்கொள்ள அப்படிக்கொத்த நன்மைக்கு அப்பா[illegible]லிருக்கிற நன்மையில்லாதே போகவேணும். அல்லது அதுக்குமேலான நன்மை வரலாமென்று சொன்னோமானால் அவதியான நன்மையென்கிற நாமமானது அதுக்குச்செல்லுமென்று சொல்லக்கூடாது. ஆதலாலே யெந்தநன்மைக்கு மேலாக வரத்தக்க நன்மையில்லையோ அது கடைசியாக அவ்திருபமான பாக்கியமென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல.

இது இப்படி யிருக்கையிலே சீவனானது அவதி[illegible] நன்மையை யடைந்தால் அப்படிப்பட்ட நன்மைக்கு மேலாகச் சீவனானது ஆசைப்படத்தக்க வேறேநன்மை யில்லாதே போகவேணு மென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆகையாலே யவதிரூபமான செல்வமானது சீவனுக்குண்டான யாசையைக் குறையற்ற பிரகாரமாகப் பூரித்து அப்படிப்பட்ட பரமானந்த சொரூபமான பாக்கியத்திலே சீவனானது முழுகி மீனப்பாறுகிறாப்போலே பிரவேசித்து அது நிமித்தமாகச் சீவனானது வொன்றிலே யாதொன்றும் குறைபடாமல் தனது பாத்திரத்துக்குத்தக்க அளவு பிரமாணமாகச் சகல நன்மை விஷயங்களிலே குறையற்ற சமற்பகதிரித்தியைச் சீவனானது அடையவேணுமென்று சந்தேகமற அங்கிகரிக்கத்தக்க சத்தியவிசேஷமாகும். இது காரணமாகச் சீவனானது குறையற்ற நன்மையை அடைகிறதினால் சகலவிஷயங்களிலே யாசையைப் பூரிக்கிற பாக்கியத்தை அனுபவிக்குமென்று சொல்லவேணுமொழியக் குறையுள்ள நன்மையின் நிமித்தமாக அப்படிப்பட்ட குறையற்ற செல்வத்தைச் சீவனானது அடையமாட்டாதென்று சொல்லக்கடவது.

இது இப்படி யிருக்கையிலே உண்டாக்கப்பட்ட நன்மையெல்லாந் தனித்தனியே யெண்ணினோமானாலும் சகலநன்மைக ளெல்லாங்கூட்டி யொன்றாக விசாரித்தோமானாலும் மட்டோடு வுண்டாக்கப்பட்டநன்மையாயிருக்கக்கொள்ள குறையுள்ள நன்மையாயிருக்குமென்று அங்கிகரிக்கத்தகுமொழியக்குறையற்ற வி-

ஷமானதுக்குச்செல்லுமென்று சொல்லக்கட[illegible]வாயல்ல. பராபரவஸ்து வொன்றேதானு யிருக்கிற வஸ்துவாயிருக்கக்கொள்ள [illegible]ட்டில்லாமற் சகலநன்மை சொரூபமாயிருக்கிற நன்மையென்று சொல்லத்தகுமென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே யப்படிப்பட்ட பராபரவஸ்துவையடைந்த சீவனானது குறையற்ற செல்வத்தையுந் திரித்திகொடுக்கிற பரமானந்தத்தையும் அனுபவிக்கிறதுக்கு வல்லதாயிருக்குமொழியவுண்டாக்கப்பட்ட குறையுள்ள சகல நன்மைகளுடைய ல[illegible]ஆது சீவனுக்குக்கிடைத்தாலும் அப்படிப்பட்ட நன்மைக[illegible]லே வருகிற[illegible]யோசனத்தின் காரணமாகச் சீவனுடைய ஆசைப் பூரிக்கப்பட்டுச் சகலநன்மை விஷயங்களிலே [illegible]திரிப்தி யடையுமென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. அவ்வண்ணமே சீவனானது குறையற்ற வஸ்துவாகிற கர்த்தனை யடைகிறதினால் திரிப்திகொடுக்கிற குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை யடையலாமென்று சொல்லும் [illegible]து பராபரவஸ்துவை சீவனானது குறையற்ற பிரகாரமா யடையத்தக்க மேனையை நிச்சயம் பண்ணக்கடவோம். அதேதென்றால் போனபாடங்களிலே [illegible] சொன்னாப்போலே பராபரவஸ்துவைக் குறையற்ற பிரகாரமா யடைகிறதுக்[illegible] சான்னித்திய சாரூப்பியாதி மேனைகளா யிருக்கிற அபத்தத் தப்பு [illegible] உபயோகமா யிராதபோதே பராபரவஸ்துவைப் பிரத்தியக்ஷமாய்ச் சீவனானது கண்டால் அப்படிப்பட்ட பிரத்தியக்ஷதெரிசனத்தி னிமித்தத்தினாலே சீவனானது பராபரவஸ்துவைக் குறையற்ற விதமாக அடையுமென்று அங்கிகரிக்கத்தக்க [illegible]ஒன்றுஞ் சத்தியமாகும்.

இப்படிப்பட்ட பரமரகசியத்தை வெளிப்படுத்துகிறதுக்கு முன்னே லோகத்திலே நடந்துவருகிற வொருவிசேஷ வர்த்தமானத்தைப் பராமரித்துக் கொண்டு [illegible]சோதிக்கா[illegible]கிறோம். அதேதென்றால் இப்படிப்பட்ட விசேஷத்தை நிச்சயம் பண்ணுகிறதென்கிறது அறியவேண்டின மோக்ஷத்தின் சுபாவ சொரூபத்தைக் [illegible] பிடிக்கிறதுக்கு மிகவும் உபயோகமா யிருக்கிறதுந் தவிர. அஞ்ஞானமாகிற [illegible]மான அந்தகாரத்திலே யிருக்கிற மூடு மதிகெட்ட சிலபேர்கள் சரீரத்தின் [illegible] சர்வேஸ்வரனைக் காணவேணுமென்று சொல்லிக் கொண்டு [illegible]கிறதுக்கு விசேஷத்துக்காரண பிரத்தி யுத்தாரமுமாகும்.

[illegible] அறியவேண்டின அப்படிப்பட்ட விசேஷமேதென்றால் பலபல விஷயங்களைக் கிரகிக்கிறதுக்குப் பலபல் சாக்கிரங்களாகிற இந்திரியங்களை அனந்தஞானசொரூபமான கர்த்தரானவர் தப்பிதமற்றக்கிரமத்தோடே கட்டளையிட்டருளினதை நாங் கண்டிருக்கிறோம். அவ்வண்ணமே சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமென்கிற அஞ்சுவிஷயங்களைத் தனித்தனியே [illegible]கிரகிக்கிறதுக்கு வெவ்வேறே சாக்கிரங்களாகிற பஞ்சேந்திரியங்களைக் கர்த்தனை திருவுளப்படியே யுண்டாயிருக்கிறது. அப்படியே சத்தத்தைக் கேட்கிறதுக்குச் செவிக்கிறமுங் கண்டிப்புள்ள பரிமாணத்தைத் தொடுகிறதுக்கும் உஷ்ணமுதலான குணங்களைக் கிரகிக்கிறதுக்கும் ஸ்பரிசசக்தியும் [illegible]ரூபங்களைக் காணுகிறதுக்கு சக்ஷுவும், ருசியென்[illegible]டயாசையுமனுபவிக்கிறதுக்கு[illegible] [illegible]ஸ்தலங்களும் யிஷ்டா நிஷ்டகந்தங்களை முகருகிறதுக்கு [illegible] சக்தியாகிற நாசியு முண்டாயிருக்கையிலே யொவ்வொரு சக்தியாகிற யிந்திரியமானது தனித்தனியே தனது விஷயத்தைக் கிரகிக்குமொழிய ஒரு யிந்திரியமானது வேறே யிந்திரியத்தினுடைய விஷயத்தைக் கிரகிக்கலாமென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. அப்படியே கண்ணானது வர்ணரூபமாகிறதனது விஷயத்தைக் கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதொழிய சத்தத்தையு மற்றுமுண்டான மூன்று விஷயங்களையுங் கிரகிக்கமாட்டாது நானுவிதமுள்ள [illegible]

களைக் கேட்டுக் கிரகிக்கிற தென்கிறது சுரோத்திரமாகிற யிந்திரிய மொன்றுக்குமே கூடுமொழிய மற்றப்படியல்ல; சக்ஷுவுக்குஞ்சுரோத்திரத்துக்குஞ் சொன்ன அடைவுள்ள மேன்மைய மிருண்டானை மூன்று யிந்திரியங்களிடத்திலேயும் யோசிக்கக்கடவோம்.

இதுக்குக் காரணமேதென்னில் அந்தந்த விஷயமானது தன்னைக் கிரகிக்கிற சக்தியாகிற யிந்திரியத்துக்கு விசேஷ சுபாவத்தைக்கொடுக்கிறதென்கிறதுக்குச் சம்பிரதேமில்லை; அனபடியினாலே அந்தந்த சத்தியாகிற யிந்திரியமானது தன சுபாவ சொரூபத்தைத் தான்கிரகித்துக் கொண்டு வருகிற விஷயத்தினாலே வாங்கிறதென்கிறது சந்தேகமற வொப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகும். இதுக்கர்த்தமாவது தப்பிலாக் கிரமத்தோடு சகலத்தையும் நடத்திவருகிற கர்த்தரானவர் அந்தந்த விஷயத்தைக் கிரகிக்கிறதுக்குமாத்திரம் அனதபாவசொரூபத்தை அந்தந்த சத்தியாகிற இந்திரியத்துக்குக் கட்டளையிட்டருளினதொழிய மற்றப்படியல்ல. அனபடியினாலே வர்ணரூபங்களைக் கிரகிக்கிற சக்ஷுவினிடமாக சுரோத்திரிய யிந்திரியமானது கிரகிக்கலா மென்று சொன்னோமானால் சுரோத்திரிய யிந்திரியமானது தனது சுபாவசொரூபத்தைப் போக்கடித்து சட்சுவா யிருக்கிறதென்று சொல்லுகிறதுக் கொக்கும். ஆதலாலே பொருளாகிற சுரோத்திரமானது சுரோத்திரமாயிராம லச்சுரோத்திரயமா யிருக்கிறதென் றங்கீகரிக்கிறதுக்குச் சமானம்; அப்படிப்பட்ட அபத்தப்புறளையை மூடனுங்கூட வனனும் ஒப்புக்கொள்ள மாட்டானென்று சொல்லுகிறதுக்குத் தப்பாது.

இதுவரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே கண்டுபிடிக்கிற வொருசத்திய விசேஷமுண்டு. அதாவது அந்தந்தச்சத்தியானது தன்னுவிஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்காத விசேஷப்பொருளைச் சத்தியானது கிரகிக்கலாமென்று சொல்லுகிறது ஞாயத்துக்குங் கிரமத்துக்கும் முழுவதும் விருத்தமான அபத்தத் தப்பறையென்று சொல்லத்தகும். இதுகிமித்தமாகச் சப்தமாகிற விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கினதைக் கிரகிக்கிற கப்பு சுரோத்திரமானது வல்லதாயிருக்கிறதொழிய சத்தமாகிற விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்காததாயிருக்கிற ரூப, ரச, முதலானமற்றதுகளையெல்லாம் சுரோத்திரமானது கிரகிக்கமாட்டாதென்று பூரண அங்கிகாரம் ஒப்புக்கொள்ளக் கடவோம். அத்தன்மைபோலப் பிரகாசத்தோடே கூடியிருக்கிற வர்ணமுள்ள ரூபமாகிற விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிற விசேஷபரிமாணங்களைக் கிரகிக்கிறதுக்கு மாத்திரம் திருஷ்டியானது வல்லதாயிருக்கிறதொழியப் பிரகாசிக்கப்பட்ட வர்ணமுள்ள பரிமாணங்களாயிராத பொருளென்னப்பட்ட யாவும் சக்ஷுவுக்கு அகோசரமா யிருக்கிறதினால் அது சக்ஷுவினாலே காணப்படாதென்று சந்தேகமறாங்கீகரிக்கத் தக்கதாகும். இப்படிச் சொல்லாவிட்டால் கண்ணானது சத்தத்தையும் செவியானது சத்தத்தையும் கிரகிக்கலாமென்கிற அபத்தத்தினாலே சம்மதப்படுகிறதுக் கொக்கும்.

இதுகுன்றாத சத்தியமாயிருக்கையிலே சரீரியாயிராதபொருள் சரீரத்தின கண்ணுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்காத பொருளா யிருந்து சரீரியாயிராத பொருளானது கண்ணுக்கு அகோசரமா யிராததினால் கண்ணை தசரீரியாயிராத பொருளைக் காணலாமென்று சொல்லுகிறதென்கிறது முதிர்ந்த பயித்தியத்திலே கூட்டென்று சொல்லக்கடவோம். இதுகாரணமாக சரீரமில்லாதவனை அகண்டவிதமாக ஞானம் பலம் இதுகள் முதலான சகல நன்மையானவரு

மாயிருக்கிற பராபரவஸ்துவைச் சரீரத்தின் கண்ணாலே காணத்தக்கதாகத் தனக்குக் காட்டச்சொல்லுகிறவன் முழுப்பயித்தியக்காரருக்குள்ளே சேர்ந்தவனென்று அவனைச் சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட புத்தியினாலே யிருக்கிறவன் பராபரவஸ்துவைச் சரீரத்தின் கண்ணாலே கிரகிக்கப்படலாமென்று சொல்லுமாப்போலே காதாலேயும் மூக்காலேயும் சர்வேசுரனவரைக் கிரகிக்கப்படலாமென்று சொல்லுவானென்று அங்கீகரிக்க வேணும். அதெதென்றால் சரீரியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சர்வேஸ்வரனானவர் அடங்காத பொருளா யிருக்குமாப்போலே சுரோத்திரத்தினுடைய கிராணேந்திரியத்தினுடையவும் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்காதவரா யிருக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியால் திருஷ்டியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்காத சர்வேசுரனைத் தனது கண்ணாலே தான் காணத்தக்கதாகத் தனக்குச் சர்வேசுரனைக் காட்டவேணுமென்று சொல்லுகிறவன் மூக்காலேயுங் காதாலேயுஞ் சர்வேசுரனைத் தான கிரகிக்கிறதுக்குச் சர்வேசுரனைக் குருவானவன் தனக்குக்காட்டவேணுமென்கிற அபத்தத்தைச் சொல்லுவான்.

இது விசேஷ்ஞனானவன் சரீரத்தின் கண்ணாலே காணவருகிற வஸ்துவென்னப்பட்ட யாவையும் நாய், பன்றி முதலான செந்துக்களுங் காணவருகிறதென்கிறதுக்குத் தப்பாது. அனபடியினாலே சரீரத்தின கண்ணாலே பராபரவஸ்துவைக் காணவேண்டுமென்று சொல்லுகிறவன் கழுதை, நாய், பன்றி முதலான செந்துக்களானதுகள் சர்வேசுரனைக்காணலாமென்று சொல்லுகிறதுக் கொக்கும். காணப்பட்டதெல்லாம் உண்டாக்கப்பட்டதென்கிற ஞாயத்தினாலே சரீரத்தின கண்ணாலே சர்வேஸ்வரனைக் காணலாமென்று சொல்லும்போது சர்வேசுரனானவர் உண்டாக்கப்பட்ட பொருளாயிருக்கிறாரென்று சொன்னாப்போலே யாகிறது. அப்படியே சர்வேசுரனானவர் உண்டாக்கப்பட்ட பொருளாயிருக்கிறாரென்று சொல்லும்போது அவர் தானாயிருக்கிற பொருளுமாயனாதியுமாயப்போது யிருக்கிறவரல்லாமல் சகல நன்மையானவருமாயிருக்க மாட்டாரென்று சொன்னதுக்குச் சமானமாம். இப்படிப்பட்ட முழு அபத்ததப்பறைகளுக்குச் சம்மதப்படுகிறவன் சர்வேசுரனில்லையென்று அங்கீகரித்துக்கொண்டுவருகிறானென்று சொல்லக்கடவோம். சர்வேசுரனில்லையென்று அங்கீகரிக்கிறதெளிவற்ற பாவியானவன் சகல துற்குணங்களுக்கும் பாவங்களுக்கும் அநியாயமான சரித்திரங்களுக்கும் சாதாரண காரணமாயிருக்கிற அஞ்ஞானத்திலே விழுந்து கெட்டானென்று சொல்லக்கடவோம். அனபடியினாலே சகல துரித சாகரத்திலே மனுஷனானவன் விழுந்து அமிழ்ந்தாப் போகாதபடிக்கு மட்டில்லாத சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தரானவரைச் சரீரத்தின் கண்ணாலே மனுஷனானவன் காணமாட்டானென்று இருமனப்படாமல் பரிபூரண அங்கிகாரம் பண்ணிக்கொண்டிருக்கிற சகல நன்மையான கர்த்தரைச் சீவனானது தனது கண்ணாகிற புத்தியைக் கொண்டு திவ்வியப்பிரகாசத்தினாலே காணலாமென்று ஞானத்துடனும் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளக்கடவான்.

அதெதென்றால் சரீரசம்பந்த மாயிராத ஞானமுதலான விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிற சத்தியாகிற புத்தியின் விஷயத்தை விசாரிக்குமிடத்தில் ஆதலாகிற பொருளென்னப்பட்டதெல்லாம் ஞானத்துக்குக் காரணமாயிருக்கிற புத்தியின் விஷயமாயிருக்கிறதென்று சொல்லத்தகும். அதெதென்றால் சத்தியாகிற புத்தியானது ஞானவிருத்திக்குக் காரணமாயிருக்கும்போது ஞானவிருத்தியினாலே கிரகிக்கப்படலானதாயிருக்கிற பொருளென்னப்பட்டயாவும்

ஞான விருத்திக்குக் காரணமாயிருக்கிற சத்தியாகிற புத்திக்கு விஷயமாயிருக்கிறதென்று சொல்லக் கடவோம். உண்டாயிருக்கிற சகல பொருள்களுக்குள்ளே தானுயிருக்கிற பொருளாகிற சர்வேசுரனானவர் பொருளென்றும் உத்தமபொருளென்றும் அங்கீகரிக்கத்தக்கசத்தியமாகும். அதேனென்றால் பொருளும் ஆகுதலுமென்னப்பட்டயாவையும் பார்க்கும்போது ஆகுதலும்பொருளுமிருக்கிறதென்கிறமெனைநிமித்தமாகச் சர்வேசுரனே ஆகுதலென்றும் பொருளென்றுஞ் சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே உண்டாக்கப்பட்ட ஆகுதலென்கிறதென்றும் தானுயிருக்கிற பொருளாகிற சர்வேசுரனுக்கும் அளவற்றதூரமாயிருந்தாலும் உண்டாக்கப்பட்ட பொருளிடத்திலேயும் தானுயிருக்கிற பொருளாகிற வஸ்துவினிடத்திலேயும் இந்தயிரண்டுவகையுள்ள பொருளிடத்திலேயிருக்கிறதென்கிற [illegible]யானது உண்டாயிருக்கிறதென்கிறதினாலே உண்டாக்கப்பட்ட ஆகுதலாகிற பொருளுந் தானுயிருக்கிற பொருளாகிற சர்வேசுரனும் இந்தயிரண்டு வகையுள்ள பொருள்கள் பொருளின் சாதாரண சுபாவத்தைக் கொண்டிருக்கிறதென்றும் மெய்யான பொருளானதென்றுஞ் சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல இந்தமெய்யான பொருளாயிருக்கும்போது [illegible]மும் அறியப்படலானதென்று சொல்லக்கடவோம்.

அதேனென்றால் கேட்கப்படலானது காதாலேயும் காணப்படலானது கண்ணாலேயும் கிரகிக்கப்படுகிறதினால் சத்தமென்னப்பட்ட யாவுங் கண்டிப்புள்ள ரூபமானதும் காதினுடையவுங் கண்ணினுடையவும் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்கியிருக்கிறதென்று சொல்லப்படு மொழிய மற்றப்படியல்ல அத்தன்மைபோல அறியலானதென்னப்பட்டதெல்லாம் அறிவினாலே கிரகிக்கப்படலாமென்கிறபோது அறியலானதென்னப்பட்ட யாவும் அறிவினுடையவிஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியவிசேஷமாகுமென்றிருக்கையிலே ஆகுதலாகிற பொருளென்னப்பட்டதெல்லாமுண்டாயிருக்கக்கொள்ள பொருளானது அறியப்படலானதென்று கொள்ளத்தக்கதாகும் பொருளென்னப்பட்டதெல்லாம் அறியப்படலானதாயிருக்கிறபடியினாலே பொருளென்னப்பட்டதெல்லாம் அறிவினாலே கிரகிக்கப்படலாமென்றும் அறிவினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்கியிருக்கிறதென்றுஞ் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கவேணும்.

அவ்வண்ணமே பொருளென்னப்பட்டதெல்லாத்தினுடைய சுபாவமாகிற சகல ஆகுதலில்லாத தனிமாத்திரம் அறியப்படுகிற ஞானத்தினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிராமல் ஞானத்துக்குக்காரணமான புத்தியினாலே சாக்ஷாத் மெய்யாகவுஞ் செவ்வையாகவும் அப்படிப்பட்ட சகல ஆகுதலுடைமையில்லாத தனிமானது மாத்திரம் அறியப்படாதென்று சொல்லவேண்டியிருந்தாற்போல மெய்யான ஆகுதலாகிற சகல பொருளானது அறியப்படலானதாயிருக்கிறதினால் அது புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்று சொல்லக் கடவோமென்கிறதுக்குத் தப்பாது. ஆதலால் தானுயிருக்கிற பொருளானது மெய்யான பொருளின் சாதாரணசுபாவத்தைக் கொண்டிருந்து அதுமெய்யானபொருளாயிருக்கக் கொள்ள தானுயிருக்கிற பொருளானது அறியப்படலானதென்றும் அறிவினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியவிசேஷமாகும். இத்தறுவாயிலே மிகவும் அறியவேண்டின ஒருவிசேஷமுண்டு அதேதெனில் மிகவுங் கனமான மகிமையுள்ள விசேஷமானது சத்தியினு

டைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடக்கப்பட்டதாயிருந்தாலும் அப்படிப்பட்ட கனமகிமையுள்ள விஷயமானது சத்தியினுடைய சுபாவத்துக்கெட்டாததாயிருக்கக்கொள்ள சத்தியினுடைய சுபாவத்தைப் பார்க்குமிடத்தில் சத்தியானது தனது குறைவு நிமித்தியமாக அப்படிப்பட்ட மகிமையுள்ள விஷயத்தைக் கிரகிக்கமாட்டாதென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை.

இப்படியிருக்கையிலே சத்தியானது தனது சுபாவத்துக்கு மேலாகத்திவ்விய பிரகாசத்தினாலே தேறப்பட்டு அப்படித் தேறப்பட்ட சத்தியானது தனது சுபாவத்தைக் கீழித் தனது குறையுள்ள சுபாவத்தின் மேலே திவ்விய பிரகாசத்தினாலே யுயர்த்தப்பட்டால் அதுதனது சுபாவத்தின் சக்தியமாய்க் கண்டுபிடிக்கக்கூடாத கனமகிமையுள்ள விஷயத்தைத் திவ்விய பிரகாசத்தினாலே குறையற்ற பிரகாரமாய்க் கிரகிக்கலாமென்கிறதுக்குத் தப்பாது. இதெல்லாம் வெளியாகும்படிக்கு ஒன்றிலே யாரோபித்துச் சொல்லிக்காட்டக் கடவோம். அதெப்படியென்றால் பிரகாசத்தோடே கூடியிருக்கிற நானாவண்ண ரூபங்கள் கண்ணுக்கு விஷயமாயிருக்கக்கொள்ளாக் கண்பிரகாசமுடைத்தான சூரியனானது சரீரக்கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டியிருந்தாலுஞ் சரீரத்தின் கண்ணென்னப்பட்டதெல்லாஞ்சூரியனைச்சங்கோசமில்லாமல் நேராகப் பார்க்கலாமென்று சொல்லக்கூடாது அதெப்படியென்றால் வவ்வாலுக்குண்டான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சூரியனானது அடங்கியிருக்கிறதென்று சொல்லவேண்டியிருந்தாலும் வவ்வாலுடைய கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்கு வல்லதாயிராதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அவ்வண்ணமே சரியான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சூரியனானது அடங்கியிருக்கக்கொள்ள வவ்வாலுக்குண்டான சரீரமான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சூரியனானது அடங்கியிருக்கிறதென்று சொல்லக்கடவோம், ஆனபடியினாலே வவ்வாலுக்குண்டாயிருக்கிற சரியான கண்ணானது சூரியனைக்காண்கிறதுக்குத் தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குப்பால் ஒன்றுக்கும் தேவையில்லையென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே வவ்வாலினுடைய கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்குத் தனது விஷயத்தின் விஸ்தாரத்தைக் கடக்கவேண்டியிராதபோதே வவ்வாலினுடைய கண்ணானது தனது சுபாவத்தை விடாமல் சர்வேசுரனுடைய திருவுளப்படியே சூரியனைக்காணலாமென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆனபடியினாலே வவ்வாலுடைய கண்ணானது சர்வேசுரனுடைய திருவுளத்தினாலே இப்படிச் சூரியனைக்காணலாமென்று நாம்சொல்லும்போது திவ்விய திருவுளத்தினாலே வவ்வாலுடைய கண்ணானது தனதுசுபாவத்தை மீறித் தனது குறையுள்ள சுபாவத்துக்கு மேலாகத் திவ்வியசித்தத்தினாலே யுயர்த்தப்பட்டு அதுகூசாமற் சூரியனைக் காண்கிறதென்று சொல்லுகிறோமொழிய வவ்வாலுடைய கண்ணானது சூரியனைக் காண்கிறதுக்குத் தனதுவிஷயத்தின் விஸ்தாரத்தைக் கடந்ததென்றுந் தனது சுபாவத்தை விட்டு வேறேசுபாவத்தை யுடைத்தானதாயிருக்கிறதென்றும் இதுமுதலான அபத்தங்களுக்கும் அர்த்தவிரோத விஷயங்களுக்கும் சம்மதப்படுகிறோமென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. அவ்வண்ணமே வவ்வாலினுடைய கண்ணானது சங்கோசப்படாமற் சூரியனைக் காண்கிறதென்கிறது அர்த்தவிரோதமான அபத்தமாயிராததினாலே வவ்வாலுடைய கண்ணானது கூசாமற் சூரியனை நேராகப் பார்க்கத்தக்கதாகக் கர்த்தரானவர் வவ்வாலுடைய கண்ணுக்குப் பெலக்கொடுக்கலாமென்று சொல்லத்தகுமென்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

இதுக்கு நியாயமான காரணமேதெனில் அர்த்த விரோதமாயிராத விசேஷமென்னப்பட்ட யாவையும் பண்ணுகிறதுக்கு முகிவில்லாத பெலசொரூபமாயிருக்கிற கர்த்தரானவர் வல்லவராயிருக்கிறாரென்று சொல்லவேணு மொழிய அதைக் கர்த்தரானவர் பண்ணமாட்டாரென்று கன்பாவமில்லாம லங்கீகரிக்கப்படாது. அதேதென்றால் அர்த்த விரோதமான விசேஷங்களத விர வேறேயாதொரு விசேஷ[illegible]த்தருக்குக் கூடாதென்று சொன்னோமானால் [illegible] யிருக்கிற குறையுள்ள பெலத்தைக் கர்த்தனிடத்திலே யாரோபித்ததுபோலே யாகுது. அப்படிப்பட்ட அபத்தத்தை அங்கீகரிக்கிறதென்கிறது கர்த்தரானவர் தானாயிருக்க வில்லையென்றும் சர்வேசுரனாயிருக்கமாட்டாரென்றும் [illegible] பமிகிறதுக்கொக்கும். ஆனபடியினாலே அப்படிப்பட்ட அபத்தமான [illegible]பனைதக்குச் சம்மதித்து முழு அஞ்ஞானத்திலே விழுந்து கன்பாவத்துக் கு[illegible]க்கபடிக்கு அர்த்தவிரோதமாகாத காரியமென்னப்பட்டதெல்லா முகிவில்லாத பெலசொரூபமாயிருக்கிற கர்த்தராலே பண்ணப்படலாமென்று சொல்லவேண்டியிருக்கிறதினாற் சத்தியினாலே தனதுவிஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்கின வஸ்துவென்னப்பட்ட யாவுஞ் சாதிக்கப்படுமென்று சொல்லுகிறதென்கிற அர்த்தவிரோதமாயிராதபோது ஞானமிருத்திக்குக் காரணமான புத்தியானது தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின பொருளென்னப்பட்ட யாவையுந் திவ்விய பிரகாசத்தினாலேயானு [illegible] மதிக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதென்று சந்தேகமற நிச்சயப்படுத்திக்கொள்ள[illegible] சத்தியமாகும். இதுநிமித்தமாக முன்னே யொப்புவித்தாப்போலே பொருளென்னப்பட்டயாவும் புத்தியின் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கி[illegible]ள சகலகுணமே தனக்கெட்டாத பொருளாயிருக்கிற பராபரவஸ்துவைப் புத்தியானது தனதுசுபாவ பெலத்தினாலே கண்டுபிடிக்கிறதுக்கு வல்லதாயிராமல் தயாபரனை கர்த்தருடைய திருவுளப்படியே யுண்டாயிருக்கிற இவ்வி[illegible]த்திலேயே குறையுள்ள புத்தியானது இடப்பட்டு அதுநிமித்தமாகத் தன்சுபாவத்தை மீறித்தனக்கு முகிவில்லாத ஞாயமாயிருக்கிற, [illegible] வல்லதாயிருக்கலாமென்று சொல்லக்கடவோம். இதற்[illegible] மிகுமாயிருக்கிற [illegible] ஒரு விசேஷமானது சரீரத்தின் கண்ணானது [illegible] தனது விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கின பொருளை [illegible] கண்டுபிடிக்க [illegible] இருட்டிலே [illegible] பொருளானதைக் கண்ணானது [illegible] பிரகாரமாகக் காணுமென்கிறதுக்குத் தப்பாது. இருட்டிலே காணப்பட்ட [illegible] முள்ள பொருளானது பிரகாசத்தோடே கூடச் சரீரத்தின் கண்ணாலே காணப்படலாமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. இருட்டிலேயும் பிரகாசத்திலேயும் சரீரத்தின் கண்ணாலே காணப்பட்ட [illegible] பொருளானது [illegible] இருட்டிலே காணப்பட்ட அபத்தமான [illegible] காணப்பட்டு அதினுடைய [illegible] மையுள்ள [illegible] கண்டுபிடிக்கும். அப்படிப்பட்ட [illegible] பொருளானது [illegible] கூடக் காணப்பட்டால் அதினுடைய [illegible] அலங்காரத்தை [illegible] மகிமையுள்ள பிரகாரமும் [illegible] காணப்பட்டு [illegible] பிரத்தியக்ஷமாகக் காணப்படும் [illegible] அதுபொருளானது [illegible] அறியப்படுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இதுதவிர இருட்டிலே காணப்பட்டதுபோலே [illegible] இருட்டிலே தன்னைக் கண்டவனுக்கு மிகவுஞ்சந்தோஷத்தை வருத்தியிராமல் பிரகாசத்தோடே தன்னைக்கண்டவனுக்கு மிகவும் சந்தோஷத்தை வருத்தியிருக்குமென்கிறதுக்குத் தப்பாது.

இந்தவுலகமையினாலே பராபரவஸ்துவைப் புத்தியானது கண்டுபிடிக்கிறதிலே கிட்டுவருகிறமேன்மையை நிச்சயம்பண்ணலாம். அதெப்படியென்றால் மனுக்ஷருக்கும் வாக்குக்குமெட்டாததாயிருக்கிற ரூபமானவர் [illegible]முள்ள கர்த்தனை உணர்த்தப்பட்ட புத்தியானது யிரண்டுவிதமாகக் கண்டறியலாமென்று சொல்லக்கடவோம். அதேதெனில் சகல நன்மைசொரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்கு இல்லாததைக் கூட்டாமலும் உள்ளதைப் [illegible] சொல்லாமல் கர்த்தரானவரிப்படிக்கொத்தவரென்று சத்தியப்பிரகாரமாய்ப் புத்தியானது சந்தேகமற்ற நிச்சயமுள்ள விசுவாசத்தினாலே காண்கிறதென்கிறது மனோவாக்குக்கெட்டாததாயிருக்கிற [illegible] சகலநன்மைசொரூபமானகர்த்தனைப் புத்தியானதுயிருட்டிலே காண்கிறதென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே [illegible]த்தரானவர் முகிவில்லாதபெலம் அனந்தஞானபரமானந்த சொரூபமாயிருக்கிறாரென்று விசுவாசிக்கிறதாக அறியப்பட்டாலுமிப்படிப்பட்ட மகிமைகளுடைய கேவலாகாரத்தை மோக்ஷத்துடாகப் புத்தியானது வொருவிதமாய்க் கண்டுபிடிக்கிறதொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட விசுவாசமாகிறயிருட்டிலே புத்தியினாலே காணப்பட்ட சகல நன்மையான கர்த்தரானவருடைய கிருபையினாலே ஆத்துமத்திலே யுதிக்கிறதிவ்வியபிரகாசத்தோடே கூடப்புத்தியினாலே பராபரவஸ்து பிரத்தியக்ஷமாய்க் காணப்படலாமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. இப்படிப்பட்ட பிரத்தியக்ஷதெரிசனத்து [illegible]த்தமாகப்புத்தியானதுபராபரவஸ்துவையடையும்போது கர்த்தரானவரின்றென்று மோக்ஷமாகமாத்திரம்புத்தியானது அறியாமல்முகிவில்லாத அனந்த நன்மையினுடைய கேவலாகாரத்தையும் ஒவ்வொரு நன்மைக[illegible]டவிதமாகச் சகல நன்மையோடேகூடஅப்பமாகிலும் பின்னபேதமில்லாமலொன்றித்திருக்கிற மேன்மையும்புத்தியானது பிரத்தியக்ஷமாய்க்காணுமென்கிறதுக்குத் தப்பாது அவ்வண்ணமேயிருட்டாகிறவிசுவாசத்தைக்கொண்டுபராபரவஸ்துவாகிற கர்த்தனைக் கண்டுபிடித்து அவர்திருவுளம்பற்றின குறையற்றநிர்மலபுண்ணிய நெறியையனுசரித்து நடக்கிறதென்கிறது பரமானபிரயாசமா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட விசுவாசத்தினாலே புண்ணிய சரித்திரங்களானது கனமான வெகுமானத்துக்குத் [illegible] சொல்லப்படும். மனோவாக்குக்கெட்டாததாயிருக்கிற [illegible] சகலநன்மை சொரூபமான கடவுளைப் புத்தியானது [illegible] தெரிசனத்தினாலே நித்தியமாக அடைந்து [illegible] மிடைவிடாமல் திளைத்துக்க குறையற்ற பத்தியோடே அப்படிப்பட்ட சகலநன்மையான சர்வேசுரனோடே சீவனானது [illegible] அனுபவிக்கப்போகிறதினால் அப்படிப்பட்ட கடவுளுக்குச் சகலமுமிருக்கிற முகிவில்லாத நன்மைகளைச் சீவனானது திவ்வியபிரசாதத்தினாலே தன்னுடமையாகப் பெற்றுக்கொண்டிருக்குமென்கிறதுபழுதற்ற விசுவாசம். புண்ணிய சரித்திரங்களுக்குப் பூரண தக்ஷணையாயிருக்கிறதென்று சொல்லத்தகும். ஆதலாலே அதுகுறையற்ற பாக்கியமென்றும் [illegible] கொடுக்கிற பரமானந்தமென்றும் அப்பமாகிலுஞ்சந்தேகமில்லாமல் பூர்ணமான அங்கீகாரத்தோடேயேற்றுக்கொள்ளத்தக்க பரமசத்தியமாகுமென்கிறதுக்குத் தப்பாது.

இந்தப் பாடத்திலே சமமாறப் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே முழுதுமறிந்திட்டபேர்களில் சிலர் இந்த விஷயத்திலே சொல்லுகிற அபத்தவார்த்தைக்கு அனுபிரதிபித்தாமின்னதென்று கண்டுபிடிக்கலாம். அதேதெனறால் சகலநன்மை சொரூபமான கர்த்தனைச் சரீரத்தின் கண்ணாலே காணவேணுமென்கிற அபத்தத்தைச் சொல்லுமாப்போலே மூக்காலே சகலநன்மை சொரூபமாயிருக்கிற பராபர வஸ்துவைக் கண்டுபிடிக்கலாமென்கிற அபத்தத்தை அங்கீகரிக்க வேண்டியிருக்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் சரீரத்தில்

கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சகலநன்மை சொரூபமான கர்த்தரானவர் அடங்காத பொருளாயிருக்கும்போலே மூக்கினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அவரடங்காத பொருளாயிருக்கிறாரென்று சொல்லக்கடவோம். இது இந்தப்பிரகாரமாயிருக்கையிலே சரீரத்தின் கண்ணானது தனதுவிஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்காத கர்த்தனைக் காண்கிறதாமென்கிற அபத்தத்தைச் சொல்லுகிறது மூக்கானது தனதுவிஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்காத சர்வேசுரனைக் கிரகிக்கலாமென்கிற அபத்தத்தைச் சொல்லுகிறதென்கிறதுக்குச் சமானமென்றும் அங்கீகரிக்கத் தக்கதாகும். இப்படிப்பட்ட தெளிவற்ற பாவிகளானபேர்கள் மெய்யாகவே பிழைக்கிறதுக்கு அனுவுபாயமாவது, சரீரசம்பந்தமாயிருக்கிற இந்திரியங்களினாலே சகலநன்மை சொரூபமாயிருக்கிற கர்த்தனைக் கிரகிக்கலாமென்கிற அபத்தத்தை முழுதும்விட்டு ஞானவிருத்திக்குக் காரணமாயிருக்கிற புத்தியின் விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிற பராபரவஸ்துவைத் திவ்விய பிரசாதத்தைக்கொண்டு புத்தியானது பிரத்தியக்ஷதெரிசனத்து நிமித்தமாக அடையலாமென்று நிச்சயம்பண்ணக்கடவார்கள். சகலஆசை பூரிக்கிற அப்படிப்பட்ட மோக்ஷபாக்கியமானது சகல நிர்மலசரித்திரங்களுக்குத் தகுதியாயிருக்கக்கொள்ள சர்வேசுரனிப்படிக்கொத்தவரென்று மெய்யான விசுவாசத்தினாலே இவ்வுலோகத்திலே அவர்களிருட்டிலே காணுகிறப்போலே கண்டுபிடித்து, அருவருப்புள்ள கஷ்டமாகிற பாவத்தை முழுதும்விட்டுப் பரிசுத்த ஆத்துமாக்களாய்ப் பிழைப்புமுற்ற சகலபுண்ணிய நெறியிலே பாவிகளானபேர்கள் நடக்கிறதுக்குத் தகுதியாகிறதென்கிறது. இதேஅவர்கள் கரையேறுகிறதுக்கு உபாயமாயிருக்கிறதொழிய சரீரத்தின் கண்ணாலே சர்வேசுரனைக் காண்போமென்கிற அபத்தமான ஆசையானது முழுதும் அஞ்ஞானத்தோடே கூடியிருக்கக்கொள்ள அனேகங்களமான பாவங்களுக்குக் காரணமாயிருக்குமொழிய ஒரு அற்ப நன்மைக்காகிலும் அதுயேதுவாயிருக்கமாட்டாது.

இதன்றியே சரீரத்தின் கண்ணானது சர்சமுதலான வியாதிகளினாலேயும் [illegible] மூடப்பட்டால் தனது விஷயத்தைக் காணமாட்டாதுபோலே ஞானக்கண்ணாகிறபுத்தியானது காசமாகிறஅஞ்ஞான முதலானபாவக்கஷ்டங்களாலே மூடப்பட்டால் பராபரனை [illegible] பிரத்தியக்ஷதெரிசனத்து நிமித்தமாக வியாதியும் அழுக்கும் படிந்திருக்கிற அப்படிப்பட்ட கண்ணாகிறபுத்தியானது அடையமாட்டாதென்று நிச்சயம்பண்ணி அப்படிப்பட்டதெரிசனத்தினாலே வருகிறபாக்கியமாகிறமோக்ஷத்தையடையத்தக்கதாகப்பாவிகளானபேர்கள் அபேக்ஷித்து அஞ்ஞானமுதலானபாவக்கஷ்டங்களை அவர்கள் முழுதும்விட்டபிற்பாடு ஞானஅஞ்சனவாகையினாலே கூர்மையுள்ள கூசனைற புத்தியுடைத்தானவர்களாயிருக்கிறதுக்குவருந்தக்கடவார்கள்.

விசுவாசமும் பிரத்தியக்ஷ தெரிசனமென்கிற யிரண்டு வகையினாலே சிவனானது பராபரவஸ்துவைக் கண்டடையலாமென்று யிந்தப்பாடத்திலே சொன்னோமே சர்வேசுரனைக்கண்டுபிடிக்கலாமே அப்படிப்பட்ட [illegible] வேதங்களிலே அறியாதபேர்கள் சில சந்தேகங்களைக்கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தேகங்களுக்குச் சுருக்கமாக அனுபிரத்தியுத்தரத்தைச் சொல்லிக்குறையற்றபாக்கியமென்கிற மோக்ஷமானதின்னதென்று விபரமாயின்னும் விளக்கிறதுக்கு அறியவேண்டின சிறிதுபரமரகசியங்களை வருகிறபாடத்திலே வெளிப்படுத்தக்கடவோம்.

௨௬-ம் பாடம்.

பிரகாசத்தையும் வர்ணத்தையும் மூலைத்தானமுடையதாது சரீரத்தின் கண்ணுக்கு விஷயமாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிறதென்சொல்லுக்கு [illegible] கண்ணினாலே கிரகிக்கப்படலாமென்று போனபாடத்திலே ஒப்புச்சொன்னதுபோலே யாச்சுது. இந்தவிடைவாக மற்றுண்டான யிந்திரியங்களுடைய வகைகளிடத்திலேயும் யோசிக்கத்தக்கதாகும். அத்தன்மைபோல ஆகுதலாகிற பொருளென்னப்பட்டதெல்லாம் ஞானவிருத்திகளுடைய காரணமான சத்தியாகிற புத்திக்கு விஷயமாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கியிருக்கிற பொருளென்னப்பட்டவனை [illegible] திவ்வியபிரசாதத்தைக் கொண்டாகிலும் புத்தியானது பிரத்தியக்ஷமாய்க் கண்டடையலாமென்று அங்கீகரிக்கக்கடவோம். இதிப்படியிருக்கையிலே தானாயிருக்கிற ஆகுதலாகிற பொருளென்கிற சர்வேசுரனவர் மெய்யான ஆகுதலும் சத்தியமான பொருளுமாயிருக்கிறாரென்று ஒப்புக்கொள்ளத்தக்க யுத்தியாயிருக்கிறது. அவ்வண்ணமே சர்வேசுரனவர் தானாயிருக்கிற ஆகுதலான பொருளென்றங்கீகரிக்கும்போது சகலமான ஆகுதலானபொருள்களுக்குள்ளே சுபாவமான மகிமைவாக்குக் கெட்டாததாயிருக்கிறதென்[illegible]யிருந்தாலும், அவரை மெய்யானபொருளென்றும் மெய்யான ஆகுதலென்றுஞ் சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே ஞானவிருத்திக்குக் காரணமான சத்தியாகிற புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே தானாயிருக்கிற பொருளாகிற கர்த்தரானவர் அடங்கியிருக்கிற பொருளென்று அங்கீகரிக்கவேணும். அப்படியே புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே கர்த்தரானவ ரடங்கினபொருளாயிருக்கும்போது தானாயிருக்கிற பொருளாகிற கர்த்தனுக்கும் உண்டாக்கப்பட்ட புத்திக்கு முடிவில்லாத தாரமுண்டாயிருக்கிறதினாலே யுண்டாக்கப்பட்ட புத்தியினுடைய சுபாவபலத்தைப் பற்றும்படியாய் விசாரிக்கும்போது அப்படிப்பட்ட தானாயிருக்கிற பொருளாகிற கர்த்தரானவர் உண்டாக்கப்பட்ட புத்திக்கெட்டாத பொருளாயிருந்தாலும் புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே [illegible] கர்த்தரானவ ரடங்கியிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட பொருளாகிற கர்த்தனைப் புத்தியானது கண்டுபிடிக்கிறதென்கிறது அர்த்தவிருத்தமாயிராதென்று போனபாடத்திலே யொப்புச்சொன்னதுபோலே யாச்சுது. அது அர்த்தவிரோதமாயிராதபோதே யுண்டாக்கப்பட்ட புத்தியினுடைய சுபாவபலத்துக்கு அப்படிப்பட்ட தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது சுபாவமாகச் சாத்தியமாகாததாயிருந்தாலும் ஒன்றான சர்வேசுரனுடைய அளவில்லாத பெலத்தினாலே யுண்டாக்கப்பட்ட புத்தியானது அப்படிப்பட்ட திவ்விய தெரிசனத்தை யடையலாமென்று அற்பமும் சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத் தகுமொழிய அதிலே சந்தேகப்படுகிறதுக்குக் காரணமில்லை.

இதெல்லாமிப்படியிருக்கையிலே திவ்விய பிரசாதத்தின் பெலத்தைக்கொண்டு உண்டாக்கப்பட்ட புத்தியானது தானாயிருக்கிற பொருளாகிற கர்த்தனைச் சூரியனையும் பிரகாசத்துக்குஞ் சமானமான விசுவாசமும் பிரத்தியக்ஷ தெரிசனமென்கிற யிரண்டுவகையினாலே கண்டடையலாமென்று சொல்லும்போது யிருட்டுக்குச் சரியாயிருக்கிற விசுவாச தெரிசனத்தினிமித்தியமாகப் புத்தியானது கர்த்தனைக் கண்டடையலாமென்கிறதினாலே சிலபேருக்குண்டான சந்தேகமாவது.

பிரத்திப்பட்ட யிந்திரியங்களினாலே கிரகிக்கப்பட்ட பொருள்கள்மாத்திரம் புத்தியினாலே கிரகிக்கப்படக்கூடுமொழியப் பிரத்திப்பட்ட யிந்திரியங்களுக்குள்ளே யிராத விஷயமானது புத்திக்குள்ளே யுண்டாயிருக்கமாட்டாதென்கிற ஞாயத்தைப் பார்த்துப்பராமரிசித்து ஆராய்ந்துகொண்டோமானால் விசுவாசதெரிசனத்து நிமித்தமாகப் புத்தியானது சத்தத்தைக்கண்டுபிடிக்க மாட்டாதென்று சொல்லுகிறவர்களும்போலே காணபித்திருக்கிறது. அதேதென்றால் சர்வேசுரனென்கிறவரிடத்திலே அங்கீகரிக்கத்தக்க திரித்துவஏகத்துவமும் ஒப்புக்கொள்ளத்தக்க அகண்டவிதமாகச் சகலநன்மையென்கிற திவ்விய சுபாவசொரூபமும் இத்தொகைப்பட்ட வேறேயநேகந் திவ்வியமகிமையுள்ள விசேஷங்களும் பிரத்திப்பட்ட யிந்திரியங்கள் அடங்காத விஷயங்களாயிருக்கக்கொள்ள இப்படிப்பட்ட மகிமையுள்ள விஷயங்களானதுகள் புத்தியிடத்திலே யிருக்கமாட்டாதென்று சொல்லவேண்டியிருக்கிறது அதுகள் புத்திக்குள்ளே யிருக்கமாட்டாதென்று சம்மதிக்கும்போது புத்தியானது அப்படிப்பட்ட மகிமையுள்ள விசேஷங்களை விசுவாசதெரிசனத்து நிமித்தமாகக் கண்டுபிடிக்கமாட்டாதென்று சொல்லவேண்டியிருக்கிறதுபோலே தோன்றியிருக்கிறது. ஆதலாலே அநேகம்பேர்களிப்படிப்பட்ட சந்தேகப்பட்டு அந்தச்சந்தேகத்து நிமித்தமாக அவர்கள் தத்தளித்து இதிலே பரமனுபவமேதென்று அறியாமல் திகைத்துக்கொண்டிருக்கிறார்களென்கிறதினாலே இந்தச் சந்தேகத்துக்கு மறுமொழியான உத்தரம் வெளியாகும்படிக்கு யெவ்வளவாகிலும் விரிவாக இதிலே பிரசங்கம்பண்ணக்கடவோம்.

மனுஷசீவனுடைய ஞானசத்தியாகிற புத்தியைக்கொண்டு விஷயங்களையறிகிற மேரையைப் [illegible]தும் பத்தாய் விசாரித்தோமானால் அப்படிப்பட்ட அறிகிற மேரையானது அறிகிற வகைகளுக்குள்ளே கடைசியந்தத்திலே வைக்கத்தக்க கீழ்மான மேரையுள்ள அறிக்கையாயிருக்குதென்று அங்கீகரிக்கத் தகுமொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் பிரத்தியக்ஷ மேரையானது அறிகிற வகைகளுக்குள்ளே உத்தமவகையாயிருக்கச்செய்தே மனுஷசீவனானது மாத்திரைமேரையாக அழிந்துபோகிற பவுதிகசரீரத்தோடே கூடியிருக்கப்பட்டிருக்கிறதினாலே நாளெல்லாம் பவுதிகசரீரத்துக்குண்டான யிந்திரியங்களைக்கொண்டு விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆகையாலே [illegible]க்கு ஆனவிஷயங்களாகிற ரூபசத்தமிதுகள்முதலான குணங்களை யப்படிப்பட்ட யிந்திரியங்களைக்கொண்டு மனுஷசீவனானது பிரத்தியக்ஷமேரையாகக் கிரகித்துச்சரீரத்தினுடைய பிரத்திப்பட்ட யிந்திரியங்களுக்கு விஷயமாகாத பொருள்களைச் சீவனானது பிரத்தியக்ஷமாயித்தப்பூமியிலே கிரியைசெய்தே யறிகிறதில்லை பிரத்திப்பட்ட யிந்திரியங்களுடைய விருத்திகளுமில்லாமல் விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்கிறதுமில்லை. இப்படிப்பட்ட வகையுள்ள பிரத்தியக்ஷமான யறிக்கையானது தப்பன்னே புழுக்கள்முதலான செந்துக்களுக்கு முண்டாயிருக்கக்கொள்ளப் பிரத்தியக்ஷவகையுள்ள தெரிசனங்களுக்குள்ளே இதைக் [illegible]மான பிரத்தியக்ஷ தெரிசனமென்றும் இதேயத்தியந்த கீசமான பிரத்தியக்ஷதெரிசனமென்றுஞ் சொல்லக்கடவோம். இது நிமித்தமாகச் சகல பொருள்களுடைய வேறுபட்டதாயிருக்கிற யெண்ணப்படாத சுபாவங்களுஞ் [illegible]மில்லாத பொருள்களும் ஞானவிருத்திகளுமித்தொகைப்பட்ட வேறேயநேகம் விஷயங்களும் முன்சொல்லப்பட்ட யிந்திரியங்களுக்கு ஆனவிஷயங்களாயிராததினால் மனுஷசீவன் அழிந்துபோகிற பவுதிகசரீரத்தோடே பொருந்தியிருக்கையிலே யப்படிப்பட்ட வஸ்துகளைப் பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கமாட்டாது.

இதுதவிர யிந்திரியசன்னிதானத்திலே இல்லாத பதார்த்தத்தைச் சீவனானது பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கமாட்டாதென்கிறதுந் தப்பாது. அவ்வண்ணமே சீவனானது இந்திரிய சன்னிதானத்திலே யிருக்கிற பொருளைக் கிரகித்ததினாற் கிரகிக்கப்பட்ட பொருளினுடைய விசேஷப் பிரதிபிம்பத்தைக்கொண்டு இந்திரிய சன்னிதானத்திலே யந்தரங்க யிந்திரியமும் புத்தியுந் தங்களிடத்திலே பிறப்பிக்கும். அப்படிப்பட்ட பிரதிபிம்பத்தைக் கொண்டு யிந்திரிய சன்னிதானத்திலே இராதபதார்த்தத்தை யெந்தவிருத்தியைக்கொண்டு சீவனானது கிரகிக்கிறதோ அந்தவிருத்திக்கு ஸ்மரணமென்றும், நினைவென்றும், ஸம்ஸ்காரமென்றும், சொல்லப்படும். இத்தயிரண்டுவகை ஞானந்தவிரச் சீவனானது பொருளினுடைய வசியமாய்க்கூட யிருக்கிறதை யிந்திரியத்தின் விருத்தியினாலே பிரத்தியக்ஷமாய்க் கிரகித்ததினாலே அப்படிப்பட்ட இரண்டுபொருளில் ஒன்றைமாத்திரம் இந்திரியத்தைக்கொண்டு பிரத்தியக்ஷமாய்ச் சீவனானது கிரகித்தால் சன்னிதானத்திலே இராத மற்றப்பொருளானது அவ்விடத்திலே கூடவிருக்கிறதென்று நிச்சயம்பண்ணும். அந்தவண்ணமே அக்கினியும் புகையும் ஓரிடத்திலே கூடவிருக்கிறதென்று சீவனானது யிந்திரியத்தின் பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே கண்டதினால் அப்புகைமாத்திரம் ஓரிடத்திலே கண்டால் அவ்விடத்திலே அக்கினியினுடைய சொரூபத்தையும் ஸ்திதியையும் நிச்சயிக்கு மென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனபடியினாலே யிப்படிப்பட்ட ஞானமானது அடையாள நிமித்தமாகப் பிறந்த அனுமான ஞானமென்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லக்கடவோம். இதுவரைக்குஞ் சொல்லப்பட்ட மூன்றுவகையுள்ள ஞானங்களினாலே கிரகிக்கப்படலான பொருளானது ஒருமுறையானாலும் பாஹ்யேந்திரியத்தின் சன்னிதானத்திலே யிருக்கவேணுமென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே சரீரத்தின் இந்திரியத்துக்கு விஷயமாயிருக்கமாட்டாத பொருள்களானவை இப்படிப்பட்ட மூன்றுவகையுள்ள ஞானங்களைக் கொண்டு அழிந்துபோகிற சரீரத்தோடே யிருக்கிற சீவனாலே கிரகிக்கப்படாதென்று சொல்லத்தகும். இது [illegible] பராபரவஸ்து முதலான சரீரமில்லாத பொருள்களென்னப்பட்ட [illegible] சரீரத்தின் இந்திரியங்களுக்கு விஷயமாயிராத பராபரவஸ்து முதலான சரீரமில்லாத [illegible] முன்சொல்லப்பட்ட மூன்றுவகையுள்ள ஞானங்களினாலே சீவனானது அடையமாட்டாதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

இந்தவழியிலே நம்மாற் சொல்லப்பட்ட அனுமான ஞானவகையிலே நிச்சயமறியவேண்டின வொரு விசேஷமுண்டு அதேதென்றால் காரியத்துக்கு வேறேயொரு பொருளானது அவசியமாய்க் காரணமாயிருக்க வேணுமென்று ஞானமுள்ள சீவனானது கண்டுபிடித்ததினாலே யாதொரு காரியத்தைக் கண்டால் அதுக்குக் காரணமுண்டென்று சந்தேகமில்லாமல் நிச்சயிக்குமென்கிறதுக்குத் தப்பாது. ஆனாற் சரீரத்தின் பாஹ்யேந்திரியத்தைக்கொண்டு காரியகாரண மிரண்டுமெங்குங் கூடவுண்டாயிருக்கிறதென்று ஞானமுள்ள சீவனாலே நிச்சயிக்கப்பட்டதினால் பின்னை வேறொரு திக்கிலே யாதொரு காரியத்தைமாத்திரங் கண்டால் காரணத்தினுடைய ஸ்திதியையும் சொரூபத்தையும் புத்தியானது நிச்சயம் பண்ணுமென்று சொல்லக் கடவோம். அப்படியென்றால் காரணத்தில் நின்று பிறந்த அநுரூப காரியத்தை [illegible]யிடத்தில் அப்படிப்பட்ட காரியத்தைப் பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகச் சீவனானது பாஹ்யேந்திரியத்தைக் கொண்டு கிரகித்தால் அதுக்

குண்டான காரணத்தினுடைய ஸ்திதியையும் சுபாவ சொரூபத்தையும் புத்தியானது கண்டு பிடிக்குமென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. அவ்வண்ணமே பிதாவுக்கு அனுரூபமான காரியமாகிற பிள்ளையைச் சேவனானது பாஹியேந்திரியத்தைக் கொண்டு பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கும்போது பிதாவாகிற காரணத்தினுடைய ஸ்திதியையும் சுபாவ சொரூபத்தையுங் கூட நிச்சயம் பண்ணுமென்று அனுபவசித்தினாலே யறியப்பெற்றது. அத்தன்மையாக நாதனமாயுற்பவித்த அக்கினியைப் பார்த்ததினால் அப்படிப்பட்ட அக்கினியைப் பிறப்பித்த அக்கினியானது யின்னதென்றும் அது கொண்டிருக்கிற சுபாவ ரூபத்தையும் புத்தியானது கண்டுபிடிக்குமென்கிறதுக்குத் தப்பாது. அதெப்படியென்றால் ஆதிகாரணமாகிற சர்வேஸ்பரனும் அவராலேயுண்டாக்கப்பட்ட பொருளும் ஆதிரு காரியங்களுங் கூட யிருக்கிறதைப் பாஹியேந்திரியங்களினாலே [illegible]வனானது பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கிறதுக்கு வல்லதாயிருக்க மாட்டாததினாலேயும் காரியங்களாகிற பொருளென்னப்பட்ட யாவுமொவ்வொன்றாய்க் கண்டுபிடிக்கப்பட்டாலும் எல்லாம் ஒன்றாய்க் கூட்டப்பட்டாலும் ஆதிகாரணமாகிற சர்வேஸ்வரனுக்கு அனுரூபமா யிருக்கமாட்டாததினாலேயுங் காரியமாகிற [illegible] மென்னப்பட்டதெல்லாங் காணப்படும்போது ஆதிகாரணமாகிற பராபரவஸ்துவானது யிருக்கிறதென்று மாத்திரம் புத்திமான்களாலே நிச்சயம் பண்ணப்படுமொழியப் புலப்படும். [illegible] பிள்ளையுங் கிரிமித்[illegible]தினால் அக்கினியும் பிதாவுமிருக்கிறதுக் தவிர அக்கினியினுடையவும் பிதாவினுடையவும் [illegible] சுபாவ ரூபமானது யின்னதென்று குறையற்ற விதமாகக் கண்டு பிடிக்கப்படுமாப்போலே சர்வேஸ்வரனுக்கு அனுரூபமாயிராத காரியமாகிற வுண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்ட யாவும் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டாலும் அப்படிப்பட்ட பொருள்களினுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகச் சர்வேஸ்வரனுக் குண்டாயிருக்கிற அளவறுக்கப்படாத மகிமையுள்ள சுபாவ முதலான பெருமைகளின்னதென்று குறையற்ற பிரகாரமாக நிச்சயம் பண்ணலா மென்று மதிகெட்டவன் சொல்லுவானொழியப் புத்திமானாயிருக்கிறவன் சொல்லமாட்டான்.

அதேதெனில் காரணத்துக் குண்டா யிருக்கிற சுபாவமுதலான சகல குணங்களையும் சமவிதமாகக் காரியமானது கொண்டிருந்தால் காரணத்துக்கு அனுரூபமா யிருக்கும் அப்படியிருந்தாலுங் கூட வல்லது பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டதினாற் காரணமானது யிருக்கு தென்றும் காரணத்துக் குண்டான சுபாவ பெருமைகளும் நிச்சயிக்கப்படலா மென்றும் அங்கிகரிக்கவேணும். அவ்வண்ணமே மனுஷனாகிற பிதாவுக் குண்டா யிருக்கிற சுபாவ ரூபமும் அதைக் கடுத்த பெருமைகளு மனுஷனாகிற பிள்ளையிடத்திலே சமவிதமாக யிருக்கிறதினால் மனுஷனாகிற பிள்ளையானது காணப்பட்டதினால் பிதாவானவனிப்படிப்பட்ட சுபாவ சொரூப முதலானதுகளைக் கொண்டிருக்கிறானென்று தப்பில்லாமல் நிர்ணயம் பண்ணலாம். அல்லது காரணத்துக் குண்டான சுபாவ சொரூபமுதலான மகிமைகளைக் காரியமானது கொண்டிராதிருந்தால் அதுக்கு அனுரூபமாகாததா யிருக்கிற அப்படிப்பட்ட காரியத்தினுடைய பிரத்தியக்ஷ தெரிசனத்து நிமித்தமாகக் காரணத்துக்குண்டான சுபாவ சொரூபமுதலான மகிமையின்னதென்று பழுதற்ற பிரகாரமாக நிச்சயம் பண்ணலாமென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. அதெப்படியென்றால் ஆடல் பாடலுக்குச் சாமார்த்திய முதலான வேறே அனேகம் பெருமைகளைக் கொண்டிருக்கிற சிற்பாசாரியானவன் ஒரு கல்லு விக்கிரகத்தைப் பண்ணினானென்று கண்டோமானால் அப்படிப்பட்ட விக்கிரகத்தின் தெரிசனத்தினாலே சிற்பாசாரியானவனுடைய ஸ்திதியை

யும் விக்கிரகத்தின் சொரூபமானதும் சிற்பாசாரியினுடைய புத்திக்குள்ளே யிருக்கிறதென்றும் அப்படிப்பட்ட விக்கிரகத்தின் சொரூபத்தைக் கல்லிலே பிறப்பிக்கிறதுக்கு [illegible] சாமார்த்தியத்தையும் பெலத்தையும் [illegible]தொகைப்பட்டதுகளையுங் [illegible] சிற்பாசாரியானவன் கொண்டிருக்கிறானென்றும் புத்திமானானவன் விக்கிரக தெரிசனத்தி னிமித்தமாகக் கண்டுபிடிப்பானொழிய ஆடல்பாடலுக்கு ஆன சாமார்த்தியத்தையும் வேறே அனேகம் பெருமைகளையுஞ் சிற்பாசாரியானவன் கொண்டிருக்கிறானென்று விக்கிரக தெரிசனத்தினாலே புத்திமானாயிருக்கிறவன் கண்டுபிடிக்கிறதுக்கு லவலேசமாகிலும் வல்லவனாயிருக்கமாட்டானென்கிறதுக்குச் சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. இத்தன்மையாகச் சுவர்ண முதலான ரத்தினங்களிடத்திலே யுண்டாயிருக்கிற காந்திகளுக்கும் ஒளிவுக்குஞ் சூரியனானது காரணமாயிருக்கிறதென்று அங்கிகரிக்கும்போது சுவர்ண முதலான ரத்தினங்கள் காணப்படுகிறதினால் அப்படிப்பட்ட தெரிசனத்து நிமித்தமாகச் சுவர்ணாதி ரத்தினங்களுடைய காந்திக்கும் ஒளிவுக்குங் காரணமாகிற சூரியனுடைய ஸ்திதியைச் சூரியனைக் காணாத புத்திமானானவன் நிச்சயம்பண்ணி அப்படிப்பட்ட காரணமாகிற சூரியனானது உத்தம பிரகாரமாக வொளிவையும் பிரகாசத்தையுங் கொண்டிருக்கிறதினால் அப்படிப்பட்ட பிரகாசத்துக்கு மொளிவுக்கு மிகவுங் கீழ்த்தரமாக வாகிலும் ஒளிவையும் பிரகாசத்தையுஞ் சுவர்ணாதி ரத்தினங்களிடத்திலே நவமாய்ப் பிறப்பிக்கத்தக்க சூரியனானது வல்லதாயிருக்கிறதென்று மாத்திரம் நிச்சயம் பண்ணலா மொழியச் சூரியனானது [illegible] உத்தராயன [illegible] முதலான ருதுக்களைப் பண்ணிக் கொண்டிருக்கிற தென்றும் மேகமாருதமுதலானதுகளுடைய [illegible] யிருக்கிறதென்றும் விருக்ஷாதி ஸ்தாபர வஸ்துகளுக்குச் சூரியனானது மிகவு முபயோகமா யிருக்கிறதென்றுஞ் சொல்லப்படாத வேகத்தோடு அறுபது நாழிகைக்குள்ளே பூமண்டலமெல்லாம் இடைவிடாமல் சுற்றிக்கொண்டு வருகிறதென்றும் சூரியனிடத்திலே யித்தொகைப்பட்ட வேறே அனேகம் பெருமைகளுண்டாயிருக்கிறதென்றும், சுவர்ணாதி ரத்தினங்களுடைய தெரிசனமானது அறியப்பண்ணலாமென்றும் மூடமதிகெட்டவன் சொல்லுவானொழியப் புத்திமானாயிருக்கிறவன் அப்படியொருநாளுஞ் சொல்லவு மாட்டான்.

அத்தன்மைப்போலே வுண்டாக்கப்பட்ட [illegible]ப்பட்ட யாவுங் கொண்டிருக்கிற ஆகுதல் பெலம் இது முதலான பெருமைகளைப் பத்தும் பத்தாய்ப் பார்க்கும்போது சர்வேஸ்வரனுக் குண்டானதா யிருக்கிற ஆகுதலாகிற அளவறுக்கப்படாத சகல நன்மைகளுக்கு உண்டாக்கப்பட்ட சகல பொருட்களினிடத்திலே யுண்டாயிருக்கிற ஆகுதல் பெருமைகளுக்கு முகிவில்லாத தாரமுண்டா யிருக்குமென்று உண்டாக்கப்பட்ட பொருள்களெல்லாங் காணப்பட்டாலும் அப்படிப்பட்ட தெரிசன நிமித்தமாகக் காரணமான சர்வேஸ்வரனுடைய ஸ்திதியைப் புத்திமானாயிருக்கிறவன் நிச்சயம் பண்ணிச் சர்வேஸ்வரனிடத்திலே உத்தம பிரகாரமாக ஆகுதலுண்டா யிருக்கிறதென்றும் சர்வேஸ்வரனானவர் நமக்கு மிகவுங் கீழ்த்தரமாயிருக்கிற நவமான ஆகுதலைப் பிறப்பிக்கிறதுக்கு வல்லவரா யிருக்கிறாரென்றும் இத்தன்மையுள்ள அந்தஸ்திலே விளங்கியிருக்கிற சில திவ்விய விசேஷ மகிமைமாத்திர முண்டாக்கப்பட்ட பொருள்களுடைய தெரிசனத்து நிமித்தமாகப் புத்திமானா யிருக்கிறவன் கண்டுபிடிக்கிறதுக்கு வல்லவனாயிருக்கிறானொழியச் சர்வேஸ்வரனிடத்திலே யிருக்கிற பரமரகசியமாகிற திரித்துவமும் அவர் நடத்துகிற அளவறுக்கப்படாத [illegible] ளுமறிஞருக்குக் கெட்டாததா யிருக்கிற வெண்ணப்படாத வேறே பரமரகசிய

விசேஷங்களுஞ் சர்வேஸ்வரனிடத்திலே யிருக்கிறதென்றும் உண்டாக்கப்பட்ட சகல பொருட்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிற வுண்டாக்கப்பட்டவான புத்தியென்னப்பட்டதாவது கண்டுபிடிக்கிறதுக்கு வல்லதாயிருக்கமாட்டாது. இந்தச்சத்திய விசேஷத்துக்கு அடுத்த பிரசங்கத்தைச் சித்தியசீவன் சத்வாபமென்கிற புத்தகத்திலே வியாக்கியானம் பண்ணினோம். அவ்விடத்திலே இந்தச் சத்தியம் விளங்கிறதுக்குச் சொல்லப்பட்ட விசேஷங்கள் தவிர இந்தச்சத்திய விசேஷமானது இன்னமதிகமாக விளக்கிக் காண்பிக்கவேணுமென்றுகவமாக வேறே சிலவிசேஷங்களை இவ்விடத்திலே வெளிப்படுத்தக் கடவோம். அப்படிப்பட்ட விசேஷங்களுடைய நிச்சயமானது அழிந்துபோகிற சரீரத்துக்கு மாத்திரையாயிருக்கிற ஞானமுள்ள சீவனானது இந்தலோகத்திலே யிருக்கிற நாள்மட்டுஞ் சருவேஸ்வரனையறியத்தக்க அ[illegible]டீனதுமெய்மாத்திரமென்று சொல்லப்பட்டதாயிருக்கலாமென்றுங் கண்டுபிடிக்கிறதுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

அதெப்படியென்றால் மனுஷியனானது ஞானமுதலாயி விருத்திகளுக்குக் காரணமாயிருக்கிற புத்தியுடைத்தாயிருந்தாலும் அழிந்துபோகிற சரீரத்தோடேகூடச் சம்பந்தித்திருக்கிறதென்றுபார்த்துக்கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சரீர அவஸ்தை ஞானமுடைத்தான சீவனுக்கு வுண்டாயிருக்கையிலே அப்படிப்பட்டவையுடன் [illegible] விதமுள்ள [illegible]தைச் சீவனானதுகொண்டிருக்கிறதுக்குத் தப்பில்லாக்கமுறை [illegible] சுகலத்தையுமடத்துகிற கர்த்தானவர் கட்டளையிட்டருளினாரென்கிற [illegible]ஞானமுள்ள கிரமத்துக்கேற்றிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அதெதென்றால் [illegible] யிருக்கிற [illegible]னுள்ளவிதம், [illegible]னதுகண்ணோடேகூடக் கண்ணாடி [illegible] வைத்துக் [illegible]கிறவனு மிந்தயிருவிருந்தும் இரகவாசமும் சட்சுவிஷயத்திலேசுலோசன சாமீப்பியமுமென்கிற அவஸ்தை யிரண்டுமிருக்கிற நாள்மட்டு மவர்களிருவருடைய கண்ணானது விஷயங்களைக் கண்டுபிடிக்கிற மேனையை விசாரித்துக்கொண்டோமானால் கிரகத்துக்குண்டான பலகணிவழியாய்வந்து பூரலான பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் கண்ணிலேகிரகிக்கப்படுமொழிய பலகணிவழியாய் வந்தேறமாட்டாத பொருள்களுடைய பிரதிபிம்பங்களை யப்படிப்பட்ட கண்ணானது கிரகிக்கவல்லதாயிராததினாலே யப்படிப்பட்ட பொருள்களைக் கண்ணானது காணமாட்டாதென்கிற கிரமமாகும். அதெதென்றால் பொருள்களைக் கண்ணானது காண்கிறதிலே சொல்லப்பட்ட மேனையானது கிரகத்திலே அடங்கியிருக்கிற [illegible]யுடைய [illegible] கேற்றிருக்கிற காண்கிற விதமானது அதேகிரகத்திலேயிருக்கிற கண்ணுக்குக் காண்கிற மேனையாயிருக்கிறதென்று சொல்லத்தகுமொழிய மற்றொப்பில்லை. இதெல்லாஞ் சுவேர[illegible]ள்ள [illegible]களிடத்திலேயனேவாக யோசிக்கத்தக்கதாகும். அவ்வண்ணமே கண்ணினுடைய பிரதிபிம்பமானது கிரகத்தின் கவாக்ஷத்திலே பூரமலு கண்ணினிடத்திலே செவ்வையாக வந்தேறுததினாலே கண்ணானது யெதிராகத்தன்னை விஷயீகரித்துச் செவ்வையாகக் கண்டுபிடிக்கப்படாது. அத்தன்மைபோல ஞானமுடைத்தான சீவனானது கிரகமாகிற தனது அழிந்துபோகிற சரீரத்திலே மாத்திரையாயிருக்கிற நாள்மட்டுந் தனதுபிரதிபிம்பமானது பிரத்திப்பட்ட யிந்திரியங்களாகிற பலகணிவழியாய்வந்து ஆத்துமத்திலே பிரவேசிக்கமாட்டாததினால் ஞானமுடைத்தான சீவனானது அழிந்துபோகிற சரீரத்தினுடைய சம்பந்தமான யவஸ்தையானது யிருக்கிற நாள்மட்டும் ஞானமுள்ள சீவனானது சரீரத்துக்குத் தான் கொடுக்கிற பிழைப்பாகிற காரியத்தைப்பார்த்துக்கொண்டிருக்கிறதினாலே யப்படிப்பட்டபிழைப்புக்கு அநுவண்டாயிருக்கிறதென்றும்ப

படிப்பட்டசுபா[illegible] சொரூபத்தைக்கொண்டிருக்கிறதென்றும்பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கமாட்டாதென்றும் அனுபவசித்தியினாலேயறியப்படுகிறதென்று சொல்லத்தகும். [illegible]னுடையவாசக்கிரகமானது தெக்ஷணதிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிற கவாக்ஷத்தைக் கொண்டிருந்தால் உத்திராதிதிக்கிலே யுண்டாயிருக்கிற பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் தெக்ஷணதிக்கைப் பார்த்திருக்கிற கவாக்ஷவழியாய்வந்து பூரமாட்டாததினாலே யப்படிப்பட்ட கிரகத்துக்குள்ளே யிருக்கிற கண்ணானது தெக்ஷணதிக்கிலே யுண்டாயிருக்கிற பொருள்களைக் காணுகிறதுக்குவல்லதாயிருக்குமொழிய யுத்தரதிக்கிலே யிருக்கிற பொருள்களைக் கண்டுபிடிக்கிறதுக்கு யக்கண்ணானது பெலமுடையதாயிராது.

அப்படிப்போல கிரகமாகிற அழிந்துபோகிற சரீரமானது சரீரமாகிற திக்கைப் பார்த்திருக்கிற கவாக்ஷமாகிற இந்திரியத்தைக்கொண்டிருக்கிறதினாலே சரீரமாகிறதிலே யுண்டாயிருக்கிற சரீரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் அப்படிப்பட்ட யிந்திரியங்களென்கிற கவாக்ஷவழியாய்ப் பூரலாமென்கிறதுக்குத் தப்பாது. சரீரமில்லாத பொருள்களோவென்றால் கண்டிப்பு வன்னம் இதுகள் முதலான குணங்களை யுடைக்கொண்டிராததினாலே சரீரமில்லாத பொருள்களானதுகள் சரீரத்துக்கு யெதிரான திக்காகிற சரீரமில்லாத தனத்திலேயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலே சரீரத்துக்கெதிரான திக்காகிற சரீரமில்லாத தன்வகையிலே யடங்கியிருக்கிற சரீரமில்லாத பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் சரீரமாகிற திக்கைப் பார்த்திருக்கிற கவாக்ஷமாகிற இந்திரியங்களுடைய வழியாய் வந்து பூரமாட்டாததினாலே ஞானமுடைத்தான சீவனானது [illegible] கவாக்ஷங்களாகிற யிந்திரியங்களைக் கொண்டிருக்கிற கிரகமாகிற சரீரத்திலே யிருக்கிற நாள்மட்டுஞ் சரீரமுடைத்தான பொருள்களைப் பிரத்தியக்ஷமாய்க் காணுகிறதுக்கு வல்லதாயிருந்து சரீரமில்லாத பொருளைப்பண்ணிக்கொண்டு வருகிற காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறதினால் சரீரமில்லாத பொருள்களுண்டென்று ஞானமுள்ளசீவனானது நிச்சயம் பண்ணுமொழியச் சரீரமில்லாத பொருள்களின்னதென்றும் அதுகள் கொண்டிருக்கிற சுபாவசுரூபத்தையும் பிரத்தியக்ஷமாகவுஞ் சுமுத்திரையாகவுங் கண்டுபிடிக்கமாட்டாது.

அவ்வண்ணமே அஞ்ஞான கஷ்டத்தினாலே முழுது மதிகெட்ட பேர்கள் சரீரத்தின் கண்ணாலேயினது ஆத்துமத்தையுஞ் சருவேசுரனையுங் காணவேணுமென்கிற கருத்தான [illegible]ம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே முதிர்ந்த பயித்தியமாயிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகத்துக் கிடங்கொடாமலொப்புவிக்கப்பட்டதென்று சொல்லக்கடவோம். அதெதென்றால் அழிந்துபோகிற சரீரத்துக்குச் சம்பந்தித்திருக்கிற மனுஷசீவனானது சரீர அவஸ்தை நிமித்தமாகப் பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலேயாகிலுஞ் சுமுத்திரையான அறிக்கையினாலேயாகிலுஞ் சரீரமில்லாத பொருள்களைக் கண்டுபிடிக்கமாட்டாதபோதே யுண்டாக்கப்பட்ட சரீரமில்லாத பொருளென்னப்பட்டதெல்லாத்துக்கு முகிவில்லாத தாராமாயிருக்கிற பராபரவஸ்துவைப் பார்த்து அழிந்துபோகிற சரீரத்தின் அவஸ்தையைக் கொண்டிருக்கிற சீவனையுடைத்தான மனுஷனானவன் தப்பையும் நாயகியையும் [illegible] சரீரத்தின் கண்ணாலே காணுகிறாப்போலே அசரீரியான சர்வேசுரனைக் காண்பேனென்று சொன்னால் அப்படிப்பட்டவன் கனபர்வதத்தைக் கட்டிக்கொண்டு தனது முதிர்ந்தபயித்தியத்தைக் காட்டினதுமல்லாமல் தன்னைப் பரிகாசம் பண்ணுகிறதுக் கிடங்கொடுத்தாப்போலேயாகும்.

இதன்றியே சிவனைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறோமென்று சிலபேர்கள் லெச்சைப்படாமற் சொல்லிக் கொண்டு வருகிற வசனமானது முழுத் தப்பறை யென்று யிவ்விடத்திலே சொல்லப்பட்ட [illegible] லொப்பச்சொன்னாப்போலே யாச்சுது. அதேதென்றால் சிவனுடைய பிரதிபிம்பமானது சரீரத்துக்குண்டான இந்திரியங்களாகிற கிரக கவாக்ஷ வழியாகப் பிர[illegible] மாட்டாததினால் தனது சிவனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுவருகிறேனென்று சொல்லுகிறவன் விழித்துக்கொண்டிருக்கிறானோ, நித்திரைபண்ணிச் சொற்பனங் காணுகிறானோவென்று சொல்லுகிறதுக் கிடமுஞ் சந்தேகப்படுகிறதுக் கவகாசமுங் கொடுத்தாப்போலே யாகும். இதுதவிர அழிந்துபோற சரீரத்தோடே சம்மந்தித்திருக்கிற புத்தியுள்ள சீவனையுடைத்தான மனுஷனுக்கு கூடிவருகிற பிரத்தியக்ஷ தெரிசனத்தின் மேரையானது இன்னதென்று யிவ்விடத்திலே பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே [illegible]லாம். அதேதென்றால் விஷயத்தைக் கண்டுபிடிக்கிறவனுடைய சன்னிதானத்திலே விஷயமானது உண்டாயிருந்தால் அவனுடைய பாஹியேந்திரியத்தினாலே [illegible]ப்படுகிற அந்த விஷயத்தின் கிரகணமானது பூலோகத்திலே திரிகிற மனுஷனுக்கு கூடிவருகிற பிரத்தியக்ஷதெரிசனமென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப்படுகிற பொருளானது லோகத்திலே மெய்யாகவே யுண்டாயிருக்கவேணும். இதன்[illegible]ப் பொருளைப்பார்த்துக்கொண்டிருக்கிறவனிருக்கிற ஸ்தலத்திலே காணப்படுகிற பொருளானது கூடயிருக்கவேணும். ஆதலாலே [illegible]த்ல சன்னிதானத்திலே இருக்கிற அப்படிப்பட்ட பொருளானது சரீரத்துக்குண்டான பாஹியேந்திரியத்தினுடைய விருத்தியைக்கொண்டு கிரகிக்கப்படவேணும். இந்தமூன்று குணங்களோடேகூட [illegible]துவினுடைய விஷயதெரிசனமானது பூலோகத்திலே திரிகிற மனுஷனுக்கு வரலான பிரத்தியக்ஷதெரிசனமென்று சொல்லக்கடவோமொழிய மற்றபடியல்ல.

அதேதென்றால் சரீரத்தைவிட்டு யிருக்கிற அவி[illegible]தையுடைத்தான ஆத்துமாதி சரீரமில்லாத பேர்கள் பொருள்களைப் பிரத்தியக்ஷமா யறிகிற வகையை விசாரிக்குமிடத்தில் அதுவேறேவிதமா யிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆறாவித்தறுவாயிலே வெளிப்படுத்தத்தக்கதாக விஷயங்களை வெளிப்படுத்துகிறதென்கிறது கிரமமாயிராதென்கிறதினால் ஆறாவத்துவாயிலே, அதையினிமேற்சொல்லியித்தறுவாயிலே நடத்தத்தக்க விசேஷங்களைச் சொல்லி[illegible]டவோம். அதுகளை வெளிப்படுத்துகிறதினால் பிரதிப்பட்ட இந்திரியங்களிலேயிராத சாவேக்ரன முதலான பொருள்களும் புத்தியினாலே கிரகிக்கப்படுமேரையின்னதென்றும் அறிந்து முன்சொல்லப்பட்ட சந்தேகம் நிவாரணமாகும்.

இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட பிரத்தியக்ஷத்தின் மேரைதவிரப் பூலோகத்திலே திரிகிற மனுஷனானவன் வஸ்துவை யறிகிறதிலே வேறே விதமுள்ள அறிக்கையானது மனுஷனுக் குண்டென்று அனுபவசித்தியினாலே காணப்படும். அப்படிப்பட்ட அறிக்கையானது பிரத்தியக்ஷ தெரிசன மாகாதிருந்தாலும் வஸ்துரூப விஷயக சமுத்திரையான அறிக்கையென்றும் பொருள் விஷயக எதார்த்த கிரகணமென்றுஞ் சொல்லத்தகும். அப்படிப்பட்ட அறிக்கையானது மனுஷனிடத்திலே பிறக்கிற [illegible]தை வெளிப்படுத்தி அதினுடைய சுபாவ மேரையை யறியப் பண்ணக் கடவோம். அதேதென்றால் பிரதிப்பட்ட இந்திரியங்களைக் கொண்டு மனுஷனானவன் ஒருபொருளைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு பிடிக்கிறதினால் அந்தரங்கமான சத்தியாகிற யிந்திரிய

மும் ஞானவிருத்திக்குக் காரணமாயிருக்கிற புத்தியானதும் பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப்பட்ட பொருளினுடைய பிரதிபிம்பத்தைத் தங்களிடத்திலேபிறக்குமொழுங்குக்குத் தப்பாது. அப்படியே சிவனானது மூல இந்திரியத்தைக் கொண்டு பிரத்தியக்ஷமாய்க் கிரகித்த அப்படிப்பட்ட பொருளானது பிற்காலத்திலே காலஸ்தல சன்னிதானத்திலே யிராதிருந்தாலும் அந்தப்பொருள் விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமுண்டா யிருந்ததுக்காகப் புத்தியானது தன்னிடத்திலே பிறப்பித்த அந்தப்பொருளின் பிரதிபிம்பத்தைக்கொண்டு அப்படிப்பட்டபொருளைச் சமுத்திரையாக அறியுமென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. முற்காலத்திலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட பொருளானது இந்திரியத்தினாலே கிரகிக்கப்படக்கூடாத ஸ்தலத்திலே பிற்காலத்திலே யிருந்தால் அது ஸ்தலசன்னிதானத்திலே யிராதபொருளென்று சொல்லப்படும். பின்னையும் அப்படிப்பட்ட பொருளானது கால[illegible]னாற் காலசன்னிதானத்திலே யிராதபொருளென்று [illegible] சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பொருளைக் கண்டவனும் காணப்பட்ட பொருளும் காலஸ்தலத்திலேயும் ஏகஸ்தலத்திலேயுங் கூடயிருந்தால் அப்படிப்பட்ட பொருளானது கண்டவனுடைய ஸ்தலசன்னிதானத்திலே யிருக்கிற பொருளென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட வஸ்துவானது அவனாலே பரமயிந்திரியத்தினுடைய விருத்தியைக்கொண்டு கிரகிக்கப்பட்டால் அது அவனாலே பிரத்தியக்ஷமாய்த் தெரிசி[illegible] வஸ்துவென்று சொல்லக்கடவோம். இந்தப்படி யுண்டாயிருக்க[illegible]யதே முற்காலத்திலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட பொருளானது பி[illegible]காலத்திலே காலஸ்தலசன்னிதானத்திலே யிராமல் அந்தப்புத்தி[illegible]முத்திரையாக அறியுமென்கிற[illegible] அனுபவசித்தியானதே [illegible]யாயிருக்கும். அப்படியே பிரத்தியக்ஷமாக[illegible]ப்பட்டதுமா யிப்போது ஸ்தலசன்னிதானத்திலே யிராததுமாயிருக்கிற விஷயமானது [illegible]மாயறியப்படுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்னையும் [illegible]த்திருக்கிறவன் காலஸ்தல சன்னிதானத்திலே யிராதிருந்தாலும் அப்படிப்பட்டதை யறிந்துகொண்டு வருகிறோமென்கிறபோது அதை [illegible] சன்னிதானத்திலே யிராதபொருளை யறிந்தாப்போலே யாச்சுது. இப்ப[illegible] அறிக்கையானது பிரத்தியக்ஷ தெரிசனமாகாதே யிருந்தாலும் பொரு[illegible]கரித்து அதைச் சமுத்திரையாகக் கிரகிக்குமென்கிறதுக்குத் தப்பாது [illegible] அதுகாணப்பட்ட பொருளினுடைய அறிக்கையாக யிருக்கக்கொண்டு அது ஸ்மரணமென்றும் நினைவென்றுஞ் சமஸ்கார மென்றுஞ் சொல்லப்படும். மீளவும் பிரத்தியக்ஷ தெரிசனத்திலே அந்த அறிக்கையானது யிழுக்கப்பட்டாப்போலே யிருக்கிறதினாலேயும் ஸ்தலகால சன்னிதானத்தை அபேக்ஷியா திருக்கிறதினாலேயும் அக்கிரிஷஞானமென்கிற நாமமானது அதுக்குச் செல்லுமென்று சொல்லலாகும். அவ்வண்ணமே மனுஷனானவன் பிரத்தியக்ஷ[illegible]கிரிஷ ஞானமென்கிற இரண்டுவிதமுள்ள ஞானத்தைக்கொண்டு பொருளை யறியலாமென்று ஒப்பச்சொன்னாப்போலே யச்சுது அந்த இரண்டுவகையுள்ள ஞானத்தவிர வேறேயொருவகையுள்ள ஞானம் மனுஷனிடத்திலே யிருக்கிறதென்று [illegible]கொண்டிருக்கிறோம். இதுமுதலான அறியவேண்டின சிலவிசேஷங்களை வருகிற முப்பதாம்பாடத்திலே வெளிப்படுத்துவோம்.

௨௰-ம் பாடம்.

பூலோகத்திலே [illegible]கிற மனுஷனானவன் பொருளையறிகிற மேரையிலே பிரத்தியக்ஷ தெரிசனம் அக்கிரிஷ ஞானம என்கிற இரண்டுவகையுள் யறிக்கைக் ளைப் போனபாடத்திலே வெளிப்படுத்தினப்போலே யாச்சுது. இத்தயிரண்டுவகை யுள்ள ஞானந்தவிர அழிந்துபோகிற சரீரத்தைக் கொண்டிருக்கிற மனுஷனுக்கு வேறேவிதமுள்ள ஞானமுண்டாயிருக்கிறதென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதுக்குச் சத்தஞானமென்கிற நாமதேயமானது [illegible]மென்று சொலலத்தகும். அதெப்படியென்றால் கண்ணைக்கொண்டுகாணுந் பொருள்கள் உண்டென்று நம்முடைய காதிலே கேட்கப்பட்டால் நம்முடைய புத்தியானது அதைத் தனதாக் கிரகிக்கு மென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனால் அதைப் புத்தியானது கிரகிக்கும் விதத்தை விசாரிக்கு[illegible]த்தில், முதகாலத்திலே பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட விஷயங்க ளிடத்திலே நின்று பலபல [illegible]திபிம்பங்களைப் புத்தியானது யெடுக்கிற மேரையாகத் தன்னிடத்திலே பிறப்பித்து அப்படிப்பட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு காதால்கேட்ட பொருளின்னதென்று புத்தியானது ரூபிகரித்துக் கிரகிக்கும். அவ்வண்ணமே உரோமாபுரியைக் காணாதவன் [illegible]ரோமாபுரி [illegible] கொத்ததென்றும் கோட்டையெந்தப்புறத்திலே [illegible]க்கிறதென்றுங் கேட்கும்போது அப்படிப்பட்டவன் தான் பிரத்தியக்ஷமாய்க் கண்ட பட்டணங் கோட்டை முதலானதுக ளிடத்திலே [illegible] பிரதிபிம்பங்களை வாங்கிற மேரையாக யெடுத்து அப்படிப்பட்ட பிரதிபிம்பங்களைக் கொண்டு உரோமாபுரியையறிவான். இப்படிப்பட்ட ஞானம் [illegible]யான [illegible]நபத்தினயிக்கையா யிராமல் மெய்யாகவே உரோமாபுரி விஷயகஞானமாயிருக்கிறதென [illegible]சொல்ல வேண்டியிருந்தாலும் அப்படிப்பட்ட ஞானத்தின் நிமித்தமாக ரோமாபுரியின் ரூபமானது சுமுத்திரையாகக் கிரகிக்கப்படுகிறதில்லை. [illegible] [illegible] விஷயக சுமுத்திரையான அறிக்கை யென்கிற நாமமானது அதுக்குச் செல்லாமல் சிரவணத்தினாலே அது பிறந்ததினால சத்தஞானமென்று சொல்லலாகுமென்கிறதுக்குச் சந்தேகப்படக் காரணமில்லை.

இப்படிப்பட்ட சத்தஞானமானது [illegible] விதமாகப் புத்தியிடத்திலே ஜெனிக்குமென்று பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது யெவ்விதமென்று விசாரிக்கும்போது ஆத்தும முதலான சரீரமில்லாத பொருள்களும் பிரகிருதி முதலான குணங்களு முண்டென்று கேட்கும்போது புத்தியானது சரீரமில்லாத பொருட்கள் முதலானதுகளின் [illegible]ரமென்று கண்டு பிடிக்கிறதுக்குக் காணப்பட்ட வஸ்துவுக்குள்ளே விதைபோலே யென்று [illegible]கிறதுக்கு உடலாகமாயிருக்கிற பொருளில்லாததினால் சரீரமில்லாத ஆத்தும முதலான பொருள்களின் படிக்கொத்ததென்று அறிகிறது மிகவும் அருமை யென்கிறதுக்குத் தப்பாது. [illegible] லே பூலோகத்திலே இருக்கிற மனுஷனானவன் இப்படிப்பட்ட அசரீரியான பொருள்களை யறிகிற மேரை மரியாதையானது அப்பாலது [illegible] கொள்ளத் தக்கதாகும். அதெப்படியென்றால் சரீரமில்லாத பொருளாகிற சர்வேசுரன் முதலான அசரீரியான வஸ்துக்க ளெப்படிக்கொத்த சுபாவ சொரூபத்தைக் கொண்டிருக்கிறதென்று அறியத்தக்கதாக மனுஷனானவன் தன்னால் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்ட பொருள்களுக்குள்ளே சரீரமில்லாத பொருள்களுக்குச் சரிதுல்லியமான பொருளில்லாததினாலே அப்படிப்பட்ட சரீரமில்லாத பொருள்களை அறிகிற மேரையானது மிகவும் அருமையுள்ளதாயிருக்கும்.

அது விசாரிக்கும்படிக்குச் சரீரமில்லாத பொருள்களாகிற சர்வேசுரன் முதலானதுகளை மனுஷர் புத்தியானது அறிகிற மேரை மரியாதையைச் சர்வேசுரனை அறிகிற மேரையின் பேரிலேயாமோ பித்து அதைக்கொஞ்சத்துக்குள்ளே வெளிப்படுத்தக் கடவோம். அதுயிரண்டு விதத்திலே [illegible]டங்கியிருக்கிறதென்று சொல்லத்தகும். அதில் முந்தினவகைக்கு விஞபூத வகை யென்று சொல்லவேணும். அதாவது வஸ்துவாகிற சர்வேசுரனிடத்திலே [illegible]கின்ற அந்தந்த விசேஷத்தைத் தள்ளத்தக்க மேரையாகத் தள்ளிப்பண்ணப்படுகிற நிரூபணமானது விஞபூத மேரையாகத் தேவவிஷயக ஞானமென்று சொல்லப்படும். அதெப்படியென்றால் பராபரவஸ்துவை நிரூபணம் பண்ணுகிறதிலே [illegible]டத்தக்க முந்தின அடைவேதெனில் சர்வேசுரனானவர் காரணமுள்ளவரல்ல, அதிய மக்கமுமுள்ளவரல்ல, சரீரியானவரல்ல, அவ்விதமுள்ள பொருளல்ல. இப்படிப்பட்ட வேறே அனேகம் வகைகளாகச் சர்வேசுரனானவர் [illegible]ரூபிக்கப்படுகிறபோது அது சர்வேசுரனுடைய மெய்யான நிருபணமாயிருந்து விஞபூத மேரையுள்ள சிரவசனமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட சிரவசனத்தைப் பண்ணுகிறவன் சர்வேசுரனைமேலெழுந்தவாரியா யொருபிரகாரமாகக் கிரகித்தாலும் அவரைமெய்யாகக் கிரகிக்கிறானென்று சொல்லவேணு மொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால் அவன் [illegible]ர்வேசுரன் இன்னதென்று சுத்தமாய்க் கிரகியாமலிருக்கிறானென்றுஞ் சொல்[illegible]ப்படாததினால் அவன் மெய்யான நிருபணம் பண்ணுகிறானென்று சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட நிருபணத்தில் கிடைக்கிற ஞானமானது சர்வேசுரனை [illegible]ப்பக ஞானமாயிருக்கிறதென அப்படிப்பட்ட ஞானத்தின் நிமித்தமாகச் சர்வேசுரன் அறியப்படுகிறாரென்றும் அது சத்தியமான ஞானமாயிருக்கிறதென்று சொ[illegible]ருந்தாலும் இருட்டியேயுண்டாயிருக்கிற விஷயத்தின் பேரிலே யொடுக்கைக்கிற கண்ணினுடைய பார்வைக்குச் சரியாயிருக்கிற அந்த ஞானமானது திவ்விய சுபாவத்தைக் குறையற்ற பிரகாரமாய்ச் சொன்னு நிருபா[illegible] ஞானமென்றும தேவவிஷயக தெளிவில்லாத ஞானமென்றுஞ் சொல்லப்படும். [illegible] விஷயத்திலே மேலெழுந்தவாரி அறிக்கையுஞ் சாமானிய ஞானமும் சாங்கரிய மேரையுள்ள கிரகணமும் இத்தொகைப்பட்ட நாமங்கள் அதுக்குச் செல்லுமொழிய மற்றப்படியல்ல.

தேவ விஷயத்திலே யுண்டானதுமிப்படிப்பட்ட விஞபூதமேரையுள்ள ஞானமுமல்லாமல் நிருபணமுந்தவிரச் சர்வேசுரனுடைய விஷயத்திலே அவிஞபூத நிருபணமும் அவிஞபூத மேரையுள்ள ஞானமும் உண்டாயிருக்கிறதென்று சொல்லக்கடவோம். அதெப்படியென்றால் தானாயிருக்கிற வஸ்துவாய்ப் பின்னபேதமில்லாமல் பரமார்த்த பலம் இதுகள் முதலான சகல நன்மைக[illegible] யேக ஏகனமையாயிருக்கிறதுமாய்ச் சகலத்துக்கும் அதிகாரனையானதுமாய்ச் சகல போர்களினாலே ஆராதிக்கப்படத்தக்க வருமாய அனேக ஸ்தோத்திரத்துக்குப் பாத்திரமுமாயிருக்கிறவரானவரென்று சொல்லக்கடவோமென்று சொல்லும்போது அவிஞபூத நிருபணமும் அவிஞபூதஞானமுமாயிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். இப்படிப்பட்ட விஞபூத நிருபணத்தினுடைய வகையும் அவிஞபூத ஞானத்தின்மேரையும் வெளிப்படுத்தக் குறிப்பிவேண்டின சிலவிசேஷங்களை வெளிப்படுத்த வேணும். அதில் முதலாவது விசேஷமாவது, தேவவிஷயக அவிஞபூத நிருபணத்திலே சொல்லப்படுகிற அனந்தமகிமையுள்ள விசேஷங்களென்னப்பட்ட யாவையும் பத்தாயிரத்தாய் விசாரிக்குமிடத்தில் உண்டாக்கப்படலான புத்தியுடைத்தான பொருள்களுக்குள்ளே யொருபொருளாகிலும் அப்படிப்பட்ட மகிமைகளைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதுக்குச் சுபாவபெலத்தினாலே வல்லதாயிருக்

மாட்டாதென்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம். அதேபோன்று ஒன்பதாக்கப்பட்டவான புத்திகளுக்குள்ளே வெப்பமுடைய கர்மமுள்ள புத்திகளின்னும் விஷயத்தைக் கண்டுபிடிக்கத்தக்கதாக அதுக்குச் சுபாவமாக வெளிச்செல்லத்தைப் பார்க்கும்போது அதுமுடிவுள்ள பெலமுண்டாயிருக்குமேயல்லாமல் மற்றப்படியல்ல. முடிவுள்ள பெலமுடைத்தான புத்திக்கும் முடிவில்லாத சகலத்தன்மையுடைத்தான கர்த்தனுக்கும் முடிவில்லாத தூரமுண்டாயிருக்கிறதினாலே அப்படிப்பட்ட முடிவுடைத்தானது புத்தியானது முடிவில்லாத பராபரவஸ்துவாகிற சர்வேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கிறதுக்கும் எதார்த்தமாய்க் குறைவற்றபிரகாரமாய் அவ்வொப்பிடக் [illegible] நோக்கவொன்று அதிசயிக்கிறதுக்கும் சுபாவபெலமுடைத்தானதாயிருக்கமாட்டாது.

அதெப்படியென்றால் சரீரசம்பந்தமாயிருக்கிற சக்ஷு முதலான இந்திரியங்களுக்குச் சரீரமில்லாத பொருள்களைக் கண்டுபிடிக்கிறதாரத்திலே காட்டிலும் முண்டாக்கப்பட்டவான புத்திக்குக் காணுகிறதில் பராபரவஸ்துவாகிற சர்வேசுரனுக்கும் மிகவும் மதிப்பில்லாத தூரமும் கனமான வித்தியாசமுமுண்டாயிருக்கிறதென்கிறது மதிகெட்டவனானாலுஞ் சந்தேகப்படமாட்டான். இப்படியிருக்கையிலே சக்ஷுமுதலான இந்திரியங்கள் தங்களுக்குச் சரீரமில்லாத பொருள்களுக்குமுண்டாயிருக்கிற சுவல்ப தூரத்தினிமித்தமாகச் சரீரமில்லாத பொருள்களைக் கண்டுபிடிக்கமாட்டாதபோதே புண்டாக்கப்பட்டவான புத்தியானதுக்குஞ் சருவேசுரனுக்குமுண்டாயிருக்கிற தூரத்தினிமித்தமாக உண்டாக்கப்பட்டவான புத்தி யென்னப்பட்ட [illegible] தனது சுபாவபெலத்தினாலே முடிவில்லாதவஸ்துவாகிற சருவேசுரனைக் குறைவற்றவிதமாகக் கண்டுபிடிக்கமாட்டாதென்று [illegible] சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க குன்றாத சத்தியமாகும். ஆனால் புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சருவேசுரனுமிற பொருளானது அடங்கியிருக்கிறதென்கிற மெய்யான வசனத்தினாலே சமமாயிருக்கிறதிலே செல்லும்படியல்ல [illegible] தன்னுடையதே போகிறதென்று வெளிப்படுத்தின்னக் கடவோமல்ல. அதெப்படியென்றால் சூரியனாகிற பொருளானது சரீரத்துக்குண்டான கண்ணினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யடங்கின பொருளாயிருந்தாலும் வவ்வாலென்று [illegible] டான குறைவுள்ள பெலமுடைத்தான கண்ணினாலே சூரியனைக் காணமாட்டாதென்றிருக்கையிலே சூரியனுடைய மிகுந்த பிரகாசத்துக்கும் அதைக்காணத்தக்க கொஞ்சமுள்ள பெலமுடைத்தான வவ்வாலுடைய கண்ணுக்குமுண்டாயிருக்கிற சுவல்பதூரத்தினிமித்தமாக வவ்வாலானது சூரியனைக் காணமாட்டாதென்றிருக்கிறபோதே புத்தியினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே சருவேசுரனிற பொருளானதடங்கியிருந்தாலும் அப்படிப்பட்ட முடிவில்லாத பிரகாசமாகிற சருவேசுரனுக்கும் அதைக்காணத்தக்கதாயப் பொருமென்கிற பெலமில்லாத புத்திக்குமுண்டாயிருக்கிற முடிவில்லாத தூரத்தினிமித்தமாக உண்டாக்கப்பட்டவான புத்தியென்னப்பட்டவையும் சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதுக்கு வல்லதாயிருக்கமாட்டாதென்று ஐயமற சந்தேகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஞாயமுள்ள [illegible] னால் புத்தியுடைத்தான பொருளானது தானறியத்தக்க விஷயத்தை யறிந்துவிசாரிக்கும்போது அப்படிப்பட்ட அறிக்கையினுடைய வேலையானது அறிகிறபொருளினுடைய சுபாவ வொருப்பத்தை யனுசரிக்குமேயல்லாமல் மற்றப்படியல்ல. ஆனபடியினாலே அறிகிறபொருளினுடைய சுபாவத்தின்மையும் அதற்கேற்றது மிகவும் கட்டியிருக்கிற விஷயத்தைப் புத்தியானது சுபாவபெலத்தினாலே குறைவற்ற விதமா

[illegible] கண்டுபிடிக்கமாட்டாதென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆதலாலே இதைத் [illegible] அறிகிற புத்தியானதும் அறியப்பட்டவான விஷயமானதும் இந்த இரண்டுமுண்டா[illegible]யிட்ட வஸ்துவாகியதன்றியே யிருந்து அறிகிறசடகினுடைய விஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே யறியப்பட்டவான பொருளடங்கியிருந்தால் ஒன்று ஒன்றைக் கண்டுபிடிக்கலாமென்று சொல்லலாகும். இதுதாரணமாகத் தானுயிருக்கிற பொருளாகிற சருவேசுரனுமுண்டாக்கப்பட்ட புத்தியானது மொருஅந்தஸ்திலேயிராமல் ஒன்றுக்கொன்று முடிவில்லாத தூரமுண்டாயிருக்கிறபோது தானுயிருக்கிற அந்தஸ்திலேயின்கிற பொருளாகிற சருவேசுரனை யுண்டாக்கப்பட்ட வஸ்துக்களுடைய அந்தஸ்திலே யிருக்கிற புத்தியானது தனது சுபாவபெலத்தினாலே சுமுத்திரையாகக் கண்டுபிடிக்கமாட்டாதென்று அங்கீகரிக்கக் கடவோம்.

இந்தச்சத்தியத்தை [illegible] மொருயுத்தியினாலே யொப்பச்சொல்லலாம். அதாவது மனுஷனுடைய ஆத்துமம் [illegible] னவிருத்திகளுக்குக் காரணமாகிற புத்தியுடைத்தான [illegible] பொருளுமாயிருக்கிறதினால் தனது சரீரத்தைவிட்டுப்பிரிந்தால் தன்னோடு சரீரமில்லாத பொருள்களையும் பிரத்தியக்ஷமாய்க் காணுமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட அசரீரியான பொருளாகிற ஆத்துமமானது அழிந்துபோகிறசரீரத்தோடே யிருக்கிற நாள் மட்டும் அழிந்துபோகிறசரீரத்தோடே கூடிச்சம்பந்தித்திருக்கிறதுக்காகத் தன்னையும் சரீரமில்லாத பொருள்களையும் பிரத்தியக்ஷ சுமுத்திரையாய்க் கண்டுபிடிக்கிறதுக்கு வல்லதாயிராது. இப்படியிருக்கையிலே மனுஷனுடைய ஆத்துமமானது அறிகிறவிதமென்னது ஆத்துமமானது தானே அழிந்துபோகிற சரீரத்திலேயிருக்கிற யந்தரத்தை யனுசரிக்கிறபோதே இந்திரியமுதலான புத்தியுடைத்தானபொருள்களுடைய பரிக்கையினுடைய அதுகளுடைய சுபாவசொரூபத்தை யனுசரிக்கிறதென்று சொல்லுகிறதுக்கு அதிகமான ஞாயமாயிருக்கிறதென்று சொல்லத்தகும். அவ்வண்ணமே உண்டாக்கப்பட்ட புத்தியானதுக் குண்டாயிருக்கிற அறிவு [illegible] அறிவினுடைய சுபாவசொரூபத்தைப் பின்சென்றுகொண்டு புண்டாக்கப்பட்ட வஸ்துவைக் கண்டுபிடிக்கிறதுக்கு வேறே விக்கினமில்லாவிட்டால் சுபாவ பெலமுள்ளதாயிருக்கிறதென்று சொல்லவேணு[illegible] மற்றப்படியல்ல.

சருவேசுரனென்று சுமுத்திரையாகக் கண்டுபிடிக்கிறதுக்கு உண்டாக்கப்பட்டவான புத்தியானது வல்லதாயிருக்கமாட்டாதென்கிற சத்தியத்தை முன் சொல்லப்பட்ட ஞாயத்தினிமித்தமாக இன்னம் அதிகமாய் வெளிப்படச் சொல்லலாம். அதெப்படியென்றால் மனுஷனுடைய ஆத்துமமானது தான் பிறைந்திருக்கிறதுக்குச் சரீரத்[illegible] அடுத்தியாத பொருளாயிருந்து தான் சடமாகிற புத்தியைக் கொண்டிருக்கிறதினால் தன்னைப்போலே சரீரமில்லாத [illegible] னத்தின் அந்தஸ்திலே யிருக்கிற சரீரமில்லாத பொருள்களைத் [illegible] தன்னிலே பிரத்தியக்ஷமாய்க் கண்டுபிடிக்கலாமென்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட ஆத்துமமானது அழிந்துபோகிற சரீரத்தோடே கட்டப்பட்டமேன்மைக்கிமித்தமாகச் சரீரமில்லாத பொருள்களைக்காட்டிலும் எவ்வளவாகிலும் கீழப்பொருளாயிருக்கவேண்டித் தனக்குச் சரியான சரீரமில்லாத பொருளின்னதென்று சுமுத்திரையாகக் கண்டுபிடிக்கமாட்டாதபோதே புத்தியுடைத்தானபொருளாகத்தானுண்டாக்கப்பட்டதினால் கொண்டிருக்கிற கனமான நீசத்தனத்தினிமித்தமாக முடிவில்லாத மேலாயாகத் தனக்கு மேலானதாயிருக்கிற சர்வேசுரன் எப்படிக்கொத்த சுபாவசொரூபமாயிருக்கிறாரென்று சுமுத்திரையாகத்

தன்னது சுபாவபலத்தைக்கொண்டு கண்டுபிடிக்கலாமென்று சொல்லவுங்கூடாது. இப்படிப்பட்ட ஞானசாட்சியாகிற புத்தியினாலே கண்டுபிடிக்கப்படு[illegible] சர்வேஸ்வரனை முழுதுமறிகிறவிட்ட பேர்கள் தங்களுக்கும் சாய்[illegible]க்கும் சாதாரணமாயிருக்கிற கல்லைக்கொண்டு கண்டுபிடிக்க[illegible]தேவனுடைய[illegible] ஆசைப்படுகிறார்கள். அவ்வண்ணமே மனுஷனானவன் பூலோகத்திலே திரிகிற காலம் மட்டும் அழிந்துபோகிற சரீரத்தின் அனவஸ்தையைக் கொண்டிருக்கிறதுக்காக முன்சொல்லப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே பராபரவஸ்துவைக் கண்டுபிடிக்கமாட்டானென்று[illegible]ச்சொன்னதுபோலே யாச்சுது. அந்தவண்ணமே முற்காலத்திலே பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கப்பட்ட வஸ்துவைப் புத்தியானது பிற்காலத்திலே சுழுத்தினையாக அறிந்து கண்டுபிடிக்கிறதுபோலே மனுஷனானவன் ஒருக்காலாகிலும் பிரத்தியக்ஷமாய்க் காணாத பராபரவஸ்துவை [illegible]யினுடைய மேரையாகக் கண்டுபிடிக்க மாட்டானென்கிறதுக்குத் தப்பிதம்.

கண்டுபிடியாய்ச் சுத்தஞானவிஷயத்தை[illegible]விசாரிக்கும்போது புத்தியானது பிரத்தியக்ஷமாய்க் காணாத வஸ்துவைக் கேட்டதினாலே அப்புறம்படிக்கு அங்கங்கே கண்டவிஷயங்களிடத்திலே இன்று பிரதிபிம்பங்களை யெடுக்கிற மேரையாக யெடுக்குமென்கிறதுக்குத் தப்பாது. சிலவேளையும் அறியத்தக்க அப்பிரத்தியக்ஷ விஷயங்களுடைய பிரதிபிம்பங்களுக்கு யொக்குறையச் சரியாயிருக்கிற பிரதிபிம்பங்களைக்கொண்டு பிரத்தியக்ஷமாய்க் காணாதவஸ்துவைக் கேட்டதினால் புத்தியானது கண்டுபிடிக்கிறதுபோலே பராபரவஸ்துவைக் கண்டுபிடிக்கலாமென்று சொல்லப்படாது. அதேதென்றால் ஞானப்படைக்கப்பட்ட வஸ்துக்களுக்குள்ளே தானுமிருக்கிற சருவேசுரனுக் குண்டான சொரூபத்துக்குச் சமான சொரூபத்தைக் கொண்டிருக்கிற பொருள்காணப்படாதனால் அனைபடியினாலே புத்திக்குண்டான இரண்டாம்வகையுள்ள சுத்தஞானத்தை விசாரிக்கக்கடவோம். அந்த ஞானத்தில் புத்தியானது சத்தமிபித்ததினாலே கண்டுபிடிக்கப்பட்ட வஸ்துவாகாது சொந்தசுபாவ சொரூபத்தைக் கொண்டிருக்கிறதென்று தானறிகிறதிலே காணப்பட்ட யந்தத்தவஸ்துவைப் பெருந்தவஸ்துபோலே யிருக்கிறதென்று சொல்லமாட்டாத தது வாசியிலே காணப்பட்ட வஸ்துக்களுக்குள்ளே பெருந்தவஸ்துவானது கண்டுபிடிக்கத்தக்க வஸ்துவுக்குச் சமீபமாயிருக்குமோ அந்தவஸ்துவினுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு யறியத்தக்க அப்பிரத்தியக்ஷமான வஸ்துவை யறியுமேயொழிய மற்றப்படியல்ல, அதேதென்றால் சரீரமில்லாத பொருளை இந்தலோகத்திலே மனுஷபுத்தியானது யறியும்போது அப்படிப்பட்ட சரீரமில்லாத பொருளைப் பிரத்தியக்ஷ தெரிசனமாய் மனுஷபுத்தியானது காணத்தக்கதுமில்லை, பிரத்தியக்ஷமாய்க் காண கண்டுபிடிக்கிற வஸ்துக்களுக்குள்ளே பொருவஸ்துவைப்போலே சரீரமில்லாத பொருளானது [illegible]வென்று சொல்லவுங்கூடாது. ஆகையாலே காணப்பட்ட வஸ்துக்களுக்குள்ளே பெருந்தவஸ்துவானது சரீரமில்லாத வஸ்துவுக்குக் கிட்டயிருக்குமோ அந்தவஸ்துவினுடைய பிரதிபிம்பத்தைக்கொண்டு சரீரமில்லாத வஸ்துவைக் கண்டுபிடிக்குமென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே பிரத்தியக்ஷமாயறியப்பட்ட வஸ்துக்களுக்குள்ளே காற்றும் ஆகாசமுஞ் சுசுமமாகையாலும் சரீரமில்லாத பொருள்களுக்கு [illegible]காயத் [illegible]யிருக்கிறதினால் அக்காற்றும் ஆகாசமும் [illegible]வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு சரீரமில்லாத பொருளைப் புத்தியானது யறியுமேயொழிய மற்றப்படியல்ல. அப்படியே சரீரமில்லாத பொருள்களைப் புத்தியானது தன்னுடைய கையிலே யதுகளைத் தானவென்னுகிற ஆசையானது சரீரமில்லாத பொருள்களுக்கும் ஆகாசமுமா யிராதிருக்கிறதுனாலும் சரீரமில்லாத பொருளைத் தானறிகிற

[illegible]க்கு வேறேசுழுத்தினையான பிரதிபிம்பங்களைக் காணுகதினால் அச்சரீரமில்லாத பொருள்களுக்கு யதிகமாகக் கிட்டியிருக்கிற காற்றுஆகாசம் முதலான வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு புத்தியானது சரீரமில்லாதபொருளை யறியக்கடவதென்று சொல்லிச் சரீரமில்லாத வஸ்துக்களையறிகிறதிலே தனக்குண்டான தப்புத்திரக்கிறதுபோலே காற்றும் ஆகாசமுமாயிராத யசரீரியான பொருளைப் புத்தியானது இந்தவகையாகக் கண்டுபிடிக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல,

இப்படிப்பட்ட ஞானமானது சரீரமில்லாதபொருளை விஷயீகரிக்கிற ஞானமுமாய்ப் பொய்யில்லாத மெய்யான யறிக்கையாயிருந்தாலும் அந்தகாரத்திலே யிருக்கிற விஷயத்தைக் கண்ணானது காண்கிறதுபோலே சரீரமில்லாத[illegible]ருளின் சுபாவ சொரூப[illegible]படிக் கொத்ததென்றும் அதினுடைய மேரையான தின்னதென்றும் அ[illegible] ஞானத்தை நிமித்தமாகத் தெளிவோடு குறையற்ற விதமாகச் சுழுத்தினையாய்ப் பூலோகத்திலேதிரிகிற மனுஷனாலே கண்டுபிடிக்கப் படுகிறதுமில்லை. இந்தவகையாக வுண்டாக்கப்பட்டதான புத்தியென்னப்பட்ட யாவுஞ் சருவேசுரனாலே யுண்டாக்கப்பட்ட பொருளைப் பார்த்து அதுகளுக்கு ஆதிகாரணமான கர்த்தனுண்டாயிருக்கவேணுமென்று நிச்சயம் பண்ணுமென்கிறதுக்குத் தப்பாது. அதுதவிர அந்தப் பொருளிடத்திலே யுண்டாயிருக்கிற ஞானமுதலான [illegible]ன்மைகளைப் புத்தியானது பார்த்து அனவஸ்தைதோஷம்வராதபடிக்கு அப்படிப்பட்ட தன்மைகளெல்லாம் ஆதிகாரணமாயிருக்கிற சருவேசுரனுக்[illegible]வசியமான சுபாவமாயிருக்கிறதென்று யங்கிகாரம்பண்ணும், [illegible]தன்மையென்னப்பட்ட யாவும் சருவேசுரனுக்குச் சுபாவமாயிருக்கிறபோதே யந்தத்தன்மைகளெல்லாம் வேறொருத்தன் கையிலே வாங்கப்பட்டதா [illegible] அதிலே மட்டுக்கட்டிக்கொண்டு வருகிறவனில்லையென்று சந்தேகமற்றவாமல் அப்புத்தியானது கண்டுபிடித்தாலும் கண்டுபிடிக்கத்தக்க இவ்விஷயங்களையானது எப்படிக்கொத்ததென்று சுபாவமாய்க் கண்ணால் காணப்பட்ட தன்மையினுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு சருவேசுரனையறியுமேயொழிய, மற்றப்படியல்ல, அவ்வண்ணமே அழிந்துபோகிற மனுஷசரீரத்தோடே சம்பந்தித்திருக்கிற ஆத்துமாவானது தான் பிரத்தியக்ஷமாய்க் கண்டபொருளினுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு சருவேசுரனை ரூபிகரித்து அவரைக் கரைகாணாத பிரகாசம்போலவும் அளவறுக்கப்படாத கருணைக்கடலைப்போலவு மித்தோஷப்பட்ட சரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு பூமியிலேயிருக்கிற மனுஷனானவன் சருவேசுரனை அறிந்துகொள்ளுவானேயொழிய மற்றப்படியல்ல.

சரீரமில்லாத சம்மனசாகிற பொருளை [illegible]ன்றால் சரீரமுள்ள பொருள்களைத் [illegible]டிலும் உத்தமபொருளாகிற தன்னை[illegible] சரீரமில்லாத வேறே வஸ்துக்களையும் பிரத்தியக்ஷமாய்க் கண்டிருக்கிறதிலே அப்படிப்பட்ட உத்தமவஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களுடைய உதவி[illegible]க்கொண்டு சருவேசுரனை யறியுமென்கிறதுக்குத் தப்பாது. அனைபடியினாலே மனுஷனிடத்திலே யுண்டாயிருக்கிற தேவவிஷயக ஞானத்தைக்காட்டிலுஞ் சரீரமில்லாத சம்மனசுகளாகிற பொருள்களுக்குண்டாயிருக்கிற தேவவிஷயக ஞானமானது மிகவுமுத்தம ஞானமாயிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. மனுஷனுக்குண்டான தேவவிஷயக ஞானத்தை விசாரித்தோமானால் கீழாயிருக்கிற சரீரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களுடைய சகாயத்தினாலே அதுபிறந்த

ஞானமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. சரீரமில்லாத பொருள்களுக்குண்டான தேவவிஷயக ஞானமேயென்றால் சரீரியான பொருள்களைக் காட்டிலும் மிகவுமுத்தமமானதுகளாயிருக்கிற அசரீரியான பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு அப்படிப்பட்ட ஞானம் ஜெனிக்குமொழிய [illegible] தப்பாது சரீரமுள்ள பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக் காட்டிலும் சரீரமில்லாத பொருள்களுடைய பிரதிபிம்பங்களானதுகள் மிகவுமுத்தமமானதுகளாயிருக்கக்கொள்ளச் சரீரமுள்ள பிரதிபிம்பங்களுடைய உதவியைக்கொண்டு மனுஷனிடத்திலே யுண்டாகிறுந்த தேவவிஷயக ஞானத்தைக் காட்டிலும் சரீரமில்லாத பொருள்களுடைய பிரதிபிம்பங்களைக்கொண்டு சரீரமில்லாத பொருள்கள் தங்களிடத்திலே பிறப்பிக்கிற தேவவிஷயக ஞானமானது மிகவுஞ்சிலாக்கியமாயிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

௨௯ இப்படியிருக்கையிலே மனுஷனுக்குண்டான தேவவிஷயக ஞானமுஞ் சரீரமில்லாத பொருள்களையும் தேவனை விசேஷிக்கிற மகிமையும் ஒன்று ஒன்றைக்காட்டிலும் உத்தமமாயிருக்கிறதுக் கிவ்விய சுபாவசொரூபமான [illegible] கொத்ததென்று ஞாயத்தவிசாரமாக முன்சொல்லப்பட்ட ஞாயத்திருலே யுண்டாக்கப்பட்ட புத்தியினுலே சமுத்திரமாயாகக் கண்டுபிடிக்கலாமென்று சொல்லவுங் கூடுமோ, [illegible] பாபாடவல்லவிடத்திலே மகிமைக்கப்பட்டிருக்க பரமாத்மியமானதில் [illegible] அளவுமுமாய அதிக்கமும் புத்திக்குள்ளே படாத இவைகள் [illegible] பனத்தமுமுள்ள விசேஷங்களுஞ் சமுத்திரமாயாகப் பெட்படியொத்து [illegible] மோக்ஷமாகிற தேவவிஷயக பிரத்தியக்ஷதரிசனத்திலே சமுத்திரமான [illegible] மேலாயாய்க்கண்டு பிடிக்கப்படுகிறதொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது யுண்டாக்கப்படலான புத்தியின் [illegible] பிறக்கமாட்டாமல சருவேசுரன் தானே பிரதான காரணமேலாயாக அந்தயுண்டாக்கப்பட்ட புத்தியிடத்திலே பிறப்பிக்கிறுர். ஆதலாலே திவ்விய பிரகாசத்தினுலேதனது சுபாவத்துக்கு மேலாக யுயர்த்தப்பட்ட புத்தியானது தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்துக்கு பெற்றினகாரணமாயிருக்க சருவேசுரன் தானே [illegible] தெரிசனத்துக்குப் பிரதான காரணமாயிருக்கிறுரென்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும்.

அவ்வண்ணமே பெற்றின பிரதான காரணங்களுடைய மேலாயாக அப்படிப்பட்ட பிரத்தியக்ஷ தெரிசனமானது தனக்குப்பெற்றின காரணமாகிற யுண்டாக்கப்பட்ட புத்தியின் [illegible] யும் அத்தன்மையிலேயுமிராமல் தனக்குப் பிரதான காரணமாகிற சருவேசுரனுக்கு பெற்றின யுண்டாக்கப்பட்டான பொருளின் சுபாவத்துக்கு மேலான [illegible] வைக்கப்பட்டிருக்க [illegible] ஞானமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினுலே திவ்விய பிரகாசத்தினுலே யுயர்த்தப்பட்ட புத்தியானது தன்னிடத்திலே அப்படிப்பட்ட திவ்விய தெரிசனத்தை பெற்றின காரணமேலாயாக யுண்டாக்கி அப்படிப்பட்ட தெரிசனத்திலிருக்குமாகச் சகலவல்லபமான பராபரனுடைய சுபாவசொரூபத்தை மிகவுண்ணதமாய் பிரத்தியக்ஷ தெரிசனமாய்க் கண்டு பிடிக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட தெரிசனமானது சருவேசுரன் திருத்துவமாயிருக்கிறதைக் காணுகிறதிலே மேலாயாகத் தனக்கு ஆதாரமாயிருக்கிறபடியே சருவேசுரன் தனக்குப் பெற்றின காரணமாயிருந்தாலும்

யதுக்குத் தெரிசிக்கிற நாமத்தைக் கொடுக்குமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே அப்படிப்பட்ட பிரத்தியக்ஷதரிசனமானது தெரிசிக்கிறதென்கிற நாமத்தைத்தனக்குப்பிரதான காரணமாகிற சருவேசுரனுக்குக் கொடாமல் தெரிசிக்கிறதென்கிற நாமத்தைத் தனக்குப்பெற்றின காரணமுமாய் ஆதாரமுமாயிருக்கிற யுண்டாக்கப்பட்ட புத்திக்குக் கொடுக்கிறதொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமானது யுண்டாக்கப்படலான புத்தியின் சுபாவத்துக்கு மேலானதாயிருக்குமாப்போலே யதார்த்துவழியாயிருக்கிற தேவவிஷயக விசுவாசமும் யுண்டாக்கப்படலான பொருளின் சுபாவபெலத்தினுலே சாத்தியமாயிராது. அவ்வண்ணமே தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமும் அதுக்குண்டாகிற எதார்த்த விசுவாசமும் மேற்தன்மை யிரண்டையு முண்டாக்கப்படலான புத்தியுடைத்தாகப் பெற்றுக்கொள்ளுகிறது விசேஷமான திவ்விய கிருபையினுலேயுண்டாயிருக்கிறதென்று சொல்லக்கூடுமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினுலே தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்தின் மேலாயை வெளிப்படுத்துகிற அக்குறைவில்லை விசேஷதிவ்விய பிரசாதத்தினுலே மாத்திரம் இப்படிக்கொத்ததன்மைக்குண்டாக்கப்பட்ட பொருளுக்கு வருமொழிகிற வசனத்துக்கு அர்த்தமின்னதென்று வருகிறபாடத்திலே வெளிப்படுத்துவோம்.

தயாபரனுன கர்த்தரானவர் குறையற்ற பாக்கியமென்கிற மோட்சத்தை மனுஷனானவ னடைகிறதுக்கு மனுஷனை யுண்டாக்கினுரென்று பிரபஞ்ச தொடக்கம் பாடத்திலே சொல்லப்பட்டதே. அப்படி குறையற்ற பாக்கியமென்கிற மோட்சமும் அதுக்கு வழியாகிற தேவவிசுவாசம் முதலான புண்ணியங்களும் மனுஷசுபாவத்துக்கு மேலான தன்மையென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே கர்த்தருடைய சவுந்தரியமும் வெளிக்கபெருமையையும் [illegible] விளங்கிலே மனுஷனுக்கு வருகிற ஞான அலங்காரங்களு மிது முதலான [illegible]கள் மனுஷசுபாவத்துக்கு மேலான [illegible] தரியாயிருக்கிற [illegible] பிரமாணமாக மனுஷசுபாவத்துக்கு மேற்பட்டிருக்கிற [illegible] குறையற்ற பாக்கியமென்கிற மோட்சமானது அதுக்கு வழியாகிற தேவ[illegible] விசுவாச முதல் குறையற்ற தரும சாஸ்திரங்களு மனுஷசுபாவத்துக்குச்சரி மேலாயாக வரத்தக்க தன்மையென்று சொல்லவுங்கூடாது. இது காரணமாக மனுஷனானவன் தனக்குண்டான சுபாவபலத்தினுலே இப்படிப்பட்ட குறையற்ற நன்மையைப் பேறுபெற நடைகிறதுக்கு வல்லவனுயிராமல் அப்படிப்பட்ட நன்மையினுடைய முன்னதமான அந்தவத்தை மனுஷனானவன் அடைகிறதுக்குத் தயாபரனுன கர்த்தரானவர் விசேஷகிருபை அவனுக்குப் பண்ணவேண்டியிருக்கிறதுக்குச் சந்தேகப்படக் கடவதல்ல.

இத்தருவாயி லொரு விசேஷரகசியமானது [illegible] கவும் அறியவேண்டினதாகும். அதாவது கர்த்தனுடைய விசேஷகிருபைய [illegible] முடைய [illegible] னமான மாத்திரையிலே வுத்தமவகையும் இதுகள் [illegible] எந்த விசேஷமு சொல்லப்படுமென்று தெளியத்தக்கதாகும். [illegible] ஞல இதிலே சந்தேகப்படுகிறதுக்கு அவகாசமாவது மனுஷனானவ [illegible] [illegible] வருகிறதுக்கும் பிழைத்துத் திரிகிறதுக்கும் இது முதலானதுகள் சகலத்துக்குஞ் சர்வேஸ்வரனுடைய கிருபைவேண்டியிருக்கு மென்று சொல்லக் கடவோமொழிய மற்றப்படியல்ல இது அனேக மாதா பிதாவை ரக்ஷிக்கிறதென்கிற தும [illegible] னைகள் [illegible] ருக்கிறதைப்பார்த்து அப்படிப்பட்ட ஜனங்களுக்குச் சுபாவமாக [illegible] ஜனங்களை யொருவிதமாயிரக்ஷித்துக்கொண்டு வருகிற தென்கிறதும் அவனவனுக் குள்ளது கொடுத்துவருகிற தென்கிறதும் மனுஷர் புத்திக்கொத்திருக்கிற [illegible] தென்கிறதும் ஆசாரிக்கப் புண்ணியமாகு மென்கிறதில் [illegible] சந்தேகப்படத் தேவையில்லை. ஆதலாலே இப்படிப்பட்ட புண்ணியங்களை மனுஷனானவன் கர்த்தனுடைய [illegible] பண்ணமாட்டாமல் அதுகளைக் கர்த்தனுடைய உதவியைக்கொண்டு [illegible] கொண்டுவருகிறனுெழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட யெளிதான ஆசாரிக்கப் புண்ணியங்களுண்டாகிறதுக்கு வேண்டியிருக்கிற விசாரங்களும் அதின்பேரில் மனசினுடைய ருசியாகிற பற்றுதலும் மனுஷனிடத்திலே யுற்பவிக்கப் பண்ணுகிற தென்கிறதும் இதெல்லாமிப்படிப்பட்ட புண்ணியங்களுண்டாகிறதுக்குக் கர்த்தன் பண்ணுகிற வுதவியென்று சொல்லப்படும்.

இதிலே யோசிக்கத் தக்கதாவது முந்தினதாயிருக்கிற நல்லவிசாரங்களை மனுஷனிடத்திலே கர்த்தரானவர் பிறப்பிக்கும்போது மனுஷனுடைய மனசானது அதுகளை வேணுமென்று சொல்லாமல் பிறப்பிக்கிறரொழிய

மனுஷனுடைய மனசானது சம்மதப்பட்டு அப்படிப்பட்ட விசாரங்களைக் கர்த்தரானவர் பிறப்பிக்கிற தில்லையென்று சொல்லக்கடவோம். ஆனபடியினுலே அப்படிப்பட்ட முந்தின நல்ல விசாரங்கள் புண்ணியத்தை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் கர்த்தனுடைய கிருபையென்றுசொல்லத்தகுமொழிய அப்படிப்பட்ட நல்ல விசாரங்களுக்குப் புண்ணியமென்கிற நாமமானது செல்லு மென்று சொல்லக்கூடாமல் அப்படிப்பட்ட நல்லவிசாரங்களை மனுஷனானவன் பாராட்டித்து ஞானபூர்வமாக அதுகளுக்குச் சுவாதந்திரியமுள்ள மனசைக்கொண்டு சம்மதப்படுகிற தென்கிறது மாத்திரம் புண்ணியமென்று சொல்லப்படு மென்கிறதுக்குத் தப்பாது.* அவ்வண்ணமே முந்தின நல்லவிசாரங்களானதுகளை பார்க்கும்போது புண்ணிய முண்டாகிறதுக்குக் கர்த்தன் பண்ணுகிற வுதவியென்கிறபெரும கிருப்பிரசாதமென்கிற நாமமும் அப்படிப்பட்ட விசாரங்களுக்குச் சொல்லப்பட்டு அதுகளுக்குச் சுவாதந்திரியமுள்ள மனசினுடைய சம்மதமானது புண்ணியமென்று சொல்லப்படும். இந்தவட்டவாகப்பாவவிஷயத்திலே யோசிக்கக்கடவோம். அதேதென்றால் மனசினுடைய சம்மதமில்லாமல் மனுஷனிடத்திலே பிறக்கிற பாவவிசாரங்க ளானதுகள் பாவமாயிராமல் அப்படிப்பட்ட பாவவிசாரங்களுக்கு ஞானபூர்வமாய்ச் சுவாதந்திரியமுள்ள மனசினுடைய சம்மதமானது, மாத்திரம் பாவமென்று சொல்லப்படுமொழிய மற்றப்படியல்ல. புண்ணியத்திலோ வென்றால் அச்சுவாதந்திரியமுள்ள மனசினுலே பண்ணப்படுகிற அங்கிகாரமானது கர்த்தன் திருவுளப்படியே பிறக்கும்போது அப்படிப்பட்ட கர்த்தனுடைய திருவுளத்தின் செயலானது துணையுள்ள வுதவியென்றும் கூட்டுகிறதிருக்கிற பிரசாத மென்றும் வித்தியாபாரகரா யிருக்கிறபேர்கள் சொல்லுவார்கள் [illegible] அப்படிப்பட்ட தேவப்பிரசாதம் மரணபரியந்தம் நீளி [illegible] அதுவே [illegible] பிரசாதமென்கிற நாமத்தைக்கொண்டிருக்கும். இவ்விய [illegible] திருவுளத்தின் [illegible] பிக்கிற அப்படிப்பட்ட மூன்றுசெயலானதுகள்புத்தியுடை [illegible] [illegible] ருனிடத்திலே யாதேயமாயிருக்குமொழிய மற்றப்படியல்ல.

இதெல்லாமிப்படி நடந்துவரச்செய்தே கேட்கப்படத்தக்க சந்தேகத்து க்கிடமாவது. மனுஷனுடைய வுற்பவத்துக்குங் கர்த்தனுடைய நானாவித மான செயல்களுக்கு முன்சொல்லப்பட்ட யெளிதான புண்ணியசரித்திரங்களுக்குஞ் சர்வேசுரனுடைய கிருபை யவசியமாய் வேண்டியிருக்கிறதென்று சொல்லு ம்போது குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை மனுஷனானவன் பேறு பெறுகிறதுக்கு வேண்டின விசுவாசத்தை யடைந்து அதற்கான புண்ணியங்களைப் பண்ணத்தக்கதாக மனுஷசுபாவத்துக்கு மேலான திவ்விய கிருபையும் உதவியும் விசேஷப்பிரசாதமும்வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறதுக்குக் காரணமேதென்று ஆராய்ந்து கொள்ளத்தக்கதாகும். இந்தரகசிய விசேஷமானது தெரியாதபடிக்கு அறியவேண்டின சத்தியமாவது சர்வேசுரனுடைய திருவுளத்தின் செயலினுலே பொருளென்னப்பட்டவைமுண்டாகிறதொழிய அப்படிப்பட்ட திவ்விய திருவுளத்தின் செயலில்லாமல் ஒருபொருளானாலு முண்டாக மாட்டாதென்பது குன்றாசத்தியமாகும். பாவமானது மாத்திரம் ஞானோபதேசத்தின் முதற்காண்டத்திலே சொன்னபோலே நீதிஞாயத்தின் குறையாகிற பொருளல்லாததா யிருந்து ஜனங்களுக்குண்டான பெலத்தின் குறையினுலே யுண்டாகிறதல்லால் அப்படிப்பட்ட நீதிஞாயத்தின் குறையாகிற பாவவுற்பவத்து

* பொருளாகாதது = பாவத்தை யொரு பொருளென்னப்படாது.

க்குச் சனங்களுடைய அற்பமானது மாத்திரம் பரிபூரண காரணமாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆகையாலே திவ்விய கிருபையின் பெலனானது பாவவுற்பவத்துக்கு வேண்டியிராதென்று நிருமணப்படாமல் அங்கீகரிக்கத்தக்க சத்தியமாகும். அவ்வண்ணமே மெய்யான பொருளானது ஆண்டவன் திருவுளச் செயலில்லாமல் உண்டாகாதபோதே மோக்ஷசாதகமாயிருக்கிற புண்ணியசரித்திரமுண்டாகிறதுக்குத் திவ்வியமான விசேஷப்பிரசாதமும் மனுஷசுபாவத்துக்கு மேலான வுதவியும் வேண்டியிருக்கிறதென்று சொல்லுகிறதுக்கு ஞாயமுள்ள காரணமுண்டு. அதேனென்றால் அந்தப் பொருள்களுற்பவிக்கிறதுக்குக் கர்த்தரானவர் ஒரு நிமித்தத்தைப் பார்த்து வுதவிசெய்கிறாரொழிய மற்றப்படியல்ல. அப்படியே மனுஷனுடைய சுபாவத்துக்குக் கர்த்தரானவர் காரணமாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட மனுஷசுபாவத்துக்கு வேண்டின நடக்கைகளுஞ் சரியான மேலையாக்கையேற்றிருக்கிற நல்லசரித்திரங்களும் மனுஷனிடத்திலே யுண்டாகிறதுக்கு மனுஷசுபாவத்தையுண்டாக்கிற கர்த்தரானவருதவிசெய்யவேணுமொழிய மற்றப்படியல்ல. இது காரணமாக மனுஷனிடத்திலே நின்று மனுஷனுடைய வுற்பவமாகிறதும் மனுஷனானவன் வளருகிறதென்கிறதும் கண்முதலான இந்திரியங்கள் தனது செட்டைகளைப் பண்ணுகிறதென்கிறதும் இத்தொகைப்பட்ட வியாபாரங்களும் மனுஷசுபாவத்துக்கு அவசியமாய்வேண்டியிருக்கக்கொள்ள மனுஷசுபாவத்துக்குக் காரணமாயிருக்கிற கர்த்தரானவர் மனுஷசுபாவத்தைப்பார்த்து அப்படிப்பட்ட வியாபாரமுண்டாகிறதுக்கு வுதவி செய்யவேணுமொழிய மற்றப்படியல்ல. இத்தன்மையாக முன்சொல்லப்பட்ட வெளிதான புண்ணியசரித்திரங்கள் மனுஷசுபாவ புத்திக்குயேற்றிருக்கிற ஞாயம் எளிதாய்த்தோணுமென்கிறதினால் மனுஷசுபாவ புத்தியையுண்டாக்கின கர்த்தரானவர் அப்படிப்பட்ட புத்தியினுடைய சுபாவத்தைப்பார்த்து முன்னே சொல்லப்பட்ட எளிதான ஆசார புண்ணியசரித்திரங்களை மனுஷனானவன் பண்ணுகிறதுக்குக் கர்த்தரானவர் [illegible] கொண்டிருக்கிறாரென்று சொல்லக்கடவோம்.

அப்படிப்பட்ட வியாபாரங்களும் புண்ணிய சரித்திரங்களும் உண்டாக்கப்பட்ட சுபாவமான அந்தஸ்திலே இருக்கிறதென்று சொல்லவேணும். ஆனபடியினாலே இப்படிப்பட்ட வியாபாரங்களும் புண்ணிய சரித்திரங்களும் மனுஷனிடத்திலே யுற்பவிக்கிறதுக்குக் கர்த்தரானவர் பண்ணிக்கொண்டிருக்கிற வுதவியானது மனுஷ சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்கிற வுதவியென்று சொல்லப்படும். அவ்வண்ணமே காணத்தக்க சுபாவமுடைத்தான கண்ணைக் கர்த்தரானவருண்டாக்கினபோதே அதினிடத்திலே நின்று பார்வை பிறக்கிறதுக்குக் கர்த்தரானவர் உதவிசெய்யவேணும். இத்தன்மையாக மனதுண்டான இந்திரியங்களுடைய சுபாவ வியாபாரங்களிலே யோசிக்கக் கடவோம். மித்தவிதமாகச் சிலவெளிதான புண்ணிய சரித்திரங்கள் ஞாயங்களாயிருக்கிறதென்று [illegible]ணுகிறதுக்கு மனுஷனுடைய புத்தியானது சுபாவபெலமுடைத்தானதாயிருக்க அதுகளுக்குச் சம்மதப்படத்தக்கதாக மனுஷசுபாவ பெலத்தைக்கொண்டிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட புத்தியினுடையவும் மனசினுடையவும் சுபாவத்துக்குக் காரணமாயிருக்கிற கர்த்தரானவர் அப்படிப்பட்ட புண்ணியசரித்திரங்களை மனுஷன் செய்கிறதுக்குதவிசெய்யாதிருந்தால் அப்படிப்பட்ட சுபாவத்துக்குக் கர்த்தரானவர் காரணமாயிருக்கிற மேன்மைக்குக் குறையுண்டாமென்று சொல்லத்தகும். அப்படியிருக்கிறதினாலே அப்படிப்பட்ட வகையுள்ள சுபாவத்தை யுடைத்தான மனுஷனுக்குக் கர்த்தரானவர் காரணமாயிருக்கக்கொள்ள அந்த சுபாவத்துக்கு அவசியமாய் வேண்டியிருக்

கிற வியாபாரங்களும் அந்தச் சுபாவமுடைத்தான மனுஷனிடத்தி லுண்டாகத்தக்கதாகக் கர்த்தரானவருதவி செய்கிறதுக்குத் தப்பில்லாக்கிரமத்தோடே சகலத்தையுங் கடத்துகிற கர்த்தனிடத்திலே தனது நன்மைத்தனத்திலே யொருவகையாகக்கடனாகவிருக்கிறதென்று சொல்லத்தகும்.

இதெல்லாம் இந்தவகையாக நடந்துவருகையிலே சர்வேசுரனைப் பிரத்தியக்ஷமாய்த் தெரிசிக்கிறதினால் வருகிற குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷமானதும் அதுக்கு வழியாகிற தேவவிஷயகவிசுவாச முதலான பழுதற்ற புண்ணியங்களும் உண்டாக்கப்படலான சகல பொருளினுடைய சுபாவத்துக்கு மேலான செல்வமும் நன்மையுமா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட செல்வசாதகமா யிருக்கிற புண்ணிய சரித்திரமானது உண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான புண்ணியமாயிருக்கவேணுமென்கிறதுக்குத் தடையில்லாது. உண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான நன்மையாகிற புண்ணியமா யிருக்கக்கொள்ளச் சுபாவத்துக்குக் கர்த்தரானவர் காரணமா யிருக்கிறதினாலே யானதுஞ் சுபாவத்தினுடைய மேன்மையைக் கர்த்தர் பார்த்துப் பண்ணத்தக்க வுதவியைப் பண்ணவேண்டியிருக்கிறதென்கிறதினாலே பின்கிலும் அப்படிப்பட்ட மேலான பாக்கியமாகிற மோக்ஷத்துக்குச் சாதகமா யிருக்கிற புண்ணியங்களை யுண்டாக்கப்பட்ட பொருளானது பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் தனது திருவுளத்தின் செயலாகிற வுதவியைப் பண்ணுகிறதுக்குக் கணக்கில்லை. ஆனபடியினாலே மோக்ஷசாதகமான புண்ணியமுண்டாகத்தக்கதாகக் கர்த்தரானவர் தாமுதவி செய்கிறதுக்கு உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்தைக் கர்த்தரானவர் [illegible] வேறொரு மேலான நிமித்தத்தைப் பார்த்து வுண்டாக்கப்பட்ட பொருள் மோக்ஷசாதகமான புண்ணியத்தைப் பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் [illegible] உதவி செய்கிறதுக்குத் திருவுளமா யிருக்கவேணுமொழிய மற்றப்படி [illegible] அப்படிப்பட்ட மேலான நிமித்தத்தைப் பார்த்துக் கர்த்தராலே பண்ணப்படுகிற உதவியானது விசேஷ திவ்விய கிருபையென்று சொல்லப்படும். இந்த [illegible] யுண்டாக்கப்படலான சுபாவத்துக்கு மேலான பிரசாதமென்கிறதும் [illegible]க்குச் செல்லுமென்று சொல்லக்கடவோம்.

ஆனபடியினாலே உண்டாக்கப்பட்ட பொருளானது யாதொன்று பண்ணுகிறதுக்கு அப்பொருளின் சுபாவத்தைக் கர்த்தரானவர் பார்த்துப் பண்ணுகிற வுதவியானது சுபாவத்தின் அந்தஸ்திலேயிருக்கிற வுதவியென்றும் உண்டாக்கப்பட்ட பொருளிலே சுபாவமாக அவசியமாயபேக்ஷிக்கப்பட்ட ஒத்தாசையென்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட வுதவியைக்கொண்டு பொருளானது காரியத்தைப்பண்ணும்போது காரியத்துக்குப் பிரதானகாரணமாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட காரியத்தைப் பொருளானது தனது சுபாவபெலத்தினாலே பண்ணிக்கொண்டுவருகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும். மோக்ஷசாதகமாயிருக்கிற புண்ணியங்களைவென்று லதுகளை யுண்டாக்கப்பட்ட பொருளானது பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் பொருளின் சுபாவத்தைப்பாராமல் வேறேயொரு நிமித்தத்தைப்பார்த்து உதவியாகிற கிருபைபண்ணும்போது அப்படிப்பட்ட மேலான புண்ணிய விருத்திகளை யுண்டாக்கப்பட்ட பொருளானது பிரதமகாரணமேயாகப் பின்னும் மற்றின்காரணமா யதுகளைப் பண்ணுகிறதினால் மோக்ஷத்துக்குக்காரணமாயிருக்கிற புண்ணியசரித்திரங்களை அப்படிப்பட்ட தனதுசுபாவ பெலத்தினாலே பண்ணமாட்டாதென்று சொல்லக்கடவோம்.

இது தெய்வத் தேவியினுடைய பிரசாதத்தை யடைந்தபோ[illegible]ள் மோக்ஷசாதகமான புண்ணிய விருத்திகளானவைகளைப் பண்ணுகிறபோது [illegible]ண்டாக்கப்பட்டவனுடைய சுபாவத்துக்குமேலான விசேஷமுகாந்திரங்களை யந்தப்புண்ணிய விருத்திகள் விஷயிகரிக்கிறதினாலே யுண்டாக்கப்பட்டவனுடைய சுபாவத்துக்கு மேலான விசேஷமுகாந்திரங்கள் அத்தொகைப்பட்ட புண்ணிய விருத்திகளுக்கு விஷயங்களாயிருக்கிறது. ஆகையாலேயிதுகள் உண்டாக்கப்பட்டவனுடைய சுபாவத்துக்குமேலான அந்தஸ்திலேயிருக்கிற புண்ணியவிருத்திகளென்று சொல்லத்தகும். ஆ[illegible]யி னாலே யுண்டாக்கப்பட்ட பொருளானது தனது சுபாவபெலத்தினாலே அத்தொகைப்பட்ட விருத்திகளைப்பண்ணுகிறதுக்கு வல்லதாயிராமல் திவ்வியவிசேஷ[illegible]ருடையின் பெலத்தினாலே அதுகளைப் பண்ணும்போது அதுகளுக்குண்டா[illegible]ப்பட்ட பொருளானது பெற்றினகாரணமாயிருக்கிறதென்[illegible] சொல்லவேணுமொழிய [illegible]பொருளானது [illegible] வார்த்தை சொல்லுகிறது [illegible] இவைகள் முதலானவையுள்ள சுபாவசரித்திரங்களைப் [illegible] பண்ணுமாப்போலே மோக்ஷசாதகமான பு[illegible]களை யுண்டாக்கப்பட்ட பொருளானது பண்ணுகிறதென்று சொல்லப்படாது. மோக்ஷசாதகமான விருத்திகளை யுண்டாக்கப்பட்ட பொருளானது பிரதமகாரணமென்னப் [illegible] இருக்கும்போது திவ்விய விசேஷவருளையின் பெலமானது அப்படிப்பட்ட புண்ணியவிருத்திகளுக்குப் பிரதமகாரணமாயிருக்கிறதென்று அப்படியிருஞ் சந்தேகமில்லாமலொப்புக் கொள்ளத்தக்க சத்தியமாகும்.

ஆனபடியினாலே யுண்டாக்கப்பட்ட பொருளானது [illegible] தனது சுபாவ பெலத்தைக் கொண்டு ஞாய[illegible] [illegible] வாமெனவிறுதக்காத அப்படிப்பட்ட புண்ணிய விருத்[illegible] குறைபற்ற சித்தியைப் பதுகள் அடைகிறதிலேயும் [illegible] [illegible] உண்டாக்கப்பட்ட பொருளானது தனது [illegible] [illegible] கொண்டு அப்படிப்பட்ட சுபாவத்துக்கு மேலாயிருக்கிற புண்ணிய விருத்திகளைப் பண்ணுமல் அந்த விருத்திகளு[illegible] களுண்டாகிறதுக்குப் பொருளானது பிரதம காரணமா யிருக்கிற தென்று அங்கீகரிக்கத் தகுமொழிய அதுகளுண்டாகிறதுக்குப் பொருளானது ஏத்தனை மேலாயாக மாத்திரம் காரணமாயிருக்கிற தென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். அதெனென்றால் அப்படிப்பட்ட புண்ணிய விருத்திகளுண்டாகிறதுக்குக் காரணமாயிருக்கிற முன் சொல்லப்பட்ட [illegible] நல்லவிசாரங்கள் புத்தியுள்ள[illegible] தான பொருளிடத்திலே யிருக்கவேணுமென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட முந்தின நல்லவிசாரங்கள் சுவாதந்திரிய மனசினுடைய சம்மதமில்லாம[illegible] புத்தியுடைத்தான பொருளிடத்திலே [illegible] [illegible] பிறக்கும்போது அதுகளைத் தயாபரனே [illegible] பொருளின் [illegible] மல் புத்தியுடைத்தான பொருளிடத்திலே பிறப்பிக்கிறானென்று [illegible] தக்கதொழிய மற்றப்படியல்ல. பின்னேயும் அப்படிப்பட்ட புண்ணியவிருத்திகளு[illegible] டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்துக்கு மேலாயிருக்கிற அந்தஸ்திலேயிரு[illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பொருளின் சுபாவத்துக்கு மேலான விருத்திகளாயிருக்கிறதென்று அங்கீகரி[illegible] வேணுமென்[illegible] [illegible] யுண்டாக்கப்பட்ட பொருளின் [illegible] [illegible] விருத்திகளாயிருக்கக்கொள்ள ஞானமுஞ் சுவாதந்திரியமும் உடைத்தா[illegible] பொருளானது அப்படிப்பட்ட விருத்திகளுக்குப் பிரதமகாரணமா யிருக்க[illegible]

மென்று சொல்லப்படாது. அதேனென்றால் பொருளானது காரியத்துக்குப் பிரதமகாரணமா யிருக்கும்போது பொருளானது [illegible]ன்றில் காரியத்துக்குண்டான அந்தஸ்திலே யிருக்க வேணும் இல்லாவிட்டால் காரியத்துக்கு மேலா யிருக்கிற அந்தஸ்திலேகாரணமான பொருளானது அடங்கி[illegible]ருக்கவேணும். இந்தயிரண்டுங் காரணமான பொருளிடத்திலே யில்லா[illegible]போது காரியத்தை யுத்தேசித்துக் காரணமான பொருளானது பிரதமகார[illegible]மா யிருக்கிறதென்று சொல்லப்படாமல் அப்படிப்பட்ட காரியத்துக்கு வே[illegible] பிரதமை காரண முண்டா யிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும்.

காரியகாரண மேரையானதிப்படிக்கொத்ததாயிருக்கச்செய்தே மோக்ஷ சாதகமான புண்ணிய விருத்திகளானதுகள் ஞானமுஞ் சுவாதந்திரியமு முடைத்தான மனுஷருடையவும், சம்மனசுக்களுடையவுஞ் சுபாவத்துக்கு மேலாயிருக்கிற அந்தஸ்திலே யடங்கியிருக்கக்கொள்ள மனுஷருஞ் [illegible]சம்மனசுக்களும், அப்படிப்பட்ட புண்ணியமாகிற தெய்வீக விருத்திகளுக்கு எத்தனை காரணங்களாகமாத்திரம் [illegible] திவ்வியவிசேஷ வருளையின் சத்தியானது [illegible]வைகளுக்குப் பிரதான காரணமாயிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்பட[illegible]து.

இத்தப்பாடத்திலேசொல்லப்பட்ட ரகசிய விசேஷங்களெல்லாம் எல்லாரும் வெளிப்படும்படிக்கு ஆனவிடங்களிலே அதுகளையடைவாக ஆரோபித்ததிருப்பண்ணைக்கட்டேனும் அதெப்படியென்றால் எதார்த்தமாகக் குறையில்லாமலறியப்பட்ட தேவவிஷயக விசுவாசமும் இதுக்குச்சரியான பாவகிவாரணத்துக்குதவி செய்கிறபச்சாத்[illegible]பமும் உத்தமபத்தியும் மனுஷனானவன்கர்த்தனுக்குத் தானேத் [illegible] [illegible] [illegible]கிறதுக்காகக் கர்த்தன் கற்பித்த புண்ணிய நெறியிலே தப்பில்லாமல் [illegible]டப்பேனென்கிற கெட்டியான பிரதிக்கினை பண்ணுகிற தென்கிற [illegible] விஷயக பிரத்தியக்ஷ தெரிசனமாகிற மோக்ஷத்துக்குச் சாதகமாயிருக்கிற [illegible] புண்ணியசரித்திரங்களை விசாரிக்கும்போது அவைகளெல்லாம் புத்தியு[illegible] [illegible] பொருளினாலே பண்ணப்படுகிற தெய்வீகவிருத்திகளா யிருந்தாலும் அப்படிப்பட்ட தர்ம விருத்திகளானதுகள் உண்டாக்கப்பட்டவனை ஞானமுள்ள பொருளின் சுபாவத்துக்குமேலான அந்தஸ்திலே யிருக்கிறபொருளாகிற சருவேசுரனை எதார்த்தவிதமாக விஷயிகரிக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே அப்படிப்பட்ட விஷயத்தை யுத்தேசித்துக்கொண்டு வருகிறவிருத்திகளானதுகள் உண்டாக்கப்பட்டவனை ஞானமுள்ளபொருளின் சுபாவத்துக்குமே[illegible]ான விருத்திகளென்று சொல்லக்கூடியதேயொழியமற்றப்படியல்லை. அதுகள் சுபாவத்துக்கு மேலான விருத்திகளென்று சொல்லவாயிருக்கும்போது நடக்கிறதும் வார்த்தை சொல்லுகிறதும் லவுகிகவிஷயங்களை அறிகிறதும் என்கிற இத்தொகைப்பட்[illegible] [illegible]ள்ள விருத்திகளைப்போலே ஞானமுடைத்தான பொருளின் சுபாவத்துக்குச்சரியாக ஏற்றிருந்த ஞானப்பொருள்களு[illegible]க்குச் சுபாவமேரையாகவாரென கன்மையாயிருக்கிறதென்று சொல்லப்ப[illegible]து. ஆகையாலே அப்படிப்பட்ட விருத்திகளையுண்டாக்கிறதுக்கு ஞானமுள்ள பொருளானதுசுபாவமுள்ளபெலமுடைத்தானதாயிருக்கமாட்டாது. அது சுபாவபெலமில்லாததா யிருக்கிறபோது அப்படிப்பட்ட புண்ணிய சரித்திரங்களுக்கு ஞானமுள்ள பொருளானது பிரதம காரணமாயிரா[illegible] திவ்விய பிரசாதத்தினாலே ஞானமுள்ள பொருளானது சுபாவத்துக்கு மே[illegible]லாக வுயர்த்தப்பட்டு அதுகளுக்கு ஞானமுள்ளபொருள் எத்தனை மேரையாகமாத்திரங் காரணமா யிருக்கலாமென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

இதுதவிரப் பொருளானது அப்படிப்பட்ட புண்ணிய விருத்திகளுக்கு ஏத்தனகாரணமாயிருக்கத்தக்கதாக வேண்டின திவ்வியசகாயத்தை உண்டாக்கப்பட்ட சுபாவமான மேரையைப்பார்த்துக் கர்த்தாவானவர் அவசியமாய்ப் பண்ணக்கடவாரென்று சொல்லக்கடவோமல்ல. அனபடியினாலே சகலத்தையுந் தப்பில்லாமல் நடத்துகிற கர்த்தாவானவர் முன் சொல்லப்பட்ட புண்ணிய சரித்திரங்களை ஞானமுள்ளபொருளுண்டாக்கிறதுக்கு வேண்டின திவ்வியசகாயத்தை யவர்பண்ணும்போது உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவத்தைப்பார்த்து அந்தச்சுபாவத்தினிமித்தமாக முன்சொல்லப்பட்ட திவ்விய சகாயத்தைப்பண்ணுமனுண்டாக்கப்பட்ட பொருளுக்கு அந்தத்திவ்விய சகாயத்தைப் பண்ணத்தக்கதாகக் கர்த்தாவானவர் வேறே கனமான மகிமையுள்ள விசேஷத்தைப்பார்த்து அப்படிப்பட்ட பெருமையுள்ள விசேஷத்தினிமித்தமாகப் படைப்புண்ட பொருளுக்கு முன்சொல்லப்பட்ட திவ்விய சகாயத்தைப் பண்ணுகிறாரென்று சொல்லக்கடவோமொழிய மற்றப்படியல்ல. அப்படிப்பட்ட கனமுள்ள விசேஷமேதென்றால் ஞானவுபதேசத்தின் இரண்டாங்காண்டத்திலே பதினோராம் பாடத்திலே சொல்லப்படுகிறதென்கிறதினால் இத்தருவாயிலே அதைச்சொல்லுகிறதென்கிறது பிரயமாயிராது. ஆனால் அப்படிப்பட்ட பரமரகசியத்தை நாம் கீர்த்தனத்தினாலே மாத்திரமுடைத்திக்கவேண்ணுமானால் முன் சொல்லப்பட்ட புண்ணிய சரித்திரங்களுண்டாகிறதுக்கு வேண்டின திவ்விய சகாயத்தைக் கர்த்தாவானவர் பண்ணிக்கொண்டு வருகையிலே தனது அளவில்லாத நன்மைத்தனமும் தாம்பண்ணின மானிடவர்க்கமுமனுஷசுபாவத்திலே தாமடைந்த வுபத்திரவ மரணமுமென்கிற நிமித்தங்களை மாத்திரம்பார்த்து அதுகளுக்காக முன்சொல்லப்பட்ட திவ்வியமான உதவியை உண்டாக்கப்பட்ட பொருள்களுக்குச் செய்துகொண்டு வருகிறாரொழிய உண்டாக்கப்பட்ட பொருளின் சுபாவமுதலான வேறே நிமித்தங்களைப் பார்த்து உண்டாக்கப்பட்ட பொருள் மோக்ஷக்கரை யேறுகிறதுக்கு வேண்டின திவ்விய சகாயத்தை அதுக்குப் பண்ணுகிறாரென்று சொல்லவுங் கருதவுங் கூடாது.

...ம் பாடம்.

அந்தந்த யிந்திரியத்துக்கு அந்தந்தப் பொருளானது விசேஷ விஷயமாயிருக்கும்போலே ஞானவிருத்திகளுக்குக் காரணமானதுமாய் ஆத்துமத்திலே மாத்திரம் அடங்கியமானதுமாயிருக்கிற சத்தியமென்கிற புத்திக்கு ஆருதலானது விசேஷ விஷயமாயிருக்குமென்று போனபாடங்களிலே யொப்பித்தோமே. ஆகையாலே அந்தந்த யிந்திரியத்தினுடைய விசேஷவிஷயத்தின் விஸ்தாரத்துக்குள்ளே அடங்கினதெல்லாம் அந்தந்த இந்திரியத்துக்கு கோசரமாயிருக்கலாமென்று சொல்லவேண்டியிருக்குமென்கிறதுக்குத் தப்பாது. இந்நடைவாக ஞான சத்தியாகிற புத்திக்கு ஆருதலானது விசேஷவிஷயமாயிருக்கச்செய்தே அதுதனுடைய விஸ்தாரத்துக்குள்ளே அடங்கினதெல்லாம் அப்படிப்பட்ட புத்திக்கு கோசரமாயிருக்கலாமென்று சொல்லக்கடவோம். இது காரணமாகப் பராபரவஸ்துவானது சகல பொருள்களைக் காட்டிலும் உத்தமமான ஆருதலாயிருக்கக்கொள்ள அதுதனுடைய விஸ்தாரத்துக்குள்ளே பராபரவஸ்துவானது அடங்கியிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தக்கதாகும். ஆதலாலே யிப்படிப்பட்ட பராபரவஸ்துவானது உண்டாக்கப்பட்ட ஞானசத்தியாகிற புத்திக்கு அகோசரமாயிருக்கத்தக்க விஷயமாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சித்தாந்தமாகும்.

இதிலே அப்படி வேண்டின சிலசகல விசேஷங்களுண்டு அதேதென்றால் புத்தியானது பராபரவஸ்துவைக் கண்டு பிடிக்கத்தக்க முறைகளானதுகள் பலபல விதங்களாயிருக்கிறதென்று அனுபவித்தினாலே கண்டுகொண்டு வருகிறோம். அதெப்படியென்றால் காணப்பட்ட காரியத்தினாலே காணாத காரணத்தைக் கண்டுபிடிக்கலாமென்கிற ஞாயமுண்டாயிருக்கச்செய்தே காணப்பட்ட லோகத்தையும் லோகத்திலுண்டான சந்திரசூரியாதி யென்னப்பட்ட பொருள்களையும் பத்தும்பத்தாய் பரிசீத்தோமானால் இப்படிப்பட்ட வஸ்துக்களென்னப்பட்ட யாவுந் தானாக வுண்டாகவில்லையென்கிறதுக்காக அதுகளெல்லாத்துக்குந் தானாயிருக்கிற ஒரு ஆதிகாரணமுண்டாயிருக்க வேணுமென்று சந்தேகமற நிச்சயப்பண்ணி இப்படிக்கொத்த ஆதிகாரணமானது கடவுளென்றும் மெய்யான கர்த்தனென்றுஞ் சர்வேஸ்வரனென்றும் அங்கீகரித்துக் கொண்டு வருகிறோம். இப்படிக்கொத்த ஞானத்தை விசாரிக்குமிடத்தில் அதினாலே சர்வேஸ்வரனுடைய வஸ்தியானது அறியப்பட்டுச் சர்வேஸ்வரனுண்டென்கிற சத்தியத்தைக் கண்டுபிடிக்கிறோமொழிய அவரெப்படிக்கொத்த மகிமையுள்ள சுபாவத்தைக் கொண்டிருக்கிறாரென்று அந்த வகையுள்ள ஞானத்தினிமித்தமாகக் குறையில்லாமல் கண்டு பிடிக்கலாயிராது. ஆனால் சந்திர சூரியாதிவிளங்கிக்கொண்டு வருகிற பிரபஞ்சமென்னப்பட்ட லோகம் பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால் அந்தந்தப் பொருளினுடைய அலங்கார பல முதலான பெருமையுள்ள விசேஷகுணங்கள் காணப்படுகிறதினால் வஸ்துவென்னப்பட்ட யாவையுமுண்டாக்கின காரணமான சர்வேஸ்வரனுக்கு மகாமகாப்பட்ட மகிமைகளுண்டென்று நிச்சயம்பண்ணலாமென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் லோகமும் லோகத்திலுண்டான வஸ்துவென்னப்பட்ட யாவுந் தனித்தனியே யாதொரு மெல்லாங்கூட வென்கிலும் விசாரிக்கப்பட்டாலுஞ் சகலமும் ... ரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்கு அதெல்லாம் அனுரூபகாரியமல்ல ... யிரிமலுண்டாக்கப்பட்ட பொருளென்னப்பட்ட யாவுக்கு மனோவாக்குக் கெட்டாததாயிருக்கிற யேக பராபரவஸ்துவுக்கு முடிவில்லாத தூரமுண்டாயிருக்கக்.

கொள்ள சகல பொருள்களுடைய பெருமை விஷயக ஞானத்தை நிமித்தமாகச் சகலத்தையு முண்டாக்கின சர்வேஸ்வரனுக்குச் சில மகிமையுண்டென்று நிச்சயம் பண்ணலா யிருக்கிறதொழிய அவருடைய அனந்த மகிமையுள்ள சுபாவ சொரூபத்தை இப்படிக்கொத்த தென்று கண்டுபிடிக்கக்கூடாது.

இதிலே அறியவேண்டின விசேஷமானது அதிசயமுள்ள பெருமையுள்ள பொருளை அவனவனறிகிறதினால் அதிகாரணமான சர்வேஸ்வரனிடத்திலே அத்யதிகமான மகிமையுண்டாயிருக்கிறதென்று அவனவன் கண்டுபிடிப்பானென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. ஆதலாலே சகல சரீரியான பொருள்களைக்காட்டிலும் சரீரமில்லாத சம்மனசானவன் மிகவும் உத்தமபொருளாயிருக்கிறபடியே அந்தந்தச் சம்மனசானவன் தன்னையுந் தனக்கு மேலாயிருக்கிற சம்மனசுகளையும் அறிகிறதினால் அவனுக்கு வருகிற பராபரவஸ்து விஷயகஞானமானது [illegible] கண்ணாலே காணப்பட்ட சகல பொருள்களுடைய பெருமை விஷயக ஞானத்தினாலே பிறக்கிற தேவவிஷயக ஞானத்தைக் காட்டிலும் அதிகமதிகமாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் சம்மனசானவனுண்டாக்கப்பட்ட பொருளாயிருக்கிறதினா [illegible] லுண்டாக்கப்பட்ட [illegible] வஸ்துக்களைப்போலே அதிகாரணமான சர்வேஸ்வரனுக்கு அனுரூபகாரியமாயிராதென்று அங்கீகரிக்க வேணுமென்கிறதுக்குத் தப்பாது. இந்த விஷயமாக சத்திய வேதசலாபத்திலேயும் இவ்விடத்திலே போன பாடத்திலேயும் விஸ்தாரப்பிரசங்கம் பண்ணினோமென்கிறதினால் இவ்விடத்திலே கொஞ்சத்துக்குள்ளே இவ்வளவெடுத்துக்காட்டினதுபோதும்.

இதுவரைக்கும் நம்மாற் சொல்லப்பட்ட தேவவிஷயக ஞானத்தை விசாரிக்குமிடத்தில் உண்டாக்கப்பட்ட பொருள் விஷயக ஞானத்தில் நின்று அதுபிறந்து இருக்கிற அனுமான ஞானமாயிருக்கக்கொள்ள அந்தஞானமானது உண்டாக்கப்பட்ட புத்தியினுடைய சுபாவத்துக்கு மேலானதாயிராமல் உண்டாக்கப்பட்ட புத்தியினுடைய சுபாவத்துக்கு ஒத்திருக்கிற தேவவிஷயக ஞானமென்று சொல்லப்படும். இதுதவிரக் கடவுளின்னதென்று கண்டுபிடிக்கிறதுக்குத் தெளிவானது வேறேஞானத்தைப் பிறப்பிக்குமென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே தேவோக்தவேதத்திலே சொல்லப்படுகிற சருவேசுரனுடைய திரித்துவ ஏகத்துவமும் மாங்கிஷ அவதாரமும் மற்றுமுண்டான இத்தன்மைப்பட்ட பரமரகசியங்களின் மகிமைகளை மனுஷனாலே கேட்கப்பட்டால் கர்த்தனிடத்திலே யப்படிப்பட்ட பெருமையுள்ள விசேஷங்களுண்டாயிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் மனுஷனானவன் அறிகிறதுக்கன்றி, இப்படிப்பட்ட திவ்வியமான மகிமைகளின்னதென்று குறையுள்ள மேரையாக மனுஷனானவன் கண்டுபிடிப்பானென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை. இத்தன்மையுள்ள ஞானத்துக்குச் சுபாவஞானம் விசுவாசஞானமென்கிற நாமமானது செல்லுமென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட ஞானத்தினிமித்தமாகச் சகலத்துக்கும் ஆதிகாரணமான சகலநன்மை சொரூபியான சருவேசுரனுண்டென்றும் அவருடைய அனந்தமகிமையுள்ள சுபாவசொரூபமின்னதென்றுஞ் சுருக்கமாய் மெய்யாகவே கண்டுபிடிக்கிறோமென்று சொல்லவேண்டி யிருக்கிறதும் இந்த விமரிசையுள்ள மேரையாக இருட்டிலே காணப்படுகிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல இப்படிச் சுருக்கமாக இருட்டிலே காணப்பட்ட சகலநன்மை சொரூபமான சருவேசுரனைப் பிரகாசமாய்ப் பிரத்தியக்ஷதெரிசனத்தின் நிமித்தமாகக் கண்டுபிடிக்கிறதென்கிறது சீவனுடைய குறையற்ற பாக்கியமென்றும் பரமானந்தமென்றும் மோக்ஷமென்றுஞ் சொல்லப்படும்.

அவ்வண்ணமே [illegible] தப் பூமியிலே திரிகிற [illegible] வாசிகளானவர் மறைவுள்ள மேரையாக விசுவா[illegible] தெரிசனத்தினாலே பராபரவஸ்து வின்னதென்று கண்டுபிடித்து அதின்மே[illegible] இருக்கிறதுக்கடுத்தபடி நடக்கிறதென்கிறது வழியாயிருக்கிற விசுவாசதெரிசன[illegible] நிமித்தமாக இருட்டிலே காணப்பட்ட சகலநன்மை சொரூபமான [illegible]ரானவர் பிரகாசமாகிற பிரத்தியக்ஷ தெரிசனத்தினாலே காணப்பட்டால் அதுதெரிசன[illegible]னுக்கு அவதிநடமான குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமென்று சொல்லப்படும். அப்படிப்பட்ட இருட்டாகிற விசுவாசத்தினாலே கர்த்தனை [illegible] வருகிறவனுக்கு [illegible] சகலகிரியை புண்ணியவழியிலே பா[illegible] நடக்கிறவனாகிறது [illegible] லோகத்திலே மனுஷனானவன் [illegible] பிரயாசத்தோடு [illegible] கொண்டுவருகிற வேலையென்றுந் தேவவிஷயக சேவகதர்மமென்றுஞ் சொல்லப்படும். பிரத்தியக்ஷதெரிசனத்தின் நிமித்தமாகக் கண்டுபிடிக்கப்பட்ட [illegible] சருவேசுரனானவர் தாமேபரிபூரண தெக்ஷிணையும் குறையற்ற சம்பளமும் [illegible] னவர்களுக்கு அகோசரமானதாய் [illegible] வென்றென்றைக்கும் [illegible] மாயிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் [illegible] அங்கீகரிக்கக்கடவோம்.

அவ்வண்ணமே உண்டாக்கப்பட்ட புத்தி[illegible] மட்டில்லாத சகலநன்மை சொரூபமான கர்த்தனுக்கும் முடிவில்லாத தூரமுண்டாயிருந்தாலும் இப்படிப்பட்ட அவதியாகிற தேவவிஷயக பிரத்தி[illegible] கர்த்தனுடைய அளவில்லாத பெலத்தினாலே உண்டாக்கப்பட்ட புத்தியானது அடையலாமென்று போனபாடங்களிலே ஒப்புவிக்கப்பட்டபோதே இப்படிப்பட்ட அவதியான குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்[illegible] புண்ணிய வழியிலே நடக்கிற புண்ணியாத்துமாக்களுக்குத் தயாபரனான சருவேசுரன் கட்டளையிடத்தக்க திருவுளமானவரென்று இத்தறுவாயிலே ஒப்புவிக்கத்தக்க சத்தியவிசேஷமாகும். இந்தச் சத்தியவிசேஷத்தைச் சருவேசுரனானவர் தமது வேதத்திலே திருவுளமபற்றி வெளிப்படுத்தினாரென்கிறதினால் அற்பமாகிலுஞ் சந்தேகமற, சத்தியமாக அதை யறிகிறோமொழிய மற்றப்படியல்ல ஆதலாலே தேவோக்தவேதத்திலேயுண்டாயிருக்கிறபலபல வுதாகரணங்களினாலே இந்தச் சத்திய வர்த்தமானமானது ஒப்புவிக்கப்படுமென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட அனேக வுதாகரணங்களுக்குள்ளே ஒன்றிரண்டுமாத்திரம் இந்தஅவசரத்திலே எடுத்துக்காட்டித் தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனத்திலே சீவனுடைய அவதியாகிற மோக்ஷமான குறையற்ற பாக்கியமானது அடங்கியிருக்கிறதென்றும் அதைச் சம்பாதிக்கிற [illegible] எப்படிப்பட்ட தெய்வீக வரப்பிரசாதங்களினாலே அலங்கரிக்கப்படுகிறதென்றும் எவ்வளவாகிலும் வெளியாகும்படிக்கு வருத்தக்கடவோம்.

அவ்வண்ணமே தேவஇஷ்டருமாயிருக்கிற தீர்க்க தெரிசியானவர் சருவேசுரனை யுத்தேசித்து அருளிச் செய்தது உம்முடைய ஆலயத்திலே வாசமாயிருக்கிற பேர்கள் பாக்கியவான்களாம். அவர்களும்மை யுகயுகமான காலமட்டுந் தோத்திரம் பண்ணிக்கொண்டு வருவார்கள். இதினுடைய தாற்பரியமாவது, சருவேசுரனானவர் பெலத்தினாலேயும் ஞானத்தினாலேயுங் காரணமாயெங்குமுள்ளவரென்று சொல்லவேண்டியிருக்கையிலே மோக்ஷமண்டலத்திலே அவர் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறாரென்கிறதினாலே அப்படிப்பட்ட [illegible] சருவேசுரனுக்கு விசேஷமான ஆலயமென்று சொல்லப்படும். இது காரணமாகத் அப்படிப்பட்ட ஆலயத்துக்குப் பிரத்தியப்பட்ட பேர்கள் சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் காணுகிறதினால் [illegible] பாக்கியவான்களென்கிற

போசெல்லாஜ். சருவேசுரனுக்கு விசேஷ ஆலயமான சோதி மண்டலத்திலே வாசமாயிருக்கிற பேர்களோவென்றால் அப்படிப்பட்ட ஆலயத்திலே வாசமாயிருக்கிற தென்கிறது சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறதுக்குத் தாற்பரியமென்று சொல்லத்தகும்.

அதெப்படி யென்றால் ராசாவினுடைய அரமனையிலே குடியாயிருக்கிற பேர்கள் அவர்கள் தானே ராசாவுக்குச் சனுங்களென்றும் பிள்ளைகள் முதலாக பத்து சனங்களென்றுஞ் சொல்லப்படுமென்றிருக்கையில் அவர்கள் ராசாவர்னவன் சன்னதிப்பட்ட பேர்களாயிருந்து கொண்டு ராசாவை எப்போதும் பிரத்தியக்ஷமாய்க் கண்டுவருகிறார்களென்று சொல்லப்படுமென்கிறதுக்குச் சந்தேகப்படத் தேவையில்லை. ஆதலாலே ராசாவினுடைய அரமனையிலே ஒருத்தன் வாசமாயிருக்கிறானென்று சொல்லுகிற தென்கிறது ராசாவின் சன்னதியிலே அவனிருக்கிறானென்றும் ராசாவை அவன் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டிருக்கிறானென்றும் சொல்லுகிறதுக்கு ஒக்கும். இதற்கு ஞாயமேதென்றால் ராசாவின் அரமனையிலே பூராதவனும் ராசாவினுடைய அரமனைக்குப் [illegible] ருக்கிறவனும் ராசாவின் சன்னிதியிலே இருக்கவில்லை யென்றும் அரமனையிலே எப்போதுமிருக்கிற ராசாவைப் பிரத்தியக்ஷமாய் அவன் கண்டுகொண்டு வரவில்லை யென்றுஞ் சொல்லுகிறதுக்கு ஒக்கும். அம்மருவாகியே ராசாவினுடைய அரமனையிலே ஒருத்தன் குடியாயிருக்கிறானென்று சொன்னோமானால் அவன் ராசாவின் சன்னதியிலே யிருக்கிறானென்றும் அவன் ராசாவைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறானென்றும் சொல்லுகிறதுக்குச் சமானம். ஆகையாலே சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய் ஒருத்தன் காண்கிறதென்கிற தாற்பரியமானது சருவேசுரனுடைய விசேஷமான ஆலயத்திலே வாசமாயிருக்கிறானென்கிற வாக்கியத்தினாலே காட்டப்பட்டதென்று சொல்லத்தகும்.

அப்படியே சருவேசுரனுடைய விசேஷமான ஆலயத்திலே வாசமாயிருக்கிற பேர்கள் அப்படிப்பட்ட வாசத்து நிமித்தமாகச் சருவேசுரனுடைய சன்னதிப்பட்டுச் சருவேசுரனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறார்களென்கிறதுக்காகச் சகலநன்மைகளுடைய விஷயங்களிலே பரிபூரண அனுபவத்தை அவர்களடைந்திருக்கிறார்கள். ஆதலாலே பாக்கியவான்களென்கிற நாமமானது அவர்களுக்குச் செல்லுமென்று வேத வசீகரணத்தினாலே சந்தேகமற அங்கீகரிக்கத் தக்கதாகும். அப்படிப்பட்ட பாக்கியவான்கள் குறைவில்லாத சகல நன்மைகளைத் தாங்க ளனுபவிக்கிறதுக்குத் தயாபரனான கர்த்தரானவர் காரணமாயிருக்கிறாரென்றறிந்து நன்றியறிந்த பேர்களாயிருக்கக் கொள்ள இடைவிடாமல் ஓயுமுள்ள காலத்திலே சருவேசுரனை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு வருகிறார்களென்று தீர்க்க தெரிசியினுடைய காவலைக்கொண்டு கர்த்தரானவர் திருவுளம் பற்றினாரென்கிறதுக்குத் தப்பாது.

பின்னையுந் தமது வேதத்திலே சருவேசுரனானவர் தீர்க்க தெரிசியைக்கொண்டு இந்தச் சத்தியத்தை அருளிச் செய்தாரென்று சந்தேகமற அறிகிறோம். தீர்க்க தெரிசியானவர் சருவேசுரனைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளாவது உம்முடைய அண்டையிலே சீவனத்தினுடைய ஊற்றுண்டாயிருக்கக் கொள்ள உம்முடைய ஆலயத்தின் பரிபூரண செழிப்பினாலே அவர்கள் திருத்தியை யடைவார்கள். நதியினுடைய பிரவாகத்துக்குச் சமானமாயிருக்கிற உமது [illegible] பானம்போலே அவர்கள் குடிக்கத் தக்கதாகக் கட்டளையிட்டருளுவீர். அப்படியே உமது பிரகாசத்தைக்கொண்டு பிரகாசத்தைக் காண்போம். இந்த வார்த்தைகளுக்குத் தாற்பரியமாவது, ஆண்டவரே யென்றென்றைக்கும் சிறத்தக்க

அவ்வண்ணமே மோட்சவாசியானவர் சர்வேசுரனிடத்திலே லகிச்சுப்போகாமல் சருவேசுரனுக்குச்சுபாவமாயிருக்கிற அனந்தமகிமையுள்ள விசேஷனமைகளுண்டாக்கப்பட்ட பொருளின்மட்டாக மோட்சவாசிகளிடத்திலே காணப்படுகிறதொழிய யுண்டாக்கப்பட்ட பொருளின்குணமல்லாத குணங்களானதுகள் அவரிடத்திலே யுண்டாயிராதென்று அங்கிகரிக்கக்கடவோம். இதெல்லா மொருவமையினாலே எவ்வளவாகிலுங் கண்டுபிடிக்கத் தக்கதாக வருத்தக்கடவோம். அதேதெனில் இரும்பானதுக்குண்டாயிருக்கிற சுபாவகுணங்களை விசாரித்தோமானால் அதிலே ஐந்துசுபாவங்களைக் கண்டுபிடிப்போமென்கிறதுக்குத் தப்பாது. அந்தக் குணங்களாவன: கறுப்பு, குளிர், காட்டின்னியம், அழுக்கு, பாரம் என்கிறதுகள் இரும்புக்குண்டான ஐந்துகுணங்களென்று சொல்லத்தகும். இப்படிக்கொத்த இரும்பானது அக்கினியிலே சிவக்கக்காஞ்சு அக்கினியிலே யதுபிறவேசிக்கப்பட்டால் இரும்பானது வெயமாய்ப் போகாதிருந்தாலும் இரும்பிலே அக்கினிக்குண்டான சுபாவகுணங்கள் காணப்படுமொழிய இரும்புக் குண்டான கறுப்புமுதலான சுபாவகுணங்கள் இரும்பிலே காணப்படுகிறதில்லை. இத்தன்மைபோலச் சிவனானது கறுப்புப்போலே அஞ்ஞானத்தையுந் தேவவிஷயபத்தியில்லாத சீதளத்தையும் பாவமாகிற அழுக்கையும் ஆண்டவன் சித்தத்துக்குப் படிந்திராத காட்டின்னியத்தையும் மண்ணிலே யிருக்கிற விஷயங்கள்பேரிலே மட்டில்லாத யாசையாகிற பாரத்தையுங் கொண்டிருக்கிறதென்று சந்தேகப்படத்தகாது. இப்படிப்பட்ட சிவனானது குறையற்ற பாக்கியமாகிற மோட்சத்தையடைக்க தேவவிஷயக பிரத்தியட்ச தெரிசனத்தினிமித்தமாக அக்கினியினாலே பிரவேசிக்கப்பட்ட இரும்புபோலே யது தேவாதிஷ்டதனுனதாயிருந்து கறுப்பான அக்கியானத்தை முழுதும் போக்கடித்து முன்சொல்லப்பட்ட குறையற்ற ஞானத்தைச் சிவனானது யடையுமென்கிறதுக்குத் தப்பாது. தேவவிஷயக பத்தியில்லாத தன்பாகிற சீதளமானதைச் சிவனானது முழுதும் விட்டுப் பிரிந்து தனது பெதத்துக்குத்தக்க பத்தியைச் சருவேசுரன் பேரிலேவைத்து ஆண்டவனுடைய சித்தத்தைச் சிவனுடைய மனதானது குறையற்ற பிரகாசமாய்ப் பின்சென்றுகொண்டு காட்டின்னியமென்னப்பட்டதாவும் அத்தாலே தள்ளுண்டு போமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. பின்னையுமப்படிப்பட்ட பத்தியினிமித்தமாக மோட்சவாசியானவர் குறையிலே விழமாட்டாத தனது சுவாதந்திரியத்தினாலே ஆண்டவருக்குப் பொருந்திற விஷயங்களை அவசியமாக அபேக்ஷிப்பாரொழிய ஆண்டவருக்கு விரோதமான விஷயங்களை முழுதும்வெறுத்து அதுகளை யங்கிகரிக்கமாட்டார். இதனிமித்தமாக நன்மையிலே நிலைகொண்ட மனசாயிருக்கிற மோட்சவாசியானவர் தேவவிஷயப் பிரசாதத்தினாலே யென்றென்றைக்கும் அலங்கரிக்கப்பட்டவராயிருப்பாரொழிய அப்பாவத்தின் அழுக்கானது லேசமாகிலும் அவரிடத்திலே யடையிருக்கமாட்டாதென்று சந்தேகமற்ற சத்தியங்கிசெய்யக்கூடும். அதுவுமல்லாமல் மோட்சவாசியானவர் பூலோகத்திலே யுண்டாயிருக்கிற சகலவிஷயங்களையும் தனது ஆசையை வையாமலுன்னதமாயிருக்கிற பராபரவஸ்துவினிடத்திலே யத்திரம் அவருடைய ஆசையானது பெயரினைப்படுகிறதினாலே மோட்சவாசிகளிடத்திலே நின்றுபாரமென்னப்பட்டது தெல்லாமகன்றுபோய்த் திவ்விய வரப்பிரசாதமாகிற லகுவை மோட்சவாசியானவரடைந்திருக்கிறாரென்று சொல்லத்தகும்.

அவ்வண்ணமே மோட்சவாசியிடத்திலே குறையுள்ள குணங்கள் சற்றுமுண்டாயிராமல் திவ்விய மகிமையுள்ள விசேஷங்கள் வரப்பிரசாதங்களாக அவரிடத்திலே விளங்கிவருகிறதொழிய மறப்படியல்ல. இதுக்குப்பால் அபேக்ஷிக்கத்தக்கது ஒன்றுமில்லாததினாலே பாக்கியமானது மோட்சவாசியினுடைய யபேக்ஷையைக் குறையில்லாமல் பூரிக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்

னையும் அற்பபொல்லாப்பின் கலப்பில்லாத விப்படிக்கொத்த பாக்கியமானது மோட்சவாசியிடத்திலே யென்றென்றைக்கும் நிற்குமென்கிறதினால் அதே குறையற்ற பாக்கியமும் அதே நித்திருக்கிற பரமானந்தமும் அந்த மனோவாக்குக்கெட்டாததாயிருக்கிற மோட்சமும் அதேசிவனுடைய அவதியு மொக்கமுமென்று சொல்லப்படுமொழிய சுவர்க்கமவருகுண்ட முதலான ஸ்தலங்களிலே தெளிவற்ற பாவிகளினாலே வெறுமனே கற்பிக்கப்பட்ட அசுத்த போகசுகங்களினாலேயும் சாலோகியமுதலான மேன்மைகளினாலேயுஞ் சிவனுடைய அவதியொக்கமான மோட்சமானது அடங்கியிருக்குமென்று சத்தியமும் நீதியும் போகிறபோக்கை யறியாத மதிகெட்ட மிலேச்சன் சொன்னாற்சொல்லுவானொழிய மற்றப்படியல்ல. கடைசியாய் மோட்சவாசியிடத்திலே மிகவும் பாமரிசிக்கத்தக்க வொருவிசேஷமுண்டு. அதேதெனில் மோட்சவாசியானவர் சருவேசுரன்பேரிலே மாத்திரங் கனமான பத்தியாயிருக்கிறதினாலேயும் மோட்சவாசிக்குச் சருவேசுரனானவர் சகல வஸ்துக்களாயிருக்கிறாரென்கிறதினாலேயும் மோட்சவாசியானவர் தன்முன்சொல்லப்பட்ட மகிமையுள்ள விசேஷங்கள் முதலான வேறேயனேக திவ்விய வரப்பிரசாதங்களை அனுபவிக்கிறதிலே சருவேசுரனுடைய கரைகாணாத கருணையானது விளங்கிறதென்கிறதுக்காகவுஞ் சருவேசுரனுடைய திருவுளப்படியே மனோவாக்குக்கெட்டாததாயிருக்கிற நன்மைகளை யனுபவித்துக்கொண்டு வருகிற தம்முடைய மிடத்திலே சருவேசுரனை தோத்திரம் பண்ணுகிறதுக்கு யிடமுண்டாயிருக்கிறதினாலேயுஞ் சந்தோஷப்படுகிறாரொழியத் தாமிப்படிப்பட்ட யெண்ணப்படாத நன்மைகளை அனுபவிக்கிறோமென்கிறதுக்காகச் சந்தோஷப்படுகிறாரென்று சொல்லத்தகாது. அப்படியே சருவேசுரனுடைய நன்மையானது தம்முடைய நன்மையாயிருக்கிறதென்று யெண்ணிக்கொண்டு வரச்செய்தே சகல நன்மைசொரூபமான சர்வேஸ்வரனானவர் மோக்ஷவாசிக்கு மோக்ஷவாசி முதலான சகல பொருள்களாயிருக்கிறாரென்கிற வாக்கியமானது குன்றாத சத்தியமென்று சொல்லக்கடவோம். எவ்வளவாகிலும் இதெல்லா மொருவமையினாலே வெளியாக்கலாம்.

அதேதெனில் தாசனொருத்தன் தனது ராசா பேரிலே பூரணபத்தியாயிருக்கையிலே இராசாவின் கையிலே கோடிதிரவியம் வாங்கினான். தாசனானவன் அந்தத்திரவியத்தின்பேரிலே இலவலேசமாகிலும் பற்றுதலாயிராமல் அந்தக்கோடிதிரவியத்தைக்கொண்டு தனது ராசாவுக்கு ஊழியம் பண்ணுவிக்கவும் ராசாவினுடைய ராச்சியத்துக்கு நவமான ராச்சியத்தைக் கூட்டவும் உபாயம் பண்ணி அந்தக் கோடித்திரவியமெல்லாம் ராசாவினிமித்தமாகச் செலவழித்தானொழியத் தனது விஷயங்களிலே செலவு பண்ணினதில்லை. இந்தத்தாசனுடைய மேன்மையானதைப் பத்தும் பத்தாய் விசாரித்தோமானால் தாசனானவன் தனது ராசாவின் பேரிலே பூரணபத்தியாயிருக்கிறதினால் தனது நன்மையைச் சட்டைபண்ணாமல் ராசாவினுடைய நன்மை தனது நன்மையென்று விசாரிக்கிறானொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே கோடிதிரவியத்தின் பேரிலே சற்றாகிலும் பற்றுதலில்லாதவனாய்த் தன்னுடைய கையிலே அந்தத் திரவியமெல்லாமிருக்கிறதென்று தான் சற்றாகிலுஞ் சந்தோஷப்படாமல் இராசாவுக்குத் தோத்திர முதலான நன்மைகளுண்டாகவேணுமென்று திரவியமெல்லாஞ் செலவழித்தானொழியத் தனது காரியங்களிலே யொருகாசாகிலுஞ் செலவழித்தவனல்ல. இந்த வுவமையினாலே குழந்தையானது கல்லின் குழியிலே யுண்டாயிருக்கிற ஜலத்தினாலே கரைகாணக்கடலைக்கண்டு பிடிக்குமாப்போலே தானாயிருக்கிற மட்டில்லாத சகல நன்மையான சர்வேஸ்வரனுக்கும் உண்டாக்கப்பட்ட மோக்ஷவாசிக்கும் நடந்துவருகிற மேன்மையை யெவ்வளவாகிலுங் கண்டுபிடிக்க வருந்தக்கடவோம்.

அதெதென்னில் கோடாகோடி திரவியங்களை அதிசயிக்கிற மனுஷனுக்குக் கெட்டாததாயிருக்கிற குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷப்பிரசாதத்தைத் தயாபரனான கர்த்தன் கையிலே மோக்ஷவாசியானவர் வாங்கிக்கொண்டிருக்கிறவர் எண்ணப்படாத திவ்விய பிரசாதங்களைத் தாமநுபவிக்கிறதினால் சர்வேஸ்வரனுடைய கரைகாணாத கருணையானது விளங்குமென்கிறதுக்காக மிகவுஞ்சந்தோஷப்படுகிறாரொழிய இத்தனை வரப்பிரசாதங்களைத் தாமநுபவிக்கிறதினால் சர்வேஸ்வரனுடைய கரைகாணாத பிரசாதங்களினாலே அலங்கரிக்கப்பட்ட தாம் மகா இராசாவாயிருக்கிறாரென்று சந்தோஷப்படுகிறதில்லை. பின்னையும் மனுஷனுக்கு அகோசரமாயிருக்கிற பெருமைகளினிமித்தமாக மோக்ஷவாசியானவர் மிகவும் விளங்குகிறதினாலே யெல்லாருஞ் சர்வேஸ்வரனைத் தோத்திரம் பண்ணுகிறதுக்கு [illegible]லவாயிருக்கிறாராக வென்கிறதுக்காகத் தாம் மோக்ஷப்பெருமைகளை [illegible]விக்கிறாரென்று சந்தோஷப்படுகிறாரொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே மோக்ஷவாசியிடத்திலே தேவவிஷயக பத்தியானது இந்த விதமாக விளங்குகிறதினாலே மோக்ஷவாசியிடத்திலே சர்வேஸ்வரனொருவரே சகல பொருள்களுமாக யிருக்கிறாரென்று அங்கீகரிக்கக்கடவோம். ஆதலாலே முன்சொல்லப்பட்ட தரித்திரனவன் தனது இராசாவானவன் கையிலே கோடிதிரவியம் வாங்கி இராசாவுக்குக் கனமையுண்டாகிறதுக்கு மாத்திரம் செலவழித்தாப்போலே மோக்ஷவாசியானவர் தயாபரனான கர்த்தன் கையிலே யெண்ணப்படாத வரப்பிரசாதங்களை வாங்கித் தம்மிடத்திலே யிருக்கிற அப்படிப்பட்ட பெருமைகள் நிமித்தமாகத் தம்முடைய தோத்திரத்தை அபேக்ஷியாமல் கர்த்தனுக்கு மாத்திரம் தோஸ்திரமுண்டாக வேணுமென்று மோக்ஷவாசி இச்சிக்கிறபோதே கோடிதிரவியம் வாங்கித் தனது இராசாவுக்கு கனமையுண்டாகத் தக்கதாக மாத்திரஞ் செலவழித்தவன் தனது இராசாவின்பேரிலே பத்தியாயிருக்கிறதைக் காட்டினதும் மோக்ஷவாசியாயிருக்கிறவர் சர்வேஸ்வரன் பேரிலே அதிகமான பத்தியுண்டாய்க் கர்த்தன் கையிலே வாங்கினதெல்லாங் கர்த்தனுக்கு கனமை முதலான தோஸ்திரமுண்டாக வேணுமென்று செலவழிக்கிறாரொழிய மற்றப்படியல்ல.

இதுக்குக் காரணத்தைத் தெளியும்படிக்குப் பக்ஷமானது இரண்டு விதமாய்ப் பிரியுமென்று அறியவேண்டியிருக்கிறது அதெதென்னில் சிநேகிதனுடைய நன்மைவிஷய பக்ஷமானது சிநேகபக்ஷமென்றுங் குறையற்ற பக்ஷமென்றுஞ் சொல்லப்படும். இயாதொருத்தன் தனது நன்மையை ஆசைப்பட்டு வேறொருத்தன் பேரிலே பக்ஷமாயிருந்தால் அது சுயாபேக்ஷாபேக்ஷ மென்றுங் குறையுள்ள பக்ஷமென்றுஞ் சொல்லப்படும். இப்படியிருக்கையிலே மோக்ஷவாசியாயிருக்கிறவரிடத்திலே சிநேகித்த தேவவிஷயக குறையற்ற பத்தியானது மாத்திரம் விளங்குகிறதொழியத் தம்முடைய பேரிலே குறையுள்ள பக்ஷமானது அவரிடத்திலே யுண்டாயிருக்கமாட்டாதென்று சந்தேகமற வொப்புக்கொள்ளத்தக்க விசேஷமாகும். இந்தச் சத்தியமானது அதிகமாக விளங்கும்படிக்கு மோக்ஷவாசியிடத்திலே யிருக்கிற தேவபத்தியின் விஷேஷங்களைத் தனித்தனியே ஆராய்ந்துகொண்டு வெளிப்படுத்தக்கடவோம்.

அதெதெப்படியென்றால் அந்தந்த கனமையானது அடைவாக அந்தந்தச் சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கச்செய்கிற சர்வேஸ்வரனாகிற கனமையானது முடிவில்லாமல் சகல கனமையுமாயிருக்கிறதென்று மோக்ஷவாசியாயிருக்கிறவர் பிரத்தியக்ஷமாய்க் கண்டுகொண்டு வருகிறதினாலே அப்படிப்பட்ட கனமையாகிற சர்வேஸ்வரனானவர் முடிவில்லாத பத்தியைக்கொண்டு சிநேகிக்கப்படத்தக்கவராயிருக்கிறாரென்று காண்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. இதிலே அறியவேண்டியதாவது உண்டாயிருக்கலான பத்தியென்னப்பட்டதானது முடிவில்லாத பத்தியென்று சொ

ல்லப்படாது. அப்படிப்பட்ட முடிவில்லாத பத்தியானது மோக்ஷவாசியாயிருக்கிறவர் தம்மிடத்திலே யிருக்கவில்லையென்று காணும்போது மோக்ஷவாசியாயிருக்கிறவர் தம்முடைய சத்தியின் அளவாக வெத்தனை பத்தியுண்டாயிருக்கக்கூடுமோ அத்தனை பத்தியைக்கொண்டு முடிவில்லாத கனமையாகிற சர்வேஸ்வரனை அவசியமாகச் சிநேகித்து அற்பமாகிலுந் தப்பில்லாத பரமசுகத்தோடு முடிவில்லாமல் அவரை தோத்திரம் பண்ணுகிறாரென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே மோக்ஷவாசியாயிருக்கிறவர் சகல கனமையான சர்வேஸ்வரனைக் காணக்காணத் தெகிட்டுதலில்லாமல் திருத்தியுள்ளவராயிருந்தாலும் இன்னமு மவரைக் காணக்காண வாஞ்சையில்லாத ஆசையாயிருக்கிறாரென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. அவ்வண்ணமே சர்வேஸ்வரனைப் பதினாயிரம் வருஷமாகப் பரமசுகத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிற மோட்சவாசியானவர் அப்படிப்பட்ட தெரிசனத்திலே அற்பமாகிலுந் தெகிட்டியாமல் அத்தட்சணத்திலே தானே நவமாகச் சர்வேஸ்வரனைக் காண்கிறவர்போலே யெப்போது மொருகண்ட சீரான பரமசுகத்தை யனுபவித்துக்கொண்டு வருகிறாரொழிய மற்றப்படியல்ல.

இது தவிர மோட்சவாசியானவர் தாம் பூமியிலே திரிந்தநாள்மட்டுந் தமக்குத் தயாபரனான கர்த்தரானவர் பண்ணின பலபல கிருபைகளைப் பார்த்துத் தமக்கு வந்த புண்ணிய விசாரங்களுந் தம்மாற் கேட்கப்பட்ட சுவிசேஷ வார்த்தைகளும் இவை முதலான தம்மாலடையப்பட்ட திவ்விய சகாயங்களைக் கண்முன்னே கண்டாற்போலே கண்டுவருகிறாரென்கிறதுக்காகத் தயாபரனான கர்த்தனை தோஸ்திரம் பண்ணி அப்படிப்பட்ட திவ்விய தோத்திர முண்டாகிறதுக்குத் தம்முடைய [illegible] முண்டாயிருக்கிறதினால் பரமசந்தோஷ சுகத்தையனுபவிக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. முன்சொல்லப்பட்ட திவ்விய சகாயங்கள் முதலான அனேகங் கிருபைகளைக்கொண்டு மோட்சத்தை யடைகிறதுக்கு முன்னே மோட்சவாசியாயிருக்கிறவர் பூமியிலே திரிகிறநாள்மட்டும் தாம் பண்ணின புண்ணிய சரித்திரங்களினாலே கர்த்தனுக்கு யேற்க நடந்து அவருடைய தோத்திரத்தை நிறைவேற்றினாரென்கிறதுக்காக மிகவுஞ் சந்தோஷப்படுகிறாரென்று கேட்கவேணுமோ. அப்படியே மோட்சவாசியானவர் தாம் பாடுபட்ட விசேஷ உபாதைகளும் அனுபவித்த கடின கஸ்திநோவுகளும் கேட்ட ஈனமான தூஷணங்களும் [illegible]களுமான அவமானங்களும் விசேஷ ஆனந்தத்தையுஞ் சுகத்தையுந் தாமநுபவிக்கிறதுக்குத் தாமிருந்த தோத்திர வெகுமானத்துக்கும் பாத்திரமாயிருக்கிறதுக்குங் காரணமாயிருக்கிறதென்று பார்த்து இது நிமித்தமாகத் தயாபரனை கர்த்தனைக் கொண்டாடத்தக்கதாக யெல்லாருக்கும் அவகாசமுண்டாயிருக்கிறதினாலே மனுஷனுக்குக் கெட்டாததாயிருக்கிற ஆனந்தமானது மோட்சவாசியிடத்திலே விளங்குமென்று அங்கீகரிக்கக்கடவோம்.

இதிலே [illegible] அறியவேண்டியதொரு விசேஷத்தை நன்றாகத் தெரிந்துகொண்டவனுக்காகக் கஸ்தி உபாதிகளென்னப்பட்டவைகளை யனுபவிக்கத்தக்கதாய் அறியக்கடவோம். அதாவது அவனவன் சர்வேஸ்வரன் முகத்தைப் பார்த்து மனது பொறுத்தி அந்தந்த விசேஷ கஸ்தி நோவுகளைப் பூலோகத்திலே சகித்துக்கொண்டு வந்தால் அதுக்கதுக்கான விசேஷ சந்தோஷ சுகத்தை மோட்சராச்சியத்திலே யனுபவிப்பானென்கிறதுக்குத் தப்பாது. இப்படியானது அவனவன் பண்ணிக்கொண்டு வருகிற தபசு நிமித்தமாகப் பிறக்கிற கஸ்திவாதைகளினாலேயுஞ் சர்வேஸ்வரன் அனுப்புகிற நோவுவியாதி விசனங்களினாலேயு மோட்சவாசிக்குப் பலிக்குமென்று சொல்லவேண்டியிருக்கிறது. இக்கதைவிலே புண்ணியவானானவன் தனது சரீரத்தின் அவயவங்களிலே பட்ட வெட்டுங் குத்தும் நிமித்தமாகப் பூலோகத்திலே யனுபவித்த விசேஷ நோவுகள்

மோட்சஇராச்சியத்திலே அவர் விசேஷ சந்தோஷ சுகத்தை அனுபவிக்கிறதுக்கும் விசேஷ சுபலாவண்ணியத்தைக் கொண்டிருக்கிறதுக்குங் காரணமாயிருக்குமென்று அங்ககீகரிக்கத்தக்க சத்தியமாகும். ஆதலாலே வொருஅற்பமாகிலுந் துக்கத்தை யனுபவிக்கமாட்டாத மோட்சவாசியானவர் ஆண்டவனுக்காக மின்னமதிகமாய்ப் பாடுபட்டவில்லை யென்கிறதினாலே சோர்வையடையாதவருடைய மனசானது வொருவித்தாரத் தேறுமென்று சொல்லலாயிருக்கிறது. இதன்றியேபூலோகத்திலே திரிந்த புண்ணியவானவர் அநேகவிதமான பலபல பாவங்களிலே விழத்தக்கதாக அவசரங்களுண்டாயிருக்கச்செய்தே புண்ணியவானானவன் பாவத்திலே விழாதவண்ணம் தயாபரனான கர்த்தரானவர் ஒவ்வொரு சமயங்களிலும் பண்ணின பாவத்தைப் பொறுத்த தயவையும் இது முதலான வேறே அநேக திவ்விய சகாயங்களையு மோக்ஷராச்சியத்திலே அவர் பார்க்கும்போது சர்வேஸ்வரனை இடைவிடாமல் தோத்திரம் பண்ணப்பண்ண ஒழிவுள்ள காலத்திலே பிரயாசமில்லாமல் பரமசுகத்தோடே அவனை தோஸ்திரம் பண்ணுவாரொழிய மற்றப்படியல்ல. இந்த வயணமே பூமியிலேயு மோட்சராச்சியத்திலேயுஞ் சர்வேஸ்வரனைக் கீர்த்தித்துப் பண்ணப்படுகிற தோஸ்திரத்தின் மேரைகளுக்குண்டான வித்தியாசத்தைக்கண்டு பிடிக்கக்கடவோம்.

அதேதெனனில் பூலோகத்திலே திரிகிற புண்ணியாத்துமாக்களாலே சர்வேஸ்வரனை உத்தேசித்துப் பண்ணப்படுகிற தோஸ்திரமானது விசேஷ முயற்சியுமா யிருக்கிறதினாலே அது அநேக பிரயாசை வருத்தங்களோடேயிருக்குமொழிய மற்றப்படியல்ல. மோட்சவாசியினாலே சர்வேஸ்வரனைக் குறித்துப்பண்ணப்படுகிற தோத்திரமோ வென்றால் சர்வேஸ்வரன் [illegible] பட்ட ஜெபிக்கிறதுக்கும் வேலைக்கும் அது சகாயமும் தேட்சணியமா யிருக்கக்கொள்ள பரமசுகத்துக்குங் குறையற்ற சந்தோஷத்துக்குமது காரணமாயிருக்கு மொழிய பிரயாசமும் வருத்தம இளைப்புமாகிலும் அப்படிப்பட்ட தோஸ்திரத்திலே யுண்டாகிற தென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. மோட்சவாசியாயிருக்கிறவனாலே சர்வேஸ்வரனைக் கீர்த்தித்துப் பண்ணப்படுகிற தோஸ்திரத்திலே நம்மாற் சொல்லப்பட்ட விசேஷ நன்மைகளெல்லாம் மோட்சவாசிகளின் மேல் சர்வேஸ்வரன் பேரிலே வைக்கப்படுகிற பத்தியிலே யோசிக்கக் கடவாய் அதேதென்றால் இவ்வுலோகத்திலே திரிகிற புண்ணியாத்துமாக்களுடைய [illegible] விசுவாசபத்தியானது வெளிப்பட்ட [illegible] மோட்சவாசியினாலே சர்வேஸ்வரன் பேரிலே வைக்கப்படுகிற பத்தியோ [illegible] ணையும் பலனுமாயிருக்கக்கொள்ள அது பரிபூரண சுகத்துக்கும் திருப்தி கொள்ள சந்தோஷத்துக்கும் காரணமாயிருக்கு மொழிய மற்றப்படியல்ல. மோட்சவாசியானவர் பரமானந்த முதலான வரப்பிரசாதங்களை அனுபவிக்கிறதுக்கு நம்மால் சொல்லப்பட்ட காரணங்களன்றியே [illegible] மோட்சவாசிகளிடத்திலே திவ்விய இருதயமுண்டாயிருக்கிறவர்களுக்கும் அதிசயமாயிருக்கிற மகிமைகளும் வரப்பிரசாதங்களும் அவரவரிடத்திலே யிருக்கிறதென்று அந்தந்த மோட்சவாசிகளை பிரத்தியட்சமாய்க் கண்டுவருகிறதுக்காக அந்தந்த மோட்சவாசியானவர் விசேஷமான சந்தோஷத்தையும் சுகத்தையும் அனுபவித்துக்கொண்டு வருகிறதிலே ஆண்டவனைத் தயாபரனான கர்த்தரைத் தோஸ்திரம் பண்ணவும் அவர் பேரிலே அன்பைச் செலுத்தப் பத்தியாயிருக்கவும் [illegible] க்கொண்டு வருகிறதே ஒழிய மற்றப்படியல்ல. அதுவுமன்றியே கோடாகோடிகளா யிருக்கிற மோட்சவாசிகளுடைய எண்ணப்படாத சந்தோஷங்களும் ஒவ்வொரு மோட்சவாசி அநேகம்பேர்களை சந்தோஷப்படுத்துகிறதுக்கு காரணமாயிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது.

ஆனாலெண்ணப்படாத கோடாகோடிகளாயிருக்கிற மோட்சவாசிகளனுபவிக்கிறபரமானந்த முதலான திவ்விய பிரசாதங்களிலே மிகுந்த யேற்றக்குறைச்சலுண்டாயிருக்கச்செய்தே கீழ்த்தரமாயிருக்கிறமோட்சவாசியானவர் தமக்குமிகவு மேலான மோட்சவாசியினுடைய மகிமை யென்னப்பட்ட யாவையும் அளவறுத்திராம லிருந்தாலும் அப்படிப்பட்ட மேலான மோட்சவாசி பேறுபெற்றடைந்த வரப்பிரசாதங்களுக்குள்ளே கீழ்த்தரமாயிருக்கிற மோட்சவாசி யெம்மாத்திரங் கண்டுகொண்டு வருகிறார், அவரால் காணப்பட்ட அம்மாத்திரத்தினிமித்தமாக அவர் மிகவுஞ் சந்தோஷப்பட்டுச் சர்வேஸ்வரனைத் தோஸ்திரம் பண்ணுகிறதும் போராமல் தம்முடைய புத்திக்கு யெட்டாததா யிருக்கிற மகிமையானது மேலான மோட்சவாசி யிடத்திலே யிருக்கிறதென்று அப்படிப்பட்ட கீழ்த்தரமாயிருக்கிற மோட்சவாசி யறிகிறதினால் கனமான சந்தோஷமாயிருந்து அதிலேகூடச் சருவேசுரனைத் தாமஸ் தோத்திரம பண்ணத்தக்கதாகத் தமக்கு யிடம்பண்ணிக்கொண்டு வருகிறாரென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே அந்தந்தமோக்ஷவாசியானவர் தம்முடைய இடத்திலேயு மற்றுண்டான மோக்ஷவாசிகளிடத்திலேயும் விளங்கிவருகிறதிவ்வியகிருபையானது பரமானந்தத்தை யனுபவிக்கிறதுக்குஞ் சருவேசுரனை இடைவிடாமல் தோஸ்திரம் பண்ணுகிறதுக்குங் காரணமா யிருக்கிறது தவிர அந்தந்தஞானமாரே கர்த்தரானவர் மோக்ஷராச்சியத்திலேயும் பூலோகத்திலேயும் [illegible]த்தையும் ஆளுகிறமேரை பரியாசையிலேமிகவும் விளங்கிவருகிற அனந்தஞான விமரிசையானதையும் தப்பில்லாத் கிரமத்தையும் அந்தந்த மோக்ஷவாசியானவர் பார்த்து அவர் மிகவுஞ் சந்தோஷப்படுகிறதுக்குங் கடவுளைக் கொண்டாடுகிறதுக்கும் அந்தந்தகிருபையானது தானேகாரணமா யிருக்குமென்கிறதுக்குக் கணக்கில்லை. இதெல்லாம் வெளியாகும்படிக்கு அந்தந்த ஸ்தலத்துக்கடுத்த திவ்வியாசனத்தின் மேரையிலே சிலதுவிசேஷங்களை வெளிப்படுத்தக்கடவோம்.

அதெப்படி யென்றால் வேதப்பிரமாணத்தினாலே நம்மாலறியப் பெற்ற சம்மனசுகளுடைய அர்ச்சியப் பிரப்புத்துவங்கள் மூன்றாயிருக்கையிலே ஒன்பது விலாச சபைகளிலே அதுகள் பிரியும்போது மோக்ஷத்தை யடைகிற நரசீவன்களானதுகள் பண்ணின புண்ணியத்துக்குத்தக்க அளவாக அந்தந்த சபையிலே காரணதேவர் அந்தந்தச் சிவனுக்கு ஆஸ்தலத்தைக் கட்டளையிட்டருளுகிறாரென்கிறதுக்குத் தப்பாது. அப்படியே சம்மனசுக்களுடைய சபைகளானதுகள் தனித்தனியே பிரிகிறதுக்கு ஆனமேரையானதுண்டா யிருக்குமாப்போலே அந்தந்த விலாசசபையிலே இடமடைந்திருக்கிற நரசீவன்களானதுகள் மோக்ஷவிஷயத்திலே யேற்றக் குறைச்சலாய்ப் பிரிகிறதுக்கு அதுக்கானமேரை யுண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்கத் தக்கதாகும். இதுகாரணமாகச் சம்மனசுக்களுக்கு மாத்திரமே விசேஷ தேவ கைங்கிரியமானது நரசீவன்களுக்கு வந்திராதுயென்கிறதினால் அது மோக்ஷத்தையடைந்த நரசீவன்களிடத்திலே காணமாட்டாதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. ஆனாற் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷானுபவத்தின் வகையைப் பார்க்கும்போது அந்தந்தச் சபையிலே யிடமடைந்த சிவனானது அந்தந்தச் சபைகளுக்குள்ளே அடங்கியிருக்கிற சம்மனசுக்களைப்போலே மோக்ஷப் பிரகாசத்தினாலே யுயர்த்தப்பட்ட புத்தியுடைத்தானதுகளா யிருந்து மோக்ஷப்பிரகாசத்தின் யேற்றக்குறைச்சலுக்குத் தக்கது தேவவிஷயத பிரத்தியக்ஷ தெரிசனத்திலேயும் பரமானந்த அனுபவமேரையிலேயும் நரசீவன்களானதுகள் சிலசம்மனசுக்களுக்குச் சரியானதுகளா யிருந்து வேறேசம்மனசுக்களைக் காட்டிலும் அதிக பெருமையுள்ளதுகளா யிருக்கிறதென்று சந்தேகப்படுகிறதுக்குக் கணக்கில்லை. அதேதென்றாற் சுபாவத்திலேயும் புத்திபலம

இதுமுதலான விஷயங்களிலேயுஞ் சம்மனசானவர் நரனைக்காட்டிலும் அதி
கபெருமை யுள்ளவரா யிருந்தாலு மோக்ஷப்பிரகாசத்தின் யேற்றக்குறைச்சலா
னது மாத்திர மோக்ஷானுபவத்தின் வித்தியாசத்துக்குக் காரணமா யிருக்கிறதொ
ழிய வுண்டாக்கப்பட்ட பொருள்களுக் குண்டான சுபாவமான பெருமையானது
மோக்ஷானுபவத்துக்கு லவலேசமானாலு முதவமாட்டாது.

இதுஇப்படியிருக்கையிலே தப்பில்லாக் கிரமத்தோடு மோக்ஷராச்சியத்தை
யாளுகிறகர்த்தாவானவர் அந்தந்த மோக்ஷவாசி கொண்டிருக்கிற மோக்ஷப்பிரகாசத்
துக்குத் தக்கது யேற்றக்குறைச்சலான தெளிவோடு அந்தந்த மோக்ஷவாசியினாலே
பிரத்தியக்ஷமா அவர்முழுதுங் காணப்பட்டுத்தனது திவ்விய சுபாவவிஷயக பிரத்தி
யக்ஷதெரிசனத்தி னிமித்தமாக அந்தந்த மோக்ஷவாசியானவ ருண்டாக்கப்பட
லான பொருள்களை யேற்றக்குறைச்சலாகக் காணத்தக்கதாகப் பண்ணுகிறதெ
ன்கிறதுக்குத் தப்பாது. இந்தவிஷயத்திலே விஸ்தாரப் பிரசங்கத்தை யபேக்ஷிக்
கிறவன் நித்தியசீவன சல்லாபத்தின் காலாமஞ்சாஞ் சல்லாபத்தைப் பார்க்கக்கட
வான். ஆனால் அந்தந்த மோக்ஷவாசியானவர் சருவேசுரனிடத்திலே ஒடுங்கின
சீராய் எப்போதுமறிந்துகொண்டுவருகிற பரமரகசியங்கள் தவிர அந்தந்த மோக்ஷவாசிக்
கடுத்த சிலவிஷயங்களைக் கர்த்தரானவர் நவமாகவறிவிக்கும்போது இதிலே தப்
பில்லாக் கிரமமானது மிகவும் விளங்குமென்று சொல்லிக்கட்டுவோம்.

அதேதென்றால் சருவேசுரன் அறிவிக்கிற விசேஷமானது அநேகமோக்ஷ
வாசிகளுக்கடுத்ததாயிருந்தால் அவர்களுக்குள்ளே மேலான மோக்ஷவாசிகளு
க்குத்தானறிவித்து அவரைக்கொண்டு மற்றவர்களுக்கு ஒழுங்குபரிம்பரையாக ஒரு
த்தரொருத்தனைக்கொண்டு அறியத்தக்க விசேஷத்தைத் தெரியப்பண்ணுகிறாரொழி
ய மற்றப்படியல்ல. இந்தக்கிரமமானது தேவதயிங்கிரிய விஷயத்திலே சம்மனசுக்
களுக்குள்ளே மிகவும் விளங்கிவருகிறதென்கிறதுக்குத் தப்பாது. சகலமோக்ஷவா
சிகளினாலே காணப்படுகிற தப்பில்லாத இப்படிப்பட்ட கிரமமானது அவர்களெ
ல்லாருங் கனமான சந்தோஷத்தை அடைந்து இந்தவிதமாக ராச்சியம்பண்ணு
கிற கர்த்தனைக் குறையற்ற பக்தியோடு கொண்டாடுகிறதுக்குக் காரணமாகும்.
இந்தவடைவாக அந்தந்தவிசேஷகாலங்களிலே அந்தந்த மோக்ஷவாசிகளுக்கு விசேஷ
சந்தோஷத்தைத் தயாபரனான கர்த்தரானவர் பண்ணுகிறதென்கிறது மோ
க்ஷவாசிகளிடத்திலே தேவவிஷயக பக்தியும் தோஸ்திரத்தையும் வர்த்திவிக்கிற
தென்கிறதுக்குச் சந்தேகமில்லை அதெப்படியென்றால் மோக்ஷவாசிகளுக்குள்ளே
யாதொருத்தன் பூலோகத்திலே திரிகிறபோது தர்மவிதியை விதிக்கிற பிரபந்த
ங்கள்முதலான புண்ணிய நடக்கைகளை யுண்டாக்கினால் அப்படிப்பட்ட பிரபந்
தங்கள் நிமித்தமாகப் பூலோகத்திலே திரிகிற போர்களுக்குள்ளே யாதொருத்தன்
புண்ணியம் பண்ணினால் அப்படிப்பட்ட புண்ணியம் பண்ணுகிறபோதெல்லாம் அதுக்கு
தலைபண்ணின மோக்ஷவாசிக்கு விசேஷசந்தோஷ முண்டாகிறதென்கிறது தயா
பரனான ஆண்டவனுடைய கிருபையுள்ள திருவுளத்துக்கு யேற்றிருக்கிறதென்று
சொல்லத்தகும். இதன்றியே நீதிபரனான கர்த்தரானவர் வழிப்போக்கரா யிருக்
கிற மனுஷனைநடத்துகிற கிரமமேதென்று மற்றமோக்ஷவாசியானவர் பார்த்து அது
நிமித்தமாக மிகவுஞ் சந்தோஷப்பட்டுக் கர்த்தனைத் தோஸ்திரம் பண்ணுகிறாரென்
று சொல்லவேண்டி யிருக்கிறது. இந்தவர்த்தமான முதலான வேறேசில வர்த்த
மானங்களையும் விசேஷங்களையுங் கர்த்தன் கிருபையினாலே வருகிறபாடத்திலே
வெவ்வேறாகிலும் வெளிப்படுத்த வருந்துவோம்.

௩௫-ம், பாடம்.

அனந்தஞான சொரூபியாயிருக்கிற சருவேசுரனானவர் பூலோகத்திலே திரி
கிற பிரசைகள் முதலானவர்களை நடத்துகிறமேனா மரியாதைகளுக்குள்ளே பல
பல பரமரகசியமுண்டு. அதெப்படியென்றால் ஞாயமன்னி அடைவாக சகலத்தை
யும் நடத்துகிற ஆண்டவரானவர் தமக்குகந்த பிள்ளைகளாகிற புண்ணியாத்துமாக்
களா யிருக்கிறபோர்களைக் கரையேற்றுகிற உபாயங்களையுஞ் சுவாமித்துரோகிக
ளாயிருக்கிற பாவிகளை நடத்துகிற வகைகளையும் விசாரித்துப்பார்த்தால் அதுகள்
கீழ்ப்படி கரையுங்காணாத சமுத்திரம்போலே பூலோகத்திலே திரிகிற பரமஞானி
கள் முதலாயும் அதுகளிலே நிலைகொள்ளாமல் அதுகளைக்கடக்கவு மளவறுக்கவு
மாட்டார்கள். அதேதென்றால் கர்த்தனுக்குகந்த பிள்ளைகளாகிற புண்ணியாத்
துமாக்களா யிருக்கிறபோர்கள் யெண்ணப்படாத வியாதிமுதலான நோவுகளை
அனுபவித்துத் தாரித்திர முதலான நிற்பாக்கியங்களோடேகூட யிறந்துபோ
கிறார்களாய்ப் பூலோகத்திலே திரியப் பாவிகள் அவர்களைக் கடினஉபத்திரவ நிற்
பந்தப்படுத்த இதெல்லாம் புண்ணியாத்துமாக்களா யிருக்கிறபோர்கள் கரை
யேறுகிறதுக்குச் செவ்வையான வழியாயிருக்கிற தென்கிறது பூலோகத்திலே
திரிகிற புத்திமான்களுக்கு யெட்டாததுமாய் அவர்களால் கண்டுபிடிக்கப் படாத
துமாயிருக்கிற பரமரகசியமென்று சொல்லத்தகும். இதுக்கு விபரீத அடை
வாக மகாமகாப்பட்ட பாவங்களினாலே அருவருக்கப்படத்தக்க சுவாமித் து
ரோகிகளான போர்கள் விடாமல் மற்றும் கனபாவங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற
தினால் சகலமான ஆக்கினை முதலான வாதைகளுக்கு அவர்கள் பாத்திரங்களா
யிருக்கச்செய்தே அப்படிப்பட்ட பாவிகள் சரீர ஆரோக்கியத்தின் சுகத்தோடே
கூடத் தீர்க்காயுசுள்ள போர்களா யிருக்க, பரிபூரண ஐஸ்வரியத்தோடேகூடச்
சகலபோக பாக்கியங்களை அனுபவித்துக் கொண்டுவர, எல்லாரும் அவர்களைச்
செயசெய என்று சகல வெகுமானங்களோடே கூடப் புகழ்ந்துவர, இதெல்
லாத்தையும் விசாரிக்கும்போது பூமியிலே திரிகிற புத்திமான்களுக்கு அது நிலை
யாததுமாய்க் கரைகாணாத கடலுமா யிருக்கிறதுந்தவிர, ஈடேறப்போகிற புண்
ணியாத்துமாக்கள் முதலாயிடறுகிறதுக்கு விஷயமான இடறுமாய் அவர்கள்
விழுந்துபோகிறதுக்கு வழுக்கலுள்ள வழியுமா யிருக்கிற தென்று அனுபவசித்தி
யினாலே கண்டுபிடிக்கலா யிருக்கிறது.

இதன்றியே பாவமென்னப்பட்ட யாவையும் வெறுத்துக்கொண்டு வருகிற
நிர்மலசொரூபமான கர்த்தரானவர் சகலபாவங்களை விலக்கிறதுக்கு வல்லவராயிரு
க்கச்செய்தே மகாமகாப்பட்ட பாவங்களுடைய பாவமான சரித்திரங்களை வர
ப்பண்ணும விருக்க அதுகள்வருகிறதிலே கர்த்தரானவ ருபேக்ஷைபண்ணுகிறதி
னால் அநேகந்தம்முடைய திவ்வியதோஸ்திரத்தைப் பண்ணுகிறவர்களுடைய
வாயானது அடைபட, அநேகம்போர்கள் நன்மையிலே நிலைகொள்ளாமல் நவ
மான பாவங்களிலேவிழ இத்தொகைப்பட்ட வேறேயநேகம் விசேஷவர்த்தமா
னங்கள் வரட்டுமென்று சொல்லிக் கர்த்தரானவர் பார்த்துக்கொண் டிருக்கிறதெ
ன்கிறது மகாமகாப்பட்ட புத்திமான்களா யிருக்கிறபோர்கள் திக்குந்திசையு மறி
யாமல் முழுதுந்திகைத்து மயங்கிறதுக்குக் காரணமா யிருக்கிறதென்கிறதுக்குச்
சந்தேகப்படத் தேவையில்லை.

இதெல்லாம் பூமியிலே வழிப்போக்கராய்த் திரிகிற புத்திமான்களுக்கு
மிகவு மறைபொருளா யவர்களாற் கண்டு பிடிக்கப்படாத பரமரகசியமுமாயிரு
க்கச் செய்தே மோட்சப் பிரகாசத்தினாலே யுயர்த்தப்பட்ட புத்தி யுடைத்தான

மோட்சவாசியானவர் இதெல்லாத்தையு மிகுந்த தெளிவோடு பார்த்து அதிலே போம்வழியேதென்றும் அதுகளுக்கடுத்த பிரயோசன மேதென்றும் சந்தேக மற்ற நிச்சயத்தோடே கண்டுபிடிக்கிறதினாற் சொல்லப்படாத சந்தோஷத்தையனுபவித்து அதெல்லாத்திலுங் கர்த்தனுடைய கரைகாணாத கிருபையையும் பரமசாமார்த்தியத்தையுங் குறையற்றநீதியையும், இடைவிடாமல் தோஸ்திரம்பண்ணத்தக்கதாகத்தமக்கு இடம்பண்ணிக்கொண்டு வருகிறாரென்கிறதுக்குத் தப்பாது. அவ்வண்ணமே புண்ணியாத்துமாக்களாயிருக்கிறபோகல் பூலோகத்திலே பண்ணினபாவங்களுக்காகத் தரிக்கிறதுக்கும் நவமானபாவங்களிலே விழாததுக்கும் வியாதிமுதலான நோவுகளுபாயங்களா யிருக்கிறதென்று மோட்சவாசியானவர் நிச்சயமாய்க்கண்டு கர்த்தனுக்குகந்தபிள்ளைகளா யிருக்கிறபோகல் தேவவிஷயக பத்திபொறுமை முதலான தர்மகுணங்களிலேயுங் குறையற்றபாக்கியமாகிற பரமானந்த முதலான நன்மைகளிலேயும் அபிவிர்த்தியை யடைகிறதுக்கு வியாதி நோவு முதலானநிர்பந்தங்க ளென்னப்பட்ட யாவுங்காரண மாயிருக்கிறதென்று அம்பரமாகிலுஞ் சந்தேகமில்லாமல் அறிந்துகொண்டிருக்கிறார். ஆதலினாலே புண்ணியாத்துமாக்களாயிருக்கிறபோர்கள் கஸ்தியபாதைகளை யனுபவிக்கிறதினாலேயுண்டாகுங் கர்த்தனுடைய அளவறுக்கப்படாத கிருபையைக் குறையற்றபத்தியோடு கொண்டாடுகிறாரென்கிறதுக்குத்தப்பாது. பாவிகளையாண்டவனடத்துகிறமேலாவெல்லாருவத்திலே திவ்வியகிருபையையும் நீதியையும்மோட்சவாசியானவர் கண்டுபிடித்து அதுகளைத் துதிக்கிறதுந்தவிர ஆண்டவன் சகலபாவங்களை விலகாதமேலாயினிமித்தமாக அவருடையபரமசாமார்த்தியத்தை யிடைவிடாமலவர் கொண்டாடுகிறதுக்குண்டாயிருக்கிற அவகாசத்தைக் கண்டுகொண்டுவருகிறாரிதெல்லாம் வெளியாகும்படிக் குண்டானவிசேஷங்களைத் தனித்தனியே வெளிப்படுத்தக்கடவோம்.

அதெப்படியென்றால் கர்த்தரானவர் தமக்கு யெண்ணப்படாத துரோகங்களைப் பண்ணிக்கொண்டு வருகிற பாவியானவன் அதிசுவாரியங்களோடே கூடப் போகபாக்கியங்களையுஞ் சரீரஆரோக்கியசுகத்தையு மனுபவிக்கத்தக்கதாகக்கட்டளையிடுகிறதிலே தம்முடையகிருபையை விளங்கப்பண்ணுகிறாரென்று மோக்ஷவாசியாயிருக்கிறவர் கண்டுகொண்டு வருகிறார். பின்னையும்பாவியானவனுக்குத் தீக்காரிக உண்டாகத்தக்கதாகக் கர்தரானவர் கட்டளையிடுகிறபோது பாவியானவன் பாவத்தை விட்டுத்தர்மவழியிலே திரும்ப வேணுமென்கிற திவ்விய சித்தமுள்ள திருவுளத்தை மோட்சவாசியா யிருக்கிறவர் கண்டுகொண்டு வருகிறாரென்கிறதுக்குத்தப்பாது. யிதன்றியே பாவியானவனைக் கர்த்தரானவர் நரகத்திலே தள்ளப்போகிறாரென்றிருக்கையிலே பாவியானவன் பண்ணின சில அற்பபுண்ணியங்களுக்காக யிவ்வுலோகத்திலே பாவியானவன் சில அற்பபோக பாக்கியங்களை யனுபவிக்கிறதென்கிறது கர்த்தனுடைய குறையற்றநீதியுள்ள திருவுளத்துக்கு யேற்றிருக்கிறதென்று அங்கீகரிக்கக்கடவோம். யிதுகளிற்கர்த்தரானவர் தமக்குப் பகையாயிருக்கிற பாவிகளுக்கு பலபல உபகாரங்களைப் பண்ணுகிறதினாலே தமதனந்தகிருபையை விளங்கப்பண்ணுகிறாரென்கிறதுக்குத் தப்பாது.

இந்தவிடைவாக மகாமகாபட்டபாவங்களையனந்த ஞானமானகர்த்தரானவர் சகல உபாயங்களினாலே விலகாத மேலாயானது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால் அதிலே அவருடைய சாமார்த்தியத்தைக் கண்டு பிடிக்கலா யிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அதேதென்றால் பாவியானவன் கர்த்தனுக்குகந்த பிள்ளைகளா யிருக்கிறவனை யெண்ணப்படாத வாதைகளைப் படுத்துகிறதினாலே புண்ணியவானானவன் தேவவிஷயக பத்தி பொறுமை முதலான வேறே அனேகத் தர்மகுணங்களை இவ்வுலோகத்திலே யடைந்து மோட்சாச்சியத்தி

லே பரமானந்த முதலான குறையற்ற நன்மைகளுடைய அபிவிர்த்தியை யடைவாரென்கிறதுக்குச் சந்தேகமில்லையே. ஆதலாலே தப்பில்லாக் கிரமத்தோடு சகலத்தையுநடத்துகிற கர்த்தரானவர் தாம் சகல உபாயங்களைக்கொண்டு விலகாத பாவத்தில் நின்று அனேக நன்மைகளைப் பிறப்பிக்கிறதிலே தம்முடைய திவ்விய சாமார்த்தியத்தை விளங்கத்தக்கதாகப் பண்ணினாரென்று சொல்லத்தகும். ஆகையாலே சகல உபாயங்களைக்கொண்டு விலகிறதைக் காட்டிலும் அப்படிப்பட்ட விதமாக விலகாத பாவத்திலே நின்று நன்மை பிறப்பிக்கிறதென்கிறது பரம சாமார்த்தியமான திவ்விய திருவுளத்துக்கு அதிகமாக யேற்றிருக்கிறதென்று அங்கிகரிக்கக்கடவோம், இதிலே விஸ்தாரப் பிரசங்கத்தை அபேக்ஷிக்கிறவன் தூஷணதிக்காரத்தில் இருபத்திரண்டாம் பாடத்தைப் பார்க்கக்கடவான்.

ஆதில் பூலோகத்திலேக் கர்த்தரானவர் நடத்துகிற வகைகளை விசாரிக்கும்போது அதுகளுக்குள்ளே அனேகருடையமுள்ள மேலாயானதுகள் லோகத்திலே இருக்கிற புத்திமானகளாலே கண்டுபிடிக்கப்படாத பரமரகசியங்களா யிருக்கச்செய்தே மோட்சப்பிரகாசத்தினாலே யுயர்த்தப்பட்ட புத்தியுடைத்தான மோட்சவாசியானவர் அதுகளை மிகுந்த தெளிவோடு கண்டிருந்து அதுகளிலே கர்த்தனுடைய கரைகாணாத கிருபையுங் குறையற்ற நீதியையும் பரமசாமார்த்தியத்தையு மிகுந்த ஆச்சரியத்தோடுகூட இடைவிடாமல் தோஸ்திரம் பண்ணத்தக்கதாகத் தமக்கு இடம் பண்ணிக்கொண்டு வருகிறாரொழிய மற்றப்படியல்ல. இந்தவிடைவாகப் பாதாளத்திலே சர்வேஸ்வரன் நடத்துகிற மேலாயானதையை மோட்சவாசியானவர் பார்த்து அதிலே சர்வேஸ்வரனுடைய கருணையுங் குறையற்ற நீதியும் பரமசாமார்த்தியமுமேகவும் விளங்கிவருகிறதென்று கண்டுவருகிறதினாலே மிகவும் அவர் சந்தோஷப்பட்டு அதிலே தானே கர்த்தனைக் கொண்டாடத்தக்கதாகவிடம் பண்ணிக்கொண்டுவருகிறாரொழிய மற்றப்படியல்ல. அதெப்படியென்று தனித்தனியே ஆராய்ந்து கொண்டு வெளிப்படுத்தக் கடவோம்.

நரகத்திலே உபாதைகளை யனுபவிக்கிற பிசாசுகள் முதலான பாவிகள் கர்த்தனுக்குப் பண்ணின கனமான துரோகங்களைப் பார்க்கும்போது அப்படிப்பட்ட துரோகங்கள் நிமித்தமாக நீதிபரனான கர்த்தரானவர் பிசாசுகள் முதலான பாவிகளை முழுதும் க்ஷயமாய்ப் போகப் பண்ணினாலும் அல்லது அப்படிப்பட்ட சுவாமித் துரோகிகள் அனுபவித்துக் கொண்டு வருகிற கஸ்தி முதலான உபாதைகளைக் காட்டிலு மின்னங் கனமான நோவுகளுடைய அனுபவத்தை அவர்களுக்குக் கர்த்தரானவர் கட்டளையிட்டருளினாலுங் கர்த்தன்பேரிலே இலவசமானாலும் அனியாயத்தை ஆரோபிக்கிறதுக் கவகாசமில்லை. ஆதலாலே தயாபரனான கர்த்தரானவர் நரகத்திலே யிருக்கிற சுவாமித் துரோகிகளுக்கு முழுநாசத்தையும் அதிகமான கஸ்திபாதைகளையுங் கட்டளையுங் கட்டளையிட்டருளாமலிருக்கிறதிலே தானே மோட்சவாசியா யிருக்கிறவர் தயாபரனான கர்த்தனுடைய கிருபையைக் கண்டுபிடித்துக் கர்த்தனைக் கொண்டாடுகிறாரென்கிறதுக்குத் தப்பாது. இதன்றியே வெகுமானத்துக்குப் பாத்திரமாயிருக்கிற மகிமையுள்ளவனை அவமதித்து அனியாயமாகப்பண்ணப்படுகிறநிந்தையானது குற்றமாயிருக்குமென்கிறதுக்குச் சந்தேகமில்லை அப்படிப்பட்ட குற்றத்தின் பொல்லாப்பையும் அனியாயத்தையும் அளவறுக்கவேணுமானால் நிந்திக்கப்பட்டவனுடைய மகிமையின் பிரமாணமாக அந்தக் குற்றத்தின் அனியாயமானது கொஞ்சமும் அதிகமுமாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கச் செய்தே அனந்த மகிமையுள்ள சகல நன்மையான கர்த்தனைக் குறித்துப் பாவிகளினாலே பண்ணப்படுகிற பாவமாகிற குற்றமானது முடிவில்லாத பொல்லாப்பும் அனியாயமுமா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக்கிறது. அப்படிப்பட்ட முடிவில்லாத அனியா

யத்தைப் போக்கடிக்கத்தக்க ஸ்தலமாகிற பூமியிலேபாவியானவன் அத்தைப்போக்கடியாமல் அந்தப்பாவத்தோடே பாவியானவன் பரலோகத்தை யடையும்போது பரலோகமானது அவனவன்பண்ணின கருமத்துக்கு பலனை யனுபவிக்கிறதுக்கு மாத்திரம்விற்ற ஸ்தலமாயிருக்கக்கொள்ளமுடிவில்லாதபாவத்தோடேபரலோகத்தையடைந்த பாவியானவன் அப்படிப்பட்ட முடிவில்லாத குற்றத்துக்குச்சரியாகமுடிவில்லாத காலத்திலே யாக்கினை யனுபவித்துக்கொண்டு வருகிறதென்கிறது குறையற்ற நீதிக்கு யேற்றிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகமில்லை. இது காரணமாக நரகத்திலே பாவிகளானவர்கள் என்றென்றைக்கும் கிறக்கத்தக்க ஸ்தி உபாதைகளை அனுபவிக்கிறார்களென்றும் அப்படிப்பட்ட நரகத்திலே மோட்சவாசியானவர் தாய்விடாதபடிக்குத் தயாபரனை கர்த்தரானவர் விலகினானென்றும் பார்த்துக்கொண்டிருக்கிறதினால் கர்த்தனுடைய குறையற்ற நீதியையுங் கரைகாணாத கிருபையையும் பழுதற்ற பத்தியோடேகூட அவர் துத்தியக் கொண்டு வருகிறார்.

இது தவிரச் சர்வேஸ்வரனை யுத்தேசித்து வொன்றுக்கு மாகாதயெறிந்து போட்டபொருளாகிற பிசாசும் மனுஷனைவனும் ஆங்காரத்தினாலே உத்தமபொருளான சர்வேஸ்வரனுக்கு விரோதமாகப் பாவத்தைப்பண்ணி உன்னதமான மோட்சத்தைப் போக்கடித்தபோதே சகல ஸ்தலங்களைப் பார்க்கிலுங் கீழ்த்தரமான ஸ்தலமாகிற பாதாளத்திலே எண்ணப்படாத கஸ்தி யுபாதைகளைத் துரோகியாயிருக்கிறபிசாசும் மனுஷனும் அனுபவித்துக்கொண்டு வருகிறதுக்காகக் கர்த்தனுடைய குறையற்ற நீதியை மோட்சவாசியானவர் கொண்டாடத்தக்கதாக அவகாசமுண்டாயிருக்கிறதென்று சொல்லத்தகும். இப்படிப்பட்ட நரகத்திலே கர்த்தனுடைய குறையற்ற நீதியும் அனந்ததையையும் விளங்கி வருகிறதென்று சொல்லப்படுமாப்போலே சென்மப் பாவத்து நிமித்தமாக மோட்சமிழந்துபோன சேதத்தின் ஆக்கினையைச் சீவனைதாக ளனுபவிக்கும் ஸ்தலத்திலேயும் புண்ணியாத்துமாக்களானதுகள் அற்பப்பாவத்துக்கும் பொறுக்கப்பட்ட தஞ்குற்றங்களுக்கு முழுதும் உத்தரிக்கத்தக்கதாக இந்திரிய கஸ்திபாதைகளைச் சிற்றுகாலம் அனுபவிக்கிற ஸ்தலத்திலேயும் விளங்கி வருகிற திவ்விய நீதியையுங் கிருபையையு மோட்சவாசியானவ ரிடைவிடாமல் கொண்டாடுகிறாரென்று யோசிக்கக்கடவோம்.

கடைசியாய் நரகத்திலே விழுந்த பாவிகள் பூலோகத்திலே பண்ணின வெண்ணப்படாதவிதமுள்ள பாவங்களுக்காக வெண்ணப்படாதவிதமுள்ள கஸ்திகோவுகளைப் படும்போது அந்தந்த விசேஷ பாவத்துக்காக அந்தந்த விசேஷமான ஆக்கினையைப் பாவியானவ னனுபவிக்கிறானே யப்படிப்பட்ட விசேஷ ஆக்கினை அனுபவிக்கிறதிலே கர்த்தனுடைய பரம சாமார்த்திய மானது விளங்கி வருகிறதென்று மோட்சவாசியானவர் மிகுந்த சந்தோஷத்தோடு பார்த்துக்கொண்டிருக்கிறதினால் அனந்த ஞானமான கர்த்தனுடைய பரம சாமார்த்தியத்தையுந் தப்பில்லாத விமரிசையையும் இடைவிடாமல் தோத்திரம் பண்ணிக்கொண்டு வருகிறாரென்று அங்கிகரிக்கக் கடவோம்.

இற்றைவரைக்கும் நம்மாற் பண்ணப்பட்ட பிரசங்கமானது பத்தும் பத்தாய் விசாரிக்கப்பட்டால் தண்ணீராலே நிரப்பப்பட்ட களற்சிக்குழியினாலேகரை காணாத கடலானது காட்டப்பட்ட மேரையாக மோட்சவாசியானவர் அனுபவித்துக்கொண்டு வருகிற மனோவாக்குக் கெட்டாததா யிருக்கிற குறையற்ற பாக்கியமென்கிற மோட்சத்தின் அடைவானது நாம பண்ணின பிரசங்கத்தினாலே யெவ்வளவிலுங் காட்டப்பட்டதென்றுசொல்லத்தகும். இனிமுடிந்ததலுவாயிலே மோட்சத்தின்மகிமையானது வர்ணிக்கப்படச் செய்தே தேவோக்கித்த வேதமானது

சிலதுவாக்கியங்களைக்கொண்டு அதினுடைய வர்ணிப்பை நிறைவேற்றிக்கொண்டு வருகிறதென்று கண்டு வருகிறோம். அந்த வாக்கியங்களானதுகள் உபோதகாட அலங்காரத்தின் மேரையாகப் பிரயோகிக்கப்பட்ட அர்த்தத்தைக் கிரகியாமல் அதினாலேகண்டுபிடிக்கத்தக்க ரகசிய அர்த்தமானது யெல்லாருக்குந் வெளியாகும்படிக்கு அந்த வாக்கியங்களுடைய தாற்பரியமானது யின்னதென்று வெளிப்படுத்தக் கடவோம்.

அதெப்படியென்றால்மோக்ஷமானது வர்ணிக்கப்படும்போது பட்டணத்தினுடைய பொன்னாலேகட்டப்பட்ட கோட்டைகளும் வச்சிரமுதலான மாணிக்கங்களினாலேயுண்டாக்கப்பட்ட கதவுகளும் அதுகளொருக்காலும் அடைபடுகிறதில்லையென்றுங் கர்த்தனுடைய சன்னிதியிலே ஸ்படிகமயமான சமுத்திர முண்டாயிருக்கிறதென்றும் பலபலபத்திராசனங்களிலே யிருக்கிற முடிபொறுத்தராசாக்கள் ஆண்டவனை யிடைவிடாமல் தோஸ்த்திரம்பண்ணுகிறார்களென்றும் பிரகாசமாயிருக்கிறவெள்ளைச்சட்டைகள் தொட்டிருக்கிறார்களென்றும் அப்படிப்பட்டபேர்கள் ஜெயத்துக்கு அடையாளமானதுகளைக் கையிலேகொண்டிருக்கிறார்களென்று ஞானமானதுகளின் கைங்கிரியத்தினாலேமிகவும்பரிமளித்திருக்கிற தூபாதிகள் கர்த்தன் சன்னிதியிலேயேறுகிறதென்றும் அவ்விடத்திலேயிருக்கிறபேர்கள் ராத்திரிபோஜனத்தைப்பண்ணுகிறார்களென்றும் அவர்களுக்குக் கர்த்தரானவர் தானேகச்சைகட்டிக்கொண்டு அவரவரண்டையிலேநடக்கிறவராகப்பரிமாறுகிறாரென்று மவ்விடத்திலே மிகுந்தபிரகாசத்தோடே பகலானது விளங்கிவருகிறதொழிய ராத்திரியின் அந்தகாரமானது வொருக்காலு மதிலேபரம்ப மாட்டாதென்றும இப்படி யலங்கரிக்கப்பட்ட மோக்ஷமாகிறபட்டணமானதுவுயர்ந்த பருவதத்தின்மேலே ஸ்தாபிக்கப்பட்டுச் சதுராகாரமா யிருக்கிறதென்றும் இத்தொகைப்பட்ட வேறே யநேக வாக்கியங்களானதுகள் குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷமானது யிப்படிப்பட்டதென்று வர்ணிக்கப்பட்டு வருகிறதிலே தீர்க்கதரிசிகளா யிருக்கிற வர்களினாலே சர்வேசுரனுடைய திவ்விய திருவுளத்தின் கட்டளைப்படியே பிரயோகிக்கப் பட்டதுகளென்று கண்டுகொண்டு வருகிறோம்.

இதிலே யறியவேண்டிய மூன்றுரகசிய விசேஷங்களுண்டு அதிலே யிந்த வாக்கியங்களுடைய தாற்பரியமானது தெளியப்பட்டு அப்படித் தெளியப்பட்ட தாற்பரியத்தினாலே மோக்ஷபாக்கிய மின்னதென்று கண்டு பிடிக்கிற தென்கிறது அறியத்தக்க ரெண்டாம் பரம ரகசியமாகும். கடைசியாய் மோக்ஷமின்னதென்று நிரூபிக்கிறதிலே யிப்படிப்பட்ட வாக்கியங்கள் பிரயோகிக்கப் படுகிறதுக்குக் காரணமின்னதென்று யறியத்தக்க மூன்றாம் விசேஷமாகும். இதெல்லாந் தனித் தனியே யெடுத்துக் காட்டி யெல்லாருக்கு மெவ்வளவாகிலும் வெளியாகும்படிக்கு வருந்தக்கடவோம்.

மோக்ஷ நிரூபணத்திலே நம்மாற்சொல்லப்பட்ட வாக்கியங்கள் முதலான வேறே யநேக வாக்கியங்களை விசாரிக்குமிடத்திலதுகளெல்லாம் உபோதகாட அலங்கார மேரையாகப் பிரயோகிக்கப்பட்டதினாலதுகளுடைய சத்தங்களானதுகள் கேவலம் தோற்றி விக்கிற அர்த்தத்தைக்கிரகியாம லதுகளுடைய தாற்பரியத்தினாலே யுத்தேசிக்கப் படுகிற அர்த்தத்தைகண்டு பிடிக்கக்கடவோம். அவ்வண்ணமே பூலோகத்திலே காணப்பட்ட மண்மயமாயிருக்கிற பொன் முதலான , மாணிக்கங்கள் மோக்ஷராச்சியத்திலே யுண்டாயிருக்கிற தென்று சொல்லவு மெண்ணவுங் கூடாதென் றிருக்கச்செய்தே மோக்ஷபட்டணத்தைச் சூழ்ந்திருக்கிற மதில்களானதுகள் பரிசுத்த தங்கத்தினாலே யுண்டாக்கப் பட்டதென்கிற வாக்கியத்துக்கு அபிப்பிராய மாவது; யிங்கேயு மங்கேயுமுண்டாயிருக்கிற அயிசுவரியத்தின் மேரையைப் பார்க்கும்போது பூலோகத்திலே

யிருக்கிற அயிஸ்வரிய திரவிய மென்னப்பட்ட யாவும் அருவருக்கத்தக்க தூர்க்க
ந்தச் சேற்றுக்கு மெய்க்குப்போடத்தக்க மண்ணுக்கட்டிக்குச் சரியாயிருக்கிறதெ
ன்று யெண்ணப்படத் தக்கதா யிருக்கையிலே மோக்ஷத்திலே விளங்கியிருக்கி
அயிசுவரிய திரவியமானது ஆயிரமாற்றுள்ள பரிசுத்த தங்கத்துக்குச் சமானமா
னதாயிருக்கிற தென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையாலே யங்கேயு மிங்
கேயுமிருக்கிற அயிசுவரிய மிரண்டுக்கு முண்டாயிருக்கிற வித்தியாசமானது முன்
சொல்லப்பட்ட வாக்கியத்தினாலே தோற்றுவிக்கப்படுகிற தொழிய மோக்ஷராச்சி
யத்திலே மண்ணுமிருக்கிற பொன்னானது வுண்டாயிருக்கிறதென்று சொல்லப்படு
கிறதில்லை. அப்படிப்பட்ட மேலான அயிசுவரியத்தை மோக்ஷவாசிக ளெல்லாருங்
குறையற்ற பிரகாரமா யனுபவித்து அனுபவதனாலே யெல்லாருஞ்சூழ்ந்திருக்கப்பட்
டபேர்கள்போலே யிருக்கிறார்களென்று காட்டவேணு மென்கிறதுக்காக மோக்ஷ
பட்டணத்தைச் சூழ்ந்திருக்கிற மதிலானது பரிசுத்த தங்கத்தினாலே யுண்டாக்க
ப்பட்டதென்று சொல்லப்பட்டதொழிய மோக்ஷராச்சியத்திலே யிப்படிக்கொத்த
மதிலுண்டா யிருக்கிறதென்று அறியாத மிலேச்சன் சொன்னாற் சொல்லுவானொ
ழிய மற்றப்படியல்ல.

அப்படிப்பட்ட மோக்ஷமாகிற பட்டணத்திலே வச்சிரமுதலான மாணி
க்கங்களை பதிசெயித்திருக்கிறதாம சரித்திரங்கள் நிமித்தமாகப்புண்ணியாத்தும
க்களா யிருக்கிற பேர்கள் சென்றடைகிறார்க ளென்று தோற்றுவிக்க வேணுமென்
கிறதுக்காக வச்சிர முதலான மாணிக்கங்களினாலே யுண்டாக்கப்பட்ட கதவு
களுண்டா யிருக்கிற தென்று சொல்லப்பட்டதொழிய அப்பட்டணத்திலே யிப்படிப்ப
ட்ட கதவுகளுண்டென்று மதிகெட்டவனானது மெண்ணமாட்டான். இதன்றியே
மோக்ஷவாசிகளா யிருக்கிறபேர்க ளொன்றுக் காகனும் பயப்படத்தக்கதில்லை
யென்று காண்பிக்கத் தக்கதாக மோக்ஷபட்டணத்தின் கதவுளானதுக ளடைப
கிற தில்லை யென்று சொல்லப்பட்டதொழிய மற்றப்படியல்ல. இத்தலைவராக
னந்த ஞான சொரூபமா யிருக்கிற கர்த்தரானவர் சகலத்தையு மனந்த தெ
வோடு பார்த்துக்கொண் டிருக்கிறாரென்றும், அவருக்கு வொன்றானுமறைந்தி
க்கக் கூடாதென்றும், எல்லாரு மறியும்படிக்குக் கர்த்தனுடைய சந்நிதியிலே
ஸ்படிகமாகிற சமுத்திரமுண்டா யிருக்கிற தென்றும் சொல்லப்பட்டதினாலே
றிப்பாயாக.

இதன்றியே மோக்ஷபாக்கியத்தை யனுபவிக்கிறபேர்கள் ராசாதி ராசனா
ருக்கிறசருவேசுரனோடேகூட ராச்சியபாரம்பண்ணுகிறார்களென்றும், அப்படிப்ப
ட்டசகலபரிசுத்த தர்மங்களினாலே யலங்கரிக்கப்பட்டப் பேராசுமுதலான சத்து
க்களைச் செயித்தார்களென்றும் காட்டவேணுமென்கிறதுக்காகப் பலபலபத்திரா
ஸனங்களிலேயிருக்கிற முடிபொறுத்த ராசாக்கள் ஆண்டவனையிடைவிடாமல் தோ
த்திரம் பண்ணுகிறார்களென்றும், பிரகாசமாயிருக்கிற வெள்ளைச் சட்டைக
தொட்டிருக்கிறார்களென்றும், ஜெயத்துக்கு அடையாளமான குருத்துகளைக் கையிலே
கொண்டிருக்கிறார்களென்றும் சொல்லப்பட்டதொழிய மற்றப்படியல்ல. அம்மு
வாதியே சம்மனசினுடைய கயிங்கரியத்தினாலே மிகவும் பரிமளித்திருக்கிற தூப
திகள் கர்த்தன் சன்னதியிலே யேறுகிறது யென்கிற வாக்கியத்தை நீ கேட்கு
போது புண்ணியவான்களுடைய தியான செபமுதலான விருத்திகளைச் சம்மனசு
களானபேர்க ளெல்லாத்தையு மறிந்த சர்வேசுரன் சந்நிதியிலேகாட்டி நமக்காக
கர்த்தனை வேண்டிக் கொள்ளுகிறார்களென்றும் அப்படிப்பட்ட தியான செபமு
லான விருத்திகளானதுகள் தேவவிஷயகபத்தியாகிற அக்கினியோடேகூட யிரு
தால் தூபாதிகள்போலே கர்த்தனுக்குப் பரிமளித்திருக்கிற தென்கிற அர்த்தத்தை
கண்டுபிடிக்கக்கடவாய்.

இதுதவிர மோக்ஷவாசிகளா யிருக்கிற பேர்கள் பரம சுகத்தோடேகூட யெப்போது மிளைப்பாறிக் கொண்டு வருகிறார்களொழிய வொருக்காலும் பிரையாசப்படத்தக்க தில்லை யென்று காண்பிக்கிற நிமித்தமாக அவர்களுடைய பரமானந்தமானது ராத்திரி போசனத்துக்குச் சமான மென்று சொல்லப்பட்டதா யிருக்கிறதென்று அறிவாயாக. அதேதென்றால் மத்தியான போசனத்துக்குப் பிற்பாடு யின்னம்வேலை செய்து பிரையாசைப்பட வேண்டியிருந்தாலும் இராத்திரி போசனத்துக்குப் பிற்பாடு இளைப்பாறத்தக்க கனைக்குண்டா யிருக்கிறதொழிய இன்னம் பிரையாசப்படத்தக்க கனைக்கில்லை யென்கிறதுக்காக மோக்ஷவாசிகளுடைய பரமானந்தமானது மத்தியான போசனத்துக்குச் சரியென்று சொல்லாமல் இராத்திரி போசனத்துக்கு அது சமானமா யிருக்கிறதென்று சொல்லப்படுகிறதொழிய மற்றப்படியல்ல.

அந்தந்த மோக்ஷவாசியானவர் அனுபவித்துக்கொண்டு வருகிற பரமானந்தத்துக்கு அளவில்லாத கர்த்தரானவர் தாமே தம்மை விஷயமாகப் பண்ணியிருந்தாலும் இதெல்லாங் கர்த்தரானவர் தமமுடைய அனந்தத்தனத்தின் அளவாகப் பண்ணுமல் அந்தந்த மோக்ஷவாசிகளுடைய யோக்கியத்தின் பிரமாணமாக அந்தந்த மோக்ஷவாசிக்குப் பரமானந்தத்தைக் கர்த்தரானவர் பண்ணுவிக்கிறாரென்றும், அந்தந்த மோக்ஷவாசியானவர் அனுபவித்துக்கொண்டு வருகிற பரமசுகமானது தெகிட்டில்லாமல் நாளுக்கு நாள்நவமானதுபோலே அவருக்குயிருக்கிறதென்றுந் தோற்றுவிக்கிறது இதுநிமித்தமாகக்கர்த்தரானவர்தானே கச்சை கட்டிக்கொண்டு அவரவர்களுடையிலே நடக்கிறவராகப் போசனத்தைப் பரிமாறுகிறாரென்று சொல்லப்பட்டதென்கிறதுக்குச் சந்தேகப்படவேண்டாம். அப்படிப்பட்ட பரமானந்தத்தை யனுபவிக்கிற பேர்களுக்குப் பரஞ்சோதியுள்ள பகலானது விளங்குமொழிய இராத்திரியின் அந்தகாரமானது அவர்கள்மேலே பரம்பமாட்டாதென்கிற வாக்கியத்தினாலே மோக்ஷவாசியான பேர்கள் என்றென்றைக்குங் குறையற்ற சந்தோஷத்தை அனுபவித்து ஒரு அற்பமாகிலும் சோரானது அவர்களை யுபாதிக்கத்தக்க தில்லை யென்கிற அர்த்தமானது கண்டுபிடிக்கப்படத்தக்கதாகும்.

கடைசியாய் யெண்ணப்படாத திவ்விய பிரசாதத்தினாலே அலங்கரிக்கப்பட்ட மோக்ஷமாகிற பட்டணமானது மிகவும் உன்னதமான பர்வதத்தின் மேலே ஸ்தாபிக்கப்பட்டதென்கிற வாக்கியங்களினாலே மோக்ஷக்கரை யேறுகிறதுக்கு அவனவன் படத்தக்க பிரயாசத்தை நிச்செயம் பண்ணி அதிலே யேறின பாக்கியவான்க ளொரு அற்பமாகிலும் சந்தேக மில்லாமல் ஒருகண்டசிரா என்றென்றைக்கும் பரமானந்தத்தை அனுபவிப்பார்க ளென்கிற குன்றாத சத்தியத்தை மோட்சமாகிற பட்டணத்தின் சதுரமான ஆகாயமானது அறிவிக்கிற தென்று அறிவாயாக.

மோட்ச நிரூபணத்திலே இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய தாற்பரியமானது யெவ்வளவாகிலும் வெளிப்படுத்தினுப்போலேயாச்சுது. தெளியப்பட்ட யித்தத் தாற்பரியத்தினாலே குறையற்ற பாக்கியமாகிற மோட்சமானது யின்னதென்று யெவ்வளவாகிலுங் கொஞ்சத்துக்குள்ளே நிரூபிக்கத்தக்கதாக வருந்தக்கடவோம். அவ்வண்ணமே பராபரவஸ்துவுக்குச் சுபாவமா யிருக்கிற பரமானந்த முதலான அனந்தமகிமைகளான துகளை யுண்டாக்கப்பட்ட பொருளானது தனது அளவாக மோட்சப்பிரகாசத்தின் சகாயத்தைக்கொண்டு யொருபிரகாரமாய்க் கொண்டிருக்கிற தென்கிறது யுண்டாக்கப்பட்ட பொருளினாலே அனுபவிக்கப்படுகிற குறையற்ற பாக்கியமாகிற மோட்சமானது நிரூபிக்கப்படலா மென்று அங்கீகரித்து இதெல்லாந் தேவவிஷயகபிரத்தியக்ஷ தெ

நிசனத்திலே வருகிறதென்று நிச்செயிக்கக் கடவோம். ஆதலாலே இதே-நி
லைனது அடையத்தக்க அவதியென்றும் இதே-சிவனுக்கென்னப்படாத நன்மை
களைக் கெடுக்கிற வொடுக்கமென்றுஞ் சொல்லத்தகும்.

இப்படியிருக்கையிலே மோட்ச நிருபணம் பண்ணப்படுகிறதிலே உ
போதகாட அலங்கார மேரையாகமுன்சொல்லப்பட்ட வாக்கியங்களானதுகள் பிர
யோகிக்கப்படுகிறதுக்குக்காரணமாவது:—மோட்சவாசிகளானபேர்கள்மனுஷாக்
குக்கெட்டாததாயிருக்கிற யெண்ணப்படாத திவ்விய மகிமைகளை முன் சொன்
னமேரையாக அனுபவிக்கிறார்களென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் அங்கீ
கரிக்கத்தக்க குன்றாத சத்தியமாகு மென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட
பரமரகசியங்களும் திவ்விய விசேஷ வரப்பிரசாதங்களும் அதுகளுக்குச் சரியான
பொருள்களானாலும் பூமியிலே யுண்டாயிருக்கமாட்டா தென்கிறதினாலே அப்ப
டிப்பட்ட பரமரகசியங்களையுந் திவ்விய விசேஷ வரப்பிரசாதங்களையு மின்ன
தென்று வர்ணிக்கத்தக்கதாகப் பூமியிலே திரிகிற பேர்களுக்குச் சமுத்திரை
யான வார்த்தைகள் கிடையா தென்கிறதுக்குத் தப்பாது. சமுத்திரையான
வார்த்தை கிடையாத போதே பூமியிலே திரிகிற பேர்கள் மோட்சத்தை யின்ன
தென்று யெவ்வளவாகிலுங் கண்டு பிடிக்கத்தக்கதாக மோட்ச நிருபணம் பண்
ணுகிறதிலே முன்சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய பிரயோகமானது பண்
ணப்படத்தக்கதா யிருந்தது.

இதெல்லா மொருவமையினாலே வெளியாக்கலாம். அதேதெனில் ஒன்
றுமறியாத பசுவானதுக்கு மகாமகாப்பட்ட ருசியுள்ள பக்ஷணங்களையும் விசித்
சிங்காரங்களினாலே அலங்கரிக்கப்பட்ட அரண்மனையையும் அறிவிக்க வேணுமா
னால் பசுவானது அறிந்த ருசியுள்ள பட்சணங்களுடைய மேரையைக்கொண்டு அ
து யிருக்கிற மாட்டுக் கொட்டங்களுடைய நாமத்தைக்கொண்டு அறிவிக்கத்தக்க
பக்ஷணங்களையும் அரண்மனையும் அறிவிக்கவேணுமொழிய மற்றப்படியல்ல. அ
வ்வண்ணமே யிருதுவா யிருக்கிற பச்சைப் புல்லையுஞ்சாவிவைக்கோலையும் பாலு
ள்ள பருத்தி விரையையும் எழுகாத கொட்டத்தையுமித்தொகைப்பட்ட பொரு
ள்களுடைய பேரைக்கொண்டு மதுரமான பக்ஷணங்களாகிற பாயசத்தையும் அ
திரச முதலான கச்சாயங்களையும் வடை, யிட்டலி, அப்பம், தேன்குழல், இத்தி
யாதிகளையும் மகாமகாப்பட்ட ருசிகரமான கறிகளையும், பட்டுபெட்டா வளிகளி
னாலேயும் நவரத்தினங்களினாலேயும் அலங்கரிக்கப்பட்ட இராசாவினுடைய அ
ரமனையம் பசுவுக்கு அறிவிக்கவேணுமொழிய மற்றப்படியல்ல.

அத்தன்மைபோல மோட்சமனையை அறியாத மனுஷருக்குச் சர்வே
ஸ்வரனானவர் அறிவிக்கும்போது பூமியிலே யிருக்கிற நீசமான அயிஸ்வரிய பாக்கி
யங்களுடைய நாமங்களைக்கொண்டு மோட்சத்தினுடைய சொல்லப்படாத பாக்
கிய செல்வங்களைப் பூமியிலே யிருகங்களோடே கூடத்திரிகிற நீசமான மனுஷ
னுக்கு அறிவிக்கிற தென்கிறது தப்பில்லா கிரமமா யிருக்கிற தென்று முழுமன
தோடு அங்கீகரிக்கக்கடவோம்.

இத்தறுவாயிலே மிகவுமறிய வேண்டின யொருவிசேஷமுண்டு அதாவது
பூலோகத்திலே கற்பிக்கப்பட்ட வார்த்தைகளானதுகள் பூமியிலே யிருக்கிற பே
ர்களுக்குப் பிரதானமாய் நாமங்களாக யிடப்பட்டுதென்று சொல்லவேணுமொழி
யப் பரலோகசம்பந்தமாயிருக்கிற காணப்படாத விசேஷவஸ்துக்களுக்குப் பூலோ
கத்திலே நடந்துவருகிற சத்தங்களானதுகள் பிரதானமான நாமங்களாக இடப்
பட்டுதென்று சொல்லக்கூடாது. ஆதலாலே பூலோகத்திலேகாணப்படுகிற வஸ்து
க்கள்குறையோடே கூடயிருக்கக்கொள்ள அதுகளுக்கிடப்பட்ட நாமங்களானது
ள் வஸ்துக்களையும் வஸ்துக்களோடே கூட யிருக்கிற குறைகளையுஞ் சொல்லுமெ

ன்கிறதுக்குத் தப்பாது. இப்படியிருக்கையிலே பரலோகசம்பந்தமாயிருக்கிற
வஸ்துக்களுமாய்க் குறையற்றதுகளுமா யிருக்கிறவஸ்துக்கள் பேரிலே பிரசங்கம்பண்
ணப்பட்டால் அப்படிப்பட்ட பிரசங்கத்திலே பூமியிலே நடந்து வருகிற வார்த்
தைகளைப் பிரயோகிக்க வேண்டியிருக்கிற தொழிய மற்றப்படியல்ல. ஆகையா
லே தப்புவிராதபடிக்கு அந்த வார்த்தையினுடைய அர்த்தத்தைப் பத்தும் பத்
தாய் விசாரித்து அதிலே கூட்டத்தக்க அர்த்தத்தைக் கூட்டித் தள்ளத்தக்க
அர்த்தத்தைத் தள்ளக் கடவோம்.

அதெப்படியென்றால் பலமென்கிற சத்தமானது காரியத்தையுண்டாக்கி
ற மேரையைச்சொல்லி அது குணமாயிருக்கிறதென்று கூடச்சொல்லும். சர்
வேசுரனிடத்திலே பெலமென்கிற சப்தமானது பிரயோகிக்கப்பட்டால் வஸ்து
வை யுண்டாக்கிற மேரையைச் சொல்லுமொழியக் குணமென்கிறதைச் சொ
ல்லாது. இந்தவிடத்திலே ஞானமென்கிற நாமமானது விஷயத்தினுடைய அறிக்
கையைச்சொல்லி யந்த அறிக்கையானது போய்வருகிறதுமா யறிந்தவனுக்குப்
பின்னுமிருக்கிற விருத்தியானதுமா யிதுமுதலான வேறே விசேஷங்களையுங்
கூட்டியிருக்கிறதென்று சொல்லுமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனால் சருவே
சுரனிடத்திலே பிரயோகிக்கப்பட்ட ஞானமென்கிற சப்தமானது விஷயத்தின்
அறிக்கையைமாத்திரஞ் சொல்லுமொழிய மற்ற அர்த்தங்களை யதுகொண்டிரா
து. இந்தமேரையானது வேறேயனேகஞ் சப்தங்களிலே பிரயோகிக்கப் படத்த
க்கதாகுமென்று அறிவாயாக. அதெப்படியென்றால் சிலமுறைபரலோக சம்பந்
தமா யிருக்கிறவிஷயங்களிலே உபோதகாட அலங்காரத்தின் மேரையாகச் சப்த
மானது பிரயோகிக்கப்பட்டால் அத்தறுவாயிலே சப்தத்தினாலே முந்தமுந்தத்
தோற்றுவிக்கப்படுகிற அர்த்தத்தை முழுதுந் தள்ளியதுக்குப் பின்னபேதமாயிரு
க்கிற வேறே அர்த்தத்தைக்கண்டுபிடிக்கக் கடவோம். அவ்வண்ணமே மோக்ஷவி
ஷயத்திலே பொன்மாணிக்கங்கள் போசனம் இதுகள்முதலான சப்தங்கள் பிர
யோகிக்கப் படுகிறபோது அப்படிப்பட்ட சப்தங்கள் முந்தமுந்தத் தோற்றுவிக்
கிற அர்த்தங்களை முழுதுந் தள்ளி நம்மாற் சொல்லப்பட்ட அர்த்தங்களைக் கிர
கிக்க வேணுமொழிய மற்றப்படியல்ல. இதுகாரணமாக மனுஷனானவன் பர
லோக சம்பந்தமா யிருக்கிற பிரசங்கத்தைப் பண்ண வேண்டியிருந்தால் அதிலே
பிரயோகிக்கத்தக்க வார்த்தைகள் ஏதென்றும் எந்தவிதமுள்ள பொருள்கள் அவ்
விடத்திலே யிருக்கிறதென்றும் அங்கீகரிக்கத்தக்கதிலேயும் வார்த்தைகளின் பிர
யோகத்திலேயும் வஸ்துக்களுடைய அங்கீகாரத்திலேயும் அறியாதமனுஷரிடமிருந்த
படியாது வித்தியாபாரகராயிருக்கிற குருவைக்கேட்கக் கடவான்.

இந்த அவசரத்திலே முழுமனுஷருடைய வொடுக்கமென்று சொல்
லுவேண்டி யிருக்கச்செய்தே லோகமுடிந்த பிற்பாடு மரணத்தையடைந்த யா
வர்களுஞ் சர்வத்துக்கும் வல்லவரான சர்வேசுரனானவர் தனதுஅனந்த பெல
த்தைக் கொண்டு மாங்கிஷ உத்தானத்தைக் கட்டளையிடப் போகிறாரென்கிற
அற்புதத்தை யிங்கேவெளிப்படுத்துகிற தென்கிறது கிரமமாகுமென்று காணபி
த்திருக்கிறது. ஆனாலப்படிப்பட்ட பரமரகசியமானது வுண்டாமென்று கேவல
ம் வேதப்பிரமாணத்தினாலே மாத்திரம் நிச்சயமாகக் கண்டுபிடிக்கிறதினாலேயு
ங் கரையேறுகிறதுக்கு அறியவேண்டின பரமரகசியங்களென்னப்பட்ட யாவை
யும் உபதேசித்தபிற்பாடு யிந்தப்பரமரகசியமானது வெளிப்படுத்தத்தக்கதா யிருக்
கிறதினாலேயும் ஞானோபதேசத்தின் மூன்றாங்காண்டத்திலே கடைசிப்பாடங்களி
லே கர்த்தனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே யெவ்வளவாகிலும் வெளிப்படுத்து
வோமென்கிறதுக்காக அதையிவ்விடத்திலே யறியப்பண்ணுமலிருக்கக்கடவோம்.

தப்பில்லாக்கிரமத்தோடு சகலத்தையும் நடத்துகிற கர்த்தரானவரிப்போதிருக்கிற வழிப்போக்கரான மனுஷருக்குநன்மைகொடுக்கிறவகையிலேநடத்துகிற விதமானது குற்றமற்றஞாயமுள்ள கிரமமாயிருக்கிறதென் றங்கீகரிக்கக்கடவோம். அதேதென்றால் மனுஷனுடைய பிரயாசமில்லாமல் மனுஷனையடையப்பண்ணி மனுஷனுடைய சுபாவத்துக்கு வேண்டியிருக்கிற நன்மைகளை மனுஷனுடைய பிரயாசமில்லாமல்வித்தை முதலானவிசேஷநன்மைகளானதுகளைப் புத்தியறிந்தமனுஷன் பிரயாசப்பட்டு யடையவேணுமென்று கட்டளையிட்டருளினதொழிய எப்போதுநடக்குமேரையை விசாரிக்குமிடத்தில் மனுஷனானவன் பிரயாசப்படாமல் வித்தைமுதலான நன்மைகளை யடையமாட்டானென்று யனுபவசித்தியினாலே கண்டுகொண்டு வருகிறோம். இதுகுறையற்ற கிரமமாயிருக்கையிலே புத்தியறிந்த மனுஷன் தனதுசுபாவத்துக்கு மிகவுமேலானதாயிருக்கிறநன்மையாகிற மோக்ஷத்தை மிகவும் பிரயாசப்பட்டு அதையடை[illegible]தென்கிறது குறையற்ற [illegible]துக்கொத்திருக்கிற தென்கிறதுக்குத்தப்பாது.

அதேதென்றால் புத்தியறிந்தமனுஷன் மிகவும் பிரயாசப்பட[illegible]து சுபாவத்துக்கு மேலானதாயிராத நன்மையாகிற வித்தைமுதலானதுகளை அடையமாட்டாதபோதே தனது சுபாவத்துக்கு மிகவுமேலானதுமா[illegible]ன்றைக்கும் நிற்கத்தக்கதுமாயிருக்கிற குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தை மனுஷனானவன் மிகவும் பிரயாசப்பட்டு அடைகிறதென்கிறது குறையற்றஞாயமென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே சிறுபிள்ளைகள் உட்பட்ட ஞானஸ்நானத்தினுசாரத்தினாலே தேவ இஷ்டமுதலான வரப்பிரசாதங்களையு மோக்ஷத்தையு மடையும்போது அந்தநன்மைகளெல்லாமொருத்தர் பிரயாசப்பட்டதினால் அதுகளுக்குவருமொழிய மற்றப்படியல்ல. இந்தவிசேஷ திவ்விய கிருபையானது புண்ணியம்பண்ணிப் பிரயாசப்படமாட்டாத சிறுபிள்ளைகளிடத்திலே விளங்குகிறதென்கிறது பராபரனாகிய கர்த்தனுடைய திருவுளத்துக் கேற்றிருக்குமாப்போலே புத்தியறிந்து ஆனபுண்ணியங்களைப் பண்ணுகிறதுக்கு வல்லவர்களாயிருக்கிற மனுஷரானவர்கள் தனதுசுவாதந்திரியமுள்ள மனதைக் கொண்டு கனபாவமென்னப்பட்டதுகளையெல்லாந்தவிர்த்து சகலநிர்மலபுண்ணியவழியின் நெறியை யனுசரித்து திவ்வியகிருபையினாலே யிப்படிப்பட்ட பிரயாசைப்பட்டு மோக்ஷக்கரை யேறுகிற[illegible]கிறது ஆண்டவனுடைய பரிபூரணநீதிஞாயத்துக்கும் குறையற்ற கிருபைக்கு[illegible]திருக்கிறதென்று சந்தேகமற அங்கீகரிக்கக்கடவோம்.

அவ்வண்ணமே ஒன்றுமில்லாத காலத்திலுன்னை யுண்டாக்கின கர்த்தரானவர் உன்னையல்லாம லுன்னைக் கரை யேறத்தக்க தில்லை யென்கிற வாக்கியமானது புத்தியறிந்து குறையற்ற சுவாதந்திரியத்தோடுநடக்கிற மனுஷனிடத்திலே சந்தேகமற வொப்புக் கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகுமென்கிறதுக்குத்தப்பாது. யிந்தவாக்கியத்துக்கு அர்த்தமேதென்றால் நீபிரயாசப்படாமலுன் மனசு ஆமல்லவென்று சொல்லாமல் உன்னைக்கர்த்தருண்டாக்கினதென்கிறது உன்னையல்லாமல் உன்னைக் கர்த்தனுண்டாக்கினாரென்கிற பதங்களுக்கு அர்த்தமாகும். நீபிரயாசப்பட்டு உனது சுவாதந்திரியமான மனசோடு பாவமென்னப்பட்டதுகளையெல்லாந்தவிர்த்து நிர்மலபுண்ணியவழியிலே நீ நடவாமல் உன்னைக்கர்த்தரானவர் மோக்ஷக்கரை யேறத்தக்க தில்லை யென்கிற வாக்கியமானது உன்னையல்லாமல் கர்த்தன் உன்னைக்கரை யேறத்தக்கதில்லை யென்கிற அர்த்தத்தைத் தொ

லும். இதுயிப்படியிருக்கையிலே யினிமேல் வெளிப்படுத்தத்தக்க விசேஷங்களைத் துலக்கமாகக்கண்டு பிடிக்கும்படிக்குப் புத்தியுடைத்தான பொருளின்சுவாதந்திரியமானது பிரியும் விதத்தைத்தெளிவிக்கக்கடவோம்.

அதேதென்றால் அப்புத்தி யுடைத்தான பொருளுக்குக் கர்த்தரானவர் கொடுத்தசுவாதந்திரியமானது புத்தியுடைத்தானபொருளை முழுதும்விட்டுப் பிரியுமென்றுசொல்லவொண்ணாதிருக்கையிலே புத்தியுடைத்தான பொருளானது அடைந்திருக்கிற அவஸ்தைக்குத்தக்கவகையாக அதினுடைய சுவாதந்திரியமானது வெவ்வேறே மேரையைக்கொண்டிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணும். அதெப்படியென்றால் குறையற்றபாக்கியமென்கிற மோக்ஷமான அவதியையடைந்த பேர்களுடைய சுவாதந்திரியத்தைப் பத்திரம்பத்தாய் விசாரிக்குமிடத்தில், மோக்ஷவாசியினுடைய சுவாதந்திரியமானது நன்மையிலே நிலை கொண்டதுமாய்க் குறையாகிறபாவத்திலே விழமாட்டாததுமாயிருக்கக்கொள்ள கேவலங்குறையற்றசுவாதந்திரியமென்கிற நாமமானதும் தர்மமாத்திரம் விஷயக சுவாதந்திரியமென்கிறபேருமதுக்குச் செல்லுமென்று சொல்லவேண்டியிருக்கிறது. நன்மையின்கலப்பில்லாத பொல்லாப்பாகிற நரகமென்கிற அவதியையடைந்த பாவிகளுடைய சுவாதந்திரியமானதோ வென்றால் குறையற்ற திவ்விய நீதியாக்கினையின் மேரையாக அதுபாவத்திலே நிலைகொண்டதுமாயப்பாவத்தைவிட்டுத் தர்மத்திலே திரும்பாததுமாயிருக்கிறதினால் பாபமாத்திரம் விஷயகசுவாதந்திரியமென்று சொல்லவேண்டியதொழிய மற்றப்படியல்ல. அப்படியேயிந்த இரண்டுவகையுள்ள மேரைகளைப்பார்க்கும்போது அப்படிப்பட்ட சுவாதந்திரிய மிரண்டுக்குஞ் சுவாதந்திரியமென்கிற நாமமானது செல்லுமென்று சொல்லவேண்டியிருந்தாலுமொன்றுக்கொன்று மிகுந்தவேற்றுமையாயிருக்கிறதென்கிறதுக்குத்தப்பாது. அதேதென்றால் மோட்சவாசியினுடைய சுவாதந்திரியமானது நன்மையிலே நிலைகொண்டு நன்மையைவிட்டுப் பாவத்திலேவிழமாட்டாததாயிருக்கையிலே பலபலநன்மைகளுக்குள்ளே மோக்ஷவாசியானவர் தனதுயிச்சைப்படியே அந்தந்தப்புண்ணியவிசாரமுதலான நன்மைகளைத்தெரிந்து கொள்ளத்தக்கதாக வல்லவராயிருக்கிறாரென்கிறதுக்குச்சந்தேகப்படக்கணக்கில்லை. நரகத்திலே யெண்ணப்படாதநஸ்திநோவுபாதைகளை யனுபவிக்கிற பேர்களுடைய சுவாதந்திரியத்தைப் பார்க்கும்போது அதுபாவத்திலே நிலைகொண்டு பாவத்தைவிட்டுப்பிரிந்து சொற்பநன்மையிலேயாகிலுந் திரும்பமாட்டாததாயிருக்கையிலே அப்படிப்பட்ட சுவாதந்திரியத்தையுடைத்தான பிசாசுகள் முதலான பாவிகளானபேர்கள் பலபலபாவங்களுக்குள்ளே சிலதுகளைத்தெரிந்து[illegible]கிறார்களென்று சொல்லவேணும்.

இதிலேதப்புவாராதபடிக்குச் சாதாரணமாய் வார்த்தைகளை நடத்தியங்கீகரிக்கத்தக்க விசேஷங்களை மாத்திரமங்கீகரிக்கக்கடவோம். அதேதென்றால் திவ்விய நீதியுள்ளகற்பனைப் படியேநரகத்திலே யிருக்கிற அந்தப்பாவிகளுக்குப் பாவத்தோடேகூட யிருந்ததுக்கமனஸ்தாபங்களை வருத்திவிக்கிற சிலவிசாரங்களுண்டு அதுகள்பாவிகளனுபவித்துக் கொண்டுவருகிற சுபாவமாக ஆக்கினைவேதனைக்கு அடுத்ததுகளாயிருக்கச்செய்தே அப்படிப்பட்ட துக்கவிசாரங்கள் பாவிகளையொருக்ஷணமாகிலும் விட்டுப்பிரிய மாட்டாது. அதேதென்றால் நரகத்திலே யிருக்கிற பாவிகள் பூமியிலேயிருக்கிறபோது பண்ணினபாவங்களுக்குத் திவ்விய திருவுளத்தின்படியே கற்பிக்கப்பட்ட சரிசமான ஆக்கினைவேதனையானது யென்றென்றைக்குமொருகணமும் சிராய்ப்பாவிகளை யுபாதிக்குமொழிய அப்படிப்பட்ட நஸ்திவேதனையிலே ஒரு அற்பமாகிலும் விகாரம் வரமாட்டாது. ஆதலாலே அப்படிப்பட்ட நஸ்திவேதனைக்குச் சாக்ஷாத்துக்காரணமாயிருக்கிற பாவவிசாரங்க

ள் ஒருகண்டசிராயென்றென்றைக்கும் முன் சொல்லப்பட்ட பிசாசுகள் முதலா
னபாவிகளிடத்திலே யுண்டாயவர்களை யூழியுள்ள காலம் ஒருவிதமாக வுபாதிக்
குமொழிய வொருக்ஷணமாகிலும் அப்படிப்பட்ட விசாரங்களவர்களை விட்டுப்
பிரியத்தக்கதில்லை. இந்தப்பாவவிசாரங்கள் தவிர வேறேயனேகம் பாவவிசாரங்க
ளுக்குள்ளே முன் சொல்லப்பட்ட சுவாதந்திரியமுடைத்தான பிசாசுகள்முத
லான பாவிகள் வேறேசில விசேஷபாவங்களுக்குச் சம்மதப்படலாமென்று சொல்
லலாயிருக்கிறது. இந்தமேரையானது நன்மைவிஷயத்திலே மோக்ஷவாசிகளுக்கும்
நடந்துவருகிறதென்று அடவாயோசிப்பாயாக. மோட்சவாசிகளுக்கும் நரகத்திலே
யிருக்கிற பிசாசுகள்முதலான பாவிகளுக்கும் நடந்துவருகிற சொல்லப்பட்டயிர
ண்டுவகையுள்ள சுவாதந்திரியங்கள் தவிரப் பூமியிலே திரிகிற வழிப்போக்கரா
னவர்களிடத்திலே வழங்கிவருகிறசுவா தந்திரியமானது வழிக்குத்தக்கஅடைவு
ள்ளதாயிருக்கக்கொள்ள முன் சொல்லப்பட்ட யிரண்டுவகையுள்ள சுவாதந்திரி
யங்களுக்கு யிது மிகுந்த வேற்றுமையா யிருக்கிற தென்று கண்டு வருகிறோம்.
அதெப்படியென்றால் வழியானது யேக ரூபமாயிருக்கக் கொள்ள அந்நியோ
ன்னியமா யத்தியந்த விரோத குணங்களில்லாமல் நன்மைதின்மை விஷயங்க
ளிலே ஒருகண்டசிராய் மேரையானது அவதியிலே காணப்படுமொழிய மற்றப்
படியல்ல. ஆனபடியினாலே அற்பமாகிலும் பொல்லாப்பின் கலப்பில்லாத நன்மை
யாகிற மோக்ஷமென்கிற அவதியிலே புண்ணிய சொரூபமா யிருக்கிற நன்மையெ
ன்னப்பட்ட யாவும் பரமசுகத்தின் கலவியும் விளங்கிவருகிற தொழிய நன்
மைக்கு விருத்தமான பாவத்தின் பொல்லாப்பும் துக்கத்தின் தீவினையும்படிப்
பட்ட அவதியிலேயிருக்கிற பேர்களை யண்டவாமென்று சொல்லவுங்கருதவுங்கூ
டாது. இத்தன்மையாக அற்பமாகிலும் நன்மையின் கலப்பில்லாத வெறுக்
கப்படத்தக்க துர்க்கதமாகிற பொல்லாப்பான நரகமென்கிற அவதியிலே பாவ
த்தின் தீவினையும் வேதினையினுடைய தின்மையுங் காணப்படுகிற தொழியத்
தர்ம சுகமென்கிற நன்மை யிரண்டும் நரகமாகிற அவதியிலே யுண்டா யிருக்கிற
தென்று சொல்லக்கூடாது.

இதிப்படியிருக்கையிலே பூமியிலேதிரிகிற மனுஷரானவர்கள் வழிப்போக்க
ரா யிருக்கக் கொள்ள வழிக்கான மேரையுள்ள சுவாதந் திரியத்தைக் கொண்டிரு
க்கிறார்க ளென்கிறதுக்குத் தப்பாது. அதெப்படியென்றால் வழியின் சுபாவசொ
ரூபத்தை விசாரித்தோமானால் வழியானது யிடதுபாரிசம்வலது பாரிச மென்கிற
யிரண்டிலுந் திரும்பு மென்கிறதுக்காக வழிப்போக்கனாயிருக்கிறவன் வழியின் வ
லது பாரிசத்தை விட்டு யிடது பாரிசத்தி[illegible]க்கலாமென்றுஞ் சொல்ல வேண்
டியிருக்கிறது யித்தன்மையாகப் பூமியிலேயிருக்கிற மனுஷர்களினாலே நடக்கப்படு
கிற வழியானது வலதுபாரிசமாகிற புண்ணியத்திலேயும் இடதுபாரிசமாகிற பா
வத்திலேயும் பிரிந்து போகிற தென்று கண்டுகொண்டு வருகிறோம் ஆனபடியினா
லே யிப்படிப்பட்ட வழிக்குத்தக்க மேரையுள்ள சுவாதந்திரியமானது வலதுபா
ரிசப் புண்ணிய வழியிலேயும் இடது பாரிசமாகிற பாவ வழியிலேயுந் திரும்புகிற
துக்கு வல்லதா யிருக்கிற தென்று சொல்ல வேண்டி யிருக்கிறது. இப்படி சொல்
லாமல் பலபல புண்ணியத்திலே மாத்திரமாகிலும் பலபல பாவத்திலே மாத்திர
மென்கிலும் பூமியிலே திரிகிறமனுஷருடைய சுவாதந்திரியமானது திரும்புகிறதுக்
குவல்லதா யிருக்கிறதென்று சொன்னோமானால் அப்படிப்பட்ட சுவாதந்திரியமான
து அவதிக்குத்தக்கமேரையுள்ள சுவாதந்திரியமென்று சொல்லத்தகுமொழிய வழி
க்கானவகையுள்ள சுவாதந்திரியமாயிருக்கிறதென்று சொல்லக்கூடாது.

இதுதவிரப் புத்தியுடைத்தான பொருளென்னப்பட்ட யாவுமுண்டாக்கப்
பட்டதா யிருக்கக்கொள்ள அதினுடைய சுபாவபெலத்தைப் பார்க்கும்போது

அதுநல்வினை தீவினை யிரண்டிலும் நிலை கொள்ளாததுமாய்க்குறையுள்ளதுமா யி
ருக்கிறதென்று சொல்லவேணும். ஆதலாலே புத்திபுடைத்தான பொருளான
து தனது சுவாதந்திரியத்தின் பலத்தைக் கொண்டு திவ்வியகிருபாகடாக்ஷத்தினா
லே சகல கிரியைபுண்ணிய வழியிலே நடக்கிறதுக்கு வல்லதாயிருக்குமாப் போ
லே தனது சுவாதந்திரிய தற்பெலத்தின் குறையினாலே புண்ணியமாகிற நன்
மையைவிட்டுக் குறையாகிற பாவத்திலே விழுவோமென்று அற்பமாகிலுஞ் சந்
தேகமில்லாமல் ஒப்புக்கொள்ளத்தக்க சத்திய விசேஷமாகும் இதிப்படியிருக்
கையிலே பாவிகளும் புண்ணியவான்களும் என்கிற யிரண்டு வகையாக மனுஷ
ரென்னப்பட்ட யாவரும் பிரிகிறார்களென்று சொல்ல வேண்டி யிருக்கிறது.
இப்படிப்பட்ட யிரண்டுவகையிலே பிரிந்த பாவிகளும் புண்ணியாத்துமாக்
களும் நடக்கிறபாவபுண்ணிய வழிகளிரண்டையும் விசாரிக்குமிடத்திலொன்றுக்
கொன்று சொல்லப்படாத விருத்தமேரையுள்ளதா யிருக்கிறதென்கிறதுக்குத் தப்
பாது. அவ்வண்ணமே பாவவழியானது யிடதுபாரிசமென்கிற பேர்பெற்றுவலது
பாரிச வழியென்கிறதாமினாலது நிலைபுண்ணியவானுக்குச்செல்லுமென்றுசொல்
லப்படுவாம்.

ஆதலாலே யிப்படிப்பட்ட வழிகளிரண்டுக்கு முண்டான சுபாவரூப
மானது சகலத்திலே முழுவேற்றுமை யுண்டாயிருக்கிறதென்று சந்தேகமற்ற சத்
திய விசேஷமாகும். அவ்வண்ணமே பாவவழியானது புண்ணியவழி யென்னப்
[illegible] யாவையுந் தள்ளிப்போட்டுப் புண்ணியமான வழியானது வொரு அற்
பப்பாவத்தையாகிலும் அங்கீகரிக்கமாட்டாது. பின்னையும் பாவமான வழியான
து அருவருக்கப்படத்தக்க துர்க்கந்தச் சேற்றுக்குங் களமான அந்தகாரத்துக்
குஞ்சரியானமேரையுள்ளதென்றுசொல்லவேண்டியிருக்கச்செய்தே புண்ணியமா
னவழியானது அங்கீகரிக்கப்படத் தக்கபரி சுத்தமானதுமாய்ப் பானுசோதியினா
லே பிரகாசிக்கப்பட்டதுமா யிருக்கிற தென்று சொல்லத்தகும். இதன்றியேபா
வமானவழியானது சகல நீதிக்கொவ்வாததா யிருக்கக் கொள்ள அதிலே நடக்
கிற பாவிகள் பன்றி, நாய், நரி, முதலான செந்துக்களைக் காட்டிலுங் கெட்டமிரு
கங்களுமாய்ச் சர்வேஸ்வரனாலே யருவருக்கப்பட்ட பேர்களுமா யிருக்கையிலே
புண்ணியமானவழியானதோ வென்றால் அதுகுறையற்ற நீதிக்கொத்திருக்கிறதுமா
ய்ப் பழுதற்றபுண்ணிய ரூபமானதுமாயிருக்கக்கொள்ள அதிலே நடக்கிற பூவாசி
களா யிருக்கிற மனுஷரானவர்கள் சம்பனசுக்களென்கிற பேர்பெற்றுத்தயாபரனு
ன பிதாவாகிய கர்த்தனுக்கு மிகவும்உகந்தபிள்ளைகளாயிருக்கிறார்களென்கிறதுக்
குச் சந்தேகப்படத்தகாது. இதுதவிர, நாய்,பன்றிமுதலான மிருகங்களுக்குமனு
ஷனுக்குஞ் சாதாரணமான துர்[illegible] போஜனாதி போகங்களினாலேநிறைந்ததா
யிருக்கிறபாவவழியிலே நடக்கிறபேர்கள் அப்படிப்பட்ட துர்க்கந்தசுகங்களைப்பல
காலுமனுபவித்துக்கொண்டு வருகிற[illegible]புத்திகெட்ட பேர்களாய்ப் போகி
றதும் போராமல் சுத்தமிருகங்களுடைய மதியில்லாத தனத்தையும், பிசாசுக்கா
ன சுவாமித் துரோகத்தையுங் கொண்டிருக்கிறார்களொழியக் கேவலமனுஷருக்கான
குணத்தைக்கொண்டிருக்கிறார்களில்லை. தருமரூபமானவழியோவென்றால் அதுமி
கவுங் கடினதபசுடையவ கைகளினாலேயும், பரிசுத்த சன்னியாச தருமத்தினாலே
யும் மோகமாகிற பாவ மற்ற சமுசாரதரு மத்தினாலேயும், மற்றுண்டான சகலசுகி
ர்த சிங்காரத்தினாலேயும். அலங்கரிக்கப்பட்டதா யிருக்கச்செய்தே அப்படிப்பட்ட
வழியிலே நடக்கிறபேர்கள் பரிசுத்தபுண்ணியாத்துமாக்களுமாய், மிகவுமிஷ்டகந்
தமான சகலசுகிர்தவாசனை பரிமளங்களைக் கொண்டிருக்கு திவ்விய பரமரகசியங்க
ளைக்கண்டு பிடிக்கிறதுக்குக் கர்த்தனுடைய கிருபாகடாக்ஷத்தினாலே மிகவுங் கூர்
மையுள்ள புத்தியுடைத்தா னதுகளாயிருக்கிறதும் போராமல் நல்லமனுஷருக்கா

ன சுகிர்தகுணங்களைக்கொண் டிருக்கிறதுந் தவிர மோக்ஷவாசிக்கான திவ்விய மகிமையுள்ள குணங்களுடைய சாயலைப்பிரபோக்கனுக்குக் கூடினமேரையாகக் கொண்டிருக்கிறார்களென்று சொல்லவேண்டியிருக்கிறது.

கடசியாய் விஸ்தாரமான பாவவழியானதுக்குப் பாதாளமானநரகமானது அவதியாயிருக்கக்கொள்ள அதுயிறக்கத்துக்குச் சமானமானதென்று சொல்லப்பட்டுக் கோடாகோடிகளாகிற பாவிகளுடைய கூட்டங்கள் தங்களுக்கு முழுக்கேடாகவிழுந்தும், கெட்டும், அப்படிப்பட்ட பாவவழியிலே நடக்கிறதென்று கண்டுகொண்டுவருகிறோம். பாவவழிக்கு மிகவும்விருத்தமான புண்ணியவழியானது பத்தும்பத்தாய் விசாரிக்கப்பட்டால் அது ஓடிப்பாடாயிருந்து பலபலபாரமான பிரயாசங்களோடே அதிலே நடக்கவேண்டியிருக்கிறதினாலே புண்ணிய வழியானது ஏற்றமானதுக்குச் சமானமாயிருக்கிறதென்று சொல்லப்படும். அதிலே நடக்கிற புண்ணியவான்களுடைய சபையானது மிகவுங் கொஞ்சமாயிருக்கிறதென்று அநுபவசித்தியினாலேயும் வேதப்பிரமாணத்தினாலேயும் நிச்சயம் பண்ணிக்கொண்டு வருகிறோம். அவ்வண்ணமே பாவ புண்ணிய வழிகளிரண்டுக்குஞ் சொல்லப்பட்ட வித்தியாசங்கள் முதலான யெண்ணப்படாத அநேகவின்ன பேதகங்களுண்டாயிருக்குமாப்போலே யதுகளுக்குண்டாயிருக்கிற அவதிகளிரண்டுக்கு மனோவாக்குக்கெட்டாததாயிருக்கிற மிகுந்தவேற்றுமை யுள்ளதாயிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் முழுமனதோடே அங்கீகரிக்கக்கடவோம். அப்படியே தக்கிஷமாகிற யேற்றமான புண்ணியவழிக்குச் சகலஸ்தலங்களைக்காட்டிலும் உன்னதமானஸ்தலமாகிற மோக்ஷமானது அவதியாயிருக்கையிலே சகலஸ்தலங்களைக் காட்டிலுங் கீழ்த்தரமானஸ்தலமாகிற நரகமானது யிறக்கமாகிற பாவவழிக்கு அவதியாயிருக்கிறதென்று பலபலநியாயங்களினாலேயும் வேதப்பிரமாணத்தினாலேயும் அங்கீகரிக்கக்கடவோம். ஆனாற்குறையற்ற பாக்கியமாகிற மோக்ஷத்தின் மேரையானது முப்பத்துநாலாம்பாடத்திலேயு முப்பத்தஞ்சாம் பாடத்திலேயும் எவ்வளவாகிலும் மின்னதென்று ஒப்புவிக்கப்பட்டாப் போலேயாச்சுது. இனியிந்தப் பாடத்திலேயும் வருகிறயிரண்டு பாடங்களிலேயும் நரகத்தினுடைய மேரை யின்னதென்று யெவ்வளவாகிலும் வெளிப்படுத்தவருந்துவோம்.

இதிலே முக்கமுக்க அறியவேண்டினதாவது மோக்ஷமாகிறவொடுக்கத்தை மனுஷரானபேர்களடைய வேணுமென்று மனுஷரைக் கர்த்தரானவருண்டாக்கினாரென்று அங்கீகரிக்கவேணுமொழிய ஒடுக்கமானநரகத்திலே மனுஷரானபேர்கள் விழவேணு மென்கிறதுக்காகக் கர்த்தரானவர் அவர்களை யுண்டாக்கினாரென்று சொல்லவு மெண்ணவுங்கூடாது. இந்தப் பரமரகசியத்தின் அடைவைத்தப்பில்லாமற் கண்டுபிடிக்கிறதென்கிறது அரிதென்று சொல்லவேண்டியிருக்கையிலே அப்படிப்பட்ட பரமரகசியமானது [illegible]க்கு எவ்வளவாகிலும் விளங்கும்படிக்குக் கர்த்தனுடையகிருபாகடாக்ஷத்தினாலே பிரயாசைப்படுவோம். நாம்சொல்லத்தக்கதை யெல்லாருந் தெளிவோடே கண்டுபிடிக்கிறது அருமையாயிருக்கக்கொள்ள நாம் சொல்லத்தக்கதை ஆக்ஷேபமின்றி சாவதானமாக யெல்லாருங்கேட்டுமனதிலே பற்றுதலோடே வைக்கக்கடவார்கள்.

அதேதென்னில் தானாயிருக்கிற பராபரவஸ்துவாகிற கர்த்தரானவர் அற்பமாகிலும் விகாரமில்லாமல் எப்போது மொருகண்டிராயநாதியாயிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது. ஆனபடியினாலே ஸ்திதி முதலான விஷயங்களிலேயும் அவனையுந்தேசித்து வர்த்தமானகால மொரு கண்டசீரவெப்போது மிருக்கிறதென்று அங்கீகரிக்கவேணுமொழிய அவனாக்கிர்த்தித்துப் பூதபவிஷ்ய காலங்களிரண்டுமுண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வொண்ணாது. ஆதலாலே கர்த்தரானவர் தாம் சகலத்தையும் அறிகிறதிலேயும், அதையுமிதையுங் கற்பிக்கிறதிலேயும் பூர்வாபர மேரையானது வுண்டாயிராமல் அநாதிதனத்தின் சன்னிதானத்திலே அதெல்லாத்தையும் அந்த தெளிவோடே கண்டிருக்கிறாரென்றும் ஸ்திரமான ஞானத்தின் திருவுளத்தினாலே அவரவருக்கு அதையுமிதையுங் கொடுக்கிறதுக்குத் திருவுளமாயிருக்கிறாரென்றுஞ் சந்தேகமற அங்கீகரிக்கத்தக்கதாகும். இதுக்குக்காரணமேதென்னிற் கர்த்தரானவர் விஷயங்களைக்கண்டாலும், விஷயங்களுடையபிரதிபிம்பங்களைக் கொண்டென்கிலும் விஷயங்களை அறியாமல் அருதலரிகிற தம்மைத்தாங் கண்டியிருக்கிறதினாலே எல்லாத்தையுங் கண்டிருக்கிறாரென்கிறதுக்குத் தப்பாது. ஆகையாலே அவரிடத்திலே பூருவாபரவிகாரமானது வுண்டாயிராதென்று அங்கீகரிக்கப்படுமாப்போலே சகலத்தையுமவரறிகிறவிதத்திலே பூருவாபர மேரையானது வுண்டாயிராதென்று ஒப்புக்கொள்ளத்தக்க சத்தியமாகும்.

அவ்வண்ணமே இவ்வித அநாதிதனத்தினுடைய சன்னிதானத்திலே பூருவாபரகிரமமானது மெய்யாகவே யுண்டாயிராதிருந்தாலு மிப்போ நாம் வெளிப்படுத்தத்தக்க பரமரகசியமுதலான வேறேசில பரமரகசியங்களை யடைவாக வெளிப்படுத்தும்படிக்குப் பிரமவாதிகளாயிருக்கிறவர்கள் சருவேசுரன்சகலத்தையுங் கண்டுகொண்டு வருகிறதிலேயும் அவரவருக்கு ஆக்கினைசம்பாவனை கட்டளையிட்டருளுகிறதிலேயும் பூருவாபரமேரையை யொருவழியாக விதித்துக்கொண்டு வருகிறார்கள். அதெப்படியென்றால் சருவேசுரன் அநாதியாகக்கண்டுகொண்டு வருகிறவிஷயங்களுக்குள்ளே யொன்றுக்கொன்று காரணமாயிருக்கிறதென்று காணும்போது வொன்றின்நிமித்தமாக வொன்றைத்தாம் கட்டளையிடத்தக்கதாகத் திருவுளமுண்டாயிருக்கிறதிலேயும் அதெல்லாம் அநாதித்தனத்தின் சன்னிதானத்திலே சர்வேசுரனுக்கு ஆசன்னமானதாயிருந்தாலுங் காரணமான விஷயமானது முன்னே அவராலே காணப்படுகிறதென்றும், காரியவிஷயமானது பின்னே காணப்பட்டதென்றுஞ் சொல்லத்தகும். இத்தன்மையாக ஒன்றின் முகாந்திரத்தினாலே யொன்றைச் சர்வேசுரன் கட்டளையிட்டால் அதிலே பூர்வாபரமேரையை விதிக்கிறதென்கிறது வேதபாரகருக்குச் சம்மதமாச்சுது, இதெல்லாம் வெளியாகும்படிக்கு ஒன்றிலேகாட்டக்கடவோம்.

யாதொருத்தன் மகாபாவத்தைப் பண்ணினதினாலே கோரதபசைப்பண்ணினானால் இந்தவிஷயங்களிரண்டை [illegible] அநாதியாகக் கண்டிருந்தாலுங் காணப்பட்ட யிந்தயிரண்டுவிஷயங்களுக்குள்ளே தபசுக்குப்பாவமானது காரணமாயிருக்கிறதினாலே பாவமானது முன்னேயுந் தபசானது பின்னேயுங் கர்த்தனாலே காணப்பட்டதென்று சொல்லுவார்கள். இத்தன்மையாகப் பாவத்தின் முகாந்திரத்தினாலே பாவியானவனை நரகத்திலே தள்ளத்தக்கதாகக் கர்த்தரானவர் அநாதியாய்த் திருவுளமாயிருக்கையிலே பாவமுநரகமு மிரண்டுக்குநிமித்தம் நிமித்தஜமு மென்கிற மேரையானதுண்டாயிருக்கக்கொள்ளப் பாவியினுடைய பாவத்தைக் கர்த்தரானவர்கண்டபிறபாடு அவனைநரகத்திலே தள்ளத்தக்கதாகத் திருவுளமானாரென்று சொல்லத்தகுமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யிப்படிப்பட்டதிவ்விய விஷயங்களுக்குள்ளே காலத்தினுடைய பூர்வாபரியமில்லையென்றுசொல்லு லக்ஷியலக்ஷணத்தின்மேரையுள்ள பூர்வாபரியமானது வுண்டாயிருக்கிறதென்று அங்கீகரிக்கத்தகும்.

இவ்விதமாக விதெல்லாம் வெளிப்படுத்தப்பட்டிருக்கையிலே மனுஷனானவன் மோக்ஷஅவதியையடைய வேணுமென்கிறதுக்காகக் கர்த்தனாலே யவனுண்டாக்கப்பட்டதொழிய, ஒடுக்கமாகிற நரகத்திலே மனுஷன் விழவேணுமென்று மனுஷனைக் கர்த்தனுண்டாக்க யில்லையென்கிற பரமரகசியத்தின் அடைவையெப்

வனவாகிலுங் கண்டு பிடிக்கவருந்தக்கடவோம். அதெப்படியென்றால் தானயிருக்கிற தயாபரனான கர்த்தரானவர் தாம் அனந்தபரமானந்த சொரூபமாயிருக்கிறாப்போலே குறையற்ற அனந்தமாகிற மோக்ஷத்தைப் பத்தியுடைத்தான மனுஷரென்னப்பட்ட யாவரும் அடையவேணுமென்று யித்த கோடாகோடி மனுஷரையுண்டாக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் அனுதியாயிருந்த திருவுளமானார். அவரனந்த நீதிசொரூபராயிருக்கக்கொள்ளத் தமக்கேற்பதாயிருக்கிற புண்ணியங்கட்கைகளினாலே மோக்ஷத்தை மனுஷனடையத்தக்கதாக அவருக்குத் திருவுளமுண்டாயிருந்ததொழிய மற்றப்படியல்ல மனுஷரானபேர்கள் தங்களுக் குண்டான சுபாவபெலத்தைக் கொண்டு அவசியமாகிற மோக்ஷசாதகமான புண்ணியங்களைப் பண்ணுகிறதுக்கு வல்லவர்களாயிருக்கிறார்களில்லையென்று கர்த்தரானவர் பார்த்து அவர்கள் மோக்ஷசாதகமான புண்ணியங்களைப் பண்ணுகிறதுக்கு வேண்டினதிவ்விய சகாயங்களையும் பலபல கிருபைகளையும் அவரவர்களுக்குப் பண்ணத்தக்கதாகக் கர்த்தரானவர் ஸ்திரமுள்ள மனசாயிருந்தார்.

இதுவரைக்குஞ் சொல்லப்பட்டதில் நிமித்தம் நிமித்தஜம் என்கிறவிரண்டுக்குமுண்டான மேரையை விசாரித்தோமானால் குறையற்றபாக்கியமென்கிற மோக்ஷத்தை ஆன புண்ணிய சரித்திரங்களைக் கொண்டு அடையவேணுமென்கிறதுக்காக மனுஷரையுண்டாக்கிறதென்கிற திவ்விய திருவுளமானது பராபரவஸ்துவிடத்திலே விசாரிக்கப்படத்தக்க திருவுளங்களுக்குள்ளே முந்தின திருவுளமாகும். மோக்ஷசாதகமான புண்ணியங்களை மனுஷனானவன் நிறைவேற்றத்தக்கதாக ஆனகிருபைமுதலான திவ்விய சகாயங்களைத் தயாபரனான கர்த்தரானவர் மனுஷனுக்குப் பண்ணவேணுமென்கிற கருணையுள்ள கருத்தானது முந்தின திருவுளத்தின் வத்தினால் அப்படிப்பட்ட திவ்விய திருவுளங்களிரண்டிலே, நிமித்தம் நிமித்தஜம் என்கிற பூர்வாபர மேரையானது விளங்கிவருகிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க கிரமமாகும். அவ்வண்ணமே முன்சொல்லப்பட்ட திவ்விய திருவுளங்களிரண்டும், காலப்பிரமாணத்திலே முன்னதுபின்னதுகளாயிராமல் இரண்டும் அனுதியாகக் கடவுளிடத்திலே யிருக்குதென்று சொல்லவேண்டியிருக்கையிலே நிமித்தம் நிமித்தஜ மென்கிற நியாயத்தினாலே முன் சொல்லப்பட்ட திருவுளங்களிரண்டிலே பூர்வாபரமேரையானது கண்டுபிடிக்கவாயிருக்கிறது.

ஆனால் மனுஷனானவன் அனுசரித்த சரித்திரங்களைக்கொண்டு மோக்ஷபாக்கியத்தைப்பெறுவது [illegible] வேணுமென்கிறதுக்காகத் தயாபரனான கர்த்தன் ஆன திவ்விய சகாயங்களை மனுஷருக்குக் கொடுக்கவேணுமென்கிறதை விசாரித்தப்படு அனந்தஞானமான சர்வேசுரனானவர் அவரவருடைய தாங்கொடுக்கத்தக்க சகாயங்களைக் கொண்டு அவனவன் பண்ணுங்கருமங்களை முன்னதாக அறிகிறவராய் மனுஷருக்குள்ளே சிலபேர்கள் தேவசகாயங்களைக் கொண்டு மோக்ஷசாதகமான புண்ணியங்களைப் பண்ணுவார்களென்று கண்டு அப்படிப்பட்ட புண்ணியாத்துமாக்களை மாத்திரம் அவசியமாய் மோக்ஷபாக்கியத்தை யடைவிக்கிறதற்கு அநாதியாய் ஸ்திரமுள்ள திருவுளமானாரென்று அங்கீகரிக்கவேணும்.

ஆதலென்றால் மனுஷரென்னப்பட்ட யாவருக்குங் குறையற்றபாக்கியமாகிற மோக்ஷத்தைக் கொடுக்கத்தக்கதாகக் கிருபையுள்ள திருவுளமுள்ள கர்த்தரானவர் தாமனந்த நீதிபரனாயிருக்கக்கொள்ளத் தனது கிருபையுள்ள முன்சொல்லப்பட்ட திருவுளத்துக்குத் தப்பில்லாத மத்தோடு சித்தியுண்டாக்கத்தக்கதாகப் பண்ணவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே யெல்லாருக்கும் மோக்ஷபாக்கியத்தைக் கொடுக்கவேணுமென்கிற திவ்விய திருவுளமுள்ள கர்த்தரானவர் புண்ணியவான்களுக்கு மாத்திரம் அதைக்கொடுப்பாரென்று சந்தேகமற வெளிப்படுக்கொள்ளத்தக்க குன்றாத சத்தியமாகும். இவ்விடத்திலே சொல்லப்பட்ட வி-

சேஷங்களெல்லாங் கடவுளிடத்திலே அனுதியாயிருந்தாலும் புண்ணியவான்களுக்குமாத்திரம் மோக்ஷத்தைக் கொடுப்பாரென்கிறதுக்காக மனுஷனாலே பண்ணப்படத்தக்க புண்ணியங்களுடைய திவ்விய தெரிசனைக்குப்பிற்பாடு மோக்ஷதான விஷயத் திவ்விய திருவுளமானது கடவுளிடத்திலே முன்சொல்லப்பட்ட நியாயங்களினாலே பிந்தினதென்று யோசிக்கக்கடவோம். மோக்ஷதானத்திலே யுண்டாயிருக்கிற திருவுளமானது சகல மனுஷரிடத்திலேயுஞ் சித்தியாகாதுக்குக் காரணமேதென்னில் முன் சொல்லப்பட்ட பாடங்களிலே சொன்னோமென்கிறதினாலே இவ்விடத்திலே திரும்பச்சொல்லக் கவையில்லை.

இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட விஷயங்களினாலே மனுஷனானவன் குறையற்ற பாக்கியமென்கிற மோக்ஷத்தை யடையவேணுமென்று அவனைச் சர்வேசுரன் உண்டாக்கினாரென்று கண்டுபிடிக்கவாயிருக்கிறதொழிய ஒடுக்கமாகிற நரகத்திலே மனுஷனைத் தள்ளவேணுமென்கிற திருவுளமானது கர்த்தனிடத்திலேயிருந்ததென்று சொல்லலாயிராது. ஆனபடியினாலே நரகத்திலே மனுஷனைத் தள்ளவேணுமென்கிற அனந்த நீதிசொரூபமான திருவுளங்கர்த்தனிடத்திலே யுண்டாயிருந்த வகையை யாராய்ந்து கொள்ளக் கடவோம். அதெப்படியென்றால் மோக்ஷமாகிற குறையற்ற பாக்கியத்தை மனுஷரென்னப்பட்ட யாவருமடையவேணுமென்று மோக்ஷசாதகமான புண்ணியவிருத்திகளை யெல்லாரும் பண்ணுகிறதுக்கு வேண்டினதிவ்விய கிருபையுள்ள சகாயங்களைக் கர்த்தன் கையிலே வாங்கியிருக்கிறபேர்களுக்குள்ளே அப்படிப்பட்ட திவ்விய கிருபையுள்ள சகாயங்களைக் கொண்டு சிலர் தனது சுவாதந்திரியமுள்ள மனதோடு மோக்ஷத்துக்குச் சாதகமான புண்ணியங்களைப் பண்ணுவார்களென்றும் அனந்தஞானசொரூபியாயிருக்கிற கர்த்தரானவர் அனுதியாய் அறிந்திருக்கிறாப்போலே வேறே அனேகம்பேர்கள் கர்த்தன் கையிலே வாங்கின திவ்விய சகாயங்களைத் தங்களுக்குண்டான சுவாதந்திரியமுள்ள மனதைக்கொண்டு சட்டைபண்ணாமல் தங்களையுண்டாக்கின கர்த்தனுக்கு மகாமகாப்பட்ட கனமான துரோகங்களைப் பண்ணுவார்களென்று கர்த்தரானவர் கண்டிருந்ததினால் அப்படிப்பட்ட பாவிகளை நரகத்திலே தள்ளத்தக்கதாகக் கர்த்தனிடத்திலே நீதியுள்ள திருவுள முண்டாச்சுதென்று சொல்லுகிறதொழிய மற்றப்படியல்ல. அப்படியே பாவிகளானபேர்களினாலே தங்களுக்குண்டான சுவாதந்திரியமுள்ள மனதைக்கொண்டு பண்ணப்படும் பாவங்கள் கர்த்தனாலேகாணப்பட்டு அவர்களிருக்கும் நரகத்தினுடைய [illegible]யை அனந்த நீதியுள்ள கர்த்தரானவர் [illegible]யாயிருக்குதென்று சந்தேகமறச் சங்கீகரிக்கத்தக்க குன்றாத சத்தியமாகும்.

ஆதலால் பாவிகளுடைய பாவவிஷய திவ்விய தெரிசனமானதும் நரகத்திலே பாவிகளைத் தள்ளவேணுமென்கிற திவ்விய திருவுளமுங் கடவுளிடத்திலே அனுதியாயிருப்பதென்று சொல்லவேண்டியிருக்கையிலே அப்படிப்பட்ட திவ்விய தெரிசனையுந் திருவுளமுமென்கிறயிரண்டுக்கும் நிமித்தம் நிமித்தஜமென்கிற மேரையுள்ள பூர்வாபரியமானது வுண்டாயிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க கிரமமாகும். ஆதலாலே கர்த்தனாலே காணப்பட்ட பாவமானதும் மனுஷனை நரகத்திலே தள்ளவேணுமென்கிற கர்த்தனுடைய திவ்விய திருவுளத்துக்குக் காரணமாயிருக்குதென்று சொல்லக்கடவதொழிய, ஒடுக்கமாகிற நரகத்திலே மனுஷனானவன் விழவேணுமென்று தயாபரனான கர்த்தன் மனுஷனையுண்டாக்கினாரென்று சொல்லவுங் கருதவுங் கடவோமல்ல.

இந்தவிஷயத்திலே ஒருசந்தேகங் கேட்கிறதுக்கு இடமுண்டு. அதாவது மனுஷனாலே பண்ணப்படுகிற புண்ணியமானது கர்த்தனாலே அனுதியாகக் காணப்பட்டதாயிருந்து அது மனுஷனை மோக்ஷத்தை பெறுவேணு மென்கி-

று திவ்வியதிருவுளத்துக்குக் காரணமாயிருக்குமாப்போலே கர்த்தனாலேகாணப்பட்ட பாவியினுடையபாவமானது பாவியைநரகத்திலே தள்ளுகிறதுக்குக் காரணமாயிருந்ததென்று சொல்லவேணுமென்கிறதுக்குத் தப்பாது. ஆதலாலேமனுஷனைநரகத்திலே தள்ளத்தக்கதாகக் கர்த்தரானவர் அவனையுண்டாக்கினாரென்று சொல்லத்தகாததுபோலே மனுஷனைமோக்ஷக்கரை யேற்றவேணுமென்கிறதுக்காகமனுஷனைக் கர்த்தரானவருண்டாக்கினாரென்று சொல்லப்படாதென்று சொல்லவேண்டியிருக்கிறது. அதேதென்றால் பாவபுண்ணியமானது மனுஷனானவன் நரகத்திலேவிழுகிறதுக்கும் மோக்ஷக்கரையேறுகிறதுக்கும் காரணமாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறதொழிய மற்றப்படியல்ல. மோக்ஷநரக விஷயத்திலே நம்மாற் சொல்லப்பட்ட திவ்வியக்கிரமத்தைப் பத்தும்பத்தாய் விசாரியாதவன் இப்படிப்பட்டசந்தேகத்துக் குட்படுவானொழிய நம்மாலே சொல்லப்பட்டதைக் குறைவில்லாமல் நன்றாயறிந்தவன் அப்படிப்பட்ட சந்தேகப்படுகிறதுக்கு இடங்காணமாட்டான்.

அதேதென்றால், மனுஷனுடைய புண்ணிய சரித்திரங்களைக் கர்த்தரானவர் பாராமல் தனது அனந்த கிருபையினிமித்தமாக மனுஷனுக்கு மோக்ஷங்கொடுக்கவேணுமென்று மனுஷனை யுண்டாக்கினாரென்று சொல்லி, மீளமனுஷனானவன் புண்ணியத்தைப் பண்ணி மோக்ஷக்கரை யேறவேணுமென்கிறதுக்குத் திவ்வியதிருவுளமுண்டாச்சுதென்று சொல்லும்போது மனுஷனுக்குயித்த மோக்ஷவிஷயகதானத்துக்குக் கிரமமாகச் சித்தியானது வுண்டாகவேணுமென்று புண்ணியமானது அபேட்சிக்கப்படுமென்று சொல்லப்படுகிறதொழிய மனுஷனைக்கிர்த்தித்து மோக்ஷவிஷயக தானத்திலே யனாதியா யுண்டாயிருந்த திவ்விய திருவுளத்துக்கு மனுஷனுடைய புண்ணியமானது காரணமாயிருந்ததென்று சொல்லக்கூடாது நரகத்திலே மனுஷனைத் தள்ளவேணுமென்கிற திவ்விய திருவுளமேதென்றால் காணப்பட்ட பாவியினுடைய பாவமானது மாத்திரங் காரணமாயிருந்ததென்று சொல்லவேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல அவ்வண்ணமே மோக்ஷவிஷயகதானமானது கிரமத்தோடேமனுஷனுக்கு யிப்போது சித்திக்கத்தக்கதாகப் புண்ணிய சரித்திரமானது வேண்டியிருக்கிறதென்று சொல்லக் கூடுமொழிய மனுஷனைப்பொருட்டாக மோக்ஷவிஷயகதானத்திலே அனாதியாயிருந்த திவ்விய திருவுளத்துக்குத் திவ்விய கிருபையானது மாத்திரங் காரணமாயிருந்ததினால் மனுஷனுடைய புண்ணியமானது அதுக்குக் காரணமாயிருந்ததென்றுசொல்லவுங் கூடாது. ஆகையால் மனுஷனை [illegible] தக்கதாகக் கர்த்தரானவர் அவனை யுண்டாக்கினாரென்று அப்படிச்சொல்லப்படுமாப்போலே மனுஷனை நரகத்திலே தள்ளவேணுமென்கிறதுக்காக அவனைக் கர்த்தரானவர் உண்டாக்கினாரென்று சொல்லவுமெண்ணவுமொண்ணாது.

அதேதென்றால மனுஷனானவன் தனது சுவாதந்திரியமுள்ள [illegible] திவ்விய சகாயங்களைச் சட்டைபண்ணாமல் தன்னை யுண்டாக்கின கர்த்தனுக்கு அனமான துரோகங்களைப் பண்ணித் திவ்வியகிருபைக்குத் தான் பாத்திரமாயிராவண்ணம் கனமான பாவங்களைப் பண்ணினபோதே பாவியானவன் வியர்த்தமல்லாதபடிக்குப் பாவத்தினிமித்தமாக நரகவேதனையை அனுபவித்து அனந்தப்[illegible] திவ்விய நீதிக்கு அவன் பாத்திரமாயிருக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளையிட்டருளுகிறாரென்கிறதே அவருடைய திவ்விய சாமார்த்தியத்துக்கும் அனந்த நீதிக்கும் மிகவும் பொருந்துகிறதென்று வொப்புக்கொள்ளக் கடவோம்.

இதெல்லாமெவ்வண்ணமாகிலு மெல்லாருக்கும் விளங்கும்படிக்கு அனந்த திவ்வியநீதிக்குப் பாத்திரமாயிருக்கிற பாவியானவன் நரகத்திலே அனுபவித்துக்கொண்டு வருகிற கஸ்தியுபாதைகளானதுகள் மனுஷருக்குக் கேட்டாததுகள

யிருந்தாலும் கனாகாணுகிற அக்கினிச் சமுத்திரத்தைக் குறித்துக் கொள்ளியினாலே காட்டுகிற மேனியாக நரகத்தினுடைய கஸ்தியுபாதைகளுக்குள்ளே சிலதுகளை மாத்திரம் எடுத்துக்காட்டினதினால் அந்தக் கஸ்தியுபாதைகளைத் தவிர நம்மால் வர்ணிக்கப்படாத வேறே அநேக கோர துக்கங்களுண்டாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கக்கடவோம். ஆனால் அனந்த ஞானமான கர்த்தரானவர் நரகத்திலே விழத்தக்கபேர்களை அனாதியா யறிந்து அவர்களை யுண்டாக்குவானேனென்கிற அபத்தக் கேள்விக்குமுன் ஆனபிரத்தியுத்தரஞ் சொன்னோமென்கிறதினால் இவ்விடத்திலே யதைத் திரும்பச் சொல்லுகிறதுக்குக் கணக்கில்லை.

அவ்வண்ணமே நரகத்திலே பிசாசுகள் முதலான பாவாத்துமாக்களனுபவித்துக்கொண்டுவருகிற கஸ்தியுபாதைகளுடைய விஷயங்களிலே யறியவேண்டிய மூன்று விசேஷங்களுண்டு அதில் நரகத்தினுடைய கஸ்தியுபாதைகளானதுகள் எத்தனை வகைக்குள்ளே யடங்கியிருக்கிறதென்று அறியத்தக்கமுந்தின விசேஷமாகும். சரீரமில்லாத பிசாசுமுதலான நாசீவன்கள் சரீரமுள்ள பொருளினாலே கஸ்தியுபாதைகளைப்படுகிற விதமானது அறியத்தக்க இரண்டாம் விசேஷமாகும். நரகத்திலே விழுந்தபேர்கள் அதிலே யெத்தனைகாலமிருக்கப் போகிறார்களென்று நிச்சயிக்கிறதென்கிறது தெளியத்தக்க மூன்றாம் விசேஷமென்று சொல்லப்படும். இதெல்லாந் தனித்தனியே சொல்லிக்காட்டி அதுகளிப்படியிருக்கவேணுமென்கிறதுக்கு ஆன ஞாயங்களைக்கொண்டு சுருக்கமாக வொப்பிக்கவருந்தக் கடவோம்.

பாவிகளானபேர்கள் தங்களை யுண்டாக்கின அளவில்லாத கர்த்தனை யாங்காரத்தினாலே நிந்தைபண்ணி அருவருக்கப் படத்தக்க நீசமான போகபாக்கியங்களினிமித்தமாக உந்நத மோக்ஷத்தின் பரமானந்தத்தை மனசுபொருந்திப் போக்கடித்தபோதே கர்த்தனுக்கு வெறுக்கப்படத்தக்க நீசத்துரோகிகளாய்ச் சகல ஸ்தலங்களைக் காட்டிலும் கீழ்த்தரமான நரகத்திலே யெண்ணப்படாத துக்கவுபாதைகளை யனுபவிக்கிறதென்கிறது குறைவில்லாத ஞாயத்துக் கேற்றிருக்கிறதென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட பாவிகளனுபவித்துக் கொண்டுவருகிற கஸ்தியுபாதைகளை அறுவிதங்களாகப் பிரியுமென்று சொல்லலாயிருக்கிறது அதுகள் யாவன:—உக்கிரமான அக்கினியினிடைவிடாத தகனத்தினிமித்தமாகப் பொறுக்கப்படாத வுஷ்ணமும் [illegible]திக்குள்ளே அடங்காததாயிருக்கிற குளிரினுடையவாதையும் கனமான அந்தகார வுபத்திரமும் மனதை நாச[illegible] போகப்பண்ணாமல் டனசைவிடாமலுண்டாகிற [illegible] பரமானந்தமாகிற மோக்ஷத்தைப் போக்கடித்த துக்கமும் அப்படிப்பட்ட கஸ்தியுபாதைகளை விட்டு அதில் நின்று பாவியானவன் புறப்படாத நிச்சயத்தினாலே வருகிற அவநம்பிக்கையும் இந்த ஆறுவகையுள்ள வாதைகளை அவனவன் அடைந்து அப்படிப்பட்ட ஸ்தலத்திலே தான்விழாதபடிக்கு மெய்யான சர்வேசுரன் [illegible]படுத்திக்கொடுத்தவழியென்று அறிகிறதுக்கும் பாவத்தின் கைப்புள்ள சுகங்களை வெறுத்துக் கர்த்தனுடைய திருச்சித்தத்துக்கு ஏற்றிருக்கிற புண்ணிய நடக்கைகளாய் நடக்கிறதுக்கும் துணிந்து வருந்தவேணுமென்கிறதுக்காக முன்சொல்லப்பட்ட ஆறுவகையுள்ள வாதைகளைத் தனித்தனியே யின்னதென்று சுலபமாகச் சொல்லிக்காட்டக் கடவோம்.

பூமியிலேயும் நரகத்திலேயுமிருக்கிற அக்கினி யிரண்டுக்கும் பரம ஞானிகளாயிருக்கிற பேர்கள் சொல்லுகிற வித்தியாசத்தை விசாரிக்கும்போது நரகத்திலேயிருக்கிற அக்கினிக்குப் பூமியிலே யிருக்கிற அக்கினியானது சித்திரத்திலே யெழுதப்பட்ட அக்கினியென்றுசொல்லத்தகும் அதேதென்றால்நரகத்தினுடைய அக்கினியானது பிரகாசமில்லாததுமாய்ச்சரீரமில்லாத பொருள்கள்பண்ணின பாவங்களினாலவாக அதுகளைத் தகன முதலான கஸ்திகளைப் படுத்தத்தக்க கர்த்தனு

டைய கீர்த்திருவுள்ளமில்லாமலும் வல்லதுமா யெப்போது மிடைவிடாத தகனம் பண்ணுகிறதுக்கு விறகு முதலானதுகளை யபேக்ஷியாததுமாய் ஒன்றினாலே யாதொன்றும் சமியாததுமாயிருக்கக் கொள்ள அனந்த நீதிசொரூபமான இவ்விய திருவுளத்துக் கற்பனையாக யது கயிங்கிரியம் பண்ணிக்கொண்டு வருகிறதொழிய மற்றப்படியல்ல. தேவவிஷயகபத்தியாகிற திவ்விய அக்கினியினாலே மோக்ஷவாசியாயிருக்கிற பேர்கள் மகிமைவாக்குக்கு அகோசரமான பரமானந்தத்தை யனுபவிக்கிறார்களே, அப்படிப்பட்ட குறையற்றபாக்கியத்தைத்தனதுசுவாதந்தியமுள்ளமனசைக் கொண்டு போக்கடித்த பாவிகள் திவ்விய விஷயக வர்மத்துரோகிகூட நீசநரகத்தினுடைய உக்கிரமமான அக்கினிக்குள்ளே புதைக்கப்பட்டு ஆதிமோக்ஷய மில்லாமல் பரிபூரணமாக யிடைவிடாம லொருகலப்டசீராய் வெந்துபோகிறதென்கிறது பழுதற்ற நீதிக்கு யேற்றிருக்கிறதென்று சொல்லவேணுமோ. மூழுதும் நிற்பாக்கியமான பாவிகள் சொல்லப்படாத வுஷ்ணத்தில் நின்று யெண்ணிக்கைக்குள்ளே அடங்காத குளிரின் உபத்திரவத்தை அனுபவிக்கிறார்களே. அதுக்குக் காரணமேதென்னில் தேவவிஷயகபத்தியாகிற திவ்விய அக்கினியை அருவருத்துப் பாவமான அக்கினியிலே வேகத்தக்கதாகப் பாவிக ளிச்சைப்பட்டதுக்குப் பொறுக்கப்படாத குளிரினுடைய அனுபவமானதுக் கொத்திருக்கிற ஆக்கினையாயிருக்கிற தென்று சொல்ல வேண்டி யிருக்கிறது. ஒருவிடத்திலே யாதொருவன் தேற்றரவாளனுக்கு திவ்விய சாபம்பெற்ற பாவிகள் அக்கினிக்குள்ளே வேகும்போது குளிருபத்திரவம் அனுபவத்தினாலேவாசியுண்டா யிருக்கிறதென்று யெண்ணிக்கொண்டு வருகிறார்கள். மீளவுங் குளிரினுடைய வுபாதையை யனுபவிக்கும்போது அதைப் பொறுக்கமாட்டாமல் அக்கினிக்குள்ளே வெந்துபோனால் தாவிலை யென்று விசாரிக்கிறார்கள் கனமான அந்தகாரத்தினாலே சூழப்பட்ட மதிகெட்ட பாவிகளான பேர்கள் கனமான துக்கத்தையு மனஸ்தாபத்தையுந் தங்களுக்கு வருத்துவிக்கிற விசேஷங்களைக்கண்டு வருகிறார்களொழிய அற்பமாகிலும் சகிக்கத்தக்கவனுடைய மிகுந்த ஸ்லனைது யொருவனமானாலு மவர்களிடத்திலே யின்னமாட்டாது. ஆண்டவர் சித்தத்தின்படியே நடக்கிறதுக்கு வேண்டியிருக்கிற தெளிவுகளைத் தள்ளிப்போட்டதினாலே அப்படிப்பட்ட கனமான அந்தகாரத்தினால் மூடப்பட்ட பாவிகள் சகலத்திலும் ஞாய நீதியை அறியாமலெல்லாரும் விபரீதமா யெண்ணிக் கொண்டு வருகிறார்க ளொழிய மற்றப்படியல்ல.

இதன்றியே தண்டனையானபேர்கள் முன்செய்த பாவங்களை யிடைவிடாமல் கண்முன்னேயிருக்கிறப்போல அதினாலே வருகிற மனஸ்தாபமானது திருத்தி யடையாமலென்றென்றைக்கும் குடைகிற புழுவைப்போலே யொருகண்டசீரா யவர்களுடைய மனசையறுத்து வருமென்கிறதுக்குத் தப்பாது. இது குறையற்ற ஞாயத்துக் கொத்திருக்கிற ஆக்கினை யென்று சொல்லக்கடவது. அதேதென்றால் பாவிகளான பேர்கள் தங்களுக்குத் தயாபரனான கர்த்தன் பண்ணின யெண்ணப்படாத வுபகாரங்களை முற்று மறந்து அருவருக்கப்பட்டதுக்க சுகங்களை யனுபவிக்க வேணுமென்று கர்த்தனுக்கு கினைத்த துரோகங்களுடைய ஸ்மரணந்தானே யிடைவிடாத துக்கத்தை அவர்களுடையமனசுக்கு வருத்துகிறதினால் பாவிகளுடைய மனசை அந்த ஸ்மரணந்தானே திருப்தி யடையாமலென்றென்றைக்குங் குடைகிற புழுவானதென்று சொல்லப்படும்.

இதன்றியேபாவியானவன் பாவங்களைப்பண்ணுகிறதிலே தீர்மேற்கும்பிழைக்குச் சரியாகவொருக்ஷணத்திலே மாத்திரம்நின்று அழிந்துபோகிறதுமாய் மகாமகாபட்ட துக்கங்களுடைய ப்புள்ளதுகளுமா யருவருக்கப்படத் தக்கதுகளுமாயிருக்கிறசேபோக பாக்கியங்களை ஆசைப்பட்டு யென்றென்றைக்கும் நிற்கிறதுமாய்ப் பொல்லாப் பின்கலப்பில்லாததுமாய், வெகுமான முதலான சகலநன்மைகளு

டையவிஷயங்களிலே குறைபற்ற பாக்கியமானதுமாயிருக்கிற மோட்சத்தின்பரமானந்தத்தைப் போக்கடித்த சேதத்தை கினைக்கிறதினால் நீதிபுள்ளகர்த்தன்பேரிலே அவன் பரிதான பகைமை வைத்துச் சொல்லப்படாத மனஸ்தாபத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறானே. இதெல்லாம் பழுதற்ற நீதிக்கொத்திருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்றால் பூமியிலே திரிகிற பாவியானவன் பாவத்துக்கு அடங்காத படிக்குத் தனது மனசைத் தான் பண்ணவேண்டின நிக்கிரகத்தி னிமித்தியமாக வருகிற கொஞ்சக் கஸ்திக்குப் பின்வாங்கிப் புத்தியில்லாத மிருகத்தைக் காட்டிலு மவன் மதிகெட்டவனாய்க் குறையற்ற செல்வமாகிற மோக்ஷத்தைச் சட்டைபண்ணாமல் மிருகங்களைப்போலே நீசமான சுகங்களை மாத்திர மனுபவிக்கிறதுக்கு மிகவும் வருந்தினபோதே யப்படிப்பட்ட வியர்த்தமான வருத்தத்துக்குமோக்ஷத்தைப் போக்கடித்த துக்கமுள்ள வருத்தமானது தப்பில்லாத ஞாயத்துக்கு கொத்திருக்கிற ஆக்கினையா யிருக்கிறதென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல.

இதன்றியேவாக நரகத்திலேவிழுந்த பாவியானவன் தானனுபவித்துக்கொண்டு வருகிற யெண்ணப்படாத கஸ்தி யுபாதைகளும், அகத்த நோவுகளும் ஒருகண்டசீராய் ஒருபெள் பிரமாண மாறுதுங் குறையாம லென்றென்றைக்குமிருக்குமொழிய வொருக்காலு மொழியா தென்று நிச்சயமா யறிந்திருக்கிறதினாலே அப்பாவியானவன் தன்பேரிலே தான் முழு வர்மமாயிருந்து தன்னையேக் கெடுக்கவும் தான் ஒன்றுமில்லாததாய்ப் போகவும், அக்கிரமமான ஆசைப்படுகிறானென் றிருக்கையிலே அப்படிப்பட்ட பொல்லாப்பானாலும் வேறே யொரு அற்பநன்மையென்கிலுந் தனக்கு வரமாட்டாதென்கிற நம்பிக்கை யில்லாம லிருக்கிறானென்கிறதுக்குத் தப்பாது. இதிலே ஆண்டவனுடைய நீதி மிகவும் விளங்குமென்று சொல்லத்தகும். அதேதென்றால் மோக்ஷ ராச்சியத்திலே யொரு அற்பமாகிலும் பொல்லாப்பின் கலப்பில்லாததுகளான யெண்ணப்படாத நன்மைகளை யடையலாமென்று மனுஷனானவன் நம்புகிறதுக்குத் தயாபரனை சுதந்தரனாயிட்டமுண்டாகவேணுமென்று மனுவானவர்க்குக் கிட்டினதாயிருக்கிற வனேக கிருபைகளைப் பண்ணிக்கொண்டு வந்திருக்கிறாரே அப்படிப்பட்ட தேவசகாயங்களை யெல்லாம் பாவியானவன் நினையாமல் பரலோக முன்னேயும் பரலோகத்திலே தனக்கு நன்மை வரவாமெனறும் நம்பிக்கை யிலலாதவன் போலே மிருகங்களுக்கும் மனுஷனுக்குஞ் சாதாரணமேயாகிற அனுபவிக்கப்படத்தக்கபோக பாக்கியத்தைப் பார்த்து அதைமாத்திரஞ் சேர்க்கத்தக்க நன்மையென்றும் அதையன்றே யிச்சிக்கப்படத்தக்கதென்றும் நிச்சயமுள்ளவன்போலே பூலோகத்திலே நடக்கிறானென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அப்படிப்பட்ட பாவியானவன் தானடையத்தக்க நன்மைவிஷயங்களிலே திவ்வியகிருபையை நம்பாமலிருந்ததுக்கு நரகத்திலே விழுந்த அப்படிப்பட்ட பாவி யொரு அற்பநன்மையென்கிலுந் தனக்கு வரவேணுமென்று தானிச்சிக்கிற பொல்லாப்பானாலுந் தனக்கு வரமாட்டாதென்கிற அவநம்பிக்கையானது குறையற்ற நீதி ஞாயத்துக் கொத்திருக்கிற அபராதமென்று சந்தேகமற யங்கீகரிக்கத் தக்கதாகும்.

அவ்வண்ணமே நரகமாகிற துக்கசாகரத்திலே விழுந்த பாவாத்துமாக்களானபேர்கள் பிசாசுகளோடே கூட முன்சொல்லப்பட்ட கஸ்தி நோவுகளை யனுபவித்துப் பிசாசுகளினாலே வேறே யனேக விசேஷ கிர்பந்த வுபத்திரவங்களைப் படுகிறார்களென்கிறதுக்குச் சந்தேகமில்லை. அதேதென்றால் பூலோகத்திலே பாவிகளானபேர்கள் திரியும்போது கண்ணாலே யெண்ணப்படாத பாவங்களைப் பண்ணினதுக்கு யாக்கினையாக நரகத்திலே பலபல அகோரமான ரூபங்களைக் கொண்டிருக்கிற பிசாசுகளைக் காண்பார்க ளென்று ஒப்புக் கொள்ளத்தக்க விசேஷமாகும். நரகத்திலே யிருக்கிறபேர்களுடைய யிடைவிடாத ஐயோ வென்கிற சப்தமான

துகளு மோயாத வழுக்கைக் குரல்களு மவரவர்கள் சர்வேசுரனைச்சொல்லுகிற தூஷண வார்த்தைகளும் நரகத்திலே விழுந்த பாவிகளினாலே கேட்கப்படுமே. அவர்கள் பாவத்துக்கடுத்த காரணங்களையும் பரியாச வார்த்தைகளையுஞ் சிரிப்பு முதலான சரச அப்பியங்களையும் காதால் கேட்டதுக்கு அதுக்கு ஞாயமுள்ள அபராதமென்று யங்கீகரிக்கத்தக்கதாகும்.

இதுதவிரப் பூமியிலே யிருக்கிற பாவிகளான பேர்கள் சுகத்தோடே பாவம்பண்ணவேணுமென்று பலபல பரிமளங்களையும் இஷ்ட கந்த வாசனைகளுள்ள புஷ்பாதிகளையு முகர்ந்த யவத்துக்கு ஆக்கினையாகச் சகிக்கப்படாத துர்க்கந்த நாற்றங்களை நரகத்திலே யனுபவிக்கிறார்களென்கிறதுக்குத் தப்பாது. இத்தன்மையாக நரகத்திலே விழுந்த பாவிகள் மிகவும் அரோசகமானகைப்பை விழுங்கிறப்போலே யிருக்கிறதென்கிறது மிகவும்பாதிக்கிற பசிதாகத்தினுடைய கடுமைகளை யிடைவிடாம லனுபவிக்கிறதென்கிறதும் பலபல பாவங்களுக் குரியோராக மகா மகாப்பட்ட ருசியுள்ள போஜனங்களை யவர்கள் பக்ஷித்ததுக்கும் சுராபான முதலான கிசித பானங்களைப் பண்ணினதுக்கு மநியாயமாய்ப் போஜனப் பிரியராயிருந்ததுக்குந் தப்பில்லாக் கிரமமுள்ள வாக்கினையா யிருக்கிற தென்று கேட்கவேணுமோ. இம் மேரையாகப் பட்டுப் பட்டாவளி முதலான வஸ்திரங்களை பாவிகளான பேர்கள் பூமியிலே அநியாயமாக யுடுத்ததுக்குஞ் சுகசெல்வமுள்ள மிருது சயனங்களிலே பாவமுள்ள சுகங்களை யனுபவித்ததுக்கு மப்படிப்பட்ட பாவிகள் நரகத்திலே யுக்கிரமமான அக்கினியிலே சூழ்ந்திருக்கப்பட்டதுகளாயிருக்கிறதென்கிறது மக்கினிமயமா யிருக்கிற கட்டில்களிலே கட்டாயமான படுக்கையிலே பிசாசுகளினாலே கடினமான யடிகளைப் படுகிறதென்கிறதுங் கிரமமுள்ள அபராதமா யிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகமில்லை.

இம்மருவாதியாகப் பரிபூரண ஐசுவரிய தனசம்பத்துகளினாலே கனகர்வமுள்ள ராசாக்கள் முதலான பிரபுக்கள் பூமியிலேயிருக்கிறயேழை சனங்களுடைய குடிகெடுத்து ஊராருடைய [illegible]களை யநியாயமா யபகரித்ததினால் தங்களுக்கு ஐசுவரியத்தி னபேக்ஷையை [illegible] பண்ணினதுக்கும் நீதிஞாயத்தின் கிரமத்தைப் பாராமல் தோஷத் துரோகங்களுக்கு [illegible] ஆக்கினைகளை யிடாமல் உதாசனப் புத்தியுள்ளவர்களா யிருந்ததுக்கும் அல்லது அநியாயமாய்க் குற்றமில்லாமல் அவரவர்களுக்கு ஆக்கினையிட்டதுக்கும் இப்படிப்பட்ட ராசாக்கள் முதலான அவர்கள் நரகத்திலே விழுந்து வெறுத்து போட்ட நீசர்களுமாய்ச் சகலத்திலேயுஞ் சேத பாதகங்களையும் குறைகளையு முழுக் கேடுகளையு மனுபவிக்கிற பேர்களுமாயிருக்கிற தென்கிறதும் எண்ணிக்கைக்குள்ளே யடங்காத கடூரமான ஆக்கினைகளை நிஷ்டூரமான பிசாசுகளினாலே படுகிற தென்கிறதும், கிரமமுள்ள மேரையென்றங்கீகரிக்கக் கடவோம்.

இற்றைவரைக்கும் நம்மாற் கொஞ்சத்துக்குள்ளே சொல்லப்பட்ட கஸ்திநோவுகளுந் தவிர வேறே யனேக வாதைகளையும் கிர்ப்பந்தங்களையும் நரகத்திலே விழுந்த நிர்ப்பாக்கியரான பாவிக ளனுபவித்துக் கொண்டு வருகிறார்களென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் இப்படிப்பட்ட விஷயங்களிலே பண்ண வேண்டியிருக்கிற விஸ்தாரப் பிரசங்கத்தை விட்டுச் சரீர மில்லாத பிசாசுகள் முதலான சீவன்கள் சரீரமான அக்கினி முதலான பொருள்களினாலே வாதைப்படுகிற மேரையையும் நரக சம்பந்தமா யிருக்கிற கஸ்தி நோவுகளைப் பாவிகளான பேர்க ளென்றென்றைக்கு மனுபவிக்கப்போகிறார்களென்கிற குன்றாத சத்தியத்தையும் ஆன ஞாயங்களினாலே யொப்பிக்கச் சொல்லவேண்டியிருக்கிறது. இதெல்லாம் வருகிற பாடங்க ளிரண்டிலே கர்த்தனுடைய கிருபாகடாட்சத்தினாலே சந்தேகமாக வெளிப்படுத்த யிருக்கக் கடவோம்.

௩௭-ம். பாடம்.

தெளிவற்ற பாவிகள் மோக்ஷ நிரூபணம் பண்ணுகிறதிலே அனேக வபத்த விசேஷங்களையும் நீதிஞாயத்துக் தொவ்வாததாயிருக்கிற பலபலபொய்யான வகைகளையும் வெறுமனே கற்பித்தார்களென்று யிருபத்து மூன்றும் பாடந்துவக்கி அனுபந்தமாய் வருகிறதினால் அஞ்சு பாடங்களிலே நம்மாலொப்பிவிக்கப் பட்டாப்போலே யாச்சுது. இப்படிப்பட்ட தெளிவற்ற பாவிகளான பேர்கள் மோக்ஷவிஷயத்திலே பலபல தப்பறை விசேஷங்களை வெறுமனே குளறித் தாறுமாறாய்க் கற்பித்தாப்போலே நரகத்தை நிரூபிக்கிறதிலே யனேகதப்பறை விசேஷங்களை ஸ்தாபிக்க வருகிறார்கள். அந்தத் தப்பறைகளுக்குள்ளே இரண்டு தப்பறைகளைத்தெரிந்துகொண்டு அதுகளுக்கு விருத்தமான சத்தியத்திலே யங்கிகரிக்கத்தக்கமேரை யின்னதென்று அடைவாக வெளிப்படுத்தும்போது அத்தாலேசொல்லப்பட்ட இரண்டுதப்பறை விசேஷங்களானதுகள் ஆக்ஷேபிக்கப்படுமென்கிறதுக்குத்தப்பாது.

அதெப்படியென்றால் தெளிவற்ற மனுஷனானவன் பண்ணின பாவங்களினாலே மங்கிப்போன மதியுடைத்தானவனாய் மிருகங்களைப் போலே சரீரத்தின் கண்ணாலே காணப்பட்ட கண்டிப்பான விஷயங்களை மாத்திர மறிகிறதினாலே சரீரமில்லாமற் பொருளானது யிருக்கலாமென்றும் பொருளானது சரீரமில்லாமல் சுக துக்கத்தை யனுபவிக்கிறதுக்கு வல்லதா யிருக்கிறதைக் கண்டுபிடிக்க மாட்டுகிறானில்லை. இதுகாரணமாகச் சரீரமில்லாதபொருளுண்டென்று அறிந்து தெளிக்கிறதுக்கும் அறுவருகிறதுக்கும் வல்லவனாயிருக்கிறமனுஷன் தன்னாலேதான் கெட்டுப்போய்ப் புத்தியில்லாத செந்துக்களைப் பார்க்கிலும் நாயத்தினிமித்தமாக மிகவு முத்தம்பொருளா யிருந்தாலும் ஈனபெலயானது தன்னிடத்திலே வியர்த்தமாயிருக்கப் பண்ணுகிறதினால் ஞானமில்லாத செந்துக்களைக் காட்டிலுங் கெட்டுப் போனானென்று சொல்லத்தகும்.

பூமியிலே யிருக்கிற இப்படிப்பட்ட தெளிவற்றமனுஷனானவன் பண்ணின புண்ணியங்களி னிமித்தமாகப் பலனை யனுபவிக்கிறதுக்கு யில்லாத சொர்க்கமொன்று வுண்டாயிருக்கிறதென்று வெறுமனே சம்மதித்து அதை அடைந்திருக்கிற சீவனானது தேஜஸ சரீரத்தைக் கொண்டிருக்கிறதென்கிற தப்பறை விசேஷத்தை யங்கீகரிக்குமாப்போலே பாவத்தினிமித்தமாக நரகத்திலே விழுந்த சீவனானது வொரு சரீரத்தைக் கொண்டிருக்கிற தென்று சொல்லிக்கொண்டு வருகிறான். அப்படிப்பட்ட சரீரத்துக்கு யாதனா சரீரமென்கிற நாமத்தைக் கற்பித்து அப்படியே வெறுமனே கற்பிக்கப்பட்ட சரீரமானது பூதங்களினாலே கூடின பொருளாயிருக்கிறதோ, அல்லது ஆகாசமுதலான வேறே திரவியங்களினாலே கூடின பதார்த்தமா யிருக்கிறதோ வென்று சொல்லாமற்போதே பொய்சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேணுமென்கிற மேரையை யிந்தத் தப்பறை விசேஷத்தைக் கற்பிக்கிறதிலே மறந்துபோனானென்று சொல்லக்கடவோம்.

இதன்றியே யிப்படிப்பட்ட யாதனா சரீரத்தைக் கொண்டிருக்கிற சீவனானது சிறிது காலமாத்திரம் நரகத்திலே கஸ்திபாதைகளை யனுபவித்த பிற்பாடு அப்படிப்பட்ட சீவனானது திரும்பப் பூமியிலேவந்து கல்லாய், மரமாய், ஊர்வன, பறப்பன, செந்துவாய் விலங்கு சாதியிலுட்பட்ட மிருகமாய் மனுஷனாய்ப் பிறக்குமென்று சத்தியத்தைக் கண்டுபிடியாத மனுஷனானவன் சொல்லிக்கொண்டு வருகிறானே யொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட விசேஷங்களிரண்டுந் தப்பறை விசேஷங்களா யிருக்கிறதென்று போனபாடங்களிலே நம்மாற் சொல்லப்பட்ட ஞாயங்களினாலே

யெளிதாய்க் கண்டு பிடிக்கலா யிருக்கிற தென்கிறதுக்குத் தப்பாது. அதேதென்
றால் நரசீவனானது நிற்கிறதுக்கும் தனது ஞான விருத்திகளைப் பண்ணுகிறதுக்கும்
வேணும் வேண்டா மென்கிறதுக்குஞ் சரீரந் தேவையில்லை யென்று அப்பச்சொ
ன்னபோதேதேஜஸ்யாதனசரீரமிரண்டும்வெறுமனேகற்பிக்கப்பட்டகிறதென்று வொ
ப்பிவித்தாப்போலேயாச்சுது. இதுதவிரத்தனது பவுதிகசரீரத்துக்கு மாத்திரையா
யிருக்கிற சீவனானது வேறேபவுதிக சரீரத்தோடே கூடுகபாவமா யிருக்கமாட்டா
தென்று வொப்புக்கிற நியாயங்களினாலே தேஜஸ் யாதன சரீரமுதலானவெறு
மனே கற்பிக்கப்பட்ட வேறே சரீரங்களைச் சீவனானது கொண்டிருக்க மாட்டாதெ
ன்று ஸ்தாபிக்கப்பட்டு தென்று சொல்லத்தகும். இந்நடைவாக மறுமென்மையில்
லையென்று போனபாடங்களிலே நம்மா லொப்பிவிக்கப் பட்ட ஞாயங்களினாலே
மோக்ஷக்கரை யேறுகிற சீவனானது பரமானந்தத்தை யென்றென்றைக்கு மனுபவி
க்குமென்றும் பாவத்தினிமித்தமாக நரகத்திலே விழுந்த சீவனானது வொருக்காலு
மொழியாத கஸ்தி கோவுகளைப் படுமென்று மொப்பிவித்தாப்போலே யாச்சுது.

ஆதலாலே நரக விஷயத்திலே சந்தேகமற அங்கீகரிக்கத்தக்க சத்தியமா
வது மனுஷனுடைய மரணத்து நிமித்தமாக மனுஷசீவனானது தனது சரீரத்தைப்
பூமியிலே விட்டுச் சரீரமில்லாமல் நரகவேதனையை யென்றென்றைக்கு மனுபவிக்
குமொழியாதிருக்காது மதிலே மாறு புறப்பட்டத்தக்க தில்லையென்கிறது தே
வோக்தித்த வேதப் பிரமாணத்தினாலேயும் பல ஞாயங்களினாலேயுங் குன்றாதசத்
தியமா யிருக்கிறதென்று அற்பமாகிலுஞ் சந்தேகமில்லாமல் முழுமனதோ டங்கீ
கரிக்கக் கடவோம். சரீரமில்லாத பொருளாகிற பிசாசுகளு மனுஷனுடைய மரண
த்து நிமித்தமாகத் தனதுசரீரத்தை விட்டு வேறேசரீரத்தைக் கொண்டிராத நரசீ
வன்களும் நரகத்திலே சரீரியான அக்கினிமுதலான திரவியங்களினாலே மனோவா
க்குக் கெட்டாததா யிருக்கிற கஸ்தி கோவுகளை யனுபவிக்கிற தென்று கர்த்தரான
வர் தமது வேதத்திலே திருவுளம்பற்றினபோதே யிதிலே அற்பமாகிலுஞ் சந்தேக
ப்படுகிறதுக் கிடமில்லை. ஆனால் சரீரமில்லாத பொருள் சரீரமுள்ள வஸ்துக்களைக்
காட்டிலும் மிகவு முத்தம பொருளாயிருந்து சரீரமுள்ளதுகளை ஏகவிதமாக ஆளு
கிறதுங்கூடத் தப்பில்லாத நியமமுண்டா யிருக்கையிலே சரீரமில்லாத அப்படிப்
பட்ட வுத்தமபொருளானதுகள் தனக்கு மிகவுங் கீழ்த்தரமான சரீரமுள்ள பொ
ருள்களினாலே கஸ்தியுபாதைகளை யனுபவிக்கிற மேரையின்னதென்று கண்டுபிடிக்
கிறதென்கிறது அரிது.

ஆனபடியினாலே வித்தியாபாரகரா யிருக்கிறபோர்கள் நிச்சயம் பண்ணத்
தக்க அருமையான இப்படிப்பட்ட விஷயத்திலே பலபல மேரைகளைச் சொ
ல்லிக்கொண்டு வருகிறார்கள். அவ்வண்ணமே சரீரமில்லாத பிசாசுகளையும் நர
சீவன்களையும் நரகத்தினுடைய . . . . . ள்ள அக்கினிமுதலானதுகள் மெய்யாக
தகனுதியாக்கினை நிமித்தமாக வுபாதியாதிருந்தாலும் அப்படிப்பட்ட சரீரமில்
லாத போர்கள்தானே தாங்கள் நரகத்தி னக்கினியின் தகனத்தினாலே கஸ்தியுபா
தைகளை யனுபவிக்கிறார்க ளென்று விசாரிக்கிறதினால் சொல்லப்படாத துக்க
த்தையு மனஸ்தாபத்தையும் அவர்களடைகிறார்க ளென்று சிலர்சொல்லிக்கொண்டு
வருகிறார்கள் அப்படிசொல்லும்போது அக்கினி முதலானதுகள் சரீரமில்லாதபோ
ர்களை யுபாதியாமலிருக்கையிலே சரீரமில்லாத பொருள்கள் தங்களை அக்கினிமு
தலானதுகள் பாதிக்கிறதென்கிற பொய்யானவிசாரமாகிற மயக்கமானது சரீரமில்
லாதபோர்கள் நரகத்திலே கஸ்தியுபாதைகளை யனுபவிக்கிறதுக்குக் காரணமா
யிருக்கிறதென்று சொல்ல வேணுமொழிய சரீரமுள்ள அக்கினி முதலானது
தகன முதலான வகைகளினாலே கஸ்திகோவுகளைப் படுத்துகிறதென்று சொ

ல்லக்கூடாது. வேறே சிலபோர்களிடத்திலே வேறேமேரையாக இந்த ரகசியத்தை வெளி
ப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் அதாவது சரீரமுள்ள அக்கினியானது சரீரமில்
லாத பேய்களைத் தனது கீழிருக்கப்படுத்திச் சரீரமில்லாத போர்களுக்கு அதுவொ
ருசிறைசாலைபோலே யிருந்து அக்கினியானது தன்னிடத்திலே சரீரமில்லாதபோ
ர்களைக் கட்டாயமாயிருத்தி அங்கேயுமிங்கேயும் அவர்களையந்த அக்கினியானது
தன்னைவிட்டுப் பிரியவொட்டாமற் பண்ணுகிறதென்கிறது இந்தசரீரமுள்ள அக்கி
னியானது சரீரமில்லாத போர்களைக் கஸ்திநோவு படுத்துகிற மேரையாயிருக்கிற
தென்று முன்சொல்லப்பட்ட வித்தியாபாரகர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.
இந்தமேரையானதைச் சரீரமில்லாதபொருள்களைக் கஸ்திப்படுத்துகிற மற்றவஸ்
துக்களிடத்திலே யோசிப்பாயாக.

இந்தவிஷயத்திலே வேறேமேரையானது சிலபோர்களினாலே விசாரிக்கப்
பட்டது. அதாவது நரகத்திலேயிருக்கிற சரீரமுள்ள அக்கினிமுதலான பொருள்கள்
சரீரமில்லாத பிசாசுகளிடத்திலேயும் நரசீவன்களிடத்திலேயுந் திரவியமாகாத கு
ணரூபமான வொருபொருளை யனந்தசீ வியசீதியான திருவுளப்படியேயுண்டாக்
கும். அந்தப்பொருளானது பிசாசுகளுக்கும் நரசீவன்களுக்கு மிகவும்விருத்தமா
யிருக்கக்கொள்ள அதைப்பிசாசுகளும் நரசீவன்களுங் கொண்டிருக்கிறதென்கிறது
அதுசரீரமில்லாத பிசாசுகளும் நரசீவன்களும் சரீரியான அக்கினிமுதலான பொ
ருள்களினாலே கஸ்தியுபாதைகளை யனுபவிக்கிற மேரையாயிருக்கிறதென்று வே
றேசிலவித்தியாபாரகர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

நரகத்திலேயிருக்கிற பிசாசுகளும் நரசீவன்களும் கஸ்திநோவுகளை அனுப
விக்கிற இந்தமேரைகள் மூன்றுக்கும் அங்கீகரிக்கத்தக்க யோக்கியதையை யெம்மா
த்திரமுண்டா யிருக்கிறதென்று வித்தியாபார கராயிருக்கிறபோர்கள் பரிச்சேதம்ப
ண்ணக்கடவார்கள். அதுகளிலே முழுதும் நாம்சம்மதப்படாததுக்குத் தேவோக்தி
த்தவேதத்திலே சொல்லப்படுகிற பலபல வாக்கியங்களுடைய சுபாவ சுரூபமான
அர்த்தமானது ஞாயமாகும். அதேதென்றால் நரகத்தின் அக்கினியானது பிசாசுமு
தலான பாவிகளைத் தகிக்கிறதென்கிற வாக்கியங்களும் பிசாசுமுதலான பாவிகள்ந
ரகத்தினுடைய அக்கினிக்குள்ளே சொல்லப்படாத கஸ்திகளோடே இடைவிடா
மல் வேகிறார்களென்கிற வசனங்களும் நரகத்திலேயிருக்கிறபோர்கள் பொறுக்கப்ப
டாத குளிரை யனுபவிக்கிறார்களென்கிற துக்கங்களும் பத்தும்பத்தாய் விசாரிக்க
ப்பட்டால் பாவிகளுடைய மயக்கமானது அவர்கள்படுகிற கஸ்திநோவுக்குக் கார
ணமாயிருக்கிறதென்கிறது முன்சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய அர்த்தத்துக்
கொவ்வாததா யிருக்கிறதென்று காண்பிக்கிறது இந்நடைவாக நரகத்தினுடைய
அக்கினியானது தன்னைவிட்டுப் பாவிகளைப்பிரிய வொட்டாமல் தன்னோடேகூட
வெப்போது மிருக்கப் பண்ணுகிறதென்கிற மேரையானது சிறைசாலையுடைய வுபா
தையைமாத்திரஞ் சொல்லுகிறதொழியத் தகனத்தினுடைய வேதனையைச்
சொல்லமாட்டாததுபோலே யிருக்கிறது. இத்தன்மையாகத் திரவியமாகாத குண
ரூபமானபொருளை நரகாக்கினியானது பிசாசுகளிடத்திலேயும் நரசீவன்களிடத்தி
லேயும் பிறப்பிக்குமென்று சொல்லுகிறார்களே அந்தக்குணமானது அப்படிப்பட்
டபோர்களிடத்திலே ஆதேயமாயிருந்து பிசாசுகளையும் நரசீவன்களையும் கஸ்திப்ப
டுத்துகிறதென்று சொன்னோமானால் அந்தப்பொருளானது பிசாசுகள் முதலான
சீவன்களுடைய சுபாவத்துக்கு மேலானதாயிருக்குமோ அல்லது அதுகளுடைய
சுபாவத்துக் கேற்றிருக்கிற பொருளாயிருக்கிறதோவென்று நிச்சயம்பண்ணுகிற
தரிது. இதுதவிர யெந்தவிதமாகச் சொன்னாலும் பிசாசுமுதலான சீவன்கள் அக்கி
னியினுடைய தகனத்தையுங் குளிரையும் அனுபவிக்கிறதென்கிற அர்த்தமானது

அந்தக்குணத்தினுடைய உபாதையினாலே பிரதியுபதிக்கப்படுகிற தென்றெப்படிச் செல்லுகிறதரிது. ஆனபடியினாலே நரகத்தினுடைய அக்கினிமுதலான பொருள்கள் பிசாசுகளையும் சிவன்களையும் வேறேமேரையாகக் கஸ்திப்படுத்துகிறதென்று விசாரித்துக்கொண்டு வருகிறோம் அந்தமேரையான ...மானதாயிருக்கையிலே அதுக்கொப்புக்கொள்ளத்தக்க யோக்கியதை யுண்டா யில்லையோ வென்று நாம் பரிச்சேதம்பண்ணமல் ... பர்கள் பண்ணுகிறபரிச் சேதத்தை அங்கீகரிக்கக்கடவோம்.

இத்தவிஷயத்திலே நமக்குரோசகமாயிருக்கிறசொல்லு மேரையானது விளங்கும்படிக்கு அறியவேண்டின விசேஷமாவது வுண்டாக்கப்பட்ட பொருள்களிடத்திலே யிருக்கிறசக்தியானது அனந்த பெலசுரூபமாயிருக்கிற சர்வேஸ்வரனுக்குக் கீழ்ப்பட்டதாயிருந்து சுபாவமேரையாக வரக்கூடாதகாரியத்தை அந்தக்கஸ்தியைக்கொண்டு கர்த்தரான... ண்ணத்தக்கதாக வல்லவராயிருக்கிறாரென்கிறதுக்குச்சந்தேகப்படத்தகாது அப்படிவிதமாக அப்படிப்பட்டகாரியத்தைப் பொருளினுடையசக்தியைக்கொண்டுகர்த்தரானவர் பண்ணும்போது பொருளினுடையசத்தியானது சிரவணிகசக்தி யென்கிறநாமத்தைக்கொண்டிருந்துவொன்றுன கர்த்தனுக்கு அதுயெத்தனமாயிரு...தென்று சொல்லப்படும் இந்தச்சத்தியானது வொன்றைப்பண்ணுகிறவகையில்லாமையைத்தரிக்கிறமேரையிலேயு மங்கீகரிக்கத்தக்கதாகும் அதாவது சத்தியானது தனதுசுபாவத்தினாலே பண்ணப்படாதகாரியம் யாதொன்றுண்டு அதைப்பண்ணுகிறதுக்கு அனந்தபெலசுரூபமான கர்த்தனுக்கு யெத்தனமாயிருக்கலாமென்று சொல்லப்படுமாப்போலே பொருளைத் தரிக்கிறசத்தியானது தனதுசுபாவத்தின்படியே தரிக்கப்படாதவஸ்துக்களைத்தரிக்கத்தக்கதாகக் கர்த்தனுக்கெத்தனமா யிருக்கலாமென்று வொப்புக்கொள்ளத்தக்கதாகும்.

ஆகலாலேபண்ணுகிற சத்தி தரிக்கிறசத்தியென்கிற யிவ்விரண்டிலும் சிரவணிகசத்தியானது பிரியுமென்றுசொல்லவேண்டியிருக்கிறது இதைப்படிவெளிப்படுத்தினதினால் சரியான அக்கினிமுதலான பொருள்கள் சரீரமில்லாத பிசாசுகளையும் சிவன்களையுங் கஸ்திப்படுத்துகிற மேரையின்னதென்று கண்டுபிடிக்கலாயிருக்கிறது. அதேதென்றால் சரியான அக்கினியானது தனது சத்தியைக் கொண்டு மனுசரீரத்தைச் சுபாவமாய்த் தகிக்கிறபோது தனதுதகனமானதுமாய்ச் சரீரத்தைக் கெடுக்கிறதுமாயிருக்கிற வுஷ்ணத்தைச் சரீரத்திலே உண்டாக்குமொழிய ஆத்துமத்திலே அந்த வுஷ்ணத்தை யுண்டாக்கமாட்டாது அப்படியே சரீரத்தினுடைய சம்மந்தித்திருக்கிற அம்சங்களைப்பிரியப் பண்ணுகிறதென்கிறது அக்கினியான சரீரத்திலே கோ...ண்ணுகிறதென்று சொல்லவேணும் அதேதென்று ஜீவனுள்ள சரீரத்தின் அம்சங்களுடைய பிரித்தலானது கோவாகுமென்று சொல்லவேண்டியிருக்கிறது இதிலேயறியவேண்டினதாவது நரசீவனுக்குத் த சத்திகளைவிட்டு ஊறற்லின்று சுவமானது ஊர்ப்பிறப்படுகிறாப்போலே சீவனிடத்தில் நின்று சொல்லவேண்டியிருந்தாலும் சரீரத்தேயமாயிருக்கிற ஸ்பரிசமாகிற சத்தியைக்கொண்டுசீவனானது சரீரத்தின் கோவையனுபவிக்கிறதென்கிறதுக்குத் தப்பாது ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கு மத்தியந்தபந்தமுண்டாயிருக்கிறபோதே ஆத்துமமானது சகலவஸ்துக்களைக் காட்டிலுந் தனதாயிருக்கிற வஸ்துவாகிற சரீரத்துக்கு நாசம்வருத்துவிக்கிற கோவுண்டாயிருக்கிறதுக்காக அந்த கோவுக்குத்தக்க துக்கத்தைத் தன்னிடத்திலேயாதேயமாயிருக்கிற மனசாகிற சத்தியைக்கொண்டு அனுபவிக்கிறதென்று கேட்கவேணுமோ அதேதென்று ஆத்துமமானது சீவனாற் சேர்க்கப்பட்ட தனது சரீரத்தோடே யெப்போதுங் கூடியிரு

த்தவும் அதுக்கு நாசம்வராமலிருக்கவுஞ் சரீரத்தைக்கொண்டு ஆனசுகங்களை யனுபவிக்கவும் சுபாவமாக மிகவு மாசைப்படச்செய்தே சரீரத்தின் நோவானது அப்படிப்பட்ட ஆசைக்குவிருத்தமாயிருந்து அந்த ஆசையைக்கெடுக்கிறதினால் நோவினாலே கெடுக்கப்பட்ட ஆசையையுடைத்தான் ஆத்துமமானது மிகுந்த துக்கத்தைத் தன்னிலேமாத்திரம் ஆதேயமாயிருக்கிற மனசாகிறசத்தியைக்கொண்டு அனுபவிக்கிறதென்கிற ...னுடைய சுபாவத்துக்கு யேற்றிருக்கிற ஞாயமுண்டாயிருக்கிறதென்று சந்தேகப்படத்தகாது.

அக்கினிக்குள்ளே வேகிறசரீரத்தோடே கட்டப்பட்ட சிவனானது யிதேதுக்கத்தை ...னுபவிக்கிற மேரையாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல இப்படி ஆத்துமமானது ச...த்தோடே துக்கப்படும்போது ஆத்துமானது அக்கினிக்குள்ளே வெந்துபோகிறதென்றும் அக்கினியினாலே தகிக்கப்படுகிறதென்றுங் கஸ்திப்படுகிறதென்றுஞ் சொல்லத்தகும் சரீரமில்லாமல் ...த்திலேயிருக்கிற சிவனானது அவடத்திலேயிருக்கிற அக்கினியினாலே தகிக்கப்படுகிற மேரையோவென்றால் நரகத்தினக்கினியானது தனதுசத்தியைக்கொண்டு சுபாவமாகத்தனது கடோரவுஷ்ணத்தைச் சரீரமில்லாத சிவனிடத்திலே யுண்டாயிருக்கிறதற்கு வல்லதாயிராதிருக்கதாலும் அந்த அக்கினியின்சத்தியான ...ர்வேசுரனுக்குச் சிரவணிக சத்தியாகிற யெத்தனமா...ருந்து ஆத்துமத்திலே தனதுகடோரவுஷ்ணத்தையுண்டாக்கும் மேன்வுஞ் சீவனு...னது தகிக்கிறசத்தியைக்கொண்டு சுபாவமாக அக்கினியின் தீரமான வுஷ்ணத்தைக்கொண்டிருக்கத்தக்கதாக வல்லதாயிராதிருந்தாலும் ஆத்துமத்துக்குண்டா... அப்படிகொண்டிருக்கிற சத்தியானது கர்த்தனுக்கு சிரவணிகசத்தியான யெத்தனமாயிருந்து நரகாக்கினியினுடைய கடோரவுஷ்ணத்தை யந்தச்சத்தியைக் கொண்டு ஆத்துமமானது கொண்டிருக்கிறதென்று அங்கீகரித்துக் கொண்டுவருகிறோம். சீவனாலேகொண்டிருக்கப்பட்ட இப்படிப்பட்ட நரகத்தின் அக்கினியினுடைய வுஷ்ணமானது ஆத்துமமானது மிகவுந் துக்கப்படுகிறதுக்குக் காரணமாயிருக்கிறதென்கிறது நரகத்தினுடைய அக்கினியினாலே சீவனானது தகிக்கப்படுகிறதென்றும் நரகத்தினுடைய அக்கினிக்குள்ளே சிவனானது கஸ்திநோவுகளை யனுபவிக்கிறதென்றும் வெந்துபோகிறதென்றுஞ் சொல்லுகிறதென்கிறது புத்திக்கொத்திருக்கிறதென்று காண்பித்திருக்கிறது இந்தவகையாக நரகத்தினுடைய குளிரைச் சிவனானது கொண்டிருக்கிறதினால் துக்கமனுபவிக்கிறதென்கிறது நரகத்தின்கஸ்தியை யனுபவிக்கிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறோம்.

சரீரமில்லாதபிசாசுகளும்நரசீவன்களும்இந்தவிதமாகக்குளிரின்கஸ்தியையனுபவித்து அக்கினியினாலே யிந்தப்படி தகிக்கப்படுமென்கிற மேரையுள்ள வசனமானது யிந்தவிஷயத்திலே தேவோக்கித்த வேதத்தினாலே சொல்லப்பட்ட வாக்கியங்களுடைய அர்த்தத்தை யங்கேயுமிங்கேயு திரும்பாமற் செவ்வையான அனுசரணத்தைக்கொண்டு அதை யறிவிக்கிறதினாலே யந்த மேரையுள்ள வசனமானது நமக்குமற்றப் பக்ஷங்களைக் காட்டிலும் உரோசகமான ...மாயிருக்கிறதென்று சொல்லுகிறோம். ஆனால் சரீரமில்லாத பொருளாகிற பிசாசும் சீவனுஞ்சரீரியான வுஷ்ணத்துக்கு ஆதாரமாயிருக்கிறதென்று சொல்லுகிற மேரை நிமித்தமாக ஆச்சரியப்படவேண்டாம். அதேதென்றால் நரசீவனானது அசரீரியாயிருக்கையிலே சரீரத்தோடே கட்டப்பட்டுச் சரீரத்தினுடைய பந்தனத்துக்கு ஆதாரமாயிருக்கிறதென்று சொல்லவேணும். அப்படிப்பட்ட பந்தனமானதுமார்பிதாவினாலே பண்ணப்படுகிற தென்கிறதுக்காக அது சரியான தாயிருக்கிறதென்று அனேகம் வித்தியாபாரகராயிருக்கிறபேர்கள் சொல்லுகிறார்கள். இதுதவிர அதெல்லாஞ் சுபாவமாய் வாராமல் நரக அக்கினியினுடைய சத்தியானது அ

னந்த திவ்விய பெலத்துக்கு யெத்தனமாயிருந்து தனது வுஷ்ணத்தைச் சரீரமில்லாத பொருள்களிடத்திலே யுண்டாக்கி யிந்தப் பிரகாரமாக அதுகளை நரக அக்கினியானது தகிக்கிறதென்றும் இந்தடவாகச் சரீரமில்லாதபொருளானது சரீரமுள்ள வுஷ்ணத்தையற்புத மேரையாகக்கொண்டிருந்து நரக அக்கினியினாலே தகிக்கப்படுகிறதென்றுஞ் சொல்லுகிறோமொழியச் சரீரமில்லாத பொருளானது சரீரமுள்ள வுஷ்ணத்தையந்த அவசரத்திலேயுண்டாக்கிறதென்றுஞ் சுபாவமேரையாகக் கொண்டிருக்கிற தென்றுஞ் சொல்லுகிறோமில்லை. இம்மேரையாகச் சரீரமில்லாத பிசாசும் சீவனும் சகல சரீரபொருள்களைக் காட்டிலுந் தானுத்தமபொருளாயிருக்கிறதென்றும் சரீரியான பொருளென்னப்பட்ட யாவுஞ் சுபாவமுள்ள கிரமமாகத்தனக்குக் கீழாகயிருக்கவேணுமென்றும் பிரத்தியக்ஷமாயறிந்து நீசசரீரியான அக்கினியானது தனது வுஷ்ணத்தை நீசசரீரியான பொருளிடத்திலேயுண்டாக்கியதுகளைத் தகிக்கிறதுபோலே யுத்தமபொருளாயிருக்கிற பிசாசினிடத்திலேயும் சீவனிடத்திலேயும் அக்கினியானது வுஷ்ணத்தை யுண்டாக்கும்போது அக்கினியினுடைய தகனத்துக்கு நீசசரீரியான வஸ்துவைப்போலே தானுட்பட்ட பொருளாயிருக்கிறதென்று பிசாசும் சீவனுனதும் கண்டுவருகிறதினாலே மனோவாக்குக் கெட்டாததாயிருக்கிற துக்கத்தையு மனஸ்தாபத்தையு மனுபவிக்கிறதென்கிறதுக்குச் சந்தேகப்படக் கணக்கில்லை.

அவ்வண்ணமே நீசமான அக்கினியானது தனது வல்லமையைப் பிசாசுகளிடத்திலேயும் சீவன்களிடத்திலேயு முண்டாக்கித் தனது வுஷ்ணத்தினாலே சரீரமில்லாத அப்படிப்பட்ட வுத்தம பொருள்களைச் சூழ்ந்திருக்கிற மேரையாகத் தன்னிடத்திலேயடக்கிறதென்றுசொல்லத்தகும் இதுகாரணமாய் நரகத்தினுடைய அக்கினியானதுதன்னைமுன்சொல்லப்பட்ட சரீரமில்லாத பொருள்களைப் பிரியவொட்டாதென்கிறதுக்காகநரக அக்கினியானதுசரீரமில்லாத பிசாசுகளையும் நரசீவன்களையும் அங்கேயுமிங்கேயும்போகவொட்டாமல்தகிக்கிற சிறைச்சாலையாயிருக்கிறதென்றுஞ்சிலவித்தியாபாரகராயிருக்கிறபேர்கள்சொல்லுகிறதுபோலேசொல்லலாயிருக்கிறது. இதன்றியே அசரீரியானவுஷ்ணமானதுமுன்சொன்னமேரையாகச் சரீரமில்லாதபொருளைத்தன்கீழ்ப்படுத்துகிறபோதே சரீரமில்லாதபொருளிடத்திலே அதுநரகாக்கினியினாலே யுண்டாக்கப்படுகிறவிரோதமானகுணமாயிருக்கிறதென்றுசொல்லப்படும். அப்படிப்பட்ட அக்கினியானதுதனதுகோரமான வுஷ்ணத்தைச்சரீரமில்லாத பொருளிடத்திலே சுபாவமேரையாக பிறப்பியாமல் அனந்த திவ்விய மரண பெலத்துக்கு அது எத்தனமாக அதை அற்புத ரீதியாகச் செனிப்பிக்கிறபோதே இப்படிப்பட்ட உஷ்ணத்தைச் சரீரமில்லாத பொருளிடத்திலே செனிப்பிக்கிறதுக்குச் சரீரமில்லாத பொருள் அந்த அக்கினிக்குச் சமீபமாயிருக்கவும் பாதாளத்திலே [illegible]ம் தேவையில்லை அதேதென்றால் அனந்த நிஷ்சொரூபமான கர்த்தர் [illegible] பாவிகளுக்கு ஆக்கினையிடத்தக்க தமது அனந்தபெலத்துக்கு யெத்தனமாக அப்படிப்பட்ட அக்கினியைப் பண்ணிக்கொண்டுவருகிறதினாலே அக்கினியை தனது வுஷ்ணத்தை யற்புதரீதியாக வுண்டாக்கிறதுக்கு சத்தியின் ஸ்பரிசனம் வேண்டியிருக்கிறதொழிய ஸ்தலசாமீப்பியந்தேவையில்லையென்று அங்கீகரிக்கக்கடவோம்.

அதெப்படியென்றால் பரமண்டலத்திலே பதிந்திருக்கிறசூரியனானது தனது பிரகாசத்தைப்பூமியிலெங்கும் பரம்பப்பண்ணுமொழியப் பூமிக்குள்ளே தனது பிரகாசத்தைப் பூரப்பண்ணுதென்கிறதுக்குத் தப்பாது. இப்படியிருக்கையிலே பூமிக்குள்ளே அனேகந்தூரமாயிருக்கிற பொன்மாணிக்கங்கள் முதலான ரத்தினங்களுக்குச் சூரியனானது தனதுசத்தியைக்கொண்டு வொளியைச் செனிப்பிக்

கிறதுக்கு வல்லதாயிருக்கிறதென்று அங்கீகரித்துக்கொண்டு வருகிறோமே. அனந்ததிவ்வியபெலத்துக்கு யெத்தனமாயிருக்கிறதாக அக்கினியானது பாதாளத்திலே யிருந்தாலுந் தனது சத்திய ஸ்பரிசனத்தைக் கொண்டு தூரத்திலேயிருக்கிற சரீரமில்லாத பொருளிடத்திலே அற்புதமேரையாக வுஷ்ணத்தை யுண்டாக்கிறதுக்கு அப்படிப்பட்ட அக்கினியானது வல்லதாயிராதென்று சொல்லுகிறதுக்கு ஞாயங்காணமாட்டாது.

இற்றைவரைக்கும் நம்மாற்பண்ணப்பட்ட பிரசங்கத்தினாலே நரகத்தினுடைய அக்கினியானது சரீரமில்லாத பிசாசுமுதலான பாவாத்துமாக்களைக் கஸ்திப்படுத்துகிற மேரையை யெவ்வளவாகிலும் வெளிப்படுத்தப் பட்டாப்போலேயாச்சுது. இனி நரகத்திலே யெண்ணப்படாத கஸ்தியுபாதைகளை யனுபவித்துக் கொண்டுவருகிற பிசாசுமுதலான பாவிகளுக்கு யாதொரு காலங் கரையேற்றமுண்டா யிருக்குமோ வில்லையோவென்று வகையறுக்கத்தக்கதாகும். அதேதென்றால் தெளிவற்ற பாவிகளிந்த விஷயத்திலே அங்கீகரிக்கத்தக்க சத்தியத்தைக் கண்டுபிடியாமல் தாறுமாறுயச் சிலதப்பறை விசேஷங்களை யங்கீகரித்துக் கொண்டுவருகிறார்கள் அதேதென்றால் நரகத்திலே விழுந்தபாவிகள் சிறிதுநாள்மாத்திரங் கஸ்தியுபாதைகளை யவ்விடத்திலே யனுபவித்து பிற்பாடுதிரும்பப் பூமியிலேவந்து பிறக்கிறார்களென்று அங்கீகரித்துப் பலபல சென்மங்கள் நிமித்தமாகச் சீவனானதுகள்வருகிறதும்போகிறதுமா யிருக்கிறதென்று அங்கீகரிக்கிறார்களொழிய யென்றென்றைக்கும் அது நரகத்திலே யிருக்குமென்கிறது அவர்களுக்குச் சம்மதமாயிராது. அப்படியே சிலபாவங்களுக்கு மாத்திரம் ஒருக்காலு முடியாத வாக்கினையானது பலிக்குமென்று அவர்க ளங்கீகரித்தாலும் அது வுபசாரமேரையாக மேலெழுந்தவாரியாக மாத்திரம் அவர்களாற் சொல்லப்படுகிறதொழிய நரகத்தினுடைய ஆக்கினையைப் பாவிகளானபேர்கள் ஊழியுள்ளகால மனுபவிப்பார்களென்கிற விசேஷத்தை மெய்யாகவே அவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களென்று சொல்லக்கூடாது.

அதேதென்றால் அவர்களுடைய மதத்திலேயுண்டான சித்தாந்தத்தையனுசரிக்கும்போது சகலயுகங்களொழிந்து மகாபிரளையம்வந்தபிற்பாடு யெல்லாருக்கு மோக்ஷமுண்டென்று சொல்லவேண்டியிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே நரகத்தினுடைய ஆக்கினைபொருகால முடியுமென்கிற தப்பறைப் பக்ஷமானது இவர்களுக்குச் சம்மதமாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது அப்படியினாலே யிப்படிப்பட்ட பக்ஷமானது முழுத்தப்பறையா யிருக்கிறதென்று காட்டும்படிக்கு நரகத்திலே யெண்ணப்படாத கஸ்தியுபாதைகளை யனுபவித்துக்கொண்டு வருகிறபிசாசு முதலான பாவிகளை நரகத்திலேநின்று பிறப்படாமல் மனோவாக்குக் கெட்டாததாயிருக்கிற கஸ்திநோவுகளையென்றென்றைக்கு மனுபவிப்பார்களென்று சிறிதுஞாயங்களினாலே யெண்பிக்கக்கடவோம் அப்படிப்பட்ட சத்தியவிசேஷத்தை ஆண்டவன் தனது சத்தியவேதத்திலே பலபலவாக்கியங்களினாலேதிருவுளம்பற்றினதினாலேதிலேலவலே சமானாலும் சந்தேகத்துக் கிடங்காணமாட்டாது ஆனால் நரகத்திலே விழுந்தபேர்கள் யென்றென்றைக்கும் அதிலேயிருக்கக் கர்த்தன் கட்டளையிட்டதென்கிறது தப்பில்லாக் கிரமமாயிருக்கிறதென்று சிறிது ஞாயங்களினாலே யொப்பச்சொல்லுவோம் யிதெல்லாம் வருகிற பாடத்திலேகர்த்தன்கிருபாகடாக்ஷத்தினா லெல்லாருக்கும் வெளியாகும்படிக்கு ஆனஞாயங்களினாலே யிந்தசத்தியத்தைக் காட்டக்கடவோம்.

௩௮-ம் பாடம்.

நரகிஷனுடைய சுபாவசொரூபத்தை [illegible] அழிந்துபோகிற புவுதீகசரீரத்தைப் பாவத்தோடேகூடவிட்டுப் பிரிந்த நரகிஷனானது பாவத்திலே நிலைகொண்ட மனசாயிருக்குமென்று சொல்லவேண்டியிருக்குமே ஒழிய மற்றப்படியல்ல. இதுக்கு நாயமேதெனில் வழிப்போக்கனாயிருக்கிறவன் வழியிலே அங்கேயுமிங்கேயும் விருத்தமேரைகளைக் கடக்கிறதுக்கு வல்லவனா யிருக்குமாப்போலே மனுஷனானவன் பூமியிலேதிரிகிற காலமட்டும் வழிப்போக்கன் மேரையாக விருத்த விஷயங்களிலே தனது சுவாதந்திரியமுள்ள மனதைக் கொண்டு திரும்புகிறதுக்கு வல்லவனாயிருக்கிறானென்று அனுபவசித்தியிலே கண்டுபிடிக்கலா யிருக்கிறது.

இதுதவிர அழிந்துபோகிற புவுதீகசரீரமானது பலபலவிருத்தமான விகாரங்களோடேகூடியிருந்து வியாதிக்கும் ஆரோக்கியத்துக்கும் பாத்திரமாயிருக்கச்செய்தே அத்தியந்தவிருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பத மாயிருக்கிற அப்படிப்பட்ட சரீரத்தோடே மாத்திரை மேரையாகக் கட்டப்பட்ட நரசிஷனானது பலபல அத்தியந்த விருத்தமான விகாரங்களுக் குள்ளாய்த் தர்மமாகிற ஆரோக்கியத்தையும் பாவமாகிற வியாதியையும் அனுபவிக்கிறதுக்குப் பாத்திரமாயிருக்கிறதென்கிறது [illegible]கிறமேரையென்று சொல்லப்படும்.

அவ்வண்ணமே மனுஷனானவன் பூமியிலே திரிகிற காலமட்டும் தனது சுவாதந்திரியமுள்ள மனதைக் கொண்டு தேவவிஷயக பத்தியைக் கொண்டிருக்கிறவனுமாய் ஆண்டவனுக் குகந்தவனுமா யிருக்கலாமென்கிறதுக்குச் சந்தேகமில்லை. மீளவும் மனுஷனானவன் தேவவிஷயக பத்தியைவிட்டுத் தனது சுவாதந்திரியமுள்ள மனதோடு கனபாவத்துக் குடன்பட்டுக் கர்த்தனாலே யருவருக்கப்பட்டுத் தகப்பாவியாய்ப் பூமியிலே திரியலாமென்கிறதுக்குத் தப்பாது. இப்படி [illegible]ப்பட்ட மனுஷன் மரணத்தினிமித்தமாகப் பூமியிலே நடக்கிற மேரையையும் விகாரத்துக்கு ஆஸ்பதமாயிருக்கிற சரீரத்தையுஞ் சிவனானது போக்கடித்து வழிப்போக்கனென்கிற அவஸ்தையினின்று அவதியையடைந்ததென்று சொல்லவேண்டியிருக்கிறது. அவதியை நரகிஷனானது அடைந்தபோதே வழிப்போக்கன்போலே அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு அதுவன்னாயிராமல் பாவத்திலின்று தனது மனதை தேவவிஷயக பத்தியிலே திருப்புகிறதுக்கும் மீளவுந் தேவவிஷயக பத்தியைவிட்டுக் கர்த்தனுக் கருவருப்புள்ள பாவத்தைத் தனது சுவாதந்திரியத்தினாலே [illegible]கிறதுக்கும் வல்லதாயிருக்கமாட்டாதென்றும் ஒப்புக்கொள்ளத்தக்க சந்தேகமாகும்.

இப்படி சொல்லாமல் அப்படிப்பட்ட சிவனானது பாவ புண்ணியத்தைப் பண்ணுகிறதுக்கு வல்லதா யிருக்கிறதென்று சொன்னோமானால் மனுஷனுடைய மரண நிமித்தமாக வழிப்போக்கனுடைய அவஸ்தையும் அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கிற சரீரத்தையும் போக்கடித்த சிவனானது வழிப்போக்கனுடைய மேரையை விட்டுப்பிரிய வில்லையென்றும் அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்குக் காரணத்தைக் கொண்டிராமலப்படிப்பட்ட [illegible] விகாரங்களுக்குள்ளா யிருக்கிறதென்றும் சொல்லவேண்டியிருக்கிறது. அப்படிக் [illegible]த்த அபத்தத்தை அங்கீகரியாததுக்கு அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கிற தேகத்தைவிட்டுப் பிரிந்ததுமாய் வழிப்போக்கனுடைய மேரையைப் போக்கடித்ததுமா யிருக்கிற சிவனானது அவதியை யடையும்போது அதுக்குத்தக்க மேரையைக் கொண்டிருக்கிறதென்கிறதுக்குத் தப்பாது.

அதேதெனென்றால் வழியிலே நடக்கிற சிவனானது வழிக்குத்தக்க அத்தியந்த விருத்தமான மேரைகளைக் கொண்டிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாய்க் காணப்படுமாப்போலே அவதியை யடைந்த சிவனானது அவதிக்கான மேரையைக் கொண்டிருக்க வேணுமென்கிறதற்குத் தப்பாது இதிப்படியிருக்கையிலே கண்டுபிடிக்கத்தக்க சத்தியரகசியமானது அத்தியந்த விருத்தமான விகாரங்கள் வழிக்கடுத்த மேரையா யிருக்குமாப்போலே வழியாகாததா யிருக்கிற அவதியானது வழிக்கான மேரைகளில்லாததாயிருக்கவேணுமென்கிறதுக்குச் சந்தேகப்படத்தேவையில்லை.

ஆதலாலே பலபல விருத்தவிதங்களில்லாததுமா யொருமேரையையுடைத்தானதுமாயிருக்கிறது. அவதியையடைந்த அந்தச் சிவனானது விருத்தமான விகாரங்களில்லாமலிருக்க வேணுமென்கிறதுக்குத் தப்பாது இதுகளெல்லா மங்கீகரிக்கத்தக்க சத்தியமா யிருக்கும்போது கண்டுபிடிக்கத்தக்க சத்தியரகசியமாவது மனுஷனானவன் தேவவிஷயக பத்தியோடே மரணமாகிற அந்தஸ்தை யடைந்தா லவனுடைய சிவனானது வழிப்போக்கனுடைய மேரையையும் அத்தியந்தவிருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கிற தேகத்தையும் விட்டுப்பிரிந்ததா யிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட சிவனானது தேவவிஷயக பத்தியினாலேயுஞ் சிநேகத்தினாலேயும் நிலைகொண்ட மனசாயிருந்து கர்த்தனுக்கு விருத்தமான பாவத்திலே தனது மனதைத் திருப்பமாட்டாதென்கிறதுக்குச் சந்தேகப்படத்தகாது. தேவவிஷயக பத்தியிலேயுஞ் சிநேகத்திலேயு [illegible]றென்றைக்கும் நிலைகொண்ட மனதுள்ள சிவனானது [illegible]விய இருபைக் கென்றென்றைக்கும் பாத்திரமா யிருக்கக்கொள்ள அப்படிக்கொத்த சிவனென்றென்றைக்கும் பரிபூரண பாக்கியமாகிற மோக்ஷ[illegible] பரமானந்த முதலான குறையற்ற செல்வங்களை யனுபவிக்கிறதுக்குத் தயாபரனான கர்த்தரானவர் திருவுளமானாரென்று வேத வாக்கியத்தினாலே சந்தேகமற யங்கீகரித்துக்கொண்டு வருகிறோம். அல்லது தேவ இஷ்டப் பிரசாதத்தைப் போக்கடிக்கிற கனபாவத்தோடு மனுஷனானவன் மரணமாகிற அந்தஸ்தையடைந்தால் அவனுடைய சிவனானது வழிப்போக்கனுடைய மேரையையும் அத்தியந்தவிருத்தமான விகாரங்களுக்கு ஆஸ்பதமா யிருக்கிற தேகத்தையும்விட்டுப் பிரிந்ததாயிருக்கக்கொள்ள அப்படிப்பட்ட சிவனானது தேவ இஷ்டப் பிரசாதத்தைப் போக்கடிக்கிற கனபாவத்திலேயும் தேவவிஷயக வர்மத்திலேயும் நிலைகொண்ட மனதாயிருந்து கர்த்தனுக்கேற்றிருக்கிற புண்ணியத்திலேயும் பத்தியிலேயுந் தனது மனதைத் திருப்பமாட்டாதென்று அங்கீகரிக்கக் கடவோம். தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கிற கனபாவத்திலேயுந் தேவ விஷயக வர்மத்திலேயு மென்றென்றைக்கும் நிலைகொண்ட மனதுள்ள சிவனானது தெய்வீகநீதி திருவுளப்படியே தண்டனைக்குப் பாத்திரமா யிருக்கக்கொள்ள [illegible]வேதனையுங் கிரமத்தோடு நடத்தி வருகிற அனந்த நீதியுள்ள கர்த்தரானவர் அப்படிக்கொத்த சிவனானது நரகத்தினுடைய வொழியாத அக்கினிக் கென்றென்றைக்கும் அவியாத கட்டையா யிருக்கத்தக்கதாகத் திருவுளமானாரென்று வேதவாக்கியத்தினாலே அறிகிறதும்போராமல் அப்படிப்பட்ட நீதியுள்ள திவ்விய திருவுளமானது பழுதற்ற ஞாயத்துக் கேற்றிருக்கிறதென்று பலபல புத்திகளினாலே யொப்பச் சொல்லலாமென்கிறதுக்குத் தப்பாது அதேதெனென்றால் கனபாவத்தோடே தேகத்தைவிட்டுப் பிரிந்த சிவனானது அதிலே யென்றென்றைக்கும் நிலைகொண்ட மனசுள்ளதுமா யென்றென்றைக்கும் ஆக்கினைக்குப் பாத்திரமானதுமா யிருக்கிற மேரையைப் பார்க்கும்போது அப்படிப்பட்ட சிவனானது நரகத்திலே விழுந்து பூமியிலே பண்ணின பாவத்தினாலாக யென்றென்றைக்குங் கஸ்தியுபாதைகளை யனுபவிக்கிறதென்கிறது பாவத்திலின்று திரும்பாத மனசுள்ள சிவனுக்குக் கிரமமாக நீதிப்படியே வருத்தக்கபோலவாமென்று சொல்லக்கடவதொழிய மற்றப்படியல்ல.

இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட ஞாயங்கள் தவிர பரலோகசுபாவசொரூபத்தினாலே-காம்சொன்ன சத்தியத்தை யெரப்பச்சொல்லலாயிருக்கிறது. அதெப்படியென்றாற் சகலத்தையுந் தப்பில்லாக் கிரமத்தோடே நடத்திவருகிற அனந்தநீதியான கர்த்தரானவர் வழிப்போக்கனாயிருக்கிற மனுஷனானவன் பூமியிலேயிருக்கிறநாளெல்லாம் பிரதானமாய் விரைக்கிறதுக்கான காலமாயிருக்கப் பூலோகமானது விரைக்கிறதுக்கான ஸ்தலமாயிருக்கவும் ஞாயநீதிப்படியே கட்டளையிட்டாரு ரென்றும் பின்னை பூமியிலே விரைக்கப்பட்ட விரைப்பு முழுப்பலனைக்குங் குறையில்லாமற் கடைசியாயனுபவிக்கத்தக்கதாகப் பரலோகத்தை அன ஸ்தலமாயிருக்கக் கட்டளையிட்டாரென்றும் வேதப் பிரமாணத்தினாலே அறிகிறோம். இப்படிப்பட்ட கிரமத்தப் பாதகருக்குச் சிவனானது பூலோகத்திலே பண்ணின பாவத்துக்குத் தக்கபலனைப் பொசிக்கிறதுக்கு ஆன ஸ்தலமாகிற நரகத்தை யடையுமென்கிறதுக்குத் தப்பாது. அப்படிப்பட்ட நரகமானது வழிப்போக்கராகாத பாவிகள் அடையத்தக்க ஸ்தலமாயிருக்கத் தொள்ளப்பாவிகள் பூமியிலே நடந்த வழிக்கு அது அவதியாயிருக்கவேணுமென்று சொல்ல வேண்டியிருக்கிறது அது அவதியாயிருக்கிறபோதே யதுக்கப்பாலொன்றுமில்லையென்று அங்கீகரிக்கக்கடவோம்.

அல்லது நரகத்துக்கப்பாலின்னம் வேறேயுண்டென்று சொன்னோமானால் அர்த்த விரோதமுள்ள விசேஷங்களை அங்கீகரிக்கத்தக்க தாகும். அதெப்படியென்றால் ஒன்றுக்கப்பாலேதொன்றுமில்லையென்று சொல்லும்போது அதுக்குமேலென்று சொல்லப்படும் ஒன்றுக்கப்பால் வேறேயொன்றுமில்லையென்று சொல்லப்பட்டது அது அவதியென்று சொல்லத்தகும். வழிக்கும் அவதிக்கும் இத்தனை பிரிவும் வேற்றுமையுண்டாயிருக்க கொள்ளவழியும் அவதியும் இந்த யிரண்டுமொன்றே நின்றுவென்று [illegible] கலாமென்று மதிகெட்டவன் முதலாய்ச் சொல்லமாட்டான். அவ்வண்ணமே பாவிகளுடைய நரகமான அழுகிற்பமென்றால் அதுக்கப்பாலின்னம் வேறேயொன்றுமிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கும். இப்படி சொல்லும்போது நரகம் ஒன்றே வழியும் யவதியுமாயிருக்கிற தென்கிற அபத்தத்துக்குச் சம்மதப்பட்டாப்போல் யாச்சுது. இப்படிப்பட்ட அபத்தத்தை யொப்புக்கொள்ளாதபடிக்கு வழிப்போக்கராகாத பாவிகள் தாங்கள் நடந்த பாவவழிக்கு அவதியாகிற நரகத்திலே விழும்போதே அந்நடத்திலே என்றென்றைக்கும் கஸ்தியுபாதைகளை யனுபவியாதொழிய நரகத்துக்கப்பாலவர்களடையத்தக்கது வேறேயொன்றுமில்லையென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

இந்தச் சத்திய விசேஷமானது வேறேவிதமாகவெளிப்படுத்தப்படலாகுகிறது அதேதென்னில் ஒன்றுவொன்றாலே யபேக்ஷிக்கப்பட்டால் அபேக்ஷிக்கப்பட்டது அவதியெனவும் [illegible] மேலையுள்ளது வழியென்றுஞ் சொல்லத்தகும். இது நிமித்தமாக விரைப்பானது பலனுடைய வனுபவத்தை யபேக்ஷிக்கிறதினாலே விரைப்பானது வழியா யிருக்கிறதென்றும் பலனுடைய வனுபவமானது அவதியா யிருக்கிறதென்றும் சொலலவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆதலாலே வழிரூபமான விரைப்புக் கப்பாலின்னம் வேறேயொன்றுண்டென்றால் அவதியான பலனுடையயனுபவமுண்டாயிருக்கிறதென்று சொல்லவேண்டியிருந்தாலும் பலனுடைய அனுபவமாகிற கடைசியான அவதிக்கப்பால் வேறேயொன்றுண்டாயிருக்கிற தென்று சொல்லவுங் கருதவுங் கூடாது. இதுகாரணமாகப் பாவிகள் பாவங்களைப் பண்ணுகிறதென்கிறது அவர்கள் விரைக்கிற விரைப்பாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறதினால் அதுக்கப்பால் கடைசியான அவதியாகிற ஆக்கினை யனுபவமுண்டாயிருக்கிறதென்று சம்மதிக்கவேண்டியிருக்கிறது. ஆகையினாலே அப்பால் வேறேயொன்றை யபேக்ஷியாத கடைசியவதியாகிற இப்படிப்பட்ட ஆக்கினையின் அனுபவமானது பாவிகளிடத்திலே யென்றென்றைக்

கிருக்குமென்று சொல்லத்தகுமொழிய யதுமுடிவு மென்று சொல்லுகிறதென்கிறது அவதியின் ரூபத்துக்கொவ்வாத மேரையா யிருக்கிற தென்கிறதுக்குச் சந்தேகமில்லை.

கர்த்தரானவர் பூலோகத்திலே சில பாவங்களுக்குச் சிறுமுறை யாக்கினையிடுகிற மேரையானது நம்மாற் சொல்லப்பட்ட இந்த ஞாயத்துக்கு விருத்தமாயிருக்கிற தென்று சொல்லவும் எண்ணவுங் கடவாயல்ல. அதேதென்றால் இவ்வுலோகத்திலே பாவிக்குச் சர்வேஸ்வரன் ஆக்கினையிடுகிற மேரையை விசாரிக்கும்போது அதைப் பார்த்திருக்கிற பேர்களுக்கும் பாவிக்கும் புத்தியுண்டாக வேணுமென்றும் அப்படிப்பட்ட ஆக்கினை காத்தனாலே நடப்படுகிறதினாலே, யும் அப்படிப்பட்ட ஆக்கினை பாவியினுடைய பாவத்துக்குச் சரியாக யிராததினாலேயும் அது வழிப்போக்கனுக்கான ஆக்கினை யனுபவமாயிருக்கிறதினாலேயும் அப்படிப்பட்ட ஆக்கினை யனுபவத்துக்குக் கடைசி யவதியான யாக்கினை யனுபவத்தின் கர்மயானது [illegible]லுமென்று சொல்லக்கூடாது. இதன்றியே தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடிக்கிற பாவத்தினுடைய கனத்தை யளவறுத்தோமானால் அந்தப்பாவத்துக்கு முடிவில்லாத திவினை யுண்டென்று கண்டுபிடிப்போம். ஆதலாலே நன்மைபெறுகிற ஸ்தலமாகிற பூலோகத்திலே பாவியானவன் அப்படிப்பட்ட பாவத்து நிமித்தமாக [illegible] வுபாயங்களைப் பண்ணித் தனக்குத் தேவ இஷ்டப்பிரசாதம் வரத்தக்கதாகப் பண்ணி அப்படிப்பட்ட தேவ இஷ்டப்பிரசாதமாகிற பிரகாசத்தினாலே கனபாவமாகிற அந்தகாரமானது நீங்கிப்போமென்கிறதுக்குத் தப்பாது. அல்லது அப்படிப்பட்ட கனபாவத்தோடே பாவியானவன் மரணத்தை யடைந்தால் அது நிமித்தமாக அனந்த திவ்விய நீதியுள்ள தீர்வைப்படியே பாவியானவன் நரகத்திலே விழுகிறானென்று ஒப்புக்கொள்ளத்தக்க குன்றாதசத்தியமாகும்.

அப்படிப்பட்ட ஸ்தலமானது தேவ இஷ்டப்பிரசாத முதலான நன்மைகளைப் பெறுகிறதற்கு ஆன ஸ்தலமாயிராமல் அப்பாவத்துக்குச் சரியான ஆக்கினையை யனுபவிக்கிறதற்கான சிறைச்சாலையா யிருக்கிறதினால் அதிலே யடைக்கப்பட்ட பாவியானவன் தான் பண்ணின பாவத்துக்குச் சரியான ஆக்கினையை யனுபவிப்பானென்கிறது தப்பில்லாத நீதியுள்ள கிரமத்துக்கு ஒத்திருக்கச்செய்தே கனபாவத்துக்கு பாத்தங்க சரியான ஆக்கினை அப்படிப்பட்டதென்று நிச்சயம் பண்ணும்படிக்குப் பாவத்துக்கு [illegible] வினையின் கனமானது எம்மாத்திரமென்று அடைவாகக் கண்டு பிடிக்கக்கடவோம். அதேதென்றால் அனந்தநீதியான கர்த்தரானவர் வேதத்தினாலேயும் நியாயமுள்ள ஞானத்தைச் சனங்களுக்குக் கொடுத்ததினாலேயும் விலக்கின [illegible]த்தைப் பாவியானவன் பண்ணும்போது கர்த்தரானவரையெத்தனையுமில்லையென்றுயெண்ணி அவரைச்சட்டைபண்ணாமற் கர்த்தனுக்கு நிந்தையாகப் பாவியானவன் கனத்தகுற்றத்தைப்பண்ணினானென்று சொல்லவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட குற்றத்தின் திவினையளவறுக்கவேணுமானாலந்தக் குற்றத்தைக்கொண்டு நிந்திக்கப்பட்டவனுடைய பெருமையெம்மாத்திர மென்று அளவறுத்து நிச்சயம் பண்ணவேணும். அதேதென்றால் நிந்திக்கப்பட்டவனுடைய பெருமைகொஞ்சமானாலவனை யுத்தேசித்துப்பண்ணப்பட்ட குற்றமுங்கொஞ்சமான தென்று சொல்லப்படும். அல்லது நிந்திக்கப்பட்டவனுடைய மகிமையானது மகாபெரியதாயிருந்தாலவனை யுத்தேசித்துப்பண்ணப்பட்ட குற்றம் மகா பெரியகுற்றமென்றுசொல்லத்தகும்.

இந்தச்சத்தியவிசேஷமானதை லோகத்திலே அவரவர்க்கு பண்ணப்படுகிற பலபல குற்றங்களுடையமேரைகளினாலேகண்டுபிடிக்கலாயிருக்கிறது. அதெப்படியென்றால் யாதொருத்தன்சண்டாளனைக் கன்னத்திலே அடித்தாலப்படிப்பட்டது

வனடித்த அடியைக்கொண்டு சண்டாளனை நிந்தித்து அவனுக்குக் குற்றம்பண் [illegible]ப்பண்ணினு னென்கிறதுக்குச் சந்தேகமில்லை. பின்னையுமப்படிப்பட்ட வன் [illegible]தினுலே [illegible]னையும் பிராமணனையுங்கன்னத்திலே யடித்தானுலைப்படிப்பட்ட அடி [illegible]யென்றுற் சகலத் [illegible]ள்ளாமுனையும் பிராமணனையும்நிந்தித்து அவனவனுக்குண்டான கர்த்த[illegible]னவர் வழி[illegible]து அடித்தவனுலே அவனுக்குப்பண்ணப்பட்ட குற்றமான [illegible]ளரும் [illegible]ரணமாய் [illegible]லாயிருக்கிறதென்று அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. க [illegible]க்கொண்டு [illegible]ஸ்தலம[illegible]த யாளுகிற ராசாவைக் கன்னத்திலே யாதொருத்தனடி [illegible]ருமைக்குத்தக்க பூமி [illegible] நிந்திக்கப்பட்ட ராசாவுக்கு அவனுற் பண்ணப்பட்ட குற் [illegible]யேறக் குறைவு [illegible]ான குற்றமாயிருக்கக் கொள்ள ராசாவை அடித்தவ [illegible] ராச [illegible]சியாய் ராச்சியத் [illegible]ற்றத்தினிமித்தமாகத் தலைவெட்டுண்டுபோகிறதென்றது [illegible]லடியினிமித்தம[illegible]குக் கொத்திருக்கு மென்கிறதுக்குச் சந்தேகப் [illegible] தகா [illegible]னது மிகவுங் கனதுக் [illegible] வருகிற விப்படிப்பட்ட கிரமத்தினுலே குற்றத்துக் குண்ட [illegible]க்குப் பண்ணின [illegible]த யின்னதென்றுகண்டு பிடிக்கக்க[illegible]வாம். அதெப்படியெ [illegible]யமுள்ள கிரமத்து[illegible]நக் கொஞ்சப்பெருமை யுண்டாயிருக்கக்கொள்ள அவனுக் [illegible]உலத்திலே கடக்கு[illegible]மானது கொஞ்சக் குற்றமென்று சொல்லப்படும். வெள் [illegible]தீவினையின் கன[illegible]க்கும் அதிக[illegible] அதிகமான பெருமைக ளுண்டாயிருக்கி [illegible]ருற் சண்டாளனுக்குப்[illegible]ப்பட்ட கு[illegible]மான [illegible]வனவனுக்குண்டான பெருமை [illegible]பண்ணப்பட்ட குற்றமதென்று [illegible]சொல்லவேண்டி யிருக்கிறது. [illegible]கடைசியாய் ர [illegible]லைக்குழ [illegible]குற்றமாயிருக்கக் கொள்ள ராசாவைக் கன்ன [illegible]திலே யடித்தவன் சாவுக்குப் பாத்திரமா யிருக்கச் செய்தே சண்டாளன் முத [illegible]ஸபேர்களை யடித்தவன் தலைவெட்டுண்டு போகிறதுக்கு யோக்கியனு யிருக்கி [illegible]னென்று சொல்லார்கள்.

இப்படி குற்றத்தை யளவறுக்கு மேரையானது [illegible]யாயுமுள்ள [illegible]மாயிருக்கும்போது பாவியானவன் கர்த்தன் விலக்கின பாவத்தைப் பண்ணுகி [illegible]றுலே கர்த்தனுக்குநிந்தையாக அவருக்குக்குற்றம் பண்ணுகிறு[illegible]னென்கிறதுக் [illegible]தப்பாது. ஆதலாலே நிந்திக்கப்பட்ட கர்த்தனுடைய பெருமையி னளவாக [illegible]ருக்குப் பண்ணப்பட்ட குற்றமானது [illegible]மாத்[illegible]ரமாயிருக்கிறதென்று அங்கீ [illegible]க்கக்கடவோம். ஆதலாலே கர்த்த[illegible]க்குண்டான மகிமையானது முடிவில [illegible]மகிமையா யிருக்கக்கொள்ள அவ[illegible]க்குப் பண்ணப்பட்ட குற்றத்தின் தீவி [illegible]யளவுக்கு[illegible]மானுல் அந்தக் குற்றத்தின் [illegible]ல்லாப்பானது முடிவில்ல [illegible] [illegible]ல்ஸாப[illegible] சொல்[illegible]வேண்டி யிருக்கிறது. இதுதவிர யாதொருத்தன் தனக் [illegible]சரியானவனுக்கு குற்றம்பண்ணினு லதுவொரு மேரையாய்ப் போகலா யிரு [illegible]றதென்கிறது யெல்லாருக்குந் [illegible]கும். கீழ்த்தரமா யிருக்கிறவன் தனக் [illegible]மேலாயிருக்கிறவனை நிந்தைபண்ணி யவனுக்குக் குற்றம்பண்ணினுல் அப்படி [illegible]ட்ட குற்றங்கனமான குற்றமென்று சொல்லவேணும். இந்தவிடவாகக்கீழ்க்கீ [illegible]யிருக்கிறவனுலே மேல்மேலா யிருக்கிறவனுக்குப் பண்ணப்பட்ட குற்றமான [illegible]அளவறுக்க வேணுமானுல் நிந்திக்கிறவன் நிந்திக்கப்பட்டவ னிருவருக்குண் [illegible]ன மகிமையிலே விளங்குகிற தாரதம்மியமாகக் கீழ்த்தரமாயிருக்கிறவன் ப [illegible]ணின குற்றத்தின் பொல்லாப்பானது [illegible]மமாத்திரமாயிருக்கிறதென்று நிச்ச [illegible]பண்ணப்படும்.

இதிப்படியிருக்கச்செய்தே யுண்டாக்கப்பட்ட குறையுள்ள நீசமான [illegible]ருளானதுக்குத் தானுயிருக்கிற சகலகனமை சொரூபமான சர்வேஸ்வரனுக்கு [illegible]வில்லாத அர முண்டாயிருக்கிற நிமித்தமாகக் கர்த்தனுக்கு முடிவில்லு [illegible]யாகக் கீழ்த்தரமாயிருக்கிற வுண்டாக்கப்பட்ட பொருளினுலே கர்த்த [illegible]ந்தையாகப் பண்ணப்படுகிற குற்றமானது முடிவில்லாத குற்றமா யிரு [illegible]

[illegible]தென்று சொல்லவேணுமொழிய மற்றப்படியல்ல. ஆனுல் மனுஷனைவன் தா [illegible] வழிப்போக்கனு யிருக்கிறகாலத்திலே பண்ணின கனமான குற்றமென்னப்ப [illegible]ட்ட யாவையுமரணத்தையடைகிறதுக்கு முன்னே கர்த்தனுடைய கிருபையி [illegible]னுலே போக்கடிக்கலாமென்று வேதப்பிரமாணத்தினுலே யறிகிறோம் வழிப்போ [illegible]க்கனு யிருக்கிறபாவியானவன் தான்பண்ணின முடிவில்லாத குற்றத்தைப் பூமி [illegible]யிலே யிருக்கும்போது கர்த்தன் கிருபையினுலே போக்கடிக்கலா மென்கிறதுக் [illegible]குச் சந்தேகமில்லை. அல்லது பாவியானவன் முடிவில்லாத குற்றத்தோடே மர [illegible]ணத்தையடைந்து அவனுடைய சீவனானது அவதியாகிற நரகத்திலே விழுந்தால் அப்படிப்பட்ட அவதியானது அத்தியந்த விருத்தமான விகாரங்களுக்கிடமாயிரா [illegible]தபடியினுலே முடிவில்லாத பாவத்தோடே யவதியாகிற நரகத்தை சீவனானது அ [illegible]டைந்த[illegible]தே யதிலே தனது முடிவில்லாத பாவத்துக்குச்சரியான ஆக்கினையை [illegible]யனுபவிக்கு மொழியப் பா[illegible]த்தைவிட்டுத் தேவ இஷ்டப்பிரசாதத்தை யடையமாட்டாது. [illegible]ன்றால் [illegible]வில்லாத பாவத்துக்குச்சரியான ஆக்கினையேதென்று விசாரிக்குமிடத்தி[illegible]முடிவில்லாத ஆக்கினைமாத்திரம் முடிவில்லாத பாவத்துக்குச்சரியான ஆக்கினையென்று சொல்லவேண்டியிருக்கிறது ஆனபடியினுலே சரீ [illegible]த்தோடே கூடியிருக்கிற சீவனானது பூமியிலே தான் பண்ணின பாவத்துக்குச்ச [illegible]மானமான ஆக்கினையனுபவ ஸ்தலமாகிற நரகத்திலே விழுந்தபோதே தான்பண் [illegible]ணின முடிவில்லாத பாவத்துக்குமொருகாலுமுடியாத கஸ்திபாதைகளை யனுபவிக்குமொழிய அதில் நின்றொருக்காலுஞ் சீவனானது [illegible]றப்படமாட்டாதென்கிறது அனந்தநீதி நிவ்வியு தீர்வைக்கும் பழுதற்றஞாயமுள்ள கிரமத்துக்கு மொத் [illegible]திருக்கிறதென்று முழுமனதோடு அங்கீகரிக்கக்கடவோம்.

இதிலே யொருசந்தேகத்துக் கிடமிருக்கிறது அதாவது நரகத்[illegible]லே விழு[illegible]ந்த சீவனானது அற்பபாவத்தையுங் கனபாவமாகிற முடிவில்லாத குற்[illegible]த்தையும் பண்ணியிருக்குமென்கிறதுக்குத் தப்பாது. முடிவில்லாத குற்றத்தினி[illegible]த்தமாகச் சீவனானது முடிவில்லாத ஆக்கினையை அனுபவிக்கிறதென்கிறது தப்பில்லாக் கிரமத்துக் கொத்திருக்கிறதென் றெரு[illegible]விக்கப் பட்டாப்போலே யாச்சுது. அற்பபாவத்தி[illegible]னிமித்தமாகச் [illegible]வனானது நரகத்திலே யெத்தனை நாள் கஸ்திபாதைகளை யனுபவிக்கிறதென்கிற [illegible]லைஷ்த்[illegible]லே அங்கிகரிக்கத்தக்க சித்தாந்தமே[illegible]தென்று வெளிப்படுத்தத்தக்கதா[illegible]ம். சிலர் அற்பபாவத்தின் மேரை[illegible]மேலெழுந்த வாரியாக மாத்திரங் கண்டு[illegible]டுந்து அதிலே[illegible]ரிக்கத்தக்க இரண்டு விசேஷங்களை [illegible]த்தொகுத்துப் பிரியாமல் தேவவிஷயக பத்தி[illegible] சீவனானது சரீரத்தை விட்டுப்பிரியும்போது ஓரற்பாவத்தோடே கூடியிருந்த[illegible]அப்படிப்பட்ட பாவத்து [illegible]நிமித்தமாகச் சிறிது நாள் உத்தரிக்குமூரப்பேறு[illegible]லே நரகத்திலேவிழுந்த சுவாமித்துரோகிகள் பண்ணினகனபாவங்கள் நிமித்தமா யென்றென்றைக்கு முடியாதகஸ்திபாதைகளை யனுபவிப்பார்களே அவர்கள்பண்ணின அற்பபாதத்தி னிமித்தமாக அவர்களாலே அனுபவிக்கப்படுகிற ஆக்கினையானது சிறிதுநாள் மாத்திரமனுபவிக்கப்பிற்பாடு அவர்களுக்கொழியுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள் அப்படிப்பட்ட பேர்கள் அற்பபாவத்தின் மேரையைமேலெழுந்தவாரியாக மாத்திரம் விசாரித்து இதைச் சொல்லுகிறார்களொழிய மற்றப்படியல்ல அதேதென்றால் சொற்பபாவத்திலே குற்றத்தின் மேரையும் நீதிப்படியே யனுபவிக்கப்படத்தக்க ஆக்கினையினுடைய கடனுமென்கிற விரண்டு விசேஷங்கள் சொற்ப பாவத்திலே யுண்டாயிருக்கிறதினுல் அப்படிப்பட்ட விசேஷங்க ளிரண்டுந் தனித்தனியே தொகுத்துக் கண்டு பிடியாதிருந்தால் முன் சொல்லப்பட்ட சந்தேகத்திலே நிவாரண முண்டாய் அதிலே அங்கிகரிக்கப்படத்தக்க சித்தாந்த மேதென்று கண்டுபிடிக்கிறதில்லை அப்படிப்பட்ட விசேஷங்களிரண்டுந் தனித்தனியே தொகுத்துப் பிரித்து

அற்பபாவத்தோடே மரணத்தை யடைந்த புண்ணியவான்களுடைய வகையிலே அறியவேண்டியனதாவது:—தேவவிஷயக பத்திமுதலான தர்மகுணங்களினாலே அலங்கரிக்கப்பட்டதுமாய் கர்த்தனுக்கு மிகவுமுகந்ததுமாய் மோக்ஷானுபவத்துக்குத் திவ்விய கிருபையினாலே பாத்திரமானதுமா யிருக்கிற சீவனானது தன் சரீரத்தை விட்டுப் பிரிந்த க்ஷணத்திலே தானே தேவ விஷயக பத்தி சிநேக முதலான தர்மக் குணங்களிலே நிலைகொண்ட மனசாயிருக்கு மென்று இற்றைவரைக்குஞ் சொல்லப்பட்ட நியாயங்களினாலே சந்தேகப்படுகிறதுக்கு யிடமில்லை அவ்வண்ணமே சகல நன்மை நீதி சொரூபமாயிருக்கிற கர்த்தனைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்துப் பரிபூரண பாக்கியமாகிற மோக்ஷத்தின் பரமானந்த முதலான குறையற்ற செல்வங்களை அப்படிப்பட்ட சீவனானது அநுபவியாத வண்ணம் யாதொரு சொற்பபாவத்தினாலே தாமசம் பண்ணப்படாதிருந்தால் அது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த க்ஷணத்திலே தானே தேவவிஷயக பிரத்தியக்ஷ தெரிசனமான மோட்சத்தின் வரப்பிரசாதங்களை அது அடையுமென்கிறதுக்குத் தப்பாது. ஆனால் அப்படிப்பட்ட சீவனானது தான்பண்ணின அற்பபாவங்களுக்குள்ளே யாதொரு அற்பபாவம் நிவாரணம் பண்ணாமல் அத்தோடே சரீரத்தைவிட்டுப் பிரிந்தால் அப்படிப்பட்ட யற்பபாவத்தைச்சீவனானது போக்கியநிமித்தமாக அநுபவிக்கத்தக்க சரியான ஆக்கினையை யனுபவித்து அப்படிப்பட்ட கடனைத் தீர்த்துப்போட்ட பிற்பாடு அனந்த நீதி திவ்விய திருவுளப்படியே மோட்சகதி பேறுமொழிய மற்றப்படியல்ல.

ஆதலாலே தேவவிஷயக பத்தி முதலான தர்மகுணங்களிலே நிலைகொண்ட மனசுள்ள சீவனானது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடனே தன்னை இரட்சித்த தயாபரனான கர்த்தன்பேரிலே குறையற்ற பத்தியை வைத்துத் தன்னிடத்திலே யிருக்கிற யற்பபாவத்தினிமித்தமாக யுத்தம மனஸ்தாபமா யிருக்குமென்று அங்கிகரிக்கத்தக்கதாகும் அப்படியே சீவனானது சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடனே தனது அற்பபாவத்தி னிமித்தமாகத் தான்பட்ட வுத்தமமனஸ்தாபமுதலான தேவவிஷயகபத்தியின் விருத்தியினாலே முந்தமுந்தத் தனது சொற்பபாவ நிவாரணம் பண்ணும். இந்த [illegible] போக்கின சொற்பபாவத்தினிமித்தமாக நீதிப்படியே யனுபவிக்கத்தக்க ஆக்கினையைச் சரியா யனுபவித்த பிற்பாடு கர்த்தனுக்குகந்த சீவனானது மோட்சகதி பேறுமொழிய மற்றப்படியல்ல, தனது சரீரத்தை விட்டுப்பிரிந்த சீவனானது தன்னிடத்திலே யிருக்கிற சொற்ப பாவத்தைப் போக்கிறவகையானது நம்மாற் சொல்லப்பட்ட அவத்தியின் சுபாவத்துக்கு விருத்தமாயிருக்கிறதென்று சொல்லக்கூடாயல்ல அதேதெனில் அவத்தியை யடைந்த சீவனானது அத்தியந்த விரோதமான மேரைகளுள்ள விகாரங்களையடையமாட்டாதென்று மெய்யேயொழிய வொருவகையிலே யடங்கின விகாரங்களை யடையமாட்டாதென்று நம்மாற் சொல்லப்பட்டதில்லை.

இதெல்லாம் வெளியாகும்படிக்குச் சொல்லப்பட்ட பதங்களுக்குண்டான அர்த்தத்தை வெளிப்படுத்தக்கடவோம் தேவஇஷ்டப்பிரசாதமும் சுவாமித் துரோகமும், சர்வேஸ்வரனுக்குச் சத்துருவாயிருக்கிறதென்கிறதும் அவருக்குக் குறையற்ற சத்துருவாயிருக்கிறதென்கிறதும், கனபாவமும் தேவவிஷயக பக்தியுமிந்தொகைப்பட்ட மேரைகளுள்ள விகாரங்கள் அத்தியந்தவிரோதமான மேரைகளுள்ள விகாரங்களென்றுசொல்லப்படும். ஒருவகையுள்ள பாவவிசாரமாயிருந்த பிற்பாடு வேறொருவகையுள்ள பாவத்துக்கு உடன்படுகிறதென்கிறதும் அல்லது வொருவகையுள்ள தர்மவிசாரமாயிருந்து பிற்பாடு வேறேயொருவகையுள்ள புண்ணியத்திலே மனசாயிருக்கிறதென்கிறதும் தேவவிஷயக பத்தியாயிருக்கிற தென்கிறதும் பாவத்தினிமித்தமாக வுத்தமமனஸ்தாபமாகிற தர்ம விருத்தியைப் பண்ணுகிற தென்கிறதும் இந்தொகைப்பட்ட மேரைகளுள்ள விகாரங்களானதுகள் அத்தியந்த

விரோதமான மேரைகளுள்ள விகாரங்களாயிராம லொரு வகையிலே யடங்கின மேரைகளுள்ள விகாரங்களென்று சொல்லப்படும். இப்படி யிருக்கையிலே தேவ இஷ்டப்பிரசாதத்தோடே அவத்தியை யடைந்த சீவனானது தேவவிஷயகபத்தியிலே நிலைகொண்ட மனசாயிருந்து அத்தியந்த விரோதமான மேரைகளுள்ளவிகாரங்களை யடையாதென்று சித்தாந்தமாகும். அப்படிப்பட்ட மனசானது நன்மையிலே நிலைகொண்ட மனசா யிருக்கும்போது சர்வேசுரன்பேரிலே பத்தியாயிருக்கிறதென்கிறதும் தனக்குண்டான அற்பபாவத்தி னிமித்தமாக வுத்தம பட்சாத்தாபப்படுகிறதும் இதுமுதலான ஒருவகையிலே யடங்கின மேரைகளுள்ளவிகாரங்களை அடையலாமென்று சொல்லவேண்டி யிருக்கிறது அவத்தியையடைந்த புண்ணிய சீவனுடைய வகையிலே சொல்லப்பட்டதெல்லாம் நரகத்திலே யிருக்கிற பிசாசு முதலான சீவன்களிடத்திலே விபரீத கிரமமாகயோசிக்கத்தக்கதென்று சொல்லத்தகும், அதெப்படியென்றால் நரகத்திலே யிருக்கிறபிசாசுகள் முதலான பாவிகள் பாவத்திலே நிலைகொண்ட மனசுள்ள பேர்களுமாய்ச் சர்வேசுரனுக்கு முழுதுந் துரோகிகளுமா யிருக்கிறதினா லொருபாவவிசாரமாயிருந்த பிற்பாடு வேறேயொரு பாவவிசாரத்துக்குச் சம்மதப்படுகிறதென்கிற வித்த வொருவகையிலடங்கின மேரைகளுள்ள விகாரங்களை யடைகிறதுக்கு வல்லவர்களாயிருக்கிறார்களென்று சொல்லக்கூடுமொழியப் பாவவிஷயத்தை முழுதும் விட்டு ஓர் புண்ணிய விசாரத்துக் குடன்படமாட்டார்களென்கிறதுக்குத் தப்பாது. பாவத்தினிமித்தமாக வுத்தமபட்சாத்தாபமானது தேவவிஷயகபத்தியினாலே பிறந்தாலது வுத்தம வகையுள்ள புண்ணியமாயிருக்கும்போது நரகத்திலேயிருக்கிற பிசாசுமுதலான பாவிகளப்படிப்பட்ட மனஸ்தாபத்துக் குடன்படமாட்டார்கள். இதுகாரணமாக நரகத்திலேயிருக்கிற நரசீவன்கள் தங்களுக்குண்டான சொற்ப பாவத்தினிமித்தமாக முன் சொல்லப்பட்ட புண்ணியவான்கள்போலே பச்சாத்தாபப்படத்தக்கதுமில்லை, தங்களுக்குண்டான சொற்ப்பாவங்களை யொருக்காலும் போக்கத்தக்கதுமில்லை சொற்பபாவங்களை யப்படிப்பட்ட சீவன்கள் போக்காதபோதே தங்களுக்குண்டான சொற்பபாவத்தினிமித்தமாக நியாயத்தின்படியே யனுபவிக்கத்தக்க கஸ்தியுபாதைகளை யென்றென்றைக்கு மனுபவிக்குமொழிய அப்படிப்பட்ட கஸ்தியுபாதைகளை அந்த சீவன்களுக் கொருக்காலாகிலு மொழியுமென்று சொல்லவுந் தகுந்தது கூடாது, ஆதலாலே நரகத்திலேயிருக்கிற சீவன்களானதுகள் கனபாவங்களுக்காகவும் சொற்பமான பாவங்களினிமித்தமாகவும் என்றென்றைக்குங் கஸ்தியுபாதைகளை யனுபவிக்குமென்று சொல்லும்போது கனபாவங்களுக்குச் சொற்பபாவங்கள் சரியாயிருக்கிறதென்று நம்மாற்சொல்லப்பட்டதென்று விசாரிக்கவேண்டாம். அதேதென்றால் கனபாவங்களுக்கு முகிவில்லாத ஆக்கினையுண்டாயிருக்கிறதினாலேயும் பாவிகளையொருக்காலும் விட்டுப்போகத்தக்கதில்லை யென்கிறதினாலேயும் நரகத்திலேயிருக்கிற சீவன்களானதுகள் கனபாவங்களினிமித்தமாக யென்றென்றைக்குங் கஸ்தியுபாதைகளை யனுபவிக்குமென்றுசொல்லி அதுகள்தனது சொற்பபாவங்களை யொருக்காலுந் தள்ளக்கூடாததினாலே சொற்பபாவத்தினிமித்தமாக என்றென்றைக்குங் கஸ்திநோவுகளை அதுகளனுபவிக்குமென்று சொல்லுகிறதுமொழிய முகிவில்லாத பொலாப்புள்ள கனபாவங்களுக்குச் சொற்பபாவங்களானதுகள் சரியானதுகளா யிருக்கிறதென்று சொன்னோமென்று விசாரிக்கிறதுக்கிடமில்லை.

இப்படிப்பட்ட நரகத்திலேவிழுந்த நிற்பாக்கியரானபாவிகள் தாங்கள்பண்ணினபாவங்களி னிமித்தமாக வென்றென்றைக்குங் கஸ்திநோவுகளை யனுபவிப்பார்களென்கிற குன்றாதசத்தியமானது வேறேயொரு நியாயத்தினாலே ருசுப்பிக்கப்படலாயிருக்கிறது அதெப்படியென்றால் கர்த்தரானவர் மட்டில்லாத சகல நன்மை சொரூபமாயிருக்கக்கொள்ள நன்மையைக்கெடுக்கிற பொல்லாப்பாகிறபா

வித்துக்கும் கர்த்தரானவருக்கு முடிவில்லாத தாரமுண்டா யிருக்கிறதென்று அங்கீகரித்து முடிவில்லாத நன்மையாகிற கர்த்தருக்கு முடிவில்லாத பொல்லாப்பாகிய பாவமானது அளவில்லாத விதமாக அபராசகமா யிருக்கிறதென்று ஒப்புக்கொள்ளத்தக்க குறையற்ற சத்தியமாகும். கர்த்தருக்குண்டாயிருக்கிற அப்படிப்பட்ட சொரூபத்தை விசாரிக்குமிடத்திலே எத்தனையதிக மதிகமான அக்கினியிலே கனபாவமானது விலக்கப்படலாயிருக்கிறதோ அப்படிப்பட்ட அதிகமான அக்கினியிலே கர்த்தராலே கனபாவமானது விலக்கப்படுகிறதென்கிறது கர்த்தருடையமட்டில்லாத சகலநன்மையான சுபாவசொரூபத்துக்கு ஏற்றிருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. பாவிகளானபேர்கள் பண்ணின கனபாவத்தைப் போக்கடிக்கத்தக்க ஸ்தலத்திலே போகாதிருந்தால் பண்ணினபாவத்துக் கானபலனைப் பொசிக்கத்தக்க ஸ்தலத்திலே யவர்களடையும்போது தப்பிலாத நீதிப்படியே முடிவில்லாத அக்கினியிடைவே[illegible]ருக்கையிலே முடிவில்லாத அக்கினியிலே கனமானபாவத்தைக் கர்த்தரானவர் விலக்கிறாரென்கிறது தப்பில்லாத நியாயமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்ல. அல்[illegible] முடிவில்லாத பொல்லாப்புள்ள பாவத்துக்கானபலனை யநுபவிக்கத்தக்க ஸ்த[illegible]ற நரகத்திலே ஆயிரமிரண்டாயிரம் வருஷமாத்திரம் அக்கினியையநுபவிக்கத்[illegible]தாகக் கர்த்தரானவர் கட்டளையிட்டருளினாரென்று சொன்னோமானால் இன்னம் பதினாயிரம் வருஷமாக்கினி யநுபவமென்கிற அதிகமானவாக்கினியிலே [illegible]னபாவத்தைக் கர்த்தரானவர் விலக்[illegible]மென்று சொல்லத்தகும் இத்தன்மையாகப் போகப்போக வெந்தமுடிவுள்ள அக்கினியிலே கனபாவத்தைக் கர்த்தரானவர் விலக்கினாலும் அதிகமதிகமான வாக்கினியிலே விலக்கலாமென்று சொல்லவேண்டியிருக்கும். இப்படிசொல்லும்போது எத்தனை யதிகமான அக்கினியிலே கனபாவத்தைவிலக்கலாமோ அத்தனையதிகமான அக்கினியிலே கர்த்தரானவர் பாவத்தைவிலக்கவேணுமென்கிற மேரையானது அவருடைய திவ்விய சுபாவசொரூபத்துக்கொத்திருக்கிறதென்று சம்பாவொப்புவிக்[illegible]பட்டது. கனபாவத்துக்குமுடிவுள்ள அக்கினியைக்கட்டளையிட்டாரானால் அப்படிக் கட்டளையிடுகிறதினாலே கர்த்தரானவர் தனது திவ்விய சுபாவத்துக்கொத்திருக்கிற மேரையை யநுசரிக்கவில்லையென்று சொல்லவேண்டியிருக்கும். இந்த தன்மையாகக் கனபாவத்துக்குச் சரியானவக்கினி யநுபவத்தைக் கர்த்தரானவர் பரலோகத்திலே கற்பிக்கிறது அவருடைய அனந்த நீதிக்கொவ்வாதிருக்கிற மேரையாயிருக்கச்செய்தே அதை முடிவுள்ள அக்கினியை மாத்திரம் கற்பித்தால் அந்த மேரையையநுசரிக்க வில்லையென்று சொல்லவேண்டியிருக்கும். இப்படிக்கொத்த வார்த்தை யங்கீகரியாமல் சரியான அக்கினியிலேயு மெத்தனையதிகமான அக்கினியிலே கனபாவத்தை விலக்கலாமோ அத்தனையதிகமான அக்கினியிலேயும் அனந்தநித்திய சொரூபமான கர்த்தரானவர் கனபாவத்தை விலக்கினாரென்று சொல்லுமபடிக்கு நரகத்திலேயிருக்கிற பாவிகளது கனபாவத்து நிமித்தமாக வென்றென்றைக்கு மெண்ணப்படாத கனதிகோவுகளை யநுபவிக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளையிட்டாரென்று அங்கீகரிக்கத்தகுமே யோம்.

இப்படிசொல்லும்போது நரகத்திலேயிருக்கிற பாவிகள் கனபாவத்தினிமித்தமாக வென்றென்றைக்கும் கணக்கிடப்படாதகனை யநுபவிக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் தாம் கட்டளையிட்டாரென்று தமது வேதத்திலேயறிவித்தாரே. அப்படிப்பட்ட மேரையானது தப்பில்லாத நியமமாயிருக்கிறதென்றும், பழுதற்ற நியாயத்துக்கு அது ஏற்றிருக்கிறதென்றும் பண்ணின பிரசங்கத்தினாலே ஒப்புவிக்கப்பட்டதாயிருக்கிறதொழிய திவ்விய சுவர்க்கத்திற்குள்ள மனக்குறைவினாலே கட்டாயம் பண்ணப்படலாமென்கிற விசேஷமானது நமக்குச் சம்மதமாயிருக்கிறதென்று சொல்லவுங் கூடாது.

ஆனால் நரகத்திலேயிருக்கிற பாவிகள் தாங்கள் பண்ணின பாவங்களினிமித்தமாக வெண்ணப்படாத காலமட்டும் [illegible] யென்றென்றைக்கு மநுபவிக்கத்தக்கதாகக் கர்த்தரானவர் கட்டளையிட்டருளினாரென்கிற மேரையானது அனந்த திவ்விய கிருபைக்கொத்திராதென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆதலால் யேசு கர்த்தராயிருக்கிறவர் வந்தபிற்பாடு எல்லாருக்கு மோட்சமுண்டாமென்று வெறுமனே கற்பித்துக்கொண்டு வருகிறார்கள். மெய்யாகவே தெளிவற்ற பாவிகள் இருக்கிறார்களென்கிறதுக்குத் தப்பாது. அவர்களிப்படி சொல்லும்போது தங்களுடைய மதிகெட்டதனத்தைக் காணப்பண்ணுகிறதுமல்லாமல் தங்களுக்கு மற்றவர்களுக்குங் கேடாக வெல்லாருஞ் சகலபாவத்துக்கும் எளிதாய் விடப்படுகிறதுக்கு வழிதிறந்தார்களென்று சொல்லக்கடவோம். ஆதலால் [illegible] விழுந்த பாவிகளென்றென்றைக்கும் ஒழியாத அக்கினிக்குள் அவியாத [illegible] இருப்பார்களென்று அனேகம்பேர்கள் அறிந்தும் அதுக்குப் பயப்படாமல் [illegible] கனபாவங்களுக்கு உடன்படுகிறார்களென்று பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்டபோதும் தாங்களெப்படிப்பட்ட பாவங்களிலே [illegible] மிதக்காக நரகத்திலே விழுந்து அதிலேயிருந்துகால மாத்திரம் [illegible] யநுபவித்[illegible] அதில் நின்று புறப்பட்டுக் கரையேறுவார்களென்று நம்பிக்கையாயிருந்தார்களானால் தங்கள் இஷ்டப்படியே பாவமென்[illegible] [illegible] [illegible]க்குத் துணிவார்களென்று கேட்கவேணுமோ.

பின்னையும் அவர்களாலே யநுசரிக்கப்படுகிற [illegible] பட்சத்தினிமித்தமாக அவர்களுடைய மதிகெட்டதனமிகவும் விளங்கிவருகிறதென்று சொல்லக்கடவோம். அதேதென்றால் பாவிகளுக்குக் கர்த்தரானவர் ஒழியாத அக்கினியைக் கட்டளையிட்டருளினால் [illegible] திவ்விய கிருபைக்கு ஒத்திராதென்று சொல்லுகிறபோது திவ்விய கிருபையானது கிருபையாயிருக்கையிலே பற்பலவிதமும் பின்னமில்லாமல் அது அனந்த நீதியாயிருக்கிறதென்று அறிகிறார்களில்லை. இதன்றியே யாபாரனை [illegible]ர்த்தரானவர் க்ரமத்தோடே கிருபையுள்ளவராகிய குறையற்ற நியமத்[illegible] கிருபையுள்ளவரென்று சொல்லக்கூடாமலிருக்கும். அப்படியே யனந்த திவ்விய கிருபையான நீதியின் பேரிலே குறையைப் பாரிக்கிறதற்கு வண்ணம் அதுக்குத்தக்கான ஸ்தலங்களிலே கிருபையும் நீதியும் விளங்கி வருகிறதென்று சொல்லக்கடவோம். இதனிமித்தமாகப் பாவங்களைக் கர்த்தரானவர் [illegible]க்கத்தக்க ஸ்தலமாகிற பூமியிலே யிருப்[illegible]க்கனுடைய திருவுளம் [illegible] கனபாவத்தைப் பண்ணினதுமுன் நிமித்தமாக அனந்தத்தாப்பா யிருந்தானானால் [illegible] பாவத்தைக் கர்த்தரானவர் பொறுப்பாரென்று [illegible] கொடுத்திருக்கிறாரென்று வேதப்பிரமாணத்திலேயிருக்கிறது. அப்படிப்பட்ட [illegible]கர்த்தரானவர் செலுத்தும்போது அவருடைய திருக்கிருபையின் பேரிலே குறையை யாரோபிக்கிறதுக்கு இல்லவேயில்லாமல் இடங்கொடாமல் தனது கிருபையை மிகவும் விளங்கத்தக்கதாய் பண்ணுகிறாரென்று அங்கீகரிக்கக்கடவோம். [illegible] முடிவில்லாத பொல்லாப்பாகிற [illegible] நிமித்தமாகப் பாவிகளானபேர்கள் நரகத்திலே [illegible] வென்றென்றைக்கும் [illegible] யநுபவிக்கத்தக்கதாகக் கர்த்தன் திருவுளமாயிருக்கிறதினாலே தனது அனந்த நீதிக்குக் குறையுண்டென்று சொல்லவொட்டாமல் அனந்த மேரையிலே தானே தமது அனந்தநீதியை மிகவும் விளங்கப் பண்ணினதாயிருக்கிறது, குறையற்ற சத்தியமாகும். கடையாய்ப் பாவங்களை [illegible] பொறுக்கத்தக்க ஸ்தலமாகிற பூமியிலே திரிகிற வழிப்போக்கனாயிருக்கிற [illegible] எப்படிப்பட்ட கனமானபாவம் பண்ணியிருந்தாலும் பின்னையும் அதுக்கான பச்சாத்தாபத்தோடேயிருந்தானானால் அப்படிப்பட்ட கனபாவத்தைக் கர்த்தரானவர் பொறுக்கச் செய்தே பாவத்துக்கான அக்கினி யநுபவிக்கத்தக்க [illegible]மாகிற நரகத்திலே விழுந்தபாவி

யினுடைய பாவங்களைப் பொறுமற் பாவியானவன் நரகவேதனையை யடைகிறன். றைச்சு மனுபவிக்கத் தக்கதாகுக்கர்த்தரானவர் கட்டளையிட்டருளினதினுலே பரமசு பர்த்திய சருபமாயிருக்கிற கர்த்தரானவர்தாமது அனந்தகிருபையினுலே பாவ[illegible] ணப்பட்ட யாவையும் பொறுக்கிறதிலேயும் நரகத்திலே விழுந்த பாவிகளுக்கு முடியாத ஆக்கினை கட்டளையிட்டருளுகிறதிலேயுந் தப்பு தப்பில்லாக்கிரமமானது மிகவும் பிரகாசிக்கத்தக்கதாகப்பண்ணிவருகிறுரென்று அங்கீகரிக்கத்தக்க [illegible]சத்தியமாயிருக்கிறதென்று முழுமனதோடு ஒப்புக்கொள்ளக்கடவோம்.

இற்றைவரைக்குமகசிவனுடைய ஒடுக்கமாகிறபாவதியான துயின்றதென்று யெவ்வளவாகிலுஞ் சொல்லப்பட்டதபோதுமேயாச்சுது. இப்படிப்பட்ட வொடுக்கத்துக்கடுத்தவைகள் இன்னம் பராமரிசிக்கத்தக்க மூன்று இரகசியவிசேஷங்களுண்டு அதெப்படியென்றுல்தேவ இஷ்டப்பிரசாதத்திறேலேயுமதேவவிஷயகபத்தியிறேலேயுமலங்கரிக்கப்பட்டபுண்ணியவான் [illegible] முதலான அற்பபாவங்களோடே கூட மரணத்தை யடைந்தால் அப்படிப்பட்ட புண்ணியவானுடைய சீவனுனது தனது சரீரத்தை விட்டுப் பிரிந்த க்ஷணத்திலே தேவவிஷயத்திலேயுந் தேவவிஷயக பத்தியிலேயும் [illegible]தாயிருந்தாலு முன்சொல்லப்பட்ட அற்பபாவங்களைத் [illegible] அதுகளுக்காக [illegible] யநுபவிக்கத்தக்கடனுனது தீராதகாலமட்டுக் தேவவிஷயகபிரத்தியக்ஷ தெரிசனத்தை யப்படிப்பட்டசீவனுனது யடையமாட்டா தென்றிருக்கையிலே [illegible] யக்கச்சீவனுனது [illegible]யாத காலத்திலே யதுக்குஅனவ்தை யாவதேதென்கிற ரகசிய விசேஷமானது பராமரிக்கத்தக்க மூன்று விசேஷங்களுக்குள்ளே முதலா வேண்டின முதலான விசேஷமாகும். தேவாசிட்ட பிரசாதமில்லாத வனுமாய்க் கனபாவத்தைப்புண்ணியவனுமாயிருக்கிற பாவனுனவன் முன்சொல்லப்பட்ட அற்பபாவங்களோடே கூட மரித்தால் அப்படிப்பட்ட பாவனுடைய சீவனுனது அடையத்தக்க அவதிமேயதென்று நிச்சயம்பண்ணுகிறதென்கிறது இதுமுன்சொல்லப்பட்டபடியவேண்டின மூன்றுவிசேஷங்களுக்குள்ளே பதியத்தக்க யிரண்டாம் விசேஷமாகும். கழுகொடியாய்ப்புத்தியுள்ள [illegible]னையும்பரணபரியந்தம்பாத்தியங்கொண்டவனுயிர்தஇரண்டுவகைக்குள்ளேபோகுங் கனபாவத்தையும் அற்பபாவத்தையும் பண்ணுமல் தேவவிஷயகபத்தியுமுயில்லாமல் மரணத்தை யடைந்தவிற்பாடு அப்படிப்பட்டபேர்களுடைய சீவன்களிரண்டுக்கும் வரத்தக்க கெதியேதென்கிற ரகசியமானது முன்சொல்லப்பட்ட அறியவேண்டின விசேஷங்களுக்குள்ளே மூன்றுமவிசேஷமாகும். இந்த மூன்று விசேஷங்களிலே யொப்புக்கொள்ளத்தக்கதாகத [illegible]பிடிக்கிறதுக்குத் தேவோக்கித[illegible]ப்பிரமாணத்திலே பதியவேண்டின இப்பரம ரகசியங்களுண்டு அதுகளைநன்ருக யாதொருத்தன் அறியாமலிருந்தால் முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷங்களிலே யொன்றுமேயதென்று கண்டுபிடிக்க மாட்டானென்கிறதினுலே ஞானஉபதேசத்தின் மூன்றுங்காண்டத்தினுடைய கடைசியபாடங்களிலே பாதாளத்தோடே நரகமென [illegible] விதகளையென்று தொகுத்து வகைப்படுத்தும்போது முன்சொல்லப்பட்ட மூன்று விசேஷங்களை யடைவாக வெளிப்படுத்துவோமென்கிறதினுலே அப்படிப்பட்ட விசேஷங்களை நினைக்கிறதென்கிற தாச்சிதமாயிராது.

[illegible]

முற்றும்

பிழை திருத்தல்.

இந்த அருமையானபிரபந்தத்தை முடிப்பதில்நேரிட்ட பலவிக்கினங்களைப் பற்றி அநேகவெழுத்துப்பிழைகளுண்டாயிற்று. அவைகளையெல்லா மெடுத்துக் காட்டுகிறது முடியாத காரியமாகையால் [illegible]கருத்துப்பிழைகளை மாத்திரம் பிரதானமாய்க்குறிப்பிக்கிறோம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
V	5	பவுதிக	பவுதிக
VII	36	[illegible]	சினேகாபேட்சம், சுவாபே ஷா பேட்சம்
3	3	சீவனுடைய	சீவனுடைய
5	4	[illegible]	[illegible]
18	36	[illegible]த்துக்குமேலான	சரீரத்துக்குமேலான
20	[illegible]	புத்தியுடைத்தான	புத்தியுடைத்தான
20	10	= Freedom	Defeatur
21	5	பிரேரகனில்லாதே	பிரேரகனில்லாதே
21	10	பிரேரகனில்லாதே	பிரேரகனில்லாதே
21	18	= Abundence Copiousness	[illegible]
22	4	தேவவிஷயகமுதலான	தேவவிஷயகவிமுதலான
23	36	அப்படிப்பட்ட	எப்படிப்பட்ட
24	2	அவதைதயிலே	அவத்தைதயிலே
28	26	[illegible]	[illegible]
33	11	மனுஷருக்கு	மனுஷருக்கு
34	2	[illegible]	[illegible]
42	4	இத்தனைப்பிலே	இத்தனையிலே
51	22	மனிதர்கள்	மனிதர்கள்
[illegible]	14	விலக்கி புதுவாரமவி	விலக்கிவாரமவி
55	[illegible]	சுபாவத்துக்கு	சுபாவத்துக்கு
59	42	சொல்வத்	சொல்வத்
60	20	கர்த்த	கர்த்த
61	19, 20	மேரையையாகவில்லை	மேரையையில்லை
62	33	அந்தக்கரணம்	[illegible]
63	10	மித்த	மித்த
68	9	ஒப்புவிக்	ஒப்புவித்
71	20	உண்டாக்கப்பட்டதாயிராத	உண்டாக்கப்பட்ட இராத
71	40	தீர்க்கமான	தீர்க்கமான
75	36	பார்மாஸ்	பாபமானவ
76	3	காசத்துக்கா	காசத்துக்குக்கா
[illegible]	[illegible]	காசகரண	[illegible]
[illegible]	30	வைக்களுக்கு	வைக்ளுக்கு
[illegible]	3	சிந்தித்து	சிந்தித்து
85	11	தபமை	தப்பமை
86	2	அறியாத பாவத்தை	அறியாதபாவத்தை
86	8	பட்டதன் ஒ	பட்டதன் ஒ
87	9	சென்று ஆத்து	சென்றும் ஆத்து
88	16	[illegible]யுண்டா	[illegible]யுண்டா
90	31	சரீரசம்	சரீசம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
92	9	ஹுறபவிக்கறதுக்கா ...	ஹுறபவிக்கிறதுக்கா
93	5	மனுசீவனு ...	மனுஷீவனு
95	3	மென்றுகிரு ...	மென்றகிரு
96	2	சம்பாவனையுஞ்சில ...	சம்பாவனைசில
96	13-14	சம்பாவனையனை ...	சம்பாவனையை
97	13-14	அப்படிப்பட்ட என்பதுறுந்தச் பிருக்கிறப்பாதேவனைக்கும் (இரட்டித்திருக்கிறது) ...	Deleatur
98	2	கேட்கிறார்களென்று ...	கேட்கிறார்களென்று
101	7	ஜெந்துவினுடைய ...	மனிதனுடைய
101	33	பிழைகிடையாமற் ...	சேட்டையில்லாமற்
105	24	பாவங்களைப்பண்ணிமகிழ் ...	பாவங்களைப்பண்ணிநரும் வ
109	18	பொருக்கிறதுக்கும் ...	பொறுக்கிறதுக்குங்
[illegible]	[illegible]	அந்தத்த ...	அர்த்த
130	22	காணப்பட்ட வேறுதுமை ...	காணப்பட்ட வேற்றுமை
133	30	மிருகாதிக ...	மிருகாதிக
134	30	சிவனுன்றேவாசமா ...	சிவனெனதேவாசமா
135	25	இம்மிசைய ...	இம்மிசைப
137	24	அகிரவைக்குச்சா ...	கனிரவைக்குஞ்சா
138	12	காமகளுக்கு ...	காமங்களுக்கு
142	9	[illegible] ...	[illegible]
143	5	[illegible] ...	சேர்மபடிற
143	18	புண்ணித்தி ...	புண்ணியத்தி
[illegible]	26	கன்றுயடைக்கிற ...	நன்றாய் டைக்கிற
147	[illegible]	சொல்சக்கட ...	சொல்லக்கூட
149	8	மதத்தை ...	இரமதத்தை
150	38	[illegible] ...	இப்பக்
159	11	பாவங்களைப்பண்ணுனு ...	பாவங்களைப்பண்ணுனு
165	7	[illegible] ...	கன்னைகளே
165	4	திருவுளமுனைடா ...	திருவுளமுடைடா
167	8	அருவடைப்புள்ள ...	அருவருப்புள்ள
169	15	ஸ்திரீகமேடமேட ...	ஸ்திரீகளோடே
170	2	ஐவசிக ...	ஐவசியங்க
170	8	வெருமானதை ...	வெருமார்த்தை
170	9	ஆகங்கார ...	அகங்காரி
170	23	அதிகமுதிமதம ...	அதிகமதிகமக
191	23	[illegible] ...	[illegible]
191	31	உபோதகா ...	உபோதகாத
192	14	வர்களாயிருக்கிற ...	வர்களாயிருக்க
195	4	இவபோர்களே ...	இவபோர்கள்
202	33	பிறப்பிக்கிற ...	பிறக்கிற
208	36	அபத்தக்கிருசிக ...	அபத்தத்துக்குச்ச
208	33	பொருளாயிருக்கு ...	பொருளாயிருக்க
209	36	காணனுமிற ...	கண்ணுமிற
210	13	சபாவத்க ...	சபாவத்தைக்
212	40	மாத்தகாளை ...	மாதக்களை
218	23	யிருக்கிற ...	யிருக்கிற
221	1-3	பிரத்தியகுமாயங் கனமேஉ [illegible] ...	Deleatur

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
221	21	சரீரமில்லாதபொருளப்பண ...	சரீரமில்லாதபொருள்பண
223	14	காலைத்தலைத்திலேயும் ...	ஏககாலத்திலேயும்
[illegible]	[illegible]	அனவஸ்தையை ...	அவஸ்தையை
[illegible]	27	வஸ்கருக்குள்ளே ...	வஸ்துக்களுக்குள்ளே
[illegible]	[illegible]	மனதினுடைய ...	மனதினுடைய
[illegible]	8-9	சரித்திரக்கருக்கு ...	சரித்திரங்களுக்கு
237	6	காரரனை ...	காரனை
239	14	அகோசரமாயிருக்கத் ...	கோசரமாயிருக்கத்
240	5	விசேஷமானது ...	விசேஷமாவது
[illegible]	37	வுண்டாக்கமாட் ...	உண்டாகமாட்டா
246	9	யுண்டாக்கட்ட ...	யுண்டாக்கப்பட்ட
247	1	[illegible] ...	[illegible]
[illegible]	10	அனந்த ...	அந்த
[illegible]	10	பேனையக ...	பேரையமா
254	35	அப்பாலேபோகாந் ...	அப்பாலே போகாந்
255	34	வெப்படுத்தி ...	வெளிப்படுத்தி
260	39	வரப்பிரதமாகி ...	வரப்பிரசாதமாகிற
[illegible]	33	நிர்ணைத்த ...	நிர்ணித
268	31	வருகிறிர்பிக ...	வருகிறார், இங்க
271	2	உபோதகா ...	உபோதகாத
271	29	பிரமிப்புமா ...	பிரமிப்பம
272	23	சொல்லப்பட்ட திருல் ...	சொல்லப்பட்டதாக
274	5	உபோதகா ...	உபோதகாத
274	26	ஒழுகாத ...	ஒழுகாத
275	20	உபோதக்க ...	உபோதகாத
276	4	[illegible] ...	மனுஷனுடைய [illegible]
276	3	[illegible] னுடைய [illegible] என்பது முதல் பிரயாச பில்லாமல்வரைக்கும் (இரட்டித்திருக்கிறது) ...	Deleatur
278	10	ஒருசண்டசிராய் ...	ஒருகண்டசிராய
279	39	சன்னியாசதருமத்துறையில் ...	சன்னியாசதருமத்திலேல்
286	4	அசப்பியங்களை ...	அசப்பியங்களை
289	12	அருவெருகிறது ...	அருவருக்கிறது
291	8	தேன்று ...	தென்று
291	41	அநுகவிக்கிற ...	அநுபவிக்கிற
292	[illegible]	பிரதிபாதிக்க ...	பிரதிபாதிக்க
292	37	கின்றுசொல்ல ...	கின்றபடியாமிற தென்று சொல்ல
297	33	பாவிகளை ...	பாவிகள்
[illegible]	18	மாட்டாது என்றல் ...	மாட்டாது, என்றால்,
[illegible]	32	ஓதப்பாவத் ...	ஓதப்பப்பாவத்
301	37	பிதமாகி ...	பிதமாகி
301	41	அங்கிகரிக்கப்பட்டக்க ...	அங்கீகரிக்கப்பட்டத்தக்க
303	31	மஹுபவிக்கு ...	அநுபவிக்கு
303	32	சொற்பாவங்கள் ...	சொற்பப்பாவங்கள்
304	23	இத்தகடைவாக ...	இத்தடைவாக
305	44	பசீயாத்தப ...	பச்சாத்தாப
306	8	ககிவனுடைய ...	காசிவனுடைய

புத்தக விற்கிரய விளம்பரம்,

தத்துவபோதகர். அருணானந்தர். வீரமாமுனிவர். இம்மூவர் சரித்திரச்சுருக்கம் படங்களுடன்	0	12	0	0	0	6
தத்துவக்கண்ணாடி	0	6	3	0	0	6
தேவமாதா அந்தாதி ...	0	2	0	0	0	6
வானவர் விருந்து ...	0	2	0	0	0	6
[illegible] மூலமும் உரையும்	0	8	0	0	0	6
திருவருள்மாலையும், திருவருள் அந்தாதியும்	0	4	0	0	0	6
[illegible] காண்டங்கள்	3	8	0	0	3	0
சுவாமி [illegible] பெயரில் கீர்த்தனைகள்	0	2	0	0	[illegible]	[illegible]
அவ்வப்பிண்ட வியாக்கியானம்	0	8	0	0	1	0
ஞானரத்தினமாலை ...	0	8	0	0	0	6
திருமயிலை அர்ச். மாதரசம்மன் அந்தாதி	0	4	0	0	0	6
திருச்செல்வராயர்சரித்திரம்	0	3	0	0	0	3
ஆத்துமநிருணயம்	2	8	0	0	4	0